
# நல்லைக்குமரன் மலர்




யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற

சைவசமய விவகாரக்குழு

இதழ் 21

2013

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 21

## 2013

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
# சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் – 2013

| | | |
|---|---|---|
| போஷகர் | : | **திருமதி யோ. பற்குணராசா**<br>மாண்புமிகு மாநகர முதல்வர்,<br>யாழ்.மாநகர சபை |
| தலைவர் | : | **திரு செ. பிரணவநாதன்**<br>மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். |
| செயலாளர் | : | **திரு பு. ஆறுமுகதாசன்**<br>பொது சுகாதாரப் பரிசோதகர், யாழ். மாநகர சபை. |
| பொருளாளர் | : | **திரு நா. இரகுமார்**<br>பொறுப்பதிகாரி P.H.E.D |
| நிர்வாகசபை உறுப்பினர்கள் | : | **திரு ச. லோகசிவம்**<br>பொதுசனத் தொடர்பு அதிகாரி, யா.மா.சபை<br>**திரு ஞா. மோகனசுந்தரம்**<br>வேலை மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**திரு சோ.கணேசநாதன்**<br>மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**திரு து. இராஜன்**<br>தொழில் நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை<br>**திரு கு. விஜயகுமார்**<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர், யா.மா.சபை<br>**திரு கா. ஜெயானந்தா**<br>நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாகம், யா.மா.சபை<br>**செல்வி பொ. புஸ்பலதா**<br>கருவியறைப் பாதுகாவலர், யா.மா.சபை<br>**திரு சி. கிருஷ்ணமூர்த்தி**<br>பதிவகக் காப்பாளர், யா.மா.சபை<br>**திரு செ. பன்னீர்ச்செல்வம்**<br>றோணியோ இயந்திர இயக்குநர், யா.மா.சபை<br>**திரு க. கேதீஸ்வரன்**<br>நீர்வேலைப்பகுதி, யா.மா.சபை<br>**திரு ச.சற்குணமூர்த்தி**<br>வருமான மேற்பார்வையாளர், யா.மா.சபை<br>**செல்வி ரி.தாரணி**<br>முகாமைத்துவ உதவியாளர், யா.மா.சபை |
| கௌரவ பதிப்பாசிரியர் | : | **திரு ந. விஜயசுந்தரம்**<br>அதிபர்,<br>யா/ பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி. |
| விளம்பர அனுசரணையாளர் | : | **திரு. த. கனகசபை**<br>இளைப்பாறிய பிரதம காசாளர்,<br>யா.மா.சபை. |

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

தமிழ்த் தலைவனாக நல்லூரில் வீற்றிருந்து நம்மை அரசாட்சி செய்யும் நல்லைக் கந்தப் பெருமானுக்கு இது இருபத்தோராவது மலர். இருபத்தொரு ஆண்டுகளாக நல்லைக் குமரன் மலர் இடையறாது மலர்வது கந்தப்பெருமானின் திவ்விய கருணையால் என்பதை மறுத்துவிட முடியாது.

நல்லூர்க் கந்தப் பெருமானின் சண்முக வாசல் இராஜகோபுரத்தின் கம்பீரத் தோற்றத்தில் எங்கள் இனத்தின் உயர்ச்சி எழுகைபெறும் என்ற நம்பிக்கை வீண்போகாது. தென்திசையில் எழுந்த நவதள இராஜகோபுரம் வடதிசையிலும் எழுகை பெறுவது எங்கள் இனத்தின் எழுச்சிக்கான அடித்தளம் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

நல்லூர்க் கந்தனின் மகோற்சவத்துடன் யாழ்ப்பாண மண் புனிதம் அடையும். அந்தளவுக்கு எங்கும் பக்திநிலை ஓங்கி நிற்பதைக் காணமுடியும். கந்தப் பெருமானின் மஹோற்சவ காலத்தில் அதிகாலைப் பொழுதில் அங்கப்பிரதிஷ்டை செய்யும் இளைஞர்களின் அரோகரா ஒலியில் தான் கதிரவன் விழித்தெழுவான்.

அந்தளவிற்கு நல்லூர்த் திருவீதியில் எங்கள் இளைஞர்களின் அரோகரா ஒலி பேரிகையாக முழங்கும். அந்த அற்புதக் காட்சியை காண்போர் நல்லூர்க் கந்தப் பெருமான் புரியும் ஆட்சியின் மகிமையை உள்ளுர உணர்வர்.

இதுதவிர திருமுறைப் பாராயணம், காவடி, கரகாட்டம், கற்பூரச் சட்டி என எங்கும் ஒரே பக்திமயம். இவ்வாறு நல்லூர்த் திருவீதி எங்கும் தெய்வீகம் பொலிந்து நிற்கும். அத்தகைய சிறப்பை மேலும் பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பு ஒவ்வொரு இளைஞனுக்கும் உரியதாகும்.

இன, மத பேதம் கடந்து நாடு, தேசம் என்ற எல்லை கடந்து உலகம் முழுவதையும் தன்பால் ஈர்க்கின்ற நல்லூர்க் கந்தப்பெருமானின் மஹோற்சவ காலங்களில் எங்கும் எதிலும் புனிதம் – தெய்வீகம் என்பதை நிலைநிறுத்துவதில் இளம் சமூகம் முன்வரவேண்டும். எங்கள் பண்பாட்டின் அடித்தளம் நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்திலேயே ஆரம்பிக்கின்றது.

எனவே இளைஞர்கள், இந்து சமய கலாசாரத்திற்கு அமைவாக ஆடை அணிந்து, ஆசாரத்துடன் ஆலயத்திற்கு வருவது அவசியமாகும். போராட்ட சூழலில் நாங்கள் பலவற்றை இழந்துள்ளோம். அந்த இழப்பில் உறவுகளும், வாழ்விடங்களும் காலா காலமாகச் சேர்த்துவைத்த செல்வங்களும் அடங்கும்.

ஆனாலும் நாங்கள் எங்கள் பண்பாட்டை, எங்கள் வழிபாட்டை, சுய கௌரவத்தை இழக்கவில்லை என்பதை நிரூபித்தாக வேண்டும்.

இந்த நிரூபணம் இலங்கையை யார் வேண்டுமானாலும் ஆளலாம், ஆனால் எங்கள் தலைவன் – தமிழ் மன்னன் நல்லூர்க் கந்தன் என்பதை மார்தட்டிச் சொல்கின்ற அளவில் எங்கள் இளைஞர்களின் ஒழுங்கும் ஒழுக்கமும் நல்லூர்ப் பதியை மையப் படுத்தி எழுகை பெறவேண்டும் என்ற கருத்தை நல்லைக்குமரன் 21வது மலரின் கருப்பொருளாகத் தந்து நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைத்திட நல்லூர்க் கந்தப்பெருமானைப் பணிந்து அவர் பாதங்களில் இம்மலரைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**பதிப்பாசிரியர்,**
**நல்லைக்குமரன் மலர்**

# பொருளடக்கம்


பக்கம்

*சமர்ப்பணம்*

ஆசிச்செய்திகள்

வாழ்த்துச் செய்திகள்

நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம் 01-03
ச.தங்கமாமயிலோன்

ஒருதிரு முருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய 04
கவிஞர் வ.யோகானந்தசிவம்

நீயே பார்த்துக் கொள் த.ஜெயசீலன் 05

பங்க மறுத்திட பறந்தோடிவா முருகா 06
கவிமணி அன்னைதாசன் ஆனந்தராசா

நல்லைத் திருமுருகா! க.அருமைநாயகம் 07-08

நல்லைக் கந்தனுக்கு ஒரு நற்றமிழ்ப் பாமாலை 09-10
கலாபூஷணம். இராசையா ஸ்ரீதரன்

ஔவையின் தமிழ்மேவ அருள்பவனே 11
கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்

சிந்தையில் சிறை வைத்தேன் கந்தனை 12
கலைப்பரிதி சி.சிவநேசன்

நல்லூர்க் கந்தன் அனுபூதி கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால் 13-14

முருகப்பெருமான் திருக்கரத்தால் தாங்கி எம்மைக் காப்பாராக! 17-20
பேராசிரியர் வி. சிவசாமி

சித்தர் மரபில் முருக வழிபாடும் வள்ளலாரின் அணுகுமுறையும் 21-33
பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன்

சங்க இலக்கியங்களில் முருக வழிபாடு ஓர் ஆய்வு 34-35
பொ. பூலோகநாதன்

முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் 36-38
திருமதி தயாளினி செந்தில்நாதன்

சுப்பிரமண்ய பரார்த்த பூஜைவிதிமுறைகள் - ஒரு நோக்கு 39-42
பிரம்மஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா

முருகன் வள்ளி தேவசேனாதிபதி 43-51
மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்

ஈழுநல்லூர் திருப்பதியின் சிறப்பு 52-55
கலாபூஷணம் மு.சிவலிங்கம்

நல்லூரான் போதிக்கும் நல்லவை 56-58
வை. நவதரன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகிமை 59-61
திருமதி வா. பரமேஸ்வரன்

**திருஞானசம்பந்தர் அருளால் கிடைக்கப்பெற்ற**
**"கற்றவர் விளங்கும் கற்பகக்கனி"** 62-66
கலாபூசணம் கே.எஸ்.ஆனந்தன்

**திருவாசகத்தில் மலர்கள்** 67-78
கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

**அருளானந்தத்தின் பால் ஆன்ம ஈடேற்றந்தரும் சிவபுராணம்** 79-81
ஸ்ரீபத்மராசா திவ்வியன்

**திருமந்திரத்தில் அறம்** 82-99
சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

**கண்ணப்பநாயனாரின் ஈடு இணையில்லாத பக்தி** 100-103
சைவப்புலவர் வை.சி.சிவசுப்பிரமணியம்

**திருமுருகன் அருள் பெற்ற செல்வர்கள்** 104-108
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா

**இந்து அறவியல் எனும் பதம் பற்றிய விளக்கமும்**
**மானவதர்மசாஸ்திரம் கூறும் அறக்கருத்துக்களும் ஒரு நோக்கு** 109-118
செல்வி கர்ணிகா பாஸ்கரஐயர்

**ஆலயக் கிரியைகளிற் சிறப்பிடம் பெறும் "பூதசுத்தி"** 119-122
ஸ்ரீவத்ஸ. நா.சிவசங்கரசர்மா

**இந்து வாழ்வியலில் திருமணச் சடங்கு** 123-135
G. பற்குணராஜா

**சைவ சமயத்தில் அன்பு தொடர்பான கருத்துக்கள்** 136-142
க. கணேசதேவா

**சமய உணர்வு** 142-147
தி. செல்வமனோகரன்

**ஆரோக்கியத்தில் ஆன்மீகம்** 148-149
Dr. திருமதி அருள்மொழி சுதர்மன்

**12 ஜோதிலிங்க சிவஸ்தல மகிமை** 150-156
திருமதி அருந்ததி சிவசுப்பிரமணியம்

**மாநகர் மதுரை** 157-164
பொ. சிவப்பிரகாசம்

**வாழ்வை நெறிப்படுத்தும் சமயம்** 165-168
திருமதி ப. நடராஜா

**சைவாலயப் பெருவிழாக்கள்** 169-171
பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்

**என்னை எனக்குள் தேடினேன் அங்கு உன்னையே காண்கின்றேன் இறைவா!** 172-176
மலர் சின்னையா

**சும்மா இரு சொல்லற!** 177-180
சைவப்புலவர் செ.பரமநாதன்

**நான் ஒரு ஹிந்து என்பதில் ஏன் பெருமிதம் கொள்கிறேன்** 181-185
பி.என். சுதர்ஷன்

**2013இல் யாழ் விருது பெறும் அருட்தந்தை மரியசேவியர் அடிகளார்** 186-187
பு. ஆறுமுகதாசன்

# நல்லைக்குமரன் மலர்

# 2013

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்

- **நல்லை ஆதீன முதல்வர்**

  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்

- **இராமகிருஷ்ண மிஷன்**

  சுவாமி இராஜேஸ்வரானந்த

- **பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமிகள்**

  சுவாமி சித்ருபானந்தா

- **ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

  செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன

- **சின்மயாமிஷன் சுவாமி**

  ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்

- **யாழ் மாநகரசபை முதல்வர்**

  திருமதி யோ. பற்குணராசா

- **யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்**

  பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்

- **யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்**

  திரு. சு.அருமைநாயகம்

- **இந்து சமய கலாசார அலுவல்கள் பணிப்பாளர்**

  சாந்தி நாவுக்கரசன்

- **யாழ் மாநகர ஆணையாளர்**

  செ.பிரணவநாதன்





உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**தொலைபேசி:** 2222870

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**

# நல்லை ஆதீன முதல்வரின்
## அருளாசிச்செய்தி

அன்புசார் பெருந்தகையீர்,

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான முருகப் பெருமான், வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கும் பொருட்டு யாழ்ப்பாணத்து நல்லூரிலே எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான்.

நல்லைக் கந்தனின் வருடாந்த திவ்ய மகோற்சவத்தை முன்னிட்டு வெளிவருகின்ற நல்லைக்குமரன் மலருக்கு அருளாசி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு செய்கின்ற அறப்பணிகளில் இதுவும் ஒன்று. சைவமும் தமிழும் தழைத்தோங்கவும் எதிர்காலத்தலைமுறை நல்லறிவோடு கலைஞானமும் பெற்று சிறப்புறவும் வெளிவருகின்ற இம்மலர் தனித்துவமான பெருமையையுடையது. "எல்லோரும் வாழ வேண்டும்! இன்பமே பெருக வேண்டும்" என்ற நோக்கில் சைவசமய விவகாரக்குழு செயற்படுவதை இட்டு உளம்மகிழ்ந்து இறும்பூதெய்துகின்றோம்.

அலங்காரக் கந்தனுடைய அருமை பெருமைகளைத்தாங்கி வெளிவரும் இம் மலரினை சைவமக்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் பயன்பெற வேண்டும். இந்த உயரிய நல்ல அறப்பணியைச் செய்யும் மாநகராட்சி மன்றத்தினர் மற்றும் பதிப்பாசிரியர் பாராட்டுக்குரியவர்கள். இது இன்னும் வளர்ந்து மேலோங்கி நல்லைக்கந்தனின் அரும்புகழ் பரப்பி அகிலமெங்கும் வரவேற்பைப் பெற்று சிறப்புற வேண்டும் என்று எல்லாம் வல்ல கந்தன் திருவடிகளைப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்தி ஆசி நல்கி மகிழ்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு".**

**நல்லை ஆதீனம்,**
**நல்லூர்.**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய ஸ்வாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**திருஞானசம்பந்தர் ஆதீனம்**
**யாழ்ப்பாணம்**

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன்
# சுவாமிகளின் ஆசிச்செய்தி

மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் சமயத் தகவல்களை பகிரும் வகையிலும் வெளிவரும் நல்லைக்குமரன் மலரின் 21வது மலர் வெளிவர இருப்பதை அறிந்து மனமகிழ்வடைகிறோம்.

இந்தக்கலியுகத்திலே மக்கள் ஆன்மீகத்தின் தேவையை மறந்து உலகியல் வாழ்க்கையிலே அதிகம் கவனம் செலுத்துகின்றனர். எனினும் உலக வாழ்வில் வரும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் தவிக்கின்றனர். இதனால் மன நிம்மதியை இழந்து தவிப்போரும் மன உலைச்சலால் பாதிக்கப்பட்டு இயல்பாக வாழ முடியாமல் தவிப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது.

இத்தகைய நிலையில் அவர்களுக்குத் தேவையான மன நிம்மதியையும், சவால்களை எதிர்கொள்ளக் கூடிய மனஉறுதியையும் அவர்கள் பெற்றுக் கொள்வதற்குத் துணைபுரிவதே இன்றைய ஆன்மீக நிறுவனங்களின் தலையாய கடமையாகும். அவ்வகையில் நல்ல ஆன்மீகக் கருத்துக்களையும் தைரியமூட்டும் சிந்தனைகளையும் மக்களிடம் கொண்டு செல்வதற்குச் சிறந்த வழி ஆன்மீக சஞ்சிகைகளாகும். அந்த வரிசையில் இலங்கையில் வெளிவரும் ஆன்மீக சஞ்சிகைகளில் ஒன்றான நல்லைக் குமரன், 1993 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளிவந்து மக்களுக்கு நன்மை பயப்பது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயம்.

இளைய தலைமுறைக்குத் தேவையான ஆன்மீக விடயங்களை சுமந்து வெளிவரும் இச்சஞ்சிகை சிறப்புடன் வெளிவர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அத்துடன் இம்மலரை ஆக்கும் பணியில் தம்மை இணைத்துக் கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினருக்கு இறைவனின் பரிபூரண அருள்சித்திக்க வேண்டுகிறோம்.

**கொழும்பு.**

**இறைபணியில்**
**சுவாமி இராஜேஸ்வரானந்த**

# *Sri Ramakrishna Sarada Sevashrama.*

## Point - Pedro,
## Sri Lanka.

## பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம
## சுவாமிகளின் ஆசிச்செய்தி

நல்லைக்குமரன் மலரை யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழு தொடர்ச்சியாக கடந்த இருபத்தொரு வருடங்களாக வெளியிட்டு வருவது. போற்றுதற்குரிய பணியாகும். இம்முறை 21வது மலரை இவர்கள் வெளியிடுகின்றனர் இது முருகனது எல்லையற்ற பெருங் கருணையும் திருவிளையாடல்களுள் ஒன்று என்பதும் அடியேனது கருத்து. எத்தனையோ இடர்களை நாம் அனுபவித்த வண்ணமாகவே இன்றும் வாழ்ந்து வருகின்றோம். வெளிநாட்டில் வாழும் நம் சைவ அன்பர்கள் எப்படித்தான் ஆடம்பரமாக வாழ்ந்தாலும் நமது யாழ்ப்பாணக் காற்றை அடியோடு மறக்க வாய்ப்பில்லை.

மிக அண்மையில் ஒரு அன்பர் 35 வருடங்களுக்கு பின் இங்கு குடும்பமாக வருகைதந்து பல ஆலயங்களைத் தரிசித்து நன்கொடையும் வழங்கி இருக்கின்றார். நல்லைக்குமரன் எங்கள் யாவரையும் என்றென்றும் காத்து இரட்சித்து அருளவேண்டும் என்பது அடியேனது மனமார்ந்த பிரார்த்தனையும் வழிபாடும் ஆகும்.

**"நீலச் சிகண்டியி லேறும்பிரானெந்த நேரத்திலுங்**
**கோலக்குறத்தி யுடன்வரு வான் குருநாதன் சொன்ன**
**சீலத்தை மெல்லத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே**
**காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கன்மிகளே"**

**சாரதா சேவாச்சிரமம்,**
**பருத்தித்துறை.**

**அன்னையின் அடியவன்**
**சுவாமி சித்ரூபானந்தா**



உ

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P.No - 0602-213151 திகதி.................................

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் ஆசிச் செய்தி

சைவசமயத்தைக் காப்பதற்கு இறையருளால் சிலர் சில காரியங்களை தோற்றிவிப்பர். இது வழமை. யாழ் மாநகர சபையில் இருபத்தொரு வருடங்களிற்கு முன் தோன்றுவிக்கப்பட்ட சைவ சமய விவகாரக்குழு மகத்தான காரியத்தை ஆண்டு தோறும் நிறைவேற்றி பாராட்டுப் பெற்று வருகிறது.

ஆண்டு தோறும் நல்லைக் கந்தன் மகோற்சவத்தை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்படும் இவர்களது நல்லைக் குமரன் மலர் உயர்ந்த ஆவணமாக அனைவராலும் மதிக்கப்பட்டு வருகிறது. சிறந்த ஆய்வு ரீதியான கட்டுரைகள், தகவல்கள், புகைப்படங்கள் உள்ளடக்கிய மலராக நல்லைக் குமரன் சிறப்பாக வெளிவருகிறது.

நூலின் ஆரம்ப கால ஆசிரியர் தெல்லியூரான் அவர்களின் நெறிப்படுத்தல் இன்றைய பதிப்பாசிரியர் திரு.ந.விஜயசுந்தரம் அவர்களும் சீரிய முறைகளில் நூலை வெளியிட்டு வருவது சிறப்பிற்குரியது. நல்லைக்கந்தன் பெருவிழாக்குறித்து யாழ் மாநகரசபை ஆற்றும் தூய பணிகளிலொன்றாக இப் பணி என்றும் தொடர இறையருளை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

"யாவருக்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே"

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

**செஞ்சொற்செல்வர்**
**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர்**

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

# சின்மயா மிஷன் சுவாமிகளின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவானது நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சைவத்தின் பெருமையை எடுத்துச் சொல்கின்ற ஆக்கங்களை உள்ளடக்கிய நல்லைக்குமரன் மலரினை இவ்வருடம் 21வது தடவையாக வெளியிட இருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நல்லைக்குமரன் மலர் இன்றைய இளம் சமூகத்தினருக்கு விஞ்ஞானத்தையும் தர்க்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட விதத்தில் சைவநெறியின் தத்துவங்களை எடுத்துச் சொல்கின்ற நூலாக மிளிர்வதற்கு எல்லாம் வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**யாழ்ப்பாணம்.**

**இறைபணியில்**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய சுவாமிகள்**
**வதிவிட ஆச்சாரியார்,**
**சின்மயாமிஷன்.**

# முதல்வர் - மாநகர சபை யாழ்ப்பாணம்
# නගරාධිපති - යාපනය මහනගර සභාව
# Mayor - Municipal Council Jaffna

## யாழ்ப்பாண மாநகர முதல்வரின்
## வாழ்த்துச் செய்தி

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய சேவை செய்து வரும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழு நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு 1993ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நல்லைக்குமரன் மலரை பல அறிஞர்களின் ஆக்கங்களுடன் வெளியீடு செய்து மக்கள் மனதில் இடம்பிடித்துக் கொண்ட நல்லைக் குமரனின் மலர் 20ஆவது அகவையைப் பூர்த்தி செய்து 21ஆவது வயதை தொடங்கும் இம்மலர் இம்முறையும் நல்லைக்கந்தன் உற்சவகாலத்தில் வெளிவரும் போது வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற உவகை கொள்கிறேன்.

எமது கலாசார விழுமியங்கள் இன்று எம் மக்கள் மத்தியிலிருந்து விலகிச் செல்லும் இவ்வேளை இம்மலர் மக்கள் மனதில் இடம்பிடிக்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

இம்முறையும் தனது பணியினை செவ்வனே செய்வதற்கு சைவசமய விவகாரக்குழு எடுக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

தொடர்ந்து யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு தமிழ் மக்களினதும், சைவத்தினதும் பெருமைகளை உலகறியச் செய்யட்டும்.

இம் மலர் மேன்மேலும் மெருகூட்டப்பட்டு மீண்டும் மீண்டும் புதுப்பொலிவுடன் ஒவ்வொரு வருடமும் புதிய தகவல்களைத் தாங்கி வர வாழ்த்துகிறேன்.

**மாநகராட்சி மன்றம்.**
**யாழ்ப்பாணம்.**

**திருமதி யோ. பற்குணராசா**
**மாநகர முதல்வர்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*University of Jaffna - SriLanka*

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

அருள்மிகு நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் வெளியிடப்படுகின்ற "நல்லைக் குமரன்" இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையில் நல்லைக்குமரனின் வருடாந்த மகோற்சவம் என்பது மிகவும் முக்கியத்துவம் மிக்கது. புனிதமான மங்கள நிகழ்வாகும். இத்தகைய காலகட்டத்தில் எம்பெருமானின் ஆலயத்திற்கு அருகில் இருக்கின்ற யாழ்ப்பாண மாநகர சபையினரின் சைவசமய விவகாரக் குழுவினரால் நல்லைக்குமரன் எனும் நூல் வெளியிடப்படுகின்றது. இந்நூல் இன்று நேற்று அல்ல இரண்டு தசாப்தங்களை கடந்து இருக்கின்றது.

யாழ் மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு இந்துவும் அறிந்திருக்க வேண்டிய பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்ற நல்லைக்குமரன் மலர் தொடர்ந்தும் வெளிவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்**
**துணைவேந்தர்.**

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone } 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone } 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය / எனது எண் / My No. } Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No. }

දිනය / திகதி / Date } 25.07.2012

## யாழ்ப்பாண அரசாங்க அதிபரின்

## வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டிலே தமிழ் மன்னர்கள் மணிசூடிய காலத்தில் அவர்களின் இராசதானியாக விளங்கிய நல்லையம்பதியிலே எழுந்தருளியுள்ள அருள்மிகு நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலங்களில் வெளியிடப்பட்டு வரும் "நல்லைக்குமரன்" மலர் 21வது இதழாக மலரவிருப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் குடாநாட்டில் நல்லைக் குமரனின் வருடாந்த மகோற்சவம் மிகவும் முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும். இத்தகைய புனிதமான காலப்பகுதியில் இளைய தலைமுறையினரிடையே சைவசமய அறிவினையும், இறை பக்தியையும், ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் நோக்கில் எமது சமய வரலாறுகள், சமயத் தத்துவங்களுடன் கந்தனின் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டு ஆண்டுதோறும் இம் மலரை வெளியிட்டு வரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினர் மிகுந்த பாராட்டுக்குரியவர்களாவர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த "நல்லைக்குமரன்" மலர் வெளியீடு சிறப்புறவும், அலங்காரக் கந்தன் எனும் அழகு பெயர் கொண்ட முருகப் பெருமானின் அருட்பார்வை அனைவருக்கும் கிட்டவும் எல்லாம் வல்ல நல்லூரானின் திருவடியைப் பணிந்து எனது நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யாழ் மாவட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலர்.**

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂක<br>பணிப்பாளர்<br>Director | 2552643 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 2552825 | ඊමේල්<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@yahoo.com |
| පොදු<br>பொது<br>General | 2552641 | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 11.05.2011 |


# இந்துசமய, கலாசார திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால், நல்லூர்க் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் "நல்லைக் குமரன்" என்னும் சிறப்பு மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

ஆலயம் என்பது இறைவன் வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் இடமாகவும் அது அமைந்துள்ள பிரதேச மக்களின் ஆன்மீக வாழ்வுக்கும் தளமாக விளங்குகிறது. தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்கள் தோறும் அவர்களின் சமய பாரம்பரிய, கலைப்பண்பாட்டு மரபுகளைப் பேணுவதும் அவற்றைப் புரிந்து கொள்ள வைப்பதும் இன்றைய காலகட்டத்திற்கு அவசியமான ஒன்றாக உள்ளது. இத்தகு உற்சவங்கள் மூலம் நமது பண்பாட்டு விழுமியங்களை இளம் சந்ததியினரிடையே பரவச் செய்திட முடியும்.

அந்த வகையில் இந்து சமய, கலாசாரம் பற்றிய பல ஆக்கங்களை உள்ளடக்கிய தாக "நல்லைக் குமரன்" என்ற சிறப்பு மலர் வெளியிடப்படுவதற்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ் அரிய பணிகளை மேற்கொள்ளும் முயற்சி மென்மேலும் சிறப்பாக நடைபெறுவதற்கு நல்லூர்க்கந்தன் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
**இல 248-1/1 காலி வீதி,**
**கொழும்பு 04.**

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்**

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின்
## வாழ்த்துச் செய்தி

பழைமையும், பெருமையும், தொன்மையும், பாரம்பரியமும் மிக்க சைவ சமயத்தின் பெயரால் இச்சபையில் இயங்கும் சைவசமய விவகாரக் குழுவினால், வரலாற்றுப் பெருமை மிக்க நல்லைக் கந்தனின் உற்சவ காலத்தில் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சமுதாயத்தில் சமய, சமூக விழுமியங்களைப் பேணி ஆன்மீக உணர்வை வளர்ந்தெடுப்பதில் பெரும் பங்காற்றி வரும் நல்லைக் குமரன் மலரின் வரிசையில் இருபத்தோராவது மலராக விரிகின்ற இம்மலரிலும் காலத்தின் தேவைக்குகந்த ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் வருகைக்கு சகல விதத்திலும் உழைத்த அனைவருக்கும் நல்லைக்கந்தன் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**மாநகராட்சி மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

**செ.பிரணவநாதன்**
**சைவசமய விவகாரக்குழுவின் தலைவரும்,**
**மாநகர ஆணையாளரும்.**

உ

# நல்லைக்குமரன் மலர்

# 2013

## பாமாலைகள்


- நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்

  ச.தங்கமாமயிலோன்

- ஒருதிரு முருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய

  கவிஞர் வ.யோகானந்தசிவம்

- நீயே பார்த்துக் கொள்

  த.ஜெயசீலன்

- பங்க மறுத்திட பறந்தோடிவா முருகா

  கவிமணி அன்னைதாசன் ஆனந்தராசா

- நல்லைத் திருமுருகா!

  க.அருமைநாயகம்

- நல்லைக் கந்தனுக்கு ஒரு நற்றமிழ்ப் பாமாலை

  கலாபூஷணம். இராசையா ஸ்ரீதரன்

- ஔவையின் தமிழ்மேவ அருள்பவனே

  கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்

- சிந்தையில் சிறை வைத்தேன் கந்தனை

  கலைப்பரிதி சி.சிவநேசன்

- நல்லூர்க் கந்தன் அனுபூதி

  கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

# நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்

ச.தங்கமாமயிலோன்

அருவதாய் உருவதாய் அருவுருவம் ஆனதாய்
ஆதியந்தம் இல்லாத அரும்பொருளாய் ஆனதாய்
பெருகுபே ரறங்கள் பூக்கும் பேரின்ப மானதாய்
பேசாஅநு பூதிபிறப் பித்தருள் செய்வதாய்
நெருநலையாய் இன்றாகி நாளையுமாய் நிற்பதாய்
நீதியம்ப லத்திலாடும் நின்மலற்கு மைந்தனாய்
திருவாகித் தெளிவாகித் தீவினைகள் தீர்ப்பதுவாஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

நன்றென்றுஞ் செய்வதாய் நாடுமின்ப மாவதாய்
நாற்றிசையும் நலனோங்க நற்றுணையாய் ஆவதாய்
வென்றென்றுஞ் சூரர்கிளை வேரறுக்க வல்லதாய்
வேதாந்த சித்தாந்த மேன்மைமிகு வீடதாய்
ஒன்றிநின்று உயிர்களெல்லாம் ஓதுநாம முடையனாய்
ஓதுமறை யாகமத்தின் உட்பொருளாய் உயர்வதாய்
சென்றுசென்று நின்றுநின்று சென்மமேழுஞ் சேர்வதாஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

அரியாகி அயனாகி ஆறுருவங் கொண்டதாய்
அளவிடற்கு அரியதாய் அச்சமிலா ஒன்றதாய்
பெரியதாய்ப் பூரணமாய்ப் பூவிலுதித்து வந்ததாய்
பெருகுபே ரறங்களவை பூக்குந்தூய பெருக்கதாய்
எரியதாய் ஏறூர்ந்தான் நெற்றிக்கண்ணில் ஆனதாய்
எதிரதில்லாச் சூரர்தம்மை எதிர்த்துவென்ற தானதாய்
தெரிவரிய தத்துவமாய்த் தேர்ந்துமலைகள் வாழ்வதாஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

எங்கணும்தண் விழிகளாய் ஏதிலர்க்கு அமிர்தனாய்
ஏக்கந்துன்ப முடல்வியாதி தீர்க்குமரு மருந்ததாயத்
தூங்கவெண்பிறை யுந்தெய்வகங்கா நதியுஞ் சூடிடும்
துடியிடையா ளுமைபாகன் தோத்தரிக்குந் தூயனாய்
சங்கவெண்ணீ றணிந்துதோன்றுஞ் சர்வசித்தி யாளனாய்ச்
சாமவேத கீதம்பாடுஞ் சதாசிவற்குக் குருவுமாய்ச்
செங்கமலப் பொற்பாதம் சேருமன்பர்க் களிப்பதாஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

வண்ணத்தமிழ்க் காவியங்கள் வளர்க்குந் தூயரட்சனாய்
வாழும்வாழ்வில் எந்நாளும் வழித்துணையாய் நிற்பதாய்
எண்ணுமெண்ணம் யாவினும் இலங்கித்துலங்கும் ஈசனாய்
ஈசனுமை பாலகனாய் ஈறிலறம் வளர்ப்பதாய்க்
கண்ணுளோர்கள் காணுங்கண்ணில் காட்சியாகி நிற்பதாய்க்
கண்டம்யாவுங் கடந்ததாய்க் காணினிய கற்பமாய்
திண்மையாகித் திருவாகித் தீவினைகள் தீர்த்தருளுஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

வந்துசேரும் வல்வினைகள் வலியமெலிய நலிந்துபோக
வாரணத்தின் அன்பினோடு வள்ளியை மணஞ்செய்தவா
சந்துபொந்து எல்லாமும் தாவிச்சூரை வதைத்தவா
சரவணத்துப் பொய்கையில் தாமரையில் வளந்தவா
முந்தையோர்க்கு முந்தையாய் மூவுலகும் புரப்பவா
மூரிவெள் ளேறிலூர்ந்தான் நுதலனக்கண் உதித்தவா
செந்தணலாம் மேனியதாய்ச் செகத்தினில் வந்துதித்தவா
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

தண்ணாருந் தென்பொதிகைத் தமிழுணர்த்துந் தெய்வமாய்
தக்கோர்கள் புகழ்தில்லை யம்பலவன் மைந்தனாய்
விண்ணோரும் மண்ணோரும் வீழ்ந்திறைஞ்சு மொருவனாய்
வெற்றிவடி வேலேந்தியருள் மேன்மையளிப்ப தாவதாய்
பண்ணினிய பாக்களாய்ப் பரவசங்க ளானதாய்
பதியதாய்ப் பாலகனாய்ப் பக்தர்க்கருள் செய்வதாய்
திண்ணமுதமாகி என்றுந் தித்திக்க வல்லதாயஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

மாமருந்தாய் மருக்கொழுந்தாய் வல்வினைகள் தீர்ப்பதாய்
மஞ்சுலாவு கோபுரங்கள் மாமலைபோல் நிற்பதாய்
தாமரைகள் ஆறிலுரு அவசமாகி வந்ததாய்
தங்கரதம் மீதிலேறி தவஞானம் ஒளிர்வதாய்
தேமதுரத் தமிழோசை திக்கெட்டும் விதைப்பதாய்த்
தெங்கினிள நீரும்பாலுந் தினமுமபி டேகிப்பதாய்ச்
சேமநலங் காப்பதாய் திரவியங்க ளாவதாஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

துங்கமுயர் தும்பிமுகன் தம்பியாகி நின்றவா
தூயமறை தாமளித்த துரைமணியின் மைந்தனாய்ச்
சங்கத்தமிழ் மூன்றும்வளர் சங்கமதில் நின்றவா
சாமவேத கீதம்பாடும் சாமிநாதன் ஆனவா
பங்கமிலாப் பெருவாழ்வு பாரெங்கும் வளர்ப்பதாய்
பாடியாடிப் பணிந்தேத்தும் பக்தர்க்கருள் செய்வதாய்
செங்கண்ணர வசைத்தான் திருநெற்றிக் கண்ணனாஞ்
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

வஞ்சகத்தை மாய்ப்பதற்கு மாமரமாய் நின்றசூரை
வன்னெஞ்சம் பிளந்துருவ வடிவேலைத் தொட்டவா
விஞ்சையர்க்கு வாழ்வளித்து வேண்டும்வரம் ஈந்தவா
விடிவெள்ளி யாய்விளங்கி வீரதீரம் புரிந்தவா
பஞ்சினடி மெல்லியலார் பாவையரை மணந்தவா
பல்லுலகும் தொழுதேத்த பரஞ்சுடராய்ப் பொலிபவா
செஞ்சரணந் தந்தெம்மைச் சீர்செய்ய வேண்டுமென்றே
சீர்நல்லைக் கந்தனவன் சேவடியைச் சேவிப்போம்.

# ஒருதிரு முருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய

கவிஞர் வ' யோகானந்தசிவம்

தமிழர் தெய்வம் நல்லைக் குமரன்
தரணி எங்கும் அறிந்த உண்மை
அமிர்த மான மொழியின் காவலன்
அன்னை போல அணைத்துக் காப்பவன்
நமது வாழ்வும் வளமும் நல்லூர்
நாயகன் தந்த வரப்பிர சாதம்
எமது இன்ப துன்பம் எல்லாம்
இளவல் நல்லூர்க் கந்தன் செயலே.

சிவனின் நெற்றிக் கண்ணில் தோன்றிய
சிவந்த பொறிகள் ஆறு சேர்ந்து
அவதரித் தானே அறுமுக வேலன்
அற்புத மான தோற்றமே கந்தன்
அவனியில் எத்தனை அற்புதம் செய்தான்
அத்தனை செயலும் கந்தன் கருணையே
உவந்து ஏற்ற திருஅவ தாரம்
உலகம் உய்ய உதித்தான் கந்தன்.

அன்னையின் ஞான வேலினைப் பெற்றவன்
அசுரரை அழித்துத் தேவரைக் காத்தவன்
சின்னப் பையனாய் ஔவையாம் பாட்டியைச்
சிந்திக் கவைத்து ஞானம் உரைத்தவன்
என்ன புதுமை தந்தை சிவனின்
இனிய குருவாய் உபதே சித்தவன்
உன்னத மந்திரம் மறந்தான் பிரமனே
உணர வைக்கவே சிறையில் அடைத்தவன்

அண்ணன் விநாயகன் தந்தை தாயையே
அனைத்து உலகமும் என்று சுற்றினான்
வண்ண மயிலின் மீது ஏறியே
வையகம் சுற்றி வந்தான் முருகனே
கண்ணின் முன்னால் கனியை இழந்ததால்
கவலையில் பழனியில் ஆண்டி ஆனவன்
பெண்கள் இருவராம் வள்ளிதெய் வானையைப்
பெண்டிர் ஆகவே பெற்றான் முருகனே

அறுபடை வீடுகள் இருப்பிடம் ஆனவன்
அன்பர் உள்ளம் தனியிடம் பிடித்தவன்
குறுநகை வள்ளியின் உள்ளம் நிறைந்தவன்
குன்று தோறும் ஆடி மகிழ்பவன்
சிறுவனாய்ப் பாட்டிக் குஞானம் உரைத்தவன்
சிங்கா ரவேலனாய் உலகையே ஆள்பவன்
அறுமுகன் ஆகவே உலகில் உதித்தவன்
அனைத்து உயிரையும் காத்து நிற்பவன்

பெருமை சேர்நோக்கம் கொண்ட சிவனார்
பெற்ற கோலம் உலகோர் நன்மையைக்
கருதியே செய்தார் இந்த அற்புதம்
காண்பவர் வியந்து போற்றி நின்றனர்
கருணைகூர் முகங்கள் ஆறு உடனே
கரங்கள் பன்னி ரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து உதித்தனன்
உலகம் உய்து வாழ்வு சிறக்கவே.

# நீயே பார்த்துக் கொள்

த.ஜெயசீலன்

என்னைச் சூழும் இடர்கள் ஒவ்வொன்றிலும்
எரிதணல் இடு; என் காலிடறியே
நின்றெனக்குப் பொறிவைத்து நான்விழ
நிழலில் குறிவைக்கும் நேர்மையில்லாதொரை
கிண்டு கொள்ளலை நான்; நீகண்கள் வை!
கழுத்தறிக்கிற கைக்கு விலங்கிடு!
என்னை வஞ்சிக்கும் நெஞ்சை நான் நோகலை
எதிர்க்கலை; நீயே தண்டனை தீர்த்திடு!

கோழையாய்க் கல்லுக் குத்த முயலவோ
குழிபறித்தவர்.... வெற்றி தடுக்கவோ
கோள்கள் மூட்டியே போட்டுக் கொடுக்கவோ
குள்ளத் தனஞ் செய்து கொட்ட மடக்கவோ
காழ்ப்பைக் கொட்டிக் கழுத்தை அறுக்கவோ
கருதிடேன்; எனக் கென்றுமே தீயவை
சூழச் சூழ்ச்சி செய்வோரை நீ பாரெனச்
சொல்வேன்; நீ பார்த்துக் கொள்வாய்... யான் அஞ்சிடேன்!

தீயதை விட்டுத் தூர விலகுறேன்!
தீட்டுச் செல்வத்தைத் தீண்டா தொதுக்குறேன்
தேவை ஆயிரம் ஆயினும் .... சேர்பவை
செம்மையானவையாய்ப் பெற நேர்கிறேன்!
ஏய்த்துப் பிழைப்பதை முற்றாய் வெறுக்கிறேன்
என்மனச் சாட்சிக்கு மட்டுமே அஞ்சுறேன்!
பாதை காட்டிடும் வேலவா... நாளைக்கும்
பயண வழித்துணையாகவா..... கேட்கிறேன்

# பங்க மறுத்திட பறந்தோடிவா முருகா

கவிமணி அன்னைதாசன் ஆனந்தராசா
ஓய்வுநிலை அதிபர், ஊரெழு

நம்பினோர் கைதொழும் நாயகனாம் எங்கள்
நல்லை நகருறை வேலவனாம்
எம்பிணிகள் தீர்க்கும் ஏரகனாம் இவன்
எம்மத மக்களுந் தொழுபவனாம்.

எங்கள் முன்னோர்கள் அன்றவனைக் கண்டனர்
பொங்கும் வெள்ளி வேலாய் கருவறையில்
திகழ்ந்த விக்கிரமத்தின் திருமிகு ஆடியின்
இருபத்தியேழினில் தங்கமானான்.

தங்கவேலாய் மாறித் தரணியோர்க் கருளிய
தக்கதோர் சான்றாகக் கோபுரங்கள்
தெற்கிலும் திகழ்கிறது வடக்கிலும் தொடர்கிறது
இத்தனைக்கு மர்ச்சனையோ ஒரு ரூபாய் தான்.

காசினைக் கறந்திடும் நோக்க மில்லை இவனுக்கு
காலந் தவறிய பழக்க மில்லை
ஞாலத்தின் மேதைகள் யாரிங்கு வந்தாலும்
தாளத்திற் கேற்பத் தலை யசைப்பதில்லை.

நல்லையின் இவ்வழகு நானில மறிந்தது தான்
செல்லப்பன் சொன்ன திருவார்த்தைகளும்
பொல்லாப்பு இல்லை என்றான் எப்பவோ முடிந்த தென்றான்.
எல்லோர் மனத்தையும் ஈர்ப்பவைதான்.

போரிடுங் காலத்தில் ஊரடங்க முன்னர்
தேரடியை மட்டும் சுற்றி வந்து
யார் தடைபோட்டாலும் நான் வருவேன் என்று
நம்மவர்க் கன்றருள் செய்தவனாம்.

நல்லைக்குமரன் மலர் கூட அவன்
எல்லையில் கருணையை இயம்பி நின்று
இரண்டு பத்தோராண்டு தொடர்ந்து வெளிவந்து
திரண்ட வாசகர்க்கோர் ஆவணமாம்

மாடி மனைகள் பெருகலாச்சு இங்கே
ஓடிடும் வீதிகளோ அகலமாச்சு
ஊடகங்கள் வாழ்வை அழிக்கலாச்சு வெறும்
நாடகமாய் வாழ்வே மாறிப் போச்சு.

அடிபிடி சண்டைகள் மலியலாச்சு எவர்க்கும்
அடங்காத மனநிலை தோன்றலாச்சு
சுணங்காதே வேலவா சுறுக்காக ஓடி வா
இனங்காக்கும் தருணம் இதுதானப்பா.

தமிழிற்கு தெய்வம் முருகனென்றார் – உனக்கு
தமிழர் படும்பாடு தெரியலையோ – ஐயா
சங்கத்தமிழ்மன்னன் சங்கிலியனின் வேலா
பங்கமறுத்திட பறந்தோடி வா முருகா

# நல்லைத் திருமுருகா!

குளப்பிட்டி க.அருமைநாயகம்

ஆனிநடை ஓய்வுபெற அடுத்துவரு மாடியது
தோணியாய் அவனியிலே தொடரவர – தேனியாய்
அடியார்கள் நல்லூரா னருள்பெற நாளும்
நாடிடுவர் நற்பேறை நினைந்து

ஆடியாவணி யிணைநிகழ இறைபக்தி மணம்கமழ
ஓடிடும் நாட்கள் இருபத்தியாறு – கூடிவரும்
மெய்யடியார் குறைகளைந்து அமைதியொடு வாழவைப்பான்
ஐயமின்றி ஆறுமுகனென அறி

காவடிகள் ஆடிடுவோர் கரங்கூப்பி வணங்கிடுவோருன்
சேவடிக்கு வந்திடுவர் வடிவேலா – ஆவலொடு
நலமும் வளமும் நல்வாழ்வும் தருகவென
விளக்கிடுவர் விருப்பொடு வந்து

வருத்தங்கள் வந்தழுத்தி வருத்தமுடன் வருமடியார்
வருத்தத்தை வீழ்த்தி வைக்கும் – முருகன்
உலகுய்ய உதித்த உயர்தெய்வம் எமக்கும்
நலந்தரு வானென நினை

இரக்கமின்றி இன்னல்பல இழைத்த அரக்கர்களை
கரத்துள வேல்கொண் டழித்த – குமரன்
எக்கரையும் அக்கிரமம் உக்கிரமுராது காத்து
தக்கபலன் தந்திடுவான் துதி

மறையாத மனவமைதி மங்கலங்கள் எங்களுக்கு
குறைவின்றி குவலயத்தில் அமைவதற்கு – நிறைவோடு

பரம்பொருளைப் பக்தியொடு பாடிப் பணிந்து
வரம்பெறுவோம் குமரன் வசம்

பிறந்து மகிழ்ந்து வருந்திப் பிறவாது
நிரந்தரப் பேரானந்தம் நாமடைய – இரந்து
வேண்டின் வடிவேலன் வேண்டுவதை ஈவானென
ஆன்றோர் உரைப்பா ரறி

ஊரெல்லா மாலயங்கள் உன்டெனினு மன்றுமுதல்
பேர்பெற்று விளங்குவது நல்லூரே – சீர்பெருகு
சித்தர்களும் பக்தர்களும் சிந்தனைச் சிற்பிகளும்
நித்தமிங்கு வழிபட்டார் நினை

பண்பாட்டில் சிறந்து பாரம்பரியம் போற்றி
நன்மதிப்பொடு வாழ்ந்த அந்நிலையில் – என்றும்
மாறாது மங்காது மகிமைபெற வேண்டி
நேராக வழிபடுவோம் நாம்

நல்லைத் திருமுருகா நாடறிந்த பேரழகா
தொல்லையிலே வாழ்வெமக்குத் தந்திடுவாய் – எல்லாம்
இழந்து நலிந்து இன்னலொடு வாழ்பவர்க்கு
நலந்தந்து வாழவைப்பாய் நீயே.

# நல்லைக் கந்தனுக்கு ஒரு நற்றமிழ்ப் பாமாலை

சிவநெறிக்கலாநிதி கலாபூஷணம். இராசையா ஸ்ரீதரன்

நல்லூரின் நாயகனே ஞான வடிவேலவனே முருகனே
பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப் ரமணியனே குகனே
எல்லோரும் ஒரு மனதாய் ஏத்திப் பணிந்தோம் சண்முகா
பொல்லாத வினையறுக்க நல்லூரில் குடிகொண்டாய் முருகா!

நீலமயில் வாகனனே நின்மலனே நித்தமுனைப் பணிந்தோம்
கோலமயில் மீதமர்ந்து ஞாலம் வலம் வந்த குமரனே முருகா
பாலஷண்முகனே பரமனுக்கே உபதேசித்த பழனி மலையானே
வேலனாய் எழுந்தருளி எம் வேதனை தீர்ப்பாய் முருகா!

குன்று தோறாடி வரும் குமரனே நல்லைக்கந்தனே சண்முகனே
மன்றுளாடி மைந்தனே மாயோன் மருகனே முத்துக் குமரனே
அன்று அசுரனை அழிக்க வேலெடுத்து வந்த ஞான பண்டிதனே
இன்று எமக்கருள எழில் நல்லூரில் காட்சி தருவாய் முருகா!

தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனே முருகப் பெருமானே
இல்லை யெனாது வரமீந்தருளும் வள்ளி மணாளனே சரவணனே
கல்லை யொத்த மனமது கசிந்துருக அருட்காட்சி தந்தே
நல்லை யிலேஎழுந்தருளி நமக்கருள் புரிவாய் குமரா முருகா!

முருகா என்று ஒரு தரம் சொன்னால் உருகாதாரும் உளரோ?
திருமால் மருகனே தில்லைச் சிற்றம்பலத்தானின் மைந்தனே
வருவாய் மயில் மீதேறி வள்ளி தெய்வயானையுடன் திருக்காட்சிதர
பெருகாதோ கண்ணீர் பெருமானே கணபதி சோதரனே முருகா!

புள்ளி மயில் வாகனனே புதுப்பொலிவுடனே தினமும் நல்லூரில்
வள்ளி மணவாளனாய் வலம் வரும் சரவணனே சண்முகனே
துள்ளி ஓடி வந்தே எம் துயர்களைய அருட்காட்சி தாராய்
வெள்ளி மயிலேறி வரும் வேலவனே சரவணபவனே முருகா!

சரவணனே சண்முகனே சதாசிவன் மைந்தனே முருகனே
சிரமது அறுத்தே சூரனைச் சேவலும் மயிலும் மாக்கியவனே
வரமது தரவே நல்லூரில் வலம் வரும் வடிவேலவனே
பரமசிவனுக்கே குருவாகிய பாலசுப்ரமணியனே முருகா!

ஆறுபடை வீடுடைய ஆண்டவனே ஆனந்த மயில் வாகனனே
வீறு கொண்டெழுந்த சூரபன்மனை கூறுகொண்ட வேலவனே
வேறுயாரெமக்குத் துணை வெற்றி வேலுடனே நல்லூரினிலே
ஏறுமயிலேறியே எம்மை ரட்சிக்கவே ஓடி நீவாராயோ முருகா!

கார்த்திகைக் குமரனே கார்மயில் வாகனனே கணபதி சோதரனே
பார்த்திருந்தோம் நல்லூரில் பழனியாண்டவனே பக்தரட்சகனாய்
கீர்த்தியுடன் நீயிருந்து வேண்டுவோர் வேண்டிய அனைத்தையுமே
பூர்த்தி செய்தே அருள் புரியும் கார்த்திகேயனே குமரா முருகா!

சிந்தையிலே குடியமர்ந்த சிங்கார வேலவனே திருமால் மருகனே
விந்தைகள் காட்டியே வேதனை போக்கிடும் முத்துக் குமரனே
நிந்தை செய்வாரையும் வாழவைக்கும் ஷண்முகனே! சரவணனே!
முந்தை வினை போக்கி எமைக்காக்க வேண்டும் ஐயனே முருகா!

# ஔவையின் தமிழ்மேவ அருள்பவனே

கவிஞர் வதிரி கண. எதிர்வீரசிங்கம்

**எடுப்பு**

அழைத்தவர் குரல் கேட்டு வருபனே! – முருகா
ஆவலுடன் எம்மை அணைப்பவனே!
– அழைத்தவர்.....

**தொடுப்பு**

இருமாதர் புடை சூழ மகிழ்பவனே! –அன்று
ஈனர்கள் மமதைதனை அழித்தவனே!
– அழைத்தவர்......

**முடிப்பு**

உலகளந்த மன்னவனே மால்மருகா! – எங்கள்
ஊழ்வினை யாவையும் அறுப்பவனே!
எழில் வேல் கரமேந்திகாட்சி தந்து! நல்லையை
ஏடிலங்க செய்து புகழ் தருபவனே!

ஐயப்ப சுவாமி என்று ஆனவனே!–எங்கும்
ஒய்யார வள்ளி லோல நாயகனே!
ஓமென்னும் பிரணவத்தின் உட்பொருளே! – நாளும்
ஔவையின் தமிழ் மேவ அருள்பவனே!
– அழைத்தவர்......

# சிந்தையில் சிறை வைத்தேன் கந்தனை

கலைப்பரிதி சி.சிவநேசன்
அல்வாயூர்

ராகம்– சண்முகப்பிரியா தாளம்– ஆதி

**பல்லவி**

சிந்தையில் சிறைவைத்தேன் கந்தனையே– எந்தன்
பந்தம் அவனாகும் பக்தியிலே

சிந்தையிலே.......

**அனுபல்லவி**

எந்தப் பயமும் மனம் சேராதே –துணை
தந்து காப்பவன் முருகனென்றே

சிந்தையில்.........

**சரணம்**

பாவப்பிணிகளை வேரறுப்பான்– வேல்
காவி வந்தே பகையறுப்பான்
தேவரும் போற்றும் சிவசண்முகனை –நாளும்
சேவித்து மகிழும் வாஞ்சையினாலே

சிந்தையில்...........

கல்மனதும் கரையும் வசிகரமே– கார்த்தி
கேயனின் கருணை கண்மலர்வே
எல்லை காணுமென் பிறவிக்காலமே –ஆட்
கொள்ள வருவான் கடம்பனென்றே

சிந்தையில்..........

# நல்லூர்க் கந்தன் அனுபூதி

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

1. நல்லூற் பதியிற் கொடியே றிடவே
தொல்லை வினைகள் தொடரா தொழிந்தே
யல்லற் படுத்தும் அகப்பேய் யகற்றி
நல்வாழ் வருள்வாய் நல்லூர்க் குமரா!

2. சேவற் கொடியோ னும்கை வேலும்
காவல் காக்கும் கந்தா வென்றே
கூவல் செய்யக் குறைதீர்த் தெமையாள்
பாவம் தீர்ப்பாய் பதிநல் லூரா!

3. கொடியோ ரெவற்கும் கொடியோன், சேவற்
கொடியோ னவனே குருவா னவனே
அடியார் குறைதீர்த் தகம்வாழ் பவனே
விடிவைத் தரமுன் விரைநல் லூரா!

4. சங்கத் தமிழ்சங் கமமே முருகா
பொங்கும் புலவர் புகழ்சேர் குருவே
இங்கெம் துயரை இனிதோட் டிடவுன்
அங்கை வேல்கொண் டாள்நல் லூரா!

5. தந்தைக் குபதே சம்செய் பவனே
விந்தைக் குமரா விளையு மடியார்க்
கெந்தக் குறையு மிணையா தொழிக்கும்
கந்தா! கடம்பா! கதிர்நல் லூரா!

6. அருள்சே ரவ்வைக் கருள்பா லித்துப்
பொருள்சேர் பாடல் புனைந் தாண்டவனே
இருள்சே ராதெம் மிதயந் தனிலே
மருள்நீக் கிடுவாய் மறைநல் லூரா!

7. வஞ்சச் செயல்கள் மலிந்தெம் நாட்டில்
அஞ்சப் படுதல் அரங்கே றிடுதே
துஞ்சப் படுமெம் துயர்நீக் கியுடன்
பஞ்சந் தீர்த்'தாள்' பதிநல் லூரா!

8. வீறாய்ச் சூரன் மிடுக்கை யொடுக்கிக்
கூறாய் மயில்சே வலெனக் கொண்டாய்
கூறா யோவெம் குறைதீர் மருந்தும்
ஆறாய் வருவாய் அருள்நல் லூரா!

9. விடுவாய் வேலை விறல்சண் முகனே
பொடியாய்க் கொடுமைப் பிடியே யொடிய
விடிவே தரவே பரனே வருவாய்
அடியார்க் கருளும் அறநல் லூரா!

10. என்றும் காக்கு மெழில்வேல் முருகா
நன்றுன் கருணை நயமா யறிவோம்
நின்றெம் துயர்நீக் கிடவே யெழுந்து
இன்றே வந்'தாள்' எம்நல் லூரா!

11. முருகா! வெனவென் றொருகா லுரையின்
பெருமா நலனும் பெருகும் தனமும்
தருவா னவனே 'தரு'வா னவனே
வரமே கரமே வரும்நல் லூரா

12. துளைபட் டெனுளம் துடித்தா டிடுதே
களைபட் டுடலம் கடிபட் டிடுதே
இழைபட் டெனையா ளகலும் துயரும்
குழைபட் டெழுசூழ் குகநல் லூரா

13. பாடு மெனையாண் டுதுயர் களைவாய்
கூடும் பலவா றுநலம் பொழிவாய்
தேடு மெனுளத் தேயுறைந் துதினம்
சூடும் புகழ்சேர்த் திடுநல் லூரா!

14. அல்லற் படுவென் றெனையிவ் வுலகில்
தொல்லைப் படவிட் டனையே தகுமோ
கல்லைக் கனியாக் கிடுவேல் முருகா
சொல்லற் கினியோ னேநல் லூரா!

15. அஞ்சித் துயர்கொண் டுழலும் அடியேன்
செஞ்சொற் கவிகேட் டெனையா ளுவனே
வஞ்சித் திடுவோ ருமெனைப் பணிய
நெஞ்சப் பகைநீக் கிடுநல் லூரா!

16. கஞ்சத் துறைசண் முகவே லவனே
நெஞ்சக் கவலை களைந்தென் னையுமோர்
விஞ்சு முயர்வோ டொளிதந் தருளி
வஞ்சம் நெருங்கா வருள்நல் லூரா!

17. இன்னற் படுமென் னிதயந் தனிலே
இன்பத் தொடுநிம் மதிகள் மருவத்
துன்பத் திடர்கள் துயர்கள் களையும்
அன்புச் சுடர்சண் முகநல் லூரா!

18. தினமு முனையான் மறந்தே யறியேன்
கனமா மனதிற் 'றின'மே விடுவாய்
சினமாய்ப் பகைவர் களையே களைந்தே
மனங்கொண் டெதிர்வந் துறைநல் லூரா!

19. அஞ்சித் துயர்கொண் டடியே னழுதால்
அஞ்சே லெனவென் னிடர்போக் கிடவே
நெஞ்சத் திலுறைந் திடுவே லவனார்
கொஞ்சும் கருணைக் கடல்நல் லூரா!

20. நம்பித் தொழுவா ரிதயத் துறையும்
செம்மைச் சுடர்வே லவனே முருகா
இம்மை யிடருக் கிடரைக் கொடுத்தே
நம்மைக் காத்க்ஷதாள்; நனிநல் லூரா!

21. இடர்கள் எனைவந் திடறா மலருள்
சுடர்வே லவனே தொடரா மல்வினைப்
படக்ஷவூழ்; வினைகள் பறந்தோ டிடவே
உடனே யருள்வாய் உயர்நல் லூரா!

22. ஆறுஞ் சடைசே ரையன் விழியில்
ஆறும் பொறியா கவுதித் தவனே
கூறும் வினையும் குறையு மகலத்
தேறும் படிக்ஷயாள்' திருநல் லூரா!

23. அஞ்சும் முகத்தோ ரகத்தே யுதித்து
வஞ்சம் நெருங்கா வழிசெய் குவனே
துஞ்சும் நிலைமா றிடவே யருளை
விஞ்சிப் பொழிவாய் வேல்நல் லூரா!

24. முடியா முதலே முருகா! முருகே
வடிவா னவனே வழிபட் டுருகும்
அடியார் துயர்போக் கிடவே யுடனே
விடிவாய் வருவாய் விறல்நல் லூரா!

25. நினைத்தேன் மறந்தே னிலையென் னிதயத்
துனைத்தேன் எனத்தேன் சுவைத்தேன், கவித்தேன்
இணைத்தேன் தழைத்தேன் இளைத்தேன் தினமும்
அணைத்தேன் அருந்'தேன்' அருள்நல் லூரா!


உ

# நல்லைக்குமரன் மலர்
# 2013
## கட்டுரைகள்

- முருகப்பெருமான் திருக்கரத்தால் தாங்கி எம்மைக் காப்பாராக!
- சித்தர் மரபில் முருக வழிபாடும் வள்ளலாரின் அணுகுமுறையும்
- சங்க இலக்கியங்களில் முருக வழிபாடு ஓர் ஆய்வு
- முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்
- சுப்பிரமண்ய பரார்த்த பூஜைவிதிமுறைகள் - ஒரு நோக்கு
- முருகன் வள்ளி தேவசேனாதிபதி
- ஈழநல்லூர் திருப்பதியின் சிறப்பு
- நல்லூரான் போதிக்கும் நல்லவை
- நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகிமை
- திருஞானசம்பந்தர் அருளால் கிடைக்கப்பெற்ற "கற்றவர் விளங்கும் கற்பகக்கனி"
- திருவாசகத்தில் மலர்கள்
- அருளானந்தத்தின் பால் ஆன்ம ஈடேற்றந்தரும் சிவபுராணம்
- திருமந்திரத்தில் அறம்
- கண்ணப்பநாயனாரின் ஈடு இணையில்லாத பக்தி
- திருமுருகன் அருள் பெற்ற செல்வர்கள்
- இந்து அறவியல் எனும் பதம் பற்றிய விளக்கமும் மானவதர்மசாஸ்திரம் கூறும் அறக்கருத்துக்களும் ஒரு நோக்கு
- ஆலயக் கிரியைகளிற் சிறப்பிடம் பெறும் "பூதசுத்தி"
- இந்து வாழ்வியலில் திருமணச் சடங்கு
- சைவ சமயத்தில் அன்பு தொடர்பான கருத்துக்கள்
- சமய உணர்வு
- ஆரோக்கியத்தில் ஆன்மீகம்
- 12 ஜோதிலிங்க சிவஸ்தல மகிமை
- மாநகர் மதுரை
- வாழ்வை நெறிப்படுத்தும் சமயம்
- சைவாலயப் பெருவிழாக்கள்
- என்னை எனக்குள் தேடினேன் அங்கு உன்னையே காண்கின்றேன் இறைவா!
- சும்மா இரு சொல்லற!
- நான் ஒரு ஹிந்து என்பதில் ஏன் பெருமிதம் கொள்கிறேன்
- 2013இல் யாழ் விருது பெறும் அருட்தந்தை மரியசேவியர் அடிகளார்



சூரியபகவான் எழுந்தருளி வீதியுலா வரும் காட்சி



அருணகிரிநாதர் சுவாமிகளின் பிரதிஷ்டையின் போது...

# முருகப்பெருமான் திருக்கரத்தால் தாங்கி எம்மைக் காப்பாராக!

**பேராசிரியர் வி. சிவசாமி**

இந்துசமயத்தில் முழுமுதற் கடவுளாகிய இறைவனை அருவமாகவும், அருவுருவமாகவும், உருவமாகவும் வழிபடும் முறை தொன்று தொட்டு நிலவி வந்துள்ளது. இறைவன் ஒருவனேயாயினும் அவனைப் பல திருப்பெயர்களால் வழிபடும் பாங்கு காலத்தால் முந்திய இந்துசமய புனித நூலான இருக்குவேத காலம் தொட்டு நிலவி வந்துள்ளது. "உண்மைப் பொருள் ஒன்றே. ஞானிகள் அதனைப்பலவாறு அழைப்பர்" என இவ்வேதம் கூறுகிறது.

இறைவனை மலர் தூவி வழிபடல், தியான மூலம் வழிபடல், தோத்திரம் மூலம் வழிபடல், ஆடல் பாடல் மூலம் வழிபடல் முதலிய வழிபாட்டு முறைகள் உள்ளன. இவ் வழிபாட்டு முறைகளிலே பக்தி குறிப்பிடற்பாலது. இச்சொல் பகிர்தல், வழங்கு தல், பங்காகப்பிரித்தல், ஒரு பொருளைத்தேடிச் சேர்த்தல், பங்கு பெறுதல், அன்பு காட்டுதல், அனுபவித்தல், தெரிவு செய்தல் எனப்பல பொருட்படும். **பஜ்** எனும் வடமொழி வினையடியிலிருந்து வந்ததாகும்.

குறிப்பாக இறைவனிடத்து ஆன்மாவிற்கு ஏற்படும் அன்பு மட்டுமன்றி, ஆன்மாவிடத்து இறைவன் பெருங் கருணையினால் கொள்ளும் பேரன்பும் பக்தி எனும் பதத்தில் அடங்கியுள்ளன. எனவே இஃது ஒரு தலைச்சாய்வான அன்பன்று. இருதலைச் சாய்வான அன்பும் அனுபவமும் உள்ளடக்கியதாகும். நாரதபக்தி சூத்திரம் போன்றவை, பக்தியெனில் இறைவனிடத்து கொள்ளப்படும் பேரன்பு எனக் கூறுகின்றன.

இறைவன் ஆன்மாக்களிடத்துக் கொண்டுள்ள பேரன்பு எல்லையற்றதும், இயல்பானதுமாகும். எனவேதான் இறைவன்; பிறப்பு, இறப்புக்களைக் கொண்ட சஞ்சார சுழற்சியிலே அழுந்தி மிகுந்த அல்லற்படும் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களை வழங்கி அவர்களைப் பாவங்களில் இருந்து மீட்டுக் காப்பாற்றி முத்தியின்பம் அளிக்கிறார் என சைவசித்தாந்தம் கூறுகின்றது. இத்தகைய கைமாறு கருதாத இறைவனை வழிபட்டு உய்வதற்கான வழிமுறைகளில் ஒன்றாகத் தோத்திரம் விளங்குகிறது. வடமொழியிலே ஸ்தோத்திரம் எனில் புகழ்ச்சி, புகழ்மாலை, புகழ்ந்துரைத்தல் எனப் பல பொருட்படும். இங்கு குறிப்பாக பரம்பொருளாகிய இறைவனை இறைவியைப் புகழ்ந்து பாடுதலையே குறிக்கும். நமஸ்கரித்தல், ஆசிகூறுதல், சித்தாந்தத்தை எடுத்துரைத்தல், பராக்கிரமத்தைப் புகழ்தல், பெருமைகளை விளக்குதல், பிரார்த்தனை செய்தல் ஆகிய ஆறு அம்சங்களைக் கொண்டதாக (நமஸ்காரம் ததாசீச்சசித்தாந் தோக்கி பராக்கிரமஹ! விபூதிஹி பிரார்த்தனா சேதிஷட் விதம் ஸ்தோத்திர லக்ஷணம்) இதற்கு வரைவிலக்கணம் கூறப்படுகிறது. ஸ்தோத்திரங்கள் பல, தமிழில் உள்ளன. வடமொழியிலே இருக்கு வேதம் தொடக்கம் இக்காலம் வரை பல

தோத்திரங்கள் எழுந்துள்ளன. பரந்த வடமொழி இலக்கியப்பரப்பிலே தோத்திர இலக்கியமும் குறிப்பிடற்பாலதே. ஸ்தோத்திரங்கள் பொது வாக இசை நயமும் கொண்டவை. பாடுவோர், கேட்போர், வாசிப்போர் உள்ளங்களை இறை வன்பால் எளிதில் வழிப்படுத்துவன. எம்மொழி யில் இருந்தாலும் நோய் தீர்க்கும் சாதனமாக வும் விளங்கி வந்துள்ளன. இவற்றை முறைப்படி பயன்படுத்தியவர்கள் நோயிலிருந்து விடுபட்ட தாக மரபுரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும் அறிய முடிகின்றது. எனவே சமய, தத்துவ ரீதி யில் மட்டுமன்றி உள ரீதியாகவும், உடல் ரீதியாக வும் இவை நன்மை பயப்பன.

இந்து சமயம் போற்றும் பல்வேறு தெய்வங்கள் பற்றிய தோத்திரங்கள் வடமொழி யில் உள்ளன. அவை தெய்வங்களின் பெயர்கள், தோத்திரங்களின் யாப்பு, எண்ணிக்கை முதலிய வற்றின் அடிப்படையில் பலவாறு அழைக்கப் படும். எடுத்துக்காட்டுக்களாக தட்சணாமூர்த்தி ஸ்தோத்திரம், ஸ்யாமளா தாண்டகம், காமாக்ஷி ஸ்தோத்திரம், கணேச பஞ்சரத்தினம், லிங்காஷ் டகம், சண்முகஷட்கம், கராவலம்பாஷ்டகம், தசாவதார ஸ்தோத்திரம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றுள்ளே முருகப்பெருமானைப் பற்றிய கராவலம்பாஷ்டகத்தைக் குறிப்பிடலாம். ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஆன்மாக்கள் தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப பிறப்பு, இறப்பு சுழற்சியால் உலகிலே துணையின்றித் தத்தளிக்கின்றன. இவ்வகையில் அவர்களுக்கு மேலான ஒருவரின் பரம்பொருளின் உதவி தேவைப்படுகிறது. ஆகவே அப்பரம்பொருள் தம்முடைய திருக்கரத்தால் அவர்களைத்தூக்கி அருள்பாலிப்பார் எனும் அசையாத நம்பிக்கை யுண்டு. இத்தகைய பாவனையில் ஓர் ஆத்மா (இதை இயற்றியவர்) இறைவன் முருகப் பெரு மானின் திருக்கரத்தை துணையாகக் கொண்டு அவரை வேண்டும் பாங்கில் அமைந்துள்ள ஸ்தோத்திரம் எட்டுச் செய்யுள்களைக் கொண் டுள்ள கராவம்பம் ஆகும். இப்பதம் ஊன்றுகோல், கையால் ஒருவரைத் தூக்கிக் காப்பாற்றுதல் முதலிய பொருள்படும். இங்கு முருகப்பெரு மானின் திருவருட்பார்வை கிட்டுதல் இவ்வாறு அனைவருக்கும் விளங்கும் வகையில் கூறப் பட்டுள்ளது. இக்கருத்து இறுதியிலுள்ள செய்யு ளாலும் புலப்படும். இவ்வெட்டுச் செய்யுள்களும் ஒரு குறிப்பிட்ட வரன்முறையில் அமைந்து விளங்குகின்றன.

அனைத்து செய்யுட்களிலும் முருகப் பெருமானின் மேலான பெரும் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. ஸ்வாமிநாத என முதலாவது செய்யுள் தொடங்குகிறது. பிரணவத்தின் உட் பொருளைத் தந்தையாராகிய சிவபிரானுக்கு உபதேசித்த தனிச்சிறப்பு வாய்ந்த முருகப்பெரு மான் இதனால் அவரினும் மேலானவராகக் கருதப்பட்டுள்ளார். பிறிதொரு பார்வையில் மகன் கூறுவதைக் கேட்டுத் தந்தை மிக மகிழ்ச்சியடை தல் இயல்பு. இதை விட பிறிதொரு கருத்து தந்தையிலும் பார்க்க மகன் மேலான ஞான முடையவர்! அறிவு தலைமுறையாக மேலும் வளர்தலையும் இது சுட்டலாம்.

எவ்வாறாயினும் சுவாமிநாதன் முரு கனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். தொடர்ந்து அவர் கருணைவடிவமுள்ளவர் (கருணாகர) ஆதரவற்றவர்களுக்கு உற்ற உற வினர் (தீனபந்து). இவ்வாறு கூறிய பின்னர் தம் பெற்றோராகிய பார்வதி பரமேஸ்வரன் ஆகி யோரின் தாமரை போன்ற திருமுகங்களுக்கு சூரியன் போன்றவர் எனக் கூறப்படுகிறது. தம்மு டைய அருமைப் பிள்ளையின் காட்சி பெற் றோருக்கு முகமலர்ச்சியை ஏற்படுத்துவது இயல்பே. இதன் பின் திருமால் முதலிய ஏனைய

தேவர்களை வணங்கும் திருவடிகளை உடையவர் முருகன் எனக்கூறி "வள்ளி நாயகியின் தலைவனே! தேவரீர் கரம் (தந்து) என்னைப் பாதுகாப்பீராக" என தோத்திர ஆசிரியர் கூறுவதாக முதலாவது செய்யுள் முடிவடைகிறது. இந்த நாலாவது பாதம் அனைத்துச் செய்யுள்களின் இறுதியில் இடம்பெற்றுள்ளது. முருகப்பெருமானை தனியே கூறாது அவருடைய சக்திகளில் ஒருவராகிய வள்ளியோடு சேர்த்துக் கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடற்பாலது. இறைவனின் திருவருளே சக்தி. எனவே இறைவன் திருவருள் பாலிப்பதற்கு சக்தியைக் குறிப்பிடுதல் அவசியமாகும்.

இரண்டாவது செய்யுளிலும் முருகன் எல்லாத் தேவர்களுக்கும் மேலான சிவபிரானின் மகன் எனவும் அவர் தேவ கணங்களின் தலைவனான இந்திரனால் வழிபடப்படுபவர். மென்மையான தாமரைமலர் போன்ற அழகிய திருவடிகளை உடையவர். நாரதர் முதலிய தேவரிஷிகள் இவர் புகழைப் பாடுகின்றனர் எனவும் கூறி மீண்டும் திருக்கரம் தந்து பாதுகாக்குமாறு தோத்திர ஆசிரியர், பெருமானை வேண்டுகிறார்.

மூன்றாவது செய்யுளின் தொடக்கத்திலே எப்பொழுதும் அன்னதானம் செய்பவர்களின் சகல நோய்களையும் தீர்ப்பவர் எனவும் தொடர்ந்து எல்லா வகையான செல்வங்களையும் கற்பகத்தரு போலப் பக்தர்களுக்கு வழங்குபவர் எனவும் வேதங்கள், ஆகமங்கள், பிரணவம் சுட்டும் உண்மையான வடிவம் - இறைவன் - இவரே முருகன் எனவும் கூறப்படுகிறது. தமக்கு திருக்கரம் தந்து பாதுகாக்குமாறு அப்பெருமானைத் தோத்திர ஆசிரியர் மீண்டும் துதிக்கிறார்.

நான்காவது செய்யுளிலே வேல், சூலம், வில், அஸ்திரம் தரித்து முருகப்பெருமான் கிரௌஞ்சாசுரனை அழித்ததும் மயில் வாகனத்தை உடையவர் என்பதும் கூறப்பட்டு திரும்பவும் தம்மைப் பாதுகாக்குமாறு தோத்திர ஆசிரியர் வேண்டுகிறார்.

ஐந்தாவது செய்யுளிலும் தேவர்களுக்கு மேலான தெய்வமான முருகப் பெருமான் தேரிலே அமர்ந்து இந்திரன் முதலான தேவர்கள் வணங்கச் சூரனை வென்றமை கூறப்படுகிறது. மீண்டும் தம்மைப் பாதுகாக்குமாறு தோத்திர ஆசிரியர் வேண்டுகிறார்.

ஆறாவது செய்யுளில் அப்பெருமான் தரித்திருக்கும் வைரம் முதலிய ரத்தினங்களால் இழைக்கப்பட்ட கிரீடம், கேயூரம், குண்டலம், கவசம் ஆகியவற்றை வர்ணித்து தாரகனை அழித்த வீரனே! எனவும் தேவர்களால் வழிபடப்படுபவர் எனவும் கூறி மீண்டும் தம்மைக் காக்குமாறு தோத்திர ஆசிரியர் வேண்டுகிறார்.

இதுவரை அப்பெருமானின் சிறப்பியல்புகள், வீரதீரச் செயல்களைக் கூறிய பின் அப்பெருமானை வழிபடும் முறையொன்று ஏழாவது செய்யுளிலே கூறப்படுகிறது. அதாவது பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரம் ஜபித்த கங்கை நீரினாலும், பஞ்சாமிர்தத்தினாலும் இந்திரன் முதலிய தேவர்கள் அப்பெருமானுக்கு அபிஷேகம் செய்துள்ளார்கள் "மயில்வாகனனே! ஆசை முதலிய தீயனவற்றை அழிப்பவன் எனவும் கூறி மீண்டும் தம்மைக் காக்குமாறு தோத்திர ஆசிரியர் வேண்டுகிறார். இறுதியாகவுள்ள எட்டாவது செய்யுளின் தொடக்கத்திலே கார்த்திகேயனே! என அப்பெருமானை விளித்துத் தமது முக்கிமான வேண்டுகோளை இத் தோத்திர ஆசிரியர் அப்பெருமானிடம் விடுக்கிறார். அதாவது வள்ளி நாயகனே! காமம் முதலிய நோயால் கலங்கிய துஷ்ட சிந்தனையுள்ள என் மீது (இரக்கம் கொண்டு) சந்திரனின் பேரொளி போன்ற கருணையாகிய அமிர்தம் மிகுந்த பார்வையால்

(என்னை) நனைத்து கை கொடுத்து பாதுகாப் பாயாக" என்பதாகும்.

இறைவனின் திருவருட்பார்வை அழி யாததே (அமிர்தம்) அதுவும் சந்திரனின் பெரிய ஒளி போன்று குளிர்ச்சியானதே. திருவருட் பார்வை மூலம் பாவங்கள் கழுவுண்டு நீங்கும். எனவே தான் திருவருட்பார்வையில் நனைந்து என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் எனலாம். இத் தோத்திரம் சிறிய அளவினைக் கொண்டதாயி னும் அதிலுள்ள சொல் நயம், பொருள் நயம், பக்தி முதலியன குறிப்பிடற்பாலன.

எடுத்துக்காட்டாக, "ஸ்ரீகார்த்திகேய கருணாமிர்த பூர்ண த்ருஷட்யா காமாதிரோக கலுஷீக்ருத துஷ்ட சித்தம்! ஸிக்த்வா துமாமவ கலாதர காந்தி காந்த்யா வல்லீ ஸநாத மமதேஹி கராவலம்பம்" என்பதைக் குறிப்பிடலாம். இத் தோத்திரம் இதனை இயற்றியவர் கூறும் பாங் கில் அமைந்துள்ளதாயினும் இதனைப் பாடுப வர், வாசிப்பவர், கேட்போர் தாமே இவற்றைப் பாடுவதாக, வாசிப்பதாக, கேட்பதாக பாவனை செய்து முருகப்பெருமானை தியானித்து திருவருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல்வேறு இன்னல்களும் துன்பங்களும் நிறைந்த இவ்வுலகில் வாழும் மக்களுக்கு எல்லாம் வல்ல முருகப்பெருமானுடைய காக்கும் திருக்கரமே உற்றஉறுதுணையாகும். இத்தகைய தோத்திரங்களைப் பக்தியுடன் பாராயணம் செய்து அனைவரும் இகபர நன்மைகளைப் பெறுவார்களாக!

## குமரனுக்கு ஒரு மாலை

அலங்காரக்கந்தா அல்லல் தீர்ப்பாய்
நல்லைக்குமரா நன்மைகள் தருவாய்
வேண்டினேன் உன்னை வேதனைகள் தீர்ப்பாய்
உன்னடி நாடிவந்தேன் உன்வேல் துணை
பன்னிருகையோனே உன் பாதம் சரணம் ஐயா
பாரினில் வாழ எம் பாவங்கள் போக்கிடு ஐயா
நல்லைக்குமரா எம் குறைகள் தீர்ப்பாய்
குமரனுக்கு ஒரு மாலை தொடுத்தேன் – எம்
வினைகளை அறுத்திடு ஐயா

**கீர்த்தனா ஆறுமுகதாசன்**

# சித்தர் மரபில் முருக வழிபாடும் வள்ளலாரின் அணுகுமுறையும்

**பேராசிரியர் (திருமதி) கலைவாணி இராமநாதன்**
MA, Ph.D.
**இந்து நாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## அறிமுகம்

தமிழர் சமய ஞான வரலாற்று மரபிலே முருகவேள் எனும் கந்தக்கடவுள் பற்றிய வழி பாட்டு மரபு மிகவும் தொன்மையானது என்பதை சித்தர்களது வரலாற்று மரபிலிருந்து அறிய முடியும். சங்க காலத்திற்கு முன்னர் உள்ள காலத்தை வரையறை செய்துகொள்ள முடியாது. ஆனால் தெளிவாகக் காணக்கூடிய அளவிற்கு 2000ஆண்டுகளாக வரலாற்றிலே உலவி வரு கின்ற சித்தர்களின் தொடர்ச்சியான ஒருமைப் பாட்டின் தொடர்பு மாறாத வகையில் வளர்ந்து வந்திருப்பதனை ஆய்வறிஞர்கள் பலரும் ஒத்துக்கொண்டுள்ளனர்.[1] கி.மு 6000 ஆண்டு களுக்கு முதல் சித்தர் வரலாற்றுத் தொன்மை யினை அகத்தியர் முதற்கொண்டு திருமூலர் தொட்டு பதினெண் சித்தர் எண்ணிக்கையானது வடலூர் வள்ளலார் வரை இப்பட்டியல்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.[2]

சித்தர்கள் தோன்றிய ஊர்கள், காலங்கள் தெளிவாகப் புலப்படுவதில்லை. கி.பி 14ஆம் நூற்றாண்டில் இருந்து சித்தர் இலக்கியங்கள் மக்களிடையே புத்துயிர் பெறத் தொடங்கி யுள்ளன. இவர்களால் ஆன்மீக விழிப்புணர்வு எழுச்சிபெற்றது. அத்துடன் மருத்துவம், யோகம், இரசவாதம், சோதிடக் கலைகளும் வளர்ச்சி பெற்றன. ஈழநாட்டிலும் கடையிற்சுவாமி சித்தர் முதல் யோகர்சுவாமிகள் வழி வழியாகவும் சித்தர்கள் வாழ்வு தொடர்ந்து காணப்படுகிறது. பதினெண் சித்தர் மரபிலே இவ்வாறு இன்று வரை கணக்கற்ற வகையில் சித்தர் மரபு பதி வாகிக் கொண்டே வந்துள்ளது. இராமலிங்க வள்ளலார் காலம் (கி.பி 1824–1874) கி.பி. 19ம் நூற்றாண்டாக அமைகிறது.

இத்தகைய தொன்மையான சித்தர்களின் பூர்வீகம் பற்றி Dr.K.N குப்புசாமி, K.S. உத்தம ராயன் போன்ற சித்த மருத்துவ ஆய்வாளர் மற்றும் தமிழறிஞர் மா.பொ.சிவஞானம், மயிலை சீனிவேங்கடசாமி, டி.என்.கணபதி, Dr.இரா.மணிவாசகம் போன்ற பல ஆய்வாளர் களும் சித்தர் ஆன்மீகத்தினை வெளிக் கொணர் வதில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். அரிய ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளனர். இவ்வா றாக நோக்குமிடத்து சித்தர் மரபின் ஆரம்பம் பற்றி நிலவும் கருத்துக்களை அறிவதும் இங்கு அவசியமாகிறது. ஏனெனில் சித்தர் மரபானது முருக வழிபாட்டுடனும் சிவ வழிபாட்டுடனும் இறுக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது.

## சித்தர் மரபியலும் முருகவழிபாடும்

இப் பௌதீக உலகம் தோன்றுவதற்கு முன்னர் இருளும் ஒளியும் என ஒன்றுமில்லாத ஒரு நிலையிலே ஆகாயம் தோன்றி (வெளி), அவ்வெளியிலே காற்றும் (வாயு), அடுத்து அக்கினி (தேயு), பின்னர் நீரும் (அப்பு), இறுதி யாக மண் (பிருதுவி) என்பவற்றின் தோற்றம் என்பன ஐம்பூதங்களின் தொடக்கத்திற்கு ஆதார

மாக அமைந்தது என வேத இலக்கியங்களாலும் அறியப்படும்.[3]

இத்தகைய பிருதுவித் தத்துவங்கட்குத் தோற்றமாயமைந்த பூரண ஜோதியானது, ஒளிக் குவியலாகி ஒரு வடிவுமில்லாது எங்கும் நிறைந் திருந்தது. அனைத்து தத்துவங்களையும் கடந்த பூரண ஒளியே "முதல் சித்தர்" என அறியும் வண்ணம் தன்னை வெளிப்படுத்தியது. இதுவே சித்த மரபின் ஆதித் தோற்றமாக உள்ளது என Dr.உத்தமராயன், Dr. கேசவப்பிள்ளை போன் றோர் விளக்குவர். சித்த மரபானது மூலமரபு, பாலமரபு, கைலைமரபு என மூன்று வகையாகப் பேசப்படும். பூரணஜோதி முதற் சித்தராகிய சிவன் எனவும், பால மரபில் சிவனது நெற்றிக் கண்ணாகிய ஜோதியிடம் இருந்து தோன்றிய முருகன் முதலிடம்பெற்றவர் எனவும் ஆய்வாளர் சிலர் கூறுவது பொருத்தமுடையது எனலாம்.[4] கைலைமரபினர் என்போர் கருவிலே பிறந்து திருவுடையராகி தமது தபோபலத்தால் பல்வேறு சித்திகளையும், அனுபூதிகளையும் அடைந்து பூவுலகில் பதினெண் சித்தர் மரபு வழியில் இடம் பெற்றனர். சித்தர்கட்கெல்லாம் ஆதியாக விளங்குபவர் சிவன்தான் என்றும் தமிழ் நாட்டுச் சித்தர்களிடையே ஒரு சம்பிரதாயமுண்டு.[5] வடமொழி சைவசித்தாந்த சாஸ்திர நூல்களான அடப்பிரகண சித்தாந்த நூல்களும் சிவனே முதற் சித்தன், சித்தர்களுக்கெல்லாம் சித்தன் எனக் குறிப்பிட்டுள்ளன.

சித்தர் மரபிலே முருகவேளை மூல மரபி னைச் சேர்ந்த சித்தராகக் குறிப்பிடும் வழக்கம் காணப்படுகிறது. முருகனது பிறப்பு சிவன் என்னும் பூரண ஜோதியைக் குறிப்பிடும். அந்த பூரண ஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஆறு கதிர் களும் ஆறாம் அறிவு எனப்படும். பகுத்தறிவின் வடிவமாக முழுமையடைந்தது. ஜோதியை எந்த சக்தியாலும் நெருங்க முடியாது. அதனது அழகையும் ஒளியையும் எந்த மொழியினாலும் வர்ணிக்க முடியாது. மனம் வாக்கிறந்த பரி பூரணம் என்றார் தாயுமானவர். முருகவேளின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருவாவினன் குடி "சித்தன் வாழ்வு" எனப் பெயர் பெற்றிருந் தமையினை திருமுருகாற்றுப்படை குறிப்பிடும். திருமூலரது குரு திருநந்திதேவர் எனத் திரு மந்திரம் கூறும், முருகவேள் முதற்சங்க உறுப்பி னர் என்றும் அவரது சீடர்களில் நந்திதேவர், அகத்தியர் என்போர் சிலர் எனவும் ஆய்வாளர் கருதுவர்.[6]

பாலவம்சத்தைச் சேர்ந்த சித்தர் கணங்களை ஒரு பிரிவாகக் கொள்ளும் ஆய்வாளர் சிலர் பாலன் – முருகன் எனவும் அவன் சித்தனாகவும் விளங்கினான் எனவும் திருமுருகாற்றுப்படை நூலின்வாயிலாக விளக்குவர். (பா.எ.176) முருகனது திருவாவினன் குடி எனப்படும் பழனி மலைக்கு சித்தன் வாழ்வு என்ற பெயர் வழங்கி யது என பத்துப்பாட்டிற்கெழுதிய உரையில் உ.வே.சாமிநாதையர் குறிப்பிடுவர். இத் திருத் தலத்தில் போக சித்தர் என்பவரால் நவபாணத் தால் உருவாக்கப்பட்ட மூலவர் – தண்டபாணி– பழனி ஆண்டவர் எனவும் போற்றப்படுகிறார். 'சுப்பிரமணியர் ஞானம்' என்னும் சித்தர் நூலில் முருகனை முதற் சித்தராகக் கொண்டு வழங்கும் சித்த மரபு பற்றியும் குறிப்பிட்டுள்ளது. தொல் காப்பியத்தில் அறிவர் என்ற பெயரில் சித்தர்கள் பற்றியும் விளக்கியுள்ளது.

**'மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன்'**

என வரும் சூத்திரத்தில்[7] இறப்பு, பிறப்பு, நிகழ்வு என முக்காலமும் அறிபவர் "அறிவர்" எனவும் இடம் பெற்றுள்ளது. சைவ சித்தாந்தக் கோட் பாட்டின் முன்னோடிகள் "அறிவர்கள்" என Dr.S. இராதா கிருஷ்ணன் குறிப்பிட்டமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.[8]

திருவாவினன்குடியில் முருகனைத் தரிசிக்க வருவோரில் பதினெண் கணத்தவரும் சித்தர் களும் காணப்பட்டனர் என நச்சினார்க்கினியர் கூறுவர்.[9] சிலப்பதிகாரத்திலும் கி.பி 3ம் நூற் றாண்டளவிலே 'அறிவன்', அறவோன் அறிவுரை வரம்பிகந்தோன் செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன் (10:176-177) என வரும் அடியார்க்கு நல்லார் உரையில் அறிவர் என்றால் எக்காலத் தும் எல்லாப் பொருளையும் அறியும் அறிவை உடையவன் எனவும் விளக்கியுள்ளார். மணி மேகலையில் அட்டமா சித்திகளை அடையும் வழிகளும் அதனை அடைவதற்கு சந்தம், சித்தம், வீரியம், மீமாம்சம், (Strong, Will, Through, Investigation) என்ற நான்கு வழிகளும் பின்பற்றப் பட்டன எனவும் இவ் அரிய சித்திகளைப் பெற்ற வர்கள் சித்தபுருசர் இவர்களது நெறி 'சித்த யானம்' எனவும் கூறப்பட்டுள்ளது.[10] 'யோக சமாதி' உகந்தவர் சித்தர்' (1490) சித்தர் சிவத் தைக் கண்டவர் எனவும் (2526) திருமந்திரம் வெளிப்படுத்தியுள்ளது.

ஒவ்வோர் சித்தர்களும் ஒவ்வோர் திருத் தலங்களில் சமாதி கொண்டிருப்பதனால் மக்கள் கூட்டமும் ஆங்காங்கே தல யாத்திரை மேற் கொள்வதனையும் காணலாம். இவற்றுள் பதினெண் சித்தர் சமாதித் தலங்களை சித்தர் இலக்கியங்கள் வரிசைப்படுத்தியுள்ளன. அவற் றிலே முருகனது திருத்தலங்களும் இடம்பெற் றுள்ளன. குறிப்பாக போகசித்தர் பழனியிலும், எட்டுக்குடியில் வால்மீகி, திருப்பரங்குன்றத்தில் மச்சமுனி எனும் சித்தர் வாழ்ந்தார் என்பனவும் முக்கியமான திருத்தலங்களாகும்.[11] "The Smile of Murugan' என்ற நூலில் கமில் சுவலபிள் என்பார் சித்தர்கள் பற்றிய செய்திகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அருணகிரிநாதரையும் அவரது திருப்புகழ் நூலையும் முருக வழிபாட்டினையும் விதந்து பேசியதுடன் வயலூர் திருத்தலத்துடன் தொடர்புபடுத்தியும் சித்தர்கள் அறிதற்கரியவர் கள், அவர்கள் ஒரு புரியாத புதிர் எனவும் (ANENIGMA) ஆய்விலே சுட்டிக் காட்டியமை மேல்நாட்டாரால் புகழப்பட்ட சித்தர் மரபியல் பற்றியும் தெளிவாக்குகின்றது.

இவ்வாறாக முருகவழிபாட்டுடன் பெரிதும் ஈடுபாடு கொண்ட பக்தர்கள் சித்தர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். அவர்களில் குமரகுரு பரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச வள்ளலார் போன்றவர்கள் சிறந்த முன்னோடிகளாக அமை கின்றனர். அத்துடன் சித்தர்கள் என்போர் சிறந்த யோகியராக, மருத்துவராக, இரசவாதிகளாக, வேதாந்த சித்தாந்த சமரசவாதிகளாக தம்மை வெளிப்படுத்திய சாதனையாளர்கள். உருவ வழி பாட்டிற்கு உடன்படாதவர்கள். சாதி, சடங்குகள், சம்பிரதாயங்களைக் கண்டித்தவர்கள் என்ற கொள்கையில் இறுக்கமானவர்கள். மனித நேயத்தை வளர்த்த சீர்திருத்தவாதிகள் - மறு மலர்ச்சியாளர்கள்-சுதந்திரமான சிந்தனை யாளர்களாகவும் விளங்கியவர்கள். இதனால் சித்தரியல் சித்த மரபு இந்திய மரபாகவும் (Pan-Indian Tradition) சிறப்பிக்கப்படுகிறது.[12]

### முருக வழிபாட்டு நெறியில் வள்ளலார்

19ம் நூற்றாண்டானது தென்னாசியாவிலே குறிப்பாக பாரத நாட்டிலே பண்பாட்டுக் கலப்பு களினால் பெரு மாறுதல்களைச் சவால்களைச் சந்தித்துக் கொண்டிருந்த காலமாகும். உறக்கத் தில் இருக்கும் அறிவுலகத்தைத் தட்டி எழுப்பி, கூடவே ஆன்மீக உலகிலும் ஒரு விழிப்புணர்வை தோற்றுவித்த காலமெனலாம்.

அக்காலத்தில் தான் தமிழகத்தில் அருட் பிரகாச வள்ளலார் தலைசிறந்தவராகத் தோன்றி னார். 'ஆன்மீக - சமய - தத்துவ - கலாசார நிலைகளிலும் வள்ளலாரது பங்களிப்பானது புதுமையாக வீறு கொண்டெழுந்தது' என்ற K.சுப்பிரமணியம் என்பவரது கூற்று முற்றிலும் பொருத்தமானதே.[13] சமய நம்பிக்கைகளை அறிவு நோக்கில் ஆராயும் மனப்பாங்கு தோன்றாத

காலம். சமய நெறியும் ஆராய்ச்சி வளர்ச்சிக்குட்பட்டதே என எண்ணுவதற்குக் கூட தற்துணிவு தேவைப்பட்டது. மேல்நாட்டு அறிவு வீச்சுகளும் தத்துவக் கொள்கைகளும் கூட எமது சமய நம்பிக்கைகளையும். கோட்பாடுகளையும் எடைபோட்டு சீர்தூக்கி ஆராய்வதற்குரிய பல வழிகளையும் சமைத்துக் கொடுத்தன.

சமய நெறிகளில் தாழ்வில்லை சமய வாழ்வினை வழி நடத்தும் சிலரால்தான் பிழைகளும் தவறுகளும் தாழ்வுச் சிக்கல்களும் ஏற்படுகின்றதெனவும் உணரத் தலைப்பட்டனர். இத்தகையதொரு சூழமைவிலேதான் இராமலிங்க வள்ளலார் அவதரித்தார். புதிய விழிப்புணர்வின் ஆதி கர்த்தா வள்ளலார் என பாரதியாரும் போற்றும் வண்ணம் வள்ளலாரின் சமய வழிபாட்டு அணுகுமுறைகள் பலரையும் கவர்ந்தன. சாதி, சமய, இன வேறுபாடுகள். செயற்கையான பொருளாழம் புரியாத சடங்குகள் அடிப்படையில் அமைந்த போலிச்சமய உணர்வு மாறினால்தான் சமரச சன்மார்க்க உயர்வு நிலை வளர முடியும் என்பதை வள்ளலார் உணர்ந்து கொண்டார். அதனால் அன்னாரது ஆன்மீக நெறியிலே சமய வழிபாடும் அருட்பெரும் ஜோதி வழிபாடும் சமுதாய சேவையும் இணைந்தே வளர்க்கப்பட்டன. வாழ்க்கை முறைக்கும் இறையன்புக்கும் தொடர் பில்லாத ஒரு வெளியுலக வெற்று வாழ்வியல் மக்களிடையே காணப்பட்டதையும் தெரிந்து கொண்டார். ஆகவே சமய வழிபாட்டிலே சமயத்தின் பெயராலும் சமுதாய மதிப்பிற்காகவும் சடங்குகள் ஆற்றப்படுவதனை கண்டிக்கும் பாங்கிலே தமது பக்தி நெறியினை அமைத்துக் கொண்டார். இவ்வாறு வள்ளலாரை புரட்சி மிக்க பக்திமானாக, சிந்தனையாளராக உருவா வதற்கு அவரது சிறுபராயத்தில் ஏற்பட்ட முருக பக்தியும் - பேரன்பு நெறியுமே அடிப்படைக் காரணியாக அமைந்தன.

**இராமலிங்க வள்ளலாரது பிள்ளைப் பராயம்**

வள்ளலார் பெருமானின் சிறுபராய வாழ்வு மிகவும் அற்புதமானது. குழந்தைப்பருவமான மூன்று வயது முதலே முருகனிடம் அதீத பக்தி பூண்டொழுகினார் என்பதை ஊரன்அடிகள், ம.பொ.சிவஞானம், க.வெள்ளைவாரணனார், திரு.வி.கல்யாணசுந்தர முதலியார், பா.இராஜப்பா, அ.மாணிக்கம், ச.பகீரதன் எனப் பல்வேறுபட்ட அறிஞர்களும் ஆய்வாளர்களும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். அன்னார்களது நூலாக்கங்களிலிருந்து அருட்பிரகாச வள்ளலாரதும் திருவருட்பா முதலாம் திருமுறையும் சிறப்பாக இங்கு வள்ளலாரின் முருக வழிபாட்டினையும் முருக பக்தியையும் எமக்கு அறியத்தந்தன என்றால் மிகையில்லை.

வள்ளலார் எப்பள்ளியிலும் படித்ததும் இல்லை. எந்த ஆசிரியரிடத்தும் கற்றதும் இல்லை. வள்ளலாரின் கல்வி கேள்வி ஞானம் அனைத்தும் கந்தனே குருவாக இருந்து பயிற்று வித்தான் என்பதனை அவரால் முதலில் பாடப் பெற்ற தெய்வமணிமாலையும், கந்தர் சரணப் பத்தும் தெட்டத்தெளிவாகப் புலப்படுத்தவல் லன.[14] முன்னைய பிறவிகளில் சரியை கிரியை யோகங்களை முடித்து ஞானமடைவதற்கேற்ற பிறவி கிடைத்ததால் வீதியில் விளையாடித் திரியும் பருவத்திலேயே ஓதாதுணரப்பெற்று அருட்பாடல்கள் பாடும் வல்லமையைப் பெற்றார்.

ஞானசம்பந்தரும் வள்ளலாரும் ஓதாதுணர்ந்தவர்கள். ஆதலால் ஒன்பதாவது வயதிலேயே வள்ளலாரும் பக்திப் பாடல்களை பாடத் தொடங்கினார். வள்ளலாரால் பாடப்பட்ட பின்னரே கந்தகோட்டம் பெரு விளக்கத்துடன் பேரும் புகழும் பெற்றது. 'கந்தசாமி என வணங்கப்பட்ட கந்தனை 'கந்தக் கோட்டப் பெருமான்' என வழக்கிற்குக் கொண்டு வந்த பெருமை

வள்ளலாரையே சாரும். ஒன்பதாவது வயதிலே கண்ணாடியில் முருகன் தரிசனம் பெற்று 49ம் வயதில் கண்ணாடியில் அருட் பெரும் ஜோதி யாக ஆண்டவரைக் காட்டினார் என ஊரன் அடிகள் வள்ளலாரின் பக்தி உபாசனை தனிப் பெரும் கருணையாக உருமாற்றம் பெற்ற சிறப்பினை உணர்த்தியுள்ளார்.[15] முருகப் பெரு மானை வழிபடுகடவுளாகவும், திருஞானசம்பந் தரை வழிபடு குருவாகவும், திருவாசகத்தை வழிபடு நூலாகவும் கொண்ட வள்ளலார், இளமையிலே தனக்கென ஓர் உபாசனமூர்த்தி, ஓர் உபாசன குரு, ஓர் உபாசன நூல் என ஓர் அமைப்பினையும் ஏற்படுத்திக் கொண்டார். சன் மார்க்க நிலை விரும்பும் அடியவர்கள் இவ்வாறு அருட்பெரும் ஜோதியை வழிபடு கடவுளாகவும், வள்ளலாரை வழிபடு குருவாகவும், திருவருட் பாவை வழிபடும் நூலாகவும் கொண்டு ஓர் அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டு சாதனை செய்யப் பழகலாம்.[16] என்ற ஊரன் அடிகளின் யோசனை இத்தகைய சன்மார்க்க அன்பர்களு க்கு மிகச்சிறந்த சாதனமாக அமையும்.

வள்ளலாரது பாலர் கல்வியானது சகாக் கல்வி. அதனைப் பயிற்றுவித்த மகாஜோதி சிவனார் நெற்றிக்கண்ணொளியில் இருந்து தோன்றிய சித்த மகாசுவாமியான கந்தக் கோட்டப் பெருமானாவார். தேனினும் இனிய தமிழைத் தானாகவே கந்தனிடம் பயின்று செந்தமிழ்ப் பாடல்கள் பாடும் தெய்வப்புலமை யும் பெற்றார். தாம் முதன்முதலில் பேரன்பு பூண்ட சென்னை கந்தக்கோட்டப் பெருமானிடத் தும் திருத்தணிகைத்தலத்தில் ஆறுமுக சரவண பவனார் மீதும் உருக்கமும் பக்தியும் நிறைந்த ஏராளமான பாடல்களைப் பாடினார். முருக வேளை முழுமுதற்கடவுளாகக் கொண்டு நெஞ் சுருகப் பாடிய பாடல்கள் அனைவரையும் பக்தி நெறிப்படுத்தி அவனருள் பெற வைக்கும் தன்மையுடையவையாகும்.

**முருக வழிபாட்டிலே வள்ளலாரின் அணுகு முறை**

திருவருட்பா எனில் அழகு, மேன்மை, செல்வம், தெய்வத்தன்மை எனப் பலவாறு பொருள்படும். இறைவனின் அருள் பெற்று அவனது அருளால் அருளை விளக்கும் பா எனவும் அ. மாணிக்கம் விளக்குவர். தொழவூர் வேலாயுதா முதலியாரே வள்ளலார் பாடல் களை ஆறு திருமுறைகளாக வகுத்தவர்.1867ல் நான்கு திருமுறைகளே வெளிவந்தன. இறைவன் தமது உள்ளத்தில் குடிஇருந்து தம்மைப் பாட வைத்தால் 'அருட்பா' என தமது பாடற் தொகுதிக் குப் பெயரிட அடிகளார் சம்மதித்தார். 'ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு. அம்பலப்பாட்டே அருட்பாட்டு' என தாம் மனிதர்களைப் பாட விரும்பாத காரணத்தையும் கூறி இறைவாக்கு 'அருட்பா' எனவும் தெரிவித்தமை[17] வள்ளலாரின் திருவருள் பக்தி வெளிப்பாட்டின் மகிமையினை வெளிப்படுத்தும். அடிகளார் வாக்குப்படி முதல் ஐந்து திருமுறைகளும் எல்லோரும் பாடலாம். ஆறாம் திருமுறை சுத்த சன்மார்க்கத்தினருக் குரியது. ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வு பூண்ட ஜீவ காருண்ணியத்தை வழிபாடாகக் கொள்ளும் சமரச நன்நிலை பெற்ற பக்குவ முடையார்க்கே ஆறாந் திருமுறை உகந்தது என்ற வள்ளலாரின் சிந்தனை எழுச்சியினால் முதல் ஐந்தும் முதலாம் புத்தகமாகவும், 6வது திருமுறை 2ம் புத்தகமாகவும் வெளியிடப் பட்டது என அறிய முடிகிறது.

வள்ளலார் தனது ஒன்பதாம் வயதில் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார் என்னை ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட அருட்கடல் (பா. 2697) என்பதும் 'ஆறொடு மூன்றாண்டாவதிலே முன் என்னையாண்டாய்' (பா. 3597) என்பதுவும் அவர் முருகப் பெரு மானின் திருவருளுக்குப் பாத்திரமானார் என்ப தற்கான அகச்சான்றுகளாகும். கந்தகோட்ட வழிபாடு, கண்ணாடியில் தரிசனம், கன்னிச்

சொற்பொழிவு முதலிய யாவும் இக்காலத்தில் தான் வள்ளலார் வாழ்விலே நிகழ்ந்தன. சிறிய வயதிலிருந்தே கந்தனிடத்து அதிக அன்புடைய ராகி அனலிடைப்பட்ட மெழுகு போல உருக வைக்கும் பாடல்களைப் பாடினார். அப்பாடல்கள் நாயன்மாரது தேவார திருவாசகப் பாடல்கட்கு ஒப்பானவையாக சைவமக்களாலும் சிவனடி யார்களாலும் கொள்ளத்தக்கவை. திருவடிப் புகழ்ச்சி, விண்ணப்ப கலிவெண்பா, நெஞ்சறி வுறுத்தல், திருவருள்முறையீடு என்பவற்றில் காணப்படும் பாடல்கள் தெவிட்டாத பக்திச் சுவைக்குச் சான்றுகளாக உள்ளன. இரண்டாம் திருமுறைப்பாடல்கள் சுந்தரர், அப்பர், மாணிக்க வாசகர் போன்ற நாயன்மார் பாடல்கட்கு ஒப்பா னவை என[19] அறிஞர்களாலும் போற்றப்படுவன.[19]

நான்காம் திருமுறை சிதம்பரம் தில்லைக் கூத்தன்மீது கொண்ட பேரன்பினால் பாடப் பட்டவை. அப்பாடல்கள் உயர்வான பக்தியையும் இறையன்பையும் பெருக்குவனவாக அமைந் துள்ளன. ஐந்தாம் திருமுறை சைவ சமயகுரவர் மீது ஆறாத அன்பு பூண்டு பாடிய பாடல்களாகும். இவை சைவசித்தாந்த நூலான சிவஞான போதம் கூறும் அயரா அன்பில் அரன் கழல் செலுத்தும் பாங்கிலே அடியவர் பக்தியை மேம் படச் செய்கின்றன. மூன்றாம் திருமுறை யாவும் அகத்துறைப் பாடல்களாகும். அவை சொற் சுவை, பொருட்சுவை, கவிநயம், எளிமை, இனிமை வாய்ந்த நாயக நாயகி பாவத்தில் அமைந்த பாடல்களாகும். பேராசிரியர் அ. மாணிக்கம் என்பார் முருகனது பக்திப் பாடல்கள், அவர் பாடிய கால முடிவின்படி ஊரன் அடிகள் பதிப் பினை ஒட்டி அவை முதலாம் திருமுறையாக வைத்து தனது உரை நூலை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.[20]

முருகப் பெருமானே திருஞானசம்பந்தராக அவதரித்தார் என்றே அடிகளார் நம்புகின்றார். சம்பந்தர் பற்றிய வள்ளலார் பாடல்களில் அதற் கான பல குறிப்புக்கள் வந்துள்ளன. சம்பந்தப் பெருமான் திருநல்லூர் பெருமணத்திற்கு திருக் கோயிலை அடைந்து அங்கு வந்த அனைவரை யும் பெரும் சோதியிடத்து அனுப்பி விட்டுத் தானும் மனைவியுடன் எழில்வளர் சோதியில் சேர்ந்தமையினை 'விழிப்பாலன் நல்லூர்ப் பெருமணத்லதக் கட்டுரைக்க சோதி தரு நல் லூர்ப் பெருமணம் வாழ் நன்நிலையே' (கண்ணி -6, 1962) என விண்ணப்ப கலி வெண்பாவில் குறித்துள்ளார். இங்கு "விழிப்புலன்" என்பது சிவனது நெற்றிக்கண்ணில் தோன்றிய முருகப் பெருமான் எனவும் அவரே ஞானசம்பந்தராக அவதரித்தார் என்பது வள்ளலார் தரும் அகச் சான்றாகும். 'ஆருகத சமயக் காட்டை அழித்த வெங்கனலே போற்றி (பா.52) என்ற தொடரி லும் நெற்றிக்கண்ணில் தோன்றிய ஜோதி என்றே சம்பந்தரை விழித்துள்ளார். 'திருநெறிய தமிழ் மறையாம் திருக்கடைக் காப்பதனால் பெருநெறியினை உள்ளத்திருத்தி காட்டி நானறிந்தேன் (பா.2802) என்ற பாடல் திருவருள் விலாசத் தலைப்பில் இரண்டாவது பாடலாகும். சம்மந்தரால் பாடப்பட்ட திருநெறி, குருநெறி, பெருநெறி சுத்த சன்மார்க்கநெறி என்பதனை "திருநெறி ஒன்றே அது தான் சுத்த சன்மார்க்க சிவநெறி சேர்ந்திடுமின்" (பா.5587) என திருவருட் பாவில் சிறப்பித்தார். இவ்வாறு சம்பந்தராக அவதரித்த முருகப் பெருமானின் பக்திப் பெரு நெறியே வள்ளலாரின் சுத்த சமரச சுத்த சன்மார்க்க நெறி என்பது உணரப்படுகிறது.

திருவருட்பா உரையாசிரியர்களில் ஒருவ ரான அ.மாணிக்கம் என்பார் ஊரன் அடிகளின் சிந்தனைப்படி சென்னை கந்தகோட்டம் மீது பாடிய தெய்வமணிமாலை, பிரார்த்தனை மாலை, சரணப்பத்து முதல் தனித் திருத்தொடை வரை 52 பதிகங்கள் கொண்ட சுமார் 570 பாடல்கள் வள்ளலாரால் முருகப் பெருமான்மீது பாடப்பட்டவையாக முதலாம் திருமுறையில்

வகுத்துள்ளார். ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற என்ற பாடலை அறியாதவர் இல்லை எனலாம். கூழுக்கு அழுவேனோ கோத் தணிகைக் கோவே ஊழுக்கு அழுவேனோ என் செய்கேன்.... என் செய்கேன்... (தனித்திருத் தொடை 16) என்ற பாடலினைப் பாடும்போது அனைவருக்குமே வள்ளலாரின் ஏக்கமும் இறை வனை நினைந்துருகும் பண்பும் உருவாகாமல் போகாது. வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் வாடுவதும்' (பா.3471) ஏழைக்கு இரங்கும் அன்பு நிலையைப் புலப்படுத்தும். 'கலையுரைத்த கற்பனை' (திருச்சுதவம் திறத்தல் 3768), நால்வருண ஆச்சிரமம், பிள்ளை விளையாட்டு, (அருள் விளக்கம் 85), சாதி சமய விதி வகுத்த சாத்திரக்குப்பை (அனுபவமாலை 92) என்னும் பாடல்களின் வாயிலாக தாழ்ந்தோருக்காக – வறியோருக்காக கடவுளிடம் வேண்டிப்பிரார்த் திக்கும் பாங்கு அனைத்திலும் அவரது சன்மார்க் கக் கொள்கைகளைக் காணலாம். அனுபவ மாலையில் உள்ள வள்ளலாரது பாடல்களைப் படிக்கும் போது அங்குதான் பேரொளியில் கலக் கும் பொறி துலங்குவதை உணரலாம்.

கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத் திலே காரியப்படுதல் உத்தமமாயிருக்க சிலர் விக்கிரக, பூததாரு முதலியவற்றால் கடவுளை வெளிப்படுத்திக் கொள்வது மந்த ஞானமாகும். எனவே சாதாரண மக்கள் விடயத்தில் உருவ வழிபாடு மந்த ஞானம் என்பதனை வள்ளலார் தமது ஆரம்ப வழிபாட்டு நிலையில் அங்கீகரித் துள்ளார்.[21] தியானம் செய்வதற்கு ஏதோ ஓர் உருவம் வேண்டும். நிகளமாகத் தியானிக்கக் கூடாது. பின் உருவம் கரைந்து அருவமாகும். துவைதம் இருந்தால் அத்வைதமுமாகும். எவ்வாறெனில் பார்க்கின்ற தானும் கெடுதல் – துவைதம். அத்வைதம் பார்க்கப்படுகின்ற பொரு ளும் கெடுதல். அதீதம் – சத்யம் என்று உணர்த் தும் பாங்கு சிறப்பானது. கந்தகோட்டம் – சரணப் பத்து, இறைவனின் திருவடியே சரணம் என்னும் திருவடி வழிபாட்டினை வெளிப்படுத்துகின்றது. "அருளாரமுதே சரணம், பொருளா எனையாள் புனிதா சரணம் – கருணாலனே சரணம் – கந்தா சரணம் சரணம் சரணம் (பா.ஐ) என்பதனைப் படிக்கும் தோறும் ஆறுதலடையாத நெஞ்ச மில்லை. "என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட பன்னிரு தடம் தோள் வள்ளல் பாத பங்கயங்கள் போற்றி" என்ற கந்தபுராணப் பாடலடிகளை வள்ளலார் நினைவூட்டுவது முரு கப் பக்தியினை மேன்மேலும் ஊற்றெடுக்கச் செய்வதாக அமைந்துள்ளது.

திருத்தணிகைப் பதிகம் பிரார்த்தனை மாலை யில் இடம் பெறும் முப்பது பாடல்களும் படிப் போர் மனதை முருகனிடம் தானாகவே ஆற்றுப் படுத்துவதாக விளங்குகின்றது." அடையாத வஞ்சகர் பால் சென்றிரந்தே இங்கு அலைந்த லைந்தே கடையான நாய்க்குன் கருணையுண்டோ தணிகைக்குள் நின்றே உடையாத நெஞ்சத்தவர் க்கு உண்மையைக் காண்பிக்கும் உத்தமனே", என்ற பாடல் கரவாகிய கல்வி உளர் கடைபால் சென்று இரவாவகை மெய்ப்பொருள் ஈகுவையே" என்னும் அருணகிரிநாதர் பாடலின் பக்திப்பரவச நிலையை ஒத்ததாக வள்ளலாரும் தணிகை வேலனிடம் மெய்ஞானத்தை இருந்து வேண்டும் தாழ்மையுணர்வின் வீச்சாக அமைகிறது. எண்ணப்பத்து, குறையிருந்தபத்து என்ற பாடற் பகுதிகள் யாவற்றிலும் அடிகளார் தமது மனதில் எழுகின்ற அன்புணர்வினால் தோன்றும் எல்லா விதமான எண்ணங்களையும் முருகனிடம் சொல்லி முறையிடும் பாங்கில் பாடியுள்ளார். பிறவி நோய் மிகப் பெரிய நோய் என்பதனை "புன்புலைய வஞ்சகர்பால் சென்று வீணே புகழ்ந்து..... வன்புலைய வயிறோம்பி பிறவி நோய்க்கும் மருந்தாய நின் திருவடி மறந்தேன்" என சீவசாட்சிமாலை என்னும் பாடற் பகுதியில் முறையிட்டு இறைஞ்சுவது அவரது பேரன்பினை வெளிப்படுத்தும் "வந்தாள் வாய் ஐயாவோ வஞ்சகர் பால் வருந்துகின்றேன் என்று அலறு

மாறு கேட்டும் என் தாய் நீ இரங்காமல் இருக் கின்றாய்...... நற்சீர்தந்தாளும் திருத்தணிகை மணியே" (பா.22) என்ற பாடலடிகள் நெஞ் சுருகும் பிரார்த்தனையாக ஒலிக்கிறது.

இரத விண்ணப்பம், கருணைமாலை, பொறுக்காப்பத்து, வேட்கை விண்ணப்பம் போன்ற பாடற்பகுதிகள் யாவும் திருத்தணிகை வேலனைப் புகழ்ந்தும் தம்மை இகழ்ந்தும் தனது சிறுமையினைப் பிரார்த்தனை மூலம் பக்திப் பாமாலைகளாக வெளிப்படுத்தும் முறைமை அனைவருக்கும் எளிமையான முறையில் வெளிப்படுவதாகவுள்ளது. "ஆறெழுத்துண்மை" என்ற பகுதியல் "குமாராயநம" என்ற மந்திரத் தினை " அன்பின் வழியது உயிர்நிலை" என்ற நிலையில் வைத்து "தோன்றா ஞானச் சின் மயமே ஆன்றோர் புகழும் தணிகை மலையரசே உன்தன் ஆறெழுத்தை ஊன்றா மனதில் உச்சரித் திங்கு திருவெண்ணீறு இட்டால் இடுக்கண் ஒன்றும் அடையாதே" (பா.12) என்ற பாடலில் சைவநெறியின் சிவ சின்னங்களின் மகிமையை உணர்த்தவும் தவறவில்லை. முருகவேளை பக்தி யுடன் அணுக விரும்புவோர்க்கு 'பணித்திறம் வேட்டல்' என்னும் பகுதியில் விடுதலை அடைய, என்ன திருப்பணி செய்ய வேண்டும் எனப் பட்டியல் இட்டுக்காட்டுவது சாலச்சிறந்த பகுதி யாகும். சம்பந்தரின் திருநீற்றுப் பதிகத்தை ஒத்த வாறு வள்ளலாரின் புண்ணிய நீற்றுப் பதிக மான் மியமானது விபூதி அணிவதால் ஏற்படும் பெருமையினைப் புகழ்கிறது. "கவசங்கள் எனச் சூழ்ந்துறு கண்ணேந்து விழும் சிவசண்முக எனவே அருள் திருநீறு அணிந்திடில்" என்ற அடிகளாரது பாடலானது "கங்காளன் பூசும் கவசத்திருநீறு" என்ற திருமூலர் பாடலை ஒத்த வாறு அமைந்துள்ளமை சித்தர்கள் ஜோதி வழிபாட்டை நிலை பெறச் செய்வதற்கு முன் னோடியாக பக்குவம் குறைந்தவர்க்கு சரியா, கிரியா நெறியில் நிலை பெற்று பக்குவமடை வதற்கு உருவ வழிபாட்டின் தேவையினை அறிவுறுத்துவதாகவுள்ளது.

அடியார்க்கு தொண்டு செய்தல், அத்தகைய மனப்பாங்கு விருத்தியடைதல் பற்றியும் அன்பு மிகுதியால் அலைந்து மனமேங்குதல், முருகனி டம் தீராத காதல் கொண்டு தோழியரைத் தூது விடுதல் போன்ற பேரன்பு நிலை, திருத்தணிகை வேலனைத் தரிசனம் பெறுவதில் காணும் ஆனந்த வேட்கை என்பவற்றைச் சொல்லிச் சொல்லி மகிழும் பகுதியாக "தரிசன வேட்கை", பகுதியில் மெய்யுருகுமாறு பாடியுள்ளார். சண் முகர் கும்மி" என்பதில் முருகன் "சிவ சண்முக நாதன்" என்னும் பொருளில் உணர்த்து கின்றார். 'தத்துவத்துள்ளே அடங்காண்டி–பரதத்துவமன்றி துடங்காண்டி – சத்துவஞான வடிவாண்டி– சிவசண்முகநாதனை பாடுங்கடி" (பா.9)என்ற பாடலானது தத்துவங்களைக் கடந்த சத்வகுண மேம்பாட்டிலே தொழிற்படும் ஞான வடிவமு டைய முருகப்பெருமானை சிவமூர்த்தியாக வள் ளலார் தரிசிக்கும் பாங்கு புலப்படும். சிறுபராயத் திலே பக்தி மார்க்கத்தில் நிலை பெற்று அன்பு நிலையினை வெளிப்படுத்திய வள்ளலாரின் தனித்துவமானது முதலாம் திருமுறையில் இடம் பெறும் 52 பாடற் பகுதிகளில் நிறைவடைகிறது.

தமது பாலப்பருவத்திலே தம்மையாட் கொண்ட முருகப் பெருமானிடத்து யாவும் பயின்று பக்தி பண்ணிப்பண்ணி தில்லைக் கூத்தனிடம் சென்று தரிசனம் கண்டார். அங்கு அடிகளார் அன்புநெறி நின்றொழுகினார். அன்றித் தத்துவ நிலைப்படவில்லை. அடுத்து திருவொற்றியூரையும், திருத்தில்லையையும் தரிசித்த பின்னர் தில்லைக்கூத்தனை சண்முக சிவமாகக் கண்டுணர்ந்து, வயதும் அனுபவ முதிர்ச்சியும் அனுபூதி நிலையும் அடைந்ததும் ஞான முதிர்ச்சி அடைந்தமையினை அடிகளா ரின் ஏனைய திருமுறைப் பாடல்கள் புலப்படுத்து கின்றன.

தமது பன்னிரெண்டு வயது முதல் 35ம் வயதில் சென்னையை விட்டு நீங்கும் வரை 23வருடங்கள் திருவொற்றியூர்ப்பெருமானை வழிபட்ட வண்ணம் இருந்தார். இடையிடையே திருமுல்லைவாயில், திருத்தணிகை போன்ற தலங்கட்கும் சென்று பாடிப்பரவினர்.[22] இவ் வாறாக தாம் பெற்ற அனுபவ முதிர்ச்சியினால் ஞான விழிப்புணர்வு அடையப் பெற்ற பின் சமுதாய நலம் தவிர்ந்த சாத்திரங்கள், மூட நம்பிக்கைகள், சடங்குமுறை. வேள்விகள், சாதிப்பிரிவுகள், எல்லாம் ஒழித்து ஏழ்மை, பசிப்பிணி என்பவற்றால் வாடும் உலக மக்க ளைக் காப்பாற்ற வேண்டும் என்று பாடிப் பரவிப் பணிவதே அடிகளாரின் தலையாய பணியானது.

**வள்ளலார் அணுகு முறையில் சுப்பிரமணிய தத்துவம்**

தற்கால இளைய சந்ததியினரின் அறிவியல் வளர்ச்சி நோக்கிற்கு அமைவாக வள்ளலாரின் முருகவழிபாட்டுத் தத்துவ அணுகுமுறை பேசப் பட்டுள்ளது. கணபதி, சுப்பிரமணிய சுவாமிகள் என்பன யாவும் தத்துவ நியாயங்களே! தவிர வேறில்லை. புராணக்கதைகளின் இருதய மெல்லாம் தத்துவ சம்சாரமே. நமது புருவ மத்தியில் உள்ள யோதிமணியே "சண்முகம்" என்போர் பெரியோர். ஆறு ஆதாரங்களும் உடலில் ஆறுமுகனின் ஆறு பிரகாசங்கள். விசுத்தியாகிய இதயஸ்தானத்தின் இடப்புறத்தில் ஆறு தலை வடிவம் கொண்டு நாடியுள்ளதாக Dr.K.சுப்பிரமணியம் தனது வள்ளலார் பற்றிய நூலில் குறிப்பிட்டுள்ளார். இன்றைய இளை ஞர்கள் மருத்துவ ரீதியாக இதனை ஆராய்ந்து அறிவது அவசியமாகும். தத்துவங்களின் சாந்த நிறைவான, ஆறுதலான, அமைதி நிலையாகிய சுத்த ஆன்மீக நெஞ்சமே சுப்பிரமணிய மெய் ஞானத்தின் மோன நிலை என இது உணர்த்துவ தாகவும் கொள்ளலாம். "ஆறுமுகம்" என்பது ஒன்றும் இரண்டுமல்லாத ஒப்பற்ற பரப்பிரம்ம சொரூபம். வாசனை அறிவு என்பதுடன் ஆத்ம அறிவு பக்குவத்தைப் பொறுத்து ஒன்றென்று நிச்சயிக்கும் பரிபூரண நிமித்த அறிவுருவமே ஒரு முகமாகும். சப்த அறிவு, ஒளி அறிவு, சுவை அறிவு, பரிச அறிவு, வாசனை மூலமாகப் பெறப் படும் ஆறு தத்துவங்களின் மூலகாரணப் பிரகாச விளக்கமே ஆறுமுகம்[23] என்ற வள்ளலாரின் மெய்ஞான விளக்கத்தை அன்னாரது உரைநடை வசன நூல்கள் வாயிலாக சான்றோர் விளங்கி யிருப்பது, அறிவுலகை மட்டும் சார்ந்திருக்கும் ஆய்வாளர்களுக்குரியதாகக் கொள்ளலாம். அருளுலகிலே ஆத்ம ஞானத்தில் – அன்பினிலே திழைத்திருப்போர்க்கு அறிவுலகையும் கடந்து சென்று வள்ளலார் காட்டும் அருட்பெரும் ஜோதி வழிபாடு உலகத்தவர் அனைவரையும் ஆட் கொள்ளும் சாதனமாகும்.

தியானத்தின் போது உருவம் கரைந்து அருவ மாகும் போது துவைதம் மறைந்து அத்வைதம் ஆகின்றது. திருவருட்பாராயண திரட்டிலே இந்த நிலையினைப் பின்வருமாறு பாடுகின்றார்: "படமுடியாது இனித்துயரம் படமுடியாதே! பட்ட தெல்லாம் போதும் இந்தப் பயம் தீர்ந்து இப்பொழுதென் உடலுயிர் ஆதிய தெல்லாம் நீ எடுத்துக் கொண்டு உன் உடல் உயிராதிய வெல்லாம் உவந்தெனக்கு அளிப்பாய்" (பா.146) என்ற பாடல் அத்வைத பாவனை வழிபாட்டிற்கு தக்கதொரு சான்றாகின்றது. இறைவழிபாட்டின் போதும் தியான வழிபாட்டின் மூலமாகவும் மக்கள் உலகமக்களின் துயரங்களை நீக்கும் சக்தியைப் பெற வேண்டும்' என்ற வள்ளலார் வேணவா பிற்காலத்தில் அருட்பெரும் ஜோதி வழிபாடாக மலரத் தொடங்கிய நிலையினை அவதானிக்க முடியும்.

**அருட்பெரும் ஜோதி வழிபாடே வள்ளலாரின் முடிவான அனுபவ ஞானம்**

வள்ளலாரின் திருமுறைப் பாடல்களை ஆழமாக நோக்கியும் நுணுக்கமாக வாக்கினா லும் இன்னும் தெளிவாக உணரலாம்.

வள்ளலாரின் அருட்பெரும் ஜோதி வழிபாட்டிலே மணியடித்தல், கற்பூர தீபம் ஏற்றல், அர்ச்சனைகளும் கிடையாது. தூப, தீப, நைவேத்தியமும் காணப்படுவதில்லை. மெல் லௌனத்துதி செய்து மனம் மொழி மெய்யுருகப் பாடுதல் ஒன்றே இலக்கினை அடைவிப்பதாக இருக்கின்றது. அதுவே வள்ளலாரின் அறிவொளி வழிபாடு – இயற்கை வழிபாடு – மெய்ஞான தீபம் – ஞானக்கலை – பரிபூரண ஆனந்தம், உயிரிரக்கம், அருள்நிலை இறையின்பம், இதுவே வள்ளலாரின் உலகியல் வழிபாட்டு நெறியின் முக்கிய இலட்சியமாக விளங்கியது. சமய வழிபாட்டின் பெயரால் சடங்குகள், திருமணங்கள், ஆடம்பரங்கள், இவை சமூக மதிப்பிற்காக ஆற்றப்படுவதனைக் கண்டித்தார். பசியால், நோயால், முதுமையால் மக்கள் வருந்தும் போது அம்மக்களின் துயரம் போக்காது போலிச் சடங்குகளில் பணத்தைச் செலவிட்டு கொண்டாடும் வாழ்க்கை முறையை வள்ளலார் தமது திருமுறைகளில் பல்வேறிடங்களில் கண்டித்தார்.

**ஜீவகாருண்யமே பெருவழிபாட்டு நெறியாதல்**

ஜீவகாருண்யம் இல்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவற்றைச் செய்வோர்க்கு இறையருள் கிட்டாது என வள்ளலார் உபதேசித்தார். (பா.3696, 4174, 3678, 2126). வெற்றுச்சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் கடவுளை ஒரு போதும் காட்டாது, மக்கட்குப் பிடித்தவற்றை விட அவர்கள் ஏற்றுக் கொள்ளத்தயங்கும் ஆனால் அறிவிற்கு ஒத்தவாறு உண்மைகளைச் சொல்வதற்கும் ஓர் தற்துணிவு வேண்டும். "பகுத்தறிவினால் எல்லாவற்றையும் தீர்த்துவிட முடியாது". சில விடயங்கள் பகுத்தறிவுக்கு எட்டாத விடயங்கள் எனத் தெரிந்து பக்தி செலுத்த வேண்டும். பக்திக்கு வேண்டிய நம்பிக்கையை பகுத்தறிவு புறக்கணிப்பதில்லை. ஐம்புலன்கட்கும் அப்பாற்பட்ட, ஆறாவது புலன் ஒன்று உள்ளது அதுவே நம்பிக்கை. விஞ்ஞானிக்கும், மெஞ்ஞானிக்கும் உள்ள வேற்றுமை விஞ்ஞானி அறிவினால் எதையும் பார்க்கிறான். மெய்ஞானி அன்பினால், அருளினால் எதையும் பார்க்கிறான். அருட்பெரும் ஜோதி – தனிப்பெரும் கருணை' என்னும் மகா மந்திரமே வள்ளலாரின் மூல மந்திரமாகும்.

இவ்வழிபாட்டினை நிறுவி உலக மக்களை தமது ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்விலே ஈர்ப்பதற்காக நான்கு நிறுவனங்களை அமைத்தார். சித்திவானாகம், சமரச சன்மார்க்கம், சத்தியதருமச்சாலை, சத்திய ஞானசபை என அவை உருவாக்கப்பட்டன. இந்த நிறுவன அமைப்புக்கள் ஊடாக வள்ளலார் நான்கு வாழ்க்கை நெறிகளை இளைஞர் உலகமும் ஏற்கும் வண்ணம் நிலைபெறச் செய்தார். அவை யாவன: ஏமசித்தி, சாகாக்கல்வி, தத்துவ நிக்கிரகம், கடவுள் நிலையுணர்ந்து அதன் வயமாதல் என்பனவாகும். இவ் உயர் ஜோதி வழிபாட்டில் ஒருவர் நிலைபெறுவதற்கு இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் என நான்கு வகை ஒழுக்க நிலைகளை எடுத்துரைத்தார். வள்ளலாரின் அருட்பெரும் ஜோதி எனும் பக்தி வழிபாட்டில் முன்னேற்றம் அடைவதற்கு இந்த நான்கு நிறுவன அமைப்புக்களும் நெறிகளும், ஒழுக்கங்களும் ஒன்றுபடுவதே 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்னும் வள்ளலார் அமைத்த பேரியக்கமாக மலர்ந்தது.[24]

சத்திய ஞானசபை ஒரு சமரச ஞானக் கோயிலாகும். "நான் கூறுவதை யாரும் கேட்பதும் இல்லை, நடப்பதும் இல்லை. ஐரோப்பா போன்ற பிற நாடுகளில் இருந்து இங்கு வருவோர் இந்த அகில உலக சகோதரத்துவத்தை பிரசங்கிப்பார் என்ற வள்ளலாரின் தீர்க்க தரிசனத்திற்கு தற்காலத்தில் அரங்கேறி வருவது தக்கதொரு சான்றாகும். வைரத்தை விஞ்ஞானி கரி என்

பான். மெய்ஞானி ஒளி என்பான். இரண்டுமே சரியானவை தான். இதனை ஏற்கும் பக்குவம் அவரவர் அறிவிலும் நம்பிக்கையிலும்தான் தங்கியுள்ளது.

**நிறைவுரையாக**

மரபு வழியில் தொடர்ந்து செய்து வரும் வழிபாட்டு முறைகளை காலத்திற்கு ஏற்றவாறு மாற்றம் செய்வதற்கு பயப்படுகிறோம். பிற சமயக் கோட்பாடுகளை மதித்து அவற்றின் உண்மை நிலைகளை உணர்வதும், அனைவரிடம் அன்பு காட்டுவதும் சுத்த சன்மார்க்கத்திற்கு மாறான உணவு முறைகளைத் தவிர்த்தல் அவற்றைப் பேணுவதில் அலட்சியம், ஜீவ காருண்யத்திற்கு மாறான உணவுமுறைகளை ஏற்பதில் தயக்கம் என்பன போன்ற பல தவறுகளை விளக்குவதற்கும் தயங்குகின்றோம் என்பதே வள்ளலாரின் பெரும் ஆதங்கமாகும். "ஐந்தொழில் என்பது அகத் தொழில், அருள் சக்தி, ஞான சக்தி, யோகசக்தி, செயற்சக்தி, பொருட் சக்தியாகியவையாகும். இந்த ஐந் தொழில் ஆற்றுவதில் இன்புறும் வண்ணம் நடக்கும் போது அருட்பெரும் ஜோதி ஆண்டவர் திருநடம் புரிகின்றது. அவற்றை நிறைவேற்றுகின்றார்"[26] எனத்திருவடி புகழ்ச்சிக்கு உரை எழுதிய ச.பகீரதனின் விளக்கம் அருமையானது. சமத்துவ நிலை என்பது உயர்வு நிலை அன்பு நெறியாகும். வள்ளி திருமணம் என்பது இறைவனின் சாதி சமய இன வேறுபாடுகளைக் கடந்த பேரின்பக் காதல் அன்பு நெறியாகும். முருக வழிபாட்டுத் தத்துவத்தில் வள்ளலார் இந்த உயர்வு நிலை அன்பு நெறியினைத் தேடியலைந்து துருவித்துருவிப் பாடி மகிழ்ந்தார்.

மனிதனை மனிதன் சுரண்டுதல், ஒரு நாடு இன்னோர் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்துதல், ஒரு சாதியை இன்னோர் சாதி அடிமைப்படுத்தல், ஒரு மதத்தினர் மற்ற மதத்தினரைப் பகைத்தல், உயிர்கள் யாவும் பரம்பொருளின் அம்சம் என்பதனை உணராதிருத்தல், இவை யாவும் ஜீவகாருண்யம் அற்ற தன்மையின் விளைவுகள் என்பதனால் உயிர்கள் அனைத்தையும் நேசிக்கும் பக்தி கலாசாரத்தை" ஜீவ காருண்ய ஒழுக்கநெறி, என்ற பகுதியில் வள்ளலார் ஆணித்தரமாக எடுத்தியம்பினார்".[27] உலகிலேயே சமாதானமும் அன்பு நெறியும் நிலைபெறுவதற்கு சமரச சன்மார்க்கமே உரிய உயரிய மார்க்கமாகும். ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வே எல்லாப் பேதங்களையும் கடக்க வல்லது. இன்று சர்வதேசம் உலகமயமாக்கல் எனப் பேசுவதெல்லாம் அருட்பெரும் ஜோதி வள்ளலார் அன்று காண விரும்பிய சமரச சன்மார்க்க ஞான நெறியாகவே விளங்கியது. பிரிவினையை – பிளவுகளை – வெறுப்பினை – வன்முறையை விலக்கவும் உலகமெங்கும் ஒருமைப்பாடு காணவிரும்பும் இளைய தலைமுறையினருக்கு வள்ளலார் காட்டிய சர்வதேச – உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டினைக் கடைப் பிடிக்கும்படி செய்வது தான் சிறப்பான மார்க்கமாகும்.

இன்றை சமூக, சமய, பொருளாதார, உலகமயமாக்கல் போன்ற மாறுதல்கள் ஏற்பட வேண்டும் என விரும்பிய வள்ளலார் அதனை ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையில் அனைவரும் இணைய வேண்டுமென அறிமுகம் செய்தார். அழைப்பும் விடுத்தார். இத்தகைய புரட்சிகரமான மறுமலர்ச்சி சிந்தனைகளை கொண்ட வள்ளலாரின் ஒரு பக்கத்தையே இன்றைய உலகம் புரிந்துள்ளது. ஒரே உலக சமுதாயம் காணவேண்டுமென்ற ஆவலில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதனை மூல வாய்ப்பாடாகக் கொண்டு சன்மார்க்க போதனை செய்தார். அவரது பக்திப் பாடல்களையே வெளியுலகம் புரிந்துள்ளது. "தேசிய ஒருமைப்பாடு" என்பதனை ஆணிவேராகக் கொண்டு அதன் மேல் மனித சமுதாய ஒருமைப் பாடு என்ற கட்டடத்தை உருவாக்கி அதற்கு

அடுத்தபடியாக உயிர்க் குலத்தின் "ஆன்ம நேய ஒருமைப்பாடு என்ற கொடியை வள்ளலார் பறக்கவிட்டார். ம.பொ.சிவஞானம் அவர்களின் மதிப்பார்ந்த வார்த்தைகளில் வள்ளலாரின் முருக பக்தியை அடித்தளமாக வைத்துக் காட்டப்பட்ட சமரச சன்மார்க்க உலகத்தை வென் றெடுக்க முடியும் என்று நம்புவோம்.

வள்ளலார் பெருமான் முருகபக்தி என்னும் முழுமுதல் மூலம் ஏற்றி வைத்த அருட்பெரும் ஜோதி என்னும் சிவஜோதி இன்னும் அணைந்து விடவில்லை. அது அணையா விளக்கு. தூண்டு வோர் தூண்டத் தொடங்கினால் அருட்பெரும் ஜோதி ஒளியிலே அகில உலகமும் அஞ்ஞான இருள்நீங்கி அன்பொளியாகிய மெய்ஞ்ஞான ஒளி நிச்சயமாக உலகெலாம் பரவி நிலை பெறும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புக்கள்**

1. சித்தரியல் – ஆய்வுமாலை, தமிழ்க்கல்லூரியும் தருமபுரம் சித்த மருத்துவ மையமும் இணைந்து நடத்தும் சித்தரியல் ஆய்வு மாநாடு, போரூர் ஆதீனம், சென்னை, 2005. பக். 18–19.
2. நம்நாட்டுச் சித்தர்கள், இரா.மாணிக்க வாசகம், அன்னை அபிராமி அருள், சென்னை, 1982 பக், 93–99. (பதினெண் சித்தர் பற்றிய எண் பகுப்பாராய்ச்சிகள் இங்கு இடம் பெற்றுள்ளன).
3. சித்தர் மரபும் சித்தாந்த நோக்கும், கட்டுரை; கலைவாணி இராமநாதன்.
South Asia : Social - Cultural Congruence, Editor : Dr.A.V.Manivasagam, University of Jaffna, Sri Lanka, Vol-II, 1999. பக். 63-64.
4. மேற்படி, ப.74–75
5. தமிழ்ச் சித்தர் மரபு, ரி.என்.கணபதி, சென்னை, 2008, ப.27.
6. கலைவாணி இராமநாதன், மு.கு. ப.84.
7. இந்திய தத்துவக் களஞ்சியம், எஸ்.என்.கந்தசாமி, தொகுதி – III, சென்னை, 2003, பக். 280–290.
8. Indian Philosophy, Dr.S.Radha krishanan, Vol, PP. 722-723.
9. இந்திய தத்துவக் களஞ்சியம், தொகுதி – III, ப.293.
10. மேற்படி, ப.295.
11. சித்தரியல் ஆய்வுமாலை, பக். 23–24.
12. இந்திய தத்துவக் களஞ்சியம், தொகுதி – III, பக்.286.
13. தத்துவ தரிசனங்கள், தொகுப்பாசிரியர்கள், இ.எஸ்.டி, கவிஞர், எஸ்.ஞானன், சென்னை, 1999, கட்டுரை, இராமலிங்க வள்ளலார், Dr.கே.சுப்பிரமணியம், ப.390.
14. புரட்சித்துறவி வள்ளலார் – ஓர் அறிமுகம், ஊரன் அடிகள், சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 2009, பக். 14–16.
15. மேற்படி, பக். 17–19.
16. திருவருட்பாச் சிந்தனை, க.வெள்ளை வாரணனார், சிதம்பரம், 1986, பக். 19, 141–143.
17. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ம.பொ.சிவஞானம், சென்னை, 1998, ப.224.
18. மேற்படி, பக். 225–226.
19. வள்ளலார் பெருமையும் சுத்த சன்மார்க்க விளக்கமும், வெ.இராஜப்பா, சென்னை, 1982, பக். 3–5.
20. திருவருட்பா – மூலமும் தெளிவுரையும், 1ம் தொகுதி, உரையாசிரியர், அ.மாணிக்கம், (1ம், 2ம் திருமுறைகளில் 1ம் பாடல் முதல் 1192 பாடல்கள் அடங்கியவை) பக். 229–230.

21. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.173.
22. புரட்சித் துறவி வள்ளலார் – ஓர் அறிமுகம், பக். 19–20.
23. வள்ளலார் மணிமொழிகள், அன்புப் பழம் நீ, சென்னை, 2002. பக். 15–17.
24. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.155.
25. மேற்படி ப.442.
26. திருவடிப் புகழ்ச்சி – அரிய பிரார்த்தனை நூல் – 3ம் திருமுறை இராமலிங்க வள்ளலார், விளக்கவுரையாசிரியன், சத்ய கங்கை, பகீரதன், சென்னை, 1998, ப.112.
27. ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு பற்றிய சான்றிற்கு ஒரு பாடல், 'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல எண்ணியுள்ளே ஒத்துரிமையுடையவராய் உவக்கின்றார் – யாவர் அவர் உன்மதான் எம்பெருமான் நடம்புரியும் இடமென நான் தெரிந்தேன் (வள்ளலார் திருவருட்பா).

**ஏனைய சான்றாதாரங்கள்**

1. திருவருட்பா கற்பதிப்புப் பாடல்கள், ஊரன் அடிகள், சென்னை, 1994.
2. திருவருட்பா பாராயணத்திரட்டு, சமரச சன்மார்க்க சங்கம், சென்னை.
3. மக்கள் பக்கமும் வள்ளலாரும், கோவி.செயராமன், சென்னை.
4. சித்தர்கள் சித்தாந்தமும் சூபிசமும், செ.கணேசலிங்கன், சென்னை, 2003.
5. சித்தர்கள் கண்ட தத்துவங்கள், பி.சி.கணேசன், சென்னை, 1992.
6. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி 8, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1991, பக். 902–911.
7. The Poets of Powers, Kamil Zwellable.
8. The Simile of Murugan of Tamil Literature, Leiaden of South India, Leialen, Holland Brill, 1973.
9. The poetry and Philosophy of the Tamil Siddhars, Thirunelvely, 1957.

## தருவாய் இன்பம் தாயவனே

நல்லைக்கந்தப் பெருமானே
நல்லோர் வாழ்த்தும் பெரு நதியே
வல்லமை தந்து எமையெல்லாம்
நல்லவர் ஆக்கி அருள்வாயே

வேலைக் கொண்டு வினை தீர்க்க
வேண்டும் போது வருவாயே
பாலைப் பளிக்கும் முகத்தோனே
பாவம்தீர்த்து அருள்வாயே

முல்லைவனத்து நாயகனே
இல்லை வனைப் போல் இனியவனே
தொல்லை தீர்த்து எமையெல்லாம்
தோழர்கள் ஆக்கி அருள்வாயே

முருகும் தமிழும் ஒன்றே
மோகம் கொண்டு மயில் மீது
உருவாய் அருள்வாய் உயிர்வோனே
தருவாய் இன்பம் தாயவனே!

**செல்வி.க.இந்துசா**
**சாவகச்சேரி.**

# சங்க இலக்கியங்களில் முருக வழிபாடு ஓர் ஆய்வு

**பொ. பூலோகநாதன்**
**வருகை விரிவுரையாளர்,**
**மெய்யியல்துறை,**
**யாழ் பல்கலைக்கழகம்.**

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற தெய்வமாக முருகனை தாயுமானவர் குறிப்பிடு கின்றார். அது போன்றே முருகன், சங்க இலக்கி யங்களில் எங்கும் பரந்து போற்றப்படும் ஒரு தெய்வமாகக் குறிப்பிடப்படுகிறார். சங்க இலக்கி யங்களிலே மிகப் பழமையானது பரிபாடல். இதில் காணப்படும் இருபத்தியிரண்டு பாடல் களில் எட்டுப் பாடல்கள் முருகனைப் பற்றிப் பாடப்பட்டவை. மேலும் கலித்தொகை, அக நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந் தொகை, பதிற்றுப் பத்து, பத்துப்பாட்டு ஆகிய வற்றிலும் முருகன் பெருமை தொடர்பான பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

சங்க இலக்கியங்களிலே குறிப்பிடப்படும் ஏனைய தெய்வங்களான திருமால், சிவன், கொற்றவை, அணங்கு போன்ற தெய்வங்க ளோடு ஒப்பிடுமிடத்து முருகன் அழகு தெய்வ மாகவும், இளமையின் பிறப்பிடமாகவும், வீரம் பொருந்தியதோர் தெய்வமாகவும் வழிபடப்பட்ட மையை நாம் காணலாம். நாம் ஏதாவது ஒன்றை உண்மை எனச் சாதிக்க வேண்டுமாயின் கடவுள் மேல் ஆணையிடுகின்றோம். அது போலவே சங்க இலக்கியங்களிலும் மக்கள் தங்களுக்குள் ஏற்படுகின்ற சிறு குடும்பச் சண்டைகளுக்கு முருகன் மேல் ஆணையிடுவார்கள். அதாவது வேலின் மேல், மயிலின் மேல், குன்றின் மேல் என்றவாறாகக் குறிப்பிடலாம். இது அக்கால முருக வழிபாட்டின் உயர்ந்த தன்மையினை எடுத்துக் காட்டுகிறது. சங்க காலத்தில் இடம் பெறும் முக்கிய சடங்குகளில் ஒன்று "வேலன் வெறியாட்டுச் சடங்கு". பருவப் பெண்களிற்கு அணங்கினால் ஏற்படும் நோயைக் குணப்படுத்து வதற்காக வேலன் வெறியாட்டு சடங்கு இடம் பெற்றது. இது பற்றிய செய்திகளை அகநானூற் றுச் செய்யுட்களில் காணலாம்.

**'பொய்யா மரபின் ஊர்முது வேலன்**
**கழங்கு மெய்ப்படுத்து, கன்னம் தூக்கி,**
**முருகு என மொழியும் ஆயின்**
**அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்'.**

மேற்கூறிய செய்யுளில் வேலன் வெறியாட்டு தொடர்பான கருத்துக்கள் வெளிப்படுத்தப்படு கின்றது. இங்கு வெறியாட்டுச் சடங்கை நிகழ்த்து பவன் வேலன். அவன் ஒரு வைத்தியனும், மந்திர வாதியுமாகக் கருதப்பட்டான். வேலனின் வெறி யாட்டுச் சடங்கினால், அணங்கினால் பீடிக்கப்பட்ட நோய் நீங்கும் எனும் தெய்வ நம்பிக்கை சங்க கால மக்களிடம் காணப்பட்டது. இதனை ஐங்குறு நூறு பின்வருமாறு குறிப்பிடுகிறது :

**'நல் நுதல் பசந்த படர் மலி அரு நோய்**
**அணங்கு என உணரக் கூறி, வேலன்**
**இன் இயம் கறங்கப் பாடி**
**பல் மலர் சிதறிப் பரவுறு பலி'**

மேலும் உருவேறிய வேலனின் வெறியா டலை அகநானூறு பின்வருமாறு வர்ணிக்கிறது :

**"அதிர் குரல் முது காய கறி முறி முனை இ,**
**உயர் சிமை நெடுங் கோட்டு உகள,**
**உக்க கமழ் இதழ் அலரி தா அய்**
**வேலன் வெறி .**

இவ்வாறு சங்கப்பாடல்களில் வேலனின் வெறியாட்டுத் தொடர்பான கருத்துக்கள் கூறப் பட்டிருப்பதனூடக அவன் ஒரு நோய் தீர்க்கும் மருத்துவன் எனும் நம்பிக்கை சங்க மக்களிடம் காணப்பட்டிருந்ததை நாம் உணரலாம்.

மேலும் முருகன் கருவளத்துடன் தொடர்பு பட்டதோர் தெய்வமாகவும், சங்க இலக்கியங்க ளில் வணங்கப்பட்டார். ஒரு புறம் குடும்பப் பெண்கள் நற்பிள்ளைப் பேறுக்காகவும், மறு புறம் பருவப் பெண்கள் கார்த்திகேயனை ஒத்த ஆடவரை கணவனாகப் பெறுவதற்குமாக முரு கனை வழிபட்டனர். இதனை மதுரைக்காஞ்சி பின்வருமாறு விபரிக்கிறது :

**'மடையோடு நல்மா மயிலின் மென்மெல் இயலி**
**கடுஞ்சூல் மகளிர் பேணி, கைதொழுது**
**பெருந்தோட் சாலினி மடுப்ப ஒரு சார்**
**அருங்கடி வேலன் முருகொடு வளை இ....'**

எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் முருகனின் பிறப்பு, சூரனைக் கொல்லுதல், கிரௌஞ்ச மலை யைப் பிளத்தல் ஆகிய ஸ்கந்தன் தொடர்பான ஐதீகக் கதைகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது.

முருகன் – செவ்வேல் என்று பாணர்கள் பாடல்களிலும், தொல்காப்பியப் பொருளதிகாரத் திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பிற்கால சங்க இலக்கியமாக திருமுருகாற்றுப்படையி லும் முருகன் அருள்பெற்ற ஒருவன் மற்றுமொரு முருகனருள் பெற விரும்புவோனை ஆற்றுப் படுத்தும் தன்மையினையும் சங்ககால ஆற்றுப் படை இலக்கியங்களில் கண்டு கொள்ளலாம்.

மேலும் திருமுருகாற்றுப்படையிலே நக்கீரர், கார்த்திகை மாதரிடம் பிறந்தவனே! மலைமகள் மகனே! கொற்றவை சிறுவனே! குறிஞ்சிக் கிழவனே, என்றெல்லாம் போற்றுகின்றார்.

மேலும் சங்க இலக்கியங்களில் குறவர் பூசை யோடும் முருகன் நெருங்கிய தொடர்புடையவ ராக விளக்கப்படுகிறார். குறவர் பூசையிடும் நக ரத்தில் கோழிக் கொடிகளை நட்டு அலங்கரிப் பார்கள் என்றும், பின்னர் அலங்காரப் பந்தலிட்டு வேலன், கடம்பம் பூமாலை அணிந்து முருகன் புகழைத் தோத்திரிப்பான். இதனால் முருகன் வெளிப்பட்டு அருள் வழங்குவார் எனக் குறிஞ்சிக்கலி கூறுகிறது. மேலும் மருதக்கலியில் "ஆலமர் செல்வன் அணிசால் மகன் வழாக் கால் கோள் என்று ஊக்கி" எனும் பாடலில் முருகனின் விழாக் கொண்டாடும் சிறப்புப் பற்றி கூறப்படு கிறது.

இவ்வாறாக தமிழ் இலக்கியங்களில் – மிகப் பழமையான சங்க இலக்கியங்களில் மிகவும் போற்றப்படும் ஒரு தெய்வமாக முருகனைக் காணலாம். மலையும் மலைசார்ந்த இடமு மாகிய குறிஞ்சியில் முருகன் முழுமுதற் தெய்வ மாகப் போற்றப்பட்டான். இதனை தொல்காப்பி யம் "சேயோன் மேய மைவரை உலகம்" எனக் குறிப்பிடுகிறது. இவ்வாறு வீரமும், காதலும் நிறைந்த சங்ககால மக்களின் வாழ்வில் முதிர்ந்த அறிவு நிலைக் கடவுட்கொள்கையாக முருக வழிபாடு நிரம்பி இருந்தமையை நாம் காண லாம். எனவே தொகுத்து நோக்குமிடத்து முருக வழிபாடு என்பது எத்தனை தூரம் பழமை யானதும் தொன்மையானதும் என்பதனை நாம் உணரலாம்.

**'மணி மயில் உயரிய மாறா வென்றி**
**பிணிமுக ஊர்தி ஒன் செய்யோனும் என**
**ஞாலம் காக்கும் கால முன்பின்**
**தோலா நம் இசை .......... உள்ளும்'.**

(புறநானூறு – 56).

# முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

**சைவசித்தாந்த பண்டிதர்**
**திருமதி தயாளினி செந்தில்நாதன்**
B.A. (Hons), M.A, M.Ed.

சண்மதங்களிலே ஒன்றாக விளங்கும் கௌமார நெறியானது முருகனை முழு முதலாகக் கொண்ட சமய நெறியாகும். முருகன் என்பது முருகை உடையவன் என்பதைக் குறிப்பிடுகிறது. முருகு என்பது அழகு, இளமை, நறுமணம், தெய்வத்தன்மை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. முருகு என்பது அன் என்னும் ஆண்பால் விகுதி பெற்று முருகன் என்றாயிற்று. இளமைக்கும், அழகுக்கும் போர் ஆற்றலுக்கும் உரிய தெய்வமாக முருகன் வழிபடப்படுகிறான்.

சிந்துவெளியில் பெறப்பட்ட ஓர் இலட்சினையிலே தீப்பொறிகள் வெளிவருவது போன்று பொறிக்கப்பட்டிருந்தமை முருக வழிபாட்டின் தொன்மையைக் காட்டி நிற்கிறது. வேதங்களிலே பிரம்மன்ய, சுப்ரண்ய என்னும் சொற்கள் முருகனைக் குறிப்பதாகவே அமைகின்றது. பிராமணங்களிலும் முருகனைப் பற்றிய செய்திகள் உண்டு.

இதிகாச, புராணங்களை எடுத்துக் கொண்டால் இராமாயணத்தின் பால காண்டத்திலும், மகாபாரதத்திலும் முருகனைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. பால காண்டத்திலே இராம – இலக்குவர்கள் விசுவாமித்திரருடன் யாகம் காக்கச் சென்ற போது கங்கை நதிக்கரை வழியாகச் சென்றார்கள். அப்போது விசுவாமித்திரர் கங்கை நதியின் பெருமையினை முருகனுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார்.

மேலும் மகாபாரதத்தின் ஆரண்ய பருவத்திலும், வனபர்த்தா பருவத்திலும் முருகனின் பிறப்பு விரித்துரைக்கப்படுகிறது. சால்ய பருவத்தில் கிரௌஞ்ச மலையைப் பிளந்து தாரகனை வென்ற செய்தி கூறப்படுகிறது. கீதையில் கண்ணன் அர்ச்சுனனிடம் "சேனாதிபதிகளே! நானே! தேவசேனாதிபதியாகிய முருகனாக இருக்கிறேன்" என்று கூறுகிறார். இதிகாசங்களில் முருகன் குகன், குமரன், சண்முகன், மயில் வாகனன், வேலாயுதன் போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றான். ஸ்கந்தபுராணம் முருகப் பெருமான் அசுரர்களை அழிக்க உற்பத்தியான கதையினைக் கூறுகிறது.

குப்தர் காலத்திலும் முருக வழிபாடு சிறப்படைந்து காணப்பட்டுள்ளது. குமார குப்தன், ஸ்கந்த குப்தன் போன்றோர் முருகனது பெயரைக் கொண்டுள்ளனர். குப்த மன்னர்களது நாணயங்களில் மயிலினது உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

சங்க காலத்திலே முருகன் குறிஞ்சி நிலத் தெய்வமாகக் வழிபடப்பட்டுள்ளான். இதனை "சேயோன் மேய மைவரை உலகமும்" என்னும் பாடலடி உணர்த்தி நிற்கிறது. அத்துடன் வெறியாடல் என்னும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. இது முருக வழிபாடு சங்க காலத்தில் இருந்துள்ளது என்பதையே காட்டி நிற்கிறது.

மற்றும் குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பகுதி முருகன் வணக்கமாகவும், பரிபாடலில் முருகனின் பிறப்புப் பற்றியும், முருகனுக்கு விழா இருந்தமையைக் கலித்தொகையும், பத்துப்பாட்டில் கடவுள் வணக்கமாக முருகனின் குரவைக் கூத்து விழாவும், மதுரைக் காஞ்சியில் வேலவன் வெறியாடல் பற்றியும், மலைபடு கடாம் போரினை வெல்ல முருகன் எனவும் குறிப்பிடுகிறது.

அடுத்து முருக வழிபாடு பற்றிய செய்திகளைக் கூறும் நூலாக திருமுருகாற்றுப்படை விளங்கு கின்றது. அதில் முருகனின் ஆறு முகங்களும், பன்னிரு கைகளும் பற்றிய செய்திகள் தெளி வாக இடம்பெற்றுள்ளன. "பன்னிரு கைகளும் பாற்பட இயற்றி" என்னும் அடி இதனை விளக்கி நிற்கிறது. அத்துடன் ஆறுபடை வீடுகள் பற்றியும், முருகன் "ஆல்கெழு கடவுளின் புதல்வன்" எனவும் கூறுகிறது.

பரிபாடலிலே "நான் உன்னிடம் இரப்பவை பொன்னும், பொருளுமல்ல; அன்பும், அருளும் அறனுமே" எனப் பரிபாடல் முருகனிடம் வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டியவற்றைப் பாடி யுள்ளது.

மேலும் சிலப்பதிகாரத்திலே குன்றக் குரவை எனும் ஒரு தனிக் காதை அமைந்துள்ளது. அத்துடன்,

**'ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்'**
**'கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்'**
எனும் பாடலடிகள் முருகனுக்குக் கோயில் இருந்தமையையும் எடுத்துக் காட்டுகின்றன.

பல்லவர் காலத்திலே திருஞானசம்பந்தரது பாடல்கள் முருகனை குமரவேள், கந்தன் என்னும் பெயர்களால் அழைக்கின்றது.

"முருகனது பெருமைபகர் முதுகுன்றம் அடைவோமே" என்றும்

"வள்ளி மணாளற்கு தாதை கண்டார்" என்று அப்பரும் பாடியுள்ளதில் இருந்து சைவத்துடன் இணைந்து முருகனை வழிபட்டதனை இத் தேவாரப் பாடலடிகள் ஆதாரப்படுத்துகின்றன.

சோழர் காலத்திலே முருகப் பெருமான் படிமங்களாகச் சிருஷ்டிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்துள்ளான். முருகனுக்குத் தனிக் கோயிலும், சிற்பமும் அமைக்கப்பட்ட காலமும் இதுவே யாகும். கண்ணனூர் என்னுமிடத்தில் முதல் ஆதித்த சோழன் எழுப்பிய முருகன் கோயில் சிறப்பு வாய்ந்தது.

கச்சியப்ப சிவாச்சாரியாரால் பாடப்பட்ட கந்தபுராணம் முருகனது தோற்றம், வளர்ச்சி பற்றி விளங்கி நிற்கும் ஒரு சிறந்த நூலாகும்.

அடுத்து வரகுண பாண்டியன் சிறந்த முருக பக்தனாகத் திகழ்ந்துள்ளார். இவ்வரசன் திருச் செந்தூரில் உள்ள முருகன் கோயிலுக்கு பல தானங்களைக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. மேலும் அருணகிரிநாதர், குமரகுருபரர் போன் றோர் முருக பக்தர்களாக வாழ்ந்த காலம் விஜய நகர காலமாகும். இக் காலப்பகுதியிலே கௌமாரம் வளர்ச்சி மிகுந்திருந்தது.

தற்காலத்தில் பாரதியார். பாரதிதாசன் போன்றோர் முருகனைப் பாட்டில் வடித்துள்ள னர். திரைப்படங்களுள்ளே முருகனுக்கென்றே வெளிவந்தவையாகப் பல படங்கள் காணப்படு கின்றன.

முருகப் பெருமானது தோற்றம், வளர்ச்சி, புகழ், பெருமை, அருள், வீரம் என்பவற்றைக் கூறும் நூல்களாக தொல்காப்பியம், பரிபாடல், மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம், சிலப்பதி

காரம், குமார சம்பவம், சுப்பிரமணிய புஜங்கம், சுப்பிரமணிய பராக்கிரமம், திருச்செந்தூர்ப் புராணம், திருத்தணிகைப் புராணம், கந்த புராணம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, வேல்விருத்தம், கந்தர் கலி வெண்பா, கந்தசஷ்டி கவசம் போன்ற பல நூல்கள் விளங்குகின்றன.

இந்தியாவிலே முருக ஆலயங்களுள்ளே ஆறுபடை வீடுகள் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. அதே போல் ஈழத்திலும் முருகனுக்கென அமைந்த பல ஆலயங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நல்லூர், மாவிட்டபுரம், மண்டூர், செல்வச்சந்நிதி, கதிர்காமம், சித்தாண்டி, கொழும்பு கதிரேசன் கோயில் போன்றன குறிப்பிடத்தக்கனவாகும்.

எனவே முருக வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி என்பவற்றைத் தொன்மைக் காலம் தொட்டே அறியக் கூடியதாக இருக்கின்றது. இன்றும் முருக வழிபாடு சிறப்புப் பெற்றுள்ளமையை எடுத்துக் காட்டும் வகையிலேயே முருக ஆலயங்களும், அவ்வாலயங்களில் இடம்பெறும் மகோற்சவங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் - 2013

## விஜய வருஷம் ஆவணி மாதம்

## மகோற்சவ விசேட தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 12.08.13 | திங்கள் | கொடியேற்றம் | பகல் 10.00 மணி | (01ம் திருவிழா) |
| 21.08.13 | புதன் | மஞ்சம் | மாலை 05.00 மணி | (10ம் திருவிழா) |
| 26.08.13 | திங்கள் | அருணகிரிநாதர் உற்சவம் | மாலை 06.00 மணி | (15ம் திருவிழா) |
| 27.08.13 | செவ்வாய் | கார்த்திகை | மாலை 05.00 மணி | (16ம் திருவிழா) |
| 30.08.13 | வெள்ளி | சூர்யோற்சவம் | காலை 07.00 மணி | (19ம் திருவிழா) |
| 31.08.13 | சனி | சந்தானகோபாலர் | காலை 07.00 மணி | (20ம் திருவிழா) |
| 31.08.13 | சனி | கைலாசவாகனம் | மாலை 05.00 மணி | (20ம் திருவிழா) |
| 01.09.13 | ஞாயிறு | கஜவல்லி மஹாவல்லி | காலை 07.00 மணி | (21ம் திருவிழா) |
| 01.09.13 | ஞாயிறு | வேல்விமானம் | மாலை 05.00 மணி | (21ம் திருவிழா) |
| 02.09.13 | திங்கள் | தெண்டாயுதபாணி | காலை 07.00 மணி | (22ம் திருவிழா) |
| 02.09.13 | செவ்வாய் | ஒருமுகத் திருவிழா | மாலை 05.00 மணி | (22ம் திருவிழா) |
| 03.09.13 | செவ்வாய் | சப்பறம் | மாலை 05.00 மணி | (23ம் திருவிழா) |
| 04.09.13 | புதன் | தேர் | காலை 07.00 மணி | (24ம் திருவிழா) |
| 05.09.13 | வியாழன் | தீர்த்தம் | காலை 07.00 மணி | (25ம் திருவிழா) |
| 06.09.13 | வெள்ளி | பூங்காவனம் | மாலை 05.00 மணி | (26ம் திருவிழா) |
| 07.09.13 | சனி | வைரவர் உற்சவம் | மாலை 05.00 மணி | (27ம் திருவிழா) |

# சுப்பிரமண்ய பரார்த்த பூஜா விதிமுறைகள் - ஒரு நோக்கு

**பிரம்மஸ்ரீ மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா**
ஆய்வாளர்,
காசி இந்துப் பல்கலைக்கழகம்,
வாரணாசி, வடஇந்தியா.

## அறிமுகம்

கலியுகக் கடவுள் ஸ்ரீ சுப்பிரமண்ய மூர்த்திக்குச் செய்யப்படும் பூஜைமுறைகளால்; ஸமஸ்தமான வியாதி நீக்கமும், ஸமஸ்த துக்கத்தை போக்குவதோடும், விருப்பமான சித்திகளைக் கொடுப்பதோடும் புண்ணியத்தையும், எதிலும் வெற்றியைக் கொடுக்கக் கூடியதுமான மகிமை நிறைந்த பூஜைமுறையாகும். இப்பூஜை முறைகள் இரண்டு விதங்களாகும். வீட்டில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிம்பங்களது பூஜையால் அப்பூஜை செய்பவர்களுக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் இஷ்ட சித்திகளைக் கொடுப்பதால் "ஆத்மார்த்தம்" என்றும், தேவர்கள், ரிஷிகள், மனுஷ்யர்கள் இவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிம்பங்களது பூஜையால் பிரதிஷ்டை செய்வித்தவர்கள், அவ்வூர் வாசிகள், பூஜை செய்கிறவர்கள் இவர்களுக்கு இஷ்ட சித்தியைக் கொடுப்பதால் "பரார்த்தம்" எனவும் இரு வகைப்படும்.

கௌமார ஸமயானுஷ்டானமுடைய தீக்ஷையுடன் கூடியவர்கள் ஆத்மார்த்த பூஜையும், ஆதி சைவர்களான பிராம்மணர்களால் ஆத்மார்த்தம், பரார்த்தம் எனும் இரண்டும் செய்யத்தக்கதாகும். சுப்பிரமண்ய பிரதிஷ்டை விடயத்தில், சுப்பிரமண்யர், தனக்கான பரிவாரங்களுடன் கூடியிருந்தால் "ஸ்வப்பிரதானம்" எனவும், பரிவார தெய்வங்கள் இல்லாதிருந்தால் "பராங்கம்" எனவும் காமிகாகமம் கூறுகின்றது. ஸ்வப்பிரதானமான இடத்தில் இருக்க வேண்டிய பிம்பங்களும் பரிவார பிம்பங்களும் தெய்வங்களாக முதலில் பிரதிஷ்டை (சுப்பிரண்யர்) செய்யப்படும் போது அனுக்கிரஹத்திற்கு த்ருவமும், பாப நீக்கத்திற்கு ஸ்நபநமும், பஜனத்திற்கு பலியும், உற்சவத்திற்கு கௌதுகமும், புறப்பாட்டுக்கு யாநமும் ஆக, ஐந்து பிம்பங்களும் இருப்பதோடு இவ்வைந்து பிம்பங்களும் ஒரு சக்தியுடன் ஸ்நபன, பலி, கௌதுக பிம்பங்களும், மூன்று சக்தியுடன் உற்ஸவ பிம்பமும் சக்தி இல்லாமல் அஸ்த்ர தேவரென்ற சிபிக பிம்பமும் இருக்கத் தக்கதாகும். ஸ்வப்ரதான ஆலயத்தில் மூலபிம்பமாக ஒருமுக சுப்பிரமண்ய பிரதிஷ்டை இஷ்ட சித்தி கிடைக்கவும், ஷண்முகப் பிரதிஷ்டை மோக்ஷம் கிடைக்கப்பெறவும் ஸ்தாபனம் செய்யப்படுகின்றன.

## சுப்பிரமண்யரை ஆவாஹனம் செய்தல்

ஒரு சுப்பிரமண்ய தேவாலயத்தில் ஒரு பிம்ப பிரதிஷ்டையில் ஒரு பிம்பத்தையும், அதே பிம்பத்தில் ஆறு அல்லது பன்னிரெண்டு பிம்பங்களையும் பிரதிஷ்டை செய்வது உசிதமாகும். பிம்பங்கள் இல்லாவிட்டால் தாம்பாள பாத்திரத்தில் சந்தணத்தால் எட்டுத்தள பத்மம் வரைந்து ஆசன, மூர்த்தி மூலமாக த்யானத்துடன் மூல மந்திரங்களால் பூஜித்து பாத்யாசமனீயார்க்கிய ஸ்நாநம் முதலியவைகளுடன் தூபதீப நைவேத்ய ஜப ஸமர்ப்பணத்துடன் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

**திரவ்ய சுத்தி செய்யும் முறை**

குங்குமப்பூ, விளாமிச்சை, சந்தணம், அறுகு, வெண்கடுகு இவைகளையிட்டு அங்கமந்திரங்களால் பூஜித்து மந்திரிக்க வேண்டும். ஆசமனீய பாத்திரத்தில் ஏலம், ஜாதிக்காய், பச்சைக் கற்பூரம், கராம்பு இவைகளையிட்டு பிரம்ம மந்திரங்களால் பூஜித்து மந்திரிக்க வேண்டும். அர்க்கிய பாத்திரத்தில் எள்ளு, பால், தர்ப்பை, வெண்கடுகு, அக்ஷதை, புஷ்பம், தீர்த்தம் இவைகளையிட்டு பஞ்ச பிரம்ம வித்யா தேஹ நேத்ர மூல மந்திரங்களால் பூஜித்து அவ்வாறே ரக்ஷாவகுண்டனம், ரிதீகரணம், அவகுண்டனம், அம்ருதீகரணம், ஸுரபி முத்திரைகாட்டி பூமியைப் பூஜித்து, சங்கம், வர்த்தனீ என்ற அபிஷேக கலசத்தில் நீரை எடுத்து சங்கத்தில் அர்க்கிய பூஜைப்ரகாரம் திரவியங்களை மந்திரித்து அபிஷேக கலசத்தில் சந்தண புஷ்பங்களையிட்டு, பிர்மாங்க மந்திரங்களால் மந்திரித்து மீண்டும் ரக்ஷாவகுண்டனம், அம்ருதிகரணம் செய்து சங்க தீர்த்தத்தாலும், அபிஷேக கலசத்தினாலும் மூலபிம்பத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டும்.

**நித்தியப்படியுள்ள பூஜை**

பராங்கமான சுப்பிரமண்ய பூஜையில் நித்தியப்படியுள்ள பூஜையில் ஸாமான்யார்க்கியத்துடன் அஷ்டபுஷ்பார்ச்சனையும், உபசாரங்களும் செய்ய வேண்டும். கிருத்திகை, சுக்லபக்ஷ ஷஷ்டி ஆகிய விஷேஷ தினங்களில் பிரார்த்தனா பூஜையில் விசேஷார்க்கியத்துடன் பஞ்சாசன, பஞ்சாவரண பூஜையுடன் ஸ்பநன கும்பபூஜையும் அக்கினி கார்யத்துடன் தூபதீப நைவேத்திய உபசார தீபாராதனை செய்ய வேண்டும். ஸ்பநனாபிஷேகத்தின் பின்பு சந்தணப் பொட்டோடு குங்குமப் பொட்டுமிட்டு மூலமந்திரங்களால் சிரஸில் புஷ்பம் சார்த்தி. மௌனம் அனுஷ்டித்து, அஞ்சலி முத்திரை காட்டி மூல மந்திரத்தை த்வாதசாந்தம், அங்கமந்திரங்களை பிர்மரத்திரம், பிரம்மந்திரங்களை லலாடம் வரை ப்லுதம், தீர்க்கம், ஹ்ரஸ்வம் இந்த மாத்திரக்கிரமத்தில் ஓங்காராதி நமோந்தமாக உச்சரிக்க வேண்டும்.

**பூஜைசெய்யும் முறை**

ஸ்நாநம், தேவபூஜை, ஹோமம், நிவேதனம், யாகம் இவைகளைச் செய்யும் போது மௌனமாகவிருக்க வேண்டும். ஒரு தச்சு முழு அளவு (பதினெட்டு அங்குலம்) மேல் உயரமுள்ள மூர்த்திக்கு நின்று கொண்டும், இதற்கு குறைவான அளவுள்ள மூர்த்திக்கு உட்கார்ந்தும் பூஜிக்க வேண்டும். உடன் பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம், ஸ்நபன பூஜை இவைகளைச் செய்து கொண்டு துவார பூஜை, கர்ப்பாவரண பூஜை இவைகளைச் செய்ய வேண்டும். சுப்பிரமண்ய நித்திய பூஜையில் துவார பாலகர்களைப் பூஜிக்கும் போது ஸ்ரீஸ்கந்தரின் ஆஞ்ஞைப்படி வாயிலைக் காக்கக் கடவீர் எனப் பிரார்த்திக்க வேண்டும்.

**அர்ச்சகர் அர்ச்சிக்கும் முறை**

சுப்பிரமண்யருக்கு பூஜைசெய்யும் போது அர்ச்சகர் கிழக்கு முகமான சன்னதிகளில் தென் கிழக்கிலிருந்தும் (வடக்கு நோக்கியும்) மேற்கு முகமான சன்னதிகளில் தென் மேற்கிலிருந்தும் (வடக்கு நோக்கியும்) தெற்கு வடக்கு முகமான சன்னதிகளில் மேற்கிலிருந்தும் (கிழக்கு நோக்கியும்) பூஜிக்க வேண்டும். சன்னதிக்குள் அர்ச்சகர் வலது காலை முன் வைத்து வலது பக்கமாக வாயிற் படியை மிதியாமல் அர்த்த மண்டபத்தில் பிரவேசிக்க வேண்டும். இடது காலை முன் வைத்து வாயிற் படியைத் தாண்டி இடது பக்கமாக வெளியேவர வேண்டும். நிர்மால்யங்களை நீக்கி, ஸ்கந்த காயத்திரி மந்திரத்தால் நிர்மால்ய மாலைகளை எடுத்து சுத்த பாத்திரத்தில் சுமிந்திர சண்டேஸ்வரருக்காக ஹிருதய மந்திரத்தை முச்சரித்து, புதுபுஸ்பம் சார்த்தி, வஸ்திரம் கொண்டு வடிகட்டிய வாசனை நிறைந்த நீரை அபிஷேகம் செய்து மூலமந்திரங்களால் உபசார வஸ்திரங்களைச் சார்த்தி சந்தண புஷ்பங்களால் அலங்கரித்து மூலமந்திரம் முச்சரித்துக் கொண்டு அர்க்கிய தூபதீப நைவேத்திய உபசாரங்களை

சிரத்தையுடன் செய்ய வேண்டும்.

பின்பு ஹருத்தாசன பூஜைசெய்து, முன்னரைப் போன்று விவரமான பஞ்சாசன பூஜையில் பிரதிஷ்டால விதியிலுள்ளபடி நியாசங்கள் செய்ய வேண்டும். முண்டபாங்கி நியாஸம் குமார தந்திரத்திலுள்ளபடி செய்ய வேண்டும். பின்பு முத்திரைகளூடாக ஆவாஹனாதிகள் செய்து விஷேஷமாக ஷண்முகீ முத்திரை காட்ட வேண்டும். இரு கைகளையும் பிரித்து ஊர்த்த முகமாக பிம்பத்தில் சிரஸ் முதல் பாதம் வரை மஹாமுத்திரை காட்ட வேண்டும். பின்பு இடது புறத்தில் தேவசேனாவையும், வலது புறத்தில் மஹாவல்லியையும் ஆவாஹித்து பூஜிக்க வேண்டும். ஆவாஹனம் முதல் நிவேதனம் முடிக்கும் காலம் வரை மிருகி முத்திரையில் பத்ரங்கள் கொண்டு பாத்யம் ஒருமுறையும், ஆசமனீயம் இருமுறையும், அர்க்கியம் மும்முறையும் முறையே பாதம், முகம், சிரஸ் இவைகளில் கொடுக்கப்பட வேண்டும். சுத்தான்னம் நிவேதனம் செய்து உபசாரங்களைக் கொடுத்து புஷ்பாஞ்சலி வரை செய்ய வேண்டும். ஒருபங்கு பாக்கு, இரண்டு அல்லது மூன்று பங்கு வெற்றிலை சேர்த்து தாம்பூலம் கொடுக்க வேண்டும். ஏலக்காய், கராம்பு, பச்சைக்கற்பூரம், ஜாதிதக்கொலம் இவைகளது பொடியை முகவாஸம் செய்ய வேண்டும். பரிசுத்தம், வெண்மை, மணமின்மை, சுகந்தம் இவ்வாறுள்ள விபூதி பெருவிரல் மோதிரவிரல் கொண்டு முக கமலங்களில் அர்ப்பணஞ் செய்யவும்.

**தீபாராதனை**

தீபாரதனையில் புஷ்ப (அடுக்கு) தீபம், புருஷாம் ருகதீபம், நரதீபம் (மனித வடிவு), யானை, புலி, அன்னப்பறவை, குதிரை, சிம்மம், சூலம், ஆலவட்டம், விருஷபம், வண்டு, கோழி, ஆமை, மேரு, மயில் ஆகிய தீபங்களுடன் சோடசோபசாரனையும் செய்ய வேண்டும். அஷ்டபுஷ்பங்களாக எருக்கு, சண்பகம், சுரபின்னை, நந்தியாவட்டை, வெண்பாதிரி, கத்தரி, அரளி, தும்பை இவைகளால் சுப்பிரமண்யரை அர்ச்சிக்க வேண்டும். அசனம், மூர்த்தி, மூலம் நேத்ரமில்லாத ஐந்துமாகும். ஆசனமூர்த்தி மூலபிரம்மம் பஞ்சகம் சேர்ந்து எட்டுமாகும். இதை அப்பையா தீக்ஷிதர் இயற்றிய சிவார்ச்சனா சந்திரிகையில் காணலாம். பூர்ணகும்பம், ஐந்து தட்டுத் தீபங்கள், அஷ்டபுஸ்பங்கள் சேராவிடில் கிடைத்த புஷ்பங்களால் எட்டு மந்திரங்களைக் கொண்டு பூஜிக்க வேண்டும். ஸ்கந்த தீபாராதனையில் தட்டுத் தீபங்கள் இரவில் மட்டும் காட்டுவது உசிதமாகும்.

**பூஜைமுடிவு**

பூஜா விதியில் இறுதிப் பகுதியாக ஆஸன மந்திரத்தை ஆஸனத்திலும், மூர்த்தி மந்திரத்தை பிம்ப மார்பிலும் ஹிருதயம் முதல் நேத்திரம் நீங்கிய ஐந்து மந்திரங்களை ஹிருதயம், சிரஸ், சிகை, கவசம், அஸ்த்திரம் இவைகளிலும் மூல மந்திரத்தால் சிரசிலும் பூஜிக்க வேண்டும். இவ்விதியானது எல்லா தேவர்களுக்கும் காலை. நடுப்பகல், சாயங்காலம், இரவு இவைகளில் செய்யத்தக்கதாகும்.

பின்பு உற்சவர், பரிவார பிம்பங்களுக்கும், மயில், யானை, அந்தந்த தேவர்களது முதலெழுத்தை ஓங்காரத்துடன் உச்சரித்து அந்தந்த தேவர்களது பெயரை நான்காம் வேற்றுமையுடன் நமஹ: என்பதைச் சேர்த்து அஷ்ட புஸ்பார்ச்சனை முறைப்படி செய்து பாத்யாசமனார்க்கிய தூபதீப நிவேத்யம் வரை செய்ய வேண்டும். உற்சவர் பூஜையை நித்தியப்படி அஷ்ட புஷ்பார்ச்சனைப் பிரகாரம் செய்யலாம். விசேட காலங்களில் விஷேஷார்க்கியத்துடன் செய்ய வேண்டும்.

**அர்ச்சகர் பாவனை**

அர்ச்சகர் சுப்பிரமண்யருக்கு பூஜைகள் செய்கின்ற போது கௌரவப்படியும் பாவனை முக்கியமாகின்றது. இவ்வாறு பூஜையை மந்திர,

தந்திர, கிரியைகளுடன் செய்கையில் அர்ச்சக பாவனை முக்கியமான இடத்தினை வகிக்கின் றது. சுப்பிரமண்யரை ஆவாஹனம் செய்யும் போது குருரூபத்தையுடையவராகவும், அபிஷேகம் செய்யும் போது தாயின் ரூபத்தையுடைய வராகவும். தூப தீபநைவேத்யம் செய்யும் போது மந்திர ரூபத்தையுடையவராகவும், ஸ்தோத்திரம், பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்யும் போது பக்த ரூபத்தையுடையவராகவும் இருக்க வேண்டும்.

**முடிவுரை**

மேற்கூறப்பட்ட விதிமுறைகளை அனுசரித்து சுப்பிரமண்யக் கடவுளுக்கு பார்த்த பூஜை செய் கின்ற போது சகல பாவங்களும் நீங்கி, கலியுக தர்மத்தில் கலியுகக் கடவுளான ஸ்கந்தர் மோக்ஷ இன்பத்தையும் மேலான ஆனந்த வாழ்வையும் தருவார் என்பதில் சந்தேகமில்லை.

**துணை நூல்கள்**


| | |
|---|---|
| காமிகாகமம், | பூர்வபாகம், உத்தரபாகம், மயிலை அழகப்பா முதலியார், சிவஞானபோத யந்திரசாலை, சென்னை, 1900, 1902. |
| காரணாகமம், | பூர்வபாகம், உத்தரபாகம், மயிலை அழகப்பா முதலியார், சிவஞானபோத யந்திரசாலை, சென்னை, 1901. |
| குமாரதந்திரம், | சிவஞானபோத யந்திரசாலை, சென்னை, 1904. |
| சிவார்ச்சனா சந்திரிகை, | காளீஸ்வர சிவாச்சாரியார், சைவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவக்கோட்டை, 1922. |
| சுப்பிரமண்ய பிரதிஷ்டாவிதி | குமாரசாமிக்குருக்கள், அச்சுவேலி, இலங்கை. 1959. |
| சுப்பிரமண்ய பரார்த்த பூஜாவிதி | சுவாமிநாத சிவாச்சாரியார், தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை, 1977. |


## குபேர வாசல் இராஜகோபுரம்

- நல்லூர்க் கந்தப் பெருமானின் குபேர வாசல் இராஜகோபுர அமைப்பிற்காக நவதானியம் விதைப்பு 10.08.2012 வெள்ளிக்கிழமை கார்த்திகைத் திருவிழா அன்று காலைப்பொழுதில்
- குபேர வாசல் கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது 20.11.2012 செவ்வாய்க்கிழமை கந்தசஷ்டி உற்சவ திருக்கல்யாணத்தின் போது காலை 6.00 மணி
- குபேரவாசல் இராஜகோபுரம் முதலாவது தளத்திற்கான கொங்கிறீற் 29.04.2013 இரண்டாவது தளம் 01.07.2013 மூன்றாவது தளம் 04.08.2013

– பதிப்பாசிரியர்

# முருகன் வள்ளி தேவசேனாதிபதி

**மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்**
**ஆதீன கர்த்தா - பிரதம குரு**
**ஸ்ரீகந்தசுவாமி கோவில்,**
**மாவிட்டபுரம்.**

**தாமரையும் புரையும் காமர் சேவடி**
**பவளத் தன்ன மேனித்திகழொளிக்**
**குன்றியேய்க்கும் உடுக்கை குன்றின்**
**நெஞ்சு பக எறிந்த அம் சுடர் நெடுவேல்**
**சேவலங் கொடியோன் காப்பு**
**ஏமவைகல் எய்தின்றால் உலகே.**

(குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து; பாரதம் பாடிய பெருந்தேவனார் இயற்றியது.)

அழியா அழகினை முருகு என்று அழைத்தனர் நம் முன்னோர்கள். இயற்கை மணமும் மாறா இளமையும் கடவுள் தன்மையும் இறைவனின் இயல்புகளாகும். இவ் இயல்புகள் அமைந்த ஒன்றைத் தமிழ் மக்கள் முருகன் என்று கண்டு வணங்கி வருகின்றார்கள். முருகையுடைய வனே முருகன். அழகின் உடல் இயற்கை. இயற்கை அன்னையின் அழகே அழியா அழகு. அதுவே முருகு என்னும் பேரழகு ஆகும். இவ் வழகு பழந்தமிழர் போற்றிய கைபுனைந்தியற் றாக் கவின் பெரு மெருவனப்பாம் முருகன்.

"அழகு இல்லையேல் வாழ்வு ஏது? ஒரு வனது வாழ்வு அவனது அழகைப் பொறுத்து நிற்கிறது. உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் உடல் நலமுற்று இன்பம் துய்த்து வாழ்தல் வேண் டும் என்னும் பேரருளால் முருகன் இயற்கை வாயிலாக அழகை உதவுகிறான். திங்களாக அமுதம் பொழிந்து உலகிற்கு இன்பம் ஊட்டுகி றான். மலையாக நின்றும், ஆறாக ஓடியும் காடாக விளங்கியும், கடலாக ஒலித்தும் உடலாக உடனிருந்தும், உயிர்களைப் பேணி வருகிறான் முருகன்".

இயற்கை வாயிலாக முருகன் புரிந்து வரும் பேருதவியை மக்கள் நேரே பெறுவாராயின் அவர்கள் என்றும் அழியா அழகுடையவராக விருப்பார்கள். என்றும் இளமையுடையவராக வாழ விரும்புவோர் முருகனை எப்போதும் நினைத்த வண்ணம் இருப்பார்கள். குமரனை மனமொழி மெய்களால் தொழுவோர் என்றும் குமரனாய் இருப்பது இயல்பே. பண்டைத் தமிழ் நாட்டவர் இயற்கையோடு முரண்படாத வாழ்வு நடத்தி இயற்கை அழகாம் முருகனை வழிபட்ட மையால் அவர்கள் இளமை இன்பம் நுகர்ந்து வந்தனர்.

பழந்தமிழர் தாம் தொழுத கடவுளை அழகுப் பொருளாகவே கொண்டனர். சிவனைச் சொக்கன் (அழகன்) எனப் போற்றினர். "அழகனே! ஆலவாயில் அப்பனே அருள் செய்வாயே" என்பது அப்பர் அமுதவாக்கு. அலவலமை தவிர்ந்த அழகன் என்பது பெரியாழ்வார் பைந்தமிழ்.

இயற்கையை உடலாகக் கொண்ட உயிரான முருகன் திகழ்கிறான். முருகு என்ற சொல்லில் மூன்று உகரங்கள் உள்ளன. அகர. உகர. மகரம் எனவரும் மூன்றில் அகரம் படைத்தல் (சிருஷ்டி), உகரம் காத்தல் (ஸ்திதி), மகரம் அழித்தல்

(சம்காரம் ) என்பவற்றைக் குறிக்கும். ஆகவே உகரம் உயிர்களைக் காக்கின்றது. உயிர்களுக்கு மூன்று சுகங்கள் வேண்டும். அவை முறையே இகம், பரம், வீடுபேறு என்பன. மூன்று நலன்க ளையும் மூன்று உகரங்கள் அளிக்கும் வெற்றியை முருக என்ற சொல்லில் காண்கின் றோம்.

சங்க நூலில் முருகனின் தொன்மையைக் காண்கின்றோம். தொல்காப்பியத்தில் முருக வழிபாடு குறிப்பிடப் பெறுகிறது. சேயோனின் செவ்விய வழிபாடு அன்று முதல் இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. ஒவ்வொரு காலத்திலும் முருகன் அடியார்கள் அவதரித்து முருக வழிபாட்டை முறைப்படுத்தி மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளனர். பல்வேறு நூல்களில் முருகனின் தொன்மையும் வழிபாடும் விளக்கப் பட்டுள்ளன. வட மொழியிலே "சுவாமி" என்ற சொல் முருகனுக்கே உரியது ஆகும்.

**தேவ ஸேனாதிபதி: சூர! ஸ்வாமீ கஜமுகா தூஜ! ஸேநானீ! அக்னிபூ! குஹ!**

என்று பேசுகிறது வடமொழி நிகண்டாகிய அமர கோசம். தேவ (தேவயானை நாயகன்) சேனைத் தலைவன், சூரன் சுவாமி, யானைமுகன் தம்பி, சேனாதிபதி, அக்கினி குமாரன், குகன் என்று பட்டியல் இட்டு முருகன் பெயரை அழகு படக் கூறுகின்றது. அகில உலகத்தையும் தன் உடமையாக (ஸ்வம்) கொண்டிருப்பவனே சுவாமி.

இவ்வுலகுக்கு எந்நாளும் அருள் புரிவதற் காக வெளிப்பட்ட ஒரு மின்னல் சக்தியே முருகன். "ஸ்கந்த" என்ற வடமொழிச் சொல்லு க்கு வெளிப்படுத்தல் என்ற பொருள். மேகத்தில் இருந்து மின்னல் வெளிப்படுவது போன்று சிவ ஜோதியில் இருந்து வெளிப்பட்ட ஆறு பொறிகள் ஆறுமுகசுவாமியாகி கந்தன் எனப் பெயர் கொண்டது. ஆகவே சிவசக்தி ஜோதியில் ஜனித்த பேரொளிப் பிழம்பாக முருகன் திகழ்கிறான். அவன் பரும பராக்கிரமசாலி. பேரருட் சக்தி வடிவினன். ஞான பலமும் முருகனுக்கே அதிகம் என்று காட்டவே சிவபெருமானும் முருக வேளிடம் உபதேசம் பெற்றுக் கொண்டார்.

தீப்பொறியாகத் தோன்றி வானிலிருந்து வாயுவால் சுமந்து வரப்பெற்று கங்கையில் விட பெற்று சரவணப் பொய்கையில் வளர்ந்த முருகன் தீ, வான், வாயு, நீர், பூமி என்னும் ஐம்பூதத் தொடர்புடையவனாகத் திகழ்கிறான். தந்தை – நெருப்பு, தாய் – நீர் (கங்கை) மகனோ ஜோதி வடிவினன்.

முருகன் ஆறுமுகன்; மனிதன் ஆறறிவுடைய வன். ஆறாவது அறிவே இறையுணர்வு என்னும் அன்பு நெறி விளக்கத்துக்கு நிலைக்களனாய் இருப்பது. இறையுணர்வுதான் மக்களையும் மாக்களையும் வேறுபடுத்திக் காட்டவல்லது. ஆறறிவுடைய மக்களால் வழிபடப்பெறும் ஆறு முகனின் தத்துவமோ பலவாறாகப் பெருகி விளங்குகிறது, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாத்சரியம் என்னும் ஆறு பகை வர்களையும் கொன்று ஞானம் அருள்பவன் ஆறுமுகன்.

தந்தை– ஸ்தானு (மரம்); தாய் அபர்ணா (கொடி); மகனோ விசாகன் (கீழ்க்கன்று) என்ற நயமும் முருகன் தத்துவத்தில் காணப்படுகிறது.

தெய்வத்தன்மை, இனிமை, இளமை, மணம், மகிழ்ச்சி, அழகு என்னும் ஆறு தன்மைகளை உடையவன் ஆறுமுகன் எனும் முருகன்.

**அந்திக்கு நிகர் மெய்யண்ணல்**
**அருள் புரிந்து அறிஞராயோர்**
**சிந்திக்கும் தனது தொல்லைத்**
**திருமுகம் ஆறும் கொண்டான்.**

காணாபத்தியம், கௌமாரம், சைவம்,

சாக்தம், வைஷ்ணவம், சௌரம் என்னும் ஆறு வகை சமயமாக விளங்குபவன், தான் ஒருவனே! எனக் காட்டுவதற்காக அவன் ஆறுமுகம் கொண்டிருக்கிறான்.

நான்கு திசைகள் மற்றும் மேலுலகம், கீழுலகம் என்னும் ஆறுபக்கங்களும் கருணை பொழிகின்றதால் அவன் ஆறுமுகன் என்று போற்றப்படுகின்றான்.

"நமசிவாய" என்னும் திருவைந்தெழுத்துடன் பிரணவமும் சேர்ந்து ஆறு திருமுகமாகக் கொண்டு திகழ்கிறான் முருகன்.

**'ஓம் எனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன்
மாமுகத்துள் ஒன்றாகும்'** என்பது கந்த புராணம்.

ஆறுமுகனுக்கு அற்புத விளக்கமாகப் புலவர் புராணப்பாடல் ஒன்று அமைகிறது பாருங்கள்.

**கண்ணிகர் மெய்யும் சென்னிக்**
**கணமுறழ் இனத்தின் கூடறும்**
**திண்ணிய தோள்களே போல்**
**திகழ்தரும் உயிரும் வேறொன்று**
**என்னுதற்கரிய தாகம்**
**எஃகமும் இயலிற் காட்டும்**
**புண்ணிய முருகன் செய்ய**
**பொற்பதம் போற்றி வாழ்வோம்.**

அதாவது முருகனின் பன்னிரு தோள்கள் தமிழின் பன்னிரண்டு உயிரெழுத்துக்களாகும். பதினெட்டுக் கண்களும் பதினெட்டு மெய் எழுத்துக்கள். அவனது ஆறு திருமுகங்களும் இன எழுத்துக்கள் ஆறாகும். அறிவுச் சுடராக விளங்கும் அவனது வேல் ஆயுத எழுத்தாகும். இவ்வாறாக முருகனே தமிழாகத் திகழ்கிறான்.

தானே ஆறு சமயங்களுக்கும் தனிக் கடவுள் என்பதையே ஆறுமுகன் காட்டுகிறான்.

**ஆறு சமயக்கடவுள் வேறுவேறின்றி**
**யான் ஒருவனே அங்கங்கிருந்து**
**அன்பர்க்கு முத்திதருவித் தென்று**
**யாவர்க்கும் அறிவித்த வதனமணியே.**

தரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் ஆறுமுக விளக்கமாக அற்புத பாடல் ஒன்றை அருளியுள்ளார்.

**ஆட்டும் சமயம் ஆறினுக்கும்**
**ஆதாரங்கள் ஆறினுக்கும்**
**அத்துவா ஞர் ஆறினுக்கும்**
**அமையும் தானே முதல் என்று**
**தீட்டும் படியாவரும் தெளியத்**
**தெளிந்தாங் (கு) ஆறுமுகம் திகழச்**
**செல்வம் மலியும் இடைக்கழிவாழ்**
**சேயைப் பிரிந்து காக்கவே**

திருவிடைக்கழி முருகன் பிள்ளைத்தமிழ்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் காட்டும் ஆறுமுக விளக்கமும் இங்கே குறிப்பிடத் தக்கது.

**குருவும் கணபதியும் கொற்ற மழுவாலும்**
**திருமடந்தை காவலனும் சேணில் - வருசுடரும்**
**தேவினத்தின் தாயான சிற்சக்தியும் முருகோன்**
**மூவிரண்டாகக் காட்டும் முகம்.**

வேறு வேறு பயன் வேண்டுவோர் வேறு வேறாக எண்ணி வழிபடுவதற்கு உரியதாக ஆறுமுகமுடன் குமாரக்கடவுள் விளங்குகிறார் என்கிறார் வண்ணச்சாரபம்.

**பரம்பொருளின் பிரகாசம் பரிதிப்புத்தேன்**
**பலவுலகும் ஒடுக்குகின்ற பண்பே ஈசன்**
**கரந்தவற்றை உதவுவது சக்தி யாவும்**
**காப்பதுமால் அடியவர்தாம் கருதும் செய்தார்க்கு**
**உரம் கொடுத்து முடித்திருதல் கணேசன் ஞான**
**உபதேசம் புரிந்திடுதல் ஞான வேற்கையான்**

**வரம் பெறுமட்டு பாரித்து பெற்றோர் இந்த**
**வரையுணர்வார் மற்றையர்க்கு வம்பாம் அன்றே.**

கௌமாரமுறை

ஆறுமுகத்தின் விளக்கமாக ஐந்து முகத்தோடு அதோ முகமும் என்ற குமரகுருபர சுவாமிகளின் கந்தர் கலிவெண்பா வரிகள் வருகின்றன. சிவபெருமானுடைய சக்தியோபாதம், வாமதேவம், அகோரம், தத்புருசம், ஈசானம் எனும் ஐந்து முகங்களுடன் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகமானார் குமரவேள். ஐம்புலனும் ஒன்றாகப் பெறும் சான்றோர்பால் விளங்கும் (சித்சக்தி) ஆறாதறிவிற்கு பொருளாவது அதோமுகம்.

சிதாகாச வடிவமாகக் காணுமிடத்து வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மேல், கீழ் என்னும் ஆறினும் நிறைந்து நிற்கும் பெருமான் அவர், சிவபெருமானின் ஐந்து முகத்தோடு சக்தியின் முகமும் சேர்ந்து ஆறுமுகமாயிற்று. ஆறுமுகத்தின் விளக்கங்களை எல்லாம் விரிவாக ஆறுமுக மூர்த்தி பற்றி பின்னர் கூறும்போது கவனிப்போம்.

வேதம் சிவபிரானைச் "சதாசிவோம்" என்று ஒரு முறை தான் கூறியது. ஆனால் முருகனை "சுப்பிஹ்மண்யோம், சுப்பிஹ்மண்யோம், சுப்பிஹ்மண்யோம்" என மும்முறை போற்றியது. வேதநெறியை (பிரம்மண்யத்தை) வளர்ப்பவன் சுப்பிரமண்யன். சுப்பிரமண்யத்தின் மேல் எப்பிரமம் உள்ளது? என வினவுகின்றனர் பாம்பன் சுவாமிகள்.

**சுவ்வெனும் மொழி சுத்தஇன் பாகும் ஓர்**
**அவ்வியத்தவிண் ணாம்பிர மத்தினின்று**
**எவ்வம் இன்றொளிர் கின்றமின் னேணியம்**
**ஒவ்வும் சீர் சுப்பிரமணியம் என்றோர்தியால்.**

(சுகம், ஆனந்தம், பிரம்மம்–சிவபரம்பொருள், நயம் தோன்றி ஒளிர்வது).

சிவபெருமானே முருகன் என்ற விளக்கம் கந்தபுராணத்தில் காணப்படுகிறது.

சிவபெருமான் உமையம்மையுடன் கூறுவார்.

**'ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும்**
**பேதகம் அன்றால் நம்பேரில் பிரிவிலன் யாண்டும்**
**நின்றான்**
**ஏதமில் குழலி போல்வான் யாவையும் உணர்ந்தான்**
**கீரும்**
**போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு**
**அருளவல்லான்.'**

முருகனின் பெயர்களுள் முக்கியமான மூன்று பெயர்களாக அருணகிரிநாதர் கந்தரனுபூதியில் குறிப்பிடும் போது,

**குமரன் முருகன் குகன் என்று மொழிந்து**
**உருகும் செயல் தந்து உணர்வு என்று அருள்வாய்**

குமரன் என்ற சொல் மிக உன்னதமானது குமரன் இளமையுடையவன். நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடும் ஆறெழுத்து "நமகுமாரராய்" என்று உரையாசிரியர் கூறுவர். குமரன் என்ற சொல்லுக்கு அஞ்ஞான இருளை அழிப்பவன் என்று பொருள். குமரன் என்றால் இளையோன் என்றும் இளையோன்" என்பதை முன்னரே குறிப்பிட்டோம். திருப்பதியில் பாலாஜி (குமாரன்) என்று அனைவரும் போற்றுவதும் குமாரதாமரை என்று அங்குள்ள புண்ணியப் புனல் ஒன்றை அழைப்பதும் அங்குள்ள திருக்குளத்தை சுவாமி "புஸ்கரணி" (சுவாமி முருகனுக்குரிய பெயர்) எனப்போற்றுவதும் திருவேங்கடத்து இறைவனின் முருகன் தொடர்பினைக் காட்டும்.

**நாத குமார நம என்று அரனார்**
**ஓதாய் என ஓதியதெப் பொருள் தான்?**

என அருணகிரிநாதர் முருகனை அழைக்கும் போது சிவபெருமான் முருகனை அழைத்த

"குமரா" என்ற திருப்பெயரையே குறிப்பிடுகின்றார்.

குகன் என்ற பெயர் அடுத்த நம் சிந்தனைக்கு வரும்

**'வணங்கும் ஆருயிர்க் குகை தொறும் வதிதலால் குகன்.....'**

என்று தணிகைப் புராணம் பேசும். இதய குகையில் வைத்த தகரவித்தையால் உபாசிக்கப் படுபவன் குகன். குகனைத் தவிர இன்னொரு தெய்வம் எனக்குத் தெரியவில்லை! எனக்குத் தெரியவில்லை! (நஜானே! நஜானே) என்று பரவுகிறார். ஆதிசங்கரர் தனது சுப்பிரமண்ய புஜங்க ஸ்தோத்திரத்தில் கந்தரனுபூதியை முடிக்கும் போது அருணகிரிநாதரும் "குருவாய், வருவாய், அருள்வாய் குகனே" என முடித்து மகிழ்கிறார்.

சரவணன் என்ற திருப்பெயர் சிவபெருமானையும், திருமாலையும் குறிக்கும் சொல் என்பர். சரவணபவன் என்றால் சரவணத்தில் தோன்றியவன் நாணற்காட்டில் தோன்றியவன் என்பது ஒரு பொருள். ச – மங்கலம். ர – ஒளி, கொடை. வ – சாத்வீகம். ண – போர். பவன் – தோன்றியவன் என்ற விளக்கத்தை பெறும் போது பல கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

ஒளி வடிவினனாக முருகன் திகழ்வதால் ஞாயிறும் முருகனும் நயம்பட ஒப்பிடப் பெறுகிறார்கள். ஞாயிற்றின் தோற்றம் யாவரையும் மகிழ்விக்கும். அதுபோல் முருகனின் திருவுருவம் அனைவரையும் மகிழ்வித்து இன்புறச் செய்கிறது. ஞாயிறு உலகிற்கு ஒளி உதவி நலம் செய்யும். முருகனும் பேரொளி வடிவனாகி மண்ணுயிர்க்கெல்லாம் தன்னருள் சுரக்கின்றான்.

ஞாயிறு அனைவராலும் விரும்பி புகழப்படுகிறது முருகனும் பலராலும் போற்றப்படுகிறான் இக்கருத்தினைக் கொண்டு நோக்குங்கால் திருமுருகாற்றுப்படையை நக்கீரர் தொடங்கும் போது

**'உலகம் உவப்ப வலுநேர்பு திரிதரு**
**பலர் புகழ் ஞாயிறு'**

என்று பாட முனைவதன் நயம் புலப்படுகிறது.

கந்தன் என்னும் திருப்பெயரும் சிந்தித்து மகிழ்வதற்குரியது. யாவர்க்கும் பற்றுக் கோடாய்த் திகழ்பவன் கந்தன். கடவுளர் பலரின் ஆற்றலும் கூறும் ஒருங்கே உடையவன் அடியார்க்கு பற்றுக்கோடானவன். கந்து நடுதறி ஐம்புல வயப்பட்ட ஆன்மாவைக்காட்டும் நடுத்தறியாக கந்தன் விளங்குகிறான். பகைவர் வலிமையை வற்றச் செய்பவன் கந்தன்.

ஆன்மாக்களின் அறியாமையை நீக்கும் குருபரன் அவனே! முருகனுக்கு அறிவே திருமேனி.

**'அறிவும் அறியாமையும் கடந்த**
**அறிவுத்திருமேனி என்று உணர்ந்து**
**உன் அருண சரணாவிந்தம் என்று அடைவேனோ'**

என வேண்டுகின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

முருகனை ஞானத்தாலே தான் அறிய முடியும். அந்தப் பேரறிவும் அவனாலேயே தரப் பெறுதல் வேண்டும்.

**'அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார்**
**அறிவை அறிவால் அறிந்த நிறைவாகி**
**அகில புவனாதி எங்கும்வெளிப்புற மெய் ஞானஇன்ப**
**அமுதை ஒளியாது அருந்த அருள்வாயே'**

என்பது அருணகிரிநாதரின் அருள்வாக்கு.

**ஞானந்தான் உருவாகிய நாயகன் இயல்பை**
**யானும் நீயுமாய் இசைத்தும் என்றால் அஃது எளிதோ**
**மோனம் தீர்கலா முனிவரும் தேற்றிலர் முழுதும் தானும்**
**காண்கிலன் இன்னமும் தன்பெருந்தன்மை.**

சூரபத்மனுக்கு அவன் தம்பி கூறும் அறிவுரை இது.

முருகனுக்கு தன் பெருமை இத்தகையது என்று இன்னமும் தெரியாது ஆம்! அவன் தந்தை

சிவபெருமானின் நிலையும் அப்படித்தானே!

**'தம் பெருமை தான் அறியாத் தன்மையன் காண் சாழலோ'**
என்பது மாணிக்கவாசகரது திருவாசகம்.

வாசித்துக் காணொணாதது, பூசித்து கூடொணாதது, வாய்விட்டு பேசொணாதது, நெஞ்சினாலே பாசர்க்குத் தோணொணாதது, நேசர்க்குப் பேறொணாதது, மாயைக்குத் சூழொணாதது ஆயினும் அடியவர்க்கு எளியவன் என்பதை வள்ளி தத்துவத்தில் காட்டுகிறான் முருகன்.

யான் எனது அற்ற அடியவரிடம் இறைவன் தானே வந்து தன்னை அழித்து மகிழ்வான் என்பதுதான் வள்ளி கல்யாண தத்துவமாகும்.

முருகனிடத்து மூன்று சக்திகள் உள்ளன. அவை வருமாறு :

1. இச்சாசக்தி(விழைவாற்றல்) வள்ளி – இகம்
2. கிரியாசக்தி (செயலாற்றல்) தேவயானை – பரம்
3. ஞானசக்தி(அறிவாற்றல்) வேல்– வீடு.

இச்சாசக்தி (விழைவாற்றல்)யின் வடிவமே வள்ளியம்மை. கரிய நிறம் உடையவர். முருகனின் வலப்பக்கத்தில் வீற்றிருப்பார்; கையில் தாமரை ஏந்தியிருப்பார்.

**........................................ஒரு முகம்**
**குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்**
**மடவரல் வள்ளியொரு நகையமர்ந்தன்றே.**
என்பது திருமுருகாற்றுப்படை. போகியாய் இருந்து உயிர்க்கும் போகத்தை அறிதல் இறைவன் தன்மை ஆதலின் உலகின் இல்வாழ்க்கை நடத்தற் பொருட்டு முருகன் வள்ளியம்மையாரோடு தன் ஒரு திருமுகத்தாற் பேசி மகிழ்ந்து நகை மலர்ந்திருக்கின்றான். காம நுகர்ச்சி இல்லாத இறைவன் இங்கனம் வள்ளியோடு நகைஅமர்ந்திருத்தல் உலகுயிர்கள் எய்தக்க நன்மையின் பொருட்டே ஆகும்.

"பெரும்பைம் புனந்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை விரும்பும் குமரன்" எனக் கந்தரலங்காரம் கூறும். அதனுள் தினைப் புனம் உலகம்; தினைக் கொல்லை ஞானப்பயிர் விளையும் இடம்; வள்ளி என்பது பரிபக்குவம் அடைந்த நல்லுயிர்; வள்ளியின் கொங்கைகள் பரஞானம், அபரஞானம் என்பர். குறவர் குறமகள் ஆகிய வள்ளியை முருகன் நயந்து வலிந்து வந்து மணந்து கொண்டது. அடியார்கள் அப் பெருமான் பெரிதும் "வா வா" என்று வலித் தாண்டு கொள்ளும் எளிமைத் தன்மை (சௌலப் யம்) ஆகிய பேரருள் திறத்தினைப் புலப்படுத்து கின்றது.

**'குறமகள் அவள் எம் குலமகள் அவளோடும்**
**ஆறுமுக ஒருவர் நின் அடியினைத் தொழுதோம்'**
என்று சிலப்பதிகாரம் போற்றும். சேட மங்கையாகிய வள்ளி பக்குவப்பட்ட ஆன்மாவின் வடிவம். யான், எனது என்ற செருக்கற்று இறைவன் திருவடிகளில் சரணடைந்த தன்மை வள்ளியின் தன்மையாகும். இவ்வாறு வள்ளி பின்பற்றிய நெறியினை வள்ளிச் சன்மார்க்கம் என்று போற்றுவார் அருணகிரிநாத சுவாமிகள்.

பிரதிபலனை எதிர்பாராமல் (நிஷ்காமியமாக) பணி செய்கின்ற பான்மையை முருகன் மிகமகிழ்ந்து அருள்வான் என்று வள்ளி தத்துவத்தை நினைவூட்டுவதாக அப்பர் சுவாமிகளின் தேவாரப்பாடல் ஒன்று விளங்குகிறது.

**நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன் கடன் அடியேனையும் தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடப்பதே.**

கடம்பனாகிய முருகனை நினைப்பூட்டி

அருளும் நிறத்தைக் காட்டி நம்மைப் பணி செய்ய அழைக்கிறார் இங்கே அப்பரடிகள்.

முருகனின் மற்றொரு சக்தி தெய்வயானை. இவ்வுலகில் இருந்த வள்ளியையும் வானுலகில் இருந்து தெய்வயானையையும் ஏற்று முருகன் எவ்வுலகிலுள்ளோரும் தனக்கு முன்னால் சமமாவார் என்பதை காட்டும் சிறப்பினை இங்கு உணரலாம். கிரியாசக்தியின் வடிவமாக விளங்குகின்றான். தெய்வயானை அம்மையை "மறு இல் கற்பின் வானுதல் கணவன்" என்று நக்கீரர் போற்றுவார்.

"படைத்தற்கும் காத்தற்கும் உரிமை தோன்ற" என நச்சினாக்கினியார் விளக்கம் கூறுவர். தெய்வ யானையை "அறக்கற்புடையாள்" என்பர் அவர். செயலாற்றும் திறம் மிக்கவர்கள் புகழ் விரும்பாது பெரிதும் அடக்கமாக இருத்தல் போல் முருகனின் கிரியா சக்தியாகிய தெய்வ யானை அம்மையின் சிறப்பும் நூல்களிற் சான் றோர்களால் தனியாக எடுத்து மிகுதியாக கூறப் பெறவில்லை.

தெய்வயானை அம்மையார் செந்நிறம் வாய்ந்தவர். முருகனின் இடப்பால் விளங்குபவர். கருங்குவளை (நீலோற்பலம்) மலரை கையில் ஏந்தியிருப்பவர்.

முருகனிடம் அமைந்த மூன்றாவது சக்தி ஞானசக்தி. அதுவே வேலாயுதமாக விளங்குகி றது. வெல்லும் தன்மையுடையது வேல். எல்லா வற்றையும் வெல்வது. அறிவாற்றல், அறிவு, அழகும் அகலமும் கூர்மையும் உடையது. "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்று இறைவனைப் போற்றுகிறது திருவாசகம். முருகவேளின் வேலாயுதமும் ஆழ்ந்து அகன்று கூர்மையுடைய தாய்த் திகழ்கிறது.

"சக்திதன் வடிவே தன்னில் தடையிலா ஞான மாகும்" என்பது சிவஞான சித்தியார் வாக்கு. முருகனின் ஞானவேலுக்கு சக்தி என்ற பெயரும் உண்டு.

ஞானமே அஞ்ஞானத்தை வெல்ல வல்லது ஆதலின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்களாகிய சூரபதுமன், சிங்கமுகன், தாரு முகன் என்னும் அசுரர்களை அழித்தொழித்து ஞானமயம் ஆகிய வேலே யாவர்க்கும் நலம் புரிந்தது.

**'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன்கை வேல் அன்றே**
**பார்இருப்பவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்**
**சூர்மாத் தடிந்த சுடர் இலைய வெள்வேலே'**

என்று இளங்கோவடிகள் போற்றுவர். வேலை வணங்குவதே வேலை எனச்சான்றோர் கூறுவர். முருகனின் வேலை வணங்குவதால் நாம் எல்லா ஞானமும் பெறலாம்.

வேல் அருள் உருவம் கொண்டது என்பதை "அங்கியின் வடிவம்" நீக்கி அருள் உருக் கொண்டு என்று கந்தபுராணத்தில் கச்சியப்பர் கூறுவர். திருவருள் சக்தி வடிவான வேல், முருகன் திருக்கரத்தில் ஒளிர்கின்றது. அது தங்க வேல், மாணிக்க வேல், மரகதவேல், குழந்தை வேல், சிங்காரவேல், இரத்தினவேல், வெற்றி வேல், சண்முகவேல், கதிர்வேல், முத்துவேல், அருள்வேல், முருகவேல், சுந்தரவேல், இராஜ வேல், வீரவேல் என்றெல்லாம் போற்றப்படு கின்றது. வேல் வகுப்பு, வேல்விருத்தம், வேல் அலங்காரம் முதலிய நூல்கள் வேலின் பெருமை களைச் சாற்றுவன. மாமயிலோன் வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் என்று கந்தரலங்காரத்தில் அருணகிரியார் பாடுவர். முருகனின் வேல்பட்டவுடன் சூரபத்மன் இருகூறு ஆனான். ஆணவ வடிவமான சூரன் முருகனின் வாகனமானான். அவனது ஒரு கூறு மயிலாகவும் மற்றொரு கூறு சேவலாகவும் வெளிப்பட்டது.

மயில் ஆணவம்; சேவல் சிவஞானம். ஆண வத்தை அழிக்க ஞானமாகிய முருகன் மயில் மீது அமர்ந்துள்ளான். நெடுவேல் வஞ்சர்க்கு வஞ்சனை செய்யும். அடியவர்க்கு உதவும். அது ஐந்தொழில் புரியும் என்பதை திருப்புகழில் காண்கிறோம்.

கண்ணாடியில் தடம் கண்ட வேல் – தோற்றம் (படைத்தல்) அடியார்களை (வீரவாகுதேவர், நக்கீரர் முதலியோரை) காத்தல் – ஸ்துதி (காத்தல்) சூரபன்மாதியாரை வதைத்தல் – சம்ஹாரம் (அழித்தல்). அடியாரிடத்து வெம் மையை மறைத்து தண்ணனி சுரத்தலும் பகை விரித்து தண்மையை மறைத்து வெம்மையை அழித்தலும் – திரோபவம் (மறைத்தல்) அடியார் களுக்கு (அருணகிரிநாதர், குமரகுருபரர் நாவில் நலந்தருளல் அனுக்கிரகம்(அருளல்).

வேலின் பெருமையைக் கூறவந்த அருண கிரிநாத சுவாமிகள் அதை மூன்று பொருள்களு க்கு ஒப்புமை கூறுகின்றார்.

1. பஞ்சாக்ஷரத்துக்கு நிகராகும் – (திருப்புகழ் – 606)
2. மறச்சிறுமி வள்ளி விழிக்கு நிகராகும்– (வேல் வகுப்பு)
3. இறைகழற்கு நிகராகும். (வேல்வகுப்பு)

சிவபெருமானுடைய ஐந்தெழுத்து மந்திரத் திற்கு நிகராக; வள்ளியின் கருணைவிழிக்கு நிகராக; இறைவனின் திருவடிகளுக்கு நிகராக வேலினைக் கூறுகின்றார்.

"வேலையுறை நீட்டி வேலை தனில் ஒட்டு வேலை விளையாட்டுவயலூரா" என்று அருண கிரிநாதர் பாடும் போது வேலுக்கு உறையுண்டு என்ற பேருண்மையைப் புலப்படுத்துகின்றது.

முருக வேலுக்குரிய அஸ்திரதேவர் வேலாயு தமே ஆகும். வேலாயுதத்தை "உடம்பிடித் தெய்வம்" என்று கந்தபுராணம் போற்றும். எண்ணரும் படைகட்கெல்லாம் இறைவனாக விளங்குவது வேலாயுதம்.

முருகன் என்றவுடன் அவனது மயிலும் வேலும் நம்கண்முன் நிற்கின்றன. முருகனுக்கு மூன்று மயில்கள் உண்டு. சூரபதுமனை அழிக் கும் முன்னரே முருகனுக்கு மயில்வாகனம் இருந்தது. இந்திரனும் மயிலாக முருகனைத் தாங்கினான். சூரன் அழித்த பின் அவனது ஒருபாதி மயிலாகியது. மயில் தன் அழகால் யாவரையும் மயக்கவல்லது. எனவே அதனை மாயை என்பர். கோழி ஊர்த்துவமாயை மயில். அதோ மாயை; கோழி நாத தத்துவம் எனில்; மயில் விந்து தத்துவம். நாதம் ஒலி வடிவானது; விந்து ஒளி வடிவினது; விந்து தத்துவம் ஆகிய மயில் கண்கவரும் ஒளியுடையதாய் பலவகை நிறங்களைக் கொண்டு திகழ்தல் காணலாம்.

மயிலை பிரணவ மந்திரம் எனக்கொள்ள லாம். தோகையை விரித்து ஆடும் மயிலின் தோற்றம் ஓங்காரம் போல் ஒளிர்தல் பற்றியே ஓங்காரத்துள்ளே முருகன் உருவங்கண்டு தூங்குதல் வேண்டும்" என்று கந்தரலங்காரம் கூறுகின்றது. மயிலின் வடிவம் மந்திரரூபமாக விளங்குவதை

**'ஆன தனி மந்திர ரூப நிலை கொண்டது**
**ஆடும் மயில் என்பதறியேனே' (வாதினை)**

என்று அருணகிரியார் திருப்புகழில் உணர்த்து வார்.

பரமனிடம் கனி பெற வேண்டி நெடிய கடலுலகு நொடியில் வலம் வந்த அதிவேக கலபக சுகமயில்" அது. அதன் நடன அழகுக் காட்சியை

**'நடனமிடும் இறைவன் மகிழ் தருகரிய வித மொடு**
**அழகுடன் ஆடும் கலபக சுகமயில்' (விடமளலி)**

என்று திருப்புகழ் போற்றும்

முருகனுக்கு கொடியாக விளங்குவது கோழி. முருகனை வழிபடுவோர் கோழிக்கொடி நாட்டி அதனை வாழ்க என்று வாழ்த்தி மகிழ்தல் அக்காலத்தே இருந்த செயல் என்பதனை,

**'கோழி ஓங்கிய வென்நடு விறற் கொடி**
**வாழிய பெரிது என்றேத்தி'**

எனவரும் திருமுருகாற்றுப்படை வரிகள் உணர்த்தும். கோழிக்குச் சேவல் என்று பெயர். அது பிற பறவைகளுக்கும் பொதுப் பெயராக வழங்கப்படும். சேவலாகிய கோழி ஒளியை விரும்புவது. எனவே அது அறியாமை இருளைப் போக்கி மெய்யறிவாகிய ஒளியைப் பரப்பும் முருகனின் கொடியாக விளங்குவது, பொருத்த மேயாகும். வைகறையிற் கோழி கூவுதல் ஓங்கார மந்திரத்தை ஒளிவடிவால் உலகுக்கு உணர்த்துவதாகும். எனவே கோழியை நாத தத்துவம் என்பர். நாததத்துவம் தான் எல்லா வற்றிற்கும் மூல முதற் தத்துவம். நாதம் இல்லை யேல் நானிலமே இல்லை. இச் சிறப்பு குறித்தே கோழிக் கொடியானை அடிபணியாமல் குவல யத்தே வாழக் கருதும் மதியிலி தான்" என்பார் கந்தரலங்காரத்தில் அருணகிரியார்.

முருகனின் கோழிக் கொடியின் மாண்பினை யாரே விளக்க முடியும். சேவல் நம் உயிர்க்குக் காவல். ஆடும் பரிவேல் அணிசேவல் எனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய் "என்று வேண்டியே தமது கந்தரனுபூதியைத் தொடங்கு கிறார். அருணை வள்ளல் முற்பதத்தையும் காலா யுதத்தையும் நாகா யுதத்தையும் கொண்ட சேவல் தனது சிறகு அடித்துக் கொள்ளச் சலதி கிழித்து உடைபட்டது. அண்டகடாகம் உதிர்ந்தது. உடுபடலம் குன்றமும் மாமேக வெற்பும் இடி பட்டன என்கிறார் அருணகிரிநாதர். ஏழு உலக மும் அதிரும்படி ஒலி செய்யும் சேவல் ஏழு உலக மும் வாழ்வதற்கு துணைபுரிகின்றது. சிவஞான வடிவாகவே சேவல் விளங்குகிறது. முருகன் கோழிக் கொடி ஏந்தி நம்மையெல்லாம் சிவ ஞானப் போரொளியில் துய்க்கச் செய்தருளு கின்றார்.

## பொன்னழகன்

தேரோடும் வீதி தேகத்திரைக்கடலாய்
மாறிக்கிடக்க மனமொழி மெய் மூன்றாலே
யார் யார் தொழுதாரோ அனைவருக்கும் எல்லாமும்
வாரி வழங்கி மனதின் நிலைக் கேற்ப
ஞான அமுதூட்டி அட்ட திசைகளுக்கும்
காவலென நின்று கலக்கிச் சிரித்தபடி
சூரனையும் வீழ்த்தி தொட்டமைக்கும் ஆசிநல்கும்
ஆறுமுகா உன்பொன் அழகில் நமைத்தொலைத்தோம்

உன்முகத்தில் கோடி சூரியனின் பிரகாசம்
உன்விழிக்கருணை முடிவிலி ஒளிப்பிளம்பாம்!
உன்சிரிப்பின் முன் புவியின் அழகென்ன அழகாகும்?
உன்மோனம் உலகில் உள்ள வார்த்தைகளின் பொருளாகும்
உன் ஆன்மா அதிர்வில் எண்ணுக் கணக்கற்ற
உன்னடியார் வாழ்வு யர்ந்து ஒளிபெறுமாம்!
நின்னை நினையார்க்கும் பாலூட்டும் நல்லூரானின்
அன்னையெனும் ஆறுமுகா அருளெமக்கு மெஞ்ஞானம்.

**த.ஜெயசீலன்**

# ஈழநல்லூர் திருப்பதியின் சிறப்பு

**கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**
**ஓய்வுநிலை கிராம சேவையாளர்.**

இலங்கைத் தமிழகத்தின் வடபால் அமைந்த யாழ் மண்ணில் நித்திலம் கொழிக்கும் சிவ பூமியாம் ஈழநல்லூர் திருப்பதியில் உறைந்துள்ள முருகப்பெருமான் வற்றாத கருணையுள்ளங் கொண்டவர். இன்று அகிலமே போற்றும் அருளுடைமைக்கும் பெருமதிப்புக்கும் உறைவிட மான இத்திருப்பதி; சிவநெறியும், செந்தமிழும் பாரம்பரிய பல்சுவைக் கலைகளும் கலாசாரப் பண்புகளும் மிகுந்து பிரகாசிக்கிறது.

இப்புண்ணிய பூமியில் கந்தப்பெருமானின் அபூர்வ சக்தியால் ஆன்மீகப் பெரியார்கள், கல்விமான்கள், கலைஞர்கள், அறப்பணியாளர் கள், மறுமைக்குதவும் நல்வினைப் பயனைத் தேடி வளர்க்கும் நற்சிந்தனையாளர்கள் என பல்வேறு சிறப்புடைய யாவரும் கவரப்பட்டு இத் திருவூரை வதிவிடமாக அமைத்துள்ளனர். பல வளங்களும் நல்லோர் சமூகமும் ஒன்றிணைந்து நல்லறம் பேணும் நல்ல ஊராம் நல்லூர்ப் பதி, கந்தப் பெருமானின் பேரருளால் சிறப்படைந் துள்ளது.

இலங்கையின் வட பகுதியை அரசாண்ட அன்றைய தமிழ் மன்னர்கள் இத்திருப்பதியின் சிறப்பை நோக்கி இவ்விடத்தில் தமது அரச தலை மைப் பணியகத்தை அமைத்தனர். சிவநெறியும் தமிழ் மரபும் காட்டிய பாதையில் தமது அரண் மனையை அமைக்கமுன் இத்திருவூரின் நாற் புறமும் நான்கு திருத்தலங்களையும் அமைத்த னர். கிழக்கே அமைந்த இயற்கை நீர்நிலையான நாயன்மார் குளத்தின் சூழலில் வெய்யிலுகந்த பிள்ளையார் ஆலயத்தை அமைத்துத் தம் பணிக்குப் பிள்ளையார் சுழி போட்டனர். தெற்கே கயிலாயநாதப் பெருமான் உடனுறையும் கயி லாயப் பிள்ளையாருக்கும் ஆலயமமைத்தனர். தமது வீரத்தை உறுதிப்படுத்தும் சக்தியான வீரமாகாளி அம்மனுக்கும் ஆலயமமைத்தனர். வடபால் பண்டாரக்குளத்தின் வடக்கே சட்டநாதர் சிவனையும் உறையவைத்துத் திருத்தல மமைத்தனர். சட்டநாதர் சிவனின் தென்பகுதி யில் தமதரண்மனையையும் நீராடல் வசதிக் கென (ஜமுனா) ஏரியையும் நிறுவினர். தமது அரண்மனைச் சூழலில் முருகப்பெருமானுக்கும் ஆலயமமைத்து வழிபட்டனர்.

சிவநெறி போற்றும் ஆலயங்களுடன் தமிழ் வளர்க்கும் தமிழ்ச்சங்கத்தையும் நிறுவியதுடன் கலைகள் வளரவும், நல்லாட்சி மலரவும் குடி மக்களின் பல்வேறு தேவைகளையும் நிறைவு செய்யும் தொழில் ரீதியாகப் பல்வேறு (தொழில் சார்) வகுப்பினரையும் தனித்தனியான குறிச்சி யில் குடியமர்த்தி அவர்களின் தொழிற் பெயரை அவர்களின் குடியிருப்பு வீதிகளுக்கும் நிறுவிச் செங்கோலோச்சினர்.

நிலையற்ற மனித வாழ்வின் தத்துவத்தை உணராது இன்புற்றிருந்தவர்களின் மாயை மறைத்த ஊனக்கண்ணால் தமது நிலையா

மையை அறியமுடியவில்லை. அந்நியர் வரவால் அரசகுலமும் நாடும் அழிந்தன. ஆனால் நித்திய இன்பத்தைச் சுரக்கும் தெய்வீகம் என்றும் பிர காசித்தது. ஆலயம் இடியுண்ட போதும் முருகப் பெருமான் காலவோட்டத்தில் தமது உறை விடத்தை இன்றைய இடத்துக்கு மாற்றச் சித்தங் கொண்டார். மயிலேறும் பெருமானின் ஆலய மும் இத்திருவூரும் இறையருள் பிரகாசிக்க ஏறுமுகமாகவே வளர்ந்தன.

நிலையற்ற மனித வாழ்வையும் நிலையான அறப்பணி மற்றும் அறவாழ்வையும் உணர்த்த வென இறையருள் பிரகாசித்தது. சித்தத்தைச் சிவன்பால் வைத்து இறை பித்தர்களான திருக் கூட்டம் இப்புண்ணிய பதியை நாடியது. பாரத நாட்டில் நடுவு நிலைகொண்ட நீதிபதியின் சித்தத்தை கவர்ந்த எம்பெருமான் அவரை இறை பித்தரான கோலத்தில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்தார். யாழ்ப்பாணத்தில் உலாவந்த சித்தர் நல்லூர் பதியில் பக்குவ நிலையில் வாழ்ந்த செல்லப்பா என்பவரை தன் வசப்படுத்தி பித்தராக்கித் தடுத்தாட் கொண்டு சித்து மகி மையை உணரவைத்தார். செல்லப்பரின் செயல் நிலையற்ற வாழ்வில் மூழ்கிய ஒருசிலரின் ஊனக்கண்ணுக்கு பித்தராகவே தென்பட்டது. அவரின் செயல்களை நோக்கி "விசர்ச் செல்லப்பா" என்று கூறி அவமதித்தனர்.

இறை பித்தரான சித்தர் செல்லப்பா நல்லைக் கந்தப்பெருமானின் தேர்முட்டிச் சூழலிலிருந்த மர நிழலில் தங்குவார். யாவரும் அவரின் செயல்களைப் பொழுது போக்காக நோக்கி எந்தநேரமும் சூழ்ந்து வேடிக்கை பார்ப்பர்.

மாவிட்டபுரத்தில் யோகநாதன் என்னும் சிறுவன் தாயை இழந்து மலையகத்தில் பணி புரிந்த தன்தந்தையை நாடி சிவனொளிபாதத்தில் தன்னை மறந்த பித்தனாகிப் பிதற்றிய வண்ணம் மாவைக்கந்தனையும் கீரிமலைச் சிவனையும் தரிசித்ததும் மேலும் இறைவழிச் செல்லப் பாதை தெரியாது ஞானகுருவைத் தேடிய காலமது. நல்லைக் கந்தன் அவரின் சிந்தனையுட் புகுந்து தம்மை அறிமுகஞ் செய்தார். கந்தனைக் கருத் தினிற் கொண்ட யோகநாதன் ஆலயதரிசனஞ் செய்தார். இறையருள் தூண்ட தமது ஞானகுரு வாம் செல்லப்பர் அறிவிலிகளாற் சூழப்பட்டு இறைசிந்தனையில் ஆழ்ந்திருந்ததைக் கண்டு அவரை நாடினார். யோகநாதனின் தாகமும் தக்க சமயமும் அறிவுக் கண்ணைத் திறந்தபோது ஞானகுருவின் கருணையும் பெருமையும் அருட்பொலிவும் காந்தம் இழுத்தது போல நோக்கியதும் பணிந்து நின்றார். அறிவிலிகளின் மத்தியில் பக்குவ நிலையிலிருந்த யோகநாத னைக் கண்டதும் செல்லப்பா சுவாமிகள் தமது அருட்பார்வையுடன் "யாரடா நீ" என்றார். இச் சொல்லில், தான்பெற்ற கனிவான பேச்சைத் தம்மினிய குருவின் கருணையில் தாம் மயங்கியதாக யோகநாதன் சித்திப் பேறான பாடலில் பின்வருமாறு கூறினார்.

**'கருத்தில் நினைந்துருகிக் கைகூப்பும் தொண்டர்**
**வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேலன் திருத்தலத்தில்**
**தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்**
**ஆரடா நீ என்றான் அவன்'**

ஞானகுருவால் அறியப்பட்ட நாள்முதல் யோகநாதன் செல்லப்பா சுவாமிகளின் முதன் மைச் சீடனாக அமைந்து இறைதத்துவங்களை உணர்ந்து மேலும் பல அற்புதங்களையும் காண்பித்து யாழ் மண்ணில் வாழ்ந்த சித்தர் பரம்பரையில் பிரகாசித்தார். இத் திருத்தலத்தில் குடிகொண்டுள்ள கந்தப் பெருமான் இத்திருப் பதியில் ஒரு சித்தர் பரம்பரையை உருவாக்கி னார். இச்சித்தர் பரம்பரையே எம்மண்ணின் வித்தாக அமைந்தது.

நல்லூர்த் திருவூரில் சைவசமயம், கல்வி, கலைகள், அறப்பணி, விருந்தோம்பல் போன்ற

பல நிகழ்வுகளும் நன்றாகவே அமைந்தன. இது எப்பவோ முடிந்த காரியமாகும். முருகப் பெருமானுக்கு உயர்வு தாழ்வின்றி எவரும் வழிபட, அர்ச்சிக்க வசதி செய்தாற்போல அன்று முதல் இன்றுவரை அர்ச்சனை செய்ய ஒரு ரூபா மட்டும்தான். நாள்தோறும் நேரம் தவறாத பூசைகள், விழாக்கள், யாவரும் அறிந்த செயலாகும். பெருவிழாக் காலம் எம் பெருமான் உள்வீதி உலாவின் போது குறிப்பிட்ட நாட்களில் திருமுறை ஓதுதல், திருப்புகழ் பாடுதலுடன் விழாச் சிறப்படைகிறது. பக்தர்களின் ஒரு ரூபா அர்ச்சனை நிதியில் வருடமொரு திருப்பணி நிறைவேறுகிறது. இப்பணிகளில் மகுடம் வைத்தாற் போல் 2011 இல் அமைந்தது தெற்கு வீதியிலமைந்த ஒன்பது தள அமைப்புள்ள கலைக்கூடமான வானுயர் கோபுரமாகும்.

இக்கோபுரத்தின் முதலாம் தளத்தின் நடு வெளியில் அன்று அருணகிரிநாதர் கிளி வடிவில் வந்து கந்தரனுபூதி பாடியதும் திருவண்ணாமலைக் கோபுரத்தில் வந்தமர்ந்த காட்சி அமைந்துள்ளது. மேலும் இக்கோபுரத்தின் தென்திசையில் அருணகிரிநாதரின் சந்நிதி கோபுரத்தை நோக்கி அமைந்திருப்பது திருப்புகழின் மகிமையை உணர்த்தும் புராண காலச் சான்றாகும்.

அன்று தொட்டே முருகன் புகழ்பாடிய எம்மவர் அந்நியர் பிடியிலிருந்து எம் மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த ஆறுமுக நாவலரின் ஞாபகமாக ஆலயத் தென்கீழ் வீதியில் மணி மண்டபம் அமைத்தனர். இன்று இந்த மண்டபம் இந்து கலாசாரத் திணைக்களத்தின் அறப்பணி நிலையமாக்கப்பட்டு வருடாவருடம் யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆடலும் பாடலும் நிறைந்த கலைவடிவங்களை முருகனின் பெருவிழாக் காலத்திலும் சமய விழாக்களிலும் காண முடிகிறது. இதனால் சைவம் துலங்குகிறது.

பண்ணிசையால் - இசைப் பேருரையால் எம்மனதைக் கவர்ந்த மணிபாகவதர் முருகப் பெருமானின் திருவருளால் துறவு பூண்டு இலங்கையில் சைவசமயம் தழுவிய ஒரே உயர் பீடமான நல்லை நகர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவி வளர்த்து நாடு போற்ற வைத்தார். முதலாவது குருமகாசந்நிதானமாகிய அவரின் அருஞ்சேவையால் நல்லூரில் உலகறிந்த சைவப்பெருமை தோன்றியது. அவரைத் தொடர்ந்த இரண்டாவது குருமகா சந்நிதானமும் அவர் வழிச்சென்று சமய, சமூக அறப்பணியால் உயர்ந்தார். உலகச் சைவப் பெருமக்களின் கண்கள் அகலத்திறந்து இம் மண்ணில் அரியதோர் இருமாடி கொண்ட பெருமண்டபத்தை இங்கு நிறுவிச் சைவசமயச் சமூகத்துக்குக் கையளித்துள்ளனர்.

அகில உலக இந்து மாமன்றம் தம் பணியாக நல்லையில் பல மாடி கொண்ட உயர்வான மண்டபத்தை நிறுவி அறப்பணியுடன் சைவத்தை வளர்க்கின்றனர். கல்விப் பணியாக இரு பாடசாலைகள் முருகனின் மேற்கு வீதியிலும், கிழக்கேயும் இயங்குகின்றன. இவ்விடத்தில் அன்று ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இயங்கியது. இப்போது யாழ் வலயக் கல்விப் பணிமனை இயங்குகிறது. நல்லூர் பிரதேச செயலகமும் யாழ் மாநகரசபை நிர்வாகப் பணிமனையும் இத்திருவூரின் அரச நிறுவனங்களாகும். யாழ் நல்லூர் பகுதிக்கான கமநல சேவை நிலையம் இத்திருவூரில் இயங்குவதால் யாவரும் நன்மையடைகின்றனர். கோயில் வீதியில் துர்க்கா மணி மணிடபமும், தமிழ் இலக்கிய மையமான கம்பன் கழகமும் இப் பிரிவிலேயே அமைந்துள்ளன. இப்பிரதேச இளங்கலைஞர் களின் மன்றம் எமது பாரம்பரிய கலைகள் வளர்க்கும் நோக்கில் இத் திருவூரின் வடபால் அமைந்துள்ளது. எம்மவரின் சமயநெறி போற்றவும் ஆன்மீகம், தியானம், யோகப்பயிற்சி மையமான திவ்விய ஜீவன சங்கமும் இத் திருவூரை அலங்கரிக்கிறது.

இன்னோரன்ன சிறப்புகள் மிக்க இத்திரு வூரில் முருகப்பெருமானின் பெருவிழாக் காலங்களில் மதிய உணவிடும் அன்னசாலைகள் பல நிறுவப்பட்டுள்ளன. ஏனைய நாட்களில் இம்மண்டபங்களில் கலை, கலாசாரப் பெரு விழாக்களும் சமய விழாக்களும் சிறப்புடன் நிகழ்த்தும் வாய்ப்பையும் முருகப்பெருமான் அளித்துள்ளார். இத்திருவூரில் பல சிறப்புகளையும் ஏற்படுத்தி நிலையற்ற மனிதவாழ்வை நிலையான அறப்பணி, ஆன்மிக தத்துவங்களையும் உணரவைத்து உலகிலேயே யாழ் நல்லூர் பேரூரில் அருளாட்சி புரியும் முருகப் பெருமானின் புகழ் எம்மையெல்லாம் உய்விக்கிறது. இத் திருவூரின் வளர்ச்சி மேலும் தொடர எல்லாம் வல்ல நல்லைக் குமரனருள் வேண்டிப் பிரார்த் திப்போமாக!

## வெற்றி வேல் நாயகா நல்லூரா தேரேறி வருக!

வெற்றிவேல் நாயகா தேரேறி வருக!
வேண்டும் வரம் தரவே
வேலாயுத சுவாமி தேரேறி வருக!
ஆறுபடை வீடுடைய
ஆண்டவா தேரேறி வருக!
ஆடும் சேவற் கொடியழகா
அழகர் மலை வேலா
அசைந்து தேரேறி வருக!

ஏறுமயில் வாகனனே
ஏந்தலே தேரேறி வருக!
எட்டுக் குடி எழிலோனே
ஏரகத்துச் சீரளா தேரேறி வருக!
குன்றாலாடும் குமரனே
குஞ்சரி தன் கணவனே தேரேறி வருக!
திருச்செந்தூர் வேலனே
திருப்பழனி செல்வனே தேரேறி வருக!

வள்ளி மணவாளனே
வடிவேல் கந்தையா தேரேறி வருக!
வானவர் போற்றும் அமுதே
வண்ணப்பட்டுடுத்தித் தேரேறி வருக!
பாடி ஆடி நடந்து வந்தோம்– உன்
பாதமே கதியெனப் பணிந்து நின்றோம்
பக்தரை காத்திட உற்ற தருணம் இதுவென்ற
உறுதி கொண்டு நல்லூரா தேரேறி வருக!

**குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்**
**வீரமனை, குப்பிளான்.**

# நல்லூரான் போதிக்கும் நல்லவை

**வை. நவதரன்**
**யாழ் பல்கலைக்கழகம்.**

சைவத்தமிழ் மாந்தர் தம் பழமையையும், பெருமையையும் பேசும் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருத்தலங்களில் நல்லூர்க்கந்தனுக்கு முக்கிய இடம் உண்டு. வரலாற்றுக் காலங்களில் மன்னர் ஆட்சியின் போது அவர்களின் தலை நகர்ப்பட்டியலில் வேலோன் குடிகொண்டிருக் கும் நல்லூர் என்னும் இடமும் சிறப்புப் பெற் றிருந்தது. இதனை விட நல்லூர் மண் மகத்தான பல மகான்களையும், கவித்துவம் செறிந்த அரு ளாளர்களையும் வளர்த்தெடுத்திருக்கின்றது. வளர்த்து வருகின்றது. இத்தகைய வரலாற்றுப் பொக்கிசம் நிறைந்ததும், சிறப்புமிக்கதுமான நல்லை நகரிலே குடிகொண்டு நல்ல இயல்புக ளையும், நல்ல வரங்களையும் அள்ளி வழங்கும் நல்லூரானின் மகிமைதனை வார்த்தைகளுள் வடித்துவிடு வது என்பது எளிதான காரியமன்று.

இதில் நல்லூரான் தமிழ் மக்களின் பண்பாடு, கலாசாரம், நல்லொழுக்கம், ஒருமைப்பாடு, நேரமுகாமைத்துவம் போன்ற இன்னோரன்ன பல நல் இயல்புகளுக்கு உரைகல்லாகத் திகழ்கின்றது என்று கூறுவது மிகைப்படுத்துவதற் கான முயற்சியொன்றல்ல.

நல்லூரானின் பூசைகளும், திருவிழாக்க ளும், வழிபாடுகளும், நடைமுறைகளும், ஏனைய செயற்பாடுகளும் எம் சமூகத்திற்குத் தரும் அல்லது கற்றுக்கொடுக்கும் அருள் அறிவு களை அடையாளப்படுத்துவதும், அறிந்து கொள்வ துமே இத் தலைப்பின் நோக்கும் படைப்பின் போக்குமாகும்.

ஒவ்வொரு இனத்திற்கும், சமூகத்திற்கும் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்கள் தடம்பதித்துள்ளது. பண்பாடு என்பதற்கு பலரும் பல்வேறு கருத்துநிலைகளை உற்பவித்து பிர சவித்துள்ளனர். அதில் பேராசிரியர் கா. சிவத் தம்பி அவர்கள் "பண்பாடு என்பது, குறிப்பிட்ட ஒரு மக்கட்கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்த கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத் தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி முறை கள், உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியன வற்றின் தொகுதியாகும்." என்பார். பண்பாட் டினை அவற்றின் தன்மைகளுக்கு ஏற்ப அவற் றைப் பலகூறுகளாகப் பட்டியல்படுத்த முடியும்.

- மொழிப்பண்பாடு
- மதப்பண்பாடு
- தொழிற்பண்பாடு
- உடைப்பண்பாடு
- உணவுப்பண்பாடு

எனப் பல தன்மைகளில் பட்டியல்படுத்திக் கொண்டே செல்லக்கூடும். ஆனால் இவ்வாறான கூறுகளின் சேர்மானத்தினையே பண்பாடு என்று அழைத்தனர்.

இதில் மதப்பண்பாடு என்னும் தன்மையினை எடுத்து நோக்கி, அதுசார் கருத்துக்கள் என்ன? என்பதையும், அவை நல்லுரான் தலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதனையும் கீழே விரித்துரைப்போம். மதப்பண்பாடு என்பது.

இந்துப் பண்பாடு

கிறிஸ்தவப்பண்பாடு

இஸ்லாமியப்பண்பாடு

பௌத்தப்பண்பாடு

என்பவற்றின் கூட்டாகவே உள்ளது. இதில் இந்துப் பண்பாடு என்பதனையும் அதன் தன்மைகள் நல்லூரில் நிழலாடும் தன்மையினையும் பார்ப்பதே இம் முயற்சியாகும்.

இந்துப்பண்பாடுகளில் வழிபாடுகளுக்குச் செல்லும் போது பல கட்டுப்பாடுகளை அல்லது ஒழுக்கநெறிகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. பொதுவாக இந்துக்கள் இந்து ஆலயங்களுக்குச் செல்லும்போது ஆண்கள் வேட்டியணிந்து மேலாடை இன்றிச் செல்வார்கள். ஆனால் இன்று நவீனங்கள் தலைவிரித்தாடுகின்ற நவ வாழ்க்கையில் இந்து ஆலயங்களில் வேட்டியணிவதும் இல்லை. மேலாடை அகற்றுவதும் இல்லை. இத்தன்மையினை தற்பொழுது எல்லா ஆலயங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் இவ்வியல்புகளுக்கு எதிர் நிலையை நல்லூர் ஆலயத்தில் தரிசிக்கக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு இவ் வேலோன் ஆலயத்திற்குள் இந்துக்கள் வேட்டியோடும் மேலாடையின்றியும் செல்வார்கள். இத்தன்மை அல்லது இச்செயற்பாடு இந்துக்கள் ஆலயத்தில் பிரசன்னமாகும் போது எவ்வாறு செல்ல வேண்டும் என்பதனை எமக்குப் போதிக்கின்றது.

அடுத்து நல்லூரான் போதிப்பதில் மிகவும் முக்கியமானதாக அமைவது பூஜை நேர ஒழுங்குகளைச் சீரோடு கடைப்பிடிக்கும் சீலம். இன்று உலகமே உள்ளங்கையில் குடிகொள்ளும் நவலோகத்தில் வாழ்கின்றோம். இதே போன்று மனித வாழ்விலும் நேரங்களும் காலங்களும் சுருங்கி வேலைப்பளு அதிகரித்துவருகின்றது. இத்தன்மையிலும் நல்லூரானின் நித்திய நைமித்திய பூஜைகளுக்கு பக்தர் கூட்டம் குறைவே இல்லை. இதற்குக்காரணம் பக்தர்கள் முருகன் மீது கொண்ட அன்பும் பக்தியும் என்றாலும் அதே வேளை நேர ஒழுங்கு தவறாது பூஜைகள் குறித்த காலத்திலே ஆரம்பமாகி திட்டமிட்டபடி நிறைவுபெறும் என்ற அசையாத நம்பிக்கையும் காரணமாய் அமைகின்றது. இவ்வாறாக ஆறு காலப்பூஜைகளுக்கும் தவறாமல் பக்தர்கள் பங்கேற்கின்றனர். அத்துடன் குறித்த நேரம் தப்பினால் நல்லூரான் வனப்பினைப் பார்த்து "எம் குறைகள் கூறி வழிபட இயலாது போய் விடுமே " என்ற பக்தி கலந்த அச்ச உணர்வின் மேலீட்டினாலும் பக்தர் கூட்டம் அந்நேரங்களில் நிறைவதற்கு மறுப்பதுமில்லை, மறப்பதுமில்லை.

இவ்வாலயத்தில் பின்பற்றப்படும் சீரான நேரத்திட்டமிடல் தன்மையினை நாம் எமது வாழ்விலும் பின்பற்றிச் சிறப்படைவதற்கு வழி கூறும் செயலையே நல்லூர் மன்னன் ஆற்றுகின்றான்.

ஆலயத்திற்குள் வருகின்ற போது தமிழ்ப் பெண்கள் மட்டுமன்றி, அந்நிய நாட்டுப் பெண்களும் சரி சேலை அணியும் வழக்கத்தினை நாம் கண்டிருக்கின்றோம். பெருமளவான பெண் பக்தர்கள் சேலை அணியும் தன்மையைப் பார்க்கும் போது, தெய்வ கலையும் பக்தி உணர்வும் நிழலாடுவதனை உணர்ந்து கொள்ள முடியும். அத்துடன் இவை அனைத்தும், பக்தி கொண்ட மக்களிடம் முருகன் நல்கும் போதனைகளாகவே எண்ண வைக்கின்றது.

இவை அனைத்திற்கும் மேலாக ஆலயச் சூழலை மாசுபடுத்தும் பொருட்கள் எதுவுமே ஆலய வளாகத்தினுள் காணப்படுவதில்லை.

அந்த அளவிற்கு சுத்தத்தை பேணுவதிலும் நம் நல்லூரான் நடைமுறைப்படுத்தத் தவறிவிட வில்லை. வேறு எந்த ஆலயங்களையும் மிகைப் படுத்திக் கூறமுடியாத அளவிற்கு அனைத்து விடயங்களையும் போதிப்பவனாக மிளிரும் நல்லூரானை நினைத்துப் பார்க்கும் போது எம் மனம் பூரிப்படையும்.

மேற்கண்டவற்றைத் தொகுத்து நோக்கும் போது, நல்லூரான் ஆலயத்திற்குள் செல்வதும், அவன் முகம் தரிசிப்பதும் இலகுவில் முடிந்த காரியமில்லை. இவற்றினை எல்லாம் செம்மை யுறச் செய்வதற்கு எழுதாத கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டுத் தான் ஆகவேண்டும் என்ற உண்மை புலனாகும். ஆயினும் இவை எல்லாம் கட்டுப் பாடுகள் இல்லை. இவை தான் இந்துக்களின் தனித்துவத்தைப் பறைசாற்றும் பண்பாட்டுக் கூறுகள். இப்பண்பாட்டு விழுமியங்களையும் நெறிமுறைகளையும் பேணிப் பாதுகாக்கும் காலத்தால் முந்திய இடமாக நல்லூரானை நாளும் போற்றி நலம் பல பெற்று, வையகம் திழைக்கச் செய்வோம்.

## மேன்மைகொள் சைவம் துலங்கிடவே

தில்லைக் கூத்தனின் சுட்டிச்சிறுவனே
நல்லையிலே அருளாட்சி புரிந்திடும் சுந்தரனே

சங்கிலிய மன்னனின் நல்லாட்சியை
சரித்திடம் பேசிட வைத்த வேலவனே

பார் போற்றிடும் நல்லையின் அழகனே
பாரினிலே நாம் படும் இடரினை
பன்னிரு விழிகளினாலும் காணவில்லையா
பன்னிரு கரம் கொண்டு காக்கவில்லையா

எழில் மிகு நல்லையம்பதி நாயகனே
எட்டுத்திக்கிலிருந்தும் தம் குறைகளைப் போக்கிடவரும்
ஏராளமான அடியவர்களின் துன்பங்களை
களைந்து ஏற்றம் பெற வைத்திடும் சண்முகனே

அனுதினம் உந்தன் தரிசனம் பெற
அலையலையாய் திரள்வோரைக் காண்கையிலே – எம்
மெய் சிலிர்க்குதையா மனம் உவகையடையுதையா
மெய்யுருகித் தொழுதிடும் பக்தர்களின்
மெய்யன்பிற்காக கருணை புரிந்திடு நல்லூரானே
மேன்மை கொள் சைவம் துலங்கிடவே.

**கணகிருஷ்ணராஜன்**
**ஆவரங்கால் கிழக்கு.**

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மகிமை

**திருமதி வா. பரமேஸ்வரன் (இணுவில்)**
**நூலகப் பொறுப்பாளர்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.**

சைவமும் தமிழும் எமது இரு கண்கள் என பேணிக்காத்து வரும் யாழ்ப்பாணம் மிகத் தொன்மையான வரலாறு கொண்டது. இது பண்டைக்காலத்தில் இலங்கையின் வட பகுதி யில் நாகர்கள் என்ற நாகரிகம் மிகுந்த குழுவி னர் வாழ்ந்து வந்தபடியால் நாகதீபம் என அழைக்கப்பட்டது. அத்துடன் புண்ணியபுரம், காந்தருவ நகரம், வீணாகானபுரம், மணற்றிடர், மணற்றி, யாழ்ப்பாணம் எனப் பல காரணப் பெயர்களுடன் சிறந்து விளங்கியது. நாகர்களா கிய ஆதிமக்கள் தமிழர் இனத்தின் பாற்பட்டவர் கள் என சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இவ்வடபகுதி இராச்சியத்திற்கு கதிரமலை எனப்படும் கந்தரோடையே இராசதானியாக விளங்கியது. பின் கி.பி 1450ஆம் ஆண்டளவில் செண்பகப்பெருமாள் (சிறி சங்கபோதி - புவனேகபாகு) என்பவன் நல்லூரைப் புதுநகர் ஆக்கி ஆட்சி செய்தான். இவ்வாறு தமிழர் சிறிது சிறிதாக செல்வாக்குப் பெற்று தனியரசு நிறுவ வும் தலைப்பட்டனர் என்பது வரலாறு.

ஆதியில் இருந்தே யாழ்மண்ணில் சைவமும் தமிழும் வேர் ஊன்றிக் காணப்பட்டன என இதிகாச புராணங்கள், சரித்திர ஆராய்ச்சியாளர் கள், பழைய கல்வெட்டுக்கள், வேறு வரலாற்று ஆதாரங்கள் என்பன கூறுகின்றன. இம்மண்ணில் இவ்வாறு ஆரம்பத்தில் சைவமும் தமிழும் உடன் சேர்ந்து சைவத் தமிழ்ப்பண்பாடுகள், கலைகள் என்பனவும் வளர்ச்சியுற்றன. இவையாவும் இங்கு அரசர்களாலும், படித்த பெரியார்கள், அறிஞர்கள், புலவர்கள், பண்புமிக்கோர் போன்ற மேன்மக்களாலும் தொடர்ந்து பேணிக்காத்து வளர்க்கப்பட்டன.

முருகன் தமிழ்க் கடவுள் என்பர். முருகனைப் போல அழகு மாறாத – இளமை மாறாத இனிய மொழி தமிழ் ஆகும். தமிழ் எழுத்துக்களில் வல்லினம், இடையினம், மெல்லினம், என்பவை ஒவ்வொன்றும் ஆறு எழுத்துக்களைக் கொண்டு முருகனின் ஆறுமுகங்களை உணர்த்துவன. பதினெட்டு மெய்யெழுத்துகளும் ஆறுமுகங்களி லும் உள்ள பதினெட்டு கண்களை உணர்த்துவன. அத்துடன் பண்டைத்தமிழரின் உன்னத படைப் பான நடராச வடிவம் இன்று உலகில் உள்ள அறிஞர்களால் போற்றப்படுகின்றது. அத்துடன் கலை அழகு மிக்க இவ்வடிவம் சைவதத்துவக் கருத்துகளை விளக்குவன ஆகும்.

இவ்வாறு கடவுள்களால் வெளிப்படுத்தப் பட்ட ஆதியான சைவமும் தமிழும் வளர்ந்து கொண்டிருக்கும் யாழ் மண்ணில் நல்லூர்ப் பதியில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் ஸ்தாபிக் கப்பட்டது. இதை சிறிசங்கபோதி எனும் புவனேக பாகு கட்டுவித்தான் என "கைலாய மாலை" எனும் நூல் கூறுகின்றது. இக்கோயிலின் மகோற்சவ காலத்தில் வாசிக்கப்படும் கட்டியத் தில் இன்றும் இவ்வாதாரம் காணப்படுகின்றது.

நல்லூரைக் கட்டிய புவனேகபாகு சிறந்த தமிழ்ப் புலவனாகவும் விளங்கி தமிழையும் வளர்த்தான்.

தொடர்ந்து கனக சூரியன் எனும் அரசன் நல்லூரை சிறந்த இராசதானி ஆக்கினான் சிறந்த இராச வீதிகளும், அரன்மனைகளும், கல்விக் கூடங்களும், புலவர், பாணர், பருத்திநூல் நூற் போர், ஆடை நெய்வோர் போன்ற தொழில் புரி மக்கள், சோதிடர், மருத்துவர், போன்றோர் வைகும் வளமனைகளும், வீதிகளும் அமைத்த துடன், பல குளங்களையும் அமைத்து நல்லூ ரைச் சிறந்த தளமாக்கி சைவத்தையும், தமிழை யும், கலைகளையும் வளர்த்தான். அத்துடன் தமிழ் மக்களையும் சிறப்பாக வாழவைத்தான்.

இவ்வரசர் காலத்தில் யாழ்மண்ணில் தமிழ்ச் சங்கம் மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டு வித்துவான் களுக்கு தகுந்த சன்மானம் வழங்கி சைவமும் தமிழும் கலைகளும் வளர்க்கப்பட்டன. வெளி நாட்டவர் (போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்) வரு கையால் சைவம், தமிழ், நல்லூர்க் கந்தன் கோயில், ஏனைய சைவக் கோயில்கள், சைவத் தமிழ் மக்கள் போன்றவற்றிற்கு அச்சுறுத்தல் ஏற் பட்டன. எனினும் முருகனின் அருளாலும் சைவத் தமிழ் மக்களின் முயற்சியாலும் மீண்டும் 1734 இல் இரகுநாத மாப்பாண முதலியாரால் நல்லூர்க் கந்தன் ஆலயம் புனரமைக்கப்பெற்றது.

அன்று தொடக்கம் ஆறுகாலப் பூசைகள், ஆராதனைகள், நடைபெற்றன. மகோற்சவ காலம் 25 திருவிழாக்களும், கந்தசஷ்டி திருக் கார்த்திகை எனச் சிறப்புத்திருவிழக்கள் 55ம் நடைபெறுகின்றன. தொடர்ந்து பல திருப்பணி கள், பொதுப் பணிகள் போன்றன ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலராலும், பல பொதுமக்களாலும் மேற் கொள்ளப்பட்டன இவ்வாறு பல வழிகளிலும் வளர்ச்சியுற்று நல்லூர்க் கந்தன் ஆலயம் ஈழ நாட்டில் மேன்மை மிக்க பெரிய ஆலயமாயிற்று.

திருவிழாக் காலங்களில் நல்லூர் ஆலயம் "பூலோக கைலாசம்" ஆகத் திகழ்கின்றது. இங்கே நடைபெறும் பூசைக் கிரமங்கள், மகோற்சவ காலங்களின் சிறப்பு, சுகாதார அடிப்படை வசதிகள் கோயில் நடத்துவோரின் பக்தித்திறன், யாழ் மாநகர சபைபுரியும் பணிகள், தொண்டர் களின் பணிகள், வழிபடுவோர் கூட்டம், பக்தர் கூட்டம் எல்லாம் சேர்ந்து நல்லூர்க் கந்தன் கோயிலை எந்நாளுமே பூலோக கைலாசமாகப் பெருமைப்படுத்துகின்றன.

ஆறுமுக நாவலர், சிவசம்புப்புலவர், பரமானந்தப் புலவர், முதலியார் குல சபாநாதன் சோமசுந்தரப் புலவர் எனப் பலதரப்பட்ட அறிஞர் கள் புலவர்கள் பெரியார்கள் போன்றவர்களால் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் பற்றி அறுபது (60) நூல்கள் வரை இயற்றப்பட்டிருக்கின்றன. 1875இல் ஆறுமுகநாவலரால் "நல்லூர் கந்த சுவாமி கோவில்" எனும் நூலும், 1905இல் சின்னத்தம்பி பண்டிதர் இயற்றிய "நல்லூர் கந்சுவாமி திருவருட் தரிசனப் பதங்கள்" எனும் நூலும், தொடர்ந்து நல்லைப் பதிகம், நல்லைக் கந்தன் கலிவெண்பா, நல்லைக்கந்தரலங்காரம், எனப் பல நூல்களும் வெளிவந்துள்ளன. அத்து டன் இப்போது வருடம்தோறும் வெளிவரும் நல் லைக் குமரன் எனும் சிறப்பு மலரும் வெளிவந்து கொண்டிருப்பது பெருமைதரும் விடயமாகும்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நல்லூரில் அவதரித்த ஆறுமுக நாவலர் பெருமான் சைவத் தையும் தமிழையும் மறுமலர்ச்சி செய்யவும் வளர்க்கவும் அரும் பாடுபட்டார். இவர் நல்லூர்க் கந்தனின் அருட்துணையுடன் யாழ் மண்ணில் சைவப்பணி, தமிழ்ப்பணி, நூல் எழுதும் பணி வெளியீட்டுப்பணி, உரை எழுதும் பணி தமிழ்க் கலாசாரத்தையும் சைவசமயக் கலாசாரத்தை யும் பாதுகாக்கும் பணி எனப் பல அரிய பணிகளை யும் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்.

தொடர்ந்து அறிஞர்கள், பண்டிதர்கள், பெரியார்கள், கல்வியியலாளர்கள் எனப் பல தரப்பினராலும் இன்றுவரை சைவமும் தமிழும், கலைகளும் யாழ் மண்ணில் வளர நல்லூர்ப் பதி மையமாகத் திகழ்கின்றது.

இவ்வகையில் நல்லூர்க் கந்தன் கோயிலுடன் அமைந்த நாவலர் மணிமண்டபம் இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் சேவைக்களமாகப் பணியாற்றுகிறது. இந்நாவலர் மணிமண்டபம் அறநெறிப்பாடசாலைப் பணிகளைத் திறம்படச் செய்வதுடன் சைவத்தையும் தமிழையும் கலைகளையும் வளர்க்கும் சிறந்த தளமாகி நிற்கின்றது. நல்லூர்க் கந்தனின் மகோற்சவ திருவிழாக் காலம் 25 நாட்களும் பண்ணிசை, சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகள், அறநெறிப்பாடசாலைகளின் நிகழ்ச்சிகள் பண்ணிசை பஜனை, கதாப்பிரசங்கம், நடனம் போன்ற பல கலை நிகழ்வுகளை மேன்மையுடன் செய்கின்றது. அத்துடன் அறநெறிப்பாடசாலைகளுக்கு பல ஊக்குவிப்புகளை வழங்கி சைவம் தமிழ், கலைப்பண்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து வளர்த்து வருகின்றது.

அடுத்து நல்லூரில் உள்ள நல்லை திருஞான சம்பந்தர் ஆதினமும் சைவப்பணி, தமிழ்ப் பணிகளைச் செய்து சிறந்த தொண்டாற்றுகின்றது. கந்தபுராணம் உள்ளிட்ட புராணப் படிப்புக்கள், அரங்கேற்ற நிகழ்வுகள், திருவிழாக் காலங்களில் சங்கீதக் கச்சேரிகள், தாளலயக் கச்சேரிகள், சிறுவர்களின் பண்ணிசைக் கச்சேரி, பஜனை எனப் பல தெய்வீக நிகழ்ச்சிகளை நிகழ்த்தி சைவத் தமிழ்ப் பாரம்பரியங்களைப் பாதுகாத்து வருகின்றது. அத்துடன் தண்ணீர்ப் பந்தல் பணி, அன்னதானப் பணி, என்பவற்றையும் சிறப்பாகச் செய்கின்றது. திருவிழாக் காலங்களில் யாழ் மாநகர சபையும் சுகாதாரப் பணி, அடியார் கூட்டங்களை ஒழுங்குப்படுத்தும் பணியுடன் பாடசாலை மாணவர்களுக்கான சைவசமய அறிவுப் பரீட்சை, மலர் வெளியிடல் போன்ற பல பணிகளைச் செய்து சிறப்பிக்கின்றன.

அத்துடன் துர்க்கா மணிமண்டபமும் திருவிழாக் காலங்களிலும் ஏனைய நாட்களிலும் சமய நிகழ்வுகள், குருபூசைகள், அரங்கேற்றம் போன்ற நிகழ்வுகளுடன் நல்லூர் மகோற்சவ காலங்களில் "இளங் கலைஞர் மன்றத்துடன்" இணைந்து சங்கீதக் கச்சேரிகள், இசை நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடாத்தியும் அன்னதானம் வழங்குதல் போன்ற பணிகளையும் செய்கின்றது. அத்துடன் ஊடகங்களும் நல்லூர்க் கந்தனின் திருவிழாக்களையும் ஏனைய சிறப்பு நிகழ்வுகளையும் நேரடியாகவும், செய்தியாகவும் ஒளிபரப்பி நல்லூர்க் கந்தன் மகிமையை உள் நாட்டவரும், வெளிநாட்டவரும் கண்டுகளித்து வணங்கிட உதவுகின்றன. அத்துடன் நல்லூரில் உள்ள வேறு பல மண்டபங்களும், சைவம், தமிழ், பாதுகாக்கப் பல நற்பணிகள் செய்கின்றன.

பொதுவாக "ஆலயங்களே இசையை, கலையை, சைவத்தை, தமிழை வளர்த்தன" என்பது ஆன்றோர் கருத்து. இக்கூற்றிற்கு அமைய நல்லூரில் உள்ள சமய மன்றங்கள், சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை, காரைநகர் சிவன் மணிவாசகர் சபை, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய சைவசமய மகளிர் இல்லம், வண்ணார்பண்ணை காமாட்சி (நாச்சிமார்) அம்மன் ஆலய பொதுப் பணி மன்றம், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் ஆலயத் தொண்டர் சபை, இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் சபை, கோண்டாவில் பிள்ளையார் கணேசா அறநெறிப் பாடசாலை போன்றன எல்லாம் இன்றைய கால கட்டத்தில் சைவம், கலைகள், தமிழ் என்பவற்றை வளர்க்கப் பல பணிகளை ஆக்குகின்றன.

# திருஞானசம்பந்தர் அருளால் கிடைக்கப்பெற்ற "கற்றவர் விளங்கும் கற்பகக்கனி"

கலாபூசணம் கே.எஸ்.ஆனந்தன்

திருஞானசம்பந்தர் முருகனுடைய அவதாரம் என ஆய்வாளர் கூறுகின்றனர். எந்த ஒரு நாயன்மார்களுக்கோ, அநுபூதிமான்களுக்கோ உமாதேவியின் திருமுலைப்பால் அருந்தும் பாக்கியம் கிடைக்காத நிலையில் தெய்வக் குழந்தையான சம்பந்தரே அம்மையின் அமுதப் பால் உண்டதால் அவர் முருகனுடைய அவதாரம் எனக் கூறுகின்றார். அது மட்டுமன்றி ஆண்டுக்கு ஒரு பாடலாகப் பாடிய தமிழ் மூவாயிரம் எனும் கற்பகக் கனியை திருவாவடுதுறை சிவன் கோவிலின் பலிபீடத்தினின்றும் வெளிக்கொணர்ந்தவர் சம்பந்தர். சிவனுடைய அருளாலே அவருக்கு இக்கைங்கரியம் கிடைத்திருக்கின்றது.

தேவாரத் திருமுறைகள் ராஜராஜசோழனால் மீட்கப் பெற்றபோது அவற்றில் பல செய்யுட் கடங்கிய சுவடிகள் செல்லரித்துப் போயிருந்த தாகக் கூறப்படுகின்றது. ஆனால் திருமூலர் பர முத்தியடைந்து ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்பு தெய்வக் குழந்தையான சம்பந்தரினால் எதுவித பழுதுமின்றி மீட்டெடுக்கப் பெற்றமை, சித்தர்கள் சிவனின் பரிபூரண அருளைப் பெற்றதினாலும் சிவனுடைய தெய்வக் குழந்தையான அவதாரக் குழந்தையின் அருளாலும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை என்றே கூறவேண்டும்.

திருமூலர் திருமந்திரத்தை அருளிச் செய்வதற்கு முன் பல நூல்களைப் பாடியருளியுள்ளாராயினும் இதற்கு எல்லாம் மூலனுடம்பிற்புகுந்த பின்னர் பாடிய திருமந்திரமே தலையாயதாகக் கருதப்படுகின்றது. ஏற்கனவே அகத்தியர் பன்னிரண்டு கண்டத்தில் இவரது நூல்களில் சில பட்டியலிடப்பட்டிருக்கின்றன. சைவத் திருமுறைகளில் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் சேக்கிழார் அடிகள் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக மேம்படுத்திக் கூறியுள்ளார். இவரைப்பற்றி திருத்தொண்டர் புராணம், திருவந்தாதி, சதுரகிரிதலபுராணம், போகர் என்ற சித்தரின் நூலிலும் கூறப்பட்டுள்ளன. இவர் ஆக்கியருளிய திருமந்திரத்தில்

**'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'**

என்று கூறிய திருமூலர் சித்தர்கள் என்றால் தத்துவத்தையும் ஆன்மீகத்தையும் சித்தர்களின் மூலம் ஆய்ந்து தெரிந்தவர்கள், அருவமும் உருவமாகித் திரிபவர்கள் என்ற கருத்தாடல்களை எல்லாம் தவறானவை என நிரூபித்து தமிழ் செய்யுமாறே என்று கூறி மொழி இல்லாமல் எவை மனித வாழ்க்கையை மேம்படுத்தும் என்று உணர்ந்து, வாழ்வியல் உண்மை நிலைகளையும் சைவசித்தாந்த நெறிமுறைகளையும் எடுத்துக் கூறியதுடன் ஞானம், யோகம் மட்டுமன்றி தமிழும் இணைந்ததால் தான் சித்தர்களின் தத்துவங்கள் செழுமை பெறும் என்ற சைவ சித்தாந்த தத்துவத்தை திருமந்திரம் மூலம் உலக மக்களுக்கு அறிவுறுத்தியவர்.

தமிழின் பெருமையும் இறைவனின் அருமையும் இரண்டறக் கலந்திருப்பதையும் முக்காலமும் உணர்ந்த அவரால் உணர முடியாதா?

**'பண்டுடன் பழகி பைந்தமிழ் உணர்ந்து**
**தென்தரை மீது தெளிந்தவர் சித்தரே'**

என்று சித்தர்களைப் பாராட்டுவதுடன் நில்லாது பொதிகை மேவு மகத்திரராலெனது போதத் தமிழ் வாக்கியம் என கேட்பவரைக் கிறங்க வைக்கும் தன் தமிழ் ஆற்றல், பொதிகையில் வாழும் அகத்தியர் கொடை என்றும் கூறுகின்றார்.

தமிழ் மூவாயிரம், மந்திரமாலை என வழங்கிய மூவாயிரம் பாடல்களையும் ஒன்பது தந்திரங்களாக ஆன்றோர் வகைப்படுத்தியதுடன் திருமந்திரம் எனவும் நாமம் சூட்டி உலகளாவிய மக்களுக்கு ஓர் கற்பகக் கனியாகத் தந்துள்ளார் திருமூலர். இத் திருமந்திரத்தைக் கற்றோர் பாராயணம் செய்தோர் பலராயினும் இதனை ஆக்கியருளிய திருமூலருடைய ரிஷிமூலம் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை என்றே கூற வேண்டும்.

பொதிகையில் அகத்தியர் தமிழ்ச் சங்கத்தில் உலக வாழ்வியல் நூல்களையும், இலக்கண இலக்கியங்களையும் கற்றார். அதன் பின்பு கயிலைக்குச் சென்று சில காலம் தவவாழ்க்கை மேற்கொண்ட பின்பு சிவனிடம் கொண்ட பக்தியினால் அவர் அருள் பெற்று நந்தீஸரிடம் கொண்ட பக்தியினால் அவர் அருள் பெற்று மாணவராகச் சேர்ந்தார். இவருடன் சனகர், சனந்தனர், சனக்குமாரர், பதஞ்சலி, வியாக்கிர பாதர், சிவயோக மாமுனிவர் ஆகியோருடன் நந்தியின் மாணாக்கராயிருந்து ஞான நூல்களான அருமறைகள், ஆகமங்கள் என்பவற்றைக் கற்றுக் கொண்டதுடன் நந்திதேவரின் திருவருளால் நாதன் என்னும் பட்டம் பெற்று சுந்தரநாதன் எனும் திருநாமம் பூண்டு பதஞ்சலியுடனும் வியாக்கிரபாதருடனும் பல சிவத்தலங்களையும் தரிசித்து தில்லைக்கு வந்தார். தில்லைப் பதியில் சிவனுடைய திருநடனம் கண்டார். அவருடன் பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் சேர்ந்தே சிவனுடைய திருக்கூத்தைக் கண்டு களித்தவர்களாவர். தில்லையில் சிலகாலம் தங்கியிருந்து சில நூல்கள் எழுதியதாக ஆய்வாளர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

தில்லையிலிருந்து பொதிகைமலை அகத்தியரை மீண்டும் காணவேண்டும் என்ற விருப்பம் மனதில் தோன்றியதும் பதஞ்சலியையும் வியாக்கிரபாதரையும் தில்லையில் தங்கச் செய்து தென்திசைநோக்கிப் புறப்பட்டார். வரும் வழிகளில் உள்ள சிவ ஆலயங்களைத் தரிசித்து இன்புற்றதுடன் ஆங்காங்கேயிருந்த சித்தர்களையும் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தார். ஈற்றில் திருவாவடுதுறையில் உள்ள சிவ ஆலயத்திலிருந்து ஈசனை வழிபட்டு அங்கிருந்து நீங்கமனமின்றி சிலகாலம் தங்கியிருந்தார். அங்கிருந்து புறப்பட்டு காவேரிக் கரையோரமாகச் சென்ற சமயம் ஒரு சோலையினருகில் பசுக்கூட்டம் கூடி நின்று கதறுவதைக் கண்ணுற்று அங்கே சென்று பார்த்தார். பசுக்கூட்டத்தின் நடுவே ஒருவன் விழுந்து கிடப்பதைக் கண்டார். சாத்தனூரில் உள்ள பசுக்களை மேய்க்கும் ஒருவனே என அறிந்து அவன்பால் மந்தைகள் கொண்டுள்ள பாசப்பிணைப்பை உணர்ந்து அப்பசுக்கூட்டத்திற்கு ஆறுதலளிக்க விரும்பினார். அவன் உயிர் பெற்று எழுந்தாலன்றி அவற்றின் துயரம் நீங்காது என உணர்ந்து தனது உடலை ஓர்மறைவிடத்து கிடத்தி விட்டு தாம் பயின்றுணர்ந்த பரகாயப் பிரவேசம் அல்லது கூடுவிட்டுக் கூடு பாய்தல் எனும் பவன வழியினாலே மூலன் உடம்பினுள் புகுந்து அவனுடலை எழச் செய்தார். அவன் எழுந்ததும் பசுக்கள் அவனை முகர்ந்து நக்கி மகிழ்ச்சியுடன் மேயத் தொடங்கின. மாலையானதும் சாத்தனூர் நோக்கிச்சென்ற பசுக்களை பின்தொடர்ந்து சென்று அவ்வூர் பெரியவர்களை அழைத்து நடந்தவற்றைக் கூறியதுடன் மூலன் மனைவிக்கும் ஆறுதல்

கூறியதுடன் தன்னுடல் தேடிச் சென்று பார்த்தார். சிவயோகியாருடைய உடல் காணாமல் போயிருந்தது. இறைவனுடைய திருவருளாலே தான் இப்படி எல்லாம் நடக்கின்றன என உணர்ந்தவர் மூலனுடம்புடன்தான் உலக மக்களுக்குரிய விடயங்களை விளங்க வைக்க வேண்டும் போலும் என எண்ணி அவ்வுடம்பினால் ஆவது ஒன்றுமில்லை என உணரப்பெற்றவராய் திருவாவடுதுறை ஈசனை வழிபட்டு வந்தார். அங்கே தன்னை தங்கவைக்க ஈசன் திருவுளம் கொண்டுள்ளார் என்ற மெய்யுணர்வு வரப் பெற்று திருவாவடுதுறை மேலை வீதியில் உள்ள ஓர் அரசமரத்தின் கீழ் மூலனுடம்புடன் தவத்தில் மூழ்கியவர் ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடியருளினார். அதுவே தமிழ் மூவாயிரம் என்ற திருமந்திரம்.

திருவாவடுதுறையில் அவருக்குக் கீழ் ஏழு சீடர்களிலிருந்து உபதேசம் பெற்றனர். அவர்களுள் காலங்கிநாதர், கஞ்சமலையான் முக்கிய மானவர்கள். அவருடைய கால நிகழ்வுகளில் நடைபெற்ற விடயங்கள் யாவும் அகச்சான்றுகளாக விளங்குவதைக் காணலாம்.

**'நந்தியருளாலே மூலனை நாடினேன்**
**நந்தியருளாலே மூலனை நாடிப்பின்**
**நந்தியருளாலே சதாசிவாயினேன்'**

என்று கூறும் திருமூலர், அவனருளாலே இரண்டாம் தடவை தென்நாடு சென்றதும், மூலனுடலில் புக நேர்ந்ததும் மூவாயிரம் செய்யுட்களை பாட நேர்ந்ததும் அவற்றை ஒன்பது ஆகமங்களாக - ஒன்பது தந்திரங்களாகப் பாடி தமிழ் மூவாயிரம் என்ற நாமம் சூட்டியதும் என பெருமிதத்துடன் கூறி அருளியுள்ளார்.

சதுரகிரி ஓர் அபூர்வ மலைப்பிரதேசம். இங்கே சித்தர்கள் அருவமாகவும் உருவமாகவும் உலா வருவார்கள். சிவனை முழுமுதற் கடவுளாகப் போற்றி வழிபடுபவர்கள் சித்தர்கள். இதனாலன்றோ சித்தன் போக்கு சிவன் போக்கு எனவும் முன்னோர் கூறிவைத்துள்ளனர். நான்கு வேதங்களும் ஓர் உருவமாக அமைந்ததே சதுரகிரி. இதன் விசேட தன்மை பற்றி நந்தீஸ்வரர் சிவயோகிமாருக்குக் (திருமூலருக்கு) கூறியருளியதாகவும் அங்கே அவர் உலாவியதாகவும் காலங்கியநாதர் என்ற சீடர் கூறியுள்ளார்.

திருமூலர் தமிழ் மூவாயிரத்தை நிறைவு செய்து தன் மாணாக்கர் ஏழுபேருக்கும் அவற்றை புகட்டி யாவையும் கூறியருளியதுடன் மடங்களை நிறுவி அவற்றின் மூலம் பதி, பசு, பாச இலக்கணங்களை புகட்டும்படி செய்து, தான் பரம முத்தி அடையும் முன்னர் தமிழ் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட சுவடிகளை திருவாவடுதுறை ஈசன் ஆலயத்தின் முன்னாலுள்ள பலிபீடத்தின் கீழ்ப் புதைத்ததாகவும் அதனை தெய்வீகக் குழந்தையான சம்பந்தர் ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின் சிவனுடைய ஆக்ஞையின் பால் வெளிக்கொணர நேர்ந்தது என்றும் ஆய்வாளர்கள் கூறிய நிலையில், இது கர்ணபரம்பரையாய் வந்த செய்தி எனவும் கூறுகின்றனர்.

**'மந்திரம் பெற்ற வழிமுறை மாலங்கள்**
**இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்**
**கந்துருக் காலங்கி கஞ்சமலை**
**யானோடு இந்த எழுவரும் என் வழியாமே'**

என்ற தமிழ் மூவாயிரம் (திருமந்திரம்) செய்யுளால் அறிய முடிகின்றது.

சிவயோகியாராயும், திருமூலராயும் இவர் வாழ்ந்த காலம் ஏறக்குறைய எண்ணாயிரம் ஆண்டுகளிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர் கயிலைக்கு முதற் தடவையும் இரண்டாம் தடவையும் சென்றதற்கும் இடைப்பட்டகாலம் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளிருக்கலாம் எனவும் கி.மு. ஆறாயிரம் முதல் கி.மு. நூறு வரை அதாவது ஏறக்குறைய ஐயாயிரத்து தொள்ளாயிரம் ஆண்டுகாலம் திருவாவடுதுறையில் நற்போதியின் கீழ் இருந்தார்

என்பதில் ஐயமில்லை எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர் பரமுத்தியடைந்து கி.மு. இருபத்தைந்து ஆண்டுகளின் பின்பு திருக்குறள் தந்த திருவள்ளுவர் தோன்றினார் என்பதும் அறியக்கிடக்கின்றது.

இராமாயணகாலம் தான் திருமூலர் காலம் என்றும் கூறுகின்றனர். இதற்கு பல்வேறு சான்று களை புராணங்களிலும் வரலாறுகளிலும் காணக்கூடியதாக இருக்கின்றது. தசரதராமரின் குலகுருவான வசிட்டரின் தங்கையை வவியாக் கிரமர் மணந்தார் என்பது திருமூலர் இராமாயண காலத்தில் இருந்துள்ளமைக்குச் சான்றாகும். கி.மு ஆறாயிரம் ஆண்டில் தசரதர், இராமர், இராவணன், பஞ்சவடி, அகத்தியர், கௌதமர், கௌசிகர், வாலி, சுக்கிரீவன், பாண்டிய வம்சா வழி வரலாற்றில் வரும் அனந்த குணபாண்டி யன் என்போர் சமகாலத்தில் திருமூலர் வாழ்ந்த போதிருந்தவர்கள். திருமூலர் போல இவர்களும் பலநூறு ஆண்டுகள் வாழ்ந்தவர்கள். சித்தர்கள் பலநூறு ஆண்டு காலம் வாழும் வன்மை படைத்தவர்கள். சித்தத்தை சிவனிடம் வைத்து சித்தி பெற்றவர்கள் தான் சித்தர்கள். இவர்கள் கண்ட முடிவே சித்தாந்தமாகும்.

1. **இருந்தேனிக் காயத்தில் எண்ணலிகோடி**
   **இருந்தேன் இராப்பகல் அற்ற விடத்தே**
   **இருந்தேன் இமயவர் ஏத்தும் பதத்தே**
   **இருந்தேன் எந்நந்தி இணையடிக் கீழே**

2. **செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்று**
   **அப்படி நல்கும் அருணந்தி தாள் பெற்றுத்**
   **தப்பிலா மன்றில் கனிக் கூத்து கண்டபின்**
   **ஒப்பில் எழுகோடி யுகமிருந்தனே**

திருமந்திரச் செய்யுள்களின் மூலம் அவர் பலநூறு ஆண்டுகள் வாழ்ந்ததற்குச் சான்றாக விளங்குவதைக் காணலாம்.

இன்றைய விஞ்ஞான உலகில் வாழும் நம்மவர்கள் இவற்றை நம்புவார்களா? விஞ் ஞானப் புத்தமைப்புக்களால் அறிந்து தெளிய முடியாத மர்மங்கள் இன்றைய பூவுலகில் பிர பஞ்சமாயமாக இருக்கும் போது, ஏன் இவற்றை நம்ப முடியாது? அறிவு ஜீவிகளுக்கு, விஞ்ஞான மேதைகளுக்குச் சவாலாக விளங்கும் பேர்முடா முக்கோணம் (Bermuda Triangle) பற்றிய செய்தி கள் நம்பத்தகுந்த காரணங்களாகத் தோன்ற வில்லையே. ஜப்பானைச் சேர்ந்த பயிற்சி பெற்ற விஞ்ஞானிகள் இது பற்றிய மர்மத்தைக் கண்டறி யப் புறப்பட்டனர். அவர்கள் சென்ற கப்பல் Kaiyo Maru-5 என்னவானது என்பது தெரியாமல் ஏங்கிப் போயுள்ளனர். மேலும் பல விஞ்ஞான விற்பன்னர்கள் கூறும் தியறியின்படி பேர்முடா முக்கோணத்தினுள் இருக்கும் மின்காந்த அலை களுக்குள் (Electro Magneatic Wave) அகப்பட் டோர் அழிந்திருக்க முடியாது. அவர்கள் கடந்த நூற்றாண்டுகளுக்குள் அல்லாது இனி வரவிருக் கும் நூற்றாண்டுகளுக்குச் சென்றிருக்கலாம் என்று முடிவு கூறியுள்ளதை பெரும்பாலான விஞ்ஞானிகள் ஏற்றுக் கொண்டுள்ள போதும் இதன் மர்மம் அறிய முடியாத புதிர் நிறைந்த தாகவே உள்ளது. இப்பிரபஞ்சத்தில் திருமூலரின் வரலாறும் இறையருள் அதாவது முழுமுதற் கடவுளாக விளங்கும் அவன் (சிவன்) அன்றி ஓர் அணுவும் அசைய முடியாது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது.

**'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'.**

சித்தர்கள் சிவன்பால் வைத்த மாசுமறுவற்ற அன்பே அவர்களை அருவமாகவும் உருவ் மாகவும் வாழ வைத்து அவர்கள் கடந்த நூற் றாண்டுகளுக்குள்ளும் வரப்போகும் நூற்றாண்டு களுக்கும் எண்ணற்ற காலம் வாழ்ந்து மனுக்

குலத்துக்கு நன்றே செய்துள்ளார்கள். சிவாகமத்தின் தத்துவமே இதுதான். இதனை விஞ்ஞானம் கண்டறிய முடியுமோ? முடியாதோ? மெய்ஞானியான திருமூலர் அருளிய கற்பகக் கனியாம் இத்திருமந்திரம் கற்றோரும் மற்றோரும் படித்தின்புறுவதன் மூலம் வாழ்வில் மேன்மை அடையலாம் என அனுபவித்தவர்கள் கூறும் இரகசியமாகும். திருமந்திரம் மக்களை நல்வழிப்படுத்துவது மட்டுமன்றி நல்வாழ்வு அருளுவதுமாகும் என ஆன்றோர் கூறுகின்றனர்.

திருவாவடுதுறையிலிருந்தே திருமந்திரம் வரவேண்டும் என்பது இறைவனுடைய திருவுள்ளம் போலும். நற்குடிகள் வாழந்த சாத்தனூரில் மூலன் எனும் ஆநிரை மேய்ப்பவனின் குரம்பையிலிருந்து தான் திருமந்திரத்தை அருளி மக்களுக்கு வழங்க வேண்டும் என்பது இறைவனது விருப்பமாயிருந்ததாலேயே சிவயோகிகள் உடலை மறையச் செய்து திருவிளையாடலைப் புரிந்த சிவன், திருமந்திரம் நிறைவு பெற்றதும் அப்பணி முடிந்த நிலையில் திருமூலனை பரமுக்தி நிலையடையச் செய்துள்ளார். பாண்டிய மன்னனின் ஆணைப்படி கருவூரர் திருமூலர் சமாதியை மூலராகக் கொண்டே சிதம்பரத்தில் கோயில் கட்டினார் எனக் கூறுகின்றார். போகர் தனது நூலில் திருமூலர் மேலைச்சிதம்பரத்தில் சமாதியை எய்தியதாகக் கூறுகின்றார்.

திருமூலனுடைய உடல் சமாதிநிலையடைந்ததும் அவ்வுடலை நீத்த சிவயோகியார் கயிலை சென்று சிவனுடன் ஐக்கியமானார் என்று ஒரு சாரார் கூறுவர். திருத்தொண்டர் திருவந்தாதியில்

**'குடிமன்னு சாந்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைக்கு**
**முடிமன்னு கூறை பிறையாளன் தன்னை முழுதமிழின்**
**படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டென்னுச்சி**
**அடிமன்னு வைத்த பிரான் மூலனாகிய அங்காளனே**

என கூறப்பட்டிருப்பதும்

**நந்தியருளாலே மூல நாடிப்பின்**
**நந்தியருளாலே சதாசிவனாயினேன்'**

என்ற திருமந்திரத்தாலும் இறைவன் சிவயோக உருவில் வந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றதல்லவா? இறைவனுடைய திருவிளையாடல்கள் எப்படி, எங்கே, நடைபெறும் என்று யார் அறிவார்? முக்காலமும் உணர்ந்தவர்கள் சித்தர்கள். தனக்குப் பின்பு நடக்கப் போவதையும் திருமந்திரத்தில் திருமூலர் கூறியிருப்பதையும் காணமுடிகின்றமை, தான் அறிந்த இரகசியங்களை - உண்மைகளை உலகத்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டே சிவயோகியார் மூலம், மூலனை அடையச் செய்து சைவ ஆகம தத்துவங்களை திருமந்திரம் மூலம் உலகறிய வைத்த அருளாளனாகிய சிவனுடைய திருவிளையாடல்களை யார் அறிய முடியும்.

**'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்**
**வான் பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான் பற்றப் பற்றத் தலைப்படும் தானே'**

திருமந்திரம்.

## சூரியபகவான் பிரதிஷ்டை

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் **22.07.2012** ஞாயிறு காலை 7.00 மணியளவில் **சூரியபகவான்** எழுந்தருளி விக்கிரகம் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

- பதிப்பாசிரியர்

# திருவாசகத்தில் மலர்கள்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பக்தி இலக்கியங்களில் திருவாசகம் எல்லோராலும் விதந்து பேசப்படுவது. மேலைத் தேசத்தவராலும் படிக்கப்பட்டுப் புகழப்பட்டது. தமிழ் மொழியைக் கற்ற மேலைத்தேச, சமய குருவான ஜி.யு.போப் திருவாசகப் பாடல்களைப் படித்தவர். அப்பாடல்களை எலும்பையும் நெக்குருக்கும் பாடல்களெனப் புகழ்ந்துள்ளார். வேற்று மதத்தவரையே கவர்ந்த திருவாசகம் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது. மணிவாசகர் பாடிய சிவபுராணம், கீர்த்தித் திருவகல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகல், திருச்சதகம், நீத்தல் – விண்ணப்பம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்னும் பாடல்களின் தொகுப்பே திருவாசகமாகும். இவற்றுள் சிவபுராணம், கீர்த்தித்திருவகல், திருவண்டப் பகுதி, போற்றி திருவகல் என்பன நெடும்பாடல் வடிவிலமைந்தவையாகும். ஏனையவை தனிப் பாடல்களின் தொகுப்பாக அமைந்தவையாகும். இப்பாடல்களில் மணிவாசகருடைய பக்தியனுபவமும் வாழ்வியலும் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர் தன்னுடைய இறையனுபவத்தைப் பற்றிப் பாடும் போது மலர்கள் பற்றிய பல குறிப்புக்களைத் தந்துள்ளார். அவற்றை வகுத்தும் தொகுத்தும் நோக்குவதே இக்கட்டுரையின் பணியாகும். அதன் மூலம் அக்காலத்தில் மலர்களின் பயன்பாடு எவ்வாறிருந்தது என்பதை வெளிக்கொணர முடியும்.

இன்று தமிழர் வாழ்வியலில் நீண்டகாலமாகப் பெரிதும் பேணப்பட்டு வந்த மலர்ப்பண்பாடு மக்கள் வாழ்வியலிலிருந்து வழுவிச் சென்று கொண்டிருக்கிறது. நாளாந்த வாழ்வியல் நடைமுறைகளில் மலர்களின் பயன்பாடு மாற்றம் பெற்றுள்ளது. இயற்கை மலர்களை விடுவித்துச் செயற்கை மலர்களைப் பயன்படுத்தும் நடைமுறை செல்வாக்குப் பெற்று வருகிறது. இதற்கு எமது வணிகமும் பெருந்துணையாக நிற்கிறது. நம்முன்னோர் பேணி வளர்த்த மலர்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நான்கு வகைகளாகும். பழந்தமிழிலக்கியங்கள் இவற்றைப் பாடல்களிலே பதிவு செய்துள்ளன. பின்னர் தோன்றிய பக்தி இலக்கியங்களிலும் இவை பற்றிய பயன்பாடு சிறப்பாகவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அச் செய்திகளை இன்று தமிழர் அறிய வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறையினர்க்கு இச்செய்திகள் எடுத்துரைக்கப்பட வேண்டியவை. தமிழரது வீட்டு வாழ்க்கையில் இடம் பிடித்துள்ள புதிய செயற்கை மலர்கள் புறந்தள்ளப்பட வேண்டும். திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளிலும் செயற்கை மலர்ப்பயன்பாடு நுழைந்து விட்டது. எனவே முன்னைய மலர்ப்பண்பாட்டு நடைமுறைகளை மீளவும் நினைவுபடுத்தினால் இந்நிலையில் மாற்றத்தைக் கொணரமுடியும். மணிவாசகர் பாடல்களில், வழிபாட்டு நிலையில், மலர்ப்பயன்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையை இக்கட்டுரை விளக்கமாகத் தரவுள்ளது. முதலில்

மணிவாசகர் பாடிய திருச்சதகப் பாடல்களில் மலர்கள் பற்றி வந்துள்ள செய்திகள் வகுத்தும் தொகுத்தும் அட்டவணைகளாகத் தரப்படுகின்றன.

| திருவாசத்தில் மலர்ப்பயன்பாடு பற்றிய குறிப்புகள் | | | | |
|---|---|---|---|---|
| 1. | சிவபுராணம் | நெடும்பாடல் | 95அடி | 1 குறிப்பு |
| 2. | திருவண்டப்பகுதி | நெடும்பாடல் | 182 அடி | 3 குறிப்பு |
| 3. | போற்றித் திருவகல் | நெடும்பாட்டு | 225 அடி | 4 குறிப்பு |
| 4. | திருச்சதகம் | தனிப்பாடல்கள் | 100 | 24 குறிப்பு |
| 5. | நீத்தல் விண்ணப்பம் | தனிப்பாடல்கள் | 50 | 8 குறிப்பு |
| 6. | திருப்பள்ளியெழுச்சி | தனிப்பாடல்கள் | 10 | 5 குறிப்பு |
| 7. | திருவெம்பாவை | தனிப்பாடல்கள் | 20 | 10 குறிப்பு |

| திருவாசகத்தில் மலர்வகைகள் | | | |
|---|---|---|---|
| 1. | கழுநீர் | போற்றித்திருவகல் | அடி – 217 |
| 2. | காந்தள் | திருவண்டப்பகுதி | அடி – 75 |
| 3. | குரவம் | திருச்சதகம் | பாடல் – 17 |
| 4. | குவளை | திருவெம்பாவை | பாடல் – 13 |
| 5. | கொன்றை | திருச்சதகம் | பாடல் – 46 |
| 6. | தாமரை | திருச்சதகம் | பாடல் – 26 |
| 7. | மந்தாரம் | நீத்தல் விண்ணப்பம் | பாடல் – 47 |

**திருவாசகத்தில் மலர்ப்பயன்பாடு பற்றிய குறிப்புகள்**

அட்டவணையிலே காட்டப்பட்டது போலத் திருவாசகத்திலே கீர்த்தித் திருவகல் தவிர்ந்த ஏனைய பாடல்களில் மலர்ப்பயன்பாடு பற்றிய பல குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. மணிவாசகர் தன்னுடைய பக்திவாழ்வியல் பற்றிப்பாடும் போது வழிபாட்டு நிலையில் மலர்கள் பயன்பட்ட வாற்றையே குறிப்பிட்டுள்ளார். எனவே கோயிற் சூழலில் உள்ள மலர்வகைகளே அவரது பாடல்களில் இடம் பெற்றுள்ளன. கீர்த்தித் திருவகலில் ஏறக்குறைய 30க்கு மேற்பட்ட திருத்தலங்களைப் பற்றிக் குறிப்பிடும் மணிவாசகர் அங்குள்ள மலர்ப் பயன்பாடு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

மணிவாசகர் மலர்பற்றிய செய்திகளை ஆறு வகையான நிலைகளிலே குறிப்பிட்டுள்ளார்.

1. இறைவன் திருக்கோலநிலை
2. வழிபாட்டு நடைமுறைநிலை
3. இயற்கைச் சூழல்நிலை
4. உவமை உருவகநிலை
5. புனைவு நிலை
6. பிறநிலை

பின்வரும் அட்டவணை இதனை ஒரு நோக்கில் காண உதவும்.

| | பாடல்கள் | நிலைகள் | செய்தி |
|---|---|---|---|
| 1. | சிவபுராணம் | இறைவன் | 1 |
| 2. | திருவண்டப்பகுதி | வழிபாடு, உவமை, உருவகம் | 3 |
| 3. | போற்றித்திருவகல் | இறைவன், இயற்கை | 3 |
| 4. | திருச்சதகம் | வழிபாடு, இறைவன், பிற | 24 |
| 5. | நீத்தல் விண்ணப்பம் | இறைவன், இயற்கை, வழிபாடு, விடைபுனைவு | 8 |
| 6. | திருப்பள்ளியெழுச்சி | வழிபாடு, இயற்கை, இறைவன் | 5 |
| 7. | திருவெம்பாவை | வழிபாடு, இயற்கை, இறைவன் | 10 |

**இறைவன் திருக்கோலநிலை**

இறைவனுடைய திருக்கோலத்தைப் பாடும் மணிவாசகர் சிவபுராணம் என்னும் நெடும் பாடலில் மலர்பற்றி ஒரு குறிப்பை மட்டுமே தந்துள்ளார்.

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே (62) இங்கு இறைவனுடைய கோலத்தைப் பாடும் போது களங்கம் இல்லாத ஒளிவிரிந்த மலரின் ஒளி போன்றவனே! என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு மலரின் ஒளியைத் தனித்துவப்படுத்தியுள்ளார். உலகத்து ஏனைய ஒளிகளிலிருந்து வேறுபட்ட ஒளியாகக் காட்டியுள்ளார். மலர்ச்சுடர் என அந்த ஒளிக்குப் பெயரிட்டுள்ளார்கள்.

போற்றித்திருவகல் என்னும் நெடும்பாடலில் இறைவன் திருக்கோலம் அழகு நிலையில் மலருடன் தொடர்புபடுத்தப்படுள்ளது.

**தாளியறுகின் தாராய்போற்றி** (201)
**கழநீர் மாலைக் கடவுள் போற்றி** (217)

தாளையுடைய அறுகினால் செய்யப்பட்ட நீண்ட மாலை இறைவனுக்கு சாத்தப்பட்ட செய்தி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அறுகும் மலர் போல இறைவனுக்குரியதாக இருந்துள்ளது. இன்னும் கழநீர்ப்பூவினால் ஆக்கப்பட்ட மாலை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். போற்றி என்ற சொல் வணக்கம் எனப் பொருள் தரும். கடவுளின் திருக்கோலத்தை வணங்கும் போது மாலை எமது கண்ணில் படும். அந்த மாலை என்ன பூவினால் புனையப்பட்டது என அறிய ஆர்வம் உண்டாகும். அக்கோல அழகைக்காண வேண்டும் என விரும்பும் அடியாரையும் மணிவாசகர் இனம் காணமுனைகிறார்.

திருச்சதகத்தில் இறைவன் கோலம்பற்றி 15 குறிப்புகள் உண்டு. அத்துடன் இறைவியின் ஒரு திருக்கோலத்தையும் பதிவு செய்துள்ளார்.

**வருந்துவன் நின் மலர்ப்பாத மவை காண்பான்** (13:1)
**மலர்க் கழல்கள் அவைகாட்டி** (25:3)
**விரை மலர்த் திருப்பாதம்** (34:1)
**முனைவன் பாதநன்மலர்** (37:3)
**ஒன் மலர்த்தாள் தந்து** (39:1)
**வந்தெதிர் தாமரைத் தாளுறும் கூற்றமன்ன** (45:3)
**சிறுநாயேன் செம்பொற் பாதமலர் காணா** (52:1)

மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக்கண்டும் (52:3)
நின் மலர் கொள்தாளினை (91:1)
மலர்க்கமல பாதனே (93:2)

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளில் இறைவன் திருப்பாதங்களை மலர் போன்ற பாதங்கள் என வர்ணித்துள்ளார். இங்கு பாதம், கழல், தாள், என மூன்று சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். பாதம் என்பது திருவடியைக் குறிக்கும் வடசொல்லாகும் "தாள்" என்பது இறைவனின் நின்ற கோலத்தில் நாம் காணும் திருவடியின் மேற்பாகம் தாமரை மலர் போலத் தோன்றும் அழகிய காட்சி, செந்தாமரை மலர்போன்ற பாதத்திலே மலர்கள் தூவப்பட்டிருப்பதால், நறுமணம் நிறைந்திருக்கும். "கழல்' என்பது வீரக்கழல் அணியும் இடத்தைக் குறிக்கிறது. அதுவும் தாமரை மலரின் வண்ணத்திலேயே காட்சி தருகிறது. இறைவனுடைய திருவடியை மணிவாசகர் நேரிலே கண்டவர். அதன் தொடுகையை உணர்ந்தவர். அதனால் அதைப்பிறரும் நன்கறிந்த மலர்களால் உணரவைத்துள்ளார்.

இறைவனுடைய திருமேனியழகு பற்றிப்பாடும் போது மலர்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**தந்தனை செந்தாமரைக் காடனையமேனி (26:4)**
**செச்சை மாமலர் புரையும் மேனி (29:4)**

காடுபோல அடர்த்தியாகப் பூத்திருக்கும் செந்தாமரை மலர்கள் போன்ற அழகும் செம்மையும் மென்மையும் கொண்ட இறைவன் திருமேனியைக் காட்டுகிறார். "செச்சை" என்பது வெட்சி மலராகும். இது கொத்தாக மலரும் செந்நிற மலராகும். வெட்சியின் சிவந்த மலரையொத்த திருமேனியை யுடைய இறைவன் என்று அவர் குறிப்பிடுவதன் மூலம் எம்மையும் அத்திருமேனியழகை உணர வைக்கிறார்.

இன்னும் இறைவனுடைய திருக்கழத்திலே அணியப்பட்ட மாலை பற்றிய குறிப்பும் வருமாறு காணப்படுகிறது.

**மதுகரமுரலுந் தாரோய் (16:3)**
**கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான் (46:2)**

இங்கு இறைவன் சிறப்பாக அணியும் கொன்றை மலர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. "மதுகரம்" என்பது வண்டு. அதன் ஒலிப்பை முரல்தல் எனக்குறிப்பிடுவர். அன்றவர்ந்த கொன்றை மலர்களிலே தேனை நாடிவரும் வண்டுகள் ஒலிக்கும். அதனால் தேனும் வண்டும் நீங்காத கொன்றை மலர்களால் ஆக்கப்பட்ட அழகிய நீண்ட மாலையை அணிந்திருக்கும் இறைவன் திருக்கோலத்தை எமக்குக் காட்டுகிறார். கொன்றை மலர் சிறப்பாகச் சிவன் அணியும் மலராகும். இறைவன் திருக்கோல அழகைப்பாடும் போது மாலையின் அமைப்பையும் "தார்" என்ற சொல்லின் மூலம் விளக்கியுள்ளார். "தார்" என்பது நீண்ட மாலை எனப் பொருள் தரும்.

நீத்தல் விண்ணப்பத்தில் இறைவன் திருக்கோலம் பற்றிய பின்வரும் குறிப்புகள் உண்டு.

**வெறிவாயறுகால் உழகின்ற பூமுடி**
**உத்தரகோச மங்கைக்கரசே (5:3)**
**பொன்னின் மின்னு கொன்றை**

அலங்கல் தாமரை மேனி (29:3)
கொத்துறு போது மிலைந்து குடர் நெடுமாலை சுற்றி (30:3)
தாரகை போலும் தலைத்தலைமாலை (48:1)

இறைவனுடைய திருமுடியிலே தேனையுண்ணும் வண்டுகள் கிண்டுகின்ற கொன்றை மலர் மாலை காணப்படுகின்றது. திருவுத்தர கோசமங்கையிலே மணிவாசகர் கண்டு மகிழ்ந்த திருக்கோலம் அது. அத்துடன் பொன்போல் ஒளிவீசுகின்ற கொன்றை மலர்மாலை அணிந்திருந்த திருக்கோலம் "அலங்கல் என்பது நீண்ட, அசைந்தாடும் மாலையாகும்" அந்த மாலை அசையும் போது இறைவனுடைய அழகிய செந்தாமரை போன்ற திருமேனியைக் கண்டு மகிழலாம். இன்னும் கொத்தாக மலரும் கொன்றை மாலையால் அமைந்த மாலை கழுத்திலே அணிய, அது மார்பிலே தொங்கும் போது கூர் போல நீண்டதாயிருக்கிறது. விண்மீன்கள் போல ஒளிவீசுகின்ற வெண் மண்டையோடுகளையும் மாலையாகக் கோத்து அணிந்திருக்கும் கோலம் இறைவனுடைய வரம்பிலா ஆற்றலைக் காட்டி நிற்கிறது.

திருவடிக்கோலம் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**உன் மணி மலர்த்தாள்** (11:1)
**நின்விரை மலர்த்தாள்** (33:2)

மணிபோல ஒளிவீசும் அழகிய மலர்போன்ற தாளையும் நறுமணம் பொருந்திய மலர்போன்ற அழகிய தாளையும் மணிவாசகர் இங்கே காட்டியுள்ளார்.

திருப்பள்ளியெழுச்சியிலே நயனக்கடிமலர் மலர என ஒரு குறிப்பு மட்டுமே வந்துள்ளது. இறைவனுடைய திருநயனங்கள் மலர் போல மலர்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

திருவெம்பாவையிலே இறைவன் திருவடி பற்றிய குறிப்புகள் வருமாறு அமைந்துள்ளன.

**கூசும் மலர்ப்பாதம்** (2:5)
**பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்**
**போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே** (10:1)
**செங்கமலப் பொற்பாதம்** (17:5)
**போற்றியருளுக நின் ஆதியாம் பாதமலர்** (20:1)

காணக் கண் கூசும் ஒளி பொருந்த இறைவனுடைய திருப்பாதம் மணிவாசகர் மனதை விட்டு என்றும் அகலாதது. செந்தாமரை போன்ற பொற்பாதம் என அவர் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. அவர் வெறும் மலர் போன்ற அழகிய பாதமாக அதைக் காணவில்லை. உலகிலேயுள்ள எல்லாவற்றிற்கும் ஆதியாகவே அப்பாதங்களைக் கருதினார். நேரிலே தான் கண்ட அப்பாதங்களைப் பிறர், ஓரளவுக்கேனும் உணரும் வகையில் மலர்களோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். அண்ணா மலையான் அடிக்கமலம் சென்று காண தேவர்களே இறைஞ்சி நிற்கிறார்கள். எனவே மானிடர்களும் இறைவன் அடிகளையும் திருக்கோலத்தையும் மனதிலே கொள்ள மலர்களோடு இணைத்து திருவடியையும் திருக்கோலத்தையும் காட்டியுள்ளார்.

**வழிபாட்டு நடை முறை நிலை**

நமது வழிபாட்டில் இன்றும் மலர்கள் வேண்டப்படுகின்றன. மணிவாசகர் தான் வாழ்ந்த காலத்து வழிபாட்டு நடைமுறைகளில் மலர்கள் பயன்பட்டவாற்றைத் தன் கூற்று நிலையிலே பாடல்களில் பதிவு செய்துள்ளார். சிவபுராணம் சிவனது அநாதி முறைமையான பழமை பற்றிப் பாடப்பட்டதால் அதில் மணிவாசகர் வழிபாட்டு நடைமுறை பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. திருவண்டப்பகுதியில் ஒரு குறிப்பு மட்டுமே மலர் தொடர்பாக அமைந்துள்ளது.

**பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட** (75)

திருப்பெருந்துறையிலே இறைவன் குரு வடிவாகத் தோன்றிய போது அடியார்கள் தமது பூப்போன்ற கைகளைக் கூப்பித் தொழுது நிற்றலின் அதைக் கண்ட மணிவாசகருக்குப் பாடலிலே நினைவு கூரத் தோன்றியுள்ளது. வழிபாடு செய்யும் அடியார்களுடைய கைகள் கார்காலத்து மலரும் காந்தட் பூக்களை ஒத்திருந்தன. காந்தள் மலரைப் பொதுவாகப் பெண்களுடைய கைகளுக்கே உவமையாகக் கூறும் இலக்கியமரபே வழக்காயிருந்தது. மணிவாசகர் வழிபாடு செய்யும் அடியார்களுடைய கைகளின் மென்மைத் தன்மையையும் கண்டு காந்தள்மலர் போன்றிருந்தன. எனக் குறிப்பிட்டுள்ளார்.

போற்றித்திருவகல் என்னும் பகுதியில் அடியார்கள் வழிபடும் நிலையை மணிவாசகர் மலருடன் தொடர்புபடுத்தி வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

**கரமலர் மொட்டித் திருதய மலரக்**
**கண்களி கூர நுண்டுளி யரும்பச்**
**சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்** (84 – 86)

மெய்யடியார்கள் தங்கள் மலர் போன்ற கரங்களைக் குவித்து உள்ளத்தாமரையாகிய நெஞ்சம் விரிய, கண்கள் களிப்புற்று கண்களில் இருந்து ஆனந்தத் துளிகள் தோன்ற தமது அழியாத அன்பை வழிபாட்டின் மூலம் நாள் தோறும் தொடர்ந்து தழைக்கச் செய்து கொண்டிருக்கிறார்கள். இறையன்பு நீடிக்க இடைவிடாத வழிபாடு தேவை.

திருச்சதகத்தில் மணிவாசகர் தனது வழிபாட்டுச் செயற்பாடுகளில் மலர்கள் பெற்றிருந்த இடத்தைப் பதிவு செய்துள்ளார். அவை வருமாறு

**தன்மலரிட்டு முட்டாதிறைஞ்சேன்** (5:1)
**பரந்து பல்லாய் மலரிட்டு முட்டாதடியேயிறைஞ்சி** (6:1)
**செழுமலர் கொண்டெங்கும் தேட** (7:2)
**இருந்து நலமலர் புனையேன்** (13:2)
**பூமாலை புனைந்தேத்தேன்** (14:1)
**பெய்கழற் கீழ் விரையார்ந்த மலர்தூவேன்** (18:3)
**வந்தனையும் அம்மலர்க்கேயாக்கி** (26:2)
**பாதமலர் சூடுகின்றிலை சூட்டுகின்றது மிலை** (31:3)

குளிர்ந்த மலர்களை அதிலும் அன்றலர்ந்த மலர்களை இறைவனது திருவடிகளிலே இட்டு வணங்கவில்லையே என மணிவாசகர் வருந்துகிறார். முட்டாதிறைஞ்சேன் என்று குறிப்பிடுவது குறைவற வணங்கவில்லை என்பதைக் குறித்து நிற்கிறது. இறைஞ்சுதல் என்பது மலர்தூவி இறைவன் திருவடிகளை இடைவிடாது வழிபடுதலாகும். இன்னும் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, என்னும் நான்குவகையான பூக்களையும் ஆராய்ந்து எடுத்து வழிபடும் முறைமையினையும் இங்கே பதிவு செய்துள்ளார். "ஆய்மலர்" என்ற தொடர் மலர்கள் தெரிவு செய்யப்படுவதை உணர்த்துகிறது. முன்னரே எடுத்து வைத்து அலர்ந்த பூவும் தானே விழுந்து கிடந்த பூவும் பழையபூவும் உதிர்ந்தபூவும் அரும்பும் இரவில் எடுத்த பூவும் கைசீலை, எருக்கிலை, ஆமணக்கிலை என்பவற்றிற் கொணர்ந்த பூவுமல்லாமல், உரிய காலத்தில் உரிய முறைப்படி புழக்கடி, எச்சந்தாங்கல், சிலந்தி கூடுகட்டல், மயிர்சுற்றல் முதலிய குற்றங்கள் இல்லாதனவாக ஆராய்ந்து எடுத்த மலர்களையே திருவடி இறைஞ்சுதற்கு ஏற்றவை என மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய வழிபாட்டினைத் தானும் செய்யவில்லையே என வருந்துகிறார். அதனை நலமலர் புனையேன் என்ற தொடரால் விளக்கமாகக் கூறியுள்ளார். பூவினால் மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவித்து வழிபடும் செயற்பாட்டையும் அவர் செய்யவில்லை. திருவடிகளிலே நறுமனமலர்களைத் தூவி வழிபடவும் இல்லை. வழிபாட்டை இறைவன் திருவடிக்கே செய்ய வேண்டும். இறைவன் திருவடியைத் தலையிலே சூடி வழிபட வேண்டும். முன்னொரு காலத்தில் பிரமன் செழித்த தாமரை மலரைக் கொண்டு இறைவனைத் தேடிய செய்தியையும் மணிவாசகர் பாடலிலே பதிவு செய்துள்ளார்.

நீத்தல் விண்ணப்பத்தில் மலர்கள் வழிபாட்டு நிலையில் பயன்பட்டமை பற்றிய குறிப்பு எதுவும் இடம் பெறவில்லை. திருப்பள்ளியெழுச்சியில் இரண்டு குறிப்புகள் உள்ளன.

**பூங்கழற்கிணை துணை மலர் கொண்டு ஏற்றி** (1:1)
**துன்னிய பினை மலர்க் கையினர் ஒருபால்** (4:2)

இறைவனுடைய அழகிய திருவடியிலே பொருத்தமான மலர்களைக் கொண்டு வழிபாடு செய்யவேண்டும். இன்னும் திருக்கோயிலிலே மலர்களை எடுத்துச் சென்று விரைவாக மாலை தொடுத்துக் கொடுப்போரும் உளர். திருவெம்பாவையில் வழிபாட்டிற்குப் பயன்படும் மலர்கள் பற்றிய ஒரு செய்தி மட்டுமேயுள்ளது.

**பைங்குவளைக் கார் மலராற் செங்கமலப் பைம்போதால் (13:1)**

அன்றலர்ந்த கருங்குவளை மலர்களும் செந்தாமரையினுடைய செழுமையான காலை மலரும் மலர்களும் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

**இயற்கைச் சூழல் நிலை**

இயற்கைச் சூழல் நிலையில் மலர்கள் பற்றிய குறிப்பு சிவபுராணத்திலும் திருவண்டப் பகுதியிலும் இடம் பெறவில்லை. போற்றித்திருவகலில் ஒரு குறிப்பு இடம் பெற்றுள்ளது.

**செழுமலர்ச் சிவபுரத்தரசே** (216)

செழுமையான பூக்கள் நிறைந்த சிவபுரம் என இயற்கைச் சூழல் விளக்கப்பட்டுள்ளது. இத்தலம் சோழநாட்டில் காவிரிக்கரையில் உள்ளதென ஞானசம்பந்தருடைய தேவாரத்தால் (112: 1, 10) அறியமுடிகிறது.

திருச்சதகத்தில் இயற்கைச் சூழல் நிலையில் மலர் பற்றி மணிவாசகர் எதுவும் குறிப்பிடவில்லை. திருப்பள்ளியெழுச்சியிலே இரு குறிப்புகள் உள்ளன.

**'சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண்வயல்'** (3:1)
**'செப்புறு கமலங்கள் மலருந் தண்வயல்'** (6:3)

இவ்விரு குறிப்புகளும் தாமரை மலர் பற்றியதாயுள்ளன. மிகவும் அளவான குளிர்மை கொண்ட சேற்றையுடைய வயலிலே செப்புப் போன்ற தாமரை மலர்கள் மலர்ந்துள்ளன. இங்கே "வயல்" என்பது நிறைய மலர்கள் மலர்ந்திருக்கும் பரந்த இடத்தைக் குறித்து நிற்கிறது.

நீத்தல் விண்ணப்பத்திலும் இயற்கைச் சூழல் நிலையில் மலர் பற்றிய செய்தி ஒரேயொரு பாடலில் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

**'மந்தாரம் மந்தாகினி நுந்த'** (47:3)

இறைவன் தலையிலே சூடுகின்ற மந்தாரமலர்களைக் கொண்டமைந்த மாலையைக் கங்கை யாற்றின் நீர் அலைக்கும் செய்தி இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளது. "மந்தாரம்" என்பது ஆகுபெயராக இறைவன் திருமுடியிலுள்ள மந்தார மலர்களால் புனையப்பட்ட மாலையைக் குறித்தது. மந்தாகினி யென்பது கங்கையின் நீராகும்.

திருவெம்பாவையிலும் இரு குறிப்புகளே உள்ளன.

**'பூத்திகழும் பொய்கை'** (12:7)
**'பங்கயப் பூம்புனல்'** (13:8)

இங்கு பெண்கள் நீராடுகின்ற பொய்கை பூக்களால் பொலிவுற்றதென்பதும் தாமரை மலர்கள் நிறைந்த புனல் என்பதும் கூறப்பட்டுள்ளது. பூ என்ற சொல் தாமரை தவிர்ந்த பிற நீர்ப்பூவைக் குறித்து நிற்கிறது. ஆனால் பங்கஜம் என்ற சொல் தாமரையையே குறிக்கின்றது. "பொய்கை" என்பது மழைநீரால் நிறைந்த நிலையாக நீர் நிற்கும் இடமாகும். புனல் என்பது பாய்ந்து வரும் நீரைக் குறிப்பதாகும்.

**உவமை உருவகநிலை**

மலர்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிடும் போது மணிவாசகர் உருவக நிலையிலும் விளக்கிக் கூறியுள்ளார்.

**'உருவ அருள்நீர் ஓட்டி அருவரைச்**
**சந்தின் வான்சிறை கட்டி மட்டு அவிழ்**
**வெறி மலர்க்குளவாய் கோலி நிறையகில்**
**மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்**
**மீக்கொள மேல்மேல் மகிழ்தலின் நோக்கி**

அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டு
தொண்டர் உழவர் ஆரத்தந்த
அண்டத்து அரும் பெறல் மேகன் வாழ்க'

(திருவண்டப்பகுதி : 88 – 95)

அழகிய அருளாகிய நீரைச் செறியப் பாய்ச்சி அரிய நீண்டமலை போலும் நிலையிலே திரியாத அடியார்களின் உள்ளமாகிய பெரிய சந்தனமரங்களால் பெரிய அணையைக் கட்டி தேன் வடிகின்ற நறுமணத்தையுடைய இதய கமலமாகிய குளத்திற்கு நீர்பாயும் வழியினை அமைத்து நிறையாகிய அகிலின் பெரிய புகையாகிய வண்டுகளையுடைய கரையமைந்த இதய கமலமாகிய குளத்தில் அருள் வெள்ளமானது மேற்கொண்டு வர மேலும் மேலும் மகிழ்ச்சியுண்டாதலால் அதனை உற்றுப் பார்த்து வழிபாடாகிய வயலிடத்துப் பாய்ச்சி அன்பாகிய வித்தினை விதைத்து விளைத்த தொண்டர்களாகிய உழவர்கள் சிவபோகமாகிய விளைவினை நுகருமாறு தந்தருளிய அருள்வெளியின் கண் உள்ள – பெறுதற்கரிய மேகம் போல்வான் வாழ்க.

இவ்வாறு மணிவாசகர் மிகச் சிறப்பான உருவக நிலையில் மலர் பயன்படுவதை விளக்கியுள்ளார். மலர் என்றால் அது சிறப்பாகத் தாமரை மலரையே குறித்தது. "பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை" எனத் தேவாரத்திலும் தாமரை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

உவமை நிலையில் மலர் பல இடங்களில் மணிவாசகரால் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலவற்றை எடுத்துக் காட்டலாம்.

'பூவின் நாற்றம் போல் உயர்ந்து எங்கும்'
'ஒழிவற நிறைந்து மேவிய பெருமை' (திருவண்டப்பகுதி : 115 – 116)

'செந்தாமரைக் காடனைய மேனி' (திருச்சதகம் : 26:4)

'செச்சை மாமலர் புரையும் மேனி' (திருச்சதகம் : 29:4)

'பொன்னின் மின்னு கொன்றை' (நீத்தல் விண்ணப்பம்: 29:3)

'குடர்நெடுமாலை' (நீத்தல் விண்ணப்பம்: 30:3)

'தாரகை போலுந் தலைத்தலை மாலை' (நீத்தல் விண்ணப்பம் : 48:1)

'செப்புறு கமலம்' (திருப்பள்ளியெழுச்சி: 6:3)

போல், அனைய, புரைய, இன் போன்ற உவமையுருபிடைச் சொற்கள் உவமை நிலையில் பயன்பட்டதை விளக்கி நிற்கின்றன.

**புனைவுநிலை**

புனைவு நிலை என்பது மலர்களால் புனையப்படும் மாலைகளின் ஆக்கத்தைச் சிறப்பாகக் குறிக்கின்றது. பூமாலை, தார், அலங்கல், புனைமுடி, பூமுடி போன்ற சொற்கள் இப்புனைவு நிலையின் வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுகின்றன. பூக்களால் நாரிலே தொடுத்துப் புனையப்படுவது பூமாலை யாகும். தனி ஒரு வகைப்பூவிலும் மாலை தொடுக்கலாம். அல்லது பல நிற மலர்களை எடுத்து வகைப்படுத்தியும் அழகுறப் புனையலாம். திருவாசகத்தில் பின்வருந் தொடர்கள் இப்புனைவு நிலைக்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன.

| | |
|---|---|
| 'தாளியறுகின் தாராய்' | (போற்றித் திருவகல்: 201) |
| 'கழுநீர் மாலை' | (போற்றித் திருவகல்: 217) |
| 'பூமாலை புனைந்தேத்தேன்' | (திருச்சதகம்: 14:2) |
| 'பூமுடி உத்தரகோச மங்கைக்கரசே' | (நீத்தல் விண்ணப்பம்: 5:3) |
| 'ஆர்க்கின்ற தார் விடை' | (நீத்தல் விண்ணப்பம்: 8:3) |
| 'மின்னு கொன்றை அலங்கல்' | (நீத்தல் விண்ணப்பம்: 29:3) |
| 'குடர் நெடுமாலை' | (நீத்தல் விண்ணப்பம்: 30:3) |
| 'தலைமாலை' | (நீத்தல் விண்ணப்பம்: 48:1) |
| 'போதார் புனைமுடி' | (திருவெம்பாவை: 10:1) |

இவற்றின் புனைவு நிலையை அட்டவணையால் விளக்கலாம்.

| | புனைவு வகை | அணியும் இடம் | பயன்பட்ட மலர்கள் |
|---|---|---|---|
| 1. | அலங்கல் | கழுத்து | கொன்றை |
| 2. | தார் | கழுத்து | அறுகு |
| 3. | பூமுடி | உச்சி | கொன்றை |
| 4. | புனைமுடி | உச்சி | கொன்றை |
| 5. | மாலை | கழுத்து | கழுநீர் |
| | நெடுமாலை | கழுத்து | கொன்றை |
| 6. | தலைமாலை | கழுத்து | மண்டையோடுகள் |

அறுகு தனித்துவமாகச் செய்யப்பட்ட மாலையாகவுள்ளது. தார் என்பது நீளமாகப் புனையப்பட்ட மாலையைக் குறித்து நிற்கிறது. கொன்றை மலர்களே கழுத்து மாலைக்கும் முடியிலே சூடும் மாலைக்கும் பயன்பட்டன. மண்டை ஓடுகளால் புனையப்பட்ட மாலை தலைமாலையெனத் தனிச் சிறப்புப் பெற்று விளங்கியது. அலங்கல் என்பது குஞ்சம் போன்ற அமைப்பை நடுவிலே பெற்று அசையும் மாலையாக விளங்கியது. தார், மார்பில் அணியும் மாலையெனவும் உரையாசிரியர் குறிப்பிடுவர். "ஆர்க்கின்ற தார்விடை" என்ற தொடர் ஒரு வேறுபட்ட புனைவு நிலையைக் குறிக்கின்றது. கிண்கிணியால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்த இடப வாகனம் பற்றிய செய்தியால் இப்புனைவு விளக்கப்பட்டுள்ளது.

**பிறநிலை**

திருவாசகத்தில் மலர்ப்பயன்பாடு பற்றிய குறிப்புக்களில் ஒரு குறிப்பு மட்டும் இறைவி பற்றியதாக உள்ளது.

'குரவுவார் குழல் மடவாள்' (திருச்சதகம்: 17:2)

குரவுமலரை அணிந்த நீண்ட சுருண்ட கூந்தலையுடைய உமையம்மை என மணிவாசகர் குறிப்பிட்டுள்ளார். பெண்கள் கூந்தலில் மலரணியும் பண்பாடு இன்று வரையும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

பிறிதொரு குறிப்பு காமன் பற்றியதாக உள்ளது. இது வருமாறு

**'வேனில் வேள் மலர்க் கணைக்கும்'** (திருச்சதகம்: 19:1)

இளவேனிற் காலத்தில் மன்மதன் சிறப்பாக ஆட்சி செய்வான். அவன் வில்லிலே தொடுத்து எய்யும் கணைகளாக தாமரை மலர், மாம்பூ, அசோகம்பூ, முல்லைப்பூ, கருங்குவளைப்பூ என்பன கருதப்படுகின்றன.

மலர் பற்றிய சிறப்பு நிலையைப் புலப்படுத்த மணிவாசகர் பல அடைமொழிகளைப் பயன் படுத்தியுள்ளார். அவற்றை அட்டவணையிலே கீழே காணலாம்.

| | | |
|---|---|---|
| 1. வெறிமலர் | 11. பிணைமலர் | 1. மலர்ந்தமலர் |
| 2. கரமலர் | 12. பாத மலர் | 2. மலர்ப்பாதம் |
| 3. செழுமலர் | 13. பாதநன்மலர் | 3. மலர்க்கணை |
| 4. தன்மலர் | 14. கார்மலர் | 4. மலர்த்தாள் |
| 5. ஆய்மலர் | 15. மாமலர் | 5. மலர்க்கழல் |
| 6. நலமலர் | 16. நன்மலர் | 6. மலர் தூவேன் |
| 7. விரையார் மலர் | 17. ஒண்மலர் | 7. மலர் கொள்தாள் |
| 8. மணிமலர் | 18. அறாமலர் | 8. மலர்க்கமலபாதம் |
| 9. துணைமலர் | | 9. மலரும் தண்வயல் |
| 10. கடிமலர் | | |

இன்னும் மலர்களில் வடசொற் பெயர்களையும் மணிவாசகர் பயன்படுத்தி உள்ளார். பங்கஜம், கமலம் என்னும் இருசொற்களும் பாடல்களில் சான்றாக உள்ளன. பூவின் வளர்ச்சி நிலையில் மொட்டு நிலைபற்றிய குறிப்பும் உள்ளது. காலத்தில் மலரும் மலர் "போது" என அழைக்கப்பட்டது. கொன்றை மலர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் மலரும். மணிவாசகர் அதனையே "போது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருவாசகம் மணிவாசகருடைய பக்திநிலையை உணர்த்தும் அதேவேளையில் அவருடைய வாழ்வியல் நிலை பற்றியும் உணர்த்துகிறது. கோவில் வழிபாட்டில் மலரிட்டு வழிபடும் நடைமுறையைச் செயற்படுத்தாமையை வெளிப்படையாகவே கூறியுள்ளார். மந்திரியாக இருந்தமையால் கோயில் வழிபாட்டைச் செய்ய முடியவில்லை. அது அவருக்கு ஒரு பெரிய மனக்குறையாக இருந்துள்ளது. இறைவன் திருக்கோலத்தில் திருவடி காண்பது ஒரு கிடைத்தற்கரிய பேறாகும். மணிவாசகர் இறைவன் திருவடி தீட்சை பெற்றமையால் "மலர்ப்பாதம்" என இறைவனது

திருவடியைப் பாடிப் பதிவு செய்துள்ளார். உலகியல் வாழ்வில் அவர் கண்ட மலர்களைத் திருவடியோடு ஒப்பிடும் போது தாமரை மலரே ஒத்திருப்பதை உணர்கிறார் "மலர்க்கமலபாதம்" எனச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

எனவே வழிபாட்டில் மலர்களின் இன்றியமையாமை பற்றி அறிவதற்கு மணிவாசகருடைய பாடற்பதிவும் உதவியாக உள்ளது. மலர்களின் பயன்பாடு அழகு நிலையில் மட்டுமே தற்போது கொள்ளப்படுகிறது. ஆனால் மலர்கள் வழிபாட்டு நிலையில் மனதைப் பக்குவப்படுத்தும். நாள்தோறும் புதுமலர் பறித்து இறைவன் திருவடியில் இட்டு இறைஞ்சினால் உலக வாழ்வியல் சீர்மை பெறும். "இறைஞ்சுதல்" என்ற சொல்லின் பொருளே மலரிட்டு வழிபடுதலாகும். ஏனைய நாயன்மார்களும் இவ்வழிபாட்டு நடைமுறை பற்றிப் பாடலில் பதிவு செய்துள்ளனர். இன்று அவற்றைப் பற்றியும் விரிவான தேடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்மொழி பக்தியின் மொழி என மறைந்த தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகள் கூறிய கருத்தை உலகம் நன்கு உணர வைக்கவும் இது வாய்ப்பளிக்கும். திருக்கோயில் சூழலில் மலர்கள் இருக்க வேண்டும். பல்வேறு மலர்ச் செடிகளைப் பயிரிட வேண்டும். அன்றலர்ந்த மலர்களை வழிபாட்டிற்குப் பயன்படுத்த இது வாய்ப்பளிக்கும். இன்றைய இளந் தலைமுறையினரை இதில் ஈடுபட வைக்க வேண்டும். மணிவாசகர் பாடல்களில் அவருடைய ஆதங்கம் தெளிவாக ஒரு செய்தியைச் சொல்கிறது. முன்னோர்களின் கோயில் வழிபாட்டு நடைமுறைகள் பேணப்பட வேண்டும். அதன் மூலம் மலர்ப் பயன்பாட்டை மீண்டும் தழைக்க வைக்கலாம். இச்செய்தி எல்லோருக்கும் பொதுவான செய்தியாகவே உள்ளது. அதனை அனைவரும் உணரவைப்பது நமது கடமையாகும்.

## சைவசமய விவகாரக் குழுவின்

**முன்னாள் தலைவர்கள்**

- வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன்
- திரு.இ.இராமலிங்கம்
- கலாநிதி க.குணராசா
- திரு.சி.வி.கே.சிவஞானம்
- திரு.மு.செ.சரவணபவ

**முன்னாள் செயலாளர்**

- திரு.இ.இரத்தினசிங்கம்

**முன்னாள் பொருளாளர்கள்**

- திரு.இ.தாமோதரம்பிள்ளை
- திரு.து.சோமசுந்தரம்

# அருளானந்தத்தின் பால் ஆன்ம ஈடேற்றந்தரும் சிவபுராணம்

**ஸ்ரீபத்மராசா திவ்வியன்**
வயம்ப பல்கலைக்கழகம்
இலங்கை

**"மணிவாசகந் தரு மந்திர மோதினால்
பிணி மூப் பில்லாப் பிரம்மமாகுதும்.**

–யோகர் சுவாமிகள்.

அனைத்து மதங்களுக்கும் அவற்றின் மத நெறிகளை, மதக்கருத்துக்களைக் கொண்டமைந்த மத நூல்கள் அடிப்படை ஆதாரமாக இருப்பது கண்கூடு. குறித்த மதங்களைப் பின்பற்றுபவர்கள் எம் மொழியினராகிலும் அவற்றைத் தம் மொழிகளில் தருவித்து மெஞ்ஞானம் காண்பர். சைவசமயத்தின் மத நூல்களாக வேதமும் ஆகமமும் ஆதி முதல் தொடர்ந்தாலும் அனைத்துச் சைவர்களாலும் அறியப்பட வாய்ப்புக்கள் மிக அரிது. அதாவது "அவனே பொருள்" எனக் கொண்ட மத நூல்களை பெரும்பான்மைச் சைவர்கள் அறிந்திருக்க வாய்ப்பின்றி உள்ளார்கள் என்பதே உண்மை. எனினும் சிவபுராணத்தின் மெய்த்திறம் கண்ட எவரும் இக்கூற்றை மறுப்பர். ஆன்றோர்கள் அத்துணை திறமும் அதன் பொருளும் முழுமுதற் கடவுளாம் சிவனாரே என்பர் அவர்கள்.

சிவபுராணம் தந்த சிவனடியார் மணிவாசகப் பெருமான் "சொல்லற்கரியானைச் சொல்லி..." என்ற அடி மூலம் அவனே பொருளென்றுரைப்பார். அது மட்டுமன்றி "வேதபாராயணப் பனுவல்" என்றார் தாயுமானவர். ஆகவே "வேதத்தினும் விழுமியது" என்றால் மிகையாகாது. இவற்றுக்கெல்லாம் காரணம் யாது? திருமுறைகள் பன்னிரெண்டில் ஒன்றெனத் திருவாசகம் இருக்கையில் அதற்கெப்படி வேத அந்தஸ்து? என்றால், ஞானத்தில் இறைவனைக் கண்ட திருவாதவூரர் கூற்றுச் சிவன் கூற்றெனக் கொள்வதேயாம். இது சிவனடியார்கள் பலர் கொண்டாடிய வாசகங்கள். உதாரணமாக ஈழத்துச் சித்தர் யோகர்சுவாமிகள் தனது ஞான நூற் களஞ்சியத்தில் திருவாசகத்தையும் போற்றி வந்துள்ளார்.

"திருவாசகத்திற்குருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பர் மூத்தோர். அமுதடியடைந்த அன்பனின் உண்மைப் பொருளின் விளக்கத்தை, "மெஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரை.." நெஞ்சுருகக் கண்ணீர் மலர்த் தூவி இறைஞ்சி வேண்டின் பெருமானார் நீந்திய சிவக்கடலில் எமது ஆன்ம சுத்திபெறலாமல்லவா? அத்தகைய இன்பத்தைப்பெறத் திருவாசகத்தின் முதற்பதிகமாயமையும் சிவபுராணம் ஒன்றே போதுமல்லவா?. சிவமொன்றே மெய்ப் பொருளென்பதை "உள்ளங்கையில் நெல்லிக் கனி போல" தெளிவுபடுத்தும் அந்த நூலை தமிழில் எழுந்த சைவத்தின் மத நூலென்பதே சாலப்பொருந்தும். இந்நூலின் கருத்துக்களை நுகர்ந்தால் வேத ஆகமக் கருத்துக்களைப் பெறலாம் என்றால் மிகையாகாது.

சிவபுராணம் என்பது சிவன் புராணம். அதாவது சிவனது அநாதி முறையான பழமையினைப்

போற்றுகின்ற புராணம். கனகசபையில் கண் டெடுக்கப்பட்ட நாள் முதலாய் தமிழ் வேதம் என்றும், இறைவனின் அநாதி முறைமை சொல்லும் நூல் என்றும் சிவனடியார்கள் உருகி அதன் உண்மைப் பொருள் உணர்ந்து ஓதி வருகின்ற புராணம். அத்தகைய புராணத்தில் சீவன் மும்மலங்கள் எனும் ஆணவம், கன்மம், மாயை எனும் சேற்றில் அகப்பட்டு பின் அதிலிருந்து மீண்டு சிவன் திருவடிக்குச் செல் கின்ற மீளாப் பெரு நிலையை மணிவாசகப் பெருந்தகைமிக்க அனுபவத்தோடு சொல்கின்றார்.

அதுமட்டுமன்றி அரசனிடம் பொருள் வேண் டிப் புலவர்கள் அவனை விளிப்பார்கள். அது போன்று இறைவனை விளித்து அவன் பொறைக ளைக் கூறி, நீயே சரணாகதி என்று புலம்பி – விளம்பி நிற்கும் சிவபுராணம் அன்றி வேறொ ன்று முக்தி நெறி புகட்ட ஈடாகாது. இத்தகைய சிவகதி அடையும் வழிகூறும் தன்னிகரற்ற பெரு நிலை கூறும் புராணமே சிவபுராணம்.

**'நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க**
**இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.'**

திருவைந்தெழுத்தை வாழ்த்தி, அதன் பொரு ளாம் இறைவனின் தாள் போற்றி, கண்ணிமைக் கும் நேரத்திலும் சிவனடியார் நெஞ்சினின்று மறந்தும் பிரிந்திடாத சிவனாரின் மெய்யருளை வாழ்த்தி ஆரம்பிக்கின்ற சிவபுராணம் இவ்விரு வரிகளை விடுத்து எதைச் சொல்ல முடியும். சீவன், சிவனே நினைவென்றிருக்க வேண்டும் – அப்போது இலகுவில் இறைவனை அடையலாம் எனக் கூறும் வேதங்களுக்கு இணையாக இரண்டுவரிகளும் இசைகின்றன வன்றோ! ஆகவேதான் இது வழி கூறும் நூல்.

வேதங்கள் சிவனாரின் இயல்பு கூறுகின்றன. ஆகமங்கள் அப் பெருமானை எவ்வாறு அடைய லாம் என்று கூறுகின்றன. சிவபுராணம் இவ் விரண்டையும் தமிழில் கூறி நிற்கின்றது.

**'ஏகம் ஷத் விப்ரா பகுதா வதந்தி..'** என்கிறது வேதம்.
**'ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க'** என்கிறது சிவபுராணம்.
**'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க'** காமியம் முதல் வாதுளம் ஈறாகவுள்ள இருபத்தெட்டு ஆக மங்களாக நிற்பவன் இறைவனே என்கின்றது சிவபுராணம். இதுவன்றி வேறும் வேண்டுமோ இறைவன் புகழ் பாட...

**'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க..'**
**'மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி..'** என்கிற சிவபுராண அடிகள் பிறவித் தளையை நீக்கு கின்ற; பிறை, கங்கை, அரவம் ஆகியன அடங்க லாகத் தலைக் கோலம் கொண்ட அரனாரே, புல் ஆகி, பூடாகி, புழுவாகி, மரமாகி, பல மிருகங் களுமாகி, பறைவகளாகி, பாம்புமாகி, கல்லாய், மனிதராய், பேய்களாய், கணங்களாகி, வல் அசுரர்களுமாகி, முனிவராய், தேவ ராய் ஈரேழு பிறப்புக்களையும் துடைத்தெறிய வல்லோன், "பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்..." சிவனே என்று எளிய நடையில் விளக்கம் தருகின்றது.

**"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி.."** என்று தொடங்குகின்ற வரிகள்,

| | | |
|---|---|---|
| ஈசன் | – | தன்வயத்தன். |
| எந்தை | – | பேரருள் உடையவன். |
| தேசன் | – | தூய உடம்பினன். |
| சிவன் | – | இயற்கை உணர்வினன். |
| நிமலன் | – | நிர்மலன், பாசங்களினின்றும் நீங்கியவன், |
| பிறப்பறுக்கும் மன்னன் | – | முடிவிலா ஆற்றல் உடையவன். |
| தேவன் | – | முற்றும் உணர்ந்தவன். |
| ஆராத இன்பம் அருளும் மலை | – | வரம்பில் இன்பமுடையவன் என்று சொல்லப்படுகின்ற எண்குணங்களையும், |

ஆக்குவாய் – படைப்பாய்.
காப்பாய் – காத்தல்.
அழிப்பாய் – அழித்தல்.
அருள்தருவாய் – அருளல்.
போக்குவாய் – பிறவியினுட் செலுத்தி மறைத்தல் எனப்படுகின்ற ஐந்தொழில்களையும் தெளிவுறத் தருகிறது சிவன் புராணம்.

"ஆக்கம் அளவிறுதி இல்லாய்..." ஆக்கமும் கேடும் இல்லாதவனால் தானே படைக்கவும் அழிக்கவும் முடியும். "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவு" என்றவாறும், "புறந் தோல் போர்த்தி, புழுவழுக்கு மூடி, மலம் ஒழுகு கின்ற, ஒன்பது வாயில் குடிசை குலையுமாறு, ஐந்து புலன்களும் வஞ்சனை செய்ததால் ஏற்பட்ட விலங்கு மனத்தினால் உன்னை நீங்கி னாலும், நலந்தான் இல்லாத சிறியேனாகினும், பாராமல் கருணை புரிந்து, இப்பூவுலகில் எழுந் தருளி நீண்ட திருவடிகளைக்காட்டி – நாயினும் கடையவனாய்க் கிடந்த அடியேனுக்குத் தாயன் பிலும் மேலான அருள் ஈர்ந்தவனே! என்று ஆசை பகர்வதாலும், சிவபுராணமானது ஏதோ ஒரு மார்க்கத்தை உரைக்கின்றது என்று உணர முடிகிறது. அத்தகைய மார்க்கம் தான் இறை வனிடத்தில் சரணாகதி அடைகின்ற முக்தி நெறி. இத்தகைய முக்தி நெறியை எங்ஙனம் அடைய லாம் என்பதையும் மணிவாசகர் சொல்ல மறக்கவில்லை.

"பெருங் கருணைப் பேராறே, தெவிட்டிடாத அமிர்தமே, ஆராயாமல் திரிபவர் மத்தியில் ஒளிந்து நிற்கும் ஒளியானவனே, இன்ப துன்பம் இல்லாதவனே, அன்பர்க்கெல்லாம் அன்பனே, சோதிவடிவானவனே, புறத்திலே தோற்றுவிக்க முடியாத பெருமையுடையவனே, ஆதியே, நுண்ணிய உணர்வே" என்றெல்லாம் வேண்டி, சிவபுராணத்தைப் புகழ்ந்து பொய்யெனும் அறியாமை கெட்டு, மெய்யுணர்ந்து உருகி வேண்டினால் "மீட்டு இங்கு வந்து பிறக்கின்ற வினைப்பிறவி சாராமல், பரகதி அடையலாம்" திருவாதவூரர் மிக எளிய நடையில் சொல்லி யுள்ளார்.

அரச சுக போகங்களை அனுபவித்த "தென்ன வன் பிரமராயன்" ஞான நெறிக்குள் ஈர்க்கப் பட்டு, குருவாக வந்த அரனாரின் சீடனாகப் பெருந்துறைப் பள்ளியிற் கற்ற அருள்மொழிக் கல்வியை ஏட்டுடைக் கல்வியாய்த் தந்த சிவ புராணத்தில் இடம்பெற்றிராத கருத்துக்களும் உண்டோ! எளிய நடையில் பிணைந்திட்ட கருத்துக்களைச் சொல்லி மாளா... எனினும் உயரிய கருத்துக்களை உரிய நடையில் உச்சரிக் கையில் மெய்ப்பொருள் புலப்படும். பாமரரும் கேட்டுணரும் சொற்சுவை, பொருட்சுவை, செவிச்சுவை செறிந்தது, ஏனென்றால் அது இறைவனே குருவாக – மணிவாசகர் சீடனாக அமைத்த ஏடல்லவா?

இத்திறம்பை மணிவாசகரே பின்வருமாறு சொல்லுவார். "சொல்லற்கு அரியானைச் சொல்லி– திருவடிக் கீழ் சொல்லிய பாட்டின் – பொருள் உணர்ந்து சொல்லுவார், சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ் செல்வார் பல்லோரும் ஏத்தப்பணிந்து"

**'போதலர்ந்து தேன் சொரியும் பொன்னம்பலத்திலுறை**
**வாதவூர் எங்கோன் வாசகத்தை – ஓதி**
**பிறவிப் பிணி நீங்கிப் பேரின்ப வெள்ளச்**
**செறிவுக்குள் செல்வார் சிறந்து'.**

(திருவாசகச் சிறப்பு – பழம் பாடல்)

# திருமந்திரத்தில் அறம்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
(ஓய்வு பெற்ற உதவிப் பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

**தமிழ் ஆகமம்**

சித்த புருஷர்களில் மூலவராகிய திருமூலர் அருளிய திருமந்திரம் திருமுறை வரிசையில் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படு கிறது. திருமந்திரம் தமிழ் ஆகமம் என்று அழைக்கப்படுகிறது. சிவாகமங்களில் காரணம், காமிகம், வீரம், சிந்தியம், வாதுளம், வியாமளம், காலோத்திரம், சுப்பிரம், மகுடம் என்னும் ஒன்பது ஆகமங்களின் சாரமாகத் திருமந்திரத் தின் ஒன்பது தந்திரங்களும் அமைந்துள்ளன.

**பெற்ற நல்லாகமம் காரணம் காமிகம்**
**உற்ற நல் வீரமுயர் சிந்திய வாதுளம்**
**மற்றவ் வியாமள மாகுங் காலோத்தரம்**
**துற்ற நற்சுப்பிரஞ் சொல்லு மகுடமே.**

ஆன்மாக்கள் செய்த வினைகளுக்கேற்ப பல்வேறு உடல்களைப் பெற்று பல பிறவிகளை எடுக்கின்றன. பிறவிகளில் மகத்தான பிறவி யாகிய மானுடப் பிறவியை எடுத்தவர்களில் பலர் அதனைச் சரியாகப் பயன்படுத்துவதில்லை. எடுத்த பிறவியினைச் சரியாகப் பயன்படுத்தி தவத்தினைச் செய்து இருந்தால், உயிர் நோயாகிய பிறவிநோய் நீங்கிவிடும். தான் எடுத்த பிறவிகளில் தவத்தைச் செய்தமையால் ஆகமக் கருத்துக்களைத் தமிழில் தருவதற்காகச் சிவன் இப்பிறவியைத் தனக்குத் தந்துள்ளார் எனத் திருமூலர் கூறுகின்றார்.

**பின்னை நின்று என்னே பிறவிபெறுவது**
**முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்**
**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.**

இந்நூல் பாயிரமும் ஒன்பது தந்திரங்களு மாகிய பத்துப் பெரும் பிரிவுகளை உடையது. மொத்தம் மூவாயிரம் பாடல்களைத் தன் அகத்தே கொண்டது. இப்பொழுது திருமந்திரப் பாடல்களாக மூவாயிரத்து நாற்பத்தேழு பாடல் கள் காணப்படுகின்றன. சில பாடல்கள் இடைச் செருகல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன என்பது அறிஞர்களின் கருத்தாகும். ஐந்து கரத்தனை என்ற காப்புச் செய்யுளும் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் விநாயகர் வழிபாடு முதன்மை பெற்ற பின்பு சேர்க்கப்பட்ட பாடல் என்றே ஆய்வாளர் கள் சிலர் கூறுகிறார்கள். தந்திரம் ஒன்பது, சார்பு மூவாயிரம் என்ற பகுப்பு முறையைத் திரு மூலரே உணர்த்துகின்றார்.

**வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்**
**முந்தி வுதிக்கின்ற மூலன் மடவரை**
**தந்திர மொன்பது சார்பு மூவாயிரம்**
**சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே**

"தந்திரம் என்பது தமிழ் நூல்கள் வேறு எவற்றிலும் காணப்படாத ஒன்று. ஆனால் வட மொழியில் ஆகமங்களுக்குத் தந்திரம் என்ற பெயர் வழக்கிலுள்ளது. ஒவ்வொரு

ஆகமத்தின் தொடக்கத்திலும் "தந்திர அவதார படலம்" என்று அந்தந்த ஆகமத்தின் தோற்றுவாய் அறிவிக்கப்படுகிறது.[4]

**சாத்திரம் தோத்திரம்**

அன்பின் அடிப்படையில் எழுவது தோத்திரம்; அறிவின் அடிப்படையில் எழுவது சாத்திரம் "தோத்திரத்திற்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம்" என நம்மிடம் ஒரு முதுமொழியும் உண்டு. ஆனால் திருமந்திரம் சாத்திர நூலக மட்டுமல்லாது தோத்திர நூலாகவும் மிளிர்வதைப் பல திருமந்திரப் பாடல்களின் ஊடாக அறிய முடிகிறது.

இறை அன்பில் திளைக்கின்ற பக்தர்களைப் பித்தர்கள் என்று உலகத்தார் சிலர் கூறுவர். மிகச் சிறந்த ஆணிமுத்தைப் போன்றவனும் தோன்றும் இளங்கதிரவனைப் போன்றவனும், தேவர்கள் அனைவரும் போற்றித் துதிப்பவனும்மாகிய இறைவன் ஆகிய என் தந்தையைக் காணாமல் புலம்பும் என்னை ஒரு பித்தன் என்று கூறுகின்றனர் எனப் பக்திப் பரவச நிலையில் நின்று திருமூலர் பாடுகின்றார்.

**முத்தினின் முத்தை முகிழிள ஞாயிற்றை**
**எத்தனை வானோரும் ஏத்தும் இறைவனை**
**அத்தனைக் காணா தரற்றுகின்றேனையோர்**
**பித்தன் இவனென்று பேசுகின்றாரே.**[5]

**சித்த புருஷர்களில் மூலவர் திருமூலர்**

திருமூலர் சித்தர் மரபைச் சேர்ந்தவர் "மூலன் மரபில் வந்த வித்தகச் சித்தர் கணமே" எனத் தாயுமான சுவாமிகள் திருமூலரைக் குறிப்பிடுகின்றார். சித்த புருஷர்கள் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர்கள்.

**சித்தர்கள் என்றால் சித்தி பெற்றவர்கள்**
**பேறு பெற்றவர்கள் வீட்டின்பம் பெற்றவர்கள்**[6]

பிரபஞ்ச வாழ்வின் இரகசியத்தை சித்தர்கள் அறிந்திருந்தார்கள். சித்தர்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் உலகாயதராக வாழமாட்டார்கள். இவர்கள் உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து வருவார்கள். சித்தர்களில் அனுபூதி அடைந்தவர்கள் நாதர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

> "செந்தமிழ் நாட்டிலே தொன்னாளிலே மனத்தை ஒடுக்கி ஒரு நிலை நின்று யோக வாயிலாகத் தெய்வத் தன்மை பெற்ற சான்றோர்கள் சித்தர் எனப்பட்டனர். மனவன்மையைப் பெருக்கித் தெய்வத் தன்மையைப் பெற்றவர்கள் சித்தர்கள்."[7]

சித்து என்னும் சொல் தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். ஞானம் பெற்றவர்களைச் சித்தர் என்று கூறுவதும் உண்டு. சித்தி பெற்றவர்களைச் சிவனோடு ஒத்தவர்களாய்க் கருதி, மக்கள் மதித்துப் போற்றுகின்றனர். சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிந்தனையில் மூழ்க மூழ்க சித்த விகாரம் ஒடுங்கும். சித்த விகாரம் ஒடுங்க ஆத்ம சக்தி அகத்திலே பீறிட்டு எழும். ஆத்ம சக்தி முழுமை பெறுகின்ற போது சித்துக்கள் அனைத்தும் கைகூடும்.

> "காயசித்தி பெற்றுச் சிவஞான வாயிலாக இரண்டற்ற நிலையில் சிவத்தோடு ஒன்றியிருத்தலே சித்தர்களின் முடிவாகக் கருதப் பெற்றமையைத் திருமந்திரம் தெரிவிக்கின்றது."[8]

**திருமூலரின் பரந்த சிந்தனை**

இவர் இறையருளால் தான் பெற்ற தெய்வீக அனுபவத்தை அனைவரும் பெறல் வேண்டும் என்ற பரந்த சிந்தனை கொண்டிருந்தார். இவர் மனித உடம்பிற்குள் இருக்கும் மெய்ப்பொருளினை நேரிலே கண்டார். தான் அடைந்து அனுப

வித்த அந்தப் பேரின்பத்தை உலக மக்கள் அனைவரும் அடைய வேண்டும் என்று விரும்பினார்.

**நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.**[9]

"வானில் வியாபித்துள்ள பரம்பொருளே! ஊனிலும் மறைந்து நிற்கிறது. உணர்விலே கலந்து உறைகிறது. இந்த உணர்வு நிலையைப் பற்றிக் கொண்டு ஈடுபட ஈடுபடப் பேரின்பமானது, தானே வந்து சித்திக்கும். இந்தப் பேரின்பத்தை நான் பெற்றேன். அதை உலகமும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் திருமூலர்.[10]

**உடல் - இறைவன் வீற்றிருக்கும் கோயில்**

காயமே பொய் என்ற வாதம் வலுப்பெற்றிருந்த சித்தர்கள் மரபில் திருமூலர் உடம்பைக் கோயில் என்று பாடிய முதல் தமிழ்க் கவிஞராகத் திகழ்ந்தார். அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை அகத்திலே காண்பதற்கு வழிகாட்டினார்.

உடம்பைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அவசியத்தை திருமந்திரம் பல பாடல்களில் எடுத்து விளக்குகிறது. அழிந்து போகின்ற இந்த உடலை உயிர் இருக்கும் வரை ஆரோக்கியத்தோடும் உறுதியோடும் பாதுகாக்க வேண்டிய காயசித்தி உபாயத்தை திருமந்திரப் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன. உத்தமனாகிய இறைவன் வீற்றிருக்கின்ற உடம்பை அலட்சியம் செய்யக் கூடாது. கோயிலைப் பரிசுத்தமாகப் பாதுகாப்பது போல உடம்பையும் ஆரோக்கியத்தோடு பேண வேண்டும். இந்த உடம்பினுள் இறைவன் நீக்கமற நிறைந்திருக்கின்றான் என்பதை உணர்ந்த பின்பு இதனைத் தெய்வம் வீற்றிருக்கும் ஆலயமாகப் போற்றுகின்றேன் என்கிறார்.

**'உடம்பினை முன்னம் இழுக்கு என்றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று**
**உடம்பினை யான்இருந்து ஓம்புகின்றேனே'**[11]

ஒரு காலத்தில் இந்த உடம்பைத் துச்சமாகக் கருதி உதாசீனம் செய்தேன். ஆனால் இந்த உடம்புக்குள் உறுதுணையான பரம்பொருளைக் கண்ட பிறகு, அந்த உதாசீனத்தை விட்டு இவ்வுடம்பை நன்றாகப் பாதுகாக்க ஆரம்பித்தேன் என்கிறார் திருமூலர்.[12]

**சைவசித்தாந்த தத்துவத்தை விளக்கும் கருவூலம்**

சீலம் நோன்பு என்பவற்றைக் கடைப்பிடித்து மெய்யுணர்வு நூல்களைக் கற்றுவர மலமாயா கன்மங்கள் நீங்கும். மலங்கள் நீங்கியதும் ஆன்மா சிவத்தோடு பொருந்தும். குற்றங்கள் நீங்கியதும் முழுமுதற் பொருளாகிய சிவத்தினை அகத்திலே காண்பர். இவ்வாறு அகத்திலே சிவத்தினைக் காணும் பக்குவம் பெற்றவர்களே சைவ சித்தாந்திகள் ஆவர். சைவ சித்தாந்தம் என்ற சொற்றொடர் முதன் முதலில் திருமந்திரத்திலேயே கூறப்பட்டுள்ளது.

**கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்**
**முற்பத ஞான முறை முறை நண்ணியே**
**சொற்பத மேவித் துரிசற்று மேலான**
**தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே.**[13]

இந்த உலகையும் இதன் இயல்புகளையும் உயிர்வர்க்கங்களையும், கடவுட் தத்துவத்தையும் நுட்பமாக ஆராய்ந்த திருமூலர் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றையும் நித்தியப் பொருள்கள் எனக் கூறியுள்ளார். பதி என்பது இறைவன். பசு என்பது ஜீவன்களாகக் காணப்படும் உயிர்த் தத்துவம். பாசம் என்பது ஆன்மாக்களைச் சுட்டி நிற்கும் தளை. உயிரும் தளையும் ஈசுவரனைப் போல அநாதியானவை. பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள். இந்த மும்

மலப் பாசத்திலே உயிர்ப்பசு கட்டுண்டு நிற்கிறது. ஆணவமலம் ஆன்மாவிடம் அஞ்ஞானத்தைத் தூண்டுகிறது. கன்மம் நல்வினை தீவினை என்ற வேறுபாட்டை உண்டாக்கி உயிரைப் பிறவி நோயில் சிக்க வைக்கிறது. மாயை ஆன்மாவை இறை உணர்விலிருந்து மாற்றிப் பிரபஞ்சப் பற்றில் மயங்க வைக்கிறது. பதியாகிய இறை வன் கருணையோடு ஆன்மாக்களை அணுகும் போது ஆன்மாக்களைப் பீடித்துள்ள தளை தானாகவே நீங்கி விடும். ஆன்மாக்களும் மயக்கம் தெளிந்து இறைவனை உணரும்.

**பசுபதி பாசம் எனப்பகர் மூன்றிற்**
**பதியினைப் போற் பசுபாசம் அனாதி**
**பதியினைச் சென்றணு காப்பசு பாசம்**
**பதியணுகிற் பசு பாசம் நிலாவே.[14]**

உயிரானது பிறப்பு இறப்புக்களில் அகப் பட்டு இறைவனை அணுக முடியாமல் பாசத்தில் அழுந்திக் கிடக்கிறது. இந்தப் பாசம் நீங்கி அறியாமை அகன்று உயி ரானது உய்ய வேண்டும் என்றால் அதற்கு இறைவனே வந்து ஆட்கொள்ள வேண்டும்.[15]

சிவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற் காகத் திருவருள் சக்தியோடு பிரிவின்றிக் கலந்து நிற்கின்றார் என்பதை, திருவருட் பயன் விளக்குகின்றது.

**தன் நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சக்தி**
**பின்ன மிலான் எங்கள் பிரான்.[16]**

அருட்சக்தியாகிய பராசக்தியைப் பல வடி வங்களிலே சைவர்கள் வழிபட்டு வருகின்றனர். பராசக்தியின் அருளாற்றலை அறியாத தேவர் கள் இல்லை. சக்தியின் துணையின்றி எந்தத் தவமும் ஆகாது. பராசக்தியின் ஆற்றலைக் கொண்டே ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. ஆன்மாக்களின் உயர் இலட்சியமான முத்தியை அடைவதற்கு சக்தியின் துணை அவசியமாகும்.

**அவளை அறியா அமரரும் இல்லை**
**அவளன்றிச் செய்ய அருந்தவம் இல்லை**
**அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை**
**அவளன்றி ஊர்புகும் ஆறு அறியேனே.[17]**

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களையும் நீக்குவதற்கு ஆன்மா, இறைவன் திருவடியைப் பற்ற வேண்டும். ஆணவம் உமி யையும், மாயை தவிட்டையும், கன்மம் முளை யையும் ஒக்கும். ஆன்மா உமி முதலியவற்றால் மூடப்பட்டு உள்ளே இருக்கும் அரிசியைப் போல் திகழும். பாசத்தை நீக்கிப் பரமசிவன் பாதங்க ளைப் பற்றுவதே ஆன்ம விடுதலைக்கு வழி யாகும்.

**ஆணவம் மாயையும், கன்மமும் ஆம்மலம்**
**காணும் முளைக்குத் தவிடு, உமி : ஆன்மாவும்**
**தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய் நிற்கும்**
**பேணும்வாய் மற்றும்நின் பாசம் பிரித்தே.[18]**

சைவ சித்தாந்த தத்துவம் ஆணவம் அறிவை மறைக்கும் என்றும், மாயை அறிவை விளக்கும் என்றும் கூறுகின்றது. பூதவிருள் நீங்குவதற்குச் சிறிய விளக்குத் துணையாவதுபோல, ஆருயி ரைப் பீடித்திருக்கும் ஆணவ இருள் ஆன்மாவை விட்டு முற்றாக நீங்கும் வரை மாயா காரிய மாகிய உடம்பு அறிவு சிறிது பிரகாசிப்பதற்குத் துணையாக நிற்கிறது.

**விடிவா மளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து.[19]**

மேய்ப்பவர் இல்லாமல் திரியும் ஆன்ம தத்துவமாகிய பசுக்கள் இருபத்து நான்கு உள்ளன. உணர்வு மெய்யாகிய வித்தியா தத்து வம் ஏழும் உணர்த்தும் மெய்யாகிய சிவ தத்து வம் ஐந்தும் குட்டிப் பசுக்களாக உள்ளன. இவை

அளவில்லாத பாலைச் சொரியினும் ஆன்மாக்கள் பாலைத் தராத ஆன்ம தத்துவத்திலிருந்து தோன்றும் பட்டிப் பசுக்களையே நாடுகின்றன.

**பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள**
**குட்டிப் பசுக்களோர் ஏழுளு ஐந்துள**
**குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்**
**பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே.**[20]

**சைவ சித்தாந்த மூல இலக்கியம்**

தென் இந்தியர்களின் பே[illegible]வின் பெரும் விளைவு எனப் பேரறிஞராகிய ஜி.யூ.போப் அவர்கள் புகழ்ந்து போற்றிய சைவ சித்தாந்தத்திற்கு முதல் ஆசிரியர் திருமூலரே ஆவார். சைவ சித்தாந்த நுண்பொருட் கோட்பாடுகளை விளக்கி மூலமுதற் காரணராக விளங்குவதாலேயே அவருக்குத் திருமூலர் என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். சைவ சித்தாந்தத்திற்கு மூல இலக்கியம் திருமந்திரமே என்ற கருத்தை அறிஞர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வர். மூலன் செய்த இலக்கியத்தை மூல இலக்கியம் என்று கூறுவதில் தவறு ஒன்றும் இல்லை. சைவ சித்தாந்த செம்பொருள் நலங்களை ஒவ்வொருவரும் தாம் தாமே அனுபவ நிலையில் கண்டு உணர்ந்து கொள்ள துணைபுரிந்து உதவும் நடைமுறை நூல் திருமந்திரமே ஆகும். இம்மை மறுமைக்குரிய மறைபொருள் நுட்பங்கள் அனைத்தையும் ஒருங்கே எடுத்துக் கூறும் ஒப்பரிய ஞானத்திருநூலாக திருமந்திரம் காணப்படுகிறது.

"முடிவான மந்திரங்களும், அவற்றை உருவேற்றும் முறைகளும், அவற்றை அமைக்கும் சக்கரங்களும், அம்மந்திரங்களுக்குரிய மாபெருந் தெய்வங்களும், அத்தெய்வங்கள் எல்லாம் சிவத்தின் ஆணை வழிநின்று தம்மை வழிபடுவார்க்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும் வகைகளும், தவத்தின் பாகுபாடுகளும், அவற்றை மேற்கொண்டு ஒழுகுமாறும், அழிவிலாப் பேரின்பப் பேறாம் முடிந்த நிலையுமாகிய எல்லாம் முற்ற எடுத்து முடியக் கூறும் முழுமுதல் நூல் திருமந்திரமேயாகும்.[21]

**ஆசையே பிறவிக்கு வித்து**

மானுட வாழ்வு செம்மையுற அமைவதற்கு வாழ்வின் இலட்சியமாகிய வீடுபேறு கிடைப்பதற்கும் அறநெறி, அன்பு நெறி, அறிவு நெறி ஆகிய மூவகை நெறிகளைக் கடைப்பிடித்து ஒவ்வொருவரும் ஒழுகுதல் வேண்டும்.

"அறநெறி மனித மனத்தைக் கழுவித் தூய்மையுறுத்துவது; அன்பு நெறி தலைவனிடத்திலே வழிப்படுத்துவது; அறிவு நெறி ஆண்டவனுடைய அருளாதார வாரிதியில் என்றும் இன்புற்றிருக்கச் செய்வது"

மனிதன் படும் துன்பங்கள் அனைத்திற்கும் மூலகாரணம் ஆசையே ஆகும். "ஆசையை வெல்பவன் பூரண மனிதன் ஆகிறான்" என்றே பகவத் கீதையும் கூறுகிறது.

சிவனை மறவாச் சிந்தையாளர்களாகிய பெரிய புராண அடியார்கள் இருவினை ஒப்பு நிலையில் நின்றவர்கள். மண் ஓட்டையும் பசும் பொன்னையும் ஒன்றாக மதிப்பவர்கள். அன்பு மேலீட்டினால் இறைவனை இடையறாது வணங்குவதையே நியமமாகக் கொண்டவர்கள். வீடு பேற்றைக் கூட இறைவனிடம் வேண்டாதவர்கள். உலகியல் ஆசைகளை நீக்கி இறை இன்பத்தில் திளைப்பவர்கள் சிவனடியார்கள்.

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.**[23]

"திருமூலர் மண், பெண், பொன் முதலிய வற்றின் மீது பற்று வைத்துக் கொண்டு கடவுளிடத்து அன்பு செலுத்துவது கூடாது என்பதை நன்கு வலியுறுத்தியுள்ளார்."

ஆசையே பிறவி நோய்க்கு வித்தாகும். இறைவனைத் தியானிக்கும் போது தியானத்துடன் ஆசைகளையும் சேர்த்துப் பிரார்த்திக்கக்கூடாது என்கிறார் திருமூலர். இதற்காகத்தான் ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் என்கிறார். மனத்திலே ஆசைகளைப் பெருக்கத் துன்பங்கள் வளர்ந்து பெருகும். ஆசைகளை ஒவ்வொன்றாக விட்டோமானால் ஆன்மா உலகியல் துன்பங்களில் இருந்து விடுபட்டுப் பேரானந்த மயமான நிலையைப் பெற்று விடும்.

ஆசையே துன்பமாக மாறுகிறது. இதை விட்டொழிக்க வேண்டும். கடவுளிடத்திலும் எல்லாம் அவன் செயல் என்று ஒப்படைத்து விடாமல் அங்கும் ஆசையின் வசத்தில் அழுந்தி அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்பதும் தவறு என்கிறார் முனிவர்.[25]

**ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்த மாமே.**[26]

### அடிப்படை அறங்கள்

பாவம் செய்யாமை, வாழ்வில் சீலம், இறையுணர்வு ஆகிய மூன்று பண்புகளையும் வளர்க்கவே நீதிநெறி நூல்களும் சமய நூல்களும் தோன்றின. சமய சமூக ஆசாரங்கள் கண்டிக்கிற தீய செயல்களில் இருந்து அகல்வது மட்டும் போதாது. இனிய சொற்களைப் பேசுதல், எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டிருத்தல், இரப்பவர்க்கு இல்லையென்னாது வழங்கும் வள்ளல் தன்மை, உலகத்தோடு ஒட்ட ஒழுகுகின்ற ஒப்புரவு முதலிய நற்குணங்களை மனிதரிடம் வளர்ப்பதற்குமாகவே அறநூல்கள் தோற்றம் பெற்றன.

"ஒழுக்கத்தை உபதேசிப்பதோடு ஆன்ம நாட்டத்துக்கும் ஞானத்தோடு இணைந்த பக்தி வாழ்க்கைக்கும் வேண்டிய பயிற்சியைத் தருகின்ற நூல் திருமந்திரம் ஆகும்"[27]

சைவசமயி ஒவ்வொருவரும் தமது வாழ்வில் செய்யக் கூடிய அடிப்படை அறங்கள் பல உண்டு. நாளாந்தம் தனது ஆன்ம ஈடேற்றத்துக்காக ஆத்மார்த்த வழிபாட்டினைத் தவறாது செய்தல் வேண்டும். தினம்தோறும் பூசையிலே ஒரு பச்சிலையை எடுத்து அர்ச்சனை செய்வது பெரிய காரியமே ஆகும். எல்லாத் தெய்வங்களும் வீற்றிருக்கும் தெய்வப் பிராணியாகப் பசுவே உள்ளது. பசுவுக்கு ஒருபிடி உணவு கொடுப்பது சிறந்த தர்மம் ஆகும். உண்ணும் உணவில் ஒரு பிடியைத் தர்மத்துக்கு வழங்கு என்பதே அறக் கட்டளை ஆகும். மனித விழுமியங்களில் மிக உயர்வானது மற்றவர்களிடம் இனிய வார்த்தைகளைப் பேசுவதே ஆகும்.

அடிப்படை அறங்களை நான்கு படிநிலைகளாகத் திருமந்திரம் வகுத்துள்ளது. இறைவனை அன்பு செய்தல், ஆறறிவற்ற உயிர்களை அன்பு செய்தல், இட்டுண்டிருத்தல், இன்னுரை பேசுதல் என்பன இவ் அறங்களாகும்.

**யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே**

"சாதி வெறி, தீண்டாமை ஆகிய சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் புண்கள் அகல வேண்டும் எனத் திருமூலர்

விரும்பினார். மெய்யுணர்வாளர்கள், சட்டத்தையும் அதிகாரத்தையும் வைத்துச் சீர்திருத்த முயலவில்லை. இறைவனை முன் வைத்துச் சீர்திருத்த முயன்றார்கள்.[29]

**வினையின் விளைவு**

"முற்பகல் செய்யப் பிற்பகல் விளையும்" என்பது நம்மவர்களிடம் உள்ள முதுமொழி யாகும். "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமமானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு" என்றே விஞ்ஞானி நியூட்டனின் மூன்றாவது இயக்க விதியும் கூறுகின்றது. "தர்மத்தைக் காத்தவனை அது காக்கும்; கொன்றவனை அது கொல்லும்" என்றே இந்து தர்ம சாஸ்திர நூல்களும் கூறு கின்றன. பல பிறவிகளிலும் செய்த வினைகளின் விளைவே இன்றைய மனிதனின் நிலைக்குக் காரணமாக உள்ளது.

> "மனிதனது இன்றைய நிலைக்கு மனிதனு டைய செய்கைகளே பொறுப்பாகும். இன்று செய்யப்படும் செயல்கள் நாளை நடக்க இருப்பதைக் கட்டுப்படுத்தும் என்பதையே அறவியல் ஒழுங்கு போதிக்கிறது."[30]

இப்பிறவியில் நாம் அனுபவிக்கின்ற பல்வேறு தண்டனைகளுக்கு முற்பிறவிகளிலே செய்த வினைகளே காரணம் என்பதைப் பாம்பாட்டிச் சித்தரின் பாடல் கூறுகிறது.

**காய்த்த மரம் அது மிக்க கல்லடி படும்**
**கன்ம வினை கொண்ட காயம் தண்டனை பெறும்**
**வாய்த்த தவம் உடையவர் வாழ்பவர் என்றே**
**வத்து திருவடி தொழுது ஆடு பாம்பே.**[31]

கற்பு நெறியில் வாழும் பத்தினிப் பெண், ஈசனுடைய அடியவர்கள், கற்றறிந்த மேதைகள் மனம் நோகத் தீமை செய்தால், தீமை செய்தவ ருடைய உயிரும் உடமையும் ஒரு வருடத்திற் குள் அழிந்து விடும் எனச் சதாசிவப் பெருமான் மீது ஆணையிட்டுத் திருமூலர் கூறுகின்றார்.

**பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்**
**சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்**
**அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்**
**சத்தியம் ஈது சதா நந்தி ஆணையே.**[32]

சிவனடியார்கள் சிவமெனக் காணப்படுபவர் கள். சிவனடியார்களை நிந்திப்பது சிவனை நிந்திப்பதற்குச் சமன். உண்ணும் உணவினை இறைவன் உடமை எனக் கருதி இறைவனின் திருவடியை மறவாத, நினைவுடன் உண்பவர்கள் சிவனடியார்கள். இத்தகைய அடியார்களை வெறுக்கத்தக்கதாகப் பேசியவர்கள் மீளா நரகத் தினை அடைவார்கள்.

**ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்**
**ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்**
**ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்**
**தாந்தாம் விழுவது தாழ்நரகாகுமே.**[33]

"மாகேசுவரர் ஆகிய சிவனடியார் நிந்தை யும் அறமாகாது என்கிறார் திருமூலர். சிவனடியார் உலகில் எவர்க்கும் தீங் கிழையார். அறவுள்ளம் உடையவர்கள்; இடும் பிச்சையை ஏற்று உண்பர். அவர் களை இகழ்ந்தோர் நரகத்தையே அடை வர். சமயக் காழ்ப்பும் செல்வச் செருக் குமே அடியவர்களை இகழக் காரணமாக உள்ளது. சிவனடியாரை ஓம்புவார் சத்தி நிபாதமடைவார்."[34]

சிவஞானிகளைப் போற்றுபவர்கள் புண்ணிய சீலர்களாகவும் தூற்றுபவர்கள் சிவத்துரோகி களாகவும் மாறி விடுவார்கள். சிவனடியாரை வந்தியா தொழியினும் நிந்தித்தல் ஆகாது.

"புண்ணியம் தேடுதலை விடப் பாவங் களைத் தேடாத வழிவகைகளை அறிதல்

மிகவும் முக்கியம் என்கிற வகையில் அறமற்றவை எவை என்பதனை முதலில் அறிந்தால் தீவினைகளை ஈட்டும் நிலை முழுமையாகத் தவிர்க்கப்படும். நல் வினைகளை ஈட்டுதலில் நாட்டம் செல்லும். அவ்வகையில் சிவநிந்தை, குரு நிந்தை, மாகேசுரநிந்தை ஆகிய மூன்றினையும் தவிர்க்க வேண்டும் எனத் திருமந்திரம் வலியுறுத்துகிறது.[35]

### அறவாழ்வின் அவசியம்

அறம் செய்ய வேண்டியதன் இன்றியமையா மையை திருமூலர் பலவாறாகக் கூறுகின்றார். இவ்வுலகத்திலே வாழும் பலர் அறத்தின் வலிமையை அறியாமல் உள்ளார்கள். அறத்தை அறியாததோடு பெருமை வாய்ந்த சிவனடியைத் துதிக்கும் முறைமையையும் அறியாதிருக்கின் றர்கள். பிரபஞ்ச மயக்கத்தில் உழலும் லோகாய தர்கள் கூறும் பொய்யானவற்றைக் கேட்டு இந்த உலகத்துப் பொருளை விரும்பி பாவச் செயல்க ளைச் செய்கிறார்கள். இதனால் பிறவி நோய் இவர்களைத் தொடர்கிறது.

**அறம் அறியார், அண்ணல் பாதம் நினையும்**
**திறம் அறியார் சிவலோக நகர்க்குப்**
**புறம் அறியார் பலர் பொய்ம்மொழி கேட்டு**
**மறம் அறியார், பகை மன்னி நின்றாரே.**[36]

செல்வத்தின் தேவையை மறுக்காத திரு மூலர் அதனை அறவழியிற் செலவிட வேண்டி யமையின் அவசியத்தை வலியுறுத்துகிறார். "எல் லோரயும் காப்பாற்றக் கூடியது எதுவோ அதுவே அறம்" என்பது அசோகச் சக்கரவர்த்தியின் கூற் றாகும்.

### பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்தல்

கல்வி, பெரியோரைத் துணை கோடல், தவம், துறவு, புலனடக்கம், அன்பு, பொறை, ஒழுக்கம், வாய்மை முதலியவற்றினால் உண்டாகும். நன்மைகளையும், கல்லாமை, கொலை, பிறன் மனை நயத்தல், புறங்கூறல், கள்ளுண்ணல், புலா லுண்ணல், அவா முதலியவற்றின் தீமைகளை யும் திருமூலர் எடுத்துரைக்கின்றார்.

**கொல்லான் பொய் கூறான் களவிலான் எண்குணன்**
**நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய**
**வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்**
**இல்லான் இயமத்திடையின் நின்றானே**[37]

"கொலை, பொய், திருட்டு, குற்றம், கட்குடி, காமவேட்கை ஆகியவற்றை ஒழித்து நற்குணங்கள், அடக்கம், நடு நிலை, பகுத்துண்ணும் பண்பு ஆகிய வற்றை மேற்கொண்டு ஒழுகுபவன் இயமம் எனப்படும் யோகப் பயிற்சியில் நின்றவனாவான். இயமம் என்றால் தீயன வற்றிற் செல்லாது சிந்தையைக் கட்டுப் படுத்தல். இயமத்தில் ஈடுபடுவோர் இறை வனிடத்து விரும்புவதைப் பெறுபவர் என்பது நம்பிக்கையாகும்.[38]

தீய செயல்களிலே ஐந்து குற்றங்களை மிகத் தீயன என நம்முடைய முன்னோர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றனர். கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய இவைக ளைப் பஞ்சமாபாதகங்கள் என்று வகுத்துப் பெயரிட்டார்கள். இவற்றை விலக்கி, தலையில் இறைவன் திருவடி சூடி இன்பம் அடைந்தவர் களுக்கு அப்பாவங்களும் அவற்றால் வரும் துன்பங்களும் இல்லாது ஒழியும். அவர்கள் பேரின்பத்தில் திளைத்திருப்பார்கள்.

**கொலையே களவு காமம் பொய் கூறல்**
**மலையான பாதகமாம் அவை நீக்கித்**
**தலையாம் சிவனடி சார்ந்து இன்பம் சார்ந்தோர்க்கு**
**இலையாம் இவை ஞானானந்தத்து இருத்தலே.**[39]

"நரகத்தில் தள்ளக்கூடிய இந்தக் கொடிய தீச் செயல்களைச் செய்யாதீர்கள் என்று நமது சாஸ்திரங்களும் அற நூல்களும் பன்னிப் பன்னி எச்சரிக்கின்றன. அப்படி யிருந்தும் மக்கள் பாதகங்களைச் செய்து அழிகிறார்களே என்று வருந்துகிறார் திருமூலர்." [40]

**பிறர்மனை நயவாமை**

காதலுக்கும் காமத்திற்கும் இடையே வேறு பாடு உண்டு. உள்ளத்தால் ஈர்க்கப்படுவது காதல். வெறும் உடற் கவர்ச்சியினால் ஏற்படுவது காமம். காதல் தெய்வீகமானது, தூயது; வாழ்க்கைக்கு இன்றியமையாதது; உலக நெறியில் செலுத்து வது, சமுதாய வாழ்க்கையைப் பெருக்கித் தூய்மையாக்குவது; ஆனால் காமம் என்பது இழிந்த தன்மையை உடையது. காம வேட்கை மிகுதியினால் அழிந்தவர்கள், பலரின் வரலாற் றினை இதிகாச புராணங்களிலே காணலாம்.

காதலென்ற தூய்மையான தத்துவத்தின் தூய உருவமே திருமணம் ஆகும். திருமணமே இல்லறத்தின் வேர். நான்கு வகை ஆச்சிரம நெறியில் அச்சாணி போல அமைந்திருப்பது இல்லறம் என்றே தர்ம சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இல்லாளை வாழ்க்கைத் துணை என்று கூறுவதே தமிழ் மரபாகும். கற்புநெறி தவறாத பெண்ணைப் பத்தினி எனப் போற்றுவது இந்துசமய மரபாகும்.

"இத்தூய தத்துவத்தைச் சீரழிக்கத் தோன்றியது பிறனில் விழைதல் என்ற கொடிய குற்றம். இது இருதலைக் கொள்ளி. ஒருபுறம் ஒரு வீட்டிலே ஓர் இல்லுறை தெய்வத்தை வாடச் செய்து, மறுபுறம் மற்றொரு வீட்டில் மற்றொரு இல்லுறை தெய்வத்தை மாசுபடுத்துகிறது. இவ்வாறு இருபுறமும் கொடுமை விளைக்கும் இக்கொடுமை செய்வோனை ஆழ்ந்த நரகத்தில் ஆழ்த்துவதோடு சமூ கத்தின் தூய்மையையும் வளர்ச்சியை யும் கெடுத்து உலக வாழ்விற்கு உலை வைக்கிறது." [41]

கட்டிய மனைவி வீட்டில் இருக்கப் பிறர் மனைவியிடம் இச்சைப்பட்டு நாசம் அடைகிற பாவிகளைத் திருமூலர் சாடுகிறார். வீட்டுக் கொல்லையிலே தாம் பாடுபட்டு அன்புடன் வளர்த்த பலாமரம் வேரிலும் கொம்புகளிலும் குலுங்கப் பழுத்து இருக்க, அப்பழத்தை உண்ண விரும்பாமல் காட்டில் வளர்ந்த ஈச்சம் பழத்துக்கு ஆசைப்பட்டு அல்லல்படும் தன்மையை ஒத்த தாகும் எனத் திருமந்திரம் கூறுகிறது.

**ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்த மனையாளைக் காமுறும் காளையர்**
**காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக்கு இடருற்றவாறே.** [42]

**கொல்லாமை**

அன்பையும் அருளையும் வளர்க்கும் அறங் கள் யாவற்றுள்ளும் கொல்லாமையே மிகச் சிறந்த அறமாகும். பிற உயிர்களைக் கொல்வதற் குரிய காரணங்களில் அவற்றின் புலாலை உண் பதற்காகக் கொல்வதும் ஒன்றாகும். ஊன் உண் ணல் கொலைக்குக் காரணமாகவும் கொலையின் காரணமாகவும் காணப்படுகிறது. கொல்லாமை அறத்தைக் கூற வந்த நூல்கள் யாவும் கொல் லாமையை மட்டுமன்றிப் புலால் மறுத்தலையும் இணைத்துக் கூறியுள்ளன.

கொலைத் தொழிலைச் செய்பவர்கள் நரகத்தையே அடைவார்கள். உயிரை அதன் உடம்பினின்றும் நீக்குவதற்காக கொல் எனவும் குத்து எனவும் கூறிய விலங்கை ஒத்த மக்களை செல் எனவும் நில் எனவும் அதட்டி எரிவாய் நரகத்தில் இயம தூதர்கள் தள்ளி விடுவார்கள்.

**கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை**
**வல்லடிகாகாரர் வலிக் கயிற்றாற் கட்டிச்**
**செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை**
**நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.**[43]

"கொலை முதலிய வழியினின்றும் நீங்கின ஞானந்தான் சொல்லுதற்கு அரிய மேன்மை யான ஞானமாகும். உற்ற நோய் நோன்று உயிர்க்கு உறுகண் செய்யாமையாகிய தவமும் கொலையில்லாமையே ஆகும். நல்ல அறங்கள் பலவற்றுள்ளும் கொலைத் தன்மை இல்லாத அறமே மிகச் சிறந்த அறமாகும். கொலையகன்ற நிலையால் வரும் செல்வமே நல்ல வாழ்வளிக் கும் செல்வமாகும்."[44]

**கள்ளுண்ணாமை**

மது மனிதனின் மதியை மயக்கும். காமமும் கள்ளும் கயவர்களுக்கு உரியது. மதுபானம் அருந்துகிறவர்களின் அறிவு செயலிழந்து ஆணவம் தலைக்கேறும். "விநாச கால விபரீத புத்தி" (கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே) என்ற வாக்கிற்கு அமைய கள்ளாகிய மதுவை அருந்துகிறவர்களின் அறிவு மயங்கி விடும்.

சக்தியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சாக்த மதப் பிரிவினருள் ஒரு பகுதியினர், வாமசார வழிபாட்டு நெறியினைப் பின்பற்று பவர்களாக இருக்கிறார்கள். இந்த வழிபாட்டு நெறி பெரும்பாலும் வட இந்தியாவிலே நிலவி வருகிறது. இவர்கள் மது மாமிசம் படைத்து தங்கள் வழிபாட்டினைச் செய்து வருகிறார்கள். சக்தியின் அருளை வேண்டிப் பஞ்சமகார நெறியைப் பின்பற்றும் சாக்தர்கள் மதுபான மாகிய கள்ளை அருந்துகிறார்கள்.

இவர்கள் கள் உண்டு களித்துத் தம்மை மறப்பதால் உடற்சக்தி உணர்வு என்பன அழிந்து சக்தியையும் இழந்து விடுகிறார்கள். சக்தி என்பது சிவஞானத்தை அறிந்து அதில் ஈடுபட்டுச் சத்திய ஞான ஆனந்தத்தை அடைதலே ஒழியக் கள்ளைக் குடித்துக் களிப்பதில்லை.

**சக்தியை வேண்டிச் சமயத்தோர் கள்உண்பர்**
**சக்தி அழிந்தது தம்மை மறத்தலால்**
**சக்தி சிவஞானம்-தன்னில் தலைப்பட்டுச்**
**சக்தி ஞான ஆனந்தத்தின் சார்தலே.**[45]

**அறவாழ்வே முத்திக்கு வழி**

அறம் என்றால் அறுத்தல் என்று பொருள் படும். அதாவது செய்யத்தக்கது என்று வரை யறுக்கப்படுவது. மறமாவது மறுத்தல் அதாவது செய்யத்தகாது என்று மறுக்கப்படுவது. அவ் அறத்திற்கு மறுதலையானது மறம் என்று சொற்பொருள் கூறுவர்."[46]

அறத்தை இரண்டு பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். ஒன்று பலருக்கும் பயன்படும் அறங்கள். அவை அன்ன சத்திரம் அமைத்தல், கல்வி நிலையம் நிறுவுதல், திருக்கோயில் கட்டு தல் முதலியன. மற்றைய அறம் குறிப்பிட்ட ஒரு வருக்கு வழங்குதல் ஆகும். இவ்விரண்டில் முதலில் கூறியது ஒப்புரவு என்றும் பின்னர் கூறி யதை ஈகை என்றும் அழைக்கப்படும்.

இம்மையில் இன்பத்திற்கும் மறுமையில் முத்திப்பேற்றுக்கும் அறவழி நிற்றல் அவசிய மாகும். அறநெறியில் நின்றவர்க்கும் அவர் சுற்றத்தாருக்கும் இம்மையில் நல்ல புகழுண்டு. பிறவிக்கடல் தாண்டும் தோணி இறைவனது திருவடியாகும். இறைவன் அடி சேர்வதற்கு இம்மையில் அறவழி நிற்றல் அவசியம். எனவே இம்மையில் இன்பத்திற்கும் மறுமையில் முத்திப் பேற்றுக்கும் அறவழி நிற்றல் அவசியமாகும்.

வினைப்பயனால் வந்த பிறவியும் வாழ்வும் பெரிய கடல். இதில் நாம் திளைத்துக் கொண்டி ருக்கிறோம். இந்தப் பிறவித் துயர்க்கடலை

விட்டொழிய நமக்குத் தோணி போல உதவ இரண்டு வழிகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று அழியாப் புகழை உடைய இறைவனைப் பற்றி நின்று அறத்தை ஆற்றுவது. மற்றொன்று இல் வாழ்வை நிகழ்த்தும் அறம். இவ் இரண்டு அறங்க ளுமே மறுமைக்குத் துணைசெய்யும் முத்திப் பேற்றுக்கும் அறவழி நிற்றல் அவசியமாகும்.

**திளைக்கும் வினைக்கடல் தீர்வுஉறு தோணி**
**இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு**
**கிளைக்கும் தனக்கும் அக்கேடு இல்புகழோன்**
**விளைக்கும் தவம்அறம் மேல்துணை ஆமே.**[47]

**இராஜ தர்மம்**

அரசனைப் பற்றிய இலக்கணங்களில் தனி மனிதன் என்ற வகையில் அவனுக்கு இருக்க வேண்டிய இயல்புகள் ஒருவகை. குடிகளைப் பாதுகாக்க வேண்டிய ஆட்சித் தலைவன் என்ற வகையில் அமைய வேண்டிய இயல்புகள் ஒருவகை. திருமூலர் அரசனிடம் உள்ள மனிதப் பண்பை ஒருபாட்டிலும் ஆட்சிமுறையை மேற் கொண்ட அரசன் செய்ய வேண்டிய கடமை களை ஒன்பது பாட்டிலும் கூறுகிறார்.

"உடம்பும் உள்ளமும் வளம் மலிந்து விளங்க வேண்டியவன் அரசன், உடம்பு வலிமையை விட உள்ளம் வலிமையா கவும் வளமுடையதாகவும் இருப்பது அவசியம். அறிவினால் உள்ளம் சிறக்கும். அந்த அறிவை வளமுறச் செய்வது கல்வி. ஒரு அரசன் கல்வியிற் சிறந்தவனாக இருந்தால் அவன் உள்ளம் ஒளி பெறும். அவன் எண்ணங்கள் ஒளி பெறும். அவற் றால் விளையும் செயல்கள் நாட்டுக்கு நலம் செய்யும்."[48]

திருமூலர் அரசனுக்கு கல்வி மிக இன்றிய மையாதது எனக் கூறுகிறார். அரசன் கல்வி அறிவில்லாதவனாக இருந்தால் நாட்டிற்குப் பல தீமைகள் ஏற்படும் என்கிறார். "கல்லாத அரசனும் காலனும் ஒரே இயல்புடையவர்கள்" காலன் மக்களுக்கு மரணத்தைத் தருபவன். உடலிலிரு ந்து உயிரைப் பிரித்துச் செல்பவன். கல்வி அறிவில்லாத முரட்டு அரசன் குடிமக்களைத்தக்க வண்ணம் காப்பாற்றாமல் வருந்தி மாயும்படி செய்வான்.

ஆனால் கல்லாத அரசனைக் காட்டிலும் காலன் மிக நல்லவன் என்கிறார் திருமூலர். காலனுக்குத் தருமராசன் என்று பெயர். யாருடைய விதி முடிகிறதோ அவர்களுடைய உயிரைக் கவர்ந்து செல்வான். மனம் போனபடி யாரையும் யமன் கொல்வதில்லை. பாவம் செய்தவர்களையே அவன் கொண்டு செல்வான். இறைவனுடைய பக்தர்களாகிய நல்லவர்களிடம் யமன் நெருங்க மாட்டான். மார்க்கண்டேயரிடம் யமனால் அணுக முடியாதிருந்ததைப் புராணங் கள் விளக்குகின்றன.

ஆனால் கல்லாத அரசன் செங்கோன்மையை விடுத்துக் கொடுங்கோலனாக வாழ்வான். அவன் அறத்தின் வழி நில்லாது நல்லவர்களையும் துன்புறுத்துவான். ஆதலால் அவன் காலனை விடக் கொடியவன் என்கிறார் திருமூலர்.

**கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்**
**கல்லா அரசனிற் காலன் மிக நல்லன்**
**கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான்**
**நல்லாரைக் காலன் நணுக நில்லானே.**[49]

**அந்தணர்க்குரிய அறம்**

தனிமனித வாழ்விலே ஒழுக்கத்தைப் பேணாத ஒருவர் பெறும் கல்வியினாலும் அறிவினாலும் எதுவித பயனும் ஏற்படாது.

கல்வியின் பயன் அறிவு; அறிவின் பயன் ஒழுக்கம் ஒழுக்கமற்றவரின் கல்வி யறிவு, ஒளியற்ற விழியையும், மணமற்ற

மலரையும், உயிரற்ற உடலினையும் போன்றதாகும். ஒழுக்கமில்லாதவர் எத்தனைதான் அறநூற் பொருள்களை விரித்து உரைத்தாலும், எவ்வளவு தான் இனிமையாகப் பேசினாலும் அவர் கூற்று பிறர்க்கு நலம் செய்யாது. அவர் கூறும் விடயம் மிக உயர்ந்ததாயினும் அதனை உலகமும் கொள்ளாது. ஒழுக்கமுடைய வரிடத்திலே தான் அறிவுரைகளைக் கேட்க வேண்டும். அவர் கூறும் உரையே மெய்ந்நூற் பொருள்கள் விளக்கிப் பெரும் பயன் விளையச் செய்யும்.[50]

அந்தணர்கள் வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு தொழில்களைப் பூண்டவர்கள். அந்தணர்கள் நாள்தோறும் தீ வளர்த்து அக்கினி காரியம் செய்பவர்; காலை, நண்பகல், மாலை என்ற மூன்று வேளையும் சந்தியா நியமங்க ளைச் சரிவரச் செய்பவர், செய்விப்பவர், சிவனை வழிபடும் அழகிய நற்றவத் தொண்டில் உறைந்து நின்று காலை மாலை ஆகிய இருவகைச் சந்தி களும் வேதமோதி சடங்குகளை ஒழுங்காகச் செய்பவர்கள் என அந்தணர் இயல்பு திரு மந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

பாசம் ஒழிந்து தமது உள்ளத்திலுள்ள சிவ சொரூபத்தை சிவப் பரம்பொருளைப் பார்ப்ப வரே பார்ப்பார் ஆகிய அந்தணர் எனத் திரு மந்திரம் கூறுகிறது. அகத்திலே சிவசொரூபத் தைக் காண்பற்கு நாளாந்தம் சிவத்தியானம் செய்ய வேண்டும். சாதனங்களில் பெரியது ஓங்கார சாதனம். சங்கற்ப விகற்பங்களை விட்டு மனமானது பரிசுத்தம் அடைந்தால், ஓங்காரம் உள்ளே கேட்கும். அதை ஓர்ந்து நிற்க வேண்டும். அத்துடன் ஒரு குருவை அணுகி உபதேசம் பெற வேண்டும். அந்த உபதேசம் அனுபவத்தில் கைகூடப் பயிற்சி செய்ய வேண்டும்.

**பெருநெறியான பிரணவம் ஓர்ந்து**
**குரு நெறியாலுரை கூடிநால் வேதத்**
**திரு நெறியான கிரியை யிருந்து**
**சொரூபம தானோர் துகளில் பார்ப்பாரே.**[51]

உண்மைத் தவ ஒழுக்கம் இல்லாமல், மெய் ஞான அறிவும் இல்லாது, உடலோடும் மனத் தோடும் பொருந்தியுள்ள ஐம்புலன்கள் வழிச் செல்லும் ஆசையை விட்டு விலகும் வழியை எண்ணும் நினைப்பும் இல்லாமல், பக்தி இல்லா மல், எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள் ஒன்று உண்டு என்ற உண்மை அறிவும் இல்லா மல், உண்ணும் உணவில் ஆசை வைத்து அலை வோர் பிராமணர்கள் ஆகமாட்டார்கள்.

**சத்தியம் இன்றித் தனிஞானம் தானின்றி**
**ஒத்த விடயம் விட்டோரும் உணர்வின்றிப்**
**பத்தியும் இன்றிப் பரனுண்மை இன்றி ஊன்**
**வித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.**[52]

"சத்தியம், ஆன்மஞானம், பொறி இன்ப த்தை விட்ட மெய்யுணர்வு, பதியன்பு, கடவுள் ஒருவர் உண்டு என்ற ஆஸ்தீக புத்தி, இவையே பிராமணருக்கழகாம் என்றும், இவைகள் ஒன்றுமின்றி, ஐம்புலன் நுகர்விலே மருள் கொண்டு இருளுக்கு அடிமையாய் பித்தேறி மாயையிலுழலும் மூடர் பிராமணர் ஆகமாட்டார் என்றும் திருமூலர் உணர்த்தியுள்ளார்.[53]

**பொறையுடைமை**

ஒவ்வொரு மனிதரும் தன்னிடம் பொறு மையை வளர்க்க வேண்டும். பொறி புலன்க ளோடு கட்டுப்பட்டிருக்கும் சிந்தயைப் பிரித்துப் பொறுமையை வளர்க்க வேண்டும்.

என்றும் அழியாது இருப்பதும், விரும்பி னாலும் விரும்பா விட்டாலும் நம்மையும் மீறி உள்ளத்தில் நிலைத்திருப்பதும்,

மிகப் பிரசித்தி பெற்றதும், மிகவும் போற்றப்பட வேண்டியதுமாகிய ஒன்று கமை அல்லது பொறுமை என்று சொல்லு கின்றார்.[54]

குறிக்கோளில் உறுதி குலையாதிருக்கிற எண்ணம் உறுதிப்பாட்டினைப் பல்லி என்ற சொல்லால் திருமூலர் குறிப்பிடுகின்றார். மெய்யான நெறியைப் பற்றி வழுவாமல் நிற்கும் யோகியர் நெஞ்சில் மெய்ப்பொருளுடன் கூட வேண்டும் என்ற எண்ணம் ஆகிய பல்லி ஒன்று இருக்கிறது. மனிதனின் பஞ்சப் புலன்களில் நாக்கும் மூக்கும் பெரும் துன்பத்தைத் தருவன. பிரபஞ்ச மயக்கத்தில் ஈடுபட வைப்பதில் இந்த இரண்டு உறுப்பிற்கும், பெரும் பங்கு உண்டு. மிகமிக நுண்மையானது மூக்கு; பருமையானது நாக்கு. இந்த இரண்டையும் பற்றி நிற்கின்ற சித்தத்தைப் பிரித்து இந்தக் கமையைக் கொஞ்சம் வளர்த்தால் அதுவே பொறையுட மையை வளர்ப்பதற்குரிய முறையாகும். இப்படி யாகப் பொறுமையை வளர்த்துக் கொண்டு வரு கின்ற முறையிலே இறைவனுடைய திருவருள் அப்போதே கிட்டத்தொடங்கி விடும்.

**பற்றி நின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன்றுண்டு**
**முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்**
**தெற்றிக் கிடந்து திகைக்கின்ற சிந்தையுள்**
**வற்றா தொழிவது மாகனமயாமே.**[55]

### பெரியோரைத் துணைக் கோடல்

பொறுமையை அடையப் பெற்ற பின்பு அக் குணம் வளரவும், நினைக்கவும் நல்லதொரு சூழ்நிலை அவசியம். ஞானிகள் கூட்டுறவுதான் தக்கதொரு சூழ்நிலை ஆகும்.

"அறிவும் இச்சையும் செயலும் கெட்டு விடாமலிருத்தற் பொருட்டுச் சிவஞான போத சாத்திரம் பன்னிரண்டாம் சூத்திரத் திலே அம்மலம் கழுவுதற் கண் அறிவை யும். அன்பரொடு மருவுதற்கண் இச்சை யையும், ஆலய வழிபாட்டின் கண் செய லையும் செலுத்துமாறு உபதேசிக்கின் றமை காண்கிறோம்.[56]

நாட்டை ஆளும் மன்னர்களும் பெரியோ ரைத் துணைக் கொள்ள வேண்டுமென்றே அற நூல்கள் கூறுகின்றன. பொறுமைப் பண்பாடு அடையப் பெற்றவர்களும் பெரியோரைத் துணையாகக் கொள்ளுதல் அவசியமாகும். பெரியோரைத் துணையாகப் பெறுதல் அரியவற் றுள் அரிய செயலாகும். பொறுமைப் பண்பினின் றும் சோர்வடைய நேரிட்டால் பெரியோர் துணையே கைகொடுத்து உதவும். பொறுமைப் பண்பினின்றும் வழுவாமைப் பொருட்டாகவும், உசாத்துணைப் பொருட்டாகவும், உறுதுணைப் பொருட்டாகவும் நாம் பெரியோரைத் துணைக் கொள்ளுதலே சீரியதாகும்.

பெரியோரைத் துணைகொள்ளுதலைக் குறித்து திருமூலர் ஆறு திருமந்திரங்களை அருளியுள்ளார். ஆன்மாவிற்குரிய உய்தி மார்க் கங்களை உபதேசிப்பது திருமந்திரம். ஆதலால் உலகியல் நெறியில் நின்று எவரையும் பெரி யோராக மதித்து ஒழுகுதலைத் திருமந்திரம் சிறப்பித்துக் கூறவில்லை. ஆன்ம உய்திக்கு வழிகாட்டக்கூடிய பெரியோரைத் துணையாகக் கொள்ள வேண்டும் என்றே திருமந்திரம் கூறு கிறது. ஓடவல்லார், பாடவல்லார், தேடவல்லார், கூடவல்லார் ஆகிய நால்வரையும் பெரியோர் கள் எனத் திருமூலர் நவில்கிறார்.

சரியைத் தவம் முற்றிய பெரியோர்களே ஓட வல்லாராவர். திருத்தலங்கள் தோறும் நடந்து சென்று இறைவனைத் தரிசிக்க முயல்வோருடன் நானும் நடந்து செல்வேன். ஆண்டவன் அரு ளைப் போற்றும் பாடல்களைப் பாடுவோருடன் நானும் இப்பூவுலகில் வாழ்ந்திருப்பேன். கடவு ளைத் தம் அகலத்திலே தேடிக்காண விரும்பும்

அடியார்களுடன் சேர்ந்து நானும் தேடுவேன். அன்போடு இறைவனை நெருங்கிப் பக்தி செய்ப வர்களின் திருவடிகளைப் பற்றி நானும் இருப் பேன்.

**ஓடவல்லார் தமரொடு நடாவுவன்**
**பாடவல்லார் ஒலி பார்மிசை வாழ்குவன்**
**தேட வல்லார்க்கு அருள் தேவர் பிரானொடும்**
**கூட வல்லார் அடி கூடுவென் யானே.**[57]

### திருமந்திரம் காட்டும் வழிபாட்டு நெறி

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமானின் வாக்கு ஆகும். "சைவ சமயிகளின் பார்வையில் மனித வாழ்க்கை வரப்பிரசாதமாகக் கருதப்படு கின்றதே ஒழியத் தண்டனையாகவோ, சாபக் கேடாகவோ, கொள்ளப்படவில்லை". மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றே ஞானக் குழந்தையாகிய சம்பந்தரும் குறிப்பிடுகின்றார்.

அறநெறி தவறாது வாழ்க்கையை நடாத்தும் ஒருவன் இறையருளைப் பெறுவதற்கான வழிக ளைச் சிவாகமங்கள் கூறுகின்றன. சைவ நாற்பாத நெறியினைத் திருமந்திரமும் எடுத்து விளக்குகிறது.

இறைவனின் திருவருளைப் பெறுவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிகளைத் திருமந்திரம் கூறுகிறது. சரியை தாசமார்க்கம் மூலமாகச் சித்திக்கும். அதாவது ஆண்டவன் இடத்திலே அடியான் என்ற முறையிலே வழிபடுகின்ற முறை. அடுத்தது, கிரியை அதாவது சற்புத்திர மார்க்கமாகும். மகன் தந்தை முறை கொண்டு ஆண்டவன் இடத்திலே வழிபடுவது. பின்யோகநெறி அதாவது சக மார்க்கமாகும். தோழனும் தோழனுமாக முறை கொண்டு வழிபடுகின்ற முறை. அடுத்தது ஞான மார்க்கம். ஞானமார்க்கத்துக்கு வழி சன்மார்க்க மாகும். ஞான நெறியில் வெற்றி பெற்றால்தான் சன்மார்க்கம் சித்திக்கும்.

ஆலய வழிபாடு, சிவாலயத் தொண்டு செய்யும் சரியை வழியில் நிற்போர் பக்தர்கள் ஆவர்கள். சிவ சாதனங்களை அணிந்து சிவ வேடம் தாங்கிச் சிவபூசை செய்து வழிபடுவோர் கிரியை நெறியில் நிற்பார்கள். இயமம், நியமம் முதலிய அட்டாங்க யோக உறுப்புக்களை உணர் ந்து அவ்வழியில் நிற்போர் யோகியர் ஆவர். சீவன் முத்தர்களாகிய சித்தர்கள் சிவத்தை தம்மிற் கண்டு அதனுடன் ஒன்றி நிற்பார்கள்.

**பக்தர் சரிதை படுவோர் கிரியையோர்**
**அத்தகு தொண்டர் அருள் வேடத்தாகுவோர்**
**சுத்த இயமாதி சாதகர் தூயோகர்**
**சித்தர் ஞானம் சென்று எய்துவோர்களே.**[58]

சரியை நெறி தாசமார்க்கம் என்றும் அடிமை நெறி என்றும் அழைக்கப்படுகிறது. அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல், திருக்கோயில்களில் விளக்கிடுதல், திருநந்தவனத்தில் மலர் கொய் தல், மெழுகுதல், திரு அலகிடுதல், இறைவன் புகழை வாயினாற் பாடி வாழ்த்துதல், அசையா மணி போன்றவற்றை அடித்தல், இறைவனுக்கு வேண்டிய அபிஷேக திரவியங்களைக் கொணர் தல் ஆகிய திருத்தொண்டுகள் யாவும் சரியை நெறி நிற்போர் செய்ய வேண்டியவை ஆகும்.

**எளியனல் தீபம் இடல், மலர் கொய்தல்**
**அளிதின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்**
**பளிபணி பற்றல் பல்மஞ்சனம் ஆதி**
**தளி தொழில் செய்வது தான் தாசமார்க்கமே.**[59]

ஆத்மார்த்த பூசையாகிய சிவலிங்கப் பூசை செய்தல், இறைவனது புகழைச் சொல்லி வணங்குதல், திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், குற்றமற்ற தவ ஒழுக்கங்களை மேற் கொள்ளல், உண்மை பேசுதல், காமம் முதலிய

அறுபகைகளையும் நீக்குதல், அன்போடு அன்ன பாவனை செய்தல் ஆகிய அனைத்தும் கிரியை நெறியாகிய சற்புத்திர மார்க்கத்திற்கு உரியன வாகும்.

**பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட்டு அன்னமும் நீ சுத்தி செய்தல் மற்று**
**ஆசற்ற சற்புத்திர மார்க்கம் ஆகுமே.**[60]

அட்டாங்க யோகத்தின் இறுதி நிலை சமாதி நிலை ஆகும். சமாதி நிலையில் தியானிப்போன், தியானம், தியானிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடுகள் நீங்கிவிடும். தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாகவே மாறிவிடு வான். யோக நெறியில் நின்று சமாதி கூடும். யோகியின் உள்ளத்திலே முழு உலகமும் அடங்கி விடும் சமாதியிலே சிவனது அருவத் திருமேனியைத் தியானிக்க அச்சிவம் சுடர் விடும். பேரொளிமயமாய் விளங்கும் யோக சமாதி கூடுவோருக்கு அட்டமா சித்திகளும் கை வரும். இவர்கள் சித்தத்தை சிவன்பாலே வைத்த சித்த புருஷர்களாகத் திகழ்வார்கள்.

**யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்**
**யோகச் சமாதியின் உள்ளே உளர்ஒளி**
**யோகச் சமாதியின் உள்ளே உளசக்தி**
**யோகச் சமாதி உகந்தவர் சித்தரே.**[61]

ஞான சாதனை செய்யும் போது பொய்யறி வாகிய அஞ்ஞானம் ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலையே சிவத்தோடு சேர்ந் திருக்கும் நிலையாகும். சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தை அன்றிப் பிறிதொன்றையும் காணாது.

ஆன்மா தன்னையும் சித்தாகிய சிவமாகவே காணும். ஆன்மா சிவத்தோடு கலந்து அனுபவிக் கும் இன்பமே பேரின்பம் ஆகும். இந்தக் கலப்பு நிலையே அத்துவிதமுத்தி எனப்படும். இதனைச் சாயுச்சிய முத்தி என்றும் பரமுத்தி என்றும் சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. ஞானத்தைவிட வேறு எந்த மார்க்கமும் முக்திக்குக் கொண்டு செல்லாது. உண்மையான அறிவாகிய ஞானத் தில் திளைத்தவர்களே சிறந்தவர்கள்.

**ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை**
**ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று**
**ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்**
**ஞானத்தின் மிக்கார் நரரின் மிக்காரே.**[62]

"எதையும் கண்டு கேட்டு சிந்தித்து தெளி வதே ஞானமார்க்கம் என்று சைவசித்தாந் தம் கூறுகிறது". உள்ளத்தை தராசு போல் காண்பது இரு வினை ஒப்புநிலை. விருப்பு வெறுப்பு இல்லாது பார்க்கின்ற ஒரு அறிவு நிலை. உயிர் தன்னை விட்டு நீங்கி இறைவனடி சேர்வதற்கான வழியே மலபரிபாகம் ஆகும். திருவருள் சத்தி யின் வீழ்ச்சியே சத்திநிபாதம் எனப்படும்.[63]

சரியை, கிரியை நெறிகளில் நின்று இறை வனிடம் அன்பு செலுத்தி அருள் பெற்று யோகத் தில் நின்று நெறிப்பட்டு முதிர்ச்சி அடைந்து பின்னர் குரு அருளால் ஞானம் எய்தலாம் என்றே திருமந்திரம் கூறுகிறது.

### அன்பே சிவம்

திருமந்திரத்தின் மூலமந்திரம் அன்பே சிவம் என்பதே ஆகும். தருமத்தையும் தருமம் செய்யும் முறைகளையும் எடுத்தோதிய திருமூலர் இறைவனிடம் அன்பு கொள்ளும் முறையையும் சிறப்பாக விளக்குகிறார். அன்பு என்றும் சிவம் என்றும் வெவ்வேறாகப் பிரித்துக் கூறுவது தவறு எனவும் இரண்டும் ஒன்றேயெனவும் திருமூலர் வலியுறுத்துகிறார். அன்பு தான் கனிந்து பூரணம் பெற்றுச் சிவமாகிறது என்பதை மக்கள் அறியா மல் தடுமாறுகிறார்கள். அன்பு தான் சிவமாகிறது

என்பதை அறிந்து விட்டால் அந்த அன்பு வெள்ளத்திலேயே இதயம் திளைத்து சிவானந்தப் பேற்றினைப் பெறுவார்கள்.

"மத வேறுபாடுகள் இருக்கலாம், சமயச் சண்டைகள் கிளம்பலாம். ஆனால் அன்பு தான் கடவுள் என்ற விசயத்தில் விவாதம் ஒன்றுமிருக்க முடியாது இந்த அன்பு தான் சிவம் என்று மக்கள் உணர்ந்தால் ஒரு வரை ஒருவர் விரோதித்துக் கொள்ள மாட்டார்கள். இம்சிக்கமாட்டார்கள். இந்த இம்சைகளுக்கும் இவ்விரோதங்களுக்கும், யுத்தங்களுக்கும் காரணம் என்ன என்று கேட்டால் அன்பை மறப்பதுதான். அன்பு தான் உண்மை, அன்பு தான் பரதத்துவம் என்று உறுதி கொண்டால் சுகம் நமக்குத் தானாகவே கிடைக்கும்."[64]

அன்பு வேறு, சிவம் வேறு என்று கூறுகிறவர்கள் அறிவில்லாத மூடர்கள். அன்பே சிவம் என்பதைப் பலரும் அறியாதிருக்கின்றார்கள். அன்புதான் சிவம் என்பதை எல்லோரும் அறிந்து விட்டால் பின்பு அவர்களே அன்புருவான சிவமாய் அமர்ந்திருப்பார்கள்; வாழ்ந்திருப்பார்கள்; ஆனந்த வெள்ளத்தில் திளைத்திருப்பார்கள்.

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**[65]

இறைவனுடைய அருளைப் பெற வேண்டும் என்பதற்காக மக்கள் விரதங்கள் காத்து நோன்பு இருக்கிறார்கள். உடம்பை வருத்தி யோகப் பயிற்சி செய்கிறார்கள். துறவு பூண்டு சரீரத்தை துன்புறுத்தி இந்திரியங்களை ஒடுக்கப்பார்க்கிறார்கள். அன்பு இல்லாமல் செய்யப்படுகின்ற இச் செயற்பாடுகளினால் எதுவித பிரயோசனமும் இல்லை. எலும்பையே விறகாக அடுப்பில் போட்டு உடம்பின் தசைகளையே கறிகாய்களைப் போல் வறுக்கும் சட்டியிலே இட்டு, தங்க நிறம் அடையும் வண்ணம் நன்றாகப் பொரியும் படி வறுத்தாலும், அதாவது கடுமையான தவங்களாலும் விரதங்களாலும் இந்த உடம்பை எவ்வளவு தூரம் வருத்தினாலும், அன்பினால் உள்ளம் உருகி இறைவனை வழிபட்டால் அன்றி இறையருளைப் பெற முடியாது.

"அன்பினால் உருகி உள்ளம் குழைந்தால் அல்லாமல் என் அப்பனை அடைய முடியாது! இதயம் உருகாமல் உடலை வருத்தி எத்தனை தவங்கள் இருந்தும் பயனில்லை. அன்பு ஒன்று தான் அவனை அடையும் மார்க்கம். உடலை வீணாக வருத்துவதை விட்டு, அன்பைச் செலுத்தி அதனால் தனதுள்ளத்திலும் இன்பம் அடைந்து, இறைவனையும் திருப்தி செய்வதே முறை என்கிறார் முனிவர்."[66]

உள்ளத்திலே ஈரம் இல்லாவிட்டால் நாம் இறைவனைக் காண முடியாது. அன்பு உருவாய் இருக்கும் பரதத்துவத்தை அறிய வேண்டுமானால் அன்பு மயமாகப் பார்க்க வேண்டும். அன்பு செய்வாரைத் தான் சிவன் காப்பாற்றுவார். இந்த அன்பை நாம் செய்யாவிட்டால் ஈசனை எவ்வளவு காலம் வணங்கினாலும் நாம் அடைய முடியாது.

"அன்பே தான் பரதத்துவம் தைத்திரியத்திலே அழகான மந்திரம் இருக்கிறது. பிரம்ம தத்துவத்தை ரசமென்றும், ஆனந்தமென்றும் அந்தச் சுலோகம் கூறுகிறது. அந்தப் பரம்பொருள் ஞானரசம், இன்பமயமானது, அன்பே வீடானது. ஜீவர்கள் ரசமயமான ஆனந்தத்தை இன்பத்தை அடைந்து தான் ஆனந்தம் பெறுகிறார்கள். இந்த ஆனந்தமாய் இருக்கிற அவகாசம் இல்லாவிட்டால் எந்தப்பிராணன் ஜீவிக்க முடியும்? உயிர் வாழ முடியும்? என்று கேட்கின்றது இந்தச் சுலோகம்."[67]

**அடிக்குறிப்புகள்**

1. திருமந்திரம், 63
2. திருமந்திரம், 81
3. திருமந்திரம், 101
4. தண்டபாணி தேசிகர்.ச, "பத்தாம் திருமுறை திருமந்திரம்," தெய்வத் தமிழ், ப.194.
5. திருமந்திரம், 2984
6. கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப.108
7. தண்டபாணி தேசிகர், ச., "பத்தாம் திருமுறை திருமந்திரம்," தெய்வத்தமிழ் ப.195
8. தண்டபாணி தேசிகர்,ச., "பத்தாம் திருமுறை திருமந்திரம்," "தெய்வத்தமிழ் ப.196
9. திருமந்திரம், 85
10. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, ப.18
11. திருமந்திரம், 725
12. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, ப.90
13. திருமந்திரம், 1421
14. திருமந்திரம், 115
15. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, ப.32
16. திருவருட்பயன், 2
17. திருமந்திரம், 1053
18. திருமந்திரம், 2192
19. திருவருட்பயன், 30
20. திருமந்திரம், 2874
21. முருகவேள்.ந.ரா, "மகளிரிழிவு", திருமந்திர மாநாட்டு மலர், 1961, ப.37
22. தண்டபாணி தேசிகர்,ச, "பத்தாம் திருமுறை, திருமந்திரம்," தெய்வத்தமிழ், ப.189
23. பெரியபுராணம், 43
24. இராமநாதன் செட்டியார்.கரு., "தொடக்க நாள் பேருரை", திருமந்திர மாநாட்டு மலர், 1965, ப.7
25. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, ப.120
26. திருமந்திரம், 2615
27. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, ப.4
28. திருமந்திரம், 252
29. ஆறுமுகத்தமிழன், கரு., திருமூலர் காலத்தின் குரல், பக். 91
30. மகாதேவன், டி.எம்.பி, இந்துசமய தத்துவம், ப.48
31. பாம்பாட்டிச் சித்தர், சித்தர் பாடல்கள், ப.209
32. திருமந்திரம், 532
33. திருமந்திரம், 537
34. பாலசுப்பிரமணியம், டி., திருமந்திரம், ஆய்வுக்கோவை, சமயவியல், 2004, ப.73
35. பாலசுப்பிரமணியம்,டி., திருமந்திரம், ஆய்வுக்கோவை, சமயவியல், 2004, ப.75
36. திருமந்திரம், 262
37. திருமந்திரம், 554
38. தில்லைநாதன், சி., "திருமூலர் கண்ட சிவம்", சிவ தத்துவ மலர், ப.112

39. திருமந்திரம், 200

40. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, ப.52

41. விசுவநாத ஐயர், ரா., "பிறர்மனை நயவாமை," திருமந்திர மாநாட்டு மலர், 1961, ப.23

42. திருமந்திரம், 201

43. திருமந்திரம், 198

44. துரைசாமி ஐயர், சி., "கொல்லாமை", திருமந்திர மாநாட்டு மலர், 1961, ப.13

45. திருமந்திரம், 332

46. இராமநாதன், செட்டியார், கரு., அறஞ் செய்யான் திறம், திருமந்திர மாநாட்டு மலர், 1961, ப.68

47. திருமந்திரம், 258

48. ஜகந்நாதன், கி.வா., "இராசதோடம்", திருமந்திர மாநாட்டு மலர், 1961, ப.54

49. திருமந்திரம், 238

50. தியாகராஜா தேசிகர், தி.ச., "அந்தண ரொழுக்கம்", திருமந்திர மாநாட்டு மலர், 1965, ப.44

51. திருமந்திரம், 227

52. திருமந்திரம், 231

53. தியாகராஜா தேசிகர், தி.சா., "அந்தணரொழுக்கம்", திருமந்திர மாநாட்டு மலர், 1961, ப.47

54. ஞானசம்பந்தம், அ.ச., "பொறையுடைமை", திருமந்திர மாநாட்டு மலர், 1965, ப.50

55. திருமந்திரம், 539

56. தியாகராஜா தேசிகர், தி.சா., "பெரியாரைத் துணைக்கோடல்", திருமந்திர மாநாட்டு மலர், 1965, ப.20

57. திருமந்திரம், 543

58. திருமந்திரம், 1446

59. திருமந்திரம், 1502

60. திருமந்திரம், 1496

61. திருமந்திரம், 1490

62. திருமந்திரம், 1467

63. சுப்பிரமணியபிள்ளை, "நால்வகை நெறி", திருமந்திர மாநாட்டு மலர், 1954, பக்.40-41

64. மகாதேவன், டி.எம்.பி., "தலைமையுரை", திருமந்திர மாநாட்டு மலர், 1962, பக். 11-12

65. திருமந்திரம், 270

66. ராஜாஜி சோமு, திருமூலர் தவமொழி, பக். 64-65

67. மகாதேவன், டி.எம்.பி., "தலைமையுரை", திருமந்திர மாநாட்டு மலர், 1962, ப.12

# கண்ணப்பநாயனாரின் ஈடு இணையில்லாத பக்தி

**சைவப்புலவர் வை.சி.சிவசுப்பிரமணியம்** B.A
**ஓய்வுநிலை அஞ்சல் அதிபர்**

மெய்யடியார்களின் வாழ்க்கையின் அத்தி வாரமாக அமைவது பக்தி ஒன்றேயாம். பக்தி என்பது இறைபொருளிடத்துக் கொள்ளப்படும் மிக உயர்ந்த அன்பாகும். உண்மையில் பக்தி என்பது இன்னதுதான் என்று அறுதியிட்டு ஆராய்ந்து, இலக்கணம் கூற முடியாத தொன்றா கும். விதிமுறை மார்க்கத்தை விட பக்தி மார்க் கத்தையே இறைவன் பெரிதும் ஏற்றுக் கொள் கின்றான் என்பதை விளக்கவும், பக்தி மார்க்கத் தில் செல்லும் ஒருவனின் வளர்ச்சி எவ்வாறு இருக்குமென்பதையும், அவர் தொண்டு எவ்வாறு செயல்படும் என்பதனையும் விளக்குகின்றது கண்ணப்பநாயனார் புராணம். அதனைச் சுருங் கக்கூறி அவர்தம் பக்தித்திறனை ஆராயலாம்.

வேடுவர் தலைவனான நாகனுக்கும் அவனது மனைவியான தத்தை என்பவளுக்கும் முருகன் அருளால் ஆண்குழந்தையொன்று பிறக்கின்றது. அக்குழந்தைக்குத் திண்ணன் எனப் பெயர்சூடி வளர்த்து வருகின்றனர். திண்ணனாருக்குச் சகலவிதமான பயிற்சிகளும் கற்பிக்கப்படுகின் றது. வளர்ந்து வாலிபப் பருவம் எய்தியதும், வேடுவத் தலைவனாகப் பட்டம் சூட்டப்படுகின்றது. திண்ணனார் தனது கூட்டத்தாரோடு வேட்டைக் குப் புறப்படுகிறார். இவர்களுள் பலசாலிகளான நாணன், காடன் என்பவரும் கூடச் செல்கின்ற னர். வேட்டையின் போது திண்ணனார் காட்டுப் பன்றி ஒன்றினை வேட்டையாடிக் கொல்கிறார். களைப்பின் மிகுதியால் பருக நீர் வேண்டி நீர் நிலைகளைத் தேடிச் சிறிது தூரம் சென்றனர். செல்லும் பாதையில் திருக்காளத்தி மலை தென்பட்டது. இந்த மலையில் வேடர்கள் குடுமித் தேவர் என அழைக்கும் திருக்காளத்தி நாதரின் ஆலயமும் அமைந்திருந்தது. அண்மையில் பொன்முகலி ஆறும் தென்பட்டது. ஆற்றின் அண்மையில் கொன்ற பன்றியைத் தீயினால் வாட்டிப் பதம் செய்யும் வேலையைக் காடன் மேற்கொண்டான். திண்ணனாரும் நாணனும் குடுமித்தேவரைக் கண்டு தொழுவதற்காக மலைமீது ஏறிச் சென்றனர்.

முற்பிறப்பில் திண்ணனார் செய்த வினைப் பயனாகத் திருக்காளத்திநாதர் அவரைத் தன்பால் ஈர்க்கச் சித்தங் கொண்டார். அன்பே வடிவாய், என்பும் நெக்குருக, உள்ளத்தில் எழுந்த பெரும் வேட்கையோடு திண்ணனார் மேலே சென்றார். திண்ணனார் சிவபிரானைத் தரிசிப்பதற்கு முன்னமே திருவருள் நல்க, அவரது திருமேனி அன்புடையதாக ஆயிற்று. திண்ணனாரின் அன்பு முன்செல்ல அவர்தம் தூலசரீரம் பின்சென்றது. இதனைச் சேக்கிழார் "நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும் பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபனம் ஏறி" என்று கூறுவார். இறைவனை அடையும் வழியானது தத்துவங் கடந்து செல்லும் நெறியாதலைச் சுட்டுகின்றது இக்கூற்று. இதனையே அருணகிரிநாதரும் கந்தரனுபூதியில்,

**'ஆறாறையும் நீத்து அதன்மேல் நிலையைப்**
**பேறா அடியேன் பெறுமாறு உளதோ**
**சீறா வருசூர் சிதைவித்து இமையோர்**
**கூறா உலகம் குளிர்வித்தவனே"** என்கிறார்.

மேலே சென்ற திண்ணனார் குடுமித் தேவரைக் கண்ணுற்றார். கண்ட மாத்திரத்தில் "பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம் ஆனார்" என்பார் சேக்கிழார். மலையிடை உள்ளவர் தனியே இருப்பதைப் பார்த்துத் திண்ணனார் மிகவும் வருந்துகிறார். இந்த அன்பு மேலும் வளர்ந்தது. ஓடிச்சென்று நன்கு தழுவி, உச்சி மோந்து நிற்கிறார். ஆனந்தக் கூத்தாடுகிறார். இப்படியாகத் திண்ணனார் நடந்து கொள்ளும் நிலையை வாக்கின் வேந்தராகிய வாகீசர் வாக்கு உணர்த்துகிறது.

**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னர் அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தை ஆசாரத்தை**
**தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே.**

இப்படியான நிலையிலே திண்ணனார் தன்னை மறந்து, தன் பசியையும் மறந்து, மலையில் உள்ள இறைவனுக்கு உணவு தேடப் புறப்பட்டு விட்டார். இறைவனுக்குப் படைக்கப் பதஞ் செய்த ஊனை இலையிலும், சூடுவதற்குரிய மலர்களைத் தலைமுடியிலும், திருமஞ்சனத்திற்குரிய நீரைத் திருவாயில் உறிஞ்சியும் கொண்டு செல்லலானார். மலைமீது எழுந்தருளியுள்ள குடுமித்தேவர் என்னும் பரமன் திருமுடிமீது முன்னமே வைக்கப்பட்டிருந்த மலர்களைத் தன் காற்செருப்புக்களால் அகற்றி, வாயிற் கொணர்ந்த (மஞ்சள்) நீரை ஈசன் திருமுடிமீது உமிழ்ந்து, நீராட்டி தனது தலைமுடிமீது கொணர்ந்த மலர்களைச் சிவபிரான் மீது சாத்தி, பக்குபவப் படுத்தப் பெற்ற ஊனமுதினை நைவேத்தியமாகப் படைக்கிறார். இவரது செயலையும், நிலையையும் கண்ணுற்ற சகதோழர்களான நாணனும், காடனும் "இவனுக்குத் தெய்வப்பித்து பிடித்து விட்டது" என்று கூறி ஊருக்குத் திரும்பிச் செல்கிறார்கள்.

ஊனமுதின் சுவையினைக் கண்டறியும் வகையில் தமது வாயிலிட்டுச் சுவைத்துப் பார்த்து, மிகவும் இனியவற்றையெல்லாம் படைத்துக் குடுமித்தேவரை அமுது செய்தருளும் படி வேண்டி நிற்கின்றார். ஒரு தாயானவள் எப்படி தன் பிள்ளைக்கு ஊட்டும் உணவினைத் தான் சுவைத்துப் பார்த்து ஊட்டுவாளோ அது போலவே நமது திண்ணனாரின் செயலும் அமைந்திருந்தது. திண்ணனார் முற்பிறப்பில் செய்த தவமானது திரண்டு சார்தலாலும், சிவபிரானின் கருணை கூர்ந்த நோக்காலும், திண்ணனார் புனிதம் பெற்று மேவுதலாலும் இறைச்சியும் புனிதமாயிற்று. அதுவே அமுதும் ஆயிற்று. இப்படியான குற்றமற்ற ஊனமுதினை அமுது செய்தருளும்படி மிகவும் அன்போடும், பண்போடும் திண்ணனார் வேண்டுவதைச் சேக்கிழார் மிகவும் சுவையாகச் சொல்கிறார்.

**"கொழுவிய தசைகள் எல்லாம்**
**கோலினில் தெரிந்து கோத்து அங்கு**
**அழலுறு பதத்தில் காய்ச்சிப்**
**பல்லினால் அதுக்கி நாவில்**
**பழகிய இனிமை பார்த்துப்**
**படைத்த இவ்விறைச்சி சால**
**அழகிது நாயனீரே**
**அமுது செய்து அருளும்"** என்றார்.

இந்நிலையில் மாலை நேரமாகி இரவு சேர்கின்ற தன்மையில், கொடிய விலங்குகளால் ஊறு ஏற்படுமோ என்று அஞ்சி திருக்கையில் வில்லைத் தாங்கி காளத்திநாதரின் பக்கத்தில் அகலாது நின்று காவல் புரிகின்றார். எம்பிரானின் திருக்கோலத்தின் எழிலையே நோக்கி

இரவு முழுவதும் நின்றார். திருக்காளத்தியில் கண்ணப்பர் தெய்வ உருவச்சிலை வைத்துப் பூசிக்கப்படுவதை இன்றும் காணலாம்.

கண்ணப்பனாருக்கு எதிராக விதிமார்க்கத்தில் தலைநின்ற சிவகோசரியார் திண்ணனார் படைத்த ஊனமுதை அவர் இல்லாதபோது வந்து பார்த்துப் பெரிதும் துயர் உற்றார். ஊனமுது முதலியவற்றை அகற்றி அலகிட்டு துப்பரவு செய்தார். மீண்டும் நீராடி வந்து ஆகம விதிப்படி பூசித்துச் சென்றார். இப்படியே ஐந்து நாட்கள் சென்றன. சிவகோசாரியரும் மிகுந்த மனவருத்தத்துடன் நாள்தோறும் துப்பரவு செய்து சிவபிரானைப் பூசிக்கிறார். இத்தகைய அனுசித்தத்தைப் போக்குமாறு வேண்டி நித்திரை செய்தார். சிவபிரான் சிவகேசரியாரின் கனவில் தோன்றித் 'திண்ணன் அன்பு வடிவம் ஆனவன்; நாளை பகல் மறைந்திருந்து பாரும்" என்று சாற்றி மறைந்தருளினார்.

சிவகோசரியார் மறுநாள் மறைந்திருந்து கண்டு கொண்டிருந்தார். திண்ணனாரின் ஈடு இணையற்ற அன்பினை வெளிப்படுத்தச் சிவபிரான் தனது வலக்கண்ணில் உதிரம் பெருகுமாறு செய்தார். திண்ணனார் பதறிச் சென்று பெருமானுக்குத் தீங்கு விளைவித்தவர் யாவரோ என்று தேடினார். பின்னர் மூலிகை மருந்துகளைக் கொணர்ந்து பிசைந்து கண்ணில் வார்த்தார். இரத்தப் பெருக்கு நிற்கவில்லை. ஊனுக்கு ஊன் பொருந்தும் என்னும் வகையில் திண்ணனார் தன் வலக்கண்ணைப் பெயர்த்து அப்பினார். நாயனார் மகிழும் வகையில் இரத்தம் பெருகுவது நின்றது.

திண்ணனார் கண்ணும் காளத்தியப்பர் கண்ணும் ஒரே அளவுடையனவாயிருந்தன. திண்ணனாரும் அன்புருவம்; இறைவரும் அன்புருவம்; ஆதலால், அந்தக் கண்ணுடன் இந்தக் கண் பொருந்தியது. இந்த வகையில் ஒருவருடைய கண்ணினை இன்னொருவருக்குப் பொருத்தும் சத்திரசிகிச்சையை (Transplant Operation) திண்ணனார் அப்பொழுதே ஆரம்பித்து வைத்து விட்டார் என்று சொன்னால் மிகையாகாது. எமது உடலுறுப்புக்களில் கண் எவ்வளவு முக்கிய மானது என்பது எமக்குத் தெரியும். ஈசன்பால் உள்ள பேரன்பின் நிமித்தம் தனது கண்களையே இழக்கத் துணிந்தார் திண்ணனார்.

அடுத்து ஈசனது இடக்கண்ணிலிருந்து உதிரம் பெருகத் தொடங்கியது. அப்போது திண்ணனார் இதற்கும் தம்மிடம் மருந்து உண்டென்று கூறித் தமது இடக்காலை காளத்திநாதரின் இடது திருக்கண்ணில் ஊன்றித் தமது இடது கண்ணைத் தோண்ட முற்பட, தேவதேவராகிய ஈசன் தடுத்திலரானார். இதனைச் சேக்கிழார் பாடலில் கண்டு மகிழலாம்.

**கண்ணுதல் கண்ணில் தம்கண் இடந்தப்பிற் காணும் நேர்பா**
**டெண்ணுவார் தம்பிரான் தன் திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி**
**உண்ணிறை விருப்பினோடும் ஒரு தனிப் பகழி கொண்டு திண்ணனார்**
**கண்ணில் ஊன்றித் தரித்திலர் தேவதேவர்.**

ஈசனார் மிகவும் இரங்கித் திண்ணனாரின் கைகளைத் தமது திருக்கைகளாற் பிடித்து தடுத்து "கண்ணப்ப நிற்க" எனத் திருவாய் மும்முறை சாற்றி, "மாறிலாய் எனது வலத்தில் நிற்க" என்று திருவருள் புரிந்தார். இடப்பக்கம் அம்மையாருக்குரியது. ஆதலின் தன் பக்கமான வலத்தில் நிற்குமாறு பணித்தார் போலும். இதனிலும் பெறத்தக்க பேறு வேறு உண்டோ!

பிறந்த காலம் தொட்டு விதி மார்க்கத்தில் நின்று, ஒழுக்க சீலராகிய சிவகோசரியாரால் இறைவனை நேரில் காண முடியவில்லை.

ஆனால் தீவிர பக்தி மார்க்கத்தில் சென்ற திண்ணனார் ஆறேயாறு நாட்களில் இறைவனை நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றார். இது கண்ட சிவகேசரியார் பேரானந்தத்தில் திளைத்துத் திருக்காளத்திநாதரின் கருணையில் ஆழ்ந்தார். இப்படியாகத் திண்ணனார் ஆறே ஆறு நாட்களில் இறைவனது திருவருளுக்குப் பாத்திரமாகி பரமுத்தி அடைந்து கண்ணப்ப நாயனார் ஆயினார்.

அதனாலே தான் அன்பின் வடிவான மாணிக்கவாசகரும், கண்ணப்பரது அன்பையும், தமது உள்ளத்து நிலவிய அன்பையும் சீர்தூக்கிப் பின்வருமாறு சொல்கிறார்.

**கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும்**
**ஆட்கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாஎன்ற வான் கருணைச்**
**சுண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ**

– திருவாசகம்

கண்ணப்பரை ஏனைய அருளாளர்கள் எவ்வாறு புகழ்ந்துள்ளார்கள் என்பதை நோக்குவோம்.

**நாவுக்கரசர்**
**'கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்'**
**'கானவன் காண் கானவனுக்கு அருள் செய்தான் காண்'**

**திருஞானசம்பந்தர்**
**'கான லைக்கும் அவன் கண் இடந்து அப்ப நீள்**
**வானலைக்கும் தவத்தேவு வைத்தான்'**

**சுந்தரமூர்த்தி நாயனார்**
**'கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பற் கடியேன்'**

**பட்டினத்தார்**
**'நாளாறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லன்'**
**பூந்துருத்தி நம்பிகாட நம்பி**
**'கடியார் கணம் புல்லர் கண்ணப்பர் என்றுன்...'**

சைவ வரலாற்றிலே காணப்படும் மிக உயர்ந்த குறிக்கோளை கண்ணப்பநாயனார் புராணத்தில் காண முடிகிறது. ஒரு மனிதன் எடுத்துள்ள இப்பிறவியிலேயே, இதற்கு மேலான பதவி ஒன்றும் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையை அடைய முடியும், அதற்கு கல்வி, உயர் குடியிருப்பு முதலிய எத்தகைய அடிப்படைத் தேவைகளும் தேவையில்லை. ஒருவன் தன்னை முற்றுமுழுதாக இறைவனிடம் ஒப்படைத்து விடுவானேயானால் இப்படியான உயர் நிலையை அடைய முடியும் என்ற மிகப் பெரிய தத்துவத்தைக் கண்ணப்பரது புராணம் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் சேக்கிழார் பெருமான்.

**உசாத்துணை நூல்கள்**


1. பெரியபுராண வசனம் – துர்க்காதாஸ், எஸ்.கே.ஸ்வாமி.
2. பெரியபுராண விளக்கம் – பகுதி 4, கி.வா.ஜகந்நாதன்.
3. பெரியபுராணம் – முதல் தொகுதி, புலவர் பி.ரா.நடராசன்.
4. பெரியபுராணம் – திருமுருக கிருபானந்த வாரியார்.
5. அறுபத்துமூன்று நாயன்மார்கள் – சூலூர் கலைப்பித்தன்.
6. பெரியபுராணக் கதைகள் – வி.கல்யாண சுந்தரனார்.

# திருமுருகன் அருள் பெற்ற செல்வர்கள்

கான கதாவாரிதி
பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா

**குமரகுருபரர்**

ஒன்பது கங்கா நதி, ஒன்பது விஷ்ணுபதி, ஒன்பது கயிலாயங்களைத் தன் கரையில் கொண்டது தாம்பிரபரணி. அந்தப் புனித ஆற்றின் வடகரையில் உள்ள ஒன்பது பதிகளுள் ஒன்றானது வைகுண்டம். அப்பதியின் வடபால் இருமையிலும் பேறளிக்கும் ஸ்ரீ கயிலாயம் இருக்கிறது.

இங்கு தான் முருக பக்தரான சண்முக சிகாமணிக் கவிராயர் வாழ்ந்து வந்தார். இவரது மனைவி சிவகாமசுந்தரி தெளிந்த கற்பினள். இருவரும் செய்த தவத்தின் பயனாக அவர்கட்குப் பிறந்தது ஓர் ஆண்குழந்தை. தம் தவமகனைப் பார்த்துத் தந்தையின் நெஞ்சம் தழைத்தது அன்பின் விலாசமான குழந்தை முகம் நோக்கி அகங்களித்தாள் அன்னை. மைந்தனது மழலை கேட்க அவாவியது பெற்றோருடைய மனம். குழந்தையிடம் எவ்விதக் குதலை மொழியும் பிறக்கவில்லை. ஆண்டு ஐந்தும் ஆகியது. ஊமை தானோ தம் செல்வன் என உன்னிய பெற்றோர் ஊகம் உண்மையே ஆயது. இதன் மேல் இடிந்தது பெற்றோர் இதயம்.

அஞ்சிய நெஞ்சத்திற்கு ஆறுதல் தருவது ஆறுமுகம். ஆதலின் திருச்செந்தூரானைச் சிந்தித்து அவர்கள் சித்தம் கலங்கினர். பிள்ளையைத் தூக்கினார் தந்தை. தாயும் பின் தொடர்ந்தாள். செந்திலம்பதியைச் சேர்ந்தனர். அனுட்டானங்களை முடித்தனர். சேயுடன் வீழ்ந்து சேவித்தனர். முருகா! எனது இறைவா! பிரபோ! உனதருளாடலை அறிவார் யாரே என்று உள்ளம் உருகி நின்றனர். ஒரு மண்டலம் வரை அங்கிருந்தே முருகனை வழிபடுவதாக நியமம் பூண்டனர். உப்பில்லா அன்னம் ஒருவேளை. மற்ற நேரம் எல்லாம் முருக நாமமும், ஜெபமும், பஜனையும் செய்தனர். இது அவர்கள் நியமம். உறுதியும் ஆகும். விரதப் பூர்த்தி நாள் நெருங்குகிறதே! குழந்தைக்கு இன்னும் அருளவில்லையே முருகன் என்று நினைந்து இருவரின் நெஞ்சமும் முருகா! உனதருளால் உதித்த இச்சேயின் வாயைப் பேசச் செய்! மதலை வாயில் மழலை வரச் செய்! கயிலை மலையனைய செந்தில் பதிவாழ்வே!" என்று கதறுகிறார் கவிராயர்.

"ஏழை நான் இறைவா! கண்கண்ட தெய்வமே! பிள்ளை முகம் பார். திருச்செந்தூர் முருகா! உன்னை வாழ்த்த சேய்க்கு வாய் தா என்று" சிவகாமசுந்தரி மனங்கசிந்துருகத் தேம்புகின்றாள்.

ஹாம்! ஹீம்! ஹா! என்று கர்ஜிக்கிறது ஒரு குரல். ஆ! அது என்ன என்று ஓசை வந்த திசை நோக்கினர் யாவரும். நீலமயிலோன் தன் அருட் பெருங்கருணையால் அர்ச்சகர் மீது ஆவேசித்துள்ளான். வேல் எடுத்து ஏந்துகின்றார் அந்த வேதியர். மணம் கமழ் மாலை ஒன்றை மைந்தன் கழுத்தில் இடுகின்றார். தீராத வினை அகற்றத் திருநீறு தூவுகிறார். தீர்த்தம் தெளிக்கிறார்.

அதிர்கிறது எல்லார் மனமும். பார்க்கிறார்கள் என்ன வியப்பு!

இளஞ் சிறுவன் எதிர்நின்று முன்னும் பின்னும் சாய்ந்து ஆடும் அர்ச்சகர் "பூ! பூ! பூ!" என்கிறார். கூர்ந்து நோக்குகிறது குழந்தை. எதிர்முகமாக ஊறிய வாயோடு பூ என்கிறார் இளம் புதல்வர். அர்ச்சகர் பிள்ளை முகம் பார்த்து "பூ பா, தே, நா, ஆ" என்கிறார். பதிலுக்குப் பதில் பகரும் இளம் பாலகன் நாவில் ஞானவாணி நடனமிட தன்வசம் கெட்டுப் பரவசப்படுகிறார். திடீரென்று அர்ச்சகர் ஆவேசம் அகல்கிறது.

**"பூபூபூ பூபூபூ ..........................**
**பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய**
**பாமேவு தெய்வப் பழமறையும் தேமேவு**
**நாதமும் நாதாந்த முடிவும் நவை தீர்ந்த**
**போதமும் காணாத போதமாய் - ஆதிநடு**
**அந்தம் கடந்த நித்தியானந்த போதமாய்ப்**
**பந்தம் தணந்த பரஞ்சுடராய்'**

என்று தொடர்ந்து பாடுகிறான் இளம் பாலகன்.

கோயில் மணிகள் கண கண என்று ஒலிக்கின்றன. திருச்செந்தூரில் ஐந்து வயதில் பேசாப்பிள்ளை பேசும் அற்புதத்தை உலகம் அநுபவித்தது. எம் வயிற்றில் பாலை வார்த்தாய். உண்மைத் தெய்வமே, உமையாள் குமரா என்று ஏத்தி தாயும், தந்தையும் மைந்தரை உடன் கொண்டு தம் ஊர்வந்து சேர்ந்தனர். இச்செய்தி அறிந்து அன்பர்கள் கூட்டம் கூட்டமாக வந்து இளம் பிள்ளையாரை வணங்கினர்.

**நக்கீரர்**

ஆறுபடை வீடுகளை மக்களுக்கெல்லாம் அறிமுகம் செய்த பெருமை நக்கீரருக்குத்தான் உண்டு. திருமுருகாற்றுப்படைக்கும், திருப்பரங் குன்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கடைச் சங்கப் புலவர்களுள் ஒருவர் நக்கீரர். மதுரையில் கோயில் கொண்டுள்ள சோம சுந்தரக் கடவுளோடு தமிழில் வாதம் புரிந்து புகழ் பெற்றவர். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று சிவபெருமான் எழுதிய பாடலில் குற்றம் கூறியவர்.

இவர் இப்பாவம் தீர தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார். செல்லும் வழியில் திருப்பரங் குன்றில் ஒரு குளக்கரையில் அமர்ந்து சிவபூசை செய்யும் போது அற்புதமான காட்சி ஒன்று. பாதி இலை நீரிலும், பாதி இலை நிலத்திலுமாக விழுந்தது. நீரில் விழுந்த பாதி மீனாகவும், நிலத்தில் விழுந்த பாதி கொக்காகவும் மாறின. மீன் கொக்கை இழுக்க, கொக்கு மீனை இழுக்க இப்படி ஒரு காட்சி. இதனால் சிவபூசை குழம்பியது.

கற்கிமுகி என்றொரு பூதம். அது சிவ பூசையில் தவறு செய்த ஆயிரம் பேரை ஒரே நேரத்தில் உண்ண வேண்டும் என்றொரு நியதி. அப்பூதம் தொழாயிரத்துத் தொண்ணூற் றொன்பது பேரைத் தேடிப் பிடித்து ஒருமலைக் குகையில் அடைத்து வைத்திருந்தது. இன்னும் ஒருவருக்காக எங்கும் தேடி அலைந்து திரிந்தது.

சிவபூசையில் தவறிய நக்கீரரையும் பிடித்துக் கொண்ட பூதம் ஆயிரமாவது ஆளாக அவரை யும் கொண்டு சென்று குகையில் அடைத்து விட்டுப் பூதம் வெளியே சென்றது. அங்கிருந்த அத்தனை பேரும் நக்கீரரிடம் தங்கள் துக்கத்தை முறையிட்டார்கள். அதை உணர்ந்த நக்கீரர் முருகனைத் துதித்து திருமுருகாற்றுப்படை பாடினார். அப்போது முருகன் அருளால் அவன் கைவேல் மலைக் குகையைப் பிளந்து பூதத்தை யுங் கொன்று யாவரையும் விடுதலை செய்தது. நக்கீரர் இருந்து பூசை செய்த இடம் சரவணப் பொய்கைக்கு அருகில் பஞ்சாட்சரப் பாறை எனக் குறிப்பிடப்பட்டு அதனருகில் நக்கீரருக் கும் ஒரு ஆலயம் காணப்படுகிறது.

**முருகம்மையார்**

திருப்பரங்குன்றத்தையே இருப்பிடமாகக்

கொண்டவர் முருகம்மையார்.

**'ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்**
**முருகா! என்றோது வார்முன்'**

என்பதை நன்குணர்ந்து இடைவிடாது முருக நாமத்தை தினம் ஓதுவார். இதனால் எல்லோரும் இவரை முருகம்மையார் என்று அழைத்தனர். அடுத்த வீட்டில் ஒரு வேலைக் காரன்; அவன் பெயரும் முருகன் என்பது அம்மையார் முருகா, முருகா என்று அழைக்கும் குரல் வேலைக்காரனுடைய காதில் விழுந்தால் அவனும் ஏன் என்று கேட்க ஓடி வந்து விடுவான். எல்லாரையும் முருகா என்றே அழைப்பார்.

இவருக்கு திருமணமும் நடந்தது. இருவரும் ஒத்த அன்பினராய் விளங்கினர். அம்மையார் அடிக்கடி முருகா, முருகா என்று அழைப்பது பலருக்குப் பிடிக்கவில்லை. கணவனுக்கும் பிடிக்கவில்லை. கணவனின் தங்கைக்கு அம்மை யார் மேல் பொறாமை. இவரது கணவன் தொழில் நிமித்தம் மூன்று மாத காலம் வெளியூர் சென்றான்.

இதற்கிடையில் கணவனின் தாயும், தங்கையும் பெரிய திட்டம் தீட்டினர். கணவனும் ஊர் திரும்பினார். அம்மையார் கணவனையே முருகனாக வணங்குபவர்.

திடீரென ஒருநாள் முருகம்மை தாய் வீடுசென்று இரண்டு தினங்கள் தாமதிக்க நேர்ந்தது. தாயும் மகளும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். முருகா என்று சொல்வதெல்லாம் வீண் ஏமாற்று; உண்மையில் அடுத்த வீட்டு வேலைக்கார முருகனைத்தான் இவள் கூப்பிடுகிறாள். அகாலமான நேரத்திலும் அவன் ஏனென்று கேட்டு ஓடி வந்திருக்கிறான். இதனை எங்களால் பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை. அவளை நீ அடக்கிவை. நீதான் கஷ்டப்படப் போகிறாய் என்று தன் மகனுக்குத் தாய் கூறினாள். முருகம்மை மீது வீண் அவதூறு கூறினாள்.

இரண்டு தினங்கள் கழித்து முருகம்மை வீட்டிற்கு வந்தாள். கணவனிடம் முந்திய கலகலப்பு இல்லை. மகிழ்ச்சியும் இல்லை. "என்ன முருகா ஒரு மாதிரி இருக்கிறீர்கள்" என்று மனைவி கேட்டாள். "இனிமேல் நீ முருகா என்று சொல்லக் கூடாது. எனக்குப் பிடிக்கவில்லை" சரி "முருகா" என்றாள். "முருகா என்று சொல்லாதே" என்றான் மறுபடியும். மறுபடியும் "சரி முருகா" என்றாள். கணவன் கோபத்தினால் பக்கத்தி லிருந்த கத்தியெடுத்து அவளது கையை இரண்டு துண்டங்களாக்கினான். அவள் "முருகா!" என்றாள். என்ன ஆச்சரியம்! துண்டிக்கப்பட்ட கரம் முருகன் அருளால் உடனேயே வளரப் பெற்றது.

**'அரிவை முருகா என்றழைக்கு முன்னே வந்து**
**கர முதவிறென்ற கருணைப்பெருந்தேவே'**

என்று இதனை சிதம்பர சுவாமிகளும் போற்றி யுள்ளார்.

**ஆதிசங்கரர்**

ஆதி சங்கராச்சார்ய சுவாமிகள் ஷண்மத ஸ்தாபனம் செய்து வரும் போது அவரிடம் பொறாமை கொண்ட அபிநவகுப்தன் அவர்மீது அபிசாரம் என்ற சூனியப் பிரயோகம் செய்து காசநோயை ஏற்படுத்தினான். அந்நோயால் அவதியுற்ற ஆச்சார்ய சுவாமிகள் திருக் கோகர்ணத்தில் வழிபடும் பொழுது "செந்தில் சென்று கந்தனை வழிபட்டால் நோய் தீரும்" எனச் சிவபெருமானால் உணர்த்தப் பெற்றார்.

சுவாமிகள் திருச்செந்தூர் வந்தடைந்தார். அதிகாலையில் அதாவது பிரம்மமுகூர்த்தத்தில் ஆதிசேஷன் தன் தோள்களால் நகர்ந்து நகர்ந்து செந்திலாண்டவனை வழிபடுங்காட்சியைக் கண்டு ஆனந்தித்தார். இக்காட்சியைக் கண்டு ஆனந்த அநுபவங் கொண்ட சுவாமிகள் சுப்பிர மணிய மூர்த்திக்குப் புஜங்களில் அணிய அரு மையான பாமாலையை வடமொழியில் இயற்றி

முருகன் அருளால் நோய் நீக்கமும் பெற்றார்.

இந்த அரிய பாமாலையே முப்பத்து மூன்று பாடல்களைக் கொண்ட ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்கம் ஆகும். புஜங்கம் என்றால் பாம்பையும் குறிக்கும். புஜத்தையும் குறிக்கும். இப்பாமாலை பாடப்பாடத் திகட்டாத இன்பத்தைத் தந்து பக்திப் பரவசத்தில் ஆழ்த்தவல்லது. முருகனை வணங்கி இப்பாடல்களைப் பாடிப் பாராயணம் செய்பவர்கள் அளவற்ற நலங்களோடு, நீண்ட ஆயுளையும் பெறுவதோடு முருகப் பெருமானது திருவடியையும் அடைவது உறுதி என சுவாமி கள் அருளியுள்ளனர்.

**அகத்திய முனிவர்**

பார்பதி பரமேஸ்வரனுடைய திருமணம் இமயமலையில் நடைபெற்றது. இத்திருமணத் துக்கு முப்பத்து முக்கோடி தேவர்கள் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள் எல்லாரும் ஒன்று கூடினர். இதனால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இந்த நிலையைச் சமன் செய்ய சிவபெருமான் அகத்திய முனிவரைத் தெற்கே போக வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளி னார். அதற்கு அகத்தியர் "ஐயனே அடியேன் செல்லும் தேசம் தமிழ்த்தேசம். அடியேன் தமிழ் மொழி அறியேன்" என்று கூறினார். "தமிழும் நாம் அறிவுறுத்துவோம்" என்றருளினர்.

இறைவன் அகத்தியருக்கு தமிழை கற்பித் தார். நிரம்ப அறிந்து கொண்டார் அகத்தியர். தெற்கே வந்தார். பூமி சமநிலையடைந்தது. ஆனால் அகத்தியரிடம் ஒருகுறையிருந்தது. தமிழ் இலக்கண அறிவு நம்மிடம் நிரம்ப இல்லையே என்று கவலை கொண்டார். அதற்கு நல்லதோர் ஆளைத் தேடினார்.

தமிழ்க் கடவுள் என்று போற்றப்படுபவரும் முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவரு மாகிய முருகனை விட யாரும் கற்பிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். முருகனைச் சென்ற டைந்தார். "அப்பனே முருகா தமிழ் தெரியாது என்ற போது சிவன் அதனை கற்பித்தருளினார். இப்போது இலக்கண அறிவு இல்லாமையினால் தயங்குகிறேன். முருகா திருவுளம் இரங்கி இலக்கண அறிவை எனக்கு அருளிச் செய்தல் வேண்டும், என வேண்டினார். முருகன் அருளால் அகத்தியருக்கு இலக்கண அறிவும் பூரணமா யிற்று. ஐயம் திரிபற இலக்கண அறிவைப் பெற்றுக் கொண்ட அகத்தியர் 'அகத்தியம்' என்ற இலக்கண நூலை தமிழுலகுக்கு அளித்தார். குமரகுருபர சுவாமிகள் தனது பிள்ளைத் தமிழில், முத்தப் பருவத்தில்

"குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குமர முத்தம் தருகவே" என அருமையாக சொன்னார். அகத்தி யருக்குத் தமிழ் கொடுத்தவன் சிவன். தமிழ் இலக்கணத்தைக் கொடுத்தவன் வேல் முருகன். முருகனை விட இலக்கணத்தைக் கற்பிக்க வேறுயாரே வல்லார்.

**ஔவையார்**

ஔவையார் சமுதாய சேவை செய்ய விரும்பினார். அதற்குத் தனது இளமையும் அழகும் தடையாயிருப்பதை உணர்ந்து முதுமை யைத் தாமே விரும்பிப் பெற்றுக் கொண்டார். இவர் சேர, சோழ பாண்டியராகிய மூவேந்தர்க ளாலும் போற்றப்பட்டவர். மதுரையை நோக்கி விரைந்த ஔவைப்பாட்டிக்கு நாவற்பழத்தை உதிர்த்துச் சில வினாக்களைக் கேட்டு, அம் மூதாட்டியின் வாயிலாக பல நீதிகளை உலகம் உய்ய முருகன் அருளினார்.

ஔவையார் வரும் வழியில் முருகன் மாட்டுக்காரச் சிறுவனைப் போன்ற வடிவுடன் ஒரு நாவல் மரத்தின் கிளையில் அமர்ந்திருந் தார். களைப்புடன் வந்த மூதாட்டி நாவல் மர நிழலில் இளைப்பாறினார். மேலே அண்ணாந்து பார்த்தார். பையன் ஒருவன் மரத்தில் இருந்து பழம் பறித்து உண்பதைக் கண்டார். பாட்டியும்

பழம் உண்ண வேண்டும் என்று ஆவல் கொண்டார்.

"தம்பி! எனக்கும் சில பழங்கள் போடு" என்று கேட்டார். பையன் சிரித்தபடியே "பாட்டி! பாட்டி! சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையார் திகைத்தார். சுட்டபழம் என்று ஒன்று உண்டா? என்று திகைத்தார். என்றாலும் அதனைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு "சுட்ட பழமே போடு" என்றார். பையன் கிளையை ஒரு உலுக்கு உலுக்கினான். கனிந்த பழங்கள் எல்லாம் மணலில் வீழ்ந்தன. ஔவையார் பழங்களில் ஒட்டியிருந்த மணல் போக ஊதினார். அதைப் பார்த்த பையன் "பாட்டி! பாட்டி!" பழம் நல்லாகச் சுடுகிறதா? என்று கேட்டான். "ஊதி ஊதி ஆறிய பின் சாப்பிடு" என்று கூறிச் சிரித்தான். சிறுவனின் மதி நுட்பத்தை எண்ணிய மூதாட்டி தன் அறிவின் சிறுமையை எண்ணிக் கண் கலங்கினார்.

**'கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி**
**இருங்கதலித் தண்டுக்கு நாணும் – பெருங்கானில்**
**காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான் தோற்ற**
**தீரிரவு துஞ்சாதென் கண்'**

என்று கூறி வருந்தினார். இந்திருவிளையாடலில் முருகன் ஒரு தத்துவத்தை உணர்த்துகின்றான். இவ்வுலகில் வந்துள்ள உயிர்கள் உலக பாசம் எனும் மண்ணால் ஒட்டப்பட்டிருக்கின்றன. இம் மண்ணைப் போக்க வெறும் கல்வியறிவு மட்டும் போதாது. இறைவனை உணரும் மெய்யறிவு இருந்தால்தான் பற்று என்னும் மண்ணை அகற்ற முடியும் என்பதே இவ்விளையாடலின் உட்பொருளாக அமைந்திருக்கிறது. மக்களுக்கு மெய்யறிவைப் போதிக்க வேண்டி எம்பெருமான் வருந்திய ஔவைக்கு தன் சுய வடிவத்தைக் காட்டி சில வினாக்களைக் கேட்டு பதில் கூற வைக்கிறார். "கொடியது எது? இனியது எது? அரியது எது? பெரியது எது? என்ற வினாக்களைக் கேட்டு அரிய பாடல்களைப் பாட வைத்து ஔவையாருக்கும் அருள் பாலித்தார்.

## பிரார்த்தனை

எனது எந்தச் செயலும் பிரார்த்தனையின்றி நடைபெறுவதில்லை. உடலுக்கு உணவு தேவையாய் இருப்பதைப் போன்று ஆன்மாவிற்குப் பிரார்த்தனை தேவைப்படுகிறது. கொஞ்ச நாட்களுக்கு மனிதன் உணவு இல்லாமல் கூட உயிர் வாழலாம். ஆனால், கடவுள் நம்பிக்கை கொள்ளும் மனிதன் ஒரு கணம் கூடப் பிரார்த்தனையின்றி உயிர் வாழ இயலாது.

– மகாத்மா காந்தி

# இந்து அறவியல் எனும் பதம் பற்றிய விளக்கமும் மானவதர்மசாஸ்திரம் கூறும் அறக்கருத்துக்களும் ஒரு நோக்கு

செல்வி கர்ணிகா பாஸ்கரஐயர்
கலைமாணி (இந்துநாகரிகம்)
யாழ். பல்கலைக்கழகம்.

இவ்வுலகில் உயர்ந்தனவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட யாவற்றிற்கும் மரபும், பாரம்பரியமும் உண்டு. அவற்றை வாழ்வில் கைக்கொண்டால் ஒழுங்கு, உறுதிப்பாடு, அமைதி என்பன மனித சமூகத்தில் பேணப்படும். மரபு, பாரம்பரியம் என்பன நீண்ட காலஓட்டத்தில் நின்று நிலைத்து சோதனைகளை வென்றுவந்தவை. அவை தேவையற்றவையாக இருப்பின் எப்போதோ அழிந்திருக்கும். இற்றைவரை நிலைத்திருப்பதால் அவை பயனுள்ளவை என்பது அறிஞர் கருத்து.

அந்தவகையில் அறம் எனும் சமூக விழுமியம் குறிப்பிடத்தக்கது. இவ் அறம் எப்போதும், எல்லா இடத்திலும், எல்லா உயிர்களாலும் வேண்டப்படுகின்ற ஒரு உயர்ந்த பண்பு நிலையாகும். அறம் எனும் தமிழ்ப்பதம் வடமொழியில் "தர்மம்" எனச்சுட்டப்படுகின்றது. தர்மம், அறம், நீதி, ஒழுக்கம் போன்ற சொற்கள் ஒரேகருத்தையே தருகின்றன. "தர்மம்" என்பது "த்ரு" எனும் வினையடியிலிருந்து பிறந்த சொல். "த்ரு" என்றால் ஆதரித்தல். அதாவது எல்லா மனிதரையும் சமூகத்துடன் ஒன்று சேர்த்து மனிதன், சமூகம் ஆகிய இரண்டின் சிறந்த நிலைமைக்கும், முன்னேற்றத்திற்கும் தர்மம் இன்றியமையாதது ஆகின்றது.

அடுத்து "நீதி" எனும் சொல்லும் தர்மத்துடன் பொருந்துவதாகும். நியாயம், முறைமை, ஒழுக்கநெறி, உபாயம் மெய்யுலகத்தோடு பொருந்தும் இயல்பு எனப் பல பொருட்களை நீதி குறித்து நிற்கின்றது. தர்மம் என்னும் சொல் நற்செயல், கடமை, விதி, தர்மநூல், ஒழுக்கம், நீதி, தானம், அறம், இயற்கை எனப் பல பொருள்களில் வழங்கப்படுகின்றது. அறம் என்பது கையறம், தர்மம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, பெரியோரியல்பி னொன்று, புண்ணியம், தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, புனிதம், கற்பு, அறநூல், அறக் கடவுள், இன்சொல், இல்லறம், துறவறம் எனப் பலபொருள்களில் வருகின்றது. அன்பு நெறிப்பட்ட ஒழுக்கமே அறம் ஆகும். மேலும் தீயவற்றை அறுத்து, நல்லவற்றை ஒழுங்குபடுத்துதலும் அறமாகும். அறிவு, உணர்வு இரண்டும் சமமாக இருந்து அன்புநிலைப்பட்டதும் அறமாகும். (Both parties are getting knowledge).

இவ்வாறு பலவகையில் பொருள் பொதிந்து காணப்படும் அறமானது இந்துசமயத்தின் அடித்தளமாகவும் அமைந்துள்ளது. அதுவே இந்து அறவியலாகும். இந்துமதத்திற்கு சனாதன தர்மம், வைதிக தர்மம் என்றே சிறப்புப் பெயர்கள் அமைவது இங்கு நோக்குதற்குரியது. தர்மத்தின் அடித்தளத்தில் ஆற்றப்படும் கருமங்கள் யாவர்க்கும் நன்மையளிப்பன. அதேவேளை எவர்க்கும் தீங்கு பயவாதன. பிராணி நிலையைக்கடந்து ஆறறிவு படைத்த மனித நிலைக்கு வந்தவனிடத்தில் புத்தி பூர்வமான நல்லொழுக்

கம் அமைதல் வேண்டும். அதுவும் மனம், மொழி, மெய் என்ற திரிகரண சுத்தியாக அமைதல் வேண்டும். அதுவே எல்லா தர்மங்களுக்கும் அடிப்படை. ஆதிகாலம் முதல் சத்தியதர்மம், ஆதர்ஷதர்மம், பாரததர்மம், மானவ தர்மம் என பல்வேறு பெயர்களால் அறியப்பட்டுவந்த சனாதன தர்மம் இன்று இந்து தர்மம் என வழங்கப்படுவது குறிப்பிடற்பாலது.

சிந்துவெளி காலத்திலிருந்து இற்றைவரை இந்துமதம் அறத்தோடு ஒட்டியே நிற்கின்றது. இந்துமதத்தின் மூலநூல்களான வேதங்கள் அவற்றின் வழிவந்த தர்மசூத்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள், புராண இதிகாசங்கள் முதலிய வடமொழி இலக்கியங்களாலும், சங்கம் மருவிய காலத்தில் எழுந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் முதலிய பழந்தமிழிலக்கியங்களாலும் கட்டியெழுப்பப்பட்ட கட்டிடமே இந்து அறவியலாகும்.

காலத்திற்கேற்றவகையில் காலத்திற்கேற்ற ஒழுக்கவியல் சிந்தனைகள், நாட்டுக்கு நாடு, வர்ணத்திற்கு வர்ணம், சமூகத்திற்குச் சமூகம் மாறிக்கொண்டுவருவது தவிர்க்கமுடியாததாயினும் இந்து தர்மம் எனும் பழையநெறியானது மாற்றங்களுக்கிடையிலும் என்றும் மாறாது நிலைபெற்றிருக்கும் தர்மநெறியாகும். "எப்படியும் வாழலாம் என்றன்றி, இப்படித்தான் வாழவேண்டும்" என்று ஒழுங்கானதொரு விழுமியச் சிந்தனையை வாழ்க்கைக்குத் தரும் உயர்ந்த அறம் இந்துசமயத்திலுள்ளது. காமக்குரோதம் முதலான பகைகளை வென்று, அன்பு, சத்தியம் ஆகிய மேலான பண்புகளை வளர்த்து, எல்லா உயிர்களிடமும் அன்புபூண்டு ஒழுகுதல், வாழ்க்கையில் செய்யவேண்டிய கடமைகளை இறைபணி எனும் உணர்வுடன் பற்றின்றிச் செய்தல், அகிம்சை, சத்தியத்தில் வழுவாது நிற்றல், அவா அறுத்தல் என்பன போன்ற நற்குணங்களை இந்து அறவியல் பேணிக்காக்கின்றது. கல்வி, அன்பு, ஈகை, இரக்கம், திண்மை, பொறுமை, வைராக்கியம், ஒற்றுமை, உண்மை, உரிமை, ஒப்புரவு, சமத்துவம், தூய்மை, பக்தி, ஞானம் போன்ற அம்சங்கள் அறத்தின் அடிப்படையிலேயே அமையவேண்டுமென இந்து அறவியல் எதிர்பார்க்கின்றது. இந்து அறவியலானது வர்ண தர்மம், ஆச்சிரமதர்மம், புருடார்த்த தர்மம், ஸ்திரிதர்மம் முதலிய பல தர்மங்களை தன்னகத்தே கொண்டு விளங்கினாலும் எல்லோருக்கும் உரிய அறச்செயல்களையும் சாமான்யதர்மம் என்ற வகைக்குள் அடக்கியுள்ளது. அதுவே மேற்கூறிய தூய்மை, அடக்கம், பற்றின்மை, கொல்லாமை, சத்தியம் எனும் தலையாய அறங்களாகும்.

மேலைநாட்டில் சமயம் ஒருவழி, தத்துவம் ஒருவழி, அறவியல் ஒருவழி, வாழ்க்கைநிலை ஒருவழி என்றவாறு ஒருபோதும் ஒன்றையொன்று சந்திக்காத தன்மையில் இவை அமைந்து காணப்படுகின்றன. ஆனால் இவை யாவற்றையும் ஒன்றிணைத்து அவற்றுள் ஒற்றுமையைக்காணும் தன்மையால் உயர்ந்த வாழ்க்கைத்தரத்தையும், நிறைந்த அறிவியலையும், பண்பட்ட விழுமியப் பண்புகளையும் பெறுவது கீழைத்தேசத்தோர் மரபாகும். இங்கு அறமே சமயமாகிறது. சமயம் போதிப்பதும் அறமே.

இன்று விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தால் மனிதன் அறத்தை மறந்து, அறத்தை மீறிச் செய்கின்ற ஒவ்வொரு செயலும் ஈற்றில் அழிவையே தருகின்றதை நாம் காண்கிறோம். "இயற்கையை வழிபடு" என்கிறது இந்து அறம். ஆனால் நவீன விஞ்ஞான உலகம் இயற்கையைச் சுரண்டுகிறது, சீற்றம் கொள்ள வைக்கின்றது. அதனால் இன்று அறமானது, அறப்பிறழ்வு, அறச்சிதைவு எனும் வடிவங்களையே தாங்கி நிற்கின்றது.

ஆனால் இந்து மதம் காலங்காலமாகப் பேணி வந்த அறம் ஆரம்பத்தில் சாதனைக்குரியதாகவே இருந்தது. இந்து அறவியலானது பேச்சிற்குரிய உபதேசத்திற்குரிய ஒன்றல்ல. அது வாழ்ந்து அனுபவப்படுத்துவதற்குரிய உரை கல்லாகும். தனிமனிதன் அறத்துடன் வாழ்ந் தாலே குடும்பம், சமூகம், இனம், நாடு, உலகம் என்பன அறத்துடன் வாழத் தலைப்படும். அந்த வகையில் இந்து அறவியலில் மனித இனத்தின் நடத்தை, வாழ்க்கை, ஒழுக்கம் என்பவற்றைப் பரிசீலனை செய்ய எழுந்த சாஸ்திரங்கள் அற நூல்கள் எனப்பட்டன. அவ்வகையில் இந்து மதத் தின் முதல் நூல்களான வேதங்களே மேலான தர்ம நூல்களாகும். இவ்வேத நூல்களை உணர்ந்து, முனிவர்கள், ரிஷிகள் என்போரால் இயற்றப் பட்டு வேதங்களுக்கு அடுத்தபடியாக திகழும் தர்ம நூல்கள் ஸ்மிருதிகளாகும். இவற்றில் விதிக்கப்பட்ட ஒழுக்கமே மேலான ஒழுக்கம். இவ்விதமான நல்லொழுக்கங்களிலிருந்து அறம் வடிவெடுக்கின்றது. அறத்திற்கு ஒழுக்கமே ஆதாரமென முன்னோர் காட்டியுள்ளனர்.

"ஸ்மிருதி" என்றால் "நினைவிருக்க வேண்டியவை" என்று பொருள். புராதன இந்து சமூக சிந்தனைகளை எடுத்துக் கூறுவதில் ஸ்மிருதிகள் மிக முக்கியமானவை. இவை இந்து சட்ட நூல்கள் என போற்றப்படுகின்றன. வேத கால முடிவில் வைதீக சமய, சமூகம் சார்பான பழக்க வழக்கங்களையும், சிந்தனைகளையும் தொகுக்க வேண்டிய தேவையேற்பட்டது. இதன் விளைவாகவே ஸ்மிருதிகள் எழுந்தன. இவை தனி மனிதருக்கும் சமூகங்களுக்கும் அன்றாட வாழ்க்கை நெறிகளில் வழிகாட்டுவதற்கு உதவியான விதிகளைச் சொல்வதோடு வேதத்தில் என்றுமுள்ள உண்மைகளை காலத்திற்கேற்பவும், சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்பவும் எடுத்துச் சொல்வதும், அதன்மூலமாக தூய நெறியைப் பாதுகாத்து இந்துசமயத்தினை முன்னேற்றுவதும் இவற்றின் தலையாய நோக்கங்களாகும்.

அக்காலத்தில் வழக்கம், ஆசாரம், சம்பிரதாயம், சட்டம், ஸ்மிருதி, தேவ கட்டளை என்பவைகளைக்கொண்டு சமூகம் தனி மனிதனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தி வந்தமையால் சம்பிரதாய தர்மநிலை பேணப்பட்டு வந்துள்ளது. சமூகம் அறத்திற்குப் பிறப்பிடம். சமூக நன்மைக்கு கருவிகளாய் இருந்த ஆசாரங்களே தர்ம விதிகளாக அற நூல்களில் உருவெடுத்தன. ஆசாரங்களும், அறச் சட்டங்களும், நடு நிலைமை தாங்கி, ஓரமின்றி, பொது நன்மை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு அறத்தைக் காத்து வந்தன.

இவ்வாறு பாரம்பரியமாக பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், கடமைகள் என்பவற்றைக் கூறி நிற்கும் வைதீக தர்ம சாஸ்திரங்களில் காலத்தால் முந்திய மிகப் பழமையான நூல் மானவ தர்ம சாஸ்திரமாகும். கி.மு.4ம் நூ– கி.பி. 2ம் நூ. காலப்பகுதியில் "மநுரிஷி" என்பவரால் தொகுத்தளிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்நூல் வைதிக சமய சார்பான கடமைகள், பழக்க வழக்கங்களைக் கூறுகின்றது. மனிதர்களின் மூதாதையராகவும், பெரிய ரிஷியாகவும், சட்ட அறிஞராகவும் போற்றப்படும் மனு எனும் மகான் கூறியிருப்பது அனைத்தும் சமூக நலனுக்கான மருந்து எனவும், மனுவின் கருத்துக்கு எதிரான ஸ்மிருதி எதுவும் எவ்வகையான பெறுமானமும் அற்றதாகும் எனவும் வைதிக சமூக வட்டங்களில் கருதப்படுகிறது.

மானவ தர்ம சாஸ்திரம் என்பது மனிதனுக்குரிய விதிகள் அல்லது மனு ஏற்படுத்திய விதிகள் என்று பொருள்படும். இந்நூலில் எல்லா மக்களின் வாழ்க்கைக்கும் வேண்டிய அன்றாடக் கடமைகள் கற்பிக்கப்படுகின்றன. சமூகம் வளர வளர சிற்சில சட்டங்கள் புதுமைக்குப் பொருந் தாமல் இருக்கலாம். பழங்காலத்திற்கு ஏற்புடைய விதிகள் சில இக்காலத்திற்கு ஏற்றவையாக

இல்லாது போகலாம். ஒரு சமஸ் கிருதப் பாடல் "வெவ்வேறு காலப்பகுதியில், வெவ்வேறு ஸ்மிருதிகள் வேண்டும்" என்கிறது. அந்த வகையில் மனுஸ்மிருதி கிருத யுகத்திற்குரிய தாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நூல் எதுவாயினும் அது தோன்றிய காலம் சமூகத் தேவைக்கு ஏற்ப பொதுவான கருத்துக் களைக் கூறுவது இயல்பாகும். ஆகவே மனுஸ் மிருதி கூறும் கருத்துக்களும் அது எழுந்த காலத் தேவைகளுக்கு ஏற்ப அமைந்துள்ளது எனலாம். எனினும் ஒரு நூல் குறிப்பிட்ட காலச் சமூகத் திற்குரியதாயினும் அது கூறும் கருத்துக்களில் சில பிற்பட்ட காலங்களுக்கும் ஓரளவாவது பொருத்தமாக அமைவதுண்டு. மனு என்பவர் வேதம், ஸ்மிருதி, ஆசாரம் என்பவற்றுடன் மனச் சாட்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

அதாவது தர்ம என்ற பதத்திற்கு மனு பல கருத்துக்கள் கூறியுள்ளார். தனி மனிதன் என்றவகையிலும், வர்ணத்திற்கும், ஆச்சிரமத் திற்கும் உள்ள தொடர்பு என்ற வகையிலும் மனிதனின் ஒழுக்கம் பற்றி மனு ஆராய்கிறார். விருப்பு வெறுப்பின்றி நல்லோர் பின்பற்றுவதே மிகச் சிறந்த தர்மம் ஆகும் என மனுஸ்மிருதி கூறும். அந்தவகையில் ஒரு மனிதனுடைய திருப்தி (ஆத்மனஸ்துக்ஷ்டி – மனச்சாட்சி) முக்கியமாக வேண்டப்பட்டுள்ளது. ஒருவன் தனது மனச்சாட்சிப்படி ஒழுகினால் தவறு ஏற்படாது என்று மநு கூறுகிறார். மனிதனுடைய மனச்சாட்சியினால் அங்கீகரிக்கப்படும்போதே, தர்மம், உண்மையான இலட்சியத் தன்மையை அடைகின்றது. அத்தகைய மனிதனின் வாழ்க்கை முறையும், ஒழுக்கமும் பெரும்பாலும் சமூக ஒழுக்கமாகின்றன. இத்தகைய கருத்துக்களில் மனு தர்ம சாஸ்திரம் கூறும் அறக் கருத்துக்களை ஆராயலாம். 12 அத்தியாயங்களும் 2684 சுலோகங்களும் கொண்டமைந்த இந்நூல் முதலாவது அத்தியாயத்தில் உலகத் தோற்றம் – பஞ்ச பூதங்கள் தோன்றுதல், நால்வகை வர்ணத் தோற்றம், அவர்களின் கடமைகள், யுக தர்மங் களை எடுத்துக் கூறுகின்றது. இரண்டாவது அத்தியாயம் தர்மத்தின் மூலங்கள், குறிப்பாக இந்து சட்டமூலங்கள், சமஸ்காரங்கள், பிரமச் சரிய ஆச்சிரமத்திற்குரிய நெறிகள் குறிப்பாக கல்வி முறைகள் முதலியனவற்றைக் கூறும். மூன்றாம் அத்தியாயத்தில் கிருகஸ்த தர்மம் பற்றியும், நான்காவது அத்தியாயத்தில் பிரா மணர் முதலியோருக்கான ஜீவன கிருத்தியங் களும், ஐந்தாவது அத்தியாயத்தில் உணவு, தீட்டு முதலியனவும் கூறப்பட்டுள்ளன. ஆறாவது அத்தி யாயத்தில் வானப் பிரஸ்தம், சந்நியாசம் பற்றியும், ஏழாவதில் இராஜதர்மம் பற்றியும், எட்டாவதில் பல்வேறு விவகாரங்கள் பற்றியும், ஒன்பதாவதில் மாதர், ஆடவருக்குரிய தர்மம் பற்றியும், பத்தாவதில் கலப்பு ஜாதிகள் ஆபத்துத் தர்மம் பற்றியும், பதினொன்றாவதில் பிராயச் சித்தம் பற்றியும் கூறுகின்றது. இறுதி அத்தியாயத் தில் முக்குணங்கள், ஆன்ம விடுதலைக்கான உபாயங்களைக் கூறுகின்றது.

வர்ணத் தோற்றம், அவற்றுக்குரிய கடமை கள் என்பன பற்றி மனு கூறியதை நோக்கினால் பிராமணர், ஷத்திரியர், வைசிகர், சூத்திரர் என நால்வகை வகுப்பினரைக் கூறி, அவர்களுக்கு உரிய பாரம்பரியமான கடமைகளையும் விளக்கியுள்ளார். இவ்வர்ண முறையின்மூலம் சமூகத்திற்குப் பாரம்பரிய செயற்றிறன் கிடைத் தது. மக்கள் தம் தொழில்களைச் செவ்வனே செய்தனர். அதனால் வாழ்க்கையில் முன்னேறி னர். இம்முறையால் சமூகத்தில் போட்டி, பொறாமை குறையுமென எதிர்பார்க்கப்பட்டது. எனவே இவ்வர்ண தர்மம் அக்கால தனி மனிதனுக்கும், சமூகத்திற்கும் பொருத்தமுடைய தாக அமைந்திருக்கிறது. பொதுவாக வர்ணம் உயர பொறுப்புக்களும் அதிகரிக்கும். கடமை கள் கூடும். குறிப்பாக அந்தணர் மேல் வர்ணத் தார் என சிறப்பிக்கப்படுவதற்கு அவர்களுக்கு இடப்பட்ட பொறுப்பும் கடமையும் அதிகமாக

இருந்தமையும் காரணமாகும். மேலும் இவர்கள் தம் ஒழுக்கத்திலிருந்து தவறினால் பாதிப்பு மிக மோசமாயிருக்கும். அதாவது இவர்களிடமிருந்து அக்கால சமூகம் கூடுதலாக எதிர்பார்த்து, அதனைப் பெற்று மற்றவர்களுக்கும் அளிக்கும். ஆனால் நடைமுறைச் சமூகத்தில் இவ்வர்ண தர்மம் முழுமையாக சாத்தியப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது. மனு கூறும் அறத்தில் ஒழுக்கமே முதலாவதாக இடம்பெற்றுள்ளது. அதாவது கல்வி, தவம், நல்லொழுக்கம் முதலியவற்றால் ஒருவன் மேல் நிலை அடையலாமென மனு தர்ம சாஸ்திரம் கூறுகின்றது. கீழ் நிலைப்பட்ட தீய ஒழுக்கத்தால் மேல் வகுப்பினரும் இழிநிலைக்குரியவர் என்றும் கூறுகின்றது.

அடுத்து எல்லாவற்றுக்கும் மேலானதாகவும் அரசனையும் கட்டுப்படுத்துவதாகவும் அறத்தை வலியுறுத்தியுள்ளது. எந்தக் கொடுங்கோல் அரசனையும் தர்மம் கண்டிக்கும் என்கிறது. இது எக்காலத்திற்கும் பொருந்துவதாகும். அக்கால சமூகத்தில் இந்த அறநிலை நடைமுறையில் இருந்துள்ளது.

அடுத்து பிரமச்சரிய தர்மத்தை நோக்கினால், எந்தளவிற்கு கல்வி சமூகத்தினதும், மனிதனதும் பொறுப்பாக இருந்ததென்பதை அறியமுடிகிறது. கல்வியினால் இவை அடைந்த நன்மைகளையும் நாம் அறியலாம். அதாவது இல்வாழ்வார் வறியோராயினும், செல்வந்தராயினும் நாடோறும் ஒரு மாணவனுக்காவது பிக்ஷை அளிப்பது ஒரு கடமையென இந்நூல் கூறுகின்றது. இவ்வாறு ஒருவனுக்குக் கல்வி புகட்டுவதால் ஏற்படும் பொறுப்பை சமூகமே ஏற்கிறது. இத்தகைய உதவிக்கு அம்மாணவன் தன் கல்விப் பயிற்சி முடிந்தபின் சமூகத்திற்காகச் சேவை செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளது. குரு சேவை மாணவனுக்குரிய கடமையாகக் கொள்ளப்பட்டது. அரசனின் பிள்ளையும், ஆண்டியின் பிள்ளையும் ஒரே இடத்தில் கல்வி கற்கும் சம உடமையை மனுஸ்மிருதி சிறப்பித்துக் கூறியுள்ளது. ஆசிரியர்கள் வணக்கத்திற்குரியவராகக் கருதப்பட்டனர். இங்கு கல்வி கற்கும் பிரமச்சரியன் மூலம் முன்னேற்றமான ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு பிரமச்சரிய தர்மத்தை மனுஸ்மிருதி முதன்மைப்படுத்தியதைக் காணலாம். மேலும் கல்வியினையும், நல்லது எதனையும் எவரிடமிருந்தும் கற்றுக் கொள்ளலாம் எனவும் கூறியுள்ளது.

அடுத்து மனுதர்ம சாஸ்திரம் கூறும் ஆச்சிரம தர்மம் பற்றிய கருத்துக்களும் கவனிக்கத்தக்கன. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன ஒருவன் படிமுறையாகப் பின்பற்றப்படவேண்டியவை என்கிறது. அந்த வகையில் பிரமச்சரியத்தை முறையாக நிறைவு செய்த ஒருவன் திருமண பந்தத்தில் இணைவதன் மூலம் ஏனைய மூன்று ஆச்சிரமத்தாருக்கும் உதவவேண்டுமெனக் கூறியுள்ளது. இந்து சமய மரபில் விவாகம் புனிதமானதாகக் கருதப்படுகின்றது. திருமணம் இறைவன் திருவருளால் நடைபெறுகிறதென மனு கூறுகிறார். பிராஹ்மம் முதலான எண்வகைத் திருமணங்களை அங்கீகரித்துள்ள மனு சிலவகை விவாகங்களை சிலருக்குச் சிறந்ததென்றும் கூறியிருப்பதன் மூலம் மக்களின் இயல்புகளுக்கேற்ப அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கம் தெளிவாகின்றது. குறிப்பாக ராக்ஷஸ விவாகத்தை சத்திரியனுக்கு உகந்தது என்றும், பிராமணனுக்கு ஆகாது என்றும் கூறியுள்ளார். மனு இவற்றை "ஸ்திரி விவாஹ" என அழைக்கின்றார். பெண்ணுக்கு அவர் இங்கு முக்கியம் அளிக்கின்றார். மேலும் பலவகையான திருமணங்களுக்கு சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்கியதாலேயே சமூகத்தில் உள்ளோர் தத்தம் சமூக ஒழுக்கத்தையும், பெண்களுக்கான கௌரவத்தையும், மதித்துப் பாதுகாக்கவும், இயற்கைக்கு மாறான நடத்தையில் ஈடுபடாமல் சுதந்திரமும் பெறுவதற்குமான வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்பதை மனுஸ் மிருதி காட்டுகிறது.

மேலும் மனுதர்ம சாஸ்திரம் விதவை விவாகம், மீண்டும் மறுமணஞ்செய்தல், குறிப்பிட்ட வரையறையில் விவாகரத்தையும் கூட அங்கீகரித்துள்ளது. மேலும் சுகாதாரத்திற்கு நன்மை தருவதும், சமூக முன்னேற்றத்திற்குமாக "ஒருவனுக்கு ஒருத்தி" எனும் கோட்பாட்டை இந்நூல் பொதுவான குடும்ப இலட்சியமாக அறிவுறுத்தியுள்ளது. "ஆண் – பெண் இல்லற வாழ்க்கையில் இறுதிவரை ஒருவருக்கொருவர் அன்புடையவராகவும், துணையாகவும் இருக்க வேண்டும். இதுவே இருபாலாரும் பின்பற்ற வேண்டிய மேலான தர்மத்தின் சாரம்" எனவும் மனுஸ்மிருதி வலியுறுத்துகின்றது. இக்கருத்து எக்காலத்திற்குமே பொருந்துவதாக இருப்பினும் நடைமுறையில் சாத்தியப்படுதல் குறைவாகவேயுள்ளது.

மேலும் கைமாறினை எதிர்பாராது சமூக சேவை செய்வதே இல்வாழ்வானுக்குரிய அறமாக மநு கூறுகிறார். இதனால் அவன் செல்வத்தை அளவோடு சேகரிக்கவேண்டுமெனக் கூறுகிறார். அவனுக்கு அறத்தால் பொருளீட்டி, அறவழி இன்பம் அனுபவித்து தன்வாழ்க்கை இலட்சியமான ஆன்மீக நிலையை அடைவதற்கு வழிகள் கூறப்பட்டுள்ளது. அவன் இயற்றும் பஞ்ச யக்ஞங்களால் அவனது சேவை முடிவடைகிறது. இவ்வாறு மனுஸ்மிருதி இல்லற தர்மத்தைப் பற்றிக் கூறியுள்ளது.

அடுத்து ஒருவன் எவ்வகையிலும் மற்றைய மனிதனுக்கு வாக்கினாலும் மனதினாலும்கூடத் துன்பம் செய்யக்கூடாதென மனுதர்ம சாஸ்திரம் அறிவுரை கூறியுள்ளது. இது எல்லோருக்கும் எக்காலத்திலும் வேண்டப்படும் ஓர் தர்மமாகும்.

மேலும் ஐந்தாம் அத்தியாயத்தில் உணவு, தீட்டு பற்றிய சிந்தனையில் எத்தகைய உணவை ஒருவன் உட்கொள்ளவேண்டுமெனவும், உணவினை நிந்திக்காமல் மகிழ்ச்சியுடன் உண்ணப் படவேண்டுமெனவும் கூறப்படுகின்றது. மிகைப் பட உண்ணுவதாலும், குற்றமுள்ள உணவை உண்பதாலும் ஏற்படும் தீய விளைவுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இறப்பு, பிறப்பு போன்றவற்றால் ஏற்படும் தீட்டுக்களை நீக்குவதற்குச் செய்யவேண்டிய விதிமுறைகளையும் கூறுகிறது. இத்தகைய சிந்தனைகள் அக்காலத்தில் தர்மத்தின்பாற்பட்டவையாகவே மரபுரீதியாக சமூகத்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமையால் மனுதர்ம சாஸ்திரத்தில் இடம் பெற்றுள்ளதெனக் கொள்ளலாம்.

பெண்ணுக்குரிய அறங்களைக் கூறும்போது ஒரு பெண் எப்போதும் தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டியவள் என்கிறது. கணவனைப் போற்றி வாழுதலே ஒரு பெண்ணுக்குரிய அறமாகும். மனம், மொழி, மெய்யால் கற்பரசியாக தூய்மையுடன் வாழ்பவள் இம்மையில் புகழும், மறுமையில் பதிலோகமும் பெறுவாள். அதாவது மனம், சொல், புலனை அடக்கி நெறி தவறாமல் இருப்பது ஒரு பெண்ணுக்குரிய தர்மமாகச் சொல்லப்படுகின்றது. மேலும் நெறி தவறிய பெண்ணுக்கு ஏற்படும் இழிநிலையும், பழிச்சொல்லும் விளக்கப்பட்டிருப்பதால் மநு பெண்ணுக்கு முக்கியத்துவம் அளித்தமை தெரிகிறது. அக்கால வழக்கத்தில் இத்தகைய பெண் அறம் நடைமுறையில் இருந்தது. அதே மரபு இக்கால வழக்கத்தில் ஓரளவிற்கே நடைமுறையில் இருக்கின்றது என்பதையும் நாம் காணலாம்.

அடுத்து முறையே பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம் என்பவற்றை உரிய கடமைகளுடன் நிறைவாக்கி துறவுசெல்வோன் மேலான இன்பம் பெறுவான் என துறவறம் பற்றி கூறுகின்றது. தன்னால் யாதொரு பிராணிக்கும் அச்சம் ஏற்படாமல் இல்லறம் நடத்தி துறவு பேணுவோனுக்கு ஒளிபொருந்திய நல்லுலகங்கள் காத்திருக்கின்றன என கூறுவதன் மூலம் இந்நூல் மனிதனை நல்வழிப்படுத்துகின்ற தன்மையைக் காணலாம். புலன் கட்டுப்பாட்டாலும்,

விருப்பு வெறுப்பை விடுவதாலும், உயிர் வதை செய்யாமையாலும் ஒருவன் மோட்ஷ தகுதி பெறுவான். மேலும் பிரணா யாமத்தாலும் பொறி, புலன் பிழைகளையும், மெய்ப்பொருள் அறிவால் வினைப்பயனையும், புலனடக்கத்தால் விஷயக்கவர்ச்சியையும், மெய்ப்பொருள் நாட் டத்தால் காம குரோதங்களையும் போக்க வேண்டுமென விதித்துள்ளது. நால்வகை ஆச்சிர மத்தார்க்கும் பத்துவித அறங்கள் விதந்துரைக் கப்பட்டுள்ளன. மகிழ்ச்சி, மனவடக்கம், கேடு சூழ்ந்தாரை ஒறுக்காமை, தீவினையால் பொரு ளீட்டாமை, பொறிபுலன் வெல்லல், நூலறிவு, மெய்ப்பொருள் உணர்வு, உண்மை, சின மின்மை எனும் பதங்களை அறிந்து நடப்போர் மேலான மோட்சம் அடைவர் என மனு தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

அக்காலத்தில் இல்லற தர்மத்தை நிறைவு செய்தவன் தனக்கு நரைகண்டபோது துறவறத் திற்குத் தயாராகுமாறு விதிக்கப்பட்டுள்ளமை யால் சமூகத்தில் ஒரு கட்டுக்கோப்பு நிலவ முடிந்தது. இவர்கள் தமது இளைய தலைமுறை யினருக்கு சமூகத்தில் இடம் விட்டுக்கொடுத்து தமது அந்திமகாலத்தை பயனுடையதாக்கிக் கொண்டனர். இத்தகைய நடைமுறை குறிப்பாக வனம் சென்று துறவறம் மேற்கொள்வது இற் றைக்காலத்தில் இல்லை எனினும் சிலர் தலயாத் திரை முதலியவற்றை மேற்கொள்வதும் உண்டு.

மேலும் இல்லறக்கடமைகள் யாவும் முடித்து அறியாமல் செய்பிழை நீக்கும் பிரணா யாமம் முதலிய நியமங்களால் தூய்மை உற்று, வேதம் ஓதி, பிள்ளையிடமே உடையும், உணவும் ஏற்று சுகமே வாழலாம் எனும் இல்லற சந்நியாசம் பற்றியும் மநு நூல் கூறியுள்ளது.

ஏழாம் அத்தியாயத்தில் இராஜநீதி, மன்னன் மாண்பு, பண்பு பற்றியும் அவனது கடமை, போர் தர்மம், நிர்வாகம், வரிவிதித்தல் என்பன பற்றி யும் கூறப்பட்டுள்ளது. காவலன் இல்லையேல் எளியோர் வலியோருக்கு அஞ்சியே அழிந்து போவர். அதனால் உலகம் அழியாது இருப்ப தற்கே பிரமா மன்னனைப் படைத்தார் என்று கூறுகிறது. உயிர்கள் அனைத்தையும் புரக்கும் பொருட்டு அறமே செங்கோல் வடிவில் மன்னனி டம் காணப்பட வேண்டும். மேலும் பட்டத்திற் குரிய மரியாதைகள் உண்மை, பொய் என்ப வற்றைப் பகுத்தறியும் திறன், அறநூல்களின் அறிவு, அறம், பொருள், இன்பங்களை அறிந் திருத்தல் என்பன ஒருங்கே அமையப்பெற்ற அரசன், தண்டநீதி செலுத்துவதில் அதிகாரம் உடையவன். தண்டனை உண்டென்றால் மட்டுமே உலகோர் நெறியில் நிற்பர். குடிகள் இன்புறுவர் என கூறுகின்றது.

இராஜநீதி நிலவும் நாட்டில் மக்கள் துயரு றார். எனவே சமூக நலனுக்கு அரசனால் மேற்கொள்ளப்படும் தண்டம் அவசியம் என உணர்ந்த யதார்த்த வாதியாக மனு விளங்கு கின் றார். அரசன் சகல உயிர்களையும் காப்பாற்றுவ தற்கு உபயோகமாகவும், தர்மஸ்வ ரூபமாகவும், பிரமதேஜஸ் உள்ளதாகவும் இருக்கும் தண் டத்தை ஏற்படுத்தினார் எனவும், இதனாலேயே சராசரங்கள் எல்லாம் சுகத்தை அனுபவிப்ப தோடு தத்தம் கடமைகளைச் செய்து வருகின்ற னர் எனவும் இந்நூல் கூறி " தண்டனை இருந் தால் மட்டுமே உலகத்தார் சரியாக நடப்பார்கள், இல்லை எனின், இயல்பாக நடக்க மாட்டார்கள், தண்டனைக்குப் பயந்தே உலகம் முழுதும் சுகத்தை அனுபவிக்கின்றது என நடைமுறை உலக உண்மையை தர்மசாஸ்திரம் கூறியுள்ளது. அதேவேளை தப்புச்செய்தவனை அதாவது அவனைக் குற்றவாளி என நன்கு அறிந்த பின்பு இடம், நேரம், திறன், அறிவு என்பவற்றை எல் லாம் எண்ணிப்பார்த்தே உரிய தண்டனையை வழங்கவேண்டுமென அரசனுக்கு விதிக் கப்பட்டுள்ளது. தண்ட நீதியினால் அரசனது மேன்மை நிலை சிறப்படைகிறது. எனினும்,

நேர்மை, வாய்மை, என்பவற்றில் ஒழுகும் அரசனே தண்ட நீதி நிறைவேற்றத் தக்கவன். தனது குடிமக்களை நெறிப்படி ஆள்பவனாய், பகையை வென்று, நட்புரிமை பூண்டவரிடம் வஞ்சமின்றிப்பழகி, பொறுமை யுள்ளவனாக அரசன் இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. தண்டத்தினை அரசன் தனது சொந்த நலனுக்கா கவும், தவறாகவும் பயன்படுத்தக் கூடாது எனவும் மனு எச்சரித்துள்ளமை உயர்ந்த அரச முறை மையை அவர் தனது நூலில் கட்டி எழுப்பி யிருப்பதைக் காட்டுகிறது. அதனாலேயே அக்கால அரச முறை தர்மமாகவே போற்றப்பட்டுள்ளது. ஆனால் தற்காலத்தில் நடைபெறும் ஆட்சி முற்றி லும் மனுவின் அறத்திற்கு மாறுபட்ட தாகவே நடைபெறுவதைக் காணலாம். இதனால் தான் இன்றைய சமூகம் ஒழுங்கற்றதாக இருக்கின்றது.

மனு கூறிய போர் தர்மம் அரசனுக்கு மட்டுமே உரியது. யதார்த்த உலகில் போர் முறை அதர்ம மாகவே உள்ளது. நலியோர், பெண்கள், முதி யோர், பசு முதலிய உயிரினம், ஊனமுற்றோர், குழந்தைகள், அந்தணர் ஆகியோரைக் கொல் லக்கூடாது என்று மனு தர்ம சாஸ்திரம் முதலிய இந்து அறநூல்கள் விதித்துள்ளன. அறம் பிழைத்த அரசனுக்கு அந்த அறமே யமனாக வரும் என்று எச்சரிக்கப்பட் டுள்ளது. இவ்வாறு பல்வேறு அரச தர்மங்களை மநு தர்ம சாஸ்திரம் விதித்துள்ளமையை அறிய முடிகின்றது. மேலும் எல்லா மனிதர்களுக்கும் தாம்செய்த குற்றங் களை உணர்ந்து தம் பிழைக்காக வருந்தும் போது பல்வேறு பிராயச்சித்த வழிகளையும் மனுதர்ம சாஸ்திரம் கூறுகின்றது. இதன் மூலம் சமூகத்தில் ஒருவன் தப்புச் செய் தாலும் அதனை உணர்ந்து வருந்தி கழுவாய் செய்வதன் மூலம் அவன் திருந்தி வாழ சந்தர்ப்பம் கொடுக்கப் பட்டுள்ளது.

மேலும் தாய், தந்தை, குரு ஆகியோருக்கு குறிப்பாகத் தாய்க்கும், குருவுக்கும் மநு முக்கிய இடத்தை அளித்துள்ளார். "இறைவனை நாடி னால் இறைவன் உனக்கு குருவைக் காட்டமாட் டார். ஆனால் குருவை நாடினால் அவர் இறைவனை உனக்கு காட்டுவார்" என்ற கூற்றிற் கிணங்க மனு குருவின் மகிமையை போற்றி யுள்ளார். மேலும் "விருப்பு வெறுப்பின்றிப் பிரமஞானத்தை அறிந்த ஞானியே யாவரிலும் உயர்ந்தவன்" என மனு குறிப்பிடும் கருத்தில் உலகியல் ரீதியில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும், உயர்ந்த ஆன்மீக நிலையில் யாவரும் சமன் என்பது புலப்படுகின்றது.

மேலும் "ஒருவன் எப்பொழுதும் மற்றவர் களில் தங்கியிருப்பது துன்பம்; தன்வசமாக சுதந்திரமாக இருப்பதே இன்பம்" எனவும் மனுதர்ம சாஸ்திரம் கூறுகிறது. இக்கருத்து எக்காலத்திலும் பொருத்தமானதே. இன்றைய பொருளாதாரத் தன்னிறைவு, சுதந்திரம் பற்றிய சிந்தனைகளுக்குச் சாலவும் பொருத்தமானதே.

மனிதனின் கடமைகளுக்கும், ஆசாரங்களுக் கும் முக்கியத்துவம் கொடுத்துள்ள மனுதர்ம சாஸ்திரம்; விதிகள், விலக்குதல்கள் என்பவற் றின் மூலம் நெகிழ்ச்சித் தன்மையுடையதாகவும் விளங்குகின்றது. சமூகத்தில் மனிதன் சில தார்மீகக் கடமைகளை நன்கு செய்யவேண்டும். விலக்கவேண்டியவற்றை விலக்க வேண்டும் என்பதை விதிகள், விலக்குதல்களில் மனு கூறியுள்ளார். ஆபத்துக் காலங்களில் விதிகள் இரும்புச் சட்டங்களாக இருக்கவில்லை. எனவே மனுதர்ம சாஸ்திரம் வைதிகநெறி கூறும் அறத்தை எவர்மேலும் திணிக்கவில்லை யென்றும் கூறலாம். கட்டுப்பாடற்ற சுயசிந்தனை யாளர்களுக்கும் இடமளித்துள்ளது.

எனவே அன்றைய சமூகத்தில் இந்நூல் ஒரு சிறந்த நூலாகப் போற்றப்பட்டு அனைவராலும் இந்நூல் கூறும் விதிகள் கடைப்பிடிக்கப்பட் டிருந்த தன்மையையும் நாம் அறியலாம்.

மேலும் மனுஸ்மிருதி இயற்றப்பட்ட பின் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இந்தியா, பர்மா, கம்போடியா, சீயம், மலேசியா, இந்தோனேசியா முதலிய நாடுகளில் நன்கு போற்றப்பட்டு வந்தது. இந்தோனேசிய – பாலித்தீவில் இன்றும் பின்பற்றப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

எனவே மனுஸ்மிருதியை மக்களாட்சி, சமவுடமை, பொதுவுடைமை, சமத்துவம், சகோதரத்துவம், தனிமனித சுதந்திரம் முதலியன நிலவி வரும் சமகால சமூக சிந்தனையில் வைத்து நோக்குவது சரியன்று. இந்நூல் எழுதப்பட்ட அல்லது தொகுக்கப்பட்ட காலச்சூழ்நிலையில் வைதிக இந்து சமூகக் கட்டுக்கோப்பு நிலை குலையாது பாதுகாப்பதற்கு, குறிப்பாக வேற்று நாட்டவரின் தாக்குதல்கள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு இத்தகைய ஒரு நூல் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்திருக்கலாம். ஆனால் இதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் எக்காலத்திற்கும் பொருத்தமற்றதாகக் காணப்பட்டாலும், சில கருத்துக்கள் எக்காலத்திலும் ஏற்புடையதாகவும் உண்டு. காலங்கள் மாறுவதற்கேற்ப சமூகமும், தர்மமும் மாறுபடுகின்றது என மனுவே கூறியுள்ளார். கிருத யுகத்திலே தர்மம் முழுமையாக நிலவியது. அடுத்துவந்த மூன்று யுகங்களிலும் தர்மம் 25வீதம் குன்றித் தற்போது கலியுகத்தில் 25வீதத்திலும் குறைவாகவே தர்மநிலை காணப்படுகின்றது. அதனாலேயே துன்பங்களும் கஷ்டங்களும் இக்காலத்தில் கூடுதலாகவுள்ளன என்பது புலப்படுகிறது.

எனவே முடிவாக நோக்குமிடத்து, மனுதர்ம சாஸ்திரம் அக்கால இந்து சமூகத்தில் நிலவிய கடமைகள், பழக்கவழக்கங்களை விதித்துள்ளமை மூலம் அக்கால சமூகத்தின் அற ஒழுங்கை நன்கு பேணியுள்ளது என்பதை நாம் அறியலாம். இவற்றில் நாம் ஒவ்வாதனவற்றினைக் கைவிட்டு காலத்திற்கேற்ற நல்ல சிந்தனைகளைக் கடைப்பிடித்தல் பொருத்தமானதும், சமூக நன்மை பயப்பதுமாகும்.

**உசாத் துணை நூல்கள்**


| | |
|---|---|
| 1. சிவசாமி.வி | "தர்மசாஸ்திரங்கள் கூறும் சில சமூகவியற் கருத்துக்கள்"<br>இந்து நெறி – 1996 – 1997<br>இந்து மன்றம்<br>யாழ். பல்கலைக்கழகம் – 1997 |
| 2. சிவசாமி.வி. | "மானவ தர்ம சாஸ்திரம் – ஒரு நோக்கு"<br>இந்து நெறி (மஞ்சச் சிறப்பு மலர்) – 1993 – 1995<br>இந்து மன்றம்<br>யாழ். பல்கலைக்கழகம். |
| 3. விக்னேஸ்வரி.சி. | "தர்மம் என்று ஒரு பொருள் உளது"<br>இந்து நெறி – 1997 – 1998; 1998 – 1999.<br>இந்து மன்றம்<br>யாழ். பல்கலைக்கழகம். |
| 4. சிவகுமார்.சி. | "இந்து அறவியல்"<br>இந்து நெறி – 1997 – 1998 / 1998 – 1999.<br>இந்து மன்றம்<br>யாழ். பல்கலைக்கழகம். |

5. அருணாசலம் T.Dr. சைவசமயம்
EVS வெளியீடு

6. மகாதேவன்.T.M.P. இந்துசமயத் தத்துவம்.
குமரன் புத்தக நிலையம்
மீள் பதிப்பு – 2001

7. கலைவாணி இராமநாதன் "இந்து தர்மமும் வர்ண தர்மமும்"
சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்துநாகரிகத் துறை
யாழ். பல்கலைக்கழகம் – 1992.

8. திருலோக சீதாராம் மனுதர்ம சாஸ்திரம் (தமிழில்)
அலைகள் வெளியீட்டகம் – சென்னை
முதல் பதிப்பு – 2000.



# நல்லூர் ஷண்முகர் வாசல் இராஜகோபுரம்

- நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான யந்திரம் 31.08.2010 (கார்த்திகைத் திருவிழா) அன்று காலை வேளை பிரதிஷ்டை செய்யப்பட்டது

- நல்லூர் ஷண்முகப்பெருமான் வாசல் இராஜகோபுரத்திற்கான நவகலசம் 25.07.2011 (கார்த்திகை தினம்) அன்று மாலை வேளை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

- அதிகம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள ஸ்ரீ ஷண்முக இராஜகோபுரம் ஸ்ரீ ஷண்முகப்பெருமான் ஸ்வர்ண வாசல் தரிசனம் நவகலஷாபிஷேகம் 21.08.2011 ஞாயிறு (கார்த்திகை உற்சவ தினம்) காலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

- பதிப்பாசிரியர்

# ஆலயக் கிரியைகளிற் சிறப்பிடம் பெறும் "பூதசுத்தி"

ஸ்ரீவத்ஸ. நா.சிவசங்கரசர்மா
B.A (Hons) P.G.D.E (Merit)
பிரதம குரு, மயிலணி முத்துமாரியம்மன் கோவில், சுன்னாகம்,
ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### அறிமுகம்

ஆலயக் கிரியைகளிற் பூஜை முதன்மை யானது. பூஜை என்ற சொல்லிற்கு போகம், யோகம், முக்தி என்பவற்றை அளிப்பது என்பது பொருள். சதுர்வித புருஷார்த்தங்களையும் அனைவரும் அடைவதற்கு சிவபூஜையே இலகு வான முறை எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. இதனையே, "பூஜையா விபுலம் ராஜ்யம்..." என் கின்ற ஆகம ஸ்லோக வாக்கியம் குறிக்கின்றது.

சிவனைப் பூஜை செய்வதற்கேற்ற இடங்க ளாக ஆத்மா, குருமூர்த்தி, அக்னி, ஜலம் (நீர்), ஸ்தண்டிலம் (அரிசியாலான மேடை) என்பவற் றைக் கூறியிருப்பதோடு, லிங்கமே சிறந்த இருப்பிடம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறைவனைப் பூஜிப்பதற்குரிய முறைகள் அந்தர்யாகம் (அந்தர்யஜனம்), பாஹ்யபூஜை (பஹிர் பூஜை) என இரு வகைப்படுகின்றன. இங்கு அந்தர்யாகம் என்பது மனத்திற்குள் பூஜித்தலாகும். முதலில் மனத்திற்குள் பூஜித்த பின்பே பாஹ்ய பூஜை என்கின்ற வெளியிலே லிங்கத்திற்கோ, கும்பத்திற்கோ, அக்னியிலோ பூஜை செய்தல் வேண்டும். இதனையே சிவப் பிரதிஷ்டா விதியில், "அந்தர்யாகம் புரா க்ருத்வா பாஹ்ய பூஜாம் அதாசரேத்" எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

இத்தகைய அந்தர்யாகம் செய்வதற்கு முதலில் பூதசுத்தி செய்துகொள்ளல் வேண்டும். இதற்கு முன் சகளீகரணம் செய்வது அவசியமா கின்றது.

### சகளீகரணம்

சகளம் என்பது (சிவ) சரீரத்தையும், கரணம் என்பது செய்தலையும் குறிக்கின்றன. எனவே சரீரத்தை சிவசொரூபமாக்குதல் எனப் பொருள் படுகின்றது. சிவ வடிவத்திற்குரிய சிவ மந்திரங் களை எமது சரீரத்திற் பதித்தலால் சிவ சொரூப முண்டாகும். இது கரநியாசம், அங்கநியாசம் என்ற இரு பகுதிகளுடையது. கைகளில் சிவ பிரானைப் பூஜித்து சிவ மந்திரங்களைப் பதித் தல் (சிவகரங்களாக்குதல்) கரநியாசம் எனப் படும். அந்தக் கரங்களினால் (சிவகரங்களால்) உடம்பின் மற்றப்பகுதிகளிற் சிவமந்திரங்களைப் பதித்துச் சிவ வடிவமாக்குதலே அங்க நியாச மாகும்.

இச்சகளீகரணத்தில் வலது கையை முதலி லும், இடது கையைத் தொடர்ந்தும் மேற்புறத்தி லும் கீழ்ப்புறத்திலும் ஒவ்வொரு முறை மாறி மாறித் துடைத்து, இரு கரங்களும் அமிர்தத்தி னால் கழுவப்பட்டவையாகக் கொண்டு, இரு பெருவிரல்களாலும் இரு உட்கைகளையுந் தடவி, பெரு விரல்களால் அவ்வக்கைகளிலுள்ள சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரல், சிறுவிரல் என்பவற்றை வருடுவதாலும், இரு கரங்களின தும் நடுவிரல்கள் மூன்றையும் உள்மடக்கி

ஏனையவற்றை மடக்காதவாறு நீட்டி ஒன்று கூட்டுவதாலும் சக்தி தத்துவம் வியாபித்து நிற்பதால் நடுவில் பிரசாத மந்திரத்தை ஆவாகித்தும், சிறுவிரல் முதல் பெருவிரல் (அங்குஷ்டம்) வரை நியாசஞ் செய்து இருகரங்களையும் ஒன்று சேர்த்து உரிய மந்திரத்தினாற் பரமீகரணஞ் செய்தலே கரநியாசமாகும்.

இருதயத்தில் ஆசனம், மூர்த்தி ஆகிய இரண்டையும் வலக்கையின் பெருவிரல், மோதிரவிரல் இரண்டினாலும் நியாசஞ் செய்து, விரல்களை மடக்கி பெருவிரலை மட்டும் வெளியே நீட்டி தலையிலும், ஏனைய விரல்கள் ஒவ்வொன்றாலும் முகம், கண், குஹ்யம், பாதம் ஆகிய இடங்களையும், நடு மூன்று விரல்களால் நெற்றி உட்பட மூன்று கண்களையும், இருதயம், சிரசு, சிகை ஆகிய அங்கங்களிலும் நியாசஞ் செய்தல் வேண்டும். பின்னர் சுட்டு விரல்கள் இரண்டாலும் கழுத்தின் பின்பக்கத்திற்றொடங்கி வலம், இடம் ஆகிய இரு பக்கங்களிலும் அவ்வக்கரங்களால் ஸ்தனங்களின் நடுவரை செய்யப்படுவது கவச நியாசம். இரு கரங்களையும் ஒன்றுசேர்த்து கை கொட்டுவது அஸ்திரநியாசம். தலையைச் சுற்றிப் பத்துத் திக்குகளிலும் சோடிகை முத்திரையினாற் கைநொடிப்பது திக்குபந்தனம். வலது சுட்டு விரலினால் தலையைச் சுற்றிக் காட்டுவது அவகுண்டனம். இவ்வாறு அங்கநியாசம் செய்யப்படும்.

**பூதசுத்தி**

பூஜையின் ஆரம்பத்திற் பஞ்ச சுத்தி செய்யப்படுதல் இன்றியமையாதது. அவை ஆத்மசுத்தி, ஸ்தானசுத்தி, திரவ்யசுத்தி, மந்திரசுத்தி, லிங்க / பிம்பசுத்தி என்பனவாகும். இவற்றில் ஆத்மசுத்தியானது பூதசுத்தி, அந்தர்யஜனம் (அந்தர்யாகம்), ஹோமம், சமாதி ஆகிய நான்கும் இணைந்ததாகும்.

இக்கிரியை நிகழும்போது சிவாசாரியார் மான் தோல், கம்பளி, வெண்பட்டு, தர்ப்பை முதலியவற்றால் விரிக்கப்பட்ட கூர்மாசனத்தின் மீது நிமிர்ந்த உடம்பினனாகவும், தனக்கு இயைந்த சௌம்யாசனத்தினனாகவும் இருந்து கண்களை மூடியவாறு அந்தர் முகமாக இதனை நிகழ்த்துவார்.

நம் உடல் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் பஞ்சபூதங்களாலானது. தாய்-தந்தையரின் மலத்திலிருந்து உண்டானதால் மேலும் அது அசுத்தமானது. எனவே அசுத்தமே வடிவானதில் இருந்து கொண்டு நாம் நிர்மலமான, புனிதமான சிவனைப் பூஜிப்பது பொருத்தமற்றது. எனவே ஐம்பூதங்களாலான எமது (பூத) உடலைப் புனிதப்படுத்துவதே பூதசுத்தி எனப்படுகின்றது. அதாவது, கண்களுக்குப் புலப்படாதுள்ள அசுத்தங்களை நீக்கவே பூதசுத்தி செய்யப்படுகின்றது. எமது உடலிலுள்ள கண்ணுக்குப் புலப்படும் கண், காது போன்ற அனைத்து வெளியுறுப்புக்களிலுமுள்ள அசுத்தங்களை ஸ்நானத்தினால் (நீராடல்) நீக்கிய பின்பே பூதசுத்தி செய்யப்படும்.

எமக்கு சூக்கும சரீரம், தூல சரீரம் எனும் இரு உடல்களுள்ளன. இவற்றைச் சுத்தஞ் செய்யும் போது ஜீவனுக்கு ஆபத்து நேரக்கூடாது என்பதற்காக ஜீவனை துவாதசாந்தத்தில் (சிகையின் நடுவிலுள்ள இடம்) முதலிற் சேர்க்க வேண்டும். பின்னரே சூக்கும, தூல சரீரங்களைச் சுத்தஞ் செய்ய வேண்டும்.

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், மனஸ், புத்தி, அகங்காரம் என்ற எட்டு தத்துவங்களாலானது சூக்கும சரீரம். நமது உடலில் ஐந்து இடங்களிலுள்ள பிரம்மா முதலியவர்களிடம் இந்த எட்டு தத்துவங்களை அர்ப்பணிப்பதே சூக்கும சரீரசுத்தி ஆகும். இதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| தேவதை | வீற்றிருக்கும் இடம் | அர்ப்பணிக்க வேண்டிய தத்துவம் |
|---|---|---|
| பிரம்மா | இருதயம் | சப்தம், ஸ்பர்சம் |
| விஷ்ணு | கழுத்து | ரஸம் |
| ருத்திரன் | முகவாய்க்கட்டை | ரூபம், கந்தம் |
| ஈஸ்வரன் | புருவமத்தி | புத்தி, அகங்காரம் |
| சதாசிவன் | பிரம்மரந்திரம் | மனஸ் (பிந்து) |

(மூலம்:- சோமாஸ்கந்தக்குருக்கள்.ச.,2003. பக். 19)

வெளியிற் தெரியும் எமது சரீரமே தூல சரீரமாகும். இது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களாலானது. பூஜைக் காலங்களில் இப்பூதங்கள் ஐந்தும் இடையூறு செய்ய வல்லன. இவற்றை சிவாசாரியார் மந்திரம், பாவனை முதலிய சாதனங்களாற் தகித்துச் செயலற்றனவாக்குகின்றார்.

சிவாசாரியார் பூதங்களாலான தனது தூல சரீரத்தை ஐம்பூதங்களை வித்தாக உடையதாகவும், பிரம்ம-விஷ்ணுக்களால் நட்டு வளர்க்கப் பட்டதாகவும், தன்னையே தான் முளையாக உடையதாகவும், புண்ணிய-பாவ கர்மங்களையே வேர்களாக உடையதாகவும், நன்கு வளர்ந்து வருவதாகவும், காலம் முதலிய தத்துவங்களை உரமாக உடையதாகவும், சப்தம் முதலிய விஷயங்களை இலைகளாகவும், கர் மேந்திரியம், ஞானேந்திரியம் முதலிய இந்திரியங்களைப் பெருங்கிளைகள், சிறுகிளைகளாகவும், தர்மம் முதலியவற்றை பூக்களாக உடையதாகவும் கொண்டு புருஷனாகிய பறவையினால் அனுபவிக்கத்தக்கதாகவும் விளங்கும் ஆலமரமாகச் சிந்தித்தல் வேண்டும். பின்னர் பூரகம், கும்பகம், ரேசகம் ஆகியவற்றை நிகழ்த்துதல் வேண்டும்.

பூரகம் என்பது பிராணாயாமத்தினூடே காற்றை உள்ளிழுத்து நிரப்புதலைக் குறிக்கின்றது. பூரகஞ் செய்து, அதன் இரு பகுதிகளுள் முன்னரைப் பகுதியினால் "ஹ்லாம்" என்ற நிவிருத்திகலா பீஜமந்திரத்தை ஐந்துமுறை உச்சரித்து மேலே குறிப்பிட்ட மரம் தனது இலை, பூ, பழம் முதலியவற்றை உதிர்த்து அசைவற்றிருப்பதாகவும், பூரகத்தின் பிற்பாதியினால் "ஹ்வீம்" என்ற பிரதிஷ்டாகலா பீஜமந்திரத்தை நான்குமுறை உச்சரிப்பதால் அம்மரத்தை அழகானதாகவும் பூக்கள், பழங்கள் முதலியவற்றுடன் கூடியதாகவும் சிந்தித்தல் வேண்டும்.

பூரகம் செய்வதனூடே நிரப்பப்பட்டுள்ள காற்றினை நிறுத்துதலே கும்பகமெனப்படும். இவ்விதம் கும்பகஞ் செய்து, முற்பாதி, பிற்பாதி ஆகிய இரண்டும் நிகழும் வேளைகளில் "ஹ்ரூம்" என்ற வித்தியாகலா பீஜமந்திரத்தை மும்முறை உச்சரித்து, வலதுகாற் பெருவிரலிலிருந்து எழும் காலாக்கினியால் மரம் தகிக்கப் பட்டு இலையற்றதாகச் சிந்தித்தல் வேண்டும்.

பூரகத்தினூடே உள்நிரப்பப்பட்டு, கும்பகத்தினூடே நிறுத்தப்பட்ட காற்றினை வெளிவிடுதலையே ரேசகம் என்பது குறிக்கின்றது. இவ்வாறு ரேசகஞ் செய்து, அந்த ரேசகத்தின் முற்பாதி நிகழும்வேளை "ஹ்யைம்" என்ற சாந்திகலா பீஜமந்திரத்தை இருமுறை உச்சரிப்பதால் மரமெரிந்து சாம்பலாகி பத்துத் திக்குகளிலும் பரந்து ஒடுங்கியதாகப் பாவித்து, ரேசகத்தின் பிற்பாதியின்போது "ஹௌம்" என்ற சாந்தியாதீதகலா பீஜமந்திரத்தை ஒருமுறை உச்சரிப்பதால் அது சுத்தமான பளிங்கு நிறமுடையதாகவும் ஆகாய வடிவுடையதாகவும் கருதுதல் வேண்டும்.

பின்னர், உரிய மூலமந்திரத்தை மூலாதாரம் முதல் துவாதசாந்தம் வரை உச்சரிப்பதால் உலகிற்கு உபாதான காரணமாக விளங்கும் குண்டலினி சக்தியை அசைவுறச் செய்யும் பொழுது, சிகையின் நடுவில் கீழ்நோக்கியவாறு அமைந்து விளங்கும் ஆயிரம் இதழ்த் தாமரையிலிருந்து அமிர்தம் பெருகிப் பிரவாகிக்கும். இந்த அமிர்தப்பெருக்கு நாடிகளூடாகப் பாய்ந்து உள்ளுடலையும் புறவுடலையும் அவை தன்னுள் அமிழ்ந்தும்படியாக நனைக்கின்றது.

**அந்தர்யாகம்**

"உள்ளம் பெருங்கோயில்...." எனத் திருமூலர் குறிப்பிடுவதற்கிணங்க, உள்ளத்தினுள் சிவமயமான ஆன்மாவைப் பூஜித்து, ஹோம வழிபாடுகளை மேற்கொள்வதையே அந்தர்யாகம் எனலாம். இதன்போது, இருதயத்தில் தாமரை மலரை பாவனையால் உருவாக்கி பூரகஞ் செய்வதால் துவாதசாந்தத்தில் உள்ள சிவமயமான ஆன்மாவைக் கொண்டுவந்து அதன்மேல் இருத்தி, மீண்டும் அமிர்தப் பெருக்கை நிகழ்த்தி அவ்வமிர்தத்தினால் அபிஷேகம் செய்ய வேண்டும். அதற்கு வைராக்கியம் (பற்றின்மை) என்ற சந்தனமிட்டு, அகிம்சை / கொல்லாமை, புலனடக்கம், பொறுமை, அன்பு, அறிவு, தவம், உண்மை, தூய எண்ணம் என்ற எண்குணங்களாகிய மலர்களால் அர்ச்சித்து, பிராணாயாமம் என்ற தூபங் காட்டி, ஞானமாகிய தீபம் ஏற்றி, இந்திரியங்களை வெளியிற் செல்லவிடாது உள்ளெடுத்து அவற்றை நிவேதனமாக்கி, சுழுமுனையில் பிராணனின் போக்குவரத்தை ஜபமாக்கி–சமர்ப்பித்து பூஜை செய்தல் வேண்டும்.

இதன்போது நாபி குண்டத்தில் தானாகவே உற்பத்தியாகிய அக்னியில் ஹோமம் செய்தல் வேண்டும். இந்த அக்னிகார்யத்தில் சுத்தமாயை குண்டமாகும். இச்சை, ஞானம், கிரியை என்ற முச்சக்திகளும் மேகலைகள் – சுழுமுனைநாடி சிருக்கு. இடாநாடி – சுருவம். மூலாதாரம் – நெய்க்கிண்ணம். பிந்துவிலிருந்து வெளிவரும் அமிர்தம் – நெய். இவ்வாறு பாவித்து அந்தர்யாகத்தில் ஹோமம் செய்தல் வேண்டும்.

ஹோமத்தில் பூஜித்த சிவ அம்சத்தை, இருதய கமலத்திலிருத்திப் பூஜித்த சிவனுடன் சேர்ப்பிக்க வேண்டும். இறுதியில் சிவோஹம்பாவனை செய்தல் வேண்டும். சிவ–அஹம்–பாவனை (சிவ–கடவுள், அஹம்–நான், பாவனை–பாவித்தல்) எனப் பிரிந்து,தன்னைக் கடவுளாகப் பாவித்தல் எனப் பொருள்படும். தான் ஆத்மா என்ற கருத்தை விட்டு தனக்கு உயிராகிய சிவமாகத் தன்னைப் பாவித்தலே இதுவாகும். இதற்காக அந்தர்யாகத்தின் இறுதியில் மௌனமாக, தியானத்தில் ஈடுபடவேண்டும்.

**முடிவுரை**

பஹிர் பூஜை என்ற வெளியில் விக்கிரஹம், கும்பம், யந்திரம் முதலியவற்றிற்குப் பூஜை செய்வதற்கு முன் மேற்படி கிரியை செய்யப்பட வேண்டும். ஸ்நானம் செய்து புறவுடல் தூய்மைப் படுத்தப்பட்டு, பூதசுத்தி செய்யப்பட்டு அதனிறுதியில் அந்தர்யாகம் செய்து சிவோஹம் பாவனை செய்த பின்பே வெளியில்–பஹிர் பூஜை செய்வதே பயன்தரவல்லது.

**உசாத்துணை நூல்கள்**


1. சோமாஸ்கந்தக்குருக்கள்,ச. (2003)–ஆத்மபூஜை, விவித வித்யா (ஆடி–மார்கழி), கந்தசாமி கோயிலடி, இணுவில்.
2. வனஜா, தவயோகராஜா (2005)–இந்து பாரம்பரியம், கொழும்பு மகளிர் இந்து மன்றம், கொழும்பு–03.
3. கைலாசநாதக்குருக்கள்,கா. (2009)–சைவத் திருக்கோவிற் கிரியைநெறி, பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்த சபை, சிவன் கோவில், நல்லூர், யாழ்ப்பாணம்.
4. சிவராமகிருஷ்ணசர்மா,சி.வி. (2009)–பூதசுத்தி, ஆலய அர்ச்சனை–ஆகமங்களின் வழியில் விதிமுறைகள், நர்மதா பதிப்பகம், சென்னை.
5. சிவானந்தசர்மா,ப. (2010)–மந்திரங்கள் கூறும் மறைபொருள் விளக்கங்கள், சர்வானந்த மயபீடம், இணுவில்.
6. சிவானந்தசர்மா,ப. (2010)–அனுக்கிரஹ மணிப் பூதசுத்தி, கும்பாபிஷேக கிரியா மஞ்சரி (கிரந்த லிபி), சர்வானந்தமயபீடம், இணுவில்.
7. சிவசங்கரசர்மா,நா. (2012)–ஆலயங்களில் அக்னிகார்யம், நீர்வைக் கதிர்வேல், செல்லக் கதிர்காம கோவில் மஹா கும்பாபிஷேகச் சிறப்புமலர், நீர்வேலி.

# இந்து வாழ்வியலில் திருமணச் சடங்கு

G. **பற்குணராஜா** BA.MA.(Reg.Pla)
**யாழ் மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

திரு என்பது தெய்வத்தன்மை எனவும் மணம் என்பது இணைதல் எனவும் பொருட்படும். மேன்மையான தெய்வீகம் வாய்ந்த இணைதல் எனப்படுகின்றது. அதாவது இரு உள்ளங்கள் (இதயங்கள்) இணைவது எனக் கூறலாம்.

தமிழரின், சிறப்பாக இந்துக்களின் திருமணம் ஆகம, மரபு சடங்குகளுடன் சில சிறப்பு அம்சங் களையும் தழுவி நடைபெறுகின்றன. இச் சடங்கு களை நன்கு படித்த குருக்கள் சமய முறைப்படி அக்கினி சாட்சியாக இறைவனின் ஆசியுடன் நடத்தி வைக்கின்றார். திருமண நிகழ்வில் முக்கியமான நிகழ்ச்சி சுபவேளைகளில் தாலி கட்டுதலாகும். இதனை "மாங்கல்யதாரணம்" எனக் கூறுவர். தாலி கட்டியதும் அப்பெண் "சுமங்கலி" அதாவது திருமணமானவள் என்ற அந்தஸ்தைப் பெறுகின்றாள்.

இரு வீட்டாரும் முதலில் சாதகப் பொருத் தத்தை ஆராய்வர். இச் சாதகப் பொருத்தம் பெரும்பாலும் இந்து சமயத்தை கடைப்பிடிப்ப வர்களால்தான் மேற்கொள்ளப்படும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ் நாட்டில் பெண் பார்க்கும் படலம் போன்று நம் நாட்டிலும் பெண்ணை மணமகன் பொது இடங்களில் பார்ப்பது வழக்கம். பின் நிச்சயதார்த்தத்தை உறுதி செய்யப் பெண் வீட்டார் தாம்பூலம், பல காரம், பழங்களோடும் உறவினரோடும் மண மகன் வீட்டிற்கு நல்ல நாள் பார்த்துச் செல்வர். இதன்பின் இருவீட்டாரும் திருமண நாளைச் சோதிடரிடம் கேட்டு நிச்சயிப்பர். அத்தோடு பொன்னுருக்கலுக்கும் ஒரு நாளை நிச்சயிப்பர்.

**'இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை'.**

குடும்பத்தில் வாழ நினைப்பவன் குடும்ப வாழ்க்கைக்கு உரியவரான மனைவி, மக்கள், விருந்தினர் ஆகிய மூவரையும் சிறப்பாக வாழ வைக்கும் துணையாக விளங்க வேண்டும். (வாழ்க்கைத் துணை நலம், நல்மக்கட் பேறு - விருந்தோம்பல் என்ற அதிகாரங்கள் அடுத் தடுத்து அமைந்திருப்பதைக் காணலாம்.)

**பொன்னுருக்கல்**

திருமண நாளுக்கு முன்பு ஒரு சுபநாளில் மணமகன் இல்லத்தில் அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் நடைபெறும். இதில் மணப் பெண்ணைத் தவிர பெண்ணின் உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் ஓர் இனிப்புப் பண்டம் (கொழுக்கட்டை) கொண்டு செல்லல் ஒரு சம்பிரதாயம்.

மணமகன் வீட்டு வாசலில் முறைப்படி நிறை குடம், குத்துவிளக்கு, பன்னீர்த்தட்டு, குங்குமம், சந்தனம் வைத்தும் பொன்னுருக்கும் இடத்தில் நிறைகுடம், இரண்டு குத்துவிளக்குகள், இரண்டு தேங்காய், மாவிலை, வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், மஞ்சள் கட்டை (துண்டு) தேசிக்

காய், அறுகம்புல், பூக்கள், ஒரு சட்டியில் தண்ணீர், தேங்காய் உடைக்க கத்தி, விபூதி, குங்குமம், சந்தனம், மஞ்சளில் பிள்ளையார், சாம்பிராணியும் தட்டும், கற்பூரமும் தட்டும் முதலியன முக்கியமாக தேவைப்படும் பொருட்க ளாகும்.

திருமாங்கல்யத்திற்கு தங்க நாணயத்தை (பவுணை) இறைவனிடத்தில் வைத்து பூசை செய்து ஒரு தட்டத்தில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம், பூ, பழத்துடன் தங்க நாண யத்தையும் சேர்த்து வீட்டின் பூஜை அறையில் வைக்க வேண்டும். பொன்னுருக்கும் சுபவேளை யில் அதை மணமகனின் பெற்றோர் அல்லது பெரியோர் எடுத்து மணமகனிடம் கொடுக்க அவர் அதை ஆசாரியாரிடம் கொடுத்து உருக்க வேண்டும். ஆசாரியார் கும்பம் வைத்து விளக் கேற்றி தூபதீபம் காட்டி வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் முதலியவை வைத்து தேங்காய் உடைத்து பூஜைசெய்து பொன்னை உருக்குவார். உருக்கிய பின் தாய் மாமன் தேங்காய் உடைத்து அந்த இளநீரை உருக்கிய தணலில் ஊற்றி தீயை தணிப்பார். பின் ஒரு தட்டில் வெற்றிலை, பழம், பாக்கு, பூ, மஞ்சள், குங்குமம், தேசிக்காய் என்ப வற்றுடன் உருக்கிய தங்கத்தை வெற்றிலையில் வைத்து மணமகனிடம் ஆச்சாரியார் கொடுப்பார். அதை மணமகன் அங்கு கூடியிருக்கும் சபை யோருக்குக் காண்பித்து, அதன்பின் ஆச்சாரி யாருக்கு அரிசி மற்றும் மரக்கறிகளுடன் தட் சணையும் வைத்து உருக்கிய தங்கத்தைத் திருமாங்கல்யம் செய்ய ஒப்படைக்க வேண்டும்.

இவற்றைத் தொடர்ந்து விருந்துபசாரத்தில் அனைவரும் கலந்து கொள்வர். மணமகன் வீட்டிலிருந்து தோழி விருந்தில் ஒரு பகுதியை மணமகளின் வீட்டிற்கு சென்று மணமகளிற்குக் கொடுப்பார். இதே நாளில் இரு வீடுகளிலும் திருமணத்திற்குரிய பலகாரங்களைச் செய்யத் தொடங்குவார்கள். முதன் முதலாக இனிப்புப் பலகாரம் செய்ய வேண்டும் என்பதால் சீனி அரியதரம் செய்யலாம். கன்னிக்கால் நாட்டிய பின் பலகாரம் செய்வார்கள். (இந்நாளிலிருந்து திருமண நாள் வரை மணமக்கள் ஒரு வரை ஒருவர் பார்க்கக் கூடாதென்பது பழைய கால சம்பிரதாயம். மணமகன் மணமகள் வீட்டிற்குச் சென்று வந்தால் திருமண வேலைகள் பாதிக்கப் படும் என்பதால்தான் இம்முறை கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. முகம் பார்க்கக் கூடாது)

**கன்னிக்கால் ஊன்றல்**

பொன்னுருக்கும் நாள் பெண் வீட்டிலும் மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வீட்டு வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக் கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். முள்முருங்கை மரத்தில் ஒரு தடியை வெட்டி அதன்மேல் நடுப்பகுதியில் 5 மாவிலை களை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டி, இடையில் மஞ்சள் பூசிய வெள்ளை துணியில் ஒரு செப்புக் காசைக் முடித்துக் கட்டிவிட வேண்டும். பெரியவர் ஒருவர் அல்லது தாய் மாமன் கன்னிக்காலை நிலத்தில் ஊன்றி தேங்காய் உடைத்து சாம்பி ராணி, கற்பூரம் காட்ட வேண்டும். அதனடியில் நவதானியத்தோடு பவளம், அல்லது நவமணி கள் இட்டு நீர், பால் ஊற்றி (3 சுமங்கலிப் பெண்கள்) கன்னிக்காலுக்கு திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்த வேண்டும். இது நன்கு வளர வேண்டுமென்று நினைத்து கும்பத் தண்ணீரை ஊற்றலாம்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வெற்றிலை, பாக்கு, பழம் வைத்து தேங்காய் உடைத்துத் தூபதீபம் காட்டி பந்தல் காலை ஊன்றுவார்கள். பந்தல் காலைத் தொடர்ந்து பந்தல் அமைக்கும் வேலை தொடரும். மண மகன் வீட்டில் ஊன்றிய பின் பெண் வீட்டுக்கும் சென்று இதேபோல் செய்ய வேண்டும். முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இரு வீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடியும் வரை

எந்த விதமான துக்க நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளக் கூடாது என்பர் (பந்தல்கால் ஊன்று பவருக்கு தட்சணை கொடுக்க வேண்டும்).

**முளைப்பாலிகை போடல்**

பெண் வீட்டில் மூன்று அல்லது ஐந்து மண் சட்டிகளில் மண்பரப்பி நீர் ஊற்றவும். பாலில் ஊறவைத்த நவதானியங்களை 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்கள் அச்சட்டிகளில் தூவி நீரும் பாலும் தெளிக்க வேண்டும். (3முறை) இவற்றை சாமி அறைக்குள் வைத்து திருமணத்தன்று மணவறைக்குக் கொண்டு போக வேண்டும். அநேகமாக இதனை பொன்னுருக்கலன்று செய்வார்கள். (இதை 3 நாட்களுக்கு முன்னால் செய்தால் திருமணத்தன்று நவதானியம் முளைத்து இருக்கும்) முளைப்பாலிகை இடுவ தன் நோக்கம் திருமணம் செய்து கொள்ளும் புதுமணத் தம்பதிகளின் குடும்பமும் முளைவிட்டு பல்கிப் பெருகி வாழவேண்டும் என்பதே. **"விரித்த பாலிகை முளைக்கும் நிரையும்"** என்கிறது சிலப்பதிகாரம். இந்தப் பாலிகை யானது திருமணத்திற்குப் பின் நதியில் சேர்த்து விடலாம்.

**நவதானியம்**

நவதானியம் என்பதில் நெல், கோதுமை, பயறு, துவரை, மொச்சை, எள்ளு, கொள்ளு, உழுந்து, கடலை என்பன உள்ளடங்கும்.

**பந்தல் அமைத்தல்**

முகடுடைய பந்தல் அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள் ளது. பந்தலின் உள் பகுதியில் மேலுக்கு துணிக ளைக் கட்டுவார்கள். அழகுக்காகவும், திருமணச் சடங்கு நடக்கும்பொழுது பந்தலின் மேலிருந்து தூசி, அழுக்குப் பொருட்கள், பல்லி போன்றவை விழுந்து விடாமல் இருப்பதற்காகவும் இந்த ஏற் பாடுகள் செய்யப்படுகின்றன. பந்தலை கமுகு, வாழை, தென்னை ஓலைகளால் அலங்கரிப்பர்.

வாழைமரம் ஒருமுறை தான் குலைபோடும். அதுபோல் எமது வாழ்விலும் திருமணம் ஒருமுறை தான் என்பதை உணர்த்துகின்றது. பாக்குக் கொத்துக் கொத்தாகக் காய்ப்பதால் இது தம்பதிகள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என் பதை வலியுறுத்துகின்றது. வாழையும் தென்னை யும் "கற்பகதரு". இவை அழியாப் பயிர்களாகும். தென்னை நூற்றாண்டு வாழக் கூடியது. வாழை வாழையடி வாழையாக வளர்வது. தேங்காயும் வாழைப்பழமும் இறை வழிபாட்டில் முக்கியமா கின்றது. தம்பதிகள் நிலைத்து நின்று அனை வருக்கும் பயன்படக் கூடியவாறு வாழ வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றது.

திருமணம் வசதிக்கேற்ப பெண் வீட்டிலோ, கோயிலிலோ, மண்டபத்திலோ நடத்தலாம். மண்டபத்தில் திருமணம் வைப்பதானால் இரு வரது வீட்டு வாசல்களிலும் மண்டப வாயில்களி லும் மாவிலை தோரணம் வாழை மரங்களால் அலங்கரிக்கப்பட வேண்டும்.

வாழைமரம் கட்டுவதன் நோக்கம் வாழையடி வாழையாக வாழைமரம் தழைத்து வளருவது போல நமது சந்ததியும் பெருக வேண்டும் என்ப தாகும். மாவிலை தோரணங்கள் மங்கல முறை யாகக் கட்ட வேண்டும். வாசலில் நிறைகுடம் வைக்க வேண்டும். வசதிக்கேற்ப வீடுகளையும் மண்டபத்தையும் அலங்கரிக்கலாம். மண்டபத் தில் நன்கு அலங்கரிக்கப்பட்ட மணவறை கிழக்கு நோக்கி அமைக்கப்படும். மணவறையின் முன்பாக சுவாமி அம்பாள் கும்பங்கள், சந்திர கும்பம், விநாயக பூஜை, பஞ்ச கௌவ்விய பூஜைக்கான ஒரு கும்பம், அக்கினிக் கிரிகைக் குரிய பாத்திரம், அம்மி, மஞ்சள் நீர் உள்ள பாத்திரம் ஆகியவை வைக்கப்பட வேண்டும்.

1. விநாயகர் 2. ஓமகுண்டம் 3. அரசாணி 4. சந்திர கும்பம் 5. அம்மி

ஈசானமூலை – சுவாமி அம்பாள்.

11. அக்கினி மூலை – நவக்கிரக கும்பங்கள்

12. மஞ்சள் நீர் பாத்திரம் – மோதிரம் போட் டெடுத்தல்
அரசாணியைச் சுற்றி 4 விளக்குகள், 4 நிறை குடம் வைக்கப்படும்.
(4, 5, 6, 7) சந்திர கும்பத்திற்கு முன்பாக முளைப்பாலிகை சட்டிகள் வைக்கப்படும்.

குருக்கள் தன் முன்பாக புண்ணிய தானத்திற் குரியவற்றை வைத்து அதன் பக்கத்தில் மஞ்சள் பிள்ளையாரும், ஒரு கிண்ணத்தில் பஞ்ச கௌவ்வியமும் வைத்திருப்பார். அரசாணி மரமும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதன் இரு பக்கமும் ஒரு பக்கம் பாலிகைச் சட்டியும் நடுவில் அம்மியும் அதன் பின்பு சிவன் பார்வதி கும்பங் களும் மறுபக்கம் நவக்கிரக கும்பங்களும் முன்பாக அரசாணிப் பானையும் நான்கு பக்க மும் நான்கு விளக்குகளும் அரசாணி மரத்தைச் சுற்றி நான்கு கும்பங்களும் வைத்துக் கல்யாண மண்டபம் மேல் கூறியபடி நிறுவப்பட்டிருக்கும்.

**மணமகன் அழைப்பு**

திருமணத்தன்று மணமகனை கிழக்கு முகமாக ஒரு பலகையில் அமர்த்தி அவரின் கையில் வெற்றிலையைச் சுருட்டி அதற்குள் சில்லறைக்காசு வைத்துக் கொடுக்க வேண்டும். அவருக்கு முன்னால் நிறைகுடம், குத்து விளக்கு, தாம்பூலம் வைக்க வேண்டும். 3, 5, 7 என்ற எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் அறுகும் காசும் பாலும் கொண்ட கலவையை மணமகனின் தலையில் 3 முறை வைக்க வேண்டும். மணமகனின் தலையில் ஒரு வெள்ளைத் துண்டை விரித்து அதன் மேல் பாலையிடலாம். முதல் பால் வைக்கும் போது வடக்கு முகமாயிருந்து தாய் மாமன் தேங்காய் உடைக்க வேண்டும். பால் வைத்ததும் மணமகன் நீராடி வர வேண்டும். பெண் வீட்டாரும் இதில் கலந்து கொள்வார்கள். மணமகன் சுவாமி அறைக்குச் சென்று கற்பூரதீபம் காட்டி, இறை வழிபாடு செய்து, தாய் தந்தையரை விழுந்து வணங்க வேண்டும். பெண் வீட்டார் மணமகன் வீட்டுக்கு வரும்போது பூ தட்டு உட்பட மூன்று தட்டுக்களுடன் வர வேண்டும். எல்லோருக்கும் விருந்தோம்பல் நடைபெறும்.

**கடுக்கன் பூணல்**

முந்நாளில் கடுக்கன் பூணல் என்ற சடங்கும் நடைபெற்றது. இப்போது அது அருகிவிட்டது. மணமகனை கிழக்கு முகமாக, அலங்கரிக்கப் பட்ட இடத்தில் இருத்தி விநாயகர் வழிபாடு செய்து தேங்காய் உடைத்து மணமகனுக்கு கடுக்கன் பூட்டு வைபவத்தைச் செய்யலாம்.

**'துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை'.**

வாழ்வைத் துறந்தோர்க்கும் வறியோர்க்கும் "அடைக்கலம்" என்று வந்த அனாதைகட்கும் இல்லறத்தானே துணைபுரிய வேண்டும்.

**தலைப்பாகை வைத்தல்**

மணமகன் கிழக்கு நோக்கி நிற்க, குடும்பத்தில் பொருத்தமான பெரியாரைக் கொண்டு தலைப் பாகை வைக்க வேண்டும். உத்தரியம் அணி விக்க வேண்டும். உத்தரியம் இடும்போது இடத் தோளின் மேலாக வந்து வலப்பக்கத்து இடுப்பள வில் கட்ட வேண்டும். (அந்தணர் பூனூல் அணி வதுபோல்) மணமகனுக்கு ஒரு பூமாலையும் அணிவிப்பர். தோழனுக்கும் இதே போல் உடை உடுத்தி தலைப்பாகை, உத்தரியம் இட்டு மணமக னோடு அழைத்து வருவர். தோழன் மணமகனின் இடப்பக்கமாக நிற்பார்.

**மணமகன் புறப்படுதல்**

வீட்டை விட்டுப் புறப்பட முன் வாசலில் இரு சுமங்கலிப் பெண்கள் ஆராத்தி எடுப்பார்கள். மாப்பிள்ளையோடு தோழி (மாப்பிள்ளையின் திருமணமான சகோதரி அல்லது அவர்களின் உறவுமுறையான திருமணமான பெண்)

ஆனவர் திருமணச் சடங்கில் முக்கிய பங்கு வகிப்பதால் நடைமுறைகளை நன்கு தெரிந்த சுமங்கலிப் பெண்ணையே அமர்த்த வேண்டும். தோழன் (பெண்ணின் சகோதரன் அல்லது அவர்களின் உறவுமுறையுள்ள ஒரு ஆண். அனேகமாக திருமணமாகாதவராக இருக்க வேண்டும்) ஆகியோருடன் உற்றார், உறவினர் சகிதம் மண மண்டபத்திற்குச் செல்வர். செல்லும் போது தோழி கூறைத்தட்டும் வேறு இரு பெண்கள் 3 தேங்காய் வைத்த தட்டமும், 3 அல்லது 5 பலகாரங்கள் கொண்ட ஒரு தட்டமும் எல்லா மாக 3 அல்லது 5 தட்டங்கள் கொண்டு போக வேண்டும். அலங்கரித்த வாகனத்தில் செல்ல வேண்டும்.

### பலகாரத் தட்டம்

அரியதரம், அச்சுப் பலகாரம், பயற்றம் உருண்டை, வெள்ரொட்டி, சிற்றுண்டி போன்றவை.

### மாப்பிள்ளை அழைப்பு

மாப்பிள்ளை மணமண்டபத்திற்கு வந்தவுடன் அவரை பெண் வீட்டார் மேளதாளத்தோடு வரவேற்பர். அங்கு தோழன் மாப்பிள்ளையின் காலைக் கழுவி விடுவார். அதற்கு உபகாரமாக மாப்பிள்ளை, தோழனுக்கு மோதிரம் அணிவிப் பார். பின் பெண்ணின் தகப்பன் மாப்பிள்ளைக்கு மாலை சூட்டி வரவேற்பார். இரு சுமங்கலிப் பெண்கள் ஆராத்தி எடுப்பர். தோழன் கை கோர்த்து வலமாக மணவறைக்கு அழைத்து செல்வார். கும்பத்திற்கு வலப்பக்கம் (Clockwise) மணமகன் மணவறைக்கு வந்தவுடன் தொடங் கும் திருமணச் சடங்கு முடியும்வரை புரோகி தரின் தலைமையில் நடைபெறும். கிழக்கு நோக்கியிருக்கும் மணவறையில் தோழன் மணமகனுக்கு இடப்பக்கத்தில் அமருவார். மணவறையில் நெல் பரவி அதன் மேல் கம்பளம் விரித்து மணமகனை இருத்துவது தான் மரபு. கிரிகை செய்யும் குருக்கள் மணவறையின் வலது பக்கத்தில் வடக்கு நோக்கியிருப்பார். மணமகனுக்கு திருநீறு கொடுத்து பவித்திரத்தை வலக்கை மோதிர விரலில் அணியச் சொல்வார். பின் சங்கற்பம் செய்து புண்ணியாக வாசன பூஜை, விநாயகர் பூஜை, பஞ்ச கௌவிய பூஜை ஆகியவற்றை மந்திர உச்சாடனத்துடன் செய்வார். பவித்திரம் வலது கை மோதிர விரலில் அணிய வேண்டும். இந்த சடங்கு வைபவம் முடியும் வரை ஒரு குற்றமும் வராமலிருக்கவும் மனம், வாக்கு, காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றும் காக்கவும் பவித்திரம் அணிவிக்கப்படுகின்றது. பஞ்சகௌவியத்தை அவ்விடத்தில் சுற்றித் தெளித்து அதனைப் பருகும்படி மணமகனுக்குக் கொடுப்பார். இதனால் அந்தவிடம் சுத்தமாவ தோடு மணமகனின் அகமும் புறமும் சுத்தமடை யும் என்பதாலும் இவை செய்யப்படுகிறது. இதனை புண்ணியாக வாசனம் என்பர்.

### தேங்காய்த் தட்டம்

முடியுள்ள மூன்று தேங்காய்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு மஞ்சள் பூசி வைக்க வேண்டும்.

### கூறைத்தட்டம்

ஒரு பெரிய தட்டில் நெல் அல்லது பச்சை யரிசி பரப்பி அதன் மேல் கூறைச்சேலை, சட்டை, வெற்றிலை, முழுப்பாக்கு 3, கஸ்தூரி மஞ்சள், குங்குமம் டப்பி 1, தேசிக்காய் 1, வாழைப்பழச் சீப்பு 1, கொண்டை மாலை மற்றும் அலங்காரப் பொருட்களான சீப்பு, கண்ணாடி, பவுடர், வாசனைத் திரவியம், சவர்க்காரம் முதலியன வும் தாலிக்கொடியுடன் ஒரு சோடி மெட்டி ஆகியன வைக்க வேண்டும்.

### பெண் புறப்படுதல்

பெண் வீட்டில் பெண்ணுக்கும் அறுகு, காசு, பால் தலையில் வைத்து நீராட்டி, (ருதுசாந்தி செய்யாத பெண்ணாகில் அன்று அல்லது முந் தைய நாளில் ருதுசாந்தி செய்தல் வேண்டும்.) மணப்பெண்ணை அலங்கரித்து மண்டபத்திற்கு

அழைத்து செல்லல் வேண்டும். இங்கும் மாப் பிள்ளை வீட்டார் மூன்று தட்டங்களோடு வந்து விருந்தோம்பி பெண்ணை அழைத்து செல்வார் கள். பெண், வீட்டை விட்டு புறப்பட முன் ஆராத்தி எடுக்கப்படும். பெண் மணமண்டபத்திற்கு மணமகன் வருவதற்கு முன்னதாகச் செல்வது அவசியம். மணப்பெண்ணோடு ஒரு தட்டில் கோயிலில் அர்ச்சனை செய்யத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும். மண்டபத்தில் பெண்ணுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் இருக்க வேண்டும்.

**அர்ச்சனைக்குரிய பொருட்கள்**

வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழங்கள், ஊதுபத்தி, கற்பூரம், பூக்கள்.

**'தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்று ஐம்புலத்து ஆறு ஓம்பத் தலை'.**

இறந்தாரை எண்ணி இறைவனைத் தொழுது விருந்தினரைப் போற்றி உறவினரைக் காத்து, தானும் வாழ்வது ஆகிய ஐவகைக் கடமைகளை யும் அறநெறி மாறாமல் ஆற்றுவதே இல்லறத் தானின் உயர்ந்த பண்பாகும்.

**அரசாணிக்கால்**

முற்காலத்தில் திருமண வைபவங்களுக்கு அரசனுக்கும் அழைப்பிதழ் அனுப்புவார்கள். அரசன் எல்லா திருமணங்களுக்கும் செல்ல முடியாத நிலை இருக்கும். எனவே அவர் தனது ஆணைக்கோலை அனுப்பி வைப்பார். அரசு ஆணைக்கோல் மருவி அரசாணிக்கால் ஆகி விட்டது. இன்று பதிவுத்திருமணம் போல் அன்று அரசனால் அங்கீகரிக்கப்பட்டது. ஆகவே அவரது ஆணைக்கோல் வந்துவிட்டால் அத்திருமணம் அங்கீகாரம் பெற்று விடுகிறது. இதுவே இன்று திருமணப் பந்தலில் முள்முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதற்குப் பட்டுச்சாத்தி அலங் கரித்து வைப்பர்.

**அங்குரார்ப்பணம்**

வித்திடுதல் என்று அர்த்தம். அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பது. சந்திர கும்பத்தைப் பூசித்து அதற்கு முன்பாக இருக்கும் மண் சட்டியில் 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்களைக் கொண்டு நவதானியம் இட்டு தண்ணீர் தெளித்து பூக்கள் சாத்தி பூஜை செய்வது. இதன் அர்த்தம் நவதானியம் செழித்து வளர்வது போல் இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமைய வேண்டும் என்பதற் காக இப்பூஜை செய்யப்படுகின்றது. அப் பெண் களுக்கு வெற்றிலையில் பழம் பூ வைத்து உப சாரம் செய்தனுப்புவார்கள். இதன் பின் கற்பூரம் காட்டப்படும். (முன்பே பாலிகை போட்டிருந்தால் தண்ணீர் மட்டும் தெளித்தால் போதுமானது).

**இரட்சாபந்தனம் (காப்புக் கட்டுதல்)**

தொடங்கிய கருமம் நிறைவு பெறும்வரை எந்தவித தீட்டுக்களோ, இடையூறுகளோ, துக் கங்களோ மணமக்களைச் சாராதிருக்க வேண்டி பாதுகாப்புக் கருதி செய்யப்படுவது. (காலமிரு ந்து, அவமிருத்து போன்ற அபாயங்களிலிருந்து காப்பாற்றவும சர்வரோகமும் அணுகாமலும் பீடை, பிணி, அணுகாமலும் இருக்க வேண்டி விவாகச் சடங்கு இனிதே நடைபெறவும் கட்டப் படும் நூல் காப்புக் கட்டுதல் ஆகும்).

இதற்கு ஒரு தாம்பாளத்தில் அரிசி பரப்பி, தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், காப்புநூல் முதலியவற்றை வைத்து பூசித்து மாப்பிள்ளை யின் வலது மணிக்கட்டில் காப்புக் கட்டுவார்கள். காப்புக் கட்டும் போது மாப்பிள்ளை வீட்டார் தேங்காய் உடைப்பார்கள். பின்னர் குருக்கள் சிவன் பார்வதி பூஜை முதலியவற்றை மந்திர உச்சாடனத்துடன் செய்வார்.

(பின்னர் அக்கினி மூட்டப்பட்டு அதற்குரிய பூஜை வழிபாடுகள் நடைபெறும்).

முகூர்த்த தோஷம், லக்கின தோஷம் போன்ற தோஷங்கள் நீங்கும் பொருட்டு இந்த திருமணத் தின் போது நல்லருள் புரிய வேண்டுமென நவக் கிரக தேவர்களுக்காக அமைக்கப்பெற்ற கும்பங் களுக்கு பூஜை செய்வார். அதன்பின் அரசாணி மரத்திற்கும் அதன் நாலு பக்கங்களிலுள்ள கும்பங்களுக்கும் பூஜை செய்யப்படும்.

**கன்னிகாதானம்**

மணமகளை அவரின் பெற்றோர்கள் தாரை வார்த்துக் கொடுப்பதை கன்னிகாதானம் என்பர். மணமக்களின் பெற்றோர் இரு பகுதியினரும் சங்கற்பம் செய்து பெண்ணின் பெற்றோர் மண மகனின் பெற்றோருக்கும் மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோருக்கும் திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்வர். பின் பெண்ணின் வலக்கரத்தில் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம், பழம், தங்கக் காசு அல்லது நடைமுறை நாணயம் ஒன்றை கையில் கொடுத்து, பெண்ணின் தந்தை இடதுகை கீழாகவும் வலது கை மேலாகவும் சேர்த்துப் பிடித்துக் கொள்ள, குருக்கள் மணமக்களின் மூன்று தலைமுறைப் பெயர்களையும், மண மக்களின் பெயர்களையும் உரிய மந்திரத்துடன் மூன்று முறைகள் சொல்லி இரு வம்சமும் தழைக்கவும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பயன்களையும் பெற வேண்டியும் எனது மகளைக் கன்னிகாதானம் செய்து தருகி றேன்.

எல்லாவித செல்வமும் பெற்று எனது மகளை காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வர். மணமகனின் சம்மதம் பெற்றவுடன் மணமகளின் தாயார் நீர்விட்டு தாரைவார்க்க தந்தையார் மணமகளின் கைகளை மணமகனின் கரங்களில் ஒப்படைப்பார். அப்போது மங்கள வாத்தியம் முழங்க பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க மணமகன் பெண்ணை தானம் எடுப்பார்.

தொடர்ந்து மணமகன் கொண்டு வந்த தாலி யோடு கூடிய கூறைத்தட்டை விதிப்படி பூசித்து ஆசீர்வதித்து அக்கினியாற் சுத்திசெய்த பின் அச்சபையிலுள்ள பெரியோர்களிடம் காட்டி நல்லாசி பெறப்படும். பின் மணமகன் மணமகளி டம் கூறையைக் கொடுப்பார். மணமகளும் தோழியுடன் சென்று கூறையை உடுத்தி மீண்டும் மணவறைக்கு அழைத்து வரப்படுவார். இதற் கிடையில் குருக்கள் மாங்கல்யத்தை எடுத்து சுத்தி செய்து மந்திரம் சொல்லி சந்தனம், குங்குமம் சாத்தி தீபம் காட்டி சம்பாத ஹோமம் செய்து பூஜை செய்வார்.

**'பழி அஞ்சிப்பாத்து ஊண் உடைத்தாயின் வாழ்க்கை**
**வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்'**

பழிச்சொல்லுக்குப் பயந்து, பொருளை ஈட்ட வேண்டும். ஈட்டிய பொருளை உரியோர்க்கு பகிர்ந்தளித்து உண்ண வேண்டும். அத்தகைய பண்புடைய குடும்பத்தினரின் வாழ்வும் குறை யாது அவர் வாரிசும் குன்றாது.

**தாலி கட்டுதல்**

கூறை உடுத்தி வந்த மணமகள் மீண்டும் மணமகனின் வலது புறத்தில் கிழக்கு நோக்கி அமர்வார். குறித்த சுபமுகூர்த்தத்தில் மணமகன் எழுந்து மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று இறைவனைத் தியானித்து குருக் கள் ஆசீர்வதித்துக் கொடுக்கும் மாங்கல்யத்தை இரு கரங்களால் பற்றி கெட்டி மேளம் முழங்க, வேதியர் வேதம் ஓத, மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க, பெரியோர் அட்சதை மலர்கள் தூவ, ஒரு பெண் பின்னால் தீபத்தை ஏந்தி நிற்க, மணமகன் மேற்கு திசை நோக்கி பெண்ணின் கழுத்தில் திருமாங்கல்யம் பூட்டுவார். அப்போது சொல்லப்படும் மந்திரம்

**மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவனஹேதுநா//**
**கண்டே பத்தாமி ஸுபகே ஸஞ்ஜிவசரதசதம்//**

ஓ! பாக்கியவதியே யான் சிரஞ்சீவியாக இருப்பதற்குக் காரணமான மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகிறேன். நீயும் நூற்றாண்டு வாழ் வாயாக என்று குருக்கள் கூறும் மந்திரத்தை மனதில் கொண்டு தாலி முடிச்சில் திருநீறு இட்டு தனது இடத்தில் இருக்க வேண்டும். மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகம் இட வேண்டும்.

**அறத்து ஆற்றின் இல்வாழ்க்கை அவற்றின் புறத்து ஆற்றில்**

**போஒய்ப் பெறுவது எவன்?**

அறம் வகுத்த நல்வழியில் நாம் குடும்பத்தை நடத்தி வந்தால் அதுவே சிறந்ததாகும். அதை விடுத்து, துறவறத்தைச் சிறந்ததென்று மேற் கொள்ள வேண்டியதே இல்லை.

**தாலி**

தாலியில் சிவலிங்கம், விநாயகர் அல்லது லட்சுமியின் திருவுருவம் அமைத்தல் நல்லது. கொடியும் தாலியும் அதனருகில் கோர்த்திருக் கும் இரு தங்க நாணயங்களும் சேர்த்து (9, 11, ..) என்ற ஒற்றை எண் வரக்கூடிய அளவு பவுணில் செய்ய வேண்டும். தங்க நாணயம் ஆங்கில நாணயமாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அந்த நாணயத்தில் கடவுளின் உருவங் களும் விருப்பத்திற்கேற்ப அமைக்கலாம்.

**மாலை மாற்றுதல்**

மணமகள் எழுந்து வடக்கு நோக்கி இறை வனைத் தியானித்து மணமகன் கழுத்தில் மாலை சூட்டுவாள். மணமகன் மணமகளை தன் இடது பக்கத்தில் அமரச்செய்து மாலை சூட்டுவான். மாலை மாற்றுதலின் பொருள் இருமனம் கலந்து ஒருமனம் ஆகி இல்வாழ்க்கையை ஆரம்பித்தல். மூன்று முறை மாலை மாற்ற வேண்டும். தொடர்ந்து, கொண்டுவந்த மங்கலப் பொருட்க ளாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன் மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியானபின் தம் மங்கலகோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.

**பால்பழம் கொடுத்தல்**

பால், வாழைப்பழம் கலந்து மணமகள் முதலில் மணமகனுக்கு மூன்று முறை கொடுப் பார். பின் மணமகன் மணமகளுக்கு மூன்று முறை கொடுப்பார். நாயகன் நாயகி உணவு கொள்ளல் முறையில் செய்ய வேண்டும் என்பதால் திரை ஒன்று முன்னால் பிடிக்கப்படும். முதன்முதலில் தம்பதிகளுக்குக் கொடுக்கும் இனிப்புப் பதார்த்தம் ஆகையால் வாழ்க்கை இனி மையாக இருக்க வேண்டும் என்று உணர்த்தவே இச்சடங்கு.

**கோ தரிசனம்**

இல்லற வாழ்வைத் தொடங்கும் தம்பதியர் வாழ்வுக்கு வேண்டிய அட்ட ஐஸ்வர்யங்களை யும் வேண்டி பசுவை இலட்சுமி தேவியாக வணங்குவர். பசுவைக் கிழக்கு முகமாக நிறுத்தி சந்தனம், குங்குமம், புஸ்பம் சாத்தி தீபாராதனை செய்து வணங்குவர். பசுவின் உடல் எங்கும் உறைகின்ற சகல தேவர்கள், முனிவர்கள், தெய்வங்களின் ஆசீர்வாதமும் இதன் மூலம் கிடைக்கும். அரிசி, காய், கறி, தட்சணை வைத்துத் தானம் வழங்க வேண்டும்.

**'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது'**

குடும்ப வாழ்க்கையில் தன் மனைவியிடம் அன்பு காட்டுவதே இல்வாழ்வின் பயன் ஆகும்.

**மணமகளை அழைத்தல்**

மணமகளை (பட்டாடை அணிந்து அணி கலன்கள் பூண்டு முகத்தை மெல்லிய முகத்திரை யால் மறைத்த வண்ணம்) தோழிகள், மண

மகனின் பெற்றோர் மற்றும் உறவினர் புடைசூழ மணமேடைக்கு அழைத்து வருவர். மண மகனுக்கு வலப்பக்கத்தில் பெண்ணை அமரச் செய்வர். மணமகனுக்குச் செய்யப்பட்ட அத்தனை பூஜைகளும் இவருக்கும் செய்யப்படும். பவித் திரம் இடது கை மோதிர விரலில் அணிவித்து ரட்சாபந்தனம் இடக்கை மணிக்கட்டில் கட்டப் படும். பெண் வீட்டார் ஒருவர் தேங்காய் உடைப் பார். பின்னர் இருவீட்டு பெற்றோர்களையும் அழைத்து மணமகனின் பெற்றோர் மணமகனின் இடப் பக்கத்திலும் கிழக்கு நோக்கி அமர்வர். இவர்களுக்கும் குருக்கள் பவித்திரம் விபூதி கொடுத்து சங்கல்பம் செய்வித்து இரு வழி களிலும் பிதிர்தோஷம் நீங்கவும் இரண்டு தானம் கொடுத்து பிதிரரின் ஆசியைப் பெறச் செய்வார். பின் கன்னிகா தானக்கிரியைகளை ஆரம்பிப்பர்.

**பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்)**

தருமம் செய்வதற்காகவும், சந்ததி விருத்திக் காகவும் திருமணம் செய்யப்படுகின்றது. பாணிக் கிரகணம் என்றால் மணமகளின் கையை மணமகன் பிடிப்பது என்று பொருள். "நானும் நீயும் முதுமையடைந்து விட்டாலும் கூட, ஒருவரை விட்டொருவர் பிரியாதிருப்போம் என்று உன்கையை பிடிக்கிறேன்" என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்க வேண்டும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும். பின்னர் ஏழு அடி எடுத்து வைத்து அம்மி மிதித்து அக்கினியை வலம் வருவார்கள். வலம் வரும் போது தோழனும் தோழியும் சேர்ந்து வருவர். பஞ்ச பூதங்களின் சாட்சியாக கையைப் பிடிப்பதாக ஒரு கருத்து. மணப்பெண் ஐம்புலன்களால் செய்யும் செயல கள் கணவனுக்கு மட்டுமே உரியவை. கன்னியின் கையை வரன் கிரகிப்பது என்பது பொருள்.

**ஏழடி நடத்தல்**

பெண்ணின் வலது காலை மணமகன் கைகளால் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்லப்படும்.

1. உனக்கு வாழ்க்கையில் உணவு குறைவில்லா மல் அளிப்பதற்கு இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்.
2. உடலின் வலிமை கிடைக்க இறைவன் பின் தொடரட்டும்.
3. விரதத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு உன்னை இறைவன் பின் தொடர்ந்து வரட்டும்.
4. சுகமும் மனச்சாந்தியும் கிடைக்க இறைவன் உன்னைப் பின் தொடரட்டும்.
5. பசுக்கள் முதலான பிராணிகள் விருத்திய டைய பின் தொடர்ந்து வரட்டும்.
6. சகல சௌபாக்கியமும் கிடைக்க பின் தொடர்ந்து வரட்டும்.
7. உன் வாழ்க்கையில் நடைபெறும் சுப காரி யங்கள், ஹோமங்கள் குறைவின்றி நிறை வேற இறைவன் உன்னைப் பின் தொடர்ந்து வரட்டும்.

ஏழடிகள் நடந்த நாமிருவரும் சினேகி தரானோம். இருவரும் சேர்ந்து இந்த ஏழு செல் வங்களையும் ஈட்டுவோம்; இன்ப துன்பங்க ளைச் சேர்ந்து அனுபவிப்போம்; "என்னுடன் கூடவா" எனும் பொருளில் இந்நிகழ்ச்சி அமையும். இதற்கு "ஸப்தபதி" என்று பெயர்.

**அம்மி மிதித்தல்**

பெண்ணின் வலது காலை (அதாவது எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியில் வைத்து பெருவிரலுக்கடுத்துள்ள விரலில் மெட்டி அணிவிப்பார். இந்தக் கல்லைப் போல நிலையாக நின்று உன் எதிரிகளைச் சகித்துக் கொள். இது பெண்ணுக்குக் கற்பையும், ஆணுக்கு ஒழுக்கத்தையும் புகட்டுகிறது. கல் எப்படி எதையும் தாங்குமோ அதுபோல் வாழ்க் கையிலும் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்கா மல் உறுதியான கொள்கைகளைக் கடைபிடித்து நடக்க வேண்டும் என்று உணர்த்துகிறது.

தொடர்ந்து அக்கினியை வலம் வந்து ஓம குண்டத்தில் நெற்பொரியும் ஓமப் பொருட்களையும் இடுவார்கள். திரும்பவும் இரண்டாம் முறை அக்கினியை வலம் வரும் போது, இடக் காலை அம்மியில் வைத்து மெட்டி அணிவிக்கப்படும். திருமணமான இப் பெண்ணைப் பார்க்கும் இன்னொரு ஆடவன் அவள் திருமணமானவள் என்பதை உணர்த்த மெட்டி அணிவிக்கப்படுகிறது.

**கணையாழி எடுத்தல்**

மூன்றாம் முறை அக்கினியை வலம் வரும் போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை இருவரும் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறைகள் நடைபெறும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து எடுத்தல் வேண்டும். இது தம் வாழ்க்கையிலும் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

**அருந்ததி பார்த்தல்**

மூன்றாம் சுற்றில் அருந்ததி பார்த்தல் நடைபெறும். இருவரையும் கூட்டிக்கொண்டு மண்டபத்தின் வடக்கு வாசலுக்கு வந்து வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களுக்குப் பூஜைசெய்து அருந்ததியைக் காண்பிப்பார். "நிரந்தரக் கற்பு நட்சத்திரமாக மின்னுவேன்" என்று ஆணையிடுவதாகும். சப்தரிஷிகள் கிருதிகை எனப் பெயர் கொண்ட தங்கள் மனைவிகளுக்குள்ளே முதலானவளான அருந்ததியை எப்படி நிலைத்திருக்கச் செய்தார்களோ அப்படி மற்ற ஆறு இருத்திகைகளும் அருந்ததியைப் போலிருக்கச் செய்கின்றனர். இந்த அருந்ததியைத் தரிசனம் செய்வதால் என்னுடைய மனைவி எட்டாமவளாக வளர்ச்சி பெறட்டும் என்பதேயாகும். இந்த நட்சத்திரத்தைக் காட்டுவது நல்ல வாழ்க்கையும் வளத்தையும் பெறுவதற்கேயாகும்.

அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை. வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கிடையில் வசிட்ட நட்சத்திரமும் அதன் அருகில் அருந்ததியும் இருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

அருந்ததியோடு சேர்ந்து துருவ நட்சத்திரத்தையும் காட்டுவார்கள். துருவ நட்சத்திரம் விண்ணில் ஒரு நிலையான இருப்பிடத்தை உடையவராகவும் மற்ற வின்மீண்கள் நிலைத் திருப்பதற்குக் காரணமாகவும் கட்டுத்தறியாகவும் இருப்பதால் எங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவீராக! என்று தரிசிப்பதாகும். இவர்கள் எம் வாழ்க்கையில் ஒரு வழிகாட்டியாக அமைகிறார்கள். வசிட்டரைப் போல் மணமகனுக்கு ஸ்திரத்தன்மையும் அருந்ததியைப் போல மணமகளுக்குப் பதிவிரத தன்மையும் இருத்தல் வேண்டும்.

**பொரியிடுதல்**

அக்கினியை மூன்று முறை வலம் வர வேண்டும். ஒவ்வொரு முறையும் வலம் வந்து மணமக்கள் கிழக்கு நோக்கி நிற்க, தோழன் நெற்பொரியைக் குருக்களிடம் இருந்து பெற்று மணமகனின் கையில் கொடுக்க மணமகன் மணமகளின் கையில் கொடுத்து மணமகளின் கைகளை தன் கைகளால் தாங்கி ஓமகுண்டத்தில் பொரியை இடுவார்கள். "அக்கினி பகவானே! சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்" என வேண்டிக் கொண்டு பொரியிடுதல் வேண்டும். நெல்பொரியாக மலர்வதுபோல் நம் வாழ்வும் மலர வேண்டும் என்பதே தத்துவம்.

மூன்றாம் முறை சுற்றி வந்தவுடன் பூர்ணாகுதிக்குரிய பொருட்களை தட்டத்தில் வைத்து குருக்கள் மணமக்களுக்கு கொடுக்க, இருவரும் சேர்ந்து யாக குண்டத்தில் சொரிதல் வேண்டும்.

அக்கினி பகவானிடம் சேர்க்கும் சகல திரவியங்களும் அக்கினி பகவான் அந்த அந்தத் தெய்வங்களிடம் ஒப்படைத்து விடுவார் என்பதை

வேதங்கள் கூறுகின்றன. ஆகவே அக்கினியில் ஆவாகனம் செய்யப்பட்ட மூர்த்திகளுக்கு செய்யும் சடங்கு குறைவின்றிச் செய்து அவர் களுக்குப் பரிபூரண பலன் வேண்டி அனுப்ப வேண்டும் என்று பிரார்த்தித்து செய்வதே ஓமம்.

அதன்பின் தீபாராதனை செய்து ஓமத்தி லிருந்து எடுக்கப்பட்ட ரட்யை (கரிப்பொட்டு) மணமக்களுக்குத் திலகமிட்டு விபூதி சந்தனம் கொடுத்து குருக்கள் ஆசி வழங்குவார்.

**ஆசீர்வாதம்**

மணமக்களை கிழக்கு முகமாக நிற்க வைத் துக் குருக்கள் பிரார்த்தனை செய்து மந்திரத்து டன் ஆசீர்வாதம் சொல்லி மணமக்களுக்கு சிரசில் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பார். தொடர் ந்து மணமகனின் பெற்றோர், மணமகளின் பெற் றோர், சபையோர் ஆசீர்வதிப்பர்.

**அட்சதை**

முனை முறியாத பச்சையரிசி, அறுகம்புல், மஞ்சள் மா கலந்த கலவையே அறுகரிசி என்று சொல்வார்கள். பெரியோர் இரண்டு கைகளா லும் அறுகரிசி எடுத்து "ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முழுமையாய்ச் சூடிப் பதினாறு பேறு பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என வாழ்த்தி உச்சியில் மூன்று முறை இடவேண்டும். மணமகனுக்கு மூன்று முறையும் மணமகளுக்கு மூன்று முறை யும் தனித்தனியே இடவேண்டும். உறவினர்க ளும் நண்பர்களும் மணமக்களுக்கு அன்பளிப்பு வழங்கி மகிழ்வர்.

**நிறைவு**

மணமக்களின் கைகளில் கட்டப்பட்ட காப்பு களை அவிழ்த்து பவித்திரங்களைக் கழற்றி அவற்றுடன் பெற்றாரின் பவித்திரங்களையும் கழற்றி வெற்றிலையில் வைத்து குருக்களின் தட்சணையும் சேர்த்து குருக்களிடம் கொடுக்க வேண்டும். குருக்களுக்கு அரிசி, காய்கறித் தானம் வழங்கப்படும்.

**ஆராத்தி**

இரு தரப்பிலும் இருந்து ஒவ்வொரு பெண் ணாக இரு சுமங்கலிப் பெண்கள் ஆராத்தி எடுப் பார்கள். தம்பதிகளுக்கு தீய சக்தியால் தீமை ஏற்படாமலும் கண் திருஷ்டி நீங்கும் பொருட்டும் இவை செய்யப்படுகின்றன. விருந்து உபசாரமும் நடைபெறும். மணமக்கள் இருவரும் அர்ச்சனைத் தட்டோடு ஆலயம் சென்று வணங்கி அர்ச்சனை செய்து மணமகன் இல்லம் செல்வர். அங்கு வாசலில் ஆராத்தி எடுத்து வலது காலை முதலில் வைத்து வீட்டுக்குள் செல்வர். முதலில் பூஜை அறைக்குள் சென்று வணங்கிய பின் பால் அருந்தக் கொடுப்பார்கள்.

**பூதாக்கலம்**

மணமக்கள் ஒரே இலையில் மணமகள் உணவு பரிமாறி மணமகனுக்கு முதலில் தன் கையால் ஊட்டிய பின், மணமகன் மணமகளுக்கு ஊட்ட வேண்டும். பின் மணமகன் மணமகளை தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். அங்கும் ஆராத்தி எடுத்து உட்செல்வர். வலது கால் எடுத்து உட்சென்று பூஜை அறை சென்று வணங்கி பெற்றோரின் காலில் விழுந்து வணங்குவார்.

**சில தத்துவங்கள்**

1. தாலி கட்டிய பின் மணமகன் மணமகளின் உச்சந்தலையில் குங்குமத்தால் திலகமிடு வார். இது அவள் தன் கணவனுக்கே உரிய வள் என்பதை எடுத்துக் காட்டவே. அத்தோடு அவ்விடத்தில்தான் மகாலட்சுமியும் வாசம் செய்கிறாள்.
2. மாங்கல்யம் சூட்டும் போது கெட்டிமேளம் கொட்டுவது சபையில் உள்ளோர் யாராவது தும்முதல், அபசகுன வார்த்தைகள் பேசுதல் போன்றவை மணமக்களுக்குக் கேட்கக் கூடாது என்பதற்காகவே.

3. மஞ்சள் கயிற்றில் தாலி கட்டும் போது மூன்று முடிச்சுப் போடுவார்கள். இதற்கு ஒரு விளக்கம்

**முதலாவது முடிச்சு** - கணவனுக்கு அல்லது பிறந்த வீட்டுக்குக் கட்டுப்பட்டவள்

**இரண்டாவது முடிச்சு** - தாய் தந்தையருக்கு அல்லது புகுந்த வீட்டுக்குக் கட்டுப்பட்டவள்

**மூன்றாவது முடிச்சு** - தெய்வத்திற்கு பயந்தவள்.

தாலி கட்டும் போது தூவப்படும் அட்சதை மணமக்களைத் தீய சக்திகளிடமிருந்து காப்ப தற்கும் வளமான வாழ்க்கை அமைவதற்கும் ஆசீர்வதிப்பதாகும். தாலி கட்டும் போது கை விளக்கு ஏந்தி நிற்பது ஏனென்றால் தாலி கட்டியதற்கு விளக்கு ஏந்தியவள் ஒரு சான்றா வாள். இன்னொரு விளக்கம் சகுனத் தடைகள் ஏற்படாமலிருக்க.

### திருமணத்தின் போது மணப்பெண் முகத்திரை அணிவது ஏன்?

முற்காலத்தில் மணமகள் தாலி கழுத்தில் ஏறும் வரை மணமகனைப் பார்ப்பதில்லை. ஆகவே முகத்திரை அணிந்து மணவறைக்கு அழைத்து வந்தார்கள். அத்தோடு கண் திருஷ்டி களிலிருந்தும் விமர்சனங்களிலிருந்தும் விடு விப்பதும் ஒரு காரணமாகும். தாலி ஏறியதும் முகத்திரையை அகற்றி நான் இப்போது "இவரின் மனைவியாகி விட்டேன்" என்று சபையோருக் குத் தன் முகத்தைக் காட்டுகிறாள்.

அட்சதை என்றால் குத்துப்படாததும் பழுதற்ற தும் என்று பொருள்படும். பழுதுபடாத பச்சை அரிசியைப் போல் வாழ்க்கையும் பழுதுபடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே பெரிய வர்கள் அரிசியால் ஆசி வழங்குகிறார்கள். (நுனி முறியாத முழு அரிசியாக இருக்க வேண்டும்.)

நெல்லிலிருந்து பிரித்தெடுத்த முளையுள்ள அரிசியுடன் மஞ்சள் கொடி, பன்னீர், மலர் இதழ்கள் ஆகியவற்றைக் கலந்து அட்சதை தூவுவதே முறையாகும்.

### ஆரத்தி

ஒரு தட்டில் 3 வாழைப்பழத் துண்டுகளை வைத்து அதன் நடுவே திரியைச் செருக வேண்டும். இலகுமுறை ஒரு நெருப்புக் குச்சி யில் திரியைச் சுற்றி நெய்யில் தோய்த்து வாழைப்பழத்தின் நடுவே குத்துவதாகும். தட்டில் திருஷ்டி கழிப்பதற்காக மஞ்சளும் சுண்ணாம் பும் சிறிது நீர் விட்டுக் கலந்து வைக்கப்படும். இக் கலவை சிவப்பு நிறமாக மாறி வரும். அவசரத் திற்குக் குங்குமம் பாவிக்கலாம்.

ஆரத்தி எடுக்கும் போது யாருக்குத் திருஷ்டி கழிக்கிறோமோ அவரை நிற்க வைத்து (கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாகப் பார்த்து நிற்க வேண்டும்) அவரை இறைவனாக நினைத்து இறைவனுக்கு நாம் எப்படிக் கற்பூரம் காட்டு கிறோமோ அதேபோல் ஆரத்தித் தட்டைச் சுற்ற வேண்டும் (வலம் சுழியாக).

மணமக்களுக்கு ஆரத்தி எடுக்கும் போது மணமகன் பக்கத்தால் மேலெழும்பி மணமகள் பக்கமாக கீழிறங்க வேண்டும். 3 முறை செய்ய வேண்டும். கீழே 3 தரம் ஆட்டி பின் மேலெழும் பிச் சுற்ற வேண்டும்.

### திருமணத்தில் அறுகரிசி இடும் முறை

எமது இந்து சமய விளக்கப்படி அறுகரிசியை (அட்சதை) பெரியோர்கள் இரு கைகளிலும் எடுத்து மணமக்களின் சிரசில் தூவி பின் இரு தோள்களிலும் இடுப்பு, முழந்தாள் என்று மேலிருந்து கீழே வர வாழ்த்த வேண்டும் (3 முறை) அல்லது சிரசில் மட்டும் 3 முறை தூவி ஆசீர்வதிக்கலாம்.

நாங்கள் மணமக்களை தெய்வமாகக் கருதுவதால் தெய்வத்திற்குப் பாதத்திலிருந்து

சிரசிற்குச் செல்ல வேண்டும் என்று சொல்வார் கள். மணமக்களை மானிடராகக் கருதினால் சிரசிலிருந்து பாதத்திற்கு வரவேண்டும் என்றும் சொல்வார்கள். இவ்விரண்டு விதமான வருண னைகளையும் எமது இலக்கியங்களில் காண லாம். பாதாதி கேசமா? கேசாதி பாதமா? இவை வர்ணனைகளே அன்றி அட்சதை தூவுவதற்கல்ல. தெய்வதற்கிற்கு நாம் செய்வது பாத பூஜை. பூசொரிவதல்ல. அத்தோடு மணமக்களை பெரி யோர்களே அட்சதை தூவி ஆசீர்வதிப்பவர்கள். ஆகவே சிரசில் இருந்து தான் வரவேண்டும். மீனாட்சி சுந்தரேசர் கல்யாணத்தில் தேவர்கள் வானிலிருந்து மலர்தூவி ஆசீர்வதித்து வாழ்த்து வதாகப் புராணம் சொல்கின்றது. ஆகவே அரிசி மேலிருந்து கீழே வருவது தான் சாலப் பொருந்தும்.

(காலிலிருந்து தலையை நோக்கிச் செய்யப் படும் கிரியைகள் அபரக் கிரியையிலும், பிதுர்க் கடமையின் போதுமே செய்யப்படுகின்றது. பிரிந்த உயிர் பூலோகத்திலிருந்து மேல் நோக்கி விண்ணுலகம் செல்வதாக எடுத்துக் காட்டவே காலிலிருந்து தலையை நோக்கி கிரியைகள் செய்யப்படுகின்றன.)

**கௌரி கல்யாண வைபோகமே**

திருமணத் திகதி முற்றாகியதும் கவனிக்க வேண்டியவை :

1. ஆண், பெண் இருவரின் ஜாதகப் பொருத்தம் பார்த்து திருமணத் திகதியும் பொன்னுருக்கல் திகதியும் நிச்சயிக்கப்பட வேண்டும்.
2. திருமண மண்டபம் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
3. புரோகிதரை ஒழுங்கு செய்ய வேண்டும்.
4. நாதஸ்வரம், மேளம் ஒழுங்கு செய்ய வேண்டும்.
5. மணப்பெண்ணை அலங்கரிக்க உரியவரை நியமிக்கவும்.
6. மணவறை, மாலை, திருத்தொங்கல், வாழை மரம் கட்ட பூக்காரனை நியமிக்க வேண்டும்.
7. கோலம் போட ஒழுங்கு செய்ய வேண்டும்.
8. விருந்தினர்களின் எண்ணிக்கைப் பிரகாரம் உணவு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
9. படம், வீடியோ ஒழுங்கு செய்ய வேண்டும்.
10. திருமண அழைப்பிதழ் அச்சடித்து விநி யோகித்தல்.

இன்று திருமணங்களின் போது மணமக் களை வாழ்த்துவதற்காக தட்டில் வைக்கப் பட்டுள்ள பூக்களை சபையிலுள்ளவர்களின் கையில் கொடுத்து தாலி கட்டும் சந்தர்ப்பத்தில் வாழ்த்துமாறு கூறுகின்றார்கள். சபையோர் தாம் அமர்ந்துள்ள இடங்களிலிருந்த படியே பூக்களை எறிகின்றனர். இது பெரும்பாலும் அவர்கள் முன்னாலுள்ளவர்களின் தலையிலேயே விழு கின்றது. இதைத் தவிர்ப்பதற்கு மணமக்களுக் குரிய தாலி, கூறை போன்ற மங்கலப் பொருட் களை சபையோரின் ஆசீர்வாதத்திற்கு எடுத்துச் செல்கையில் கூடவே அட்சதையும் எடுத்துச் சென்றால், இந்த மங்கலப் பொருட்களின் மேல் சபையோர் அட்சதையையும் பூக்களையும் தூவி தமது வாழ்த்துக்களைக் கூறலாம்.

# சைவ சமயத்தில் அன்பு தொடர்பான கருத்துக்கள்

**க. கணேசதேவா**
B.A, PGDE, M.A,
**ஆசிரியர்,**
**யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.**

இறைவனை வழிபாடு செய்வது, மதித்து வணங்குவது அன்பின் சிறப்பம்சங்களில் ஒன்று. யார் இந்த முழு அண்டத்தின் மீதும் அன்பு செலுத்துகிறார்களோ அவர்கள் அண்டத்தில் உள்ள எல்லாவற்றையும் வழிபாடு செய்வார் கள். ஏனெனில் இந்த உயிரினங்கள் வாழும் ஜீவ பூமியில் இருக்கும் ஒவ்வொரு அணுவும் தெய் வத்தின் ஒரு பகுதி. இந்த அண்டத்தைப் பூஜிப்ப தால் நீங்கள் அதிக தெய்வ அம்சத்தைப் பெறு கிறீர்கள். அன்பைப் பற்றிப் பேசிக் கொண்டும், புகழ்ந்து கொண்டும் இருப்பது அன்பின் அடை யாளம் ஆகும். பூஜை செய்யப்படுபவரும், பூஜை செய்பவரும் ஒன்றாகி விடுகிறார்கள். அந்த சங் கமம்தான் அன்பு. தெய்வத்தை எல்லா உருவங் களிலும் மதித்து வணங்குவதுதான் தெய்வீக அன்பு. இந்த தெய்வீக அன்பையே சைவசமயம் கூறுகின்றது.

"சைவம் சிவனுடன் சம்பந்தமானது" என்று திருமூலர் இலக்கணம் கூறுகின்றார். சிவனுடன் ஒன்றாய் இருப்பதாகிய ஒரு நிலையை எடுத்துக் கூறும் சமய நெறியே "சைவம்" என்று அவர் குறிப்பிடுகின்றார். சைவ சமயத்தில் அன்பு பற்றிய கருத்துக்களைத் திருமூலரின் திருமந்திரம் மூலம் அறிய முடிகின்றது.

**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவம் ஆவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே.**

(திருமந்திரம், அன்புடமை–1)

அன்பே சிவமாய் அமர்ந்திருத்தல் ஒரு நிலை அனுபவம். அதற்கான முறை அன்பே சிவம் என்பதை அறிதல். "அறிதல்" என்பது முறை யாகவும் அமர்ந்திருத்தல் என்பது அடையும் நிலையாகவும் கூறப்பட்டிருக்கின்றன. அறியப் படும் ஒன்றே இருத்தலுக்கும் உரியதாய் இருக் கின்றது. அதுதான் அன்பே சிவம் என்பது. இதை அறிதலையும் பின் இருத்தலையும் இப்பாடல் விளக்குகிறது. அன்பு என்னும் சொல்லுக்கு ஒரு பொருள் உண்டு. அன்புக்கு "சிவம்" என்ற பொரு ளையும் சொல்லலாம் என்பது திருமூலரின் திருமந்திரம்.

சைவ சமய நாயன்மார்கள் வரலாற்றைக் கூறும் பெரியபுராணத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

**'கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'.**

பெரியபுராணம் – 143

என்று சிவனடியார்களை அறிமுகப்படுத்துகின் றார் சேக்கிழார். கூடும் அன்பில் இறைவனைக் கும்பிடுகிறார்கள் என்பது இதன் கருத்தாகும்.

காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திரு வந்தாதியில் இடைவிடாமல் அன்பைக் கைக்

கொள்ளும் நிலையைப் பேசுகிறார்.

**'இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்**
**படரும் நெறி பணியா ரேனும் - சுடர் உருவில்**
**என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு**
**அன்பறாது என்நெஞ்சு அவர்க்கு'.**

(அற்புதத்திருவந்தாதி-2)

எம்முடைய துன்பங்களை நீக்கவில்லை என்றாலும், எங்கள் மீது இரக்கப்படவில்லை என்றாலும், நாங்கள் செல்லவேண்டிய வழியைக் காட்டாதவர் என்றாலும், சுடர் உருவமாக நடமாடும் எம் கடவுள்மீது என் அன்பு இடைவிடாமல் செயற்படும்! எந் நெஞ்சமும் அவருக்குரியது! என்று கூறுகிறார்.

அன்பு வேறு, பேரன்பு வேறு என்னுமாறு மனிதப் பிறவியின் வாழ்வு அமைகிறது. அன்பை நிலைநிறுத்தும் முயற்சியான பிறவித் தன்மையில்தான் அவ்வேறுபாட்டு நிலை உணரப்படும். ஆனால் பிறப்பில் அன்பு விளங்கத் தொடங்கிய போது அன்பு பெருகுகிறது என்பது தெரியவரும். இதை உணர்த்தும் அப்பரடி வாக்கு,

**'என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற**
**இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே'**

என்று குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் அன்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

**அன்புறு சிந்தையராகி அடியவர்**
**நன்புறு நல்லூர்ப் பெருமணம் மேவி நின்று**
**இன்புறும் எந்தை இணையடி ஏத்துவார்**
**துன்புறுவார் அல்லர் தொண்டு செய்வாரே.**

அன்பு கொண்ட எண்ணத்தில் செயற்படுபவர் பரம்பொருளால் இன்பம் பெறுபவரே! இடையிலுள்ளவர்களுக்குத் தெரிவது துன்பம் அடைகிறார்கள் என்பதாக! ஆனால் அது தொண்டுதான் என்று அதன் வரையறையை விளக்கினார் திருஞானசம்பந்தர்.

சைவசித்தாந்தத்தில் சிவப் பரம்பொருளானது "அயராத அன்பு" செய்துகொண்டிருக்கும் தன்மையைப் புலப்படுத்துகின்றது. ஆன்மா கண்ணுக்குப் பொருளைக் காட்டுவது போல் ஆன்மாவைக் கண்டு காட்டுகிறான் இறைவன் என்பதும், அப்படிச் செய்கிற அவன் அயர்வில்லாமல் அன்பு செய்பவனாக இருக்கிறான் என்பதும் கூறப்பட்டன.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதின்னான்கிலும் மணிமுடியாய் விளங்கும் சிவஞானபோதத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

**காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல**
**காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்**
**அயரா அன்பின் அரன்கழல் செலுமே.**

- சிவஞானபோதம் (சூத்திரம்-11)

உயிரானது அன்போடு அத்துவித சம்பந்தமாக இணைந்திருக்கிறது. அதே உயிர் அன்பைச் செயற்படுத்தும் வாழ்வை மேற்கொள்கிறது. பிறவியில் அன்பைச் செயற்படுத்தி வாழுதல் இரண்டு வகையாக அமைகிறது. ஆர்வத்தால் நட்பு வாழ்வை நிலைநிறுத்துவது. நட்பு வாழ்வானது பரம்பொருள் அன்புடன் இணைந்த வாழ்வாக அமையும் போது நயமான வாழ்வை நிலைநிறுத்துகிறது. ஆர்வத்தால் நட்பைச் செயற்படுத்தும் அன்பு வாழ்வானது நட்பை உடமையாகக் கொண்டு இயங்குகின்றது. நட்பு வாழ்வு பரம்பொருள் அன்பில் நின்று இயங்கும்போது நட்பானது உரிமையாக அமைகிறது. இந்த வாழ்வு உச்ச நிலையான நாகரிகத்தை எட்டுகிறது. அன்பு என்பது உணர்ச்சி இணைப்பாக இருக்கிறது. இது தனியே பழகுதலாக இல்லாமல் தனக்கு உள்ளேயே பழகுதலாக இருக்கிறது. அதாவது ஆன்மாவில் நீக்கமற நிற்கும் பரம்பொருளின் அன்பில் நட்பைச் செயற்படுத்துகிறது.

இந் நிலையில் நீக்கமற நிறைந்துள்ள இறைவன் அன்பும், ஆன்மாவின் அன்பும் இணைந்து ஒரு பொருள் பழக்கமாகவே சிறக்கிறது. இந் நிலையில் நட்பானது உடமையாக இல்லாமல் உரிமையாகவே இருக்கிறது. இப்போது பரம் பொருள் செய்த நன்றி தெரியவரும். பரம் பொருள் தன்னில் (ஆன்மாவில்) இணைந்து நின்று செய்த நயமும் புலப்படும்.

"அயரா அன்பு செய்யும் அரனின் திருவடிக்கு ஆன்மா செல்லும்" என்பது கூறப்படுகிறது. அயரா அன்பை இறைவன் செயலாகக் காண்பது நயம் காண்பது. இது நட்பை உரிமைக்காகப் பெற்ற நிலை. உள்பொருளான இறையன்பைக் கண்ட தன் அன்பைச் செலுத்துவது ஒரு பொருளுடன் பழகுவதாகும். இது பழகி நீங்குதலாக இல்லாமல் "உள்ளிருந்து பழகும் அன்புடன் அன்பு செய்தல்" என நீங்குதல் தவிர்ந்த அன்பாக அமைகிறது. இந்நிலையில் ஆன்மா பெறும் இன்பமான அன்பு நிலை ஆகும். இது தான் அன்பினால் அனுபவிக்கும் இன்பநிலை. இதிலே அன்பே சிவமாய் அமைந்திருக்கும் நிலை இறைவனின் உணர்விற்கும் அன்பிற்கும் உள்ள இடைவெளியை இதில் உணரமுடியும். இதில் அன்பை தனிப்பொருளாகக் காட்ட இடமுண்டு. ஆனால் அன்பும் சிவமும் வேறு வேறாக இல்லாமல் அத்துவிதமாக இருப்பது புலப்படும். இந்த அத்து விதத்துள் அத்துவித மானது ஆன்மா. இப்போது பெறுவது அன்பினால் ஆகின்ற இனிதாம் இன்பம். இவ்வாறு பதினொராம் சூத்திரம் அன்பின் அனுபவம் பற்றி ஆழமாக எடுத்துக்காட்டுகின்றது.

சிவஞானபோதத்தின் பன்னிரண்டாம் சூத்திரத்தின் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன.

**'செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன் எனத்தொழுமே'.**

இச் சூத்திரம் சீவன் முத்தி இயல்பினை மேலும் விளக்குகின்றது. சீவன் முத்தி நிலையை தலைப்பட்ட முத்தான்மாக்கள் பிராரத்த வினை காரணமாக சில சமயங்களில் நிட்டை நிலை நின்றும் நீங்கி மீண்டும் உலகியலுக்குள் வரலாம். இதனால் மலங்களில் எதுவும் தன்னை ஒரு காலத்தும் தாக்காதவாறு அதற்குரிய உபாயத்தை சீவன் முத்தர்கள் தேடிக்கொள்ள வேண்டும். சீவன் முத்தன் மும்மலங்களையும் களைபவன் என்னும் கருத்தையே "செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம்மலம் கழிஇ" என்று இச் சூத்திரம் உணர்த்துகிறது. சீவன் முத்தர் தம்மை மலங்கள் தாக்காது இருக்கும் பொருட்டு சிவபக்தர்களோடு இணங்கி அவர்களிடத்தில் அன்புடையவராய் ஒழுகுவர் என்பதை இச் சூத்திரம் "அன்பரொடு மரீஇ" என்று உணர்த்துகிறது. சீவன் முத்தன் எவரிடத்தேனும் திருநீறு, உருத்திராட்சம் முதலிய சிவ சின்னங்களோடு கூடிய சிவ வேடத்தினைக் கண்டவிடத்து அவரைச் சிவமெனவே வழிபடுவன் என்பதை "மால் அற நேயம், மலிந்தவர் வேடம், அரன் எனத் தொழுமே" என இச் சூத்திரம் உணர்த்தும். சீவன் முத்தன் சிவலிங்கம் அமைந்துள்ள சிவாலயங்களையும் சிவன் என வழிபடுபவன் என்பதை இச் சூத்திரம் "ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" என்று உணர்த்துகின்றது.

**அது இது என்றது அது அல்லான் கண்டார்க்கு**
**அது இது என்றதையும் அல்லான் - பொது அதனில்**
**அத்துவதம் ஆதல் அகண்டமுதைவமே**
**அத்துவிதி அன்பின் தொழு.**

- சிவஞானபோதம் (சூத்திரம்-12)
நான்காமதிகரணம்
உதாரண வெண்பா-1

"அது இது" என வேறுபட்டு நில்லாது அது இது எனச் சுட்டி அறிந்ததும் இல்லாது இறைவன் இணைந்த ஆன்மாவுக்கு உலகமே தெய்வமாகக் காட்சிப்படும். "அத்துவிதி யாயும் அன்பின் தொழுவதும் இருப்பதும் ஆன்மா" என்பது இவ் வெண்பாவின் பொருள்.

இதுவரை பரம்பொருளானது ஆன்மாவுடன் நீக்கமற நிறைந்து இருந்தாலும் அதனுடன் ஆன்மா பழகவில்லை. ஆன்மாவானது பழகியவு டன் வேறுபாடு இல்லாத ஒற்றுமை அமைகிறது. இப்படி "தவிராத" பழகுதலுக்கு ஆன்மா இயல் பாகவே செல்லாது தவிர வேண்டியவற்றுடன் தவிர்க்க முடியாத பழக்கத்தை ஆன்மா மேற் கொண்டிருந்தது அதற்குக் காரணம்.

முதல்வன் உலகத்திலுள்ள எல்லாப் பொருளி லும் கலந்து நிற்பதால் அந்தப் பொருள் என்றும், இந்தப் பொருள் என்றும் வேறாகப் பிரிக்க முடி யாதவன் அந்தப் பொருளே என்று ஒரு பொரு ளாகச் சொல்லவும் முடியாதவன். இந்த மூன்றுக் கும் பொதுவாக எல்லாப் பொருளினும் முதல் வன் கலந்து நிற்பதனால் எல்லாம் அவனுடைய வடிவமே. ஆயினும் அவ்வடிவுகள் எல்லாவற்றி லும் அடியார் வேடமும், ஆலயமும் அன்பு விளை யும் இடமாகும். ஆதலால் அவ்விரண்டு இடத்தி லும் வழிபடுக என்று கூறுகிறது.

**வினையால் அசத்து விளைதலால் ஞானம்**
**வினை தீரின் அன்றி விளையா – வினைதீர**
**ஞானத்தை நாடித் தொழவே அதுநிகழும்**
**ஆனத்தால் அன்பின் தொழு.**

சிவஞானபோதம் (சூத்திரம்–12)
– நான்காமதிகரணம்
உதாரண வெண்பா–2

உலகப் பொருள்களுடனான பழக்கத்தில் விளைவது அசத்து நிலை மாறிமாறி அமையும் தன்மையே "அசத்து நிலை" எனப்படும். "ஞானம்" உண்டாக உலகப்பொருள் அனுபவத்தில் நீங்க வேண்டும். அதற்கு ஞானத்தை விரும்பி "அன்பி னால்" செயற்பட வேண்டும் என அறிவுறுத்து கின்றது இவ்வெண்பா.

நீக்கமும் மாற்றமுமாக அமையும் பழக்கங் களின் நிலை மாறவேண்டும். அதற்கு அன்பைச் செயற்படுத்த வேண்டும். இதுவே "நட்பு செய்தல்" என்பது. தொடக்கத்தில் அன்பை உடமையாகச் செயற்படுத்துவதே இயலும். பின்னர் அன்பு ஆலித்து ஆலித்துப் பெருகிட நட்பானது உரிமை யாகும்.

உலகப் பொருளில் செயற்படும் நட்புடமை யானது உயிர்ப் பொருளில் இருக்கும் நட்புரிமை யைத் தருகிறது. இதுவே அன்பும் பேரன்புமாக இருப்பது. அன்பு என்பது உலகில் வேறு பொருள். பழக்கங்களில் உடமையாக இருந்து, உயிரில் இணைந்திருக்கும் இறைவனின் அன்பால் உரிமையாக அனுபவப்படுகிறது என்ப தாகும். இவ்வகையில் அன்பு இன்பமான அனு பவமாகும். இப்போது சிவத்தின் அன்பே இன்ப மாக ஆன்மாவில் இருப்பதாகும். இந்த அனுப வம் பெற்றோர், அன்பே சிவமாக அனுபவித்து இருப்பர்.

சித்தாந்த சாத்திரங்கள் பதின்னான்கினுள் மிகப்பெரிய நூலாக விளங்குவது, மெய்கண்ட தேவரின் மாணாக்கர் ஆகிய அருணந்தி தேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானசித்தியார் ஆகும். சிவஞானசித்தியாரின் இரண்டாம் சூத்திரத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப் படுகின்றன. பிரபஞ்சங்களாகிய பசு, பாசங்க ளைத் தோற்றுவிக்கும் முதல்வன், அப்பசு, பாசங் களோடு அத்துவிதமாய் ஒன்றித்தும் உடனாயும் வேறாயும் நிற்கும் முறைமையை இச் சூத்திரம் கூறுகின்றது. பாசங்களாகிய இரு வினை உண்மை இலக்கணங்களும், மாயை மாயே யெங்களின் இலக்கணங்களும், ஆணவத்தின்

உண்மை இலக்கணங்களும் இம் மலங்களின் உயிர்களைப் பந்திக்கும் முறைமையும், உயிர்கள் அம்மல பந்தத்தில் நின்று நீங்கி அருள் பெறுவதற்கு வாயிலும் கூறப்படுகின்றன.

சிவஞானசித்தியாரின் இரண்டாம் சூத்திரத்தின் 106 வது பாடலில் அன்பு பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

**'தந்தைதாய் பெற்ற தத்தம்புதல்வர்க டஞ்சொ லாற்றின்**
**வந்திடா விடினு றுக்கி வளாரினா லடித்துத் தீய**
**பந்தமு மிடவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்**
**இந்த நீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும்'**

தந்தை, தாய் பெற்ற தம் புதல்வர்களை தம்முடைய சொல் வழியில் நடவாதவர்கள் ஆயின் அதட்டிச் சிறு கம்பினால் அடிப்பர்; கொடிய விலங்கும் இடுவர். இச் செயல்கள் எல்லாம் வெகுளிபோலத் தோன்றினாலும், அவர்கள் மேற் கொண்ட அன்பு காரணமான செயல்கள் ஆகும். அதாவது தந்தை தாயர் தம் சொல்லின் வழி ஒழுகாத புதல்வர்களைக் கண்டித்தல் போல, முதல்வன் நிக்கிரகம் செய்தல் செயல் வகையால் வெகுளிபோலத் தோன்றினும் கருத்து வகையால் அருளே ஆகும்.

சிவஞானசித்தியாரின் சுபக்கம் பகுதியிலுள்ள இரண்டாம் சூத்திரத்தின் 117 வது பாடலில் சிவன் திருவடியை அன்பினால் வழிபடுதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**'காண்பவன் சிவனே யானா லவனடிக் கன்பு செய்கை**
**மாண்பற மரன்றன் பாத மறந்துசெ யறங்க ளெல்லாம்**
**வீண்செய லிறைவன் சொன்ன விதியறம் விருப்பொன் றில்லான்**
**பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்து கொள்ளே'**

ஏனைய கடவுளிடத்துச் செய்யும் வழிபாடுகளை அறிந்து அவற்றிற்குப் பயன் அளிப்பவன் சிவபெருமான் என்று கூறப்படுகிறது. சிவபெருமான் திருவடியை அன்பினால் வழிபடுதல் சிறந்த புண்ணியம் ஆகும். அம் முதல்வனது திருவடியை மறந்து செய்கின்ற புண்ணியங்கள் யாவும் பயனற்ற செயல்களாகும். சிவபெருமானை வழிபடுதல் அதனிலும் சிறந்த புண்ணியம் ஆகும். இங்கு சிவபெருமான் திருவடிக்கு அன்பு செய்யும் வழிபாட்டைச் செய்தல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு அன்பு பற்றிய வழிபாடு முக்கியம் பெற்றிருப்பதைக் காணலாம்.

சிவனடிக்கு அன்பு செய்தல் பற்றி சிவஞான சித்தியாரின் 119 வது பாடலிலும் கூறப்பட்டுள்ளது.

**'அரனடிக் கன்பர் செய்யும் பாவமு மறம தாகும்**
**பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்**
**வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி**
**நரரினிற் பாலன் செய்த பாதக நன்மை யாய்த்தே'**

இங்கு பரமசிவனது திருவடிகளுக்கு அன்புடையார் செய்யும் பாவச் செயல்களும் அறங்களாய் முடியும். பரமசிவனது திருவடிகளுக்கு அன்பு இல்லாதவர் செய்யும் புண்ணியச் செயல்கள் பாவங்களாய் முடியும். இங்கு சிவபிரானது திருவடிப் பூசையை அன்போடு செய்ய வேண்டும். இப் பரமசிவனை நாள்தோறும் பக்திசெய்து அன்புடன் வழிபடுதல் வேண்டும் எனப் இப்பாடல் கூறுகின்றது.

சிவஞானசித்தியாரின் பதினொராம் சூத்திரத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. சிவஞான சித்தியாரின் பதினொராவது சூத்திரத்தின் 310 வது பாடலில் அன்பு பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

**'காயமொழிந் தாற்சுத்த னாகி ஆன்மாக்**
**காட்டக்கண் டிடுந்தன்மை யுடைய கண்ணுக்(கு)**
**ஏயும் உயிர் காட்டிக்கண் டிடுமா போல**
**ஈசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவன் இத்தை**
**ஆயுமறி வுடையனாய் அன்பு செய்ய**

**அந்நிலைமை இந்நிலையின் அடைந்தமுறை யாலே**
**மாயமெலாம் நீங்கி அரன் மலரடிக்கீ ழிருப்பன்**
**மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே'.**

ஆன்மா அறிவுடையவனாய் அன்பு செய்ய உடல் அழிவு பெறுமாயின் மலப்பற்றில்லாது பரிசுத்தமாகிறது. அந் நிலைமை அடைந்த முறை யாலே மல சம்பந்தமான மயக்கம் எல்லாம் நீங்கப் பெற்று, என்றும் நீங்காத அத்துவித பேரின்பத்தைச் சுவைத்துக் கொள்ளும். முதல் வனது மலர் போன்ற சீபாதத்தை அணைந்து இருப்பவன், காட்டக் காணும் தன்னுடைய கண்ணுக்கு உயிர் காட்டிக் காணும் போல முதல் வனது மல நீக்கம் பெற்ற உயிர்க்கு பேரின்ப அனுபவத்தைத் துய்ப்பித்து தன் பொருட்டு தானே துய்ப்பவனுமாய் இருப்பன் என்று இப்பாடலின் கருத்துக் கூறுகின்றது.

சிவஞானசித்தியாரின் பன்னிரண்டாம் சூத்திரத்தில் அன்பு பற்றிய கருத்துக்கள் காணப் படுகின்றன. சிவஞானசித்தியாரின் பன்னிரண் டாம் சூத்திரத்தில் 323வது பாடலில் அன்பு பற்றிய கருத்துக் காணப்படுகிறது. பாடல் பின்வருமாறு :

**ஈசனுக்கன் பில்லார் அடியவர்க்கன் பில்லார்**
**எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும்அன்பில்லார்**
**பேசுவதென் அறிவிலாப் பிணங்களைநாம் இணங்கிற்**
**பிறப்பினும் இறப்பினும் பிணங்கிடுவர் விடுநீ**
**ஆசையொடும் அரனடியார் அடியாரை அடைந்திட்டு**
**அவர் கருமம் உன்கரும மாகச் செய்து**
**கூசிமொழிந் தருள்ஞானக் குறியில் நின்று**
**கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.**

சிவனடியார்பால் அன்பில்லாதவர் முதல்வனி டத்தும் அன்பில்லாதவரே ஆவார். அவர் பிற உயிர்க்கும் அன்பில்லாதவர். தமக்கும் அன் பில்லாதவர் ஆவார். இத்தகையோர் உயிரோடு இருந்தும் அறிவின்மையால் பிணமே ஆவர். இத்தகையரோடு சேர்ந்திருப்பவர் மேலும் துயரத்திற்கு உட்படுவர். பேரன்போடும் சிவனடி பேணுவார்க்கு கடமை பூண்டொழுகும் மெய் யன்பர் கூட்டத்தில் கலந்து, அவர் கருமம் உன் கருமமாகச் செய்து பணிவாக அவர் முன் பேசி, தற்பேதமின்றி முதல்வன் அருளாகும்.

ஈசனுக்கு அன்பில்லாதவர் எல்லா உயிர்க்கும் அன்பில்லாதவராய் தம் உயிர்க்கும் உறுதி செய்து கொள்பவர் அல்ல. திருக்குறளில் தம்முயிர்க்கன்பு பூண்டு அதை நற்கதி சேர்க்க வேண்டுவோர் மன்னுயிர்க்கன்பு பாராட்டற் பாலர். என்னை? "மன்னுயிரோம்பியருளான் வார்க்கில்லெனப, தன்னுயிரஞ்சும் வினை" என்ற முறையினாம் என்று கூறப்பட்டுள்ளது. எனவே சிவநேயமும், அடியார் நேயமும், மன்னுயிர் அன்பும் கூடி உள்ளது என்று கூறுகின்றது. இத னையே திருமந்திரம் "அன்புஞ் சிவமுமிரண் டென்ப ரறிவிலார், அன்பே சிவமாவதாருமறி கிலார், அன்பே சிவமாவதாரு மறிந்தபின், அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே" எனக் கூறியுள்ளது.

நட்புரிமை கிட்ட இறை அன்பை நோக்கி ஆன்ம அன்பு பெருகி வளரும். இந்த நட்புரி மையை நாடுவதன் மூலமே "அன்பின்" மூலத் தன்மையை அடைய முடியும். இதன் பயிற்சியே இறைவன், அடியவர் பிற உயிர், தான் என அனைத்துடனும் அன்பு பழகுதலாகும். உலகப் பொருள் பழக்கமாகிய பயிற்சிகள் அனைத்தும் மாறுவன. அன்பினால் கொள்ளும் பழக்கம் மாறாதது. அன்பு இறைவனின் அத்துவித கலப்பில் இயங்கும் ஒன்றாக இருப்பது. அந்த அன்பால் உயிரினுள் தன்னை நிறைவித்துக் கொண்டவன் இறைவன். தான் ஞானத்துள் உயிரை அமைத்துக் கொண்டும் இருக்கிறான். உயிருள்ள அந்த அன்புடன் பழகுவதற்கான பயிற்சியே உலக நட்பு. இந்த நட்பு மற்ற உயிர் களுடன் தான் பிற உயிர் என்ற வேறுபாடு இல்லாது பழகுதலை மேற்கொள்கிறது. அதற் காக வரும் இடர்களை எல்லாம் நீக்கியும்

இடரில் விழாமல் நின்றும் நட்புடமையில் வெல்கிறது. இந்த முயற்சியில் "நட்புரிமையை" உணர்கிறது. நட்புரிமையில் தெரிந்து நாடும் முயற்சியில் பரம்பொருள் துணை இருப்பது தெரியும். இந்த உயிரின் வேற்றுப் பொருள் பழக்கத்தில் "அன்பும் சிவமும்" வேறுவேறாக இருந்தன. நட்புடமை பயிற்சியில் "அன்பே சிவம்" ஆவது என்பது தெரியவருகின்றது. நீக்கமற நிறைந்த சிவத்தின் "அன்பு" பழக்கமான பின் அன்பும் சிவமும் இரண்டாக இல்லாத கலப்பு கிடைக்கிறது. இது ஒன்றே அல்.

அன்பே இன்பமாக அனுபவிக்கப்படும் போது சிவம் என்பதே அனுபவமாகின்றது. இப்போது இருத்தல் என்பது சிவத்தின் விருப்பமாகவே இயங்குவதாக இருக்கும். "அமர்தல்" என்பது விருப்பத்தைக் குறித்தது. சிவத்தை விரும்புவது என்பதல்ல. சிவத்தின் பணி செய்தல் என்பதாகும். அவ்வக்கால மக்களுக்காக புதிது புதிதாகக் கடமையாற்றும் கடவுள் பணியில் அவர்கள் நிற்கிறார்கள். இப்போது அவர்களின் பணி நயமான பணியாகின்றது. இப்படி ஒரு பணியை ஆற்றியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் செய்த புதுமைப்பணி "அடியவர்க்கு அடியவன் ஆதல்" என்பதைக் கொள்கையாக ஆக்கியது. அதனாலும் "நயத்துக்குச் சுந்தரனார்" ஆனார்.

"இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என இறைவனைத் தெரிந்து கொள்வது வேறு. உலக அனுபவத்தில் ஏதாவது ஒன்று அப்படி நீங்காத ஒன்றாக பாதித்து இருந்தால் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" என்பதை அனுபவிப்பதற்கான பயிற்சியாகும். இப்படியான பயிற்சியில்தான் நட்பின் பழக்கம், அன்பு ஆலிக்கச் செய்வதான முறையாக ஆகிறது.

இவ்வாறு சிவஞான சித்தியார் பாடல்களில் அன்பு பற்றிய ஆழமான கருத்துக்கள் காணப்படுகின்றன. பதின்னான்கு சைவசித்தாந்த சாத்திரங்களுள் சிவஞான சித்தியார் மிகப்பெரிய நூலாக விளங்குவதால் இந் நூலின் முக்கியத்துவம் சைவசித்தாந்தத்தில் நன்கு உணரப்பட்டுள்ளது.

இவ்வாறாக சைவசமயம் தொடர்பான நூல்களாக சைவசித்தாந்த சாத்திரங்கள், திருமூலரின் திருமந்திரம், சேக்கிழார் சுவாமிகளின் பெரியபுராணம், காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடிய தேவார திருப்பதிகங்களிலும் அன்பு பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

# சமய உணர்வு

**தி. செல்வமனோகரன்**
**உதவி விரிவுரையாளர்,**
**இந்துநாகரிகத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

மனிதன் தன்னிலும் மேம்பட்ட ஆற்றல் ஒன்று உண்டு எனவுணரத் தலைப்பட்ட காலத்தில், "சமயவுணர்வு" உருவாக்கம் பெற்றுவிட்டது. இது மனிதனின் அனுபவழி பெறப்பட்ட உணர்வாக எடுத்தாளப்படும். உணர்விற்கும் அனுபவத்திற்கும் இடையிலான தொடர்பு – முதலில் உருவானது எது எனத் தெளிவாக விடை காண முடியாததாக உள்ளது. தன் சூழல்சார் நிகழ்வுகளினூடாகப் பெற்ற அனுபவத்தினூடு, மனிதன் இயற்கைக்கு அப்பாலான ஆற்றல் ஒன்று உண்டு எனக் கருதி, அதனை நோக்கித் தன் சிந்தனை, உணர்வு, செயல் என்பவற்றை குவிமையப்படுத்தும் போதே "புனிதம்" தோற்றம் பெற்றது. பிறப்பு – இறப்பு, வாழ்வு — தாழ்வு, சிரிப்பு — அழுகை என இருவகைப்பட்ட வாழ்வாதார நிகழ்வுகள் இவற்றின்றும் விடுதலை பெற வேண்டும் என்ற உணர்வினை ஏற்படுத்தியது. இங்குதான் சமயத்திற்கான "மனநிலை" அல்லது "உணர்வு" உந்தப்பெற்று. புனிதம் பற்றிய நம்பிக்கையுணர்வும் அதன் நீட்சியாக வழிபாடும் உருவாக்கம் பெற்றது. வழிபாடு என்பது புனிதத்தை தன்வயப்படுத்த முனையும் ஒரு முயற்சியாகவும், மனப்பாங்காகவும் உள்ளது.

"வில்லியம் ஜேம்ஸ்" என்பார் "மனிதன் தாம் தனித்து நிற்கும் நிலையில் தாம் தெய்வீகம் உடையது என்று விளங்கிக் கொள்ளும் ஒன்று பற்றி உணர்வது, செய்வது, அனுபவிப்பது தான் மதம்" என்றார். இதனூடாக எமது சமயவனுபவத்திற்கும், சமயச் செயற்பாட்டிற்கும் அடிப்படை உந்துதலாக சமயவுணர்வு இருப்பதனை அனுமானிக்க முடிகின்றது. வியப்பு, மதிப்புசார் அச்சம், பயபக்தி என்பன சமயவுணர்வு களாக ஆரம்பத்தில் உருவாக்கம் பெற்றன. இவற்றின் நீட்சியாகவே இன்றைய "வழிபாட்டு மரபு"கள் திகழ்கின்றன.

இவ்வுலகிற்கு அப்பாலான மரணத்தின் பின்னான வாழ்வு பற்றிய எண்ணம், இவ்வுலக வாழ்வியலனுபவம் என்பவையே சமயவுணர்வின் அடிப்படைகளாக எடுத்தாளப்படுகின்றன. நியாண்டர்தால் மனிதன் காலத்திலேயே அல்லது கருவிக் கையாட்சி நிகழத்தொடங்கிய காலத்திலேயே சமயவுணர்வு அரும்பத் தொடங்கி விட்டது எனலாம். ஐம்பதுனாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களாக கருதப்படுகின்ற "குரோ — மாக்னான்" மக்கள் இறந்தவர்களின் சமாதியில் மஞ்சட்காவி தூவியமை இதற்கு உதாரணம் ஆகும். சமய வுணர்வை பல்தரப்பட்ட வகையில் ஆய்வு செய்தவரான ஜேம்ஸ் (E.O James) என்னும் அறிஞர்,

"இயற்கை நிகழ்வுகளுக்கு ஈடுகொடுக்கத் திராணியற்ற பழங்கால மனிதன் தன்னிலும் ஆற்றல் மிக்க மர்மமான துணையினை நாடி, நட்புக்கொள்ள வேண்டும் என்ற அகவுணர்வுத் தூண்டலுக்கு உள்ளானான்" எனக் கூறியுள்ளார். இதனை நாம் உள்ளுணர்வாகவும் எடுத்தாள்வ

துண்டு. இவ்வாறான அகவுணர்வுத் தூண்டுதல்களே சமயவுணர்வாக பரிணமிக்கத் தொடங்கியது. இதைச் சமயத்தின் "ஆரம்ப" நிலையாகக் கொள்ளலாம்.

சமயவுணர்வும் அதன் மீதான பற்றும் வளர, வளர இறையுணர்வும் அது சார்ந்த கருத்துக்களும் வளர்நிலை பெற்றன. இயற்கை வழிபாடு, ஆவி வழிபாடு, போலிப்பொருள் வழிபாடு, மந்திரம், முன்னோர் வழிபாடு, குலக்குறி வழிபாடு எனப் பல்தளங்களில் சமயவுணர்வு வளர்ச்சி பெற்றது. மேற்படிக் கால சமயவுணர்வை "குழு நிலைச் சமயவுணர்வு" என எடுத்தாளலாம். மனிதரின் மனமாற்றமும், அறிவு விருத்தியும் சமயவுணர்விலும் மாற்றத்தை அல்லது வளர்ச்சியை ஏற்படுத்தியது. மனிதருடைய இடையறாத் தேடல், உலகு பற்றிய அறிவு போன்றன புதிய புதிய சமயவுணர்வுகளை அவர்களுக்கு ஏற்படுத்தின. தெளிவற்ற இயல்போடு ஆவியுருக்களாகத் தோன்றி, பின் தேவ தேவதைகளாகி ஆளியல்புள்ள கடவுளராக ஏக தெய்வமாகி நிற்கும் தன்மை இதனை உணர்த்துகின்றது.

தொன்மைக்கால மனிதரின் சமயவுணர்வு "குழந்தை மனம்" பண்புநிலை கொண்டதாக இருந்தது. சமய உணர்வானது உள்ளார்ந்தது, அது உணர்ச்சிகளின் தொகுப்பு; நம்பிக்கை, அன்பு, தூய்மை, ஞானம், மன்னிப்பு, அறம் போன்றன அவற்றுட் சில. இவற்றின் ஆரம்ப கட்டமாக தொன்மைச் சமயவுணர்வுகள் சித்தரிக்கப்படுகின்றன. ஒருவரின் புதுமலர்ச்சிக் கட்டத்தில் இவை விரிவடைவதோடு வாலிபப் பருவத்தில் உள்ளுணர்வு முழுமையாக தொழிற்பட, மனவெழுச்சியின் அனுபவம் சார்ந்து முழுமையான உணர்வினை பெறுவர். அதுவே அவரது "சமயவுணர்வு" எனச் சொல்லப்படுகின்றது. இதுவே ஒருவகையில் சமயவுணர்வின் வரலாறும் ஆகிறது. இவ்வுணர்வின் பரிணமிப்பாக சமய வழிபாட்டு மரபைக் கூறலாம். தொடக்க காலத்தில் மனிதருக்கு ஏற்பட்ட அச்சவுணர்வும் பின் அதன் மீது ஏற்பட்ட மதிப்பும், பற்றும் சமயவுணர்வின் அடிப்படைகள் ஆகின்றன. அச்சவுணர்வே "பயபக்தியாக" மலர்ச்சி பெற்றது.

"பக்தியே இறைவனை அல்லது விடுதலையை அடைவதற்கான வழி" என உலக சமயங்கள் பொதுவாக முன்மொழிகின்றன. பக்தி என்பது "வணக்கம், வழிபாடு, பற்றுக்கொள்ளுதல், இணைப்புறுதல், எனப் பலவாறு பொருள் கொள்ளப்படுகிறது. "வியப்பு, மதிப்பு சார் அச்சம், பயபக்தி என்பன சமயவுணர்வுகளோடும் சமய அனுபவங்களோடும் மிகவும் நெருங்கிய தொடர்புடைய உணர்வுகளும் வெளிப்பாடுகளும் ஆகும். "பக்தி நிலைப்படும் போது சம்பந்தப்பட்டவர் பக்திமையுணர்வு உடையவராகின்றார்", என றுகடோல் ஃஓட்டோ (Rudolt otto) கூறுகின்றார். சாதாரண இயல்புணர்வுகளுக்கு உட்பட்டிருக்கும் மனிதன், அகத்தூண்டலினால் (உள்ளுணர்வு சார்ந்து) சமயவுணர்வு உந்தப் பெற்று பக்திமையுணர்வு மேனிலை பெற "விடுதலை"யை அல்லது "இறையை" அடைகின்றான். இதற்கு உதாரணமாக சாதாரண வேடுவனாகிய "திண்ணன்" சமயவுணர்வின் பெரும் எழுச்சியால் பக்திமையுணர்வு உந்தப்பெற்று ஆறு நாட்களில் இறைகதி (விடுதலை) அடைந்தமையை குறிப்பிடலாம். "பக்தி" ஒரு சமயவுணர்வு நிலையே. இது நம்பிக்கை, விருப்பு, காதல், ஒருமுக நோக்கினையுடைய பற்றுறுதி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகின்றது. இவ்வுணர்வுகளை நாயன்மார், ஆழ்வார் பாடல்களிலும், கிறிஸ்த்துவின் சீடர்களுடைய நற்செய்தியிலும், முகமது நபியின் வார்த்தைகளிலும் வெளிப்படுவதை நாம் கண்டுணரலாம்.

உலகெங்கும் உள்ள சமயவுணர்வாளர்களின் சமயவுணர்வுகள் யாவும் ஒருமித்த

தன்மை உடையனவாக இருப்பதில்லை. ஆயினும் அவ்வுணர்வாளர்கள் ஒருமுக நோக்கு உடையவர்களாகவே உள்ளனர். சிந்தனை — சித்தம் எனும் இரண்டும் ஒன்றாகிய நிலையிலேயே சமயவுணர்வு உந்தப்பெறுகிறது. மெய்யியற் தன்மையில் சிந்தனை வளர்ச்சி அல்லது செல்நெறி மாற்றமடையும் போது உணர்வுகளிலும் மாற்றம் ஏற்படுகிறது. உணர்வும், கோட்பாடும் மாறினாலும் அகநிலையில் உள்ள சமய உணர்வு மாற்றம் (முழுமையாக) உறுவதில்லை. வாழ்வில் துன்பமும் விரக்தியும் அதீதமாக ஏற்படும் காலத்திலும், உண்மை பற்றிய தீவிர தேடலில் ஈடுபடும் போதுமே மனிதருள் மறை பொருளாய் ஆழ்மனதிலிருக்கும் சமயவுணர்வு தீவிர வெளிப்பாட்டைப் பெறுகின்றது. இது குழந்தைப் பருவத்தில் நின்றும் படிநிலை வளர்ச்சி பெறுவதாயும் ஆழ்மனப்பதிவுகளோடு திடீரென மனவெழுச்சியுறுவதாகவும் எடுத்தாளப்படுகிறது.

மேலும் "போலி மனமாற்றம்" எனும் கருத்தாக்கம் கவனத்திற்குரிய ஒன்றாகும். தன்னிடம் உள்ள நம்பிக்கைகளிலும் சமயவுணர்வுகளிலும் இருந்து சில தேவைகளுக்காக ஒருவர் "மாறுதல்" உறும்போது அது "போலி மனமாற்றமாக" எடுத்தாளப்படும். உண்மையான உணர்வு மாற்றமின்றி வெறும் கவர்ச்சியால், பணத்தால், சில சலுகைகளால் சமயம் மாறுகின்றவர்கள் இதன் பாற்பட்டவர்களே. தற்காலத்தில் நடக்கும் "எழுப்புதற்கூட்டம், சமயப்பிரசாரக் கூட்டம்" போன்றன பக்குவமுறாததாகவும், வெறுமனே திகிலூட்டுவதாகவும், ஈர்ப்பு, உடனடி நம்பிக்கை, மானம் அல்லது கௌரவம் முதலிய மனவுணர்வுகளைத் தூண்டலுறப் பண்ணுபவையாகவும் உள்ளன. கட்டுமீறிய உணர்வுகளான இவை ஆடுதல், பாடுதல், பரவசமடைவதாகக் காட்டுதல் போன்றவற்றால் ஏற்படுத்தப்படுகின்றன. இவை வெறும் மனவெழுச்சிகளே அன்றி உண்மையான சமயவுணர்வு அல்ல.

சமயவுணர்வை மதத்தலைவராலோ மருத்துவராலோ ஒருவரிடம் திணிக்கமுடியாது. உள்ளுணர்வின் வெளிப்பாடாக அமைதலே உண்மையான சமயவுணர்வு ஆகும். உண்மையான சமய உணர்வுகளைத் தன் பண்பாட்டினின்றும் நெறிபிறழாததாய், உண்மைகளை இனம் காண்பதாய், மூடநம்பிக்கைகளை நிராகரிப்பதாய் மெய்மையை இலக்காகக் கொண்டு அதன் வழி செல்வதாய் அமையும். சமயசமூகவியல் ஆய்வறிஞராகிய "ஆகஸ்ட்டு கோம்டின்" (Augaste, Comte) என்பவர்,

1. இறையியல்
2. நுண்பொருட் கோட்பாட்டியல்
3. புறமெய்மைநிலை

என சமய சமூகவியலை மூன்றாகப் பகுத்துரைக்கின்றார்.

உலகில் நிகழும் அனைத்துச் செயற்பாடுகளுக்கும் இறைசக்தியே மூலகாரணம் என உரைப்பது "இறையியல்" ஆகும். இரண்டாவது உலக நிகழ்வுகளுக்கு கட்புலனாகா சக்திகளே காரணம் என நம்புவதாயும், மூன்றாவது உலகின் அனைத்து நிகழ்வுகளும் ஒரு ஒழுங்கு விதிப்படி நடந்ததை உணர்த்துவதாகவும் எடுத்தாளப்படுகின்றது. இவ்வாறான வகை மாதிரிக்கு சமயவுணர்வே அடிப்படையாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது. சமயவுணர்வின் வேற்றுநிலை, கருத்துக்களின் வேற்றுநிலையாக வெளிப்படுகின்றது. சமயம் "அறிவு, செயல், உணர்வு" எனும் மூன்றையும் அடித்தளமாக கொண்டமைந்தது. ஆரம்பகால மனிதனின் அறிவுவிருத்தி, செயல்நிலை பெற்ற போது அது உணர்வுத் தளங்கங்களை உருவாக்கியது. Comte ன் வகைப்பாடு அறிவு விருத்தியின் பாற்பட்டதாக தோன்றினாலும் அது சமய அருட்டுணர்வின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

ஒருவனுடைய சமயவுணர்வு அவனின் இதரவுணர்வுகளையும் ஒருவனுடைய இதர

உணர்வுகள் அவனின் சமயவுணர்வையும் பாதிப்புறச் செய்கின்றன. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் நாவுக்கரசரின் வரலாறாகும். சிறந்த வழிகாட்டலின்றி மனப் போக்கில் போன நாவுக்கரசர் சைவத்தில் இருந்து சமணம் மாறியமையும், அவரது தமக்கையாரான திலகவதியின் வழிகாட்டலினால் சமயவுணர்வு உந்தப்பெற்று மீளச் சைவசமயத்தை சார்ந்தமையும் மன்னன் தன் அதிகாரத்தை பயன்படுத்தி அவரை கட்டாயமாக வரவழைக்க முற்பட்ட போது "நாமார்க்கும் குடியல்லோம்" என மறுத்தமையும் குறிப்பிடலாம்.

இச்சமயவுணர்வு சார்ந்த குரல் அச்சமூகத்தின் மீதான அதிகாரமறுப்புக் குரலாகவே எடுத்தாளப்படுகிறது. சமயவுணர்வாளர்கள் ஏழைகளின் பசியைப்போக்க முற்பட்டமையும் சமூக முன்னேற்றத்திற்குத் தம்மை அர்ப்பணித்தமையும் இதன் பாற்பட்டதே. மனிதனின் உலகியல் உணர்வுகள் சமயவுணர்வின் உச்ச நிலைக்குத் தடையாய் இருந்தன. சித்தர் பாடல்களும், சமணபௌத்தர்களும் துறவிற்கு முதன்மை கொடுத்தமையும் இதன் பாற்பட்டதே. வள்ளுவரும் இதனையே,

**'தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்'**

எனக்கூறிப் போந்தார்.

இதேவேளை உலகியல் உணர்வை (சிற்றின்பவுணர்வு) சமயவுணர்வாக்கி (பேரின்பவுணர்வு) இறையுணர்வு எய்தியவர்களாக சமய நாயன்மாரும், சைவ / வைணவ ஆழ்வார்களும் திகழ்கின்றனர். இதனூடாகச் சாதாரண மக்களும் உலகியலுணர்வு ஊடாக சமயவுணர்வின் அதீதத்தன்மையைப் பெறத்தூண்டும் செல்நெறியை நாம் அவதானிக்கலாம்.

உணர்வானது ஒரு கட்டத்தில் எல்லைக்கு உட்பட்டதாகவும் மனதின் கட்டுப்பாட்டிற்கு உரியதாகவும் திகழும். மறுதலையாகக் கட்டுப்பாடற்ற, சுதந்திர இச்சை கொண்டதாக அதீத நிலை பொருந்தியதாக காணப்படும். அவ்வாறான மறுதலை நிலையில் அது சாதாரண மனிதனை அசாதாரணன் ஆக்குகின்றது. உதாரணமாக மிகவும் நல்லவனாகவும், சாதுவானவனாகவும் காணப்படும் அல்லது மற்றவரால் அவ்வாறு அறியப்பட்ட ஒருவன் பிறரின் நடத்தையால் அல்லது செயலால் கோபமுற்று அவர்களைக் கொலையும் செய்கிறான். இது உணர்வின் அதீத நிலையே. இதனை உளவியலாளர் "மனவெழுச்சிநிலையாக" எடுத்துரைப்பர். சமயவுணர்வு மனவெழுச்சியின் பாற்பட்டது அல்ல எனினும் அதீத சமயவுணர்வு சிலவேளைகளில் சமுதாய ஒழுக்கத்தை மீறிய செயலாக மாறுவதுமுண்டு. இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக சைவ இலக்கியமான பெரியபுராணத்தில் வருகின்ற "வன்பக்தியாளர்களை" குறிப்பிடலாம்.

இவர்கள் இறையுருவிற்கு அல்லது இறையடியவர்க்கு துன்பம் நேருமிடத்து தமக்கோ அன்றி மற்றவர்களுக்கோ ஊறு விளைவிப்பர் (இரத்தம் காணுவர்) இவ்வாறு செய்தல் சமூகநெறிமுறைக்கு உட்படாததாயினும் அது சமயவுணர்வால் நிகழும் அதீத பக்தியின் பண்பையே வெளிப்படுத்துகின்றது. அதேவேளை சமயத்தின் பெயரால் தம் சுயநலன்களுக்காக அன்றி உண்மைப்புரிதல் இன்றி யுத்தம் புரிவதும், மற்றவரை கொன்று குவிப்பதும் சமயவுணர்வாகாது. அது வெறும் மனவெழுச்சியே அல்லது நரம்புப்பிணி நோயே எனலாம்.

மேலும் சமயிகளால் மிகுந்த நம்பிக்கையோடு மேற்கொள்ளப்படும் நேர்த்திக்காகச் செய்யப்படும் செயல்களும் அதீத உணர்வு வெளிப்பாடுகளாகவே அமைந்துள்ளன. உதாரணமாக துலாக்காவடி, செதில்குத்துதல், கையில் கற்பூரம் ஏற்றுதல், முழந்தாளில்

படியேறுதல் போன்ற செயற்பாடுகளும் பாத யாத்திரைகளும் சமயவுணர்வின் அதீத வெளிப்பாடுகளே.

எது எவ்வாறு அமைந்த போதிலும் சமய உணர்வானது அகத்தூண்டலால் தெய்வீக பரவசவுணர்வை அனுபவிக்கச் செய்கிறது. இவ் வுணர்வே "வாடும் பயிரைக்காணும் போதெல் லாம் வாடினேன்" என்றும், "ஆவுரித்துத் தின்றுழ லும் புலையரேனும் கங்கைவார் சடை கரந்தாரு க்கு அன்பராகில் அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே" என்றும், "நாயிற் கடையாய் கிடந்த அடியேன்" என கழிவிரக்கம் கொண்டு பின்னர் "சிக்கனப்பிடித்தேன்" என பேரின்பநிலை அடைவததற்கும் வழிகோலிற்று. சமயவுணர்வு உந்தப் பெற்ற நிலையில் வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவனே உண்மைச்சமயி.

**உசாத்துணை நூல்கள்**


01. வில்டியூரென்ட் (1986) உலக மதங்கள் ஒரு தத்துவப் பார்வை – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

02. சிவத்தம்பி.கா – மதமும் கவிதையும்

03. தர்மராஜ் – மனிதனும் சமயமும்

04. Freedom From the Religion Spirit C.P.W. (Editor The Arsenal, USA)

05. Mahadevan. T.M.P (1971) Outlines of Hinduism Cretana ltd, Bombay.



நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ திருவிழாக்களை உபயகாரர்களுக்கு அறிவிக்கும் பழைய காலத்து நடைமுறை 2013ம் ஆண்டு மஹோற்சவத்தின் போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# ஆரோக்கியத்தில் ஆன்மீகம்

Dr. திருமதி அருள்மொழி சுதர்மன்
இலவச ஆயுள்வேத வைத்தியசாலை,
யாழ். மாநகரசபை.

எமது வாழ்க்கை என்பது பிறப்பு தொடக்கம் இறப்பு வரையிலான காலப்பகுதி ஆகும். இவ் வாழ்க்கைப்பகுதியில் ஒவ்வொருவரும் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ விரும்பு கின்றார்கள். இவ்வாறு ஆனந்தமாக வாழ்வதற்கு ஆரோக்கியம் மிகவும் அவசியமாகின்றது. உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) ஆரோக்கியம் என்பதற்கு வரைவிலக்கணம் கூறும்போது "ஒருவரது உடல், உள, சமூக, ஆத்மீக நலன் முழுமையடைதல் என்கின்றது.

இங்கு உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உணவு அவசியம். எமது உடலுக்குத் தேவையான சத்துக்கள் அடங்கிய உணவினை உண்ணும் போது உடல் ஆரோக்கியமாக இருக்கும். அத்துடன் சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின் பற்றுதலும் வேண்டும். இவற்றையே "ஆசாரம்" என்கின்றோம். ஆசாரம் என்றால் சுத்தமாக இருப்பது எனலாம். உடலும் உளமும் சுத்தமாக இருத்தல் வேண்டும். தூய உணவினை உண்ணும்போது அகவுணர்வுகளும் தூய்மை பெறுகின்றன. தூய உணவு இல்லையேல் புலன்கள் தம் தொழிலைச் சரிவரச் செய்ய முடியாது. இதனாலேயே "பசியினால் காதடைக் கின்றது", "கண் பஞ்சடைந்து போகின்றது" என்கின்றோம். ஒருவருக்கு பசி ஏற்பட்டால் "பத்தும் பறந்து போம்" என்பார்கள். இதனைப் பின்வருமாறு ஔவையார் கூறுகின்றார் :

'மானங் குலங்கல்வி வண்மை யறிவுடமை
தானந் தவமுயற்சி தாளாண்மை – தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்'.

பெரும்பாலும் உடலைத் தாக்கும் நோய்கள் தொற்றும் தன்மை வாய்ந்தவை (Infectious disease) உ–ம் : கொலரா, மலேரியா, டெங்கு

பெரும்பாலும உள்ளம் ஆரோக்கியம் இன்மையால் ஏற்படுவது தொற்றா நோய்கள். (Non-infectious disease) உ–ம் : குடல் அழற்சி, உயர் குருதி அமுக்கம், அதி உடற்பருமன் ... இங்கு உள்ளத்தினை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு ஆன்மீகம் மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. உள்ளத்துக்கு மனம், நெஞ்சம் என்ற பெயர்களும் உள்ளன. இவ் உள்ளம் எங்கு உள்ளது என்ற கேள்வி எழலாம். அது மூளையில் உள்ளது. மனித உள்ளத்தை தீய நெறிப்படுத்துபவை பொறிகளாகும். அவை யாவன; மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன வாகும். இவைகளை எமது கட்டுப்பாட்டில் வைத் திருப்பதன் மூலமே உள்ளத்தினை நன்னெறிப் படுத்தலாம். இதனை பாரதியார் தனது பாடலில்,

'மோகத்தைக் கொன்றுவிடு – அல்லாலென்றன்
மூச்சை நிறுத்திவிடு
தேகத்தை சாய்த்துவிடு – அல்லாலென்றன் சிந்தனை
மாய்த்துவிடு

**யோகத் திருந்திவிடு - அல்லாலென்றென் ஊனை**
**சிதைத்துவிடு**
**ஏகத்திருந்துலகம் - இங்குள்ள யாவையும்**
**செய்பவனே!'**

என்று கூறுவதன் மூலம் யோக நிலையில் வாழ வேண்டும். அல்லாவிடின் இறந்தாலும் பரவா யில்லை என்று கூறுகின்றார். எனவே பொறிகளை அடக்கி வாழ்பவர் நீடுவாழ்வார்;

**'பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறி நின்றார் நீடுவாழ் வார்'**

என்கின்றார் பொய்யாமொழிப்புலவர். இவ் வாறு பொறிகளை அடக்குவதற்கு எமது சைவ சமயத்தில் பல்வேறு ஆன்மீக செயற்பாடுகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் எம்மால் நாளாந்தம் இலகுவாக செய்யக்கூடியவை சில...

- நாளாந்தம் தவறாத இறைவழிபாடு – பிரார்த்தனை, தியானம்.
- ஆலய தரிசனம்
- எல்லோரிடமும் மென்மையாகவும் அன்பாக வும் பேசுதல்
- ஆன்மீக நூல்களைப் படித்தல்
- இயலுமான உதவிகளைப் பிறருக்குச் செய்தல்
- பிறரைத் துன்புறுத்தாமை (சொல், செயலி னால்)
- ஆசைகளைக் கட்டுப்படுத்தல்
- யோகாசனம் செய்தல்
- அங்கவீனர்களுக்கும், உதவிகோருபவர் களுக்கும் இயலுமானவரை உதவி செய்தல்.

இவைகளை நாம் எம் வாழ்வில் செய்து வரும்போது மனம் விசாலமடைகின்றது, மன அழுத்தம் (Stress) குறைகின்றது, மற்றவர்களிடம் குறைகாணும் தன்மை குறைகின்றது, கவலை கரைகின்றது, கோபம் குறைந்து தன்னம்பிக்கை வளர்கின்றது. இவற்றின் மூலம் சுவாசம், இதயத் துடிப்பு, மற்றும் உடற்தொழிற்பாடுகள் சமநிலை அடைகின்றன. இவை எம்மை ஆரோக்கியமாக வைத்துக்கொள்கின்றன. இவ்வாறு சிறிது சிறிதாக எம்மை நாம் வளர்த்துக்கொள்ளும் போது எம்மால் எமது சமூகமும் தூய்மை பெறுகின்றது.

மனிதனே சமூகத்தின் ஆரம்ப அலகாக அமைகின்றான். மனிதன், குடும்பம், நண்பர்கள், உறவினர்கள் சேர்ந்தே சமூகமாகின்றது. ஆகவே மனிதன் தனது உடல், உள ஆரோக்கியத்தை பேணிவரும் போது அது சமுதாயத்தினைப் பிரதி பலிப்பதாக இருக்கும். திருமூலர் தமது திரு மந்திரத்தில்,

**'தூய்மை அருளுண் சுருக்கம் பொறைசெவ்வை**
**வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை**
**காமம் களவு கொலையெனக் காண்பவை**
**நேமியீ ரைத்து நியமத் தானாமே'**

என்று கூறுவதிலிருந்து சுத்தம், கருணை, தேவைக்கான அளவு உணவு உண்ணுதல், பொறுமை, ஒழுக்கம், உண்மைபேசல் என்பவற்றைக் கடைப்பிடிப்பதுடன் காமம், திருட்டு, கொலை முதலிய கெட்டவற்றைச் செய்யாமை என்பவைதான் மனிதனை சிறப்புப்படுத்தும் என்கின்றார்.

ஆக, நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு எமது சைவ சமயத்தில் கூறப்பட்டுள்ள ஆரோக் கிய வழிகளைப் பின்பற்றி வையத்துள் வாழ் வாங்கு வாழ்வோமாக!

# 12 ஜோதிலிங்க சிவஸ்தல மகிமை

**திருமதி அருந்ததி சிவசுப்பிரமணியம்**
பிரதம சித்த வைத்திய அதிகாரி, யாழ் மாநகரசபை
ஆசிரியர், பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்
யாழ்ப்பாணம்.

பக்தி நெறியில் சிவன் என்னும் பரமாத் மாவை உருவமாக, அருவுருவமாக, அருவமாக எமது இயலுமைக்கும், பரிபக்குவ நிலைக்கு மேற்ப அறிந்து உணர்ந்து அனுபவிக்கிறோம். உருவமாக நடராஜப்பெருமான், அர்த்தநாரீசு வரர் போன்ற வடிவங்களில் தரிசித்து மகிழ்கி றோம். அருவுருவமாக சிவனை ஜோதிலிங்க வடிவத்தில் கண்டு தரிசித்து இஷ்ட சித்திகள் பெற்று மகிழ்கிறோம். அருவமாக சடப்பொரு ளுக்கு அப்பாற்பட்ட ஒளியாலான பிரம்மம் எனப்படும் பிரம்மலோகத்தின் மத்தியில் ஜோதி வடிவாக இலிங்கார சொரூபன் சிவனை "ஞானக் கண்" ஆகிய புத்தியினால் அறிந்து உணர்ந்து மகிழ்கிறோம்.

இம்மூன்றாவது நிலையாகிய ஞானநெறி வழியே நம்மை எடுத்துச் செல்லும் வல்லமை வாய்ந்தது ஜோதிலிங்க தரிசனம். அருவுருவ மாக சிவனை ஜோதிலிங்க வடிவத்தில் கண்டு தரிசித்து உணர்வோமேயானால், அருவமாக சடப்பொருளுக்கு அப்பாற்பட்ட ஒளியாலான பிரம்மம் எனப்படும் பிரம்மலோகத்தின் மத்தி யில் ஜோதி வடிவாக இருக்கும் சிவனை உணர்ந்து அனுபவிப்பது இலகுவாக இருக்கும். இக் கட்டுரையில் பாரதத்தின் மகிமை வாய்ந்த பன்னிரு ஜோதிலிங்க சிவஸ்தலங்களின் சுருக்க மான வரலாற்றையும் பெருமையையும் பார்ப் போம்.

**காசி விஸ்வநாதர் - வாரணாசி - உத்திரப் பிரதேசம்**

பாரதத்தின் அனைத்து தீர்த்த ஸ்தலங்களி லும் தலைசிறந்தது காசி. முக்தி ஷேத்திரம், காசி, வாரணாசி என்று பல பெயர்கள் இதற்கு உண்டு. இப்புனித ஸ்தலத்தில் இயற்கை எய்துவோருக்கு நேரடியாக முக்தி கிட்டும் என நம்பப்படுகிறது.

பரமாத்மா சிவன் இப் புனித ஸ்தலத்தை தனது திரிசூலத்திலிருந்து நேரடியாகப் படைத் தார் எனவும், பின் பிரம்மாவுக்கு உலக சிருஷ் டியை ஆரம்பிக்குமாறு கூறியதாகவும் சிவ புராணம் கூறுகிறது. இந்தப் புண்ணியபூமி கர்மத் தின் தீய கணக்கினை அழிக்கக் கூடியது எனவும் இவ்வாறு அனைவருக்கும் முக்தி அளிக்கக் கூடிய சிவலிங்கத்தை பரமன் சிவனே படைத்த தாகவும் கூறப்படுகிறது. உலகத்தையே படைக் கும் காரியத்தைச் செய்வித்ததால், அங்குள்ள இலிங்கம் விஸ்வநாதர் என்றழைக்கப்படுகிறது. இந்நகரம் புராதன கல்வி கலாசாரத்துக்கு மிகவும் பெயர் பெற்றது. கல்வியும், புலமையும் மிக்க வித்துவான்களும், பண்டிதர்களும் நிறைந்த பூமி காசி. காசியின் பண்டிதர்கள், வித்துவான் களின் ஆலோசனையின் பேரில்தான் இந்திய மத்திய, மாநில அரசுகள் தமது ஆண்டு விடு முறை நாட்களை நிர்ணயிக்கின்றன.

இப்புனித ஸ்தலம் கங்கைக் கரையின் ஓரத்தில் அமைந்திருப்பது மேலும் சிறப்புக்

குரியது. ஆசிசங்கம துறை, தசாங்வமேத துறை, மணி கார்ணிகாதுறை, பஞ்கங்கா துறை மற்றும் வருணா சங்கம துறை என முக்கியமான கங்கைப் படித்துறைகளில் பல லட்சக்கணக்கான மக்கள் புனித நீராடுகின்றனர்.

**ஸ்ரீசைலம் - ஆந்திரா**

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீ சைலம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 அடிகள் உயரத்திலுள்ள சிவஸ்தலமாகும். பிற ஸ்தலங்களில் சிவ பார்வதி தரிசனம் ஒன்றாக இருக்கும்போது இங்கு மட்டும் அமாவாசையன்று சிவவருகையும், பௌர்ணமி தினத்தன்று அம்மையின் வருகையும் இருப்பதாக சிவபுராணம் கூறுகின்றது. இங்குள்ள லிங்கத்தைப் பூஜிப்பதால் மனோ ஆசைகள் பூர்த்தியடைவதாகவும் துக்கம், கவலைகள் முடிவுக்கு வருவதாயும், செல்வம் கொழிக்கும் எனவும் கூறப்படுகின்றது. இறப்பிற்குப் பின் நேரடி மோட்சம் கிடைப்பதாகவும் ஐதீகம். இங்குள்ள மூலவர் 8 அங்குல உயரத்தில் சுயம்பு லிங்கமாகக் காட்சியளிக்கிறார். இந்த ஸ்தலத்தின் ஜோதிலிங்கப் பெயரில் 11 வேறு கோயில்களும் உள்ளன. இக் கோயிலுக்குப் பின்னால் சிறிய குன்றின் மேல் பார்வதி கோவில் ஒன்றும் உண்டு. இத்தேவி இங்கு மல்லிகாதேவி என அழைக்கப்படுகிறார். இங்குள்ள சிவனின் பெயர் அர்ஜுனன். எனவேதான் இங்குள்ள மூலவர் மல்லிகார்ஜுனன் என்றழைக்கப்படுகிறார்.

கோவிலருகே ஓடும் கிருஷ்ணா நதியை பாதாள கங்கை என்றழைக்கின்றனர். இங்கிருந்துதான் கோவிலின் இலிங்காபிஷேகம் நடைபெறுகிறது. விநாயகருக்கும் முருகனுக்கும் ஏற்பட்ட ஞானப்பழ விவாதத்தில் கோபம் கொண்டு தென்புலம் வந்த முருகனைத் தேடிக் கொண்டு தென்புலம் வருகையில் சிவனும் பார்வதியும் சிவசைல மலையில் வந்திறங்கியதாகவும், அதற்குள் முருகன் பழனியில் குமார சுவாமியாய் தரிசனம் அளித்ததாகவும் ஸ்தல புராணம் கூறுகிறது.

**ஓங்காரேசுவரர் - மத்தியப் பிரதேசம்**

இங்குள்ள சிறப்பு யாதெனில், ஓங்காரேசுவரர் மற்றும் பரமேஸ்வரர் என்னும் இரண்டு ஜோதிலிங்கங்கள் உண்டு. அமலேஸ்வரர் என்கிற வேறு பெயரும் உண்டு. இக்கோவிலுக்கு சற்று தூரத்தில் நர்மதை நதி இரண்டாகப் பிரிந்து பெருக்கெடுத்து ஓடுகிறது. சற்று தூரத்தில் மீண்டும் ஒன்றாக இணைந்து விடுகிறது. இடைப்பட்ட தீவுப் பகுதியில்தான் இத் திருத்தலம் அமைந்துள்ளது. இரண்டாகப் பிரிந்தோடும் போது ஒன்று நர்மதா எனவும், மற்றொன்று காவேரி எனவும் அழைக்கப்படுகிறது. இத்தீவில் தான் மகாராஜா மாங்கதன் இறைவனை வேண்டி நின்றதாகவும், அதற்கு இறைவன் காட்சியளித்து அருள் புரிந்ததால் அவரது பெயரே இத்தீவிற்கும் சூட்டப்பட்டு "மாங்கத தீவு" என்றழைக்கப்படுகிறது. மூன்று பாகங்களாகப் பரந்து கிடக்கும் இப் புண்ணிய தலத்தின் முதல் பாகம் பிரம்மபுரி என்றழைக்கப்படுகிறது. இங்கு பிரமேஸ்வரர் ஜோதிலிங்கம் போன்ற கோவில்கள் அமைந்துள்ளன. இரண்டாவது பாகத்தில் விஷ்ணு கோவில், கடைத்தெரு போன்றவை அமைந்துள்ள விஷ்ணுபுரி. மூன்றாவதாக ஓங்காரேஸ்வரர் கோவில் அமைந்திருக்கும் மாங்கத தீவு. இத் தீவிற்குச் செல்ல பாலமும் உள்ளது. படகுகளிலும் செல்லலாம்.

இங்கு தவழ்ந்து ஓடும் நர்மதா நதி ஏழு புண்ணிய நதிகளில் சிறப்பானதாகும். இந்நதியைப் பார்த்தாலே புண்ணிய சக்தி சேர்ந்து விடுவதாகக் கூறப்படுகிறது. இந்த மாங்கத தீவுத் துறையில் புண்ணிய நீராடுவது மேலும் சிறப்பாக கருதப்படுகிறது. இத்தீவில்தான் ஓங்காரேஸ்வரர் சிவன் கோவில் அமைந்துள்ளது. இத்திருக்கோவில் ஐந்து கண்டங்களைக் கொண்டதாயுள்ளது. ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு தேவதையின் கோயில் உள்ளது.

அனைத்திற்கும் கீழே ஓங்காரேஸ்வர் சிவ லிங்கம் அமைந்துள்ளது. சிவலிங்கத்தின் தென்புறத்தில் அர்த்தநாரி பார்வதி தேவியின் திரு உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இக் கோவிலில் கர்ப்பகிரஹம் தென்கோடி மூலையில் அமைந்துள்ளது. கோபுரத்தின் நேர் கீழே இல்லை. இங்குள்ள சிவலிங்கம் பூமியில் ஸ்திரமாயில்லை. முன்பு ஒருமுறை பூஜாரிகள் சிவலிங்கத்தைச் சுற்றி இலிங்க பீடத்தை வெட்டி எடுத்துவிட்டு ஒரு கை ஆழத்திற்கு குழியை உண்டாக்கி விட்டனர். இலிங்க பீடத்தை வெட்டும் போது இலிங்க பீடம் இருக்கையை தாங்கிக் கொள்ளும் வகையில் 3 இடங்களில் பாறையை விட்டு விட்டார்கள். இந்த மூன்று நிலைகளின் மீதும் இலிங்கபீடம் அமரும்படியாக வைத்து விட்டனர். இந்த குழியில் சதா நீர் நிறைந் திருக்கும். இவ்வாறு தனித்துத் தொங்கும் நிலையிலிருப்பது இந்த சிவலிங்கத்தின் சிறப் பாகும்.

முன்பு ஒருமுறை விந்திய மலையின் அதிபதி யான விந்திய நரேஷ், ஓங்கார நாமம்கொண்ட சிவனிருந்த இடத்தில் இலிங்கத்தை உருவாக்கி ஆறு மாத காலம் கடும் தவம் புரிந்தான். அவரு டைய தவத்தில் மகிழ்ச்சியுற்ற சிவபகவான் அவனுக்குத் தரிசனம் தந்து, வரம் கேட்குமாறு கூறினார். கேட்க வேண்டிய உசிதமான வரத்தைக் கேட்காமல் தாமதித்துக் கொண்டிருக்கும் வேளையில் தேவர்கள் அனைவரும் சிவனைத் தேடி அங்கே வந்து விட்டனர். பூலோக நன்மை யின் பொருட்டு அங்கேயே நிலையாய் அமர்ந் திட தேவர்கள் பூஜித்து நின்றனர். அப்போது ஓங்காரலிங்கம் இருந்த இடத்தில் இரண்டு லிங்கங்கள் தோன்றின. ஒன்று ஓங்காரலிங்கம் என்றும் மற்றொன்று அமலேஸ்வரர் என்னும் பெயரிலும் வழங்கலாயிற்று. இதன் பிறகு சிவலிங்கங்களைப் பூஜித்து விட்டு தேவர்கள் அவரவர் இடம் போய்ச் சேர்ந்தனர். பக்தி பூர்வ மாக இந்த லிங்கங்களை வணங்குவோருக்கு அதிக பலன் கிடைப்பதோடு மறுபிறவியும் எடுப்ப தில்லை என நினைக்கின்றனர்.

அடுத்து சிற்பக்கலை நிறைந்த அமலேஸ்வரர் என்றழைக்கப்படும் பரமேஸ்வரர் கோவிலில் பரமேஸ்வரர் பெயரில் சிவலிங்கம் உள்ளது. மிகப் பழமையானதும், கலை வடிவானதுமான இக்கோயிலின் சுற்றுப் பிரகாரத்தில் அனேக பிற கோயில்களும் உள்ளன. இதுபோக; இத்தலத்தில் விஷ்ணு கோவில், கௌரி – சோமநாதர் ஆலயம் 15 கி.மீ தொலைவிலுள்ள சீதை வாழ்ந்த வால்மீகி ஆச்சிரமம் போன்றவை குறிப்பிடத் தக்கவை.

**சோமநாத் - குஜராத்**

ஜோதிலிங்க வழிபாட்டுத் தலங்களில் முதன் மையானது சோமநாதர். சந்திரன் இந்த ஜோதி லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பகவானை வேண்டித் தவம் செய்ததாகக் கூறப்படுகின்றது. இறைவனும் அவரது தவத்தை மெச்சி வரமும் அளித்தார். எனவேதான் இந்த லிங்கம் சந்திரன் பெயரால் (சோம–சந்திரன்) வழங்கி வருகிறது. இந்த ஜோதிலிங்க தரிசனத்தின் மூலம் மனிதன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுதலை பெறுகிறான். மேலும் மரணத்திற்குப் பின் சொர்க்கத்தையும் அடைவதாகக் கூறப்படுகிறது. கடற்கரை ஓரத்தில் இக்கோயில் அமைந்திருப் பது சிறப்பு அம்சமாகும்.

பிரசித்தி பெற்ற இக்கோவில் மீதுதான் கஜினி முகமது 17 முறை படை எடுத்ததாகச் சரித்திரம் கூறுகிறது. சுதந்திர இந்தியாவின் அந்நாளைய உள்துறை மந்திரி வல்லபாய் பட்டேல் அவர் களின் பரிந்துரையின் பேரில் இந்திய அரசு இக் கோவிலை மீண்டும் புதுப்பித்தது.

இத்தலம் சைவம், வைணவம் இரண்டும் போற்றப்படும் திருத்தலமாகும். இங்கு தான் ஸ்ரீ

கிருஷ்ணர் இறுதியில் ஜரா என்னும் வேடனின் அம்பு பாய்ந்து உடலை விட்டதாகவும் கூறப்படு கின்றது.

புராதன பழைய கோவிலானது 1783இல் இந்தூர் மகாராணி அகல்யாபாய் மூலம் நிர் மாணிக்கப்பட்டது. ஒருமுறை பகவான் அகல்யா தேவியின் கனவில் வந்து, நான் இங்கு தான் இருக்கிறேன் என்றும் இங்கு எனக்கு கோயில் எழுப்பு ஏன்றும் கூறி, அதன் பேரில் அங்கு தோண்டப்பட்ட போது கிடைத்த சுயம்புலிங்கம் தான் இக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது வரலாறு. இக்கோவிலில் சாயங்காலம் அலங்காரத்திற்குப் பின் செய்யப் படும் பூஜை மகத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இங்குள்ள திரிவேணி சங்கமம் கீர்த்தி பெற்றதாகும். இங்கு கபிலா, சரஸ்வதி மற்றும் ஹிரண்யா ஆகிய மூன்று நதிகள் கடலோடு கலக்கும் இவ்விடத்தில் யாத்ரிகர்கள் புனித நீராடுகின்றனர்.

**இராமேஸ்வரம் - தமிழ்நாடு**

பாரதத்தின் நான்கு திசைகளின் இறுதி மூலையில் ஒன்றான தெற்கு ஓரத்தில் அமைந் திருக்கும் திருத்தலம் இராமேஸ்வரம். இக் கோவில் சதுரமாக வடிவமைக்கப்பட்டு நான்கு புறங்களிலும் கோபுரங்கள் உள்ளன. இதன் சுற்றுப் பிரகாரத்தில் வரிசையாக அமைந்துள்ள கற்றூண்களும் கூரையில் அமைக்கப்பட்டுள்ள சித்திரங்களும் மிகவும் வேலைப்பாட்டுடன் கூடியவை. இதன் பிரகாரத்தின் மொத்த நீளம் ஒரு கி.மீ தூரமானதாகும். சில காலங்களுக்கு முன் இராமேஸ்வரத்திற்கும் பாரத பூமிக்கும் இடையேயுள்ள பூமி கடலுக்கு அடியில் சென்று விட்டதால் இராமேஸ்வரம் தீவாகி விட்டது.

ஸ்ரீராமர் பூஜித்த ஈஸ்வரர் என்பதால் இராமேஸ்வரம் எனப் பெயர் பெற்றது. பிரதான மூர்த்தி இராமநாத சுவாமி என்றழைக்கப்படு கிறார். இந்த லிங்க மூர்த்திக்கு கங்காபிஷேகம் செய்வித்து, இத்தலத்திலுள்ள மண்ணை எடுத்து கங்கையில் கரைப்பது விசேஷம். எனவேதான் வடநாட்டு யாத்ரிகர்கள் அனேகம் பேர் இங்கு வரக் காணலாம்.

இராமாயண இதிகாசத்தில் ஸ்ரீராமர் இராவ ணனை வதம் செய்து விட்டுத் திரும்பி வரும் போது இராவணனின் சூட்சும சரீரம் இராமரைத் தொடர்ந்து வந்ததால் அவருக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. எனவே மகரிஷிகள் ஸ்ரீராமரை சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜிக்க வேண்டினர். அவ்வாறே ஸ்ரீராமர் அனுமானை வடக்கிலிருந்து இரண்டு சிவலிங் கங்களைக் கொண்டு வரப் பணித்தார். அனுமான் வரத் தாமதமானதால் சீதாப்பிராட்டி மணலைக் கொண்டு லிங்கம் செய்ய, அதை ஸ்ரீராமர் பூஜித்தார். இதுவே ஸ்ரீ ராமலிங்க பிரதிஷ்டை எனப்படுகிறது.

இதற்கிடையில் வடதிசையிலிருந்து 2 லிங்கங்களை எடுத்து வந்த அனுமனும் வந்து சேர்ந்தார். மணல் லிங்க பூஜை நடைபெற்றதைக் கண்ணுற்று கோபங் கொண்டார். தனது வாலால் அதனை அகற்ற முயன்றார். ஆனால் வால்தான் அறுந்தது. அவரது அகந்தையும் மறைந்தது. ஸ்ரீராமர் அனுமானை நோக்கி, அவர் கொண்டு வந்த இரு லிங்கங்களில் ஒன்றைக் காசி விஸ்வ நாதராகப் பிரதிஷ்டை செய்து முதல் பூஜை இதற்கே என்று கூறினார். மற்றொரு லிங்கத்தை அனுமான் பூஜை செய்யலாம் என்று கூறினார். இன்றைக்கும் முதல் பூஜை காசி விஸ்வநாதருக் குத் தான். இரண்டாவது லிங்கம் கோயில் முகப் பில் அனுமான் சன்னிதியிலுள்ளது. இங்குள்ள மிக விசேடமான 22 தீர்த்தங்களிலும் நீராட வில்லையெனில் இராமேஸ்வர யாத்திரை நிறைவு பெறாது என்றே கூற வேண்டும். இறுதி தீர்த்தமான கோடி தீர்த்தத்தில் நீராடிய பிறகே

சுவாமி தரிசனம் செய்ய வேண்டும் என்பது ஐதீகம்.

**நாகேஸ்வரர்**

முன்னொரு காலத்தில் தாருகா வனத்தில் தாருகா என்னும் ராட்சசி வாழ்ந்து வந்தாள். அவள் பார்வதி தேவியிடம் தனக்கு எங்கு விருப் பமோ அங்கு தனது காடு, மலைகளோடு சென்று வாழும் சக்தியைப் பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு அங்கங்கு சென்று வாழ்ந்து மக்களுக்குத் தொந்தரவு கொடுத்து வந்தாள். அவளது கணவன் தாருகன் மற்றும் அவனது படைகளும் மக்களு க்கு மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தி வந்தனர். அப்பாவி மக்களைக் காப்பாற்றும் பொருட்டு தேவர்கள் போர் தொடுக்க வந்தனர். இந்தப் பயத்தால் ராட்சசி கடற்கரை ஓரம் தனது காடு களை எடுத்துச் சென்று வாழ்ந்து வரலானாள். அங்கும்கூட கடலில் படகுகளில் செல்லும் மக்கள் துன்புறுத்தப்பட்டனர். ஒரு முறை வணிக மக்களை ஏற்றிக் கொண்டு பல படகுகள் அவ் வழியே வந்தன. இராட்சதர்கள் அவைகளைப் பிடித்து அதிலிருந்தவர்களையெல்லாம் ஒரு குகையில் போட்டு அடைத்து விட்டனர். அந்தப் படகுகளில் எஜமான் சுப்பிரியன் என்ற ஆழ்ந்த சிவபக்தனும் இருந்தார். குகையில் அடைக்கப் பட்ட அவரும், கூடஇருந்த அனைவரும் சிவனை சிரத்தையுடன் ஆராதித்தனர்.

இந்த பக்தியைக் கேள்வியுற்ற இராட்சத படையினர் இவர்களை அழிக்கும் பொருட்டு அங்கே வந்து துன்புறுத்த ஆரம்பித்தனர். பக்தர் களின் கஷ்டங்களைக் காணப் பிடிக்காத பரமன் அங்கே தோன்றி அப்படைகளை அழித்தார் என்பது புராணக்கதை. பக்தர்களின் அன்பு வேண்டுகோளின் பேரில் நிரந்தரமாய் அங்கு வசிக்கலானார். இங்கு மூலவர் நாகேஸ்வரர் என்றும், பார்வதிதேவி நாகேஸ்வரி என்றும் பூஜிக்கப்படுகின்றனர். இன்று இந்த ஜோதிலிங் கம் சிந்து பிராந்திய பாகிஸ்தான் தலைநகரான கராச்சியில் கவர்ணர் மாளிகைக்கு அருகில் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ளது. ஒரு நடை பாதை பாலத்தின் மூலமே இக்குகையைச் சென்றடைய முடியும். பாகிஸ்தான் பிரிவிற்குப் பின் அங்குள்ள இந்துக்கள் இங்கு ஒரு பிரா மணருக்கு தங்க இட வசதி செய்து கொடுத்து அன்றாட பூஜைகளை செய்யப் பணித்தனர். இக் குகையில் தான் சுப்பிரிய வணிகரும் பிறரும் அடைக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

**கேதாரநாதர் - உத்தரகாண்டம் - உத்தரப் பிரதேசம்**

பன்னிரு ஜோதிலிங்கத் தலங்களிலும் இயற்கையின் எழில் சூழ்ந்த அழகு மிக்க தலம் கேதாரநாத் ஆகும். இந்தியாவில் அண்மையில் (2013) இயற்கையின் கோர தாண்டவத்திற்கு ஆளான பகுதியும் இதுவே. முன்தாக்கின நதிக்கு வலப்புறத்தில் அமைந்துள்ள இத்தலத்தைச் சுற்றி மூன்று பக்கமும் மலைகள் சூழ்ந்து காணப்படு வது கண்கொள்ளாக் காட்சி. இந்த இமாலய மலைத் தொடரில் இருந்துதான் மந்தாகினி நதி உற்பத்தியாகி ஓடி வருகிறது. இங்குள்ள கேதா ரேஸ்வரர் மற்றும் பத்ரிநாராயணரை பக்தி சிரத்தையுடன் வழிபடுவோருக்கு வாழ்க்கையில் வரும் துன்பங்கள் விலகிப் போகும் என்றும் மனோவாசைகள் பூர்த்தியாகும் என்றும் சிவபுராண மகிமை பாடுகிறது. மேலும் இந்த யாத்திரையின் போது மரணம் எய்துவோருக்கு மோட்சம் நிச்சயம் என்றும் கூறப்படுகிறது.

மகாபாரத யுத்தத்திற்குப் பின் பாண்டவர்கள் இக்கோவிலைக் கட்டினர் என்று தலபுராணம் கூறுகிறது. சபா மண்டபத்தில் கலை நுணுக்கங் களுடன் பல்வேறு தேவ தேவியரின் சித்திரங்களும் உள்ளன. இங்குள்ள மூலவரை பக்தர்கள் தமது கரங்களாலேயே அர்ச்சிக்க அனுமதியுண்டு. உத்தரகாண்ட யாத்திரையை முடித்துக் கொண்டு இங்கு வந்து சேர்கையில் தான் ஜகத்குரு ஆதி சங்கராச்சாரியார் பகவானுடன் ஒன்றாகக்

கலந்து விட்டார் என்று கூறப்படுகிறது. கேதார நாதருக்கு விஜயம் செய்யும் யாத்திரிகர்கள் மிக அவசியமாக நேபாளத்திலுள்ள பசுபதிநாதர் மூலவரையும் சென்று தரிசிக்க வேண்டுமென்பது ஐதீகம். ஏனெனில் பரமனின் தலைப்பாகம் பசுபதிநாதர் என்றும், பாதப் பகுதி கேதாரநாதர் என்றும் கூறப்படுகிறது.

முன்பொரு காலத்தில் வாழ்ந்து வந்த நர மற்றும் நாராயணன் என்னும் இரு ரிஷிகளின் வேண்டுகோளின் பேரில் மக்களின் நன்மைக்காக பகவான் இங்கே நிரந்தரமாகி விட்டார் என்று புராணக் கதைகள் கூறுகின்றன.

**மகா காளேஸ்வரர் - உஜ்ஜையினி - மத்தியப் பிரதேசம்**

உஜ்ஜயின் என்றும் அவந்திகா என்றும் அழைக்கப்படும் நகரம் சிப்ரா நதிக்கரையோரம் அமைந்துள்ளது. இந்த நதி பகவான் விஷ்ணுவின் சரீரத்திலிருந்து உற்பத்தியாவதாக நம்பப்படுகிறது. மகாராஜா விக்கிரமாதித்தனுடைய ஆட்சிக் காலத்தில் உஜ்ஜயினி பாரதத்தின் தலை நகராக விளங்குகிறது. ஸ்ரீ கிருஷ்ணர், பரசுராமர், சுதாமா ஆகியோர் இங்கிருந்த மகரிஷி சாந்திபரியின் ஆஸ்ரமத்தில் தான் குருகுலவாசம் புரிந்தனர் என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கும் ஒருமுறை பிரகஸ்பதி கிரஹம் சிம்ம ராசியில் வரும் போது வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் மகாமகம் நடைபெறுகிறது.

இரு பிரிவுகளாக வளர்ந்து நிற்கிறது மகா காளேஸ்வரர் கோவில். மேல் தளத்தில் நுங்காரேஸ்வரர் சிவலிங்கம் பிரதிஷ்டையாகியுள்ளது. கீழ்ப் பகுதியில் மகா காளேஸ்வரர் ஜோதி லிங்கம் அமைந்துள்ளது. இந்த சிவனை தரிசனம் செய்வதால் ஒருவருக்கு சொப்பனத்தில்கூட துக்கம் ஏற்படாது. எந்தெந்த ஆசைகளுடன் யார் பூஜை செய்கின்றனரோ அந்த மனோவாசைகள் பூர்த்தியாகும் என்று கூறப்படுகிறது. கோவிலின் ஒருபுறம் சபா மண்டபமும் மறுபுறம் கோடி தீர்த்தமும் அமைந்துள்ளன. இங்கு பார்வதி, விநாயகர், கார்த்திகேயன் சிலை வடிவங்களும் உள்ளன. சபா மண்டபத்தின் ஒரு மூலையில் அவந்திகா தேவியின் பழைய கோவில் ஒன்றும் உள்ளது. இத்தேவியை இந்த நகரைக் காக்கும் தேவியாக உள்ளூர் மக்கள் நம்புகின்றனர். மகா காளேஸ்வரர் கோவிலைச் சுற்றி சிறிய கோவில்கள் பல உள்ளன.

**வைத்திய நாதேசுவரர் - பரளி - மகாராஷ்ரா**

ஔரங்காபாதிற்கு அருகில் பரிபாணி ரயில் நிலையத்தருகில் பரளி வைத்திய நாதேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது. இங்குள்ள இலிங்கமானது கைலாயத்திலிருந்து இராவணனால் கொண்டு வரப்பட்டது என்று கருதப்படுகிறது. இந்த இலிங்கம் சிறு மலைக்குன்றின் உச்சியில் அமைந்துள்ளது.

இக்குன்றில் எவரது சடலம் எரியூட்டப்படுகிறதோ அவர்கள் நேரடியாக மோட்சம் செல்வார்கள் என்று கூறப்படுகிறது. எனவே பெருவாரியான மக்கள் தங்கள் உறவினர்களின் சடலங்களை இங்கே கொண்டு வந்து தகனக் கிரியை செய்வதுண்டு. இந்த வழக்கம் சென்ற 100 ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்து வந்தது. இவ்வகையில், இத்தலம் தகன பூமியின் பேரால் மிகவும் பிரபலமடைந்துள்ளது. இதைப் பின்பற்றி பாரதத்தின் பிற நகரங்களிலும் கூட தகன பூமியில் சிவன் கோவிலைச் சுடலை காப்போர் அமைத்துள்ளனர்.

விசாலமான இக்கோவிலுக்கு 40 படிகள் ஏறிச் செல்ல வேண்டும். மேற்கு வடக்குத் திசைகளில் நுழைவாயில் அமைந்துள்ளன. கோவிலைச் சுற்றி இன்னும் பல சிறு கோவில்களும் உள்ளன.

**குகமேசம் - மகாராஷ்ட்ரா - கிருஷ்ணேஸ்வரர்**

வடமொழியில் குஷ்மேஸ்வர் என அழைக்கப்படும் இத்தலத்தில் அருள் பாலிக்கும் ஈஸ்வரனின் பெயர் கிருஷ்ணேஸ்வரர் ஆகும். ஔரங்காபாத் மற்றும் தௌளாதாபாத் நிலையங்களுக்கு அருகே இத்தலம் அமைந்துள்ளது. உலகப் புகழ் பெற்ற ஓவியங்கள் அமைந்துள்ள எல்லோரா குகைக்கருகில் இக்கோவில் அமைந்துள்ளது. கோவிலில் மூலவராக சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. வெளியே விநாயகர் மற்றும் முருகன் கோவில்களும் உள்ளன. அருகில் சிவாலயம் என்னும் புண்ணிய தீர்த்தமும் உள்ளது.

பழைய காலத்தில் தேவகிரி நகரில் சுதாமா என்னும் பிராமணன் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார். இருவருமே பக்தி சீலர்களாக விளங்கினர். ஆனால் அவர்களுக்குப் புத்திர பாக்கியம் இல்லாதிருந்தது. எனவே அவரது மனைவி தனது தங்கை குஸ்மாவை குழந்தைப் பாக்கியத்தின் பொருட்டு தனது கணவனுக்கே மணம் முடித்து வைக்கிறாள். தங்கை தினமும் மண்ணால் செய்த 100 சிவலிங்க பூஜைசெய்து அவைகளை புண்ணிய தீர்த்தத்தில் அர்ப்பணம் செய்து வந்தாள். பகவானின் கிருபையால் அவளுக்குப் புத்திரபாக்கியம் கிட்டியது. ஆனால் இப்போதோ அவளது மூத்த சகோதரிக்குப் பொறாமை ஏற்பட்டது. குஷ்மாவை புத்திரவதி எனவும், தன்யை மலடி எனவும் பிறர் கூறியதை இவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இப்பொறமைத்தீ அக் குழந்தையையே வெட்டி துண்டம் துண்டமாக்கி அதே தீர்த்தத்தில் கொண்டு போய்ப் போடுமளவுக்கு செய்து விட்டது. இந்தச் செய்தியைக் கேட்ட பின்பும்கூட குஷ்மா மண் இலிங்க பூஜை செய்வதை ஒரு போதும் விடவில்லை. அவ்வாறு ஒருமுறை புனித தீர்த்தக் கரையிலிருந்து திரும்பும் வேளையில் அவளது பிள்ளை உயிருடன் அத் தீர்த்தத்திலிருந்து வெளி வந்ததைக் கண்டு மனமகிழ்ந்தாள். உடனே அவ்விடத்தில் அவளுக்குப் பகவானின் திவ்ய தரிசனமும் கிடைத்தது.

இவ்வகையில் பாரதத்தில் அறுபத்து நான்கு ஜோதிலிங்கங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அவற்றுள் இப்பன்னிரண்டு ஜோதிலிங்கங்கள் ஒருமித்த ஸ்தல யாத்திரைக்குப் பெயர் பெற்றவை.

ஜோதிலிங்க தரிசனம் மனித ஆத்மாவுக்கு சிவனருள் கூடி பாவங்களிலிருந்து விடுதலை அடையச் செய்து, மரணத்துக்குப் பின் சுவர்க்க லோகத்தை அடையச் செய்யுமென்றும் இவை சாபம் போக்கும் தரிசனத்தலங்கள் என்றும் போற்றப்படுகின்றன.

நல்லைக்குமரன் 13வது மலர் (2005) தொடக்கம்
21வது மலர் (2013) ஈறாக நல்லூர் மதி கலர்ஸ் பிறிண்டர்ஸில்
அச்சிடப்பட்டு வருகின்றது.

# மாநகர் மதுரை

**பொ. சிவப்பிரகாசம்**
**கொழும்புத்துறை.**

தலம்: திருவாலவாய் ஆறாந்திருமுறை

திருச்சிற்றம்பலம்

**முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி**
**முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்**
**வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்**
**வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்**
**துளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்**
**தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்**
**திளைத்தானைத் தென்கூடல் திருவா லவாய்ச்**
**சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.**

– அப்பர் திருத்தாண்டகம்

**புராண வரலாறு**

"மாமதுரைப் பதியுறை சோமசுந்தரக் கடவுள் பாண்டியனாகி வீற்றிருந்தார்" என்றார் பரஞ் சோதியார். குலசேகர பாண்டியன் மதுரையை ஆண்ட காலத்தில், சிவபெருமான் குலசேகரன் கனவில் சித்தர் வடிவில் தோன்றி, கடம்ப வனத்தை அழித்து நாடாக்கப் பணித்தார். பாண்டி நாட்டின் தலைநகரம் அழகிய மதுரை ஆகும். மதுரையை, கோவில் மாநகரம் என்பர். வைகை ஆற்றங்கரையில் அமைந்து இருக்கும் மாநகர் மதுரை; கலையழகுமிகு கலைக்கூடம். சிறந்த சிற்பங்கள், மதுரைப் பெருங்கோவிலை அலங் கரிக்கின்றன. இறைவன் தனது 64 திருவிளை யாடல்களையும் புரிந்த இடம் மதுரை. சரித்திரப் பெருமையை தன்னகத்தே கொண்டது மாநகர் மதுரை. கடற்கோள்கள் காரணமாக இங்கிருந்த மக்கள் பல்வேறு பகுதிகட்குச் சென்று, ஈற்றில் மதுரையில் ஒன்று கூடியதால் மதுரையை கூடல் நகர் என்பர். இத்தலம் நான்கு மாடங்களைக் கொண்டதால், நான்மாடக்கூடலாயிற்று. மூர்த்தி நாயனார் திருவெண்நீறு, உருத்திராட்சம், திருச்சடை ஆகிய மூன்றோடும் ஆண்ட சிறப்பு மதுரைக்கே உரியது. பழம்பெரும் காப்பியமான சிலப்பதிகாரத்தில், பாண்டியன் நெடுஞ்செழி யன் அவையில், கண்ணகி நீதிகேட்டு வாதாடி யது, மதுரை தீக்கிரையானது யாவும் நிகழ்ந்தது, பாண்டி நாட்டுப் பெருநிலப்பரப்பிலேயேயாம்.

**மதுரை மீனாட்சி**

பாண்டி நாட்டின் ஒரு பகுதி செட்டி நாடாகும். செட்டி நாட்டு மக்கள் மதுரை மீனாட்சியைத் தாலாட்டும் அழகைப் பார்ப்போம்.

**'இரத்தின அடுப்பு வைத்து பவள விறகிட்டு,**
**சங்குப் பானை ஏற்றி, தேன் உலைநீர் பெய்து,**
**முத்து அரிசி போட்டுச் சோறு சமைக்கும்,**
**குழந்தைகள் நிறைந்த, மதுரைக்கு அரசியே!**
**தாலோ தாலேலோ! அருள் சூற் கொண்ட**
**அங்கையற்கண் அம்மையே! தாலோ, தாலேலோ!'**

மதுரை மீனாட்சி அம்மை ஆலயத்தைச் சுற்றி, நாற்றிசைகளிலும் வானளாவி உயர்ந்து நிற்கும் பாரிய கோபுரங்களின் நடுவே, மீனாட்சி அம்மை கொலு வீற்றிருக்கும் அழகு, பாவல ராலும், நாவலராலும் வரைந்து வரும் சொல் ஓவியம் அளவிடற்கரியது. மீனாட்சி அம்மன் ஆலயமானது ஆனைமலை, நாகமலை, பசு

மலை, திருப்பரங்குன்றம் நடுவே தாமரை மொட் டுப்போல அமைந்துளது. மாநகர் மதுரை நாற் புறமும் பொறியியல் வல்லுனர்கள் பாராட்டக் கூடிய வடிவமைப்பைப் பெற்றுள்ளது. மதுரை யைப் பாராதவன் மாபாவி என்று கூறுவாரும் உண்டு.

மதுரை மீனாட்சி அம்மன் திருவாயில் – கிழக்கே, சித்திரை வீதியில் அமைந்துளது. அங் கயற்கண் அம்மை கருவறையில் இருகரங்களு டன் எழுந்தருளி உள்ளாள். மீனாட்சி வலது கரத்தில் பச்சைக் கிளியுடன் காட்சி தருகிறாள். மதுரை மீனாட்சிக்கு பூசைநடந்த பின்பே, சுந்த ரேஸ்வரருக்குப் பூசை நடைபெறும். மதுரை மீனாட்சியை தடாதகைப் பிராட்டி, அங்கயற் கண்ணி, அபிராமவல்லி, கற்பூரவல்லி, சுந்தர வல்லி, மாணிக்கவல்லி, பச்சைத் தேவி, பசுங் கொடி, பசுந்தோகை எனப்பல நாமங்கொண்டு அழைப்பர். மீன் போன்ற கண்களை உடையவள், ஆகையால் அவளை அங்கயற்கண்ணி என அழைப்பது சாலப் பொருந்தும். மதுரையை ஆளும் மகாராணி இவள். பரமேஸ்வரன் மாநகர் மதுரையில் மீனாட்சியின் நிழலில்தான் அமர்ந் துள்ளார். இந்த ஆலயத்தை "மீனாட்சி சுந்தரேஸ் வரர்" ஆலயம் என்றுதான் அழைப்பர்.

மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு இடது புறத் தில், சுந்தரேஸ்வரர் சொக்கலிங்கப் பெருமா னாக எழுந்தருளி உள்ளார். மீனாட்சி அம்மன் முன்பாக தங்கக் கொடிமரம் உண்டு. அம்மை கோவிலின் முகப்பு மண்டபம்தான் அட்டசித்தி மண்டபம். இடவலத்தூண்களில் எட்டுச் சிற்பங் ள் மிக அழகாக உள. இரண்டாஞ் சுற்று தென்கிழக்கு மூலையில், தனது திருப்பணியால் உயர்ந்து அழியா வாழ்வு கொண்ட, திருமலை மன்னர், கும்பிட்ட கையுடன் நிற்கும் பணிவான கோலத் தைக் காண முடியும். தல விருட்சம் கடம்பமரம். விமானம் இந்திர விமானம். வைகை ஆற்றின் மணலிற்றான் வாழ்கிறாள் மதுரை மீனாட்சி.

தெப்பக்குள அருகாமையில் ஆறு தூண்களைக் கொண்ட ஊஞ்சல் மண்டபம் உளது. வாரா வாரம் வெள்ளி தோறும், மாலை ஐந்து மணியள வில் இறைவன், இறைவியை இந்த ஊஞ்சலில் வைத்து மெல்ல மெல்ல அசைத்து ஆட்டுவர். அப்போது ஆடல் மகளிர் ஆடல் செய்வர். ஆடும் அழகிகள், பாடும் பாவையராய்ப் பாடுவர்!

**'பொன் செய்த மாடமலி கூடல் பெருஞ்செல்வி**
**பொன்னூசல் ஆடி அருளே!**
**புழுகு நெய்ச் சொக்கர்திரு வழகினுக்கு ஒத்த கொடி**
**பொன்னூசல் ஆடி அருளே!'**

எனப் பாடும் மங்கையர், ஊஞ்சலை மெல்ல அசைப்பர்.

**பாண்டியர் ஆட்சி**

மதுரையை உருவாக்கிய குலசேகர பாண்டி யனின் மைந்தனே, மலையத்துவச பாண்டியன். மலையத்துவச பாண்டியனின் மனைவியே, காஞ்சனமாலை. மலையத்துவச பாண்டியனுக்கு நீண்டகாலம் புத்திர பாக்கியம் இன்மையால் மிகவும் வருந்தி, புத்திரகாமேட்டி யாகஞ்செய் தான். அந்த யாகாக்கினியில் பரமேஸ்வரியே மூன்றுவயது நிரம்பிய பெண் குழந்தையாகத் தோன்றினாள். பேரழகுமிக்க இக் குழந்தை, மூன்று தனங்களுடன் தோற்றியதால் மலை யத்துவசன் கவலைகொண்டான். ஒரு புறம், பாண்டி நாட்டை ஆள ஆண்குழந்தை இல்லாத தாலும், மறுபுறம், மூன்று தனங்களை உடைய பெண்மகவை உலகம் பரிகசிக்குமே என்று தீராத கவலையுறும்போது, சிவபெருமான் பாண்டியனின் கனவில் தோன்றி, மலையத்து வசனே! கவலையுறாதே! உன்மகள் மணவாள னைக் காணுங்கால், ஒரு தனம் தாமாகவே மறையும் என்று கூறினார்.

கவலை நீங்கிய மலையத்துவசன் மகளுக்கு தடாதகை என்னும் பெயர்சூட்டி, அன்போடு வளர்த்து, சகல போர் வித்தைகளும் கற்றுக் கொடுத்து வந்தான். மலையத்துவசன் மறைவிற்

குப் பின் தடாதகைப் பிராட்டியார் அரசாட்சியைப் பொறுப்பேற்று, நீதி வழுவாது செங்கோல் செலுத்தி வந்தாள். தடாதகைப் பிராட்டியார் ஆண்ட பாண்டி நாடு, கன்னி நாடாக விளங்கியது. இதனை பரஞ்சோதியார்,

**'வரை செய் பூண்முலைத் தடாதகை மடவரல் பிராட்டி**
**விரை செய் தார்முடி வேய்ந்து தண்குடை மனுவேந்தன்**
**கரை செய் நூல்வழி கோல்செலக் கன்னியாம் பருவத்து**
**அரசு செய்ததால் கன்னி நாடாயது அந்நாடு'.**

– திருவிளையாடற் புராணம்

திருமணப் பருவம் எய்தியதும், ரத, கஜ, துரக, பதாதி ஆகிய நாற்படைகளுடன் திக்விஜயம் மேற்கொண்ட தடாதகைப் பிராட்டியார், செல்லும் வழியெலாம் பல தேசங்களையும் வெற்றி கொண்டு, ஈற்றில் கைலயங்கிரியையும் முற்று கையிட்டாள். மீனாட்சியின் பெண்படையை எதிர்கொண்ட சிவபெருமானின் நந்திப்படை தோற்றது. பின்வாங்கிய திருநந்திதேவர் சிவ பெருமானுக்கு நிகழ்வை அறியத் தந்தார்.

பரமேஸ்வரன் அறம் என்னும் விடைமீது ஆரோகணித்து, போர்க்களம் புகுந்தார். காலில் வெற்றிக்கழலும், இடையில் புலித்தோலும், கையில் மழுவும், மெய்யில் வெண்ணீறும், பூணூல் தரித்த மேனியும், தலையில் சடாமுடியு டன் தோன்றிய ஈஸ்வரன், போர்க்களத்தில் வீரத் திருமகளாக எழுந்தருளிய தடாதகைப் பிராட்டி யார்மீது கணைதொடுத்து போரை ஆரம்பிக்க வேண்டியவர், தேரில் கம்பீரமாக ஆரோகணித் திருக்கும் ஈஸ்வரியையே இமைக்காது நோக்கும் கருணைவிழியையும் கண்ட மீனாட்சியினது நேர்பார்வை, தரைமீது பதிந்தது. நாணத்தால் தலைகவிழ்ந்தது; அவளது மூன்றாவது தனம் மறைந்தது. சிவபெருமான் தடாதகைப் பிராட்டி யாரை நோக்கி, நீ பாண்டி நாட்டிலிருந்து வரும் போது, உன்னையே தொடர்ந்தோம். இன்றிலி ருந்து எட்டாவது நாளாகிய சோம வாரத்திங்கள ன்று உனது நகரமான மதுரைக்கு, உன்னைத் திரு மணஞ்செய்ய வருவோம்! நீ மதுரைக்குச் செல்க! என்றருளினார்.

**மீனாட்சி திருமணம்**

சோமவாரத்திங்களன்று எம்பெருமான் மாநகர் மதுரையை அடைந்ததும், மீனாட்சியின் தாயான காஞ்சனமாலை சிவபெருமானின் பாத பங்கயங்களைக் கழுவி, பட்டாடை கொண்டு துடைத்து, பன்னீர் தெளித்து, மந்தாரப் பூச்சாத்தி, இருகைகூப்பி வணங்கி தூபதீபங்காட்டி எம் பெருமானே! எனது மகளான கன்னி மீனாட்சி யையும், கன்னித்தமிழ் பாண்டி நாட்டையும் ஏற்று ஆள்க! என்றாள். சிவபரம்பொருள் புன் னகை பூத்தார்! சிவபெருமானுக்குப் பக்கத்தில் தடாதகைப் பிராட்டியார் வீற்றிருந்ததை

**'பண்ணு மின் இசையும் நீரும்**
**தண்மையும் பாலும் பாலில்**
**நண்ணுமின் சுவையும் பூவும்**
**நாற்றமும் மணியும் அங்கேழ்**
**வண்ணமும் வேறு வேறு**
**வடிவுகொண் டிருந்ததால் ஒத்த (து)**
**அண்ணலும் உலகம் ஈன்ற**
**அம்மையும் இருந்த தம்மா!'**

– திருவிளையாடற்புராணம்

வருடாவருடம் மதுரைப் பெருங்கோவிலில் பங்குனி உத்தர நாளில் இடம்பெறும் திருமணக் கோலத்தைக் காண, மீனாட்சியின் அண்ணன் சுந்தரராஜன் (அழகர்) கோவிலிலிருந்து தங்கப் பல்லக்கு, முத்துக்குடை, தங்கக்குடம் சகிதம் சீர் வரிசைகளுடன் வருவது வழக்கம். மீனாட்சி திருக்கல்யாணத்திற்கு, திருப்பரங்குன்றில் உறையும் சுப்பிரமண்யர், காலை வந்து மாலை திரும்புவர். மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல் யாணங் காண, லட்சோபலட்சம் மக்கள் மாநகர் மதுரையில் கூடுவர்.

**சொக்கநாதர்**

குலசேகர பாண்டியன் என்பான் கி.பி 1315 –

1347 வரை மணவூரை தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டை ஆண்டு வரும்கால், ஒரு சோம வார திங்கள் இரவின்போது, வணிகனொருவன் கடம்பவனத்தில் சுயம்புலிங்கத்தைக்கண்டு, குலசேகர பாண்டியனிடம் கூற, பாண்டியன் கடம் பவனத்தை அழித்து, சிவலிங்கம் இருந்த இடத்தி லேயே, கோவிலை எழுப்பினான். இந்தப் புனித மான இடத்திற்கு மதுரை என்னும் பெயரைச் சூட்டினான். தற்போது இந்த சுயம்புலிங்கமே சொக்கநாதர் என்னும் பெயருடன், மதுரைப் பெருங் கோவிலில், இரண்டாம் சுற்றில் வீற்றி ருந்து அருள்பாலித்து வருகிறார். மதுரை சொக்க நாதரை சுந்தரேஸ்வரர், சோமசுந்தரர், கல்யாண சுந்தரர், சண்பகசுந்தரர், அபிஷேகச் சொக்கர், அழகிய சொக்கர் எனப் பல நாமங் களால் மக்கள் அழைப்பர். சொக்கநாதர் முன்பாக தங்கக் கொடி மரம் உண்டு. திருவாயில் தென்பால் உள்ள தூண்களில் மீனாட்சி அம்மன் திருமணக் கோலத்தைக் காண முடியும். திக்கெலாம் சென்றவள் மணக்கோலம் கொண்ட தும், நாணம் நாணப்புன்னகை நளினமாகவுளது. நாணிக் கோணி நிற்கும் மங்கையின் திருக் கையை தில்லைக்கூத்தனின் திருக்கையுடன் இணைத்து, நீர் வார்க்கிறார் திருமால். மேலே கூறிய அழகிய சிற்பங்களுடன் காட்சி தரும் மண்டபத் திருப்பணி கி.பி 1564இல் கிருஷ்ண வீரப்ப நாயக்கரால் மேற்கொள்ளப்பட்டது. தவக் கோலம் கொண்ட கைலைநாதனை மணக் கோலம் கொள்ள வைத்தவள் மதுரை மகாராணி.

மேலும் திரிபுராந்தகர் தேரின்மேல் ஏறி கடுகதியில் செல்லும் சிற்பம், முப்புர அரக்க ராகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன் மாலி என்பாரை நெற்றிக் கண்ணால் சாம்பலாக் கும் சிற்பம், இரண்டாந் தூணில் உள்ள சிவலிங் கத்தின் மேல், காலன் மார்க்கண்டேயருக்கு வீசிய கயிறு, மார்க்கண்டேயர் சிவலிங்கப் பெரு மானை பயப்பீதியால் கட்டிப் பிடிக்க, காலனைக் காலால் உதைக்கும் இறைவன்; மூன்றாந் தூணில் கூத்தப்பெருமானின் ஆடலுக்கு ஏற்ப நந்தி குடமுழா தட்டுகிறார். சிவபரம் பொருளு க்கு கல்லால் எறிந்ததையும், வில்லால் எய்த தையும், பிரம்பால் அடித்ததையும் செருப்பால் குறி வைத்ததையும் சிறப்பான சிற்பங்களாக கண்டு களிக்க முடியும். சிவபெருமான் சோம சுந்தரப் பாண்டியனாக திருவவதாரம் செய்த காட்சி, காளைக்கொடி நீக்கி, மீன்கொடி தாங்கி, சர்ப்பக் கலன் நீத்து, வேப்பம் பூமாலை சூடி, புலித்தோல் நீத்து, பட்டாடை புனைந்து, சந்திர முடி விலக்கி, வயிரமுடி சூடி சோமசுந்தரப் பாண்டியனாக மதுரை மாநகரை ஆண்டார்.

**முக்குறுணிப் பிள்ளையார்**

கீழைக் கோபுர வாயில் வழியாக அங்கயற் கண் அம்மையை வழிபட்டு, முறையே சொக்க ரையும் வழிபட்டு வரும் வழியில் எடுப்பாக உயர மாக ஒரே கல்லில் செதுக்கப்பெற்று அழகாக சாந்தமாக அமர்ந்திருக்கிறார் முக்குறுணிப் பிள்ளையார். இந்த ஆனைமுகனுக்கு பிள்ளை யார் சதுர்த்தியன்று பன்னிரண்டுபடி முக்குறுணி அரிசிமா, வேலூர்ச்சர்க்கரை, பாசிப்பயறு, தேங்காய்த்துருவல், நறுமணம்மிக்க ஏலக்காய் கொண்டு பிசைந்து கொழுக் கட்டையாக ஆக்கிப் படைத்து மதுரை மாநகர் மக்கள் மகிழ்வர்.

**மாலிக்கபூர்**

13ஆம் நூற்றாண்டில் மாலிக்கபூர் என்னும் முகமதியன் பாண்டி நாட்டின்மீது படையெடுத் தான். இதனால் ஆற்றல்மிக்க மாநகர் மதுரை அல்லல் பல கண்டது. பெரும் படையுடன் புகுந்த இவன் பாண்டியரின் செல்வங்களை எல்லாம் கொள்ளையடித்தான். 612 யானைகள், 20,000 குதிரைகள், 96,000 மணங்கு பொன், பல பெட்டிகள் நிறைய முத்துக்களை அள்ளிச் சென்றான், மாலிக்கபூரின் பெருஞ்செல்வம் பறி போனது. இதனால் மாநகர் மதுரை இருள் மயமானது. எங்கும் கவலை படர்ந்தது. கோவில் கள் பூட்டப்பட்டன; கோபுரங்கள் இடிந்தன; மாளி

கைகள் பாழடைந்தன; முகமதியர் ஆட்சி 48 ஆண்டுகள் நிலைத்தது. விசய நகர இந்து பேரரசைச் சார்ந்த குமார கம்பனன், முகமதியர் களை வென்று பாண்டி நாட்டை பாண்டியரே ஆளச் செய்தான். பூட்டிக்கிடந்த மீனாட்சி சுந்த ரேஸ்வரர் ஆலயம் 48 ஆண்டுகளின் பின் வழிபாட்டிற்காக திறக்கச் செய்தான்.

**கால்மாறி ஆடினார்**

மதுரைத் திருத்தலத்தை இரசித சபை அல்லது வெள்ளி அம்பலம் என அழைப்பர். இங்கே இறைவன் திருமணம் நிகழ்ந்தது. திருமணத் திற்கு வந்தவர்கள் அனைவரும் விருந்து உண்ட னர். பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர் (கி.மு. 150) ஒத்த காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் இருவரும் பொன்னம்பலக்கூத்தைக் காணாமல் உண்பதில்லை என்றிருந்தனர். இறைவன் வெள்ளி மன்றில் முனிவர் இருவரும் தனது கூத்தைக் கண்டுமகிழ்ந்து உண்ணுமாறு ஆடி னான். முன்னொருகால் இராஜசேகர பாண்டியன், கூத்துக் கலையைப் பயின்றான். அக்கூத்தால் தனக்கு உண்டாகிய களைப்பை நினைத்தான். இறைவன் எப்போதும் இப்படி திருக்கூத்து ஆடிக்கொண்டு இருக்கிறானே! இவன் கால் நோகுமே என ஏங்கி இறைவனை, கால்மாறி ஆடி அருளுமாறு ஒரு சிவராத்திரி தினத்தன்று, மதுரையம்பதியை அடைந்து, சிவாகம விதிப்படி நான்குசாமப் பூசை செய்த பின்பு இருகரங்களை யும் சிரமேற் குவித்து நடராஜப்பெருமானே! தரை மீது பதித்த தேவரீரது திருவடியை, மேலே தூக்கி அருளி, எடுத்த திருவடியை, தரைமீது பதித்து, எனது மனத்துயரினை போக்கி அருள கால்மாறி ஆடி அருளவேண்டும் என்று பணிந் தான். இறைவ! நீ அருள் புரியவில்லைஆகின், எனது உயிர் துறக்கவும் தயங்கேன் என்றான். இதனால் இராஜசேகர பாண்டியனுக்கு அருள் புரிய இசைந்து, இறைவன் கால்மாறி ஆடினான், மதுரை வெள்ளியம்பலத்தில், மதுரையில் கால் மாறி ஆடும் கற்பகத்தை, இன்றும் கண்ணாரக் கண்டு இன்புற முடியும். இந்தக் காட்சியைக்காண பதஞ்சலியும், புலிக்காலார் எனும் வியாக்கிர பாதரும் அருகில் நிற்கின்றனர். ஆடல்வல்லான் சகல சபைகளிலும், இடது காலைத் தூக்கி ஆடும் காட்சியைக் காண முடியும். ஆனால் வெள்ளி அம்பலத்தில் மட்டும், இடது திருவடியை ஊன்றி, வலது காலைத் தூக்கி ஆடுகிறார்.

**கூன் பாண்டியன்**

கூன்பாண்[illegible] சமண சமயத்திற்கு கி.பி. 640இல் மா[illegible]. சமண சமயம் பாண்டி நாட் டில் மேலோங்கியது. சைவசமயம் குன்றியது. இதனால் சஞ்சலமுற்ற பாண்டியனின் மனைவி மங்கயற்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும், சம்பந்தப் பெருமானை மதுரைக்கு அழைக்க ஓலை அனுப்பினர். சம்பந்தப்பெருமானும், அழைப்பை ஏற்று மாநகர் மதுரைக்கு எழுந் தருளினார். எழுந்தருளி வந்த சீர்காழிச் செம் மலை எதிர்கொண்டு அழைத்து, ஒரு மடத்தில் தங்க வைத்தனர். கூன் பாண்டியனுக்கு ஏற்பட்ட வெப்புநோயிலிருந்து தெளிவுபெற, சம்பந்தப் பெருமான் "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப் பதிகத்தைப் பாடி பாண்டியனுக்கு திருநீறு இடவே பாண்டியனின் வெப்புநோய் நீங்கியது. மதுரையில் உள்ள வைகை நதியில்தான், புனல் வாதம் நடந்தது. திருஞானசம்பந்தப்பெருமான் தங்கியிருந்த மடம், ஆவணிமூல வீதியிலுள்ளது. சம்பந்தர் ஆதீனம், இங்கே இருந்து சைவநெறி பரப்புகிறது. மங்கயற்கரசியார், குலச்சிறைார், நின்ற சீர் நெடுமாறன்; நாயனார் ஆயினர். மது ரையில் மீண்டும் சைவநெறி தழைக்க வழிவகுத்த பெருமை, மங்கையற்கரசியாரையே சாரும்.

**பொற்றாமரைக்குளம்**

பொற்றாமரைக் குளத்தின் இருபக்கமும் 24 தூண்கள். தூண்களில் ஏடும், எழுத்தாணியும் கொண்டு, எழுதும் சிற்பங்கள் உண்டு. பொற் றாமரைக்குளச் சுவர்களில் சிவபெருமானின் 64 திருவிளையாடல் வரலாற்று ஓவியமாகக் கண்டு

களிக்க முடியும். 48 தமிழ்ப் புலவர்களுடன் சோமசுந்தரக் கடவுளே தலைவனாக இருந்து தமிழாய்ந்தார். பொற்றாமரைக் குளத்தில் நடுநாயகமாக சங்கப் பலகை மிதந்து இருக்கும். சங்கப் பலகை நல்ல நூல்களை ஏற்கும். திருக்குறளை ஏற்றது. திருப்பனந்தாள் மடம் 1330 குறளையும், அழகாக வெண்சலவைக் கல்லில் பொறித்து பெருமைபெற்றது. பழந்தமிழ் நாட்டில் மூன்று தமிழ்ச்சங்கங்கள் இருந்தன. முதற்சங்கம் கடற்கோளால் அழிய, இடைச்சங்க மும் மீண்டும், கடல் கொண்டு விடவே, பாண்டி யர் இன்றைய மதுரைக்கு வந்து கடைச்சங்கம் நிறுவி தமிழை வளர்த்தனர். இன்று மதுரையில் இருப்பது நாலாவது தமிழ்ச் சங்கமாகும். சங்க காலத்தில் பேரவையில் பொற்கிழி உயரத் தொங்கும். தமிழை குற்றமறப் பாடியவருக்கு பொற்கிழி தானாகவே அறுந்து விழும். பாண்டி யரின் செப்பேடுகள் 20 ஆகும். பாண்டியர் வெளியிட்ட செப்பேடுகளில் வேள்விக்குடிச் செப்பேடுகள் மிகவும் பழமை வாய்ந்ததாகும். (கி.பி768). பாண்டியர் கல்வெட்டுகள் 44. இவை மாநகர் மதுரை காலத்துக்குக் காலம் வளர்ந் தோங்கிய நிலையை எடுத்து இயம்புகிறது.

### வானளாவிய கோபுரங்கள்

ஓங்கி வளர்ந்த கோபுரங்களை மாநகர் மதுரையில் நான்கு திசைகளிலும் காணக் கண் ஆயிரம் வேண்டும். தெற்குக் கோபுரத்தில் ஏறி கோபுர உச்சிக்குச் செல்ல, விசாலமான படிக ளுண்டு. உச்சியில் நின்று மாநகர் மதுரையைப் பார்க்க முடியும். தெற்குக் கோபுரம் கி.பி 1559 இல் திருச்சி செவ்வந்தி மூர்த்திச் செட்டியார் திருப்பணி. தெற்குக் கோபுரம் 9 நிலைக் கோபுரம். 1000 பேருக்கு பந்தி வைக்கக்கூடிய இடவசதி உண்டு. உயரம் 152 அடி.

மீனாட்சி அம்மன் கோவிலில் 12 கோபு ரங்கள் உண்டு. மேலைக் கோபுரம் பராக்கிரம பாண்டியன் திருப்பணி. வடக்குக் கோபுரம் கிருட்ண வீரப்ப நாயக்கர் திருப்பணி. வடக்கு கோபுர அருகாமையில் உள்ள 5 இன்னிசை தூண்களை உருட்ட ஏழுசுர ஒலிகள் மெல்லென எழுகின்றன. கிழக்கு கோபுரம் பழமை வாய்ந் தது. சுந்தபுர பாண்டியன் திருப்பணி. ஏறத்தாழ 4 கோபுரங்களும் ஒத்த உயரம். மேற்குக் கோபுரம் 150 அடி. அன்னை மீனாட்சி அம்மையின் ஆலயம் நீளம் 847 அடி, அகலம் 792 அடி.

மீனாட்சி அம்மன் ஆலயத்தைச் சுற்றி ஐந்து வீதிகள் உண்டு. கோவிலுள் இருப்பது ஆடிவீதி, வெளிச்சுற்று சித்திரை வீதி, அடுத்த சுற்று ஆவணி மூலவீதி, இதனை அடுத்து பெரிய மாசி வீதி, இறுதி வெளிவீதி போக்குவரத்திற்கு அகன்ற பெருவீதி. மாநகர் மதுரையை திருவிழா நகரம் என்பர். ஆண்டு முழுவதும் திருவிழாக் கள் நடந்த வண்ணமே இருக்கும். பங்குனியில் நடப்பது கோடை வசந்த விழா.

### விசுவநாத நாயக்கர் கி.பி 1529 - 1736

நாயக என்னும் வடசொல்லுக்கு தலைவன் என்று பொருள்படும். விசுவநாத நாயக்கர் தெலுங்கர். இவர்களின் சந்ததி மதுரையை 207 ஆண்டுகள் ஆண்டனர். அழியும் நிலையில் இருந்த, எமது சமயத்தையும் தென்னக மக்களின் கலை பண்பாட்டையும் பாதுகாத்த பெருமையை, நாயக்கர் வரலாறு கூறும். மதுரை நாயக்கர் வர லாறும், விஜயநகர பேரரசின் வரலாறும் பின்னிப்பிணைந்து நிற்பதாகும். முகமதியர் காலத்தில் மாநகர் மதுரை சொல்லொண்ணாத் துயர் கண்டது. தரைமட்டமாக்கப்பெற்ற மீனாட்சி அம்மன் கோவில், மதிற்சுவர்கள், கோபுரங் களை மீண்டும் எழுப்பி, நாஞ்சில் நாட்டில் பாது காப்பாக வைக்கப்பட்டிருந்த திருவுருவங்க ளைக் கொண்டுவரச் செய்து "பிரதிஷ்டை" பண்ணி அவற்றிற்கு திருஆபரணங்களை அணி வித்து, நாள்தோறும் நித்திய பூசைகளையும் நடக்கச் செய்தார் குமார கம்பனன்.

**திருமலை நாயக்கர் கி.பி. 1623 - 1659**

திருமலை நாயக்கர், மாநகர் மதுரையை தனது ஆட்சியின் பிற்பகுதியில் முழு உரிமையுடன் ஆண்டவர். திருமலை நாயக்கர் இறந்தாலும், இறவாத புகழ் பெற்றவர். மங்காப் புகழ் பெற்ற பாண்டியரை மறந்தாலும், மறையாத புகழ்பெற்ற மங்கம்மாளை மறந்தாலும், மற்ற நாயக்கர்களை மறந்தாலும், மதுரையை ஆண்ட புகழ், மங்காத திருமலை நாயக்கரை என்றென்றும் தமிழ் கூறும் நல்லுலகம் மறவாது. காரணம் மதுரையில் "திருமலை நாயக்கர் மகால்" என்னும் அரண்மனையைக் கட்டி, தெப்பக்குளம் அமைத்து, புது மண்டபம் அமைத்த செம்மலை மறக்க முடியுமா? அட்டசித்தி மண்டப முகப்பில், காவல் வீராங்கனையாக, திருமலை நாயக்கர் பட்டத்து தேவியார் உருத்திராபதி அம்மையும், தோழி அம்மையும் உளர். மீனாட்சி நாயக்கர் மண்டபம் கி.பி 1707இல் கட்டப்பெற்றது. 110 தூண்கள், யானை நிற்கும் இடம், பூக்கடைகளும் உண்டு.

முதலிப்பிள்ளை மண்டபத்தில் கற்சிலையாய், காலமெலாம் கடவுள் முன்னிலையில் கைகூப்பி நிற்கிறார். திருமலை நாயக்கர், உயர்ந்த உருவம், பருத்த உடல், திரண்ட தோள்கள், சரிந்த தொந்தி, கூரிய மூக்கு, முறுக்கிய மீசை, இரு மனைவியரோடு கூடிய திருவுருவத்தை மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவிலிலும், கள்ளழகர் கோவிலிலும், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலிலும், திருமலை நாயக்கர்களின் உருவம் தூண்களில் பொறிக்கப் பட்டுள்ளது.

**ஆயிரங்கால் மண்டபம்**

சுவாமி சன்னிதியைக் கடந்தால் ஆயிரங்கால் மண்டபம், 995 தூண்களைக் கொண்டது. இந்தத்திருப்பணியை மேற்கொண்டவர் தளவாய் அரியநாத முதலியார். இவரின் திருவுருவம் இவ்வாயிலின் மேல்பால் குதிரையின் மேல் கம்பீரமாக உளது. அடுத்த சிற்பம் காளத்தி வேடனான கண்ணப்பரை, மறைந்து நின்று பார்க்கிறார் சிவகோசரியார். எவ்வளவு பெரிய தூண்கள், உயர்ந்த தூண்களின் மேல் உள்ள உத்திரக் கற்கள், பாவு கற்களின் வேலைப்பாடு, அதன் அழகு வருணிக்க முடியாதது. இருபால் தூண் வரிசையிலும் மாநகர் மதுரையை ஆட்சி புரிந்த நாயக்கமன்னர் திருவுருவம் மன்னரின் முகம், அதன் பொலிவு சொல்லுந்தரமன்று.

ஒரு நாள் ஆயிரக்கால் மண்டப வேலை நடைபெறும் போது பிரதம சிற்பி சுந்தரமூர்த்தி சிற்பம் செதுக்கும்போது, வேலையில் தன்னை மறந்த நிலையில் உள்ளான். சிற்பி வெற்றிலை போடுபவர், வேலையின் ஊடே கையை நீட்ட, ஏவல் பையன் வெற்றிலை மடித்துத் தருவான். ஆனால் அன்று ஏவல் பையன் இல்லை. எதிர்பாராமல் அங்கே வந்த திருமலை மன்னர் நீட்டிய கைக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்தார். திரும்பிப் பார்த்த சிற்பி நடுநடுங்கிப் போனான்! என்ன தவறு என்று துடிதுடித்துப் போனான் சிற்பி. சிற்ப வேந்தே! அஞ்சாதே! உனக்கு பணி செய்ய நான் பெற்ற பேறு இது, என்றார் திருமலை மன்னர். சிற்பியின் கைவண்ணத்தால் உருவான குற்றா லக் குறவஞ்சி, குறுநாட்டுச்சேலை கட்டி மிக மிடுக்காக அழகாக நிற்கிறாள்.

**'இலகுநீ றணிந்து திலகமும் எழுதிக்**
**குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து**
**சலவைசேர் மருங்கில் சாத்திய கூடையும்**
**வலதுகைப் பிடித்த மாத்திரக் கோலும்'.**

இன்று இக் குறவஞ்சிச் சிற்பத்தை, ரசிக்க ரசிகமணி டி.கே.சி. இல்லையே! காலாயிரம் உடைய இம்மண்டபத்தை காணக் கண்ணாயிரம் வேண்டுமே!

**குமரகுருபரர்**

குமரகுருபர சுவாமிகள் பாடிய "மீனாட்சி

அம்மை பிள்ளைத்தமிழ்" திருமலை மன்னர் முன்னிலையில் அரங்கேறியது. "தொடுக்குங் கடவுட் பழம் பாடற்றொடையின் பயனே" என்னும் செய்யுளுக்கு சுவாமிகள் பொருள் கூறும்போது, கீழ்க் காணும் பாடலுக்கு மகிழ்ந்த மீனாட்சி யம்மையார், அர்ச்சகரின் சிறிய பெண் குழந்தை ஆக வந்து, திருமலை மன்னர் சூடியிருந்த முத்து மாலையைக் கழற்றி, குமரகுருபரருக்கு சூடி மறைந்தருளினார்.

**வருகைப் பருவம்**

**'பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்**
**பிடியே வருக முழுஞானப்**
**பெருக்கே வருக பிறைமௌலிப்**
**பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்**
**விருந்தே வருக மும்முதற்கும்**
**வித்தே வருக வித்தின்றி**
**விளைக்கும் பரமா னந்தத்தின்**
**விளைவே வருக பழமறையின்**
**குருந்தே வருக அருள் பழுத்த**
**கொம்பே வருக திருக்கடைக்கண்**
**கொழித்த கருணைப் பெருவெள்ளங்**
**குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்**
**மருந்தே வருக பசுங்குதலை**
**மழலைக் கிளியே வருகவே!**
**மலையத் துவசன் பெற்றபெரு**
**வாழ்வே வருக வருகவே!'**

குமரகுருபரசுவாமிகள்

இதுவரை மாநகர் மதுரை என்னும் தலைப்பில், புராண வரலாறு, மதுரை மீனாட்சி, பாண்டியர் ஆட்சி, மீனாட்சி திருமணம், சொக்கநாதர், முக்குறுணிப் பிள்ளையார், மாலிக்கபூர், கால் மாறி ஆடினார், கூன் பாண்டியன், பொற்றாமரைக்குளம், வானளாவிய கோபுரங்கள், விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கர், ஆயிரங் கால் மண்டபம், குமரகுருபரர் எனும் விடயமாக தொகுத்து எழுதினோம்.

**தொகுத்து எழுத உதவிய நூல்கள்**


1. மதுரைக்கோவில் வரலாறு – புலவர் இர. இளங்குமரன்
2. மதுரை நாயக்கர் வரலாறு – அ.கி. பரந்தாமனார் M.A.
3. நல்லைக்குமரன் மலர் – 1997
4. தமிழகத்து தெய்வத்திருத்தலங்கள் – தி.ந. அங்கமுத்து முதலியார்
5. சக்தி பீடங்கள் – தெள்ளாறு E.மணி M.A.
6. தமிழக இந்துக் கோவில்கள் – மணிமேக லைப் பிரசுரம்
7. தமிழக கோவில்களும் வழிபாட்டு முறைகளும் – புலவர் தமிழ்காந்தன் M.A.
8. சக்தி ஆலயங்கள் – திருமருகல் சிங்கார வேலனார்.
9. அன்னை மீனாட்சி அந்தாதி – அரு. சோமசுந்தரன் M.A., B.T., காரைக்குடி
10. மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் – குமரகுருபர சுவாமிகள்
11. திருவிளையாடற்புராணம் – பரஞ்சோதி முனிவர்
12. தமிழ்நாட்டுச் செப்பேடுகள் – ச. கிருஷ்ணமூர்த்தி


முத்துக்குமாரசாமி எழுந்தருளி மண்டபம் மாபிள் பதித்து புனரமைப்பு 2013 யூலை மாதம் நடைபெற்றது.

# வாழ்வை நெறிப்படுத்தும் சமயம்

திருமதி ப. நடராஜா

அகில உலகையும் படைத்துக் காத்துக் கரந்து விளையாடும் விளையாட்டே உலக வாழ்க்கை. இவ்விளையாட்டின் கர்த்தா இறைவன். "இறைவன்" என்றால் இறைமை உள்ளவன் – ஆளுமையுள்ளவன் என்பது பொருள். சர்வலோகத்தையும் ஆளும் வல்லமை கொண்டவன் இறைவன். இதனால் ஆண்டவன், ஆழ்வான் என்ற பெயர்களும் இறைவன் பெயர்களாயின.

உலகத்தில் மனிதர் வாழ்வதற்காக வகுக்கப்பட்ட நெறிமுறைகள், விதிக்கப்பட்ட விதிகள், எந்தச்சமயத்தில் (சந்தர்ப்பத்தில்) எதைச் செய்ய வேண்டும் என்னும் அறிவை மனிதர்களுக்கு அளித்து மனித வாழ்வை மேம்படுத்துவது சமயக் கல்வி. இதனை ஆகம விதியென்றும் வாழ்க்கை நெறியென்றும் பலவாறு அழைக்கலாம். காலத்துக்குக் காலம் உலகின் பல பாகங்களிலும் தோன்றிய மகான்கள், ஞானிகள் பெயரால் அவரவர் கூறிய விதிகள் மதமென்றும், மார்க்கமென்றும் அழைக்கப்பட்டு ஒவ்வொரு கூட்டத்தினர் ஒவ்வொரு மதத்தைப் பின்பற்றி வாழ்ந்தனர் வாழ்கின்றனர். எந்த மார்க்கமும் நெறிமுறையும் இல்லாமல் மனிதனால் வாழமுடியாது. அப்படி வாழ முற்படின் சமுதாய ஒழுங்கு, நியமம் என்பன சீரழிந்து வாழ்வில் குழப்பம், அமைதியின்மை தோன்றும். மனித வாழ்வில் நெறி கெட்டு அனர்த்தங்கள், அவலங்கள் ஏற்படும். ஆகவே மனித சமுதாயம் ஒழுங்கு நியமப்படி வாழ்வதாகிய வாழ்க்கை நெறியே சமய நெறியாகும்.

உதாரணமாக இந்து தர்மத்தை எடுத்துக் கொள்வோம். இந்து சமயத்திற்கு ஸ்தாபகர் என்று யாரும் உரிமை கொண்டாடுவதில்லை. ஏனெனில் அது தோன்றிய, தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல; அது என்றுமுள்ள சமய நெறியாகும்.

வேதங்கள் வகுத்த நெறிமுறைகளை அனுஷ்டித்து வாழ்வதே மானிட வாழ்வு. வேதங்கள் மகரிஷிகளால் எழுதப்பட்டவை. இவை இறைவன் திருவாக்காகக் கொள்ளப்படுபவை. இவை அட்சரங்களாக அதாவது எழுத்துருவில் தோன்றுவதற்கு முன்பே ஒலிவடிவில் வேதியர்களால் ஓதப்பட்டு மனிதர்களுக்கு உபதேசிக்கப்பட்டது. அதனால் "எழுதாமறை" என்னும் பெயர் உண்டாயிற்று. "இந்து" என்றால் பிற உயிர்க்கு இம்சை – துன்பம் செய்யாதவன் என்று பொருள். அதாவது இரக்க சிந்தையுள்ளவன் என்பதாகும்.

இந்து சமயம் ஆறு சமயங்களின் கூட்டாகும். சைவம், வைணவம், சாக்தம், காண பத்தியம், சௌமாரம், குமாரம் என்ற ஆறு சமயங்களை உள்ளடக்கியதாகும். சைவசமயம் சிவபெருமானையும், வைணவம் விஷ்ணுவையும், சாக்தம் சக்தியையும், காணபத்தியம் விநாயகரையும், சௌமாரம் சூரியனையும், குமார சமயம் முருகனையும் முழுமுதற் கடவுளாகக் கொண்டது. இவ் ஆறு சமயங்களையும் ஆறு அங்கங்களாகக் கொண்டு ஒரு குடும்பமாக நெறிப்படுத்தியது இந்து சமயம். இந்த வாழ்க்கை முறை இந்து

கலாசாரம், இந்து நாகரிகம், இந்து தர்மம் என்று பலவாறு அழைக்கப்படுகின்றது. கடவுளின் பெயர் கொண்ட இவ் ஆறு மூர்த்திகளும் தனித் தனியாக முழுமையானவர்களே. இம் மூர்த்தி களை தனி மனித விருப்பத்திற்கேற்பத் தனித் தனியாகப் பூசிப்பது அவரவர் கடவுள் நம்பிக் கையை வலுப்படுத்துவற்காகவே அமையும். இவ் ஆறு மூர்த்திகளையும் குடும்பத்தில் ஒவ்வோர் அங்கமாகக் கொண்டு சமுதாயக் குடும்பத்தை நெறிப்படுத்துவது இந்து தர்மம்.

இந்து தர்மத்தின் தலையாக விளங்குவது சைவசமயம். சைவம் என்றால் சிவம். சிவம் என்றால் அன்பு. இவ்வன்புதான் இந்துமத சாரம். இதுவே மனித வாழ்வின் சாராம்சம். ஒரு குடும்பம் ஒழுங்காக வாழ்வதற்கு ஒரு கட்டுக் கோப்புத் தேவை. சிவம் என்னும் அன்பு விதையி லிருந்து தோன்றிய சிவனும் சக்தியும் அம்மை யப்பனாகவும், விநாயகர், முருகன் பிள்ளைக ளாகவும் வாழ்விற்குரிய தட்ப வெப்பம் ஒளி மற்றும் உணவிற்கான யாவற்றையும் கொடுப்ப வர் சூரிய பகவான். குருவாகவும் எல்லாவற்றி லும் உள் நின்று எங்கும் நீக்கமற நிறைந்து விளங்குபவர் விஷ்ணு. இவர் நண்பராக - உறவினராக இக் குடும்பத்தில் இணைந்து விளங்குபவர். இவர்கள் ஆறு பேரும் இணைந்து நியமம் தவறாது வாழ்வதற்கு அன்பெனும் இணைப்பே ஆதாரம். இக் குடும்பநெறி ஒவ் வொரு குடும்பமும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டான நெறியாகும். சிவம் என்னும் அன்பு விதையினின்றும் தோன்றிய அம்மையப்பனாகிய ஆணும் பெண்ணும் ஒரே விதை ஒரு மூல வஸ்துவிலிரு ந்து தோன்றியதாகும். ஒவ்வொரு மனிதனும் இந்த மூல வஸ்துவிலிருந்து தோன்றியவனே. சைவசமயம் எல் லோரையும் அன்பால் இணை த்து ஒற்றுமையை உருவாக்கும் சமயமாகும்.

ஒரு தலைவர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்க வேண்டியவர். குடும்பத் தலைவர். தன்னை ஆளவல்லவனே தலைவனாயிருக்கும் தகுதி பெற்றவன், புலனிச்சையால் தர்மத்தினின்றும் விலகாது தன்னையும் காத்துத் தன் குடும்பத்தையும் காக்க வல்லவனே நல்ல தலைவன். குடும்பத்தை இயக்குவது சக்தி. சத்தியத்தைப் பேணுவதோடு இதமாகப் பேசுவதன் மூலம் தலைவனையும் மக்களையும் என்றும் ஒற்றுமை குலையாமல் இணைத்து குடும்பக் கட்டுக் கோப்புக் குலையா மல் பாதுகாக்கும் வல்லமை கொண்டவராயிருப் பார்.

இத்தகைய அம்மையப்பனின் பிள்ளைகள் பெற்றோரைத் தெய்வமாக மதித்து அவர்கள் சொல்லில் நம்பிக்கை வைத்து அவர்களைப் பின்பற்றி வாழும் போது அங்கே சாந்தி - நிம்மதி - அமைதி உண்டாகின்றது. இதற்குக் காரணம் அன்பு கலந்த நம்பிக்கையே ஆகும். இத்தகைய குடும்ப வாழ்விற்கு உதாரணமாகப் புராணங்கள், இதிகாசங்கள் என்பன இந்து சமயத்தின் வழிகாட்டிகளாக விளங்குகின்றன. ஒவ்வொரு கதையிலும் ஒவ்வோர் படிப்பினை அடங்கியிருக்கின்றது. இவற்றை வாசித்து உணர்ந்து கொண்டால், எந்தச் சந்தர்ப்பத்தில் எதைச் செய்ய வேண்டும். வாழ்வில் ஏற்படும் பிரச்சினை கட்கு எவ்வாறு தீர்வு காண்பது. நேர் மையான ஒழுக்கமான வாழ்விற்கு சோதனை கள் ஏற்படும் போது அதில் வெற்றி பெறுவது எப்படி? என்பன போன்ற பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்து சமயக் கலை வாழ்வியற் கலையாகும்.

உதாரணமாக மூத்த பிள்ளையான விநாயகர் அம்மையப்பரே உலகமென அவர்களை வலம் வந்து மாங்கனியைப் பெற்றதும், முருகன் கோபம் கொண்டு பழனி சென்றதும் யாவரும் அறிந்ததே. இதை நாம் ஆழ்ந்து நோக்கின் விநாயகர் இக்குடும்பத்தைப் போலவே உலகில்

எல்லாக்குடும்பமும் உள்ளதென அறிந்து பிண்டத்துள் அண்டத்தைப் பார்த்தார். முருகனோ உலகைச்சுற்றி அதைத் தன் அறிவால் ஆராய்ந்து உலகிலுள்ள அனைத்து சீவராசிகளும் அந்த அம்மையப்பனான சிவசக்தியின் பிள்ளைகளே யென்றும் அகில உலகமும் கோள்களும் நட்சத்திரங்களும் ஒன்றையொன்று முட்டாமல் சீராக இயங்குவது இறை சக்தியின் நியம விதியால் என்பதையும் உணர்ந்தவர் அண்டத்துள் பிண்டத்தைப் பார்த்தார். இரண்டுமே சமமென உலகிற்கு உணர்த்தினர்.

இத்தகைய வாழ்விற்கு வகுக்கப்பட்ட விதி முறைகளாவன; பிள்ளைகள் சிறு வயதிலேயே புராண இதிகாசக் கதைகளைக் கேட்டு அதன் பொருளை உணர்ந்து கொள்ள வழி செய்ய வேண்டும். கட்டுப்பாடான வாழ்க்கைக்குப் பிள்ளைகள் உரிய காலத்தில் சமயதீட்சை பெற்றுக் கொள்ள வேண்டும். கற்றதைக் கேட்டதை வாழ்வில் அனுஷ்டிக்க வேண்டும். வீட்டில் பெற்றோர் எப்படி வாழ்கின்றனரோ அதையே பிள்ளைகள் பின்பற்றுவர். ஆகவே பெற்றோர் தம்மை ஆளும் ஆளுமையுள்ளவர்களாக வாழ்வின் பொருளாகிய புனிதத் தன்மையை வெளிப்படுத்துபவர்களாக வாழவேண்டும்.

இதே போல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒழுக்க சீலர்களாக வருங்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டும் குருமார்களாகத் திகழ வேண்டும். மாணவப்பருவத்தில் பிரம்மச் சரியத்தை ஒழுங்காகப் பேண வேண்டும். அதற்குரிய விதத்தில் உணவு, உடை என்பன அமைதல் அவசியம். இவை கல்வியின் அத்திவாரமாகும். இதன் மேல் எந்தத் துறையில் கல்வியறிவைப் பெற்றாலும் எத்தொழிலைச் செய்தாலும் அதைத் தூய்மையுடன் செய்யும் மனப் பக்குவம் உண்டாகும். உலக வாழ்வில் பொருள் தேடும் கல்வியோடு வாழ்க்கையை ஆனந்தமாக அனுப விக்கும் சமயக் கல்வியையும் சமமாகக் கற்பிக்க வேண்டும். பணத்தை எவ்வாறு கையாள்வது, சமூகத்தில் தீயநெறி புகுந்து குழப்பங்களை உண்டாக்காமல் நல்ல சமுதாயத்தை உருவாக்குதல் போன்ற அறிவினைத் தருவது சமயக்கல்வி. புராணங்கள் ஒவ்வொன்றிலும் சமூக நீதி விளக்கப்படுகின்றது. அரிச்சந்திரபுராணம் சத்தியத்தையும் இராமாயணம் சகோதர ஒற்றுமை, விட்டுக் கொடுப்பு, தாய் தந்தை சகோதரக் கூட்டுக் குடும்பம் பேணல், கணவன் மனைவி உறவு, அரச கடமைகள், வாக்குத் தவறாமை. எவ்வித கஷ்டத்தின் மத்தியிலும் இவற்றை எவ்வாறு கடைப் பிடிக்க வேண்டும் என்பதை நமக்கு அறியத் தருகின்றன.

கல்விக் கரையில; கற்பவை நாட்சில. ஆகவே கற்க வேண்டியதை இளமையில் கற்கத் தொடங்கினால் வாழ்வின் அத்திவாரம் உறுதியாகும். இந்து கலாசாரம் – கந்தபுராணக் கலாசாரம். இது நமது சொந்தக் கலாசாரம் அதைப் படியுங்கள், அதன்படி வாழுங்கள் என்று எமக்கு (மனித குலத்திற்கு) வழிகாட்டியருளியவர் யோகர் சுவாமிகள். இவர் நம்மிடையே தோன்றி நமக்கெல்லாம் ஆசானாய் விளங்குபவர்.

கந்த புராணத்தைப் பற்றிச் சுருங்கச் சொல்லின் மனிதர்களிடையே தெய்வீக சக்தி குறைந்து, அசுர சக்தி மேலோங்கும்போது உலகில் பதற்றம் உருவாகின்றது. எல்லோரும் அசுர சக்தியை அழித்துத் தெய்வீக சக்தியை மேம்படுத்த நோன்பிருந்து சிவனைத் தொழுதனர். சிவனின் நெற்றிக் கண்ணினின்றும் ஆறு பொறிகள் தோன்றி ஆறு குழந்தைகளாகிச் சரவணப் பொய்கையில் விழ, அதை உலக நாயகியாம் உமை ஒன்றாகச் சேர்த்து ஒரு குழந்தையாக்கினார். அசுர சக்தியை அழிப்பதற்காகத் தோன்றியதே முருக அவதாரம்.

இந்து சமயத்திலுள்ள ஆறு பிரிவுகளையும்

ஒன்றாக்கி ஒரு கடவுளாகக் கொண்டது கந்த புராணம். இறைவன் ஒருவரே. அவரே அப்பா. அம்மா, பிள்ளைகள், உறவினர், நண்பர், சகோ தரர் மற்றும் எல்லாப் பாத்திரங்களையும் ஏற்று நடித்து அவரவர் கடமைகளை உலகிற்கு உணர் த்தி வழிகாட்டுகின்றார் என்பதே கந்தபுராணக் கருப்பொருள்.

அசுர சக்தியை அழித்து, தெய்வீக ஆற்றலை மேம்படுத்த அவதரித்த முருகப் பெருமான் போர் புரிந்து தெய்வீக சக்தியை மேம்படுத்திய பின் பக்குவமடைந்த ஆன்மாக்களை இறைசக்தி யாகிய தன் சக்தியுடன் இரண்டறக் கலந்து ஆனந்த நிலையை அளித்தது வள்ளி திருமண மாகும். பக்குவமடைந்த ஆன்மாவே வள்ளி யாகும். இதன் பின் உலகமுய்வதற்காக உலகி யல் வாழ்வில் கணவன் மனைவியாக இணைந்து யாகம் முதலிய கிரியைகளைச் செய்வதற்காக நடைபெற்றது தெய்வயானை திருமணம்.

இவ்வுலக வாழ்வின் அநுபவமாகப் பெற்றது ஞானம். இந்த ஞானத்தின் சக்தியே வேல். இச் சக்தி உலகைப் பரிபாலிக்கும் அறிவை நல்கி உலக ஆட்சிக்கு வழி வகுக்கின்றது. வேல் செங்கோலாகவும் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய முருகன் நடுநிலைக்கொள்கை தவறாதிருந்து உலகையாள வல்லவன் என்பதும் கந்தபுராணக் கோட்பாடு. ஆகவே இவற்றைப் படித்துக் கேட்டு வாழ்வின் பொருளுணர்ந்து "நான் யார்?" என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து உய்ய எல்லாம் வல்ல நல்லைக் குமரனை வேண்டுவோம்.

## வெளியீடு

21வது நல்லைக்குமரன் மலரின் வெளியீட்டு விழா 21.08.2013 (புதன்) அன்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.செ.பிரணவநாதன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது மலரின் ஆய்வுரை யாழ் பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

- பதிப்பாசிரியர்

# சைவாலயப் பெருவிழாக்கள்

**பண்டிதர் தி.பொன்னம்பலவாணர்**

பெரும்பாலான சைவ சமய ஆலயங்களில் வருடம் தோறும் பெருவிழாக்கள் நிகழ்கின்றன. சதுர்த்தி, கார்த்திகை, பிரதோஷம், ஏகாதசி போன்ற நாட்களில் பல ஆலயங்களில் திரு விழாக்கள் நிகழ்கின்றன. வேறு சந்தர்ப்பங் களில் நியதியாக வருடம் தோறும் அலங்காரத் திருவிழா பத்து நாட்கள் பல ஆலயங்களில் நிகழ்கின்றன. இவையன்றி கொடியேற்றம், தேர், தீர்த்தம் என்னும் நிகழ்வுகளுடன் பத்து நாட்கள் தொடக்கம் 27 நாட்கள் வரை நிகழும் திரு விழாக்களையே பெருவிழாக்கள் எனக் குறிப் பிடுகின்றோம். இவ் விழாக்களை மகோற்சவம் எனவும் பிரமோற்சவம் எனவும், குறிப்பிடுவ துண்டு.

கொடியேற்றத்தை முதலாம் திருவிழா என்றும் தீர்த்தத்தை கடைசித் திருவிழாவாகவும் கொள்வது வழக்கம். ஆனால் கொடியேற்றத் திற்கு முதலாம் நாள்களிலும் திருவிழா தொடர் பான கிரிகைகள் நிகழும். அதே போல் தீர்த்தத் திருவிழாவின் பின்னரும் பைரவர் வழிபாடு சங்காபிஷேகம் என்பனவும் நிகழ்கின்றன. சதுர்த்தி, கார்த்திகை, பிரதோஷம் போன்ற விழாக்களில் ஒரு முறை மட்டும் அபிஷேகம், பூசை திருஉலா இடம்பெறும்.

ஆனால் பெருவிழாக்களில் காலை, மாலை இருமுறை தம்ப பூசை, வீதி வலம் வருதல், பலி யிடல், யாக பூசை என்பன நிகழும் பெருவிழாக் களில் சிறப்பாக இடம்பெறும். தம்ப பூசை, யாக பூசை, பலியிடல் என்பன நிகழந்தாலும் இன்றைய சைவ மக்கள் சுவாமி வீதிவலம் வருதலையே திருவிழா எனக்கருதுவதும் அதில் பங்கு கொண்டு வழிபடுதலும் வழக்கமாகி யுள்ளன.

பெருவிழாக்கள் பற்றி தெளிவான அறிவுக் குறைவும் இவ்விழாக்களில் முழுமையாக பங்கு பற்ற வேண்டிய நேரமின்மையும் விழாவின் எல்லா நிகழ்விலும் பலரும் பங்கு கொள்ளா மைக்கு காரணம் எனலாம்.

ஆனால், சைவாலயப் பெருவிழாக்களின் பெருமை பற்றியும் அது தொடர்பான நிகழ்வுகள் பற்றியும் விழா நிகழ்வுகளில் பங்கு கொண்டு வழிபடுதல் பற்றியும் நம் சமய சாஸ்திரங்களில் விளக்கமாகவும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன. இவற்றை அறிவதும் இவற்றில் பங்கு கொண்டு விழா நிகழ்வுகளால் அடையத்தக்க பெரும் பயன்கள் அடைவதும் நம் மக்களுக்கு மிக அவசியமான கடமையாகும்.

பிரபலமான பாடசாலை. அங்கு கற்பிக்கும் மதிப்பு வாய்ந்த ஆசிரியர் என்பன ஒரு மாண வனுக்கு வாய்தலும் அங்கு நடக்கும் வகுப்பு களில் தவறாது பங்குபற்றுதலும் கற்பிக்கும் பாடங்களை மீட்டலும் படித்து ஞாபகத்தில் இருத்துதலும் இல்லையாயின் அப்பாடசாலை

யில் கற்பதால் அடையத்தக்க பயனை அம் மாணவன் அடையமாட்டான். இதே போல் கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டவன் நல்ல வைத்தியசாலை, அனுபவம் மிக்க வைத்தியரை சந்தித்தலோடு நிற்காது உரிய வைத்தியத்தின் சகல பங்குகளுக்கும் தான் உடன்பட்டு செயற் பட்டாலே தக்க பயனை அடைய முடியும். அந்த வைத்தியசாலையில் சில நாள் தங்குதல், அந்த வைத்தியரின் ஆலோ சனையைக் கேட்டல் என்ற அளவில் பெரும் பயன் – பூரண சுகம் வராது. வாரக்கணக்கில், மாதக்கணக்கில் வைத்தியரின் நிபந்தனைப்படி மருந்து, உணவு என்பவற்றை உட்கொண்டாலே திருப்திகரமான பயன் கிடைக்கும்.

இதேபோல் ஆலய விழாக்களுக்குப் பெரும் பொருளைச் செலவிடல், சுவாமி வீதி வலம் வரும் போது தரிசித்தல், வாய்ப்பு இருந்தால் விசேட மேளம் – விசேட சாத்துப்படி என அக்கறை கொள்ளலால் தெய்வ அனுக்கிரகம், பாவநீக்கம், மேலான வாழ்வு என்பன முழுமை யாக கிடைத்து விடாது.

ஆலயங்களில் பெருவிழாக்களைச் செய்யும் முறை, அவற்றில் பங்கு கொள்ளும் முறை, அந்த வழிபாடுகளால் கிடைக்கும் பயன் என்பன பற்றி நம் சமய சாஸ்திரங்கள் மிக விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளன. இருபத்தெட்டு சிவாகமங்களில் கூறப்பட்ட பெருவிழாக்களைத் தொகுத்தும் சுருக்கியும் தெளிவுபடுத்தியும் அச்சுவேலி குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள் மகோற்சவ விளக்கம் என ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இதே போல வேறு புத்தகங் களும் இருக்கலாம். இவற்றைத் தேடி பொறுமை யுடன் படிப்பதும் படிப்பதில் சிறப்பானவற்றை அக்கறையுடன் பின்பற்றுவதும் அவசியமாகும். அப்படியின்றி மனம் போன படியும் முழுமை யின்றியும் செயற்படுவது அறிவுடமையாகாது. அறிவுடமையற்ற செயலை மூடச்செயல் என்பதும் தவறன்று.

புராணங்கள், இதிகாசங்களில் பலவிதமான யாகங்களைப் பற்றியும், அவற்றை செய்தலின் பயனைப்பற்றியும் அவற்றைச் செய்து பயனடை ந்த ராசாக்கள், முனிவர்கள், தேவர்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அத்தகைய யாகங்கள் வேதங் களை அடிப்படையாகக் கொண்டவை. வேதங் களை அடிப்படையாகக் கொண்ட யாகங்களில் ஆகமங்களின் தொடர்பும் ஆலயங்களின் தொடர்பும் கலந்த நிலையிலேயே ஆலய விழாக்கள் அமைந்திருக்கின்றன. அப்படியான ஆலய விழாக்களில் வருடம் ஒரு முறை பத்து நாட்களுக்குக் குறையாமலும் திருவிழாவுக்கு முன் நிகழும் கிராமசாந்தி, வாஸ்து சாந்தி போன்றவைகளும் கொடித்தம்ப பூசை, யாக சாலைப் பூசை, பலியிடல், சூர்னோற்சவம், யாக கும்பாபிஷேகம் முதலிய செயற்பாடுகளும் திரவியக்குறைவின்றியும் மந்திரக் குறைவின்றி யும் ஆசாரக்குறைவின்றியும் நேரம் தவறாமையு மாகிய அங்கங்களுடன் நிகழும் போது வேதங் கள் விதித்த யாகங்களின் மகிமையும் பயனுடை யனவாகும். இவ்வுண்மைகளை மகோற்சவ விளக்கம் என்னும் அச்சுவேலிக் குருக்களின் நூல் தெளிவாக்குகிறது.

வெங்காயம் முதலிய சில நாட்பயிர், கத்தரி முதலிய சில வாரப் பயிர், உழுந்து, பயறு, நெல் முதலிய சில மாதப்பயிர், மா, பலா, தென்னை முதலிய சில வருடப் பயிர் என்பன அவை பயன ளிக்கும் கால அளவுக்கு ஏற்ப பயன்களிலும் வித்தியாசமாயிருக்கும்.

இதே போல் பெரும் பயிரினைச் சிறு முயற்சி யால் அடைய இயலாது என்ற தெளிவுடன் நாம் செயற்பட வேண்டும். மா, பலா விடயத்தில் ஆரம்ப முயற்சி பெரிதாயும் நீண்ட காலம் தேவைப்படுவ தற்கு ஏற்ற பயன் சிறப்பாகவும், நீண்ட காலத்திற் கும் நீடிக்கும் தன்மை போன்று மகோற்சவங்

களுக்கும் சிறப்பு உண்டு.

மகோற்சவ விளக்கத்தில் உள்ள ஒரு சில வரிகளை உதாரணமாகக் காட்டி இக்கட்டு ரையை நிறைவு செய்கிறேன். இந்த உதாரணங் களை காரணமாகக் கொண்டு அப்புத்தகத்தைத் தேடிப்பயின்று சகலரும் பயனடைய வேண்டும்.

"குருலிங்க சங்கம பக்தி உள்ளவர்களும் ஆகம உணர்ச்சி உள்ளவர்களுமாகிய பெரி யோர்களே, ஆலய தருமகர்த்தாக்களாக இருத் தல் வேண்டும். அவர்கள் அங்கே நடைபெறும் கிரிகைகளையும் முறைகளையும் முறைப்படி செய்யாவிடில் அதனால் வரும் கேட்டையும் அறிந்து பழிபாவங்களுக்கு பயந்து செய்விப்பார் கள். உற்சவம் என்பது உத்தமயாகம் எனவும் மேலான பஞ்சகிருத்தியம் எனவும் சிருஷ்டி மார்க்கத்தை குறிப்பது எனவும் போக மோட் ஷங்களை குறிப்பது எனவும் பொருள்படும். "விதிப்படி உற்சவம் செய்பவர்களுக்கும் செய் விரும்புபவர்களுக்கும் பாவம் நீங்கும். ஞானமும் உண்டாகும். எல்லா மங்களங்களும் உண்டாகும்.

"சர்வதோஷ நிவர்த்தியின் பொருட்டும் சர்வ லோக சுகத்தின் பொருட்டும் சர்வ தேவப் பிரிய மாகவும் சர்வப்பிராணிகளின் சுகத்தின் பொருட் டும் எல்லாரையும் இரட்சித்தற் பொருட்டும் உற்சவத்தை செய்க"

"ஆசாரியரும், கோயிலதிகாரிகளும், ஊரவர் களும் உற்சவ புண்ணிய காலங்களிலே ஒரு காலம் போசனம் செய்து விதிப்படி விரத மனுட்டித்தல் கடனாகும்".

"ஒவ்வொரு தினங்களிலும் காலசந்தி உற்சவத்தில் செய்யும் ஓமப்பலி முதலிய வைகளைக் காலை பத்து நாழிகைக் ள்ளாகவும் சாயங்காலம் ஓமப்பலி முதலியவற்றை இரவு பத்து நாளிகைக்குள்ளாகவும் செய்தல் உத்தமம். காலாதீதத்தில் செய்யும் கிரியைகள் பயன்படா..."

**பலிக்கிரமம்;** - முதலில் கொடியும் இரண்டாவதாக சங்கு பேரிதாளம் எனும் வாத்தியங்களும் மூன்றாவதாக ஆசாரியரும் அதன் பின் அஸ்திர தேவரும் ஐந்தாவதாக பலிபீடமும் செல்லுதல் வேண்டும்.

உற்சவமானது சாம்பவி தீட்சை என்று சொல் லப்படும். சிவபெருமான் தீட்சையின் மண்டலம், கும்பம், அக்கினி, ஆசாரியர், சீடர் என்னும் ஐந்து இடங்களில் நின்று அருள் செய்வார். சாம்பவி தீட்சையாகிய மகோற்சவத்திலும் அவ்விதமே ஐந்து இடங்களில் நின்று அருள் செய்வர். எவ்வா றெனில் பலிநாயகர் மண்டலமாம் அஸ்திர மூர்த்தி கும்பமாம் சோமஸ்கந்ததேசுரர் சிவாக் கினியாம் விரதமுள்ளவராக நியமிக்கப்பட்ட உற்சவாசாரியரே குருவாம். தீட்சை பெற்றவரும் பெறாதவறும் பக்தர்களும் சமயாசாரலோகம் உள்ளவரும் தூர்த்தரும் பிறரும் ஆன எல்லா ஆன்மாக்களும் சீடராவர் "இதனால் உற்சவ மானது சகலருக்கும் தீட்சாகாலம் என்பது நன்கு தெளியப்படும்".

"சிவபெருமானது திருவிழாக்களில் வலம் வருவோர் ஒவ்வோரடிக்கு ஒவ்வோர் அசுவ மேதையாகப் பலன் எய்துவார். குருவிற்கு பின்னே செல்கின்றோருக்கும் பலன் அஃதேயாம் துவசாரோகண காலத்தில் துவசபடத்தின்பின் வலம் வருவோர் பொன்மகவு பௌதிரர் முதலிய ஐஸ்வரியங்களை அனுபவிப்பர். திருவிழாவில் நாடோறும்பிரதட்சணம் வருவோர் உருத்திரராவர்"

"மகாப்பிரதிஷ்டாகால உற்சவகாலங்களில் கிராமசாந்தி செய்யாவிடின் இலக்குமி வாசம் உண்டாகாது என்று உத்தரகாரணாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது." "தொடங்கிய கிரியையும் மந்திரமும் இடமும் சுத்தியாதற் பொருட்டு வாஸ்து சாந்தி செய்க"

# என்னை எனக்குள் தேடினேன் அங்கு உன்னையே காண்கின்றேன் இறைவா!

**மலர் சின்னையா**
முன்னாள் அதிபர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

இந்து மதத்தில் இறைவன் எங்கும் எதிலும் இருக்கிறார் எனப்படுகிறது. இதன் உண்மையை எம்மை இயக்கி நிற்கும் (உயிர்களின்) இயக்கி களை உற்று நோக்குவதன் மூலம் அறியலாம். தன்னைத்தான் உற்று நோக்கி அவ்வுண்மையை உறுதிப்படுத்த முடியும். எம்மை இயக்கும் இயக்க சக்திகளை இரு பெரும் இயக்கிகளாக நோக்க லாம்.

- உயிர்களை இயக்கி நிற்கும் உள் உறுப்புக் களின் இயக்கம்
- மனித மன இயக்கிகளும் அதன் செயற்பாடு களும்.

முதலில் எமது உடம்புக்குள் இருக்கின்ற சுவாசம், இதயம், நுரையீரல், இரைப்பை, பெருங்குடல், சிறுகுடல், சிறுநீரகம், சுரப்பிகள், நரம்புகள், இரத்த ஓட்டம், மூளை, அதிரீனச் சுரப்பி, கண், காது, மூக்கு, வாய், இவற்றின் நரம்பு மண்டல செயற்பாடுகள், அதன் வழி ஐம்பொறிகளின் உணர்வு தூண்டல்கள், நரம்பு வழியின் செயற்பாடுகள், இரத்தப் பாய்ச்சல்கள், உண்கின்ற உணவு உடலுக்கான போசாக்காக மாற்றமடைதல் போன்ற, உடலுக்குள் அமைக்கப் பட்ட உறுப்புக்களில் இயங்கி இயல்பான செயற் பாடுகளை உற்று நோக்கிப் பார்க்கின்ற போது அவற்றை இயக்கி நிற்கின்ற இயக்குனர் எமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி என்பதும் அது எமக்குள் இருக்கிறது என்பதும் புலனாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி வழியாக உணர்கின்ற அத்தனையும் மூளையில் சென்று நரம்பு வழியாக செய்தி வடிவில் உடலுக்குத் தகவல் வழங்கி மனதையும் அதன் வழி உடலையும் இயக்கி நிற்கின்ற அற்புத செயல் வியப்பிற்குரி யதே. இத்தகைய பல்வேறு இயக்கிகளை உடலுக்குள் பொதித்து மனிதனையும் ஏனைய உயிரினங்களையும் நடமாடும் ஒரு உயிரியாக இயக்கிடும் செயல் அற்புதமானது. அத்தனை இயக்கிகளையும் உடலுக்குள் பொதித்து விட்டு அவற்றை பாதுகாக்கவும் அவற்றின் கட்டமைப்புக் குலையாது இருக்க எலும்பையும் சதையையும் அணையாக வைத்து அவற்றையும் பாதுகாக்க தோல் என்கின்ற பாதுகாப்பு உறையையும் இட்டு ள்ள தொழில் நுட்பச் செயல் வியப்புக்குரியதே.

அனைத்து உடல் இயக்கிகளைத் தொடர்ந்து இயக்கிக் கொள்ளவும், அவை வளர்ச்சி அடைய வும் தேய்மானங்களை நிவர்த்திக்கவும் அவை உயிர்ப்புடன் இருக்கவும் உணவு உண் கின்ற ஒரு செயற்பாட்டை உயிர்களின் விருப்புக்குரிய செயலாக்கியுள்ளது. அதற்காக அறுசுவை உணர்வையும் நாவிற்கு வழங்கி இருக்கின்றது. உணவை மென்மையாக்கி உடலுக்குள் அனுப்ப நாவிற்குள் உமிழ்நீர் சுரப்பிகளையும் வாயினுள் பற்களையும் அமைத்துள்ளார். நாவும் பற்களும் சேர்ந்து உணவை உண்டு களிப்பதற்கு மட்டு மன்றி தெளிவுறப்பேசவும் பாடவும் ஒலி எழுப்ப வும் உறுதுணையாக்கப்பட்டுள்ளது.

ஆணில் விந்தையும் பெண்ணின் கர்ப்பப் பைக்குள் முட்டையையும் வைத்து அவர்களுக் குள் இன்பகரமான காந்த ஈர்ப்பின் மூலம் ஒன்றிணைந்து அவர்கள் குழந்தையை உரு வாக்க வழிவகுத்தமை ஆச்சரியமே. அணுவான கரு பெண்ணின் கருப்பைக்குள் சென்று மனித உள் உறுப்புக்கள் அனைத்தையும் பெற்று அவ்வுயிரின் அம்சம் அனைத்தினையும் பெற்று பூமிக்குள் உதிக்கும் செயல் அற்புதமானது. தாயின் கருவறைக்குள் இரண்டு சாண் வரையில் உருவம் பெற்ற குழந்தை ஐந்து அடிக்கு மேல் உயரம் கொண்டு நிற்கும் செயல் அற்புதமானதே.

மனிதனின் சிரிப்பு மனிதனுக்கு வழங்கப்பட்ட மாபெரும் பொக்கிஷம். சிரிப்பவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடியது. உள்ளம் மலர, முகம் பூரிக்க, பற்கள் பளிச்சிட, கண்கள் பிரகாசிக்க, குரல் ஒலிக்க, உடல் குலுங்க, மனம் நிறைய, உடலின் அங் கங்கள் அனைத்தையும் இயக்கிடும் சிரிப்பு ஏனைய உயிரினங்களுக்கு இல்லாத இன்பகர மான வாழ்க்கைக் கோலம், ஆன்மாவின் ஆனந்த நிலையா? உள்ளிருக்கும் இறைவனின் மகிழ் வின் பூரிப்பா? மனதின் தென்றலா? இச் சிரிப்பு.

உலகில் பிறந்த அத்தனை உயிர்களின் முகங் கள், அங்கங்கள், குரல்கள், பார்வைகள், செயற் பாடுகள், சிந்தனைகள் அனைத்துமே அத்தனைக் கும் வேறுபட்டிருக்கின்றது. ஒருவரைப்போல் இன்னொருவரின்றி அனைவருமே தமக்குத் தமக்கு தனித்துவம் மிக்கவர்களாகக் காணப்படு கின்றார்கள்.

இன்பத்தின் பிரதிபலிப்புக்கள், துன்பத்தின் பிரதிபலிப்புக்கள், தீய செயற்பாடுகளின் வடிவமைப்புக்கள், பக்தியின் ஆர்வம், முரட்டுச் சுபாவங்கள், வார்த்தைப்பரிமாணங்கள், தன்னை அறியமுடியாநிலை, கொலை வெறித்தன்மை கள், ஆசைகளின் நல்ல – தீய நிலைகள், ஊக்கல் களின் செயற்பாடுகள், கல்வியின் உயர்வு, அறி வின் பரிணமிப்புகள் போன்ற பல்வேறு அம்சங் களின் நிலைகளின் செயற்பாடுகள் அவரவர் கிடைப்பு நிலைக்கேற்ப ஏற்றத்தாழ்வு கொண் டவை. அவரவர் மனப்பக்குவ நிலைக்கேற்ப செயற்படும் தன்மைக்குக் காரணம் அவரவர் முற்பிறப்பு நடத்தைகளின் சேமிப்பா? அதுதான் விதியா? அன்றி உலக இயக்கத்தின் எதிர் நீச்சலுக்கான அளவு மாற்றமா?

உடலின் பல்வேறு உடற்கூற்று அம்சங்களை நாம் நோக்குகின்றபோது குறிப்பாக அதிரீனச் சுரப்பி ஆபத்து வேளையில் எம்மைத் தப்பிக்க வைக்கின்ற செயல், எம்மை அறியாத எமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் செயற்பாடு என்பதை அறிய முடியும் மனித மன இயக்கிகளும்(மூளை) அதன் செயற்பாடுகளும் இறைவனால் படைக் கப்பட்ட உயிர்களிற்கு கொடுக்கப்பட்ட அற்புதம். அது வியக்கத்தக்க வல்லமையின் பொக்கிஷம் எனலாம். பகுத்துணர்ந்து கேள்விகளை உரு வாக்கி மொழியினைக் கண்டுபிடித்து மூளை யைத் தீட்டி விஞ்ஞானத் தொழில் நுட்பத்தில் நுழைந்து இன்றைய உலகின் வியத்தகு மனித சிருஷ்டிப்புக்களுக்கு வித்திட வைத்தது மனித மூளையே. இன்று மனிதனால் படைக்கப்பட்ட கணணி, மனித மூளையின் ஞாபகம், புத்திக் கூர்மை, தூரநோக்குச் சிந்தனை, கற்பனா சிந்தனை போன்றவற்றின் சேமிப்பு பெட்டகமே. அத்துடன் கண்ணின் செயற்பாட்டை உற்று நோக்கி புகைப்பட கருவியையும் பறவையின் பறக்கும் செயல் வடிவைப்பார்த்து விமானத்தை யும், மீனின் நீந்தும் உடல் அமைப்பைப் பார்த்து கப்பலையும் செவிப்பறை ஒலி வாங்கிச் சௌ வையும், எதிரொலிச் செயற்பாட்டையும் கேட்டு வானொலியையும் படைத்தான் மனிதன். இன்னும் பற்பல இயந்திர இயக்கச் செயற்பாட் டிற்கும் உயிர்களின் உடல் பகுதிகளே வழிகாட்டி யது. இத்தகைய மனிதனின் படைப்பாற்றல் சக்தியை உள்நின்று அவனை அறியாது

வழிகாட்டி நிற்பது தனக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியே என்பதை ஒவ்வொரு படைப்பாளியும் உள்ளுணர்வான்.

மனிதனின் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியோடு வான சாஸ்திர அறிவும் முக்கிய இடத்தை வகிக்கிறது. கோள்களின் நகர்வும் (கிர கங்கள்) அவற்றின் இடப்பெயர்ச்சியும் மனித பிறப்பு நியதிகளோடு செல்வாக்குச் செலுத்தி அவனது வாழ்க்கையை அமைக்கும் (நல்லது, கெட்டது) சூக்குமத்தைக் கண்டறியவும், அவனது அறிவு வித்திட்டுள்ளது. அத்துடன் எத்தனையோ தத்துவங்களையும் எத்தனையோ விதிகளையும் வகுத்து எதிர்கால சந்ததியினருக்கு கடத்திச் செல்லும் தகவல் பெட்டகங்களாக உருவாக்கி நிற்பதுவும் இறையாற்றல் பெற்ற மனிதனே.

வைத்தியத் துறை கண்டுபிடிப்புக்கள் வைத்தி யரையும் கண்டுபிடிப்பாளர்களையும் இரு கரம் கூப்பி வணக்கம் செலுத்த வைத்துள் ளது. எக்ஸ்ரே கருவிகள், ஸ்கானிங் கருவிகள், E.C.G போன்ற நவீன கருவிகளும் நோய்க்கேற்ற சத்திர சிகிச்சை முறைகளும் அந்நோய்களுக் குரிய மருந்துகளின் கண்டு பிடிப்புக்களும் அதற் கேற்ற மருத்துவத்துறை ஆய்வுகளும் கண்டு பிடிப்புக்களும் மனிதர்களை தெய்வீக நிலைக்கு உயர்த்தியுள்ளது.

மூளையுடன் இணைந்த மனத்தின் செயற் பாடு மிகவும் உன்னதமானது ஒவ்வொரு மனித உள்ளத்திலும் அன்பு, பக்தி, பாசம், இரக்கம், காதல், கருணை மற்றும் கோபம், ஆத்திரம், பொறாமை, எரிச்சல், வெறுப்பு போன்ற பல்வேறு குணப்பண்புகள் அவனது நடத்தையை உருவாக்குகின்றன. இத்தகைய நிலைக்கு அவர்களுடைய ஐம்பொறி இயக்கங்களே காரணமாக அமைகின்றது. மனித மனத்தை **இட், அகம், அதியகம்** என்ற நிலைகளில் வைத்து நோக்கப்படுகிறது. இட் என்பது வெளி மனதின் துரித செயற்பாட்டில் இயங்கும். எதையும் செய்வேன். எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்டது. அகம் என்பது வெளிமனதின் எண்ணங்களை அதியத்திற்கு (ஆழ்மனதிற்கு) கடத்தும். ஆழ்மனமோ வெளி மனதின் அதீத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி நெறியாழ்கை செய்து புத்திமதி கூறும். அகம் அதாவது உள்மனம் அதியகத்தின் புத்திமதிகளை வெளிமனதிற்குப் புகட்டி வெளி மனதிற்கு சமரசம் செய்யும். இந்நிலையில் வெளி மனம் சமரசத்தை ஏற்று நடப்பின் அவருக்கு நன்மை கள் கிட்டும். சமரசத்தை ஏற்காவிடின் அவரது நடத்தைகள் அவருக்குப் பாதகமான விளைவு களை ஏற்படுத்தலாம்.

இந்த இட், அகம், அதியகம் என்பது மனிதனுக் குள் இருக்கின்ற பதி, பசு, பாசம் என்பவற்றின் செயற்பாடா? இட் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற செயற்பாட்டிற்குள் சிக்கி நிற்பதா? அகத்தின் செயற்பாடு பசு என்னும் ஆன்மாவின் செயற்பாடா? ஆன்மா வெளிமனத்தோடு சேர்வதா? அன்றி ஆழ்மனதில் இருக்கின்ற பசுவோடு சேர்வதா? என்று தீர்மானம் எடுக்க முடியாது திண்டாடி நிற்கும். ஆழ்மனம் பசு (ஆன்மா) தன் நிலை உணர்ந்து தன்னோடு இணைவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கும். ஆன்மா இறைவன்பால் நாட்டம் கொண்டு திரும்பு மேயானால் பாசத்தில் இருந்து விடுதலை பெறும். அவ்வாறின்றி ஆன்மா பாசத்தின் வழி ஈர்க்கப்பட்டால் மனம் தீயவை பால் ஈர்க்கப் படும். மனம் நிம்மதி அடையாது மோட்சத்திற்கு வழி மறைக்கப்பட்டு விடும். இத்தகைய மனிதனு டைய செயற்பாடானது இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் புரியும் இடமாக நோக்க முடியும்.

மனதிற்குள் இருக்கும் காந்த ஈரப்பு வியப்பிற் குரியது. காதல், அன்பு, பாசம், பக்தி, கடமை

என்கின்ற உணர்வலைகளின் ஈர்ப்பு மனிதனை ஆட்டிப்படைக்கும் இன்பமும், துன்பமும் கொண்ட ஈர்ப்பாகும். அதில் காதல் என்பது அதீத சக்தி மிக்க ஈர்ப்பாகும். ஐம்பொறிகளும் இணைந்து காதலுக்கு உரம் ஊட்டுகிறது. ஆன்மா இறைவனை அடைகின்ற ஈர்ப்பும் இத்தகையதே. ஆன்மாவைப் பெண்ணாகவும், இறைவனை ஆணாகவும் கொண்டு காதல் வலுப்பெற்று நிற்கின்றது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இறைவன் இருக்குகிறான் என்ற நியதியில் ஆன்மாக்கள் ஒருவர் மீது ஒருவர் கொள்கின்ற காதல் ஈர்ப்பு தெய்வீகமானது. இந்த அற்புதமான ஈர்ப்பு மனதிற்குள் எப்படி உருவானது, எங்கிருந்து உருவானது என்பது அவரவருக்கே தெரியாத விசித்திரம்.

மனிதன் இறைவன் மீது கொள்ளும் காந்த ஈர்ப்பு பக்தி எனப்படுகிறது. கண்ணப்ப நாயனார் பக்தி என்ற ஈர்ப்பில் இறைவன் மீது கொண்ட காதல் தன் கண்ணையே சிவனுக்கு அர்ப்பணிக்கச் செய்தது. நட்பு என்ற ரீதியில் வழிபட்ட சுந்தரருக்கு இறைவன் பரவையாரிடம் தூது சென்றதும், ஆற்றில் போட்ட பொன்னைக் குளத்தில் சேர்ப்பித்த வரலாறும் இறைவன் மீது சுந்தரர் கொண்ட நட்பின் ஈர்ப்பிற்கு இறைவனே வசப்பட்டமை சான்று பகரும்.

காந்த ஈர்ப்பின் மறுவடிவங்களாக தாய் தந்தையர் மீதுள்ள பாசம், பிள்ளை மீது கொள்ளும் பாசம், நட்பின் மீது கொண்ட பாசம், நல்ல ஆசான் மீது கொண்ட பாசம், தலைவன் மீது கொண்ட பாசம், கணவன் மனைவியர்களுக்கு இடையிலான பாசம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பாசத்திற்குரிய ஈர்ப்பு மனிதர்களுக்குள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றது என்பது புரியாத புதிர். இங்கு இந்தப் பாசத்தின் பிணைப்பு, துயரத்தை ஏற்படுத்தும் போது வேதனையையும், மகிழ்ச்சியை ஏற்படுத்தும் போது மனத்திற்குக் குதூகலத்தையும் ஏற்படுத்துகிறது. இத்தகைய மனத்தின் செயற்பாடு எப்படி எம்மை இயக்கி நிற்கிறது என்பதுவும், அதை இயக்கி நிற்பவர் யார் என்பதுவும் எம்மால் கண்டுபிடிக்க முடியாத ஒன்று. இந்தப் பாசப் பிணைப்பில் இணைக்கப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் உதவும்போதும் இன்ப துன்பங்களில் பங்கு கொள்கின்ற போதும் இவர்கள் எம்முன் தெய்வத்தின் தூதுவர்களாக தென்படுகின்றனர்.

மனிதனின் உடல் உள வளர்ச்சியில் பருவங்களை ஏற்படுத்தி பருவங்களுக்கேற்ப ஆசைகளை விரிவுபடுத்தி முதுமையில் உடல் உள தளர்ச்சியை ஏற்படுத்தி உலகப பற்றை நீக்கி இவ்வுலகை விட்டுப் பிரியும் மனவெழுச்சியை விரும்பி ஏற்கும் நிலைக்கு வித்திட்டு நகர்த்திய செயல் எமக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியின் விசித்திரச் செயற்பாடே.

மனிதன் கண்களால் பார்த்து, காதால் கேட்டு, மனதால் நினைத்து, நாவால் சுவைத்து, மூக்கால் நுகர்ந்தும் தமக்குள் இரசித்து இன்பமடையும் அந்த இரசனையை மனிதனின் ஐம்பொறிகளுக்குள்ளும் ஊட்டிய செயல் வியப்புடையது.

நவீன கண்டுபிடிப்புகளினால் உலகையே தன் கையிற்குள் வைத்திருக்கும் மனிதன் தன் உடலின் தேய்மானங்களை நிவர்த்தி செய்து இடை மரணங்களைத் தடுத்து ஆயுளைக் கூட்டி நிற்கும். மனிதன்; மரணம் என்கின்ற ஒன்றை மட்டும் தடுத்து நிறுத்த முடியாதவனாக இருப்பதற்கு அவனை நிலைப்படுத்தி நிற்பதுவும் அவனுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியாகும்.

உடலுக்கு ஊட்டச்சத்து கொடுப்பது போல் காற்றும் கொடுக்க வேண்டியுள்ளது மூக்கு வழி சுவாசம் காற்றை உள்வாங்கி வெளிவிடுகின்றது. காற்று எம்மைச் சூழ்ந்திருக்கின்றது. அக்காற்று எமது சுவாசத்திற்குள் நிரந்தரமாக உட்சென்று வெளிவரும் வரையே உடலுக்குள் உயிர்

தங்கி நிற்கின்றது. இச்செயற்பாடு நின்று விட்டால் உடல் செயல் இழந்து விடுகிறது. அதனால் இந்த உடலை இயக்குகின்ற இயக்குனர் காற்றா? எங்கும் எதிலும் இருக்கின்ற இறைவன் தோன்றாத் துணையாக காற்றுவடிவமாகி எமக்குள்ளும் எம்மைச் சூழவும் இருக்கின்றான் என்பது புலனாகின்றது. இறைவன் அருவம் உருவம் அருவுருவ வடிவினன் எனப்படுகிறது. காற்றை நாம் உணர்கின்றோம். அது அசைவதைக் கொண்டு தோன்றாத செயலைப் பார்க்கின்றோம். அது எங்கும் நிறைந்திருப்பதை ஏற்றுக் கொள்கிறோம். உடல் உறுப்புக்களோடு இரண்டறக் கலந்து உடலை இயக்கி உயிராக எமக்குள் நிற்கின்ற காற்று, இறைவன் என்கின்ற உண்மை நாம் எம்மை எமக்குள் தேடுகின்ற போது புலப்பட்டு நிற்கும்.

இந்த உண்மையை பூசலார் தம் உடலுக்குள் ஆலயத்தை அமைத்து வழிபட்ட செயல் சான்று பகரும்.

## நல்லைக்குமரன் மலரை ஆய்வு செய்தோர்

| | | |
|---|---|---|
| 1. | நல்லைக்குமரன் மலர் **1993** | திரு.கானமயில்நாதன் |
| 2. | நல்லைக்குமரன் மலர் **1994** | பேராசிரியர் ப.கோபாகிருஷ்ணஐயர் |
| 3. | நல்லைக்குமரன் மலர் **1995** | பேராசிரியர் இ. குமாரவடிவேல் |
| 4. | நல்லைக்குமரன் மலர் **1996** | சிவஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக்குருக்கள் |
| 5. | நல்லைக்குமரன் மலர் **1997** | கலாநிதி எஸ்.சிவலிங்கராசா |
| 6. | நல்லைக்குமரன் மலர் **1998** | திரு.கோ.சி.வேலாயுதம் |
| 7. | நல்லைக்குமரன் மலர் **1999** | பேராசிரியர் அ.சண்முகதாஸ் |
| 8. | நல்லைக்குமரன் மலர் **2000** | கலாநிதி மா.வேதநாதன் |
| 9. | நல்லைக்குமரன் மலர் **2001** | திருமதி நாச்சியார் செல்வநாயகம் |
| 10. | நல்லைக்குமரன் மலர் **2002** | கலாநிதி கலைவாணி இராமநாதன் |
| 11. | நல்லைக்குமரன் மலர் **2003** | கலாநிதி செ.திருநாவுக்கரசு |
| 12. | நல்லைக்குமரன் மலர் **2004** | திரு.க.சிவராமலிங்கம் |
| 13. | நல்லைக்குமரன் மலர் **2005** | பேராசிரியர் அ.சண்முகதாஸ்<br>திரு.ஈ.குமரன் |
| 14. | நல்லைக்குமரன் மலர் **2006** | ஆய்வு செய்யப்படவில்லை |
| 15. | நல்லைக்குமரன் மலர் **2007** | பேராசிரியர் எஸ்.இரகுநாதன் |
| 16. | நல்லைக்குமரன் மலர் **2008** | திரு.சி.சிவசரவணபவன் (சிற்பி) |
| 17. | நல்லைக்குமரன் மலர் **2009** | பேராசிரியர் என்.ஞானக்குமரன் |
| 18. | நல்லைக்குமரன் மலர் **2010** | பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் |
| 19. | நல்லைக்குமரன் மலர் **2011** | கலாநிதி த.கலாமணி |
| 20. | நல்லைக்குமரன் மலர் **2012** | பேராசிரியர் கி.விசாகரூபன் |
| 21. | நல்லைக்குமரன் மலர் **2013** | கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் |

# சும்மா இரு சொல்லற!

**சைவப்புலவர் செ.பரமநாதன்**
**தாவடி.**

உலகிலே வாழுகின்ற மக்களனைவரும் இன, மொழி, சமயங்களில் மாற்றமிருப்பது போல ஒவ்வொரு மனிதனுடைய மனத்தில் எழுகின்ற எண்ணங்களும் மாறுபாடு உடையதாக இருக் கின்றது. குணங்களின் தன்மைகளை வரைய றுத்து, நல்லவர்களையும், தீயவர்களையும் தெரிந்து கொள்கின்றோம்.

ஒருவன் அணிந்துள்ள சட்டையைப் போல் மற்றவன் அணிவதில்லை. ஒருவனுக்குப் பச்சை நிறம் பிடிக்கும்; மற்றவனுக்கு வெள்ளை நிறம் பிடிக்கும். நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் தூண்டு கோலாக அமைவது நம் உள்மனத்தின் வெளிப்பாடேயாகும்.

பல சிந்தனைகளிலும், செயல்களிலும் மனம் குரங்குபோல் தாவிக் கொண்டிருக்கிறது. சந்தர்ப்பங்களில் தீய காரியங்களிலும் ஈடுபடத் தயங்குவதில்லை. தனக்கு அவன் மூலம் காரியம் ஆக வேண்டுமென்றால் மனம், பொய் சொல்லத் தூண்டிவிடுகிறது. கல்வி கேள்விகளில் சிறந்தவர் ஆயினும் மனம் கட்டுப்பாடில்லாமல் வாழ்வைச் சிதைத்துக் கொண்டவர் பலர்.

எந்தப் பொருளைப் போட்டாலும் ஏற்றுக் கொண்டு தன் பசி அடங்காமல் இன்னும் கொழுந்து விட்டு எரியும் தீயைப் போன்று மனமும் திருப்தி அடையாமல் மேலும், மேலும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

மனத்தை தன்வசப்படுத்திக் கொள்பவனே யோகி. மன அடக்கம் இல்லாதவனுடைய வாழ்க் கையானது அட்டவணை இல்லாத பாடத்திட்ட மாகும். தறிகெட்டு ஓடும் மனக்குதிரையை அடக் கும் வழி அவனிடமே உள்ளது. இவ்வாறு எந்த விசயத்திலும் கட்டுப்பாடு இல்லாது ஈடுபடும் மனதை அடக்கியாள்வது எவ்வாறு எனப் பார்ப் போம்.

ஒரு செயலைத் துடிப்புடன் செய்யும்போது அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து காரிய மாற்றுகின்றோம். அந்தச் செயலில் ஏற்படும், இலாப நஷ்டங்களை அடைந்தவுடன் மனம் வேறொன்றிற்குத் தாவுகின்றது. அப்படி பல வேலைகளில் ஒருவன் ஈடுபட்டு அதிலே தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டாலும், ஒருவித அவசர நிலைக்குத் தள்ளப்படுகிறான். இந்த நிலையில் அவன் தன்னைச் சுற்றியுள்ளவர் களைக் கூட மறந்து விடுகிறான். அவனது குறிக் கோள், இலட்சியமெல்லாம் தான் முடிக்க வேண் டிய காரியத்திலேயே இருப்பதால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் தன்மையை இழந்து விடுகிறான். அவனுடைய செயல்களில் அந்த குறிக்கோளும் இலட்சியமும் அடையும் வரை அவசரமும், ஆவேசமும் அவன் மனதை ஆட் கொண்டு விடுகிறது.

அச்செயலில் வெற்றி பெற்றால் மிகுந்த சந்தோசத்தையும், தோல்வியுற்றால் மனவருத்த

மடைந்து, உடலும் உள்ளமும் தளர்ந்து விடுகிறான். வியாபாரம் ஓஹோ என்றிருக்கும் போது என்ன குதிச்சான்பாரு, இன்று வியாபாரம் குறைந்தவுடன் மனசு ரொம்ப தளர்ந்து போயிட்டான் பார், என்ற இந்தப் பேச்சுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமானால் வெற்றிகளையும் தோல்விகளையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் மனம் வேண்டும். இதனை ஆன்றோர்கள் இருவினையொப்பு என்றும் சுகதுக்க சமபாவம் என்றும் (பாவம், பாவனை அல்லது கருதுதல்) கூறுவார்கள். எல்லாத் துன்பங்களும் பொல்லாத உள்ளத்தின் மூலமே ஆரம்பிக்கின்றன. அதனால் மனதை செம்மையாக்கிக் கொள்வதே அதற்கு மருந்தாகும். இதனை வள்ளுவரும்

**"வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்"**

என்கின்றார். துவிச்சக்கரவண்டியில் வேகமாகச் செல்லும் போது சட்டென்று பிறேக் பிடிக்கிறோம். மனக்கட்டுப்பாடில்லாதவன் செய்யும் செயலானது, பிறேக்கில்லாத வண்டியைப் போன்றது. மனம் செம்மையுறுவதற்கு மனக் கட்டுப்பாடு அவசியமாகின்றது. அடுத்து மனதின் இயல்புகளையும், மனதை ஒருமுகப்படுத்துவது எவ்வாறு என்பதையும் பார்ப்போம்.

### மனத்தின் இயல்புகள்

ஒருவன் ஒரு பொருளின் மேல் பற்று வைக்கிறான். அது அந்தப் பொருளின் மீது உள்ள கவர்ச்சியோ, அழகோ எதுவானாலும் சரி, அந்தப் பொருளை அடைய வேண்டும் என தூண்டச் செய்தது எது? பொல்லாத அந்த மனந் தானே!

நல்ல சிந்தனையும் நல்ல செயல்களையும் நினைப்பதைவிட மனம் தீய செயல்களையும், குறுக்கு வழிகளையும் தான் அதிகமாக நினைக்கிறது. நாடுகிறது. பலர் நல்ல செயல்களைச் செய்யத் தலைப்படும் பொழுது மனதை சிதற விட்டதனாலும், குறுக்கு வழிகளைக் கையாள முற்பட்டதினாலும் தோல்வி கண்டிருக்கின்றனர்.

இதனால் பெரியோர்கள் நன்மை உன்னைத் தேடி வரும். தீமையை நீயாக வருவித்துக் கொள்ளாததே என்கிறார்கள். பலர் பலவிதமான கல்வியைக் கற்றிருந்தாலும் இந்த மனமானது நன்மையிலும் தீமையிலும் நம்மை இழுத்தடிக்கின்றது.

நம்மனமே நம்மை இனியவனாகவும், கொடியவனாகவும் மாற்றுகிறது. கருணை முகமும் யோகமுகமும் ஒன்றே! மனத்தின் நிலையில் தான் எத்தனை மாற்றங்கள். மனம் அடங்காததால் உடலும் கூடவே எத்தனை ஆட்டம் போடுகிறது.

சிலரிடம் எந்தக் காரணத்தைக் கொண்டும் இரக்கத்தை எதிர்பார்க்க முடியாது. கல்லைக் கூட கரைச்சிடலாம்! அவன் மனதை மட்டும் கரைக்கவே முடியாது. கல்லென்ன இரும்பைக்கூட உருகச் செய்யலாம். ஆனால் மனிதனுடைய உள்ளத்தை உருகச் செய்ய முடியாது" என்று தாயுமானவரும் கூறுகின்றார்.

**"கல்லேனும் ஐயவொரு காலத்தி லுருகவென்**
**கல் நெஞ்சம் உருக இலையே."**

இவ்வாறு கல்லான எம்மனதை, தறிகெட்டு ஓடும் உள்ளத்தை தீமையையே அதிகம் விரும்பும் பொல்லாத மனதை, வழிக்குக் கொண்டு வர மனக் கட்டுப்பாட்டுடன் மனதை ஒரு முகப்படுத்தும் நிலைக்குக் கொண்டு வரல் வேண்டும்.

### மனதை ஒரு முகப்படுத்துதல்

தறிகெட்டு ஓடும் மனமானது மதங் கொண்ட யானையைப் போன்றது. மதம் பிடித்த யானை, மரங்களையும் செடிகளையும் பிடுங்கி எறிகிறது. ஆனால், அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தியதும் அது சாந்தமாகி விடுகிறது. அதுபோல் அடக்கியாளாத மனம்

வீண் எண்ணங்களில் ஓடுகிறது. விவேகம் என்ற அங்குசத்தால் அது வீழ்த்தப்பட்ட போது அது சாந்தமாகி விடுகிறது! மனதை அடக்கியாள்வதே வைராக்கியம் என்பது!

கீழே கொட்டிய கடுகைப் பொறுக்கி எடுப்பது எவ்வளவு சிரமமோ, அதைப் போல் பலதிசை களிலும் ஓடும் மனதை ஒரு முகப்படுத்துவதும் எளிதன்று. ஆனால் வைராக்கியத்தால் அதைச் சாதித் திட முடியும். பகவத்கீதையில் அருச்சுனன் கண்ணனிடம் ஒரு சந்தேகத்தை எழுப்புகின்றான்.

1. அருச்சுனன்

கண்ணா! மனம் சஞ்சலமானதன்றோ! அதனை அடக்குவது காற்றைப் போல மிக்க அசாத்தியமாகக் கருதுகின்றேன்.

2. கண்ணன்

அருச்சுனா, மனம் சஞ்சலமானதுதான். அடக்கு வதும் அரிதுதான். ஆனால் பழக்கத்தினாலும் வைராக்கியத்தாலும் அடக்கப்படுகின்றது.

**மன நூறு கோடி துன்பநொடி மீதிலே நினைந்து...**

என்கிறார் அருணகிரிநாதர். மனதை ஒருமுகப்படுத்த வேண்டுமாயின் பலவாறாகச் சிந்தும் எண்ணங்களைக் கடிவாளமிட்டு அடக்க முயலுங்கள். வீணான சிந்தனைகளுக்கு இடந்தராதீர்கள். முதலிலே நேற்று உங்களால் நடந்த செயல்களை, வேலைகளை சீர்தூக்கிப் பாருங்கள். முன்பு செய்த அச்செயல்களில் தவறானவற்றை விலக்கிக் கொள்ள உறுதி எடுத்துக் கொண்டு, காரியமாற்றும் பொழுது நிதானப் போக்குடன் செயற்பட்டு வருகிறீர்களா? என உங்களுக்குள் சுயபரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

மனதின் மூலையில் பாரமான வேதனை யான சில நிகழ்ச்சிகள், சம்பவங்கள் பதிந்திருக் கும். அதனைச் சிறிது சிறிதாக களைந்தெறியுங் கள். மனம் எம் கட்டுக்குள் இருக்க வேண்டும். எந்தச் செயலுக்கும் எமது மனமே காரணம் என ஒவ்வொரு நாளும் நினைத்து செயலாற்றுங்கள். அவசரமும், ஆவேசமும் உள்ளவரை மனதை ஒரு முகப்படுத்த முடியாது என்பதையும், வேகம் கொள்ளும் இடத்தையும், விவேகத்தையும், எந்தெந்தச் சமயங்களில் பயன்படுத்த வேண்டும் என உங்கள் மனத்தில் வரையறுத்துக் கொள் ளுங்கள். சில நேரங்களில் எல்லா சிந்தனை ஓட் டங்களையும் நிறுத்தி, எதைப் பற்றியும் நினைக் காமல் இருக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள் ளுங்கள்.

எந்தச் செயலைச் செய்வதாயினும் சரி, தினமும் அரைமணி நேரமாவது அந்தச் செயல் களில் இருந்து உங்களை விடுத்துக் கொண்டு சும்மா இருந்து ... அமைதியாக இருந்து பாருங்கள், பேசாமல் இருந்த அந்த அரைமணி நேரத்தின் பின் நீங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் தெளிவை ஏற்படுத்தினால், உங்கள் வாழ்க்கையை மேலான பாதைக்குக் கொண்டு செல்லும். அவ்வாறு பேசாமல் – மனதை எங்கும் அலைய விடாமல் சும்மா இருக்கும் நிலைதான் அனுபூதி நிலை என்றார்கள்.

**பேசா வனுபூதி யையடியேன்**
**பெற்றுப் பிழைக்க பேரருளால்**

என்கிறார் தாயுமானவர்.

புலனும் மனமும் அடங்கி நிஷ்டையுடன் வாய்மூடி மௌனியாக, உலகப் பொருட்கள் அனைத்தும் மாயை என்ற நிலை வரவேண்டு மானால் 'சும்மா இரு சொல்லற'வென்று அருண கிரிநாதருக்கு முருகப் பெருமான் குரு உபதேச மாக உபதேசித்திருக்கிறார்.

**செம்மான் மகளைத் திருடுந் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்**
**'சும்மா விரு சொல்லற' வென்றலுமே**
**அம்மா பொருளொன் றுமறிந்திலனே!**

என்று இயம்புகின்றார் அருணகிரிநாதர் தன் அழகு தமிழ் கந்தரநுபூதியில்.

மாயையான பொருள்களின் மேல் உள்ள பற்றும் ஆசையும் நம்மை விட்டு நீங்குமானால் இந்த அனுபூதி நிலை நமக்கும் வாய்க்கும், எனவே நாமும் மனக்கடலை அடக்கி சும்மா விருக்கும் அந்த சுகாவனுபூதி நிலையை அடைந்து, வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வோமாக!

## யாழ் விருது பெற்றவர்கள்

1. வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன் — 2006
   (சைவசமய விவகாரக்குழுவின் ஆரம்பகர்த்தா)
2. உயர்திரு வே.பொ.பாலசிங்கம் — 2007
   (முன்னாள் ஆணையாளர், யா.மா.ச)
3. வைத்தியநிபுணர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி — 2008
   (யாழ் போதனா வைத்தியசாலை)
4. உயர்திரு க.கணேஸ் — 2009
   (முன்னாள் அரச அதிபர், யாழ் மாவட்டம்)
5. சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தேகாந்தநிலை) — 2010
6. வைத்தியநிபுணர் ந.ஜெயக்குமார் — 2011
   (புற்றுநோயியல் வைத்தியநிபுணர்,
   யாழ் போதனா வைத்தியசாலை)
7. நயினாதீவு நாகபூஷணி அம்மன் — 2012
   அமுதசுரபி அன்னதானசபை
8. அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் — 2013
   (அமைப்பாளர், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்)

# நான் ஒரு ஹிந்து என்பதில் ஏன் பெருமிதம் கொள்கிறேன்

**பி.என். சுதர்ஷன்**

ஆம். நானொரு ஹிந்து என்பதில் மிகப் பெரு மிதம் கொள்கிறேன். பெருமிதம் கொள்வதை விட, நான் ஒரு ஹிந்துவாக பிறந்ததில் மிகமிக, மிகுந்த அதிர்ஷ்டசாலி என நினைக்கிறேன்.

நான் ஏன் அவ்வாறு உணரக்கூடாது? கோடி ரூபாயை ஒரு அதிஷ்டப் போட்டியில் ஜெயித் தால் மக்கள் எப்படி பித்துப்பிடித்துப் போவார்கள் மகிழ்ச்சியில்? அவ்வாறிருக்கையில் இப்படி பலப்பல அதிர்ஷ்டப் பரிசுகளைக்காட்டிலும் மிகவுயர்ந்த ஒரு பரிசினைப்பெற்ற நான் ஏன் அவ்வாறு மகிழக்கூடாது? "அவன்" என்னை ஒரு ஹிந்துவாகப்பிறப்பித்து இருக்கையில் எனக்கு அவனிடம் கேட்பதற்கு வேறெதுவும் இல்லை. இந்த மாபெரும் நன்றிக்கடனுக்கு கைமாறு செய்வதே என்பணி. ஹிந்துத் தத்துவம் எனது மிகப்பெரும் பொக்கிஷமாகும்.

ஓ! என்னைத்தவறாக எண்ணிவிட வேண்டாம். எனக்கு பிறமதங்களின்பால் எந்தவொரு வெறுப்போ, காழ்ப்புணர்ச்சியோ இல்லை, இல்லவே இல்லை. மாறாக, நான் அவற்றை முழுமையாக மதிக்கிறேன். ஒரு தனிமனிதன் எந்தவொரு மதத்தினையும் இவ்வுலகிலோ பிறவுலகிலோ யார் என்ன சொல்வார்களோ, செய்வார்களோ என்றெல்லாம் கவலையுறாமல் பின்பற்றக்கூடிய சுதந்திரத்தை நான் மிகமதிக்கி றேன். மேலும் நான் மனிதனின் இத்தகைய சுதந்திரத்தைப் பேணுவதற்கு உறுதுணையாகவும் இருப்பேன். இது, இந்த ஹிந்து மதத்தின் தலை யாயக் கோட்பாடு தான். நான் ஒரு ஹிந்துவாக இருப்பதில் மிகப்பெருமிதம் கொள்ள வைக்கிறது.

அனைத்துத்தத்துவங்களும், மதக்கோட்பாடு களும் மிக நல்லவைகளை தன்னகத்தே கொண் டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. ஹிந்து மதம் உங்களுக்கு ஏன் மிகச்சிறந்ததாக இருக்கும் என்று நான் விவாதிக்க முற்படமாட்டேன். அது உங்கள் தனிப்பட்ட தேர்வு. நான் இங்கே சொல்ல விளைவதெல்லாம் எனக்கு ஹிந்துமதம் ஏன் ஒரு தனிப்பட்ட விருப்பமாயிருக்கிறது என்ப தைப்பற்றியே. ஹிந்து மதம் அல்லது சனாதன தர்மம் என்பது ஒரு வாழ்வியல் முறை, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனிப்பெருமை கொண்டது. நான் ஓர் ஆயிரம்முறை இறக்க நேரிட்டாலும், நான் மறுபடி ஒரு ஹிந்துவாகப் பிறப்பதையே மிகவும் விரும்புவேன். என்னை ஓராயிரம் முறை மதமாற்றம் செய்யும்படி சாவைக் காட்டிப் பய முறுத்தினாலும் ஹிந்து மதத்தை விடுவதை விட சாவதையே தேர்வு செய்வேன்.

முதலில் ஹிந்துத்தத்துவம் என்பது ஒரு மதமே அல்ல அது ஒரு தத்துவமும் அல்ல, கோட் பாடும் அல்ல. மதம், தத்துவம், கோட்பாடு இவைக ளெல்லாம் நேரம் சார்ந்த, குறிப்பிட்ட எல்லைக் குட்பட்டது. மாறாக, ஹிந்து தத்துவம் என்பது "மனிதனாக இருப்பதற்கானது" ஆம் மனிதனாய் இருப்பதை நியாயப்படுத்துவதே ஹிந்துத்வம். மனிதனாய் இருப்பது என்பதன் நேர்அர்த்தம் தான் ஹிந்துத்வம். நான் ஏன் ஒரு ஹிந்து என்று பெருமிதம் கொள்கிறேன் என்பதற்கு ஒரு சில காரணங்களை முன்வைக்கின்றேன்.

**காரணம் 1:** ஹிந்து தத்துவம் மிகப்பழமை யான ஞானம் ஹிந்துமதம் என்பது மனிதனுக்குத்

தெரிந்த மிகப்பழமையான ஞானக்கருவூலமாகும். ஒரு குறுகிய நோக்கில் மக்கள் இதை "ஹிந்து மதம் உலகின் மிகப் பழமையான மதம்" என் பார் கள். உண்மையில் மதம் என்ற பிரிவில் மக்களைப் பாகுபடுத்தும் வழக்கம் ஏற்படுவதற்கு முன்ன ரேயே ஹிந்துதத்துவம் இருந்து வந்திருக்கின்றது.

இம்மதத்தின் சாரம் மனித நாகரிகத்தின் அதி உன்னதமான, அற்புதமான வேதங்கள் நான்கில் உள்ளது. (வேதங்கள் எனப்படுபவை நான்கு இருக்கு, யஜுர், சாமம், அதர்வம் என்பன). வேத ங்கள் மட்டுமே அறிவியல் பூர்வமான முறையில் பாதுகாக்கப்பட்டுள்ளவை. எப்படியென்றால் ஒரு சிறிய வார்த்தையைக் கூட பிறழச் செய் வதோ, இடைச்செருகல் செய்வதோ, மாற்றியமைப் பதோ இயலாத ஒரு தனித்துவமான முறையில் பாதுகாக்கப்பட்டவை. மேலும், வரலாற்றில் எங்கும் இவ்வேதங்கள் இவ்வாறு உருவாக்கப் பட்டவை என்ற ஒரு ஆதார கோர்வை காணப்பட வில்லை. அதாவது இவற்றினை இன்னார் இன்ன முறைப்படி தொகுத்தார், ஏற்படுத்தினார் என்ற வகையில்லை. மேலும் இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட இம்மந்திரங்கள் இவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்கையில் அதற்கு முன்னமேயே இருந்து வந்திருக்கின்றது என்று புலனாகியது.

இவ் வேதங்கள் ஹிந்து மதத்தின் ஆணிவே ராகும். வேதங்கள் மட்டுமே எல்லா வித விவாதத் திற்கும் முன்வைக்கப்படும் ஆதார மாகும். ஒருவர் வேதங்களைப்படிக்கையில் மிகச் சிறந்த ஞானமும், அறிவுசார்கொள்கைகளும், உன்னத வாழ்வியல்களும் எந்த ஒரு நிலைப்பரப்பையும் சாராமல், வரலாற்றையும் ஒழுகாமல், கால நிர்ணயமின்றி, ஒரு வகை மக்களுக்காக என் றெல்லாம் இல்லாமல், அனைவருக்கும், எப் போதும், எந்நேரமும் சார்புடையதாகவும், பொருளுடையதாகவும் இருப்பதைக் காணலாம்.

இன்றைய நவீனயுகத்தில், புதுவித மதங்க ளின் தோற்றத்திற்குப் பிறகு, தங்களுடையது "மட்டுமே" சிறந்த மதம் என்று நிலைநாட்டுவதற் காக இந்நான்கு வேதங்களைக்குறை கூறவும், குதர்க்கம் கண்டுபிடிப்பதற்கும், தப்பர்த்தம் செய்து கொள்வதற்கும் முனைந்தால் ஒரு சாமானியனு க்கு எதுசரி, எதுதவறு, ஹிந்துத்வம், வேதங்கள் இவையெல்லாம் சரியானவை தானா? இல்லை இவைகளும் மற்றுமொரு பிதற்றலா? என்று பிரித்தாள முடியாமல் தவிக்க ஏதுவாகும். ஆனால் இவற்றிற்கும் வேதங்களே உதவிக்கு வருகிறது. அதுவே நான் ஹிந்துவாக இருப்பதில் மிகப்பெரு மிதம் கொள்ள வைக்கிறது.

**காரணம் 2:** - ஹிந்துத்வம் - ஒரு ஞானம் மிகுந்த வாழ்க்கை முறை வேதங்களே. ஒருவர் புத்தக ஞானத்தைக் கொண்டு "உண்மையைத்" தேடமுயதல் கூடாது என்று அறிவுறுத்துகிறது. அதுவே தங்கள் சார்ந்த புத்தகங்களாக இருப்பி னும் சரி அவற்றைக் கண்ணை மூடி கொண்டு நம்புதல் கூடாது. வேதங்கள் செல்வதென்ன வெனில் "வேதங்களின் ஞானமானது ஒருவரின் எண்ணங்களில் ஏற்கனவே இயைந்திருக்கின் றது. மனித வாழ்க்கையின் குறிக்கோளே நல்ல செய்கைகள், (பொய்ப் பகுத்தறிவு அற்ற) விவேக மான நற்சிந்தனை மற்றும் ஆக்கபூர்வமான உணர்வுகள் கொண்டு இஞ்ஞானத்தை உணர்வ தாகும்.

உண்மையில் வேதம் என்ற சொல் "வித்" என்ற வேர்ச்சொல்லிலிருந்து வந்தது. வித் என்றால் ஞானம் அல்லது அறிவு எனப் பொருள் படும். ஒருக்கால் வேதங்கள் என்பவற்றை அறவே அழித்து விட்டாலும் கவலையில்லை, ஒருவர் மேற்சொன்ன மூன்று விவேகமான நற் சிந்தனை, நல்ல செய்கை மற்றும் ஆக்கபூர்வ மான உணர்வுகளின்பால் கவனம் செலுத்தினால் போதும். சமகாலத்தில் வாழ்ந்துவரும், ஒருவர் முன் வாழ்ந்த சான்றோர்கள் கூற்றுக்களின் உதவியுடன் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஞானத்தை மறுபடி அடைய முடியும்.

வேதங்கள் நல்ல வேளையாக அழிக்கப்பட வில்லை, எனவே அவற்றை அறிவதன் மூலம் ஞானமடைவதை விரைவாக்கலாம். வேத மந்தி ரங்கள் அதன் பொருளை உணர்ந்து சொன்னா லும் இல்லையென்றாலும் மருத்துவ, உளவியல் ரீதியாகவும் பயனளிப்பதாய் இருக்கிறது. ஆனால் வேதங்கள் உண்மையை தேடுவோர்க்கும், "அதன்படி வாழமுற்படுவோருக்கும், உண்மையை

உணர்ந்தோருக்கும் வெகுதுணையாயிருக்கிறது. வேதங்கள் அனைவருக்கும் பயனளிக்கக் கூடிய சூரியன் அல்லது தண்ணீர் போன்றவை. அதிலும் யார் அதனை ஆழ உணருகிறாரோ, அவர் பிறரின் வாழ்வையும் கற்பனைக்கெட்டாத வண்ணம் ஒளிமயமாக்க முடியும். வேதங்கள் மற்றும் ஹிந்துத்வம் வலியுறுத்து வது இத்தகைய ஞானத்தை அடைவது மட்டுமே,

**காரணம் 3:** – ஹிந்துத்துவம் – நேர்மையான விரிவடைந்த வாழ்க்கை முறை ஒரு முஸல்மான் ஆனவர்குரானை ஒதுக்கி வைப்பதன் மூலம் முஸல்மான் ஆக முடியாது என நினைக்கின்றேன். அதைப்போல ஒரு கிறிஸ்துவர் பைபிளை நிராகரிப்பதன் மூலம் கிறிஸ்துவ ராக முடியாது. ஆனால், ஒருவர் ஒருவேளைதன் சிந்தனை இயல்பிற்கேற்ப, வேதங்களை நிராகரித்தாலும் கூட அவர் ஹிந்துவாக இருக்க முடியும்.

ஒரு ஹிந்துவாக இருப்பதற்கு உங்களுக்கு எந்தக் கோவிலும் தேவாலயமும் தரஹாவும் சான்றிதழ்தரத் தேவையில்லை. நீங்கள் எந்தவொரு புனித வசனத்தையும் படிக்க, ஒப்பிக்கத் தேவையிலை, நீங்கள் எந்த ஒரு கடவுளையோ அல்லது புனித – புத்தகத்தையோ நம்பத் தேவையில்லை, ஆம், நீங்கள் உங்களளவில் உண்மையுள்ளவராக, நியாயமுள்ளவராக இருத்தல் மட்டுமே போதும்.

ஹிந்துத்வம் நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் தனித்துவமிக்கவர்கள் என்று திடமாக நம்புகின்றது. எனவே நம் தேவைகளும் விருப்பங்களும் கூட மாறுபடுகின்றது. எனவே, ஒரு மனிதனை ஒரு குறிப்பிட்ட நம்பிக்கைகளை வைத்து எடை போடுவது என்பது அழகல்ல. ஹிந்துத்வத்தின் குறிக்கோள் ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையையோ, புத்தகத்தையோ, கடவுளையோ, அவதாரங்களையோ, வற்புறுத்துவதல்ல. அதன்குறிக்கோள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நேரத்திலும் அவரவர் இயல்புக்கேற்ற ஒரு அடிப்படையை ஏற்படுத்துதல் மட்டுமே. நாம் எப்படி குழந்தைகளாக இருக்கையில் வாய்ப்பாட்டும், வாலிப வயதில் அறிவியல் போன்ற துறைகளில் மேற்படிப்பும் படிக்கிறோமோ அதே போல ஹிந்து மதம் வெவ்வேறு வாழ்க்கைக் கட்டத்தில் வெவ்வேறு மனிதருக்கு எது மிகுந்த இயல்பான வொன்றாய் இருக்கிறதோ அதை சர்வ– சுதந்திரத்துடன் பின்பற்றி அதன் மூலம் முன்னேற உற்சாகப்படுத்துகிறது.

ஒரு முதிர்ச்சியடைந்த மேற்படிப்பைப் போலவே அனைவரின் தனித்தனி தேவைக்கும் ஏற்ப தேவையானதை வழங்குகிறது. எங்கோ கோடியில் உள்ள கிராமப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே உள்ளதால் மாணாக்கர்கள் மறுபடியும் படித்ததையே மனப்பாடம் செய்யச் சொல்லும் பாடசாலை அல்ல ஹிந்து மதம். இத்தகைய வேறுபாட்டினை சுதந்திரமாக தேர்வு செய்யவும், பயமின்றி அதில் பயணப்பட்டு நான் என்னை வளர்ப்பதற்கும் ஹிந்து மதம் பரிபூர்ண சுதந்திரம் தருகிறபடியால் நான் இதை சிறந்த ஒரு வாழ்வியல் முறை என்பேன். மென்மேலும் மனிதத் தன்மைமிக்கதாய், சுதந்திரமானதாய், நேர்மையானதாய், எல்லாவற்றிற்கும் மேலாக இயற்கையான தாய் உணருகிறேன்.

**காரணம் 4:** – ஹிந்துமதம் – உண்மையில் உலகளாவியது. எந்தவொரு மதப்புத்தகமும் ஒரு நிலப்பரப்பைச் சார்ந்தே இருக்கிறது. உதாரணத்திற்கு ஜீடாயிஸம், கிறிஸ்துவம், இஸ்லாம், இவையனைத்தும் மத்திய கிழக்கு நாடுகள் சார்ந்தவையாக உள்ளது. இதன் கதைகள், விழாக்கள், வாழ்க்கைமுறை, பழக்க வழக்கங்கள் அனைத்துமே அந்நாட்டு முறைப்படியே உள்ளன. இது ஒரு இலக்கிய வாதிக்கு தனிச்சுவை அளிப்பதாய் இருப்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஹிந்துமதத்திலும் சில புத்தகங்களுண்டு – புராணங்கள், ராமாயண–மஹாபாரதங்கள் இவை – இவற்றில் ஆழமான இந்தியத் தன்மையிருப்பதைக் காணலாம். பார்க்கப்போனால் இப்புத்தகங்களில் இருக்கும் கருத்தாழமோ, மொழியாழமோ, ஞானமோ காலக்கிரமத்தினால் ஏறபட்ட இடைச்செருகல்கள் பல இருந்த போதிலும் நாமனைவரும் இந்தியர் என்பதில் வெகு பெருமிதம் கொள்ளத்தக்கதாய் இருக்கிறது. வரலாற்று பூர்வமாக நாம் பெருமைப்படும் விதமாக இவை இருக்கின்றன. ஆனால் ஹிந்துமதத்தின் சாரமாகிய

வேதங்களோ உலகலாவியது. கால– நேரமாறு பாடுகளுக்கு அப்பாற்பட்டது. உண்மையில் வேதங்களே உலகலாவிய ஞானத்தின் சாராம்ச மாகும். ஆனால் ஒப்பாரில்லாத இன்ன பிறநூல் களாகிய யோகதர்ஸன், ந்யாயசூத்ரம், வைஷே ஷிகதர்ஷன், சாங்க்யதர்ஷன். வேதாந்தம், உபநிஷத், பகவத்கீதை – இன்னும் பலப்பல உண்டு. தமிழில் நம் திருக்குறள் ஒன்று போதாதா? இவை உலகளவிலுள்ள இலக்கிய வாதிகள் மட்டுமன்றி அறிவியலாளர்கள் பலரை யும் வியப்பிலாழ்த்தியிருக்கின்றன, தன்பால் ஈர்த்துள்ளன. இவற்றில் எதுவும் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பைச் சாராமல் இந்தியா, கிழக்காசியா, மத்தியகிழக்கு நாடுகள் என்றெல்லாம் இல்லா மல், மேலும் ஒரு பழமை வாசனை இல்லாமல் என்னென்றும் புத்தம் புதியனவாய் இருக்கின்றன. இப்புதுமை என்னை பெருவியப்பில் ஆழ்த்துகி றது. மிகுந்த ஆசையுண்டாக்குகிறது.

இப்புத்தகங்களிலிருக்கும் வாக்கியங்கள் ஆஸ்திரேலியாவிலிருக்கும் ஒருவருக்கு எப்படி பொருந்துகிறதோ அதே போல ஆப்பிரிக்காவி லிருப்பவருக்கும் அண்டார்ட்டிகாவிலிருப்ப வருக்கும் கூடபொருந்தும். ஹிந்துமதத்தின் மற்றைய புத்தகங்கள் முறையே இவ்வுலகளா விய உண்மைகளை பிரதி பலிக்கவும், ஒரு குறிப்பிட்டகால – நேரத்திற்கு உட்பட்டு விளக்கி சொல்வதுமாகவே இருக்கின்றன (உதாரணம்– இதிகாசங்கள் இரண்டும்)

**காரணம் 5:** என்னைப்பொறுத்தவரை ஹிந்து மதத்தின் ஒருதனித்துவத்தின் மரியாதை யும், அதைக் கொண்டாடும் இயல்பும் வெகு இயல்பானதாய் இருக்கின்றது, மேலும் என்னை ஒரு சிறநதவனாகவும், தனித்துவம் மிக்கவனா கவும் ஏற்றுக் கொள்கிறது. வற்புறுத்தலின் பேரில் எந்தவொரு கருத்தும் திணிக்கப்படுவதில்லை இங்கு ஒரு குறிப்பிட்ட நபரின் எழுத்துக்களே பேச்சோ செயல்களோ என்னை கண்மூடித்தன மாய் நம்பச் சொல்வதில்லை மாறாக அத்தகைய நபாகளையும் அவர்கள் சொல்வதில் நியாயம் உண்மை இருப்பின் அரவணைத்து கொள்வதாய் உள்ளது. உண்மையை மட்டுமே வற்புறுத்துவ தால் ஹிந்து மதம் எந்தவொரு தனி மனிதரை யும் ஒருங்கே அல்லது கட்டாயதேவையாய் நம்பவோ சொல்வதில்லை. ஆம் நம்மில் பலா் கிருஷ்ணரையும் ராமனையும் ஹனுமனையும் சிவபெருமானையும் காளி துர்க்கைகளையும் வணங்கலாம். சிலர் ஒரே இஷ்ட தெய்வத்தையும் சிலர் பலரையும் அனை வரையும் வணங்கலாம் இருப்பினும், இது ஹிந்து மதத்தின் ஒரு பலவீன மாகப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

ஆனால் இது முழுமையானதல்ல உண்மை யில் ஹிந்துமதம் கட்டுக்கோப்பின்றி வெறுமனே வழிமொழியாமல் சுதந்திரமாக ஒன்றைத்தேர்வு செய்யத் தூண்டுகிறது. ஹிந்து மதத்தை தூற்று பவர்கள் வசதியாக மறப்பது என்ன வென்றால் ஹிந்துமதம் ஒன்று மட்டுமே வெறும் கொள் கையை மட்டும் கூடவணங்கச்சொல்வது மேலும் சிலையை வணங்குவதாய் குற்றம் சாட்டப்படுப வா்கள் கூட சிலைவணங்குதல் என்பது வெறும் முதற்படி, முடிவென்பது கொள்கை / தத்துவ த்தை உணர்வது மட்டுமே என்று நன்கறிந்தவா் களாகவே உள்ளனர். ஹிந்துக்களில் மிகப்பலர் உருவமில்லாக் கடவுளை நம்புவர்களாக உள்ள னர். பலர் நாஸ்திகவாதிகள். இன்னும் பலரோ வெறும் கொள்ககளைப்போற்றுபவர்கள் – உதாரணம்–பொறுமை, மன்னிப்பு, சுயக் கட்டுப் பாடு, திருடாமை, புனிதம், புலனடக்கம், ஞான மடைதல், அறிவாலுயர்தல், நேர்மை, அஹிம்சை, புறங் கூறாமை, உண்மை மட்டும் பேசுதல் – போன்றன. எனவே, உங்களால் எந்தவொரு அவதாரத்தை நம்ப முடியாவிட்டாலும், எந்த கடவுள் தத்துவத்தை ஏற்க முடியாவிட்டாலும் ஹிந்துவாக முடியும். நீங்கள் நேர்மையான வராக இருத்தல் வேண்டும், யாரிடமும் இதற்காக சான்றிதழ் வாங்கி வரத் தேவையில்லை!!

ஒஹிந்துமதம் இவைகளை புத்தியாலும் விவேகத்தாலும் தீர்க்கவிழைகிறது. இதனா லேயே ஹிந்துமதம் என்பது ஒரு நிலையான ஜடப் பொருள் போலல்லாது, எப்போதும் பொங்கி வருவதாயும், எப்போதும் புத்துணர்வுடன் கூடியதாகவும் ஆக்குகிறது. இதுவே என்னையும் ஒரு ஹிந்துவாக இருப்பதில் மிகுந்த ஆர்வத் தையும் அன்பையும் அளிக்க வல்லதாய் இருக் கின்றது.



# 2013இல் யாழ் விருது பெறும் அருட்தந்தை மரியசேவியர் அடிகளார்

பு. ஆறுமுகதாசன்
செயலாளர், சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

சமய, சமூக, கலாசார, மருத்துவ சேவைகள் மற்றும் அறப்பணிகளில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வருபவர்களில் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுத்து நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவன்று யாழ். விருதினை வழங்கிக் கௌரவித்தல் வேண்டு மென்ற சைவசமய விவகாரக் குழுவினது உயர் வான நோக்கத்தின் அடிப்படை யில், வீரமாமுனி வர், தனிநாயகம் அடிகள், சுவாமி ஞானப்பிர காசர் வரிசையில் தமிழுக்கும் குறிப்பாக ஆதியும் அந்தமும் அறிய முடியா சைவம் மற்றும் ஆழம் கண்டறிய முடியாத சைவசித்தாந்தம் ஆகியன பற்றிய ஆய்வினை மேற்கொண்டு மூன்று கலாநிதிப் பட்டங்களைப் பெற்ற அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளாருக்கு 2013ம் ஆண்டுக்குரிய யாழ். விருதினை வழங்கிக் கௌரவிப்பதென சைவசமய விவ காரக் குழுவினது நிர்வாகசபை ஏகமனதாகத் தீர்மானித்திருப்பது காலத்தின் தேவைக்கும், கடின முயற்சிக்கும் தகுந்ததொரு தெரிவாக அமைந்திருப்பதை எண்ணி சைவசமய விவகாரக் குழு இறும்பூதெய்துகின்றது.

இளவாலையில் பிறந்த அடிகளார் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றி தமிழை வளர்த்த தோடு, நாடகக்கலையைக் கருவியாகக் கொண்டு சமய மற்றும் சமூகப் பணிகளையும் முன்னெடு த்து வருவது அடிகளாரின் தனிச்சிறப்பாகும். திரு மறைக் கலாமன்றத்தின் தாபகரான அடிகளார் அதனூடாக நாடகம், நாட்டுக்கூத்து, இசை நாடகம், சமூக நாடகம், இலக்கிய நாடகம் எனப் பல்வேறு நாடகங்களை மட்டுமன்றி கவின்கலை பயிலகம், நாடகப் பயிலகம், இலக்கிய அவை, சைவ சித்தாந்த ஆய்வு வட்டம், சிறுவர் கலைக் கூடம் எனப் பல்வேறு பிரிவுகளை உருவாக்கி யும் இயங்கவைத்தும், இசைவிழா, இலக்கிய விழா, முத்தமிழ்விழா, கூத்துவிழா என அர்த்த முள்ள விழாக்களையும் நடாத்தி வருவது அவரது திறமைக்கும் ஆர்வத்துக்கும், அர்ப்பணிப்புக்கும் தக்க சான்றாகும்.

தமிழர்களின் மெய்யியல் "சைவசித்தாந் தமே" என்ற கொள்கையைக் கொண்டவராக சைவசித்தாந்த ஆய்வு வட்டமொன்றினை உரு வாக்கி அதனூடாக ஆய்வுகள் செய்தது மட்டு மன்றி "Journal of Siddhanta Studies" என்னும் ஆங்கில சஞ்சிகையை தொடராக வெளியிட்டு சாதனை படைத்ததோடு, திருவுந்தியார், கொடிக் கவி, இருபா இருபது, சிவஞானபோதம், உண்மை விளக்கம், நெஞ்சுவிடுதூது, வினா வெண்பா போன்ற சைவசித்தாந்தப் பாடல்களை இசை யமைத்து இசை இறுவெட்டுக்களாகப் பதிவு செய்து வெளியிட்ட பெருமையும் இவரையே சாரும்.

தமிழர்களின் மரபுவழிக் கலைகள் பாதுகாக் கப்படல் வேண்டுமென்று கூத்து, இசை, நாடகம் போன்றவற்றின் மேம்பாட்டுக்குப் பல்வேறு பணி களை ஆற்றியதோடு, கலைத்தூது அழகியல்

கல்லூரியினூடாக பரதம், கர்நாடக சங்கீதம், கதகளி, வீணை, வயலின், மிருதங்கம், ஓவியம் போன்ற கலைகளைப் பயிலுவதற்கான பயில் களத்தினை உருவாக்கி இளையோர்கள் மத்தியில் கலைக்கல்வி பயிலப்படும் பாரம்பரியத்திற்கு வித்திட்ட பெருமகனும் இவரே.

பன்மொழியில் புலமைபெற்றவரான அடிகளார் பல கட்டுரைகளை வெவ்வேறு மொழிகளில் எழுதியுள்ளதோடு, சைவசித்தாந்தம் தமிழர்களின் மெய்யியல் என்பதில் ஆழமான பற்றுக் கொண்டவர் என்பது வெள்ளிடைமலை.

அடிகளார் எழுதிய ஆய்வு நூல்களில் சைவ சித்தாந்தம் பற்றிய பின்வரும் வெளியீடுகள் மிகப் பிரசித்தி பெற்றவையாகும்.

1. "Siddhanta Tradition's Philosopher Sages"
2. "Die Metaphysik Des Shaiva siddhanta"

– ஜேர்மன் மொழி

இவை மட்டுமன்றி தமிழ்க் கலைகள் சர்வ தேசத்திலும் அறியப்படல் வேண்டுமென்ற ஆர்வத்தில் 15க்கும் மேற்பட்ட கலைப் பயணங்களை மேற்கொண்டு ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா எனப் பல நாடுகளுக்கும் எமது கலைகளையும், கலைஞர்களையும் அழைத்துச் சென்று பெருமை சேர்த்துள்ளார். குறிப்பாக 2002ஆம் ஆண்டு நியூயோர்க் நகரில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உலகளாவிய "சிறுவர் உரிமைகள்" மாநாட்டில் "யுத்தத்தின் தொட்டில்" என்னும் குறியீட்டு நாடகத்தை அரங்கேற்றி எமது பிரதேசத்தின் யுத்த நெருக்கடியை சுமக்கும் சிறுவர்களின் அவலத்தினை வெளிப்படுத்திய பெருமை இவருக்கே உரியது. இத்தகைய செயற்பாடுகளைக் கௌரவித்தே ஜேர்மன் ஆன்மீகப் பணியகம் அவருக்கு "கலைத்தூது" எனும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக இனம், மதம், மொழி கடந்து "மானிடமென்ற" பொதுமைக்குள் எல்லா மனிதர்களையும் சஞ்சரிக்கச் செய்யும் பொதுமையே "கலை" என்ற கொள்கையுடன் மொழிகடந்து, மதங்கடந்து பலரையும் அங்கத்தவர்களாக ஒன்றிணைத்து செயற்படும் செயலியக்கத்தை சாத்தியமாக்கிய பெருமைக்குரிய அடிகளாரின் செயல்கள், சேவைகள், பணிகள் மென்மேலும் வளர்ந்தோங்க வேண்டுமென நல்லைக் கந்தனின் தாள்பணிந்து வாழ்த்துகின்றோம்.

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

# நல்லைக் குமரன் மலர் - 2013

## மணங்கமழ பங்களித்த உங்களுக்கு

## எங்கள் உளங் கனிந்த நன்றிகள்


2013ம் ஆண்டின் "நல்லைக்குமரன்" இருபத்தோராவது மலருக்கு ஆசிச் செய்திகளையும், வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய ஆதீன முதல்வர்கள் மற்றும் சைவப் பெரியோர்களுக்கும்

பல சிரமங்கள் மத்தியிலும் தம் ஆக்கங்களைத் தந்துதவிய அறிஞர் பெருமக்களுக்கும் மலருக்கு விளம்பரங்கள் தந்து, உந்து சக்தியாக இருந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், நிதி நிறுவனங் களுக்கும் இவ் விளம்பரங்களைப் பெற்றுத் தந்துதவிய ஓய்வு பெற்ற சிறாப்பர் திரு.த.கனகசபை அவர்களுக்கும்,

மலரை அழகுற அச்சிட்டுத் தந்துதவிய மதி கலர்ஸ் அச்சகத்தினருக்கும் இன்னும் பல வழிகளிலும் மலரின் வரவுக்குப் பங்களித்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, நல்லைக் குமரனின் அருட்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அவன் தாள் இறைஞ்சு கின்றோம்.

21.08.2013

**சைவசமய விவகாரக்குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**



# நல்லைக்குமரன் மலர்

## 2013

## விளம்பரங்கள்





அழகன் முருகன் ஆறுமுகமாகி தேரினில் அருள் காட்சி தருகின்றான் அவன் அருளுக்கும்
பக்திக்கும் அமைதி கொள்ளாதோர் உண்டோ! அவன் அருள் பெருக!
லிங்கன்
கிறீம் ஹவுஸ்
லிங்கன் என்றால் நினைவுக்கு வருவது ஐஸ்கிறீம்
சுவைத்துப் பாருங்கள் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
* ஸ்பெசல் ஐஸ்கிறீம்
* சொக்லேட் ஐஸ்கிறீம்
* நட்ஸ் ஐஸ்கிறீம்
* புருட்சலட் ஐஸ்கிறீம்
* ஜெலி ஐஸ்கிறீம்
* மஸ்கட்
* மெகா ஸ்பெஷல்
* வெனிலா ஐஸ்கிறீம்
* சண்டே ஸ்பெஷல்
* கித்துள் நட்ஸ் ஐஸ்கிறீம்
* ஸ்ரோபெரி ஐஸ்கிறீம்
* ஸ்பெசல் பீடா
அத்தனையும் ஒரே இடத்தில்
யாழ் நகரில் அதி விசேட பல் சுவை ஸ்தாபனம் என்றால் அது லிங்கனே தான்
உள்ளே சென்றால் கண் குளிரும், மனம் குளிரும், சுவை குளிரும்,
திருப்தி குளிரும் விஜயம் செய்து பாருங்கள்.
LINGAN
Cream House
119. KASTHURIYAR ROAD, JAFFNA.
526, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப்
தேசிய புலமைப்பரிசில் திட்டம்
2013
பாரிய காப்புறுதி நிறுவனமான ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸிடமிருந்து
தேசத்தின் பிள்ளைச் செல்வங்களுக்காக முழு தேசத்தின் சார்பில்...
நாடெங்கிலும் சிறந்த பெறுபேறுகளுக்குரிய 300 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள்
5ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சகல மாவட்ட மட்டத்திலும் அதிக புள்ளிகளைப் பெற்ற 4 மாணவர்கள் வீதம் 100 புலமைப்பரிசில்கள். ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப் காப்புறுதியின் உரிமையாளராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கும், காப்புறுதி உரிமையாளர் அல்லாதவராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக ஒரு வருடமும் வழங்கப்படும்.
க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சகல மாவட்ட மட்டத்திலும் அதிக புள்ளிகளைப் பெற்ற 4 மாணவர்கள் வீதம் 100 புலமைப்பரிசில்கள். ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப் காப்புறுதியின் உரிமையாளராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக 2 வருடங்களுக்கும், காப்புறுதி உரிமையாளர் அல்லாதவராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக ஒரு வருடமும் வழங்கப்படும்.
க.பொ.த. உயர் தர பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம், கலை ஆகிய பிரிவுகளில் தேசிய பட்டியலுக்கேற்ப உயர் புள்ளிகளைப் பெற்ற 25 மாணவர்கள் வீதம் 100 புலமைப்பரிசில்கள். ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் லைஃப் காப்புறுதியின் உரிமையாளராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக 3 வருடங்களுக்கும், காப்புறுதி உரிமையாளர் அல்லாதவராயின் அப் புலமைப்பரிசிலானது தொடர்ச்சியாக ஒரு வருடமும் வழங்கப்படும்.
விபரங்கள்: எமது கிளை வலையமைப்பின்/காப்புறுதி ஆலோசகரிடம்/www.srilankainsurance.com எனும் எமது இணையதளத்தின் அல்லது கீழ்காணும் எமது 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கத்தின் ஊடாக.
Sri Lanka Insurance
LIFE
357357
ஸ்ரீ லங்கா இன்ஷுரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று



முருகா முருகா என கூவி உன் கோபுர வாசல் தன்னில் வந்து
கைகூப்பி தொழுவதெல்லாம் நாம் அச்சமின்றி வாழ்வதற்கன்றோ!
இது வெறும் தண்ணீர் அல்ல
உங்கள் ஆரோக்கியமான வாழ்வு...
YALLARUVI
BOTTLED DRINKING WATER
It's not Just Water
Swissmineral
Taste & see the difference with our purified drinking water purification process with our latest reverse osmosis technology
Think again!!
Call for Free Home & Office Delivery
Jaffna : 021 222 81 22 Vavuniya : 024 324 97 02




Save Money With LED
Light up
with Led!
Eco - Friendly as led does not contain mercury
Up to 80% saving in energy
Lasts 50 times longer than conventional Lights
No Replacement for up to 20years (based on usage of 6hr/day)
ECO LED ஐ
பொருத்துவதன் மூலம்
உங்களது எதிர்கால சேமிப்பை
அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்....
Distributors
Global Business Network
231, Temple Road, Nallur, Jaffna.
021 320 1771 , Colombo Contact : 077 778 3253



எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போகுமே!
"யோக சுவாமிகள்"
ஹரன்
ஜுவல்லர்ஸ்
பழம் பெரும் புகழுடன் புதுமைப் பொலிவுடன்
இயங்கும் தங்க நகை மாளிகை
விரும்பிய டிசைன்களை புதிய முறையில்
22 கரட்டில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
Since 1970
Haran Jewellers
தொ.பே:- 021 2226083, 0714182480
emial: haranjewellers@gmail.com
skype: haanjewellers
இல.217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.




மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழிகருணை போற்றி ஈராறு தோழ் போற்றி
முருகா உன் வீரவேல் கொண்டு எமை காத்தருள்வாய்
BATA
"பாட்டா" என்றால் காலணி பற்பல வடிவமைப்பில்
பற்பல நிறங்களில் நவீன காலத்திற்கேற்ப
வரவழைத்து விற்பனை செய்யும் பெயர் பெற்ற பாட்டா முகவர்
யாழ் காலணியகம்
YARL BATA
உலகளாவிய காலணி பெயர் 'பாட்டா'
அதிலே விரும்பி தெரிவு செய்வதற்கு தகுந்த ஒரே இடம்
YARL TRADE CENTRE
ஆஸ்பத்திரி வீதி,
இல.11, நவீன சந்தை (வெளிப்புறம்)
BATA
தொ.பே: 021 2223152


நல்லூர் முருகா! தேர் பவனி காட்சி எமது
உளம் நிறைந்த அமைதியை தருகுதையா!
சிறீ சிவராம் ரேடர்ஸ்
யாழ்ப்பாணத்தில் புதுமை பொலிவுடன் இயங்கும் ஒரு மொத்த
விற்பனை நிலையம் கொழும்பில் இருந்து பல பொருட்களையும்
மலிவு விலையில் விற்பனை செய்கிறோம்.
Sri Sivaram Traders
NO.248, HOSPITAL ROAD,
JAFFNA.
T.P: 021 222 8629, 077 7560760
NO.189, KATHERESAN STREET,
COLOMBO.
T.P: 0777560760


குருவாய் வருவாய் அருள்வாய் குகனே...
Multibond
சகல விதமான நவீனரக கொமட் வகைகள், குளியலறை இணைப்பு சாதனங்கள்
முதல்தர லங்கா ரைல்ஸ் (Lanka Floor & Wall Tile) ஆகிய தரமான பொருட்களை
நியாயமான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள....
நாராயணா
கட்டடப் பொருட்கள் வர்த்தகர்
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 5390
115, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 567 8157

ஆவணி மாதமதில் முருகன் விழா கோலம்
பக்தர் கூட்டம் அலைமோதி அமைதி வேண்டுதையா



நகை உலகில் சிறந்தோங்கி முன்னணி வகிப்பது

# உதயா
## ஜுவல்லர்ஸ்

ஓடர் நகைகள்
குறித்த தவணையில்
செய்து தரப்படும்

நவீன நங்கையர்க்கேற்ற புதிய புதிய
அமைப்பில் 22 கரட்டில் உருவாக்கப்பட்ட
அழகிய நகைகள்

**தரத்தை விரும்பினால் நாடுங்கள்**

இல. 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே:-
021 222 4434



சரித்திர புகழ் மிக்க நல்லைக்குமரன் தேரேறி வரும் இந்நாளில்
பக்தர்களுக்க அருள்பாலித்திட வேண்டுகின்றோம்.



**வாடிக்கையாளர்களே!**

தங்களுக்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
தரமானதாகவும், நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும்,
மங்களகரமான நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த சகல வசதிகளையும்
உள்ளடக்கிய மண்டப வசதியைப் பெற நாடவேண்டிய ஒரே இடம்

**TCT MULTI TRADE CENTRE**
ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்



527, நாவலர் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 7451895
Email. tctmc@dialognet.lk

**TCT SORNAMBIKAI HALL**
ரிசிரி சொர்ணாம்பிகை மண்டபம்



எமது நிகழ்வுகளுக்கான பதிவுத் திகதிகளை
இணையத்தளத்தில் பார்வையிடலாம்.
தொ.பே: 021-222-8025
www.tcthall.com

(இங்கு பெறப்படும் வருமானம் அனைத்தும் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்படுகின்றது)



ஆறுதல் தந்திடுவான் முருகன்
அவன் அருள் அமைதியை கொடுத்திடுவான்

புதிய இடம் புதுமைப்பொலிவு அழகான காட்சிக்கூடம்
- இராஜபுரம் -

# இராஜேஸ்வரி
# றெக்ஸ்ரைல்

உங்களுக்கு வேண்டிய புதுவகையான ஆடைகள், கண்கவர் பஞ்சாபிகள்
சிறுவர் பெரியவர்களுக்கு றெடிமேட் உடைகள் என்பவற்றை வாங்கி மகிழ்ச்சி அடையுங்கள்.
கண்ணை மயக்கும் பளபள மினுமினு புதிய புடைவைகளுக்கு
கொழும்பு "பாஷன்களுக்கு நிகர் யாழ்ப்பாணத்தில் "ராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் தான்"

இராஜேஸ்வரி றெக்ஸ்ரைல் புதிய இடமல்லவா லாபகரமான விற்பனை.
ஒரு முறை விஜயம் செய்தால் இராஜேஸ்வரியின் பெருமிதம் தெரியும்
வாருங்கள் பாருங்கள்

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 6953

முருகா! துன்பம் நேர்கையில் வேல் எடுத்து
நீ இன்பம் தர வாராயோ!



பாலாறு வளம் சுரக்க! பண்பாடு தலைசிறக்கும். யாழ் பாடியாம் யாழ்ப்பாணத்தின்! அருளாட்சி பொழியும்! கலியுக கடவுளாம்! கந்தன் பாதார விந்தங்களை பணிந்து நல்லூர் நகரில் வேல் என்றால் வெற்றி என்று தமிழன் தன் பெருமை சேர் இறையே! உன் நினைவை மறவாது! உலகெங்கும் உன் புகழ் சேர்க்கும். "நல்லைகுமரன் மலர்" தனை வாழ்த்தி அதை வருடம் தோறும் வழங்கும் மாநகர சபையை வாழ்க வளமுடன் என வாயார வாழ்த்துவோமாக!

**"மக்கள் மனதில் மங்கா புகழ் பூத்த"** சுத்தத்தின் செல்வன் என்று
மக்களால் மகுடம் சூடப்பெற்ற மங்காத நிறுவனம்

# மலாயன் கபே
## (சைவ உணவின் சாம்ராஜ்ஜியம்)

விசேட வைபவங்களுக்கான ஓடர்கள் திறமையுடன்
செய்து கொடுக்கப்படும்.

எம்மைப் பற்றி குறை இருந்தால் எம்மிடம் கூறுங்கள்.
நிறைவு இருந்தால் நண்பனிடம் கூறுங்கள்.

தொ.பே: 021 2222373
பக்ஸ்: 021 2222373

இல.36, 38, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.



# வடமாகாண
# புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

## புற்று நோய் சார்பான எமது பணிகள்

நோயாளர்களை இனம்காணல். குறிப்பாக ஆரம்ப நிலையில் இனம் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

இனம் காணப்பட்ட நோயாளர்கள் உடன் தகுந்த சிகிச்சை பெற வழிவகுத்தல்

ஆதரவற்ற நோயாளர்களுக்கும் இளம் நோயாளர்களுக்கும் சாத்தியமான வழிகளில் உதவுதல்

சமூக நல நிறுவனங்களுடன் இணைந்து சங்கச் செயற்பாடுகளை விரிவுபடுத்தல்

புற்று நோய் சார்பான சமூக சுகாதாரக்கல்வியை சகல மட்டங்களிலும் பிரசாரம் செய்தல்

## எயிட்ஸ் நோய் சார்பான எமது பணிகள்

இந் நோய் சார்பான சுகாதாரக் கல்வியை உரிய இயக்குனர்கள் மத்தியில் மேற்கொண்டு வருமுன் காத்தல் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

எம் பணி சிறக்க நிதி உதவியை வேண்டுகின்றோம்.
புதிய அங்கத்தவர்கள் எம்முடன் இணைந்து செயற்பட அழைக்கின்றோம்.
நன்றி.

வடமாகாண
புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம்

வேம்படி வீதி,
ரிம்மர் மண்டபம்.

தொ.பே: 021 3207040



முருக நாமம் எல்லோர் மனதிலும் ஆவணி பிறந்ததும்
அருள் வேண்டி ஆர்ப்பரிக்கும் அடியார் கூட்டம்

# ஈஸ்வரன்

விற்பனையில்
முன்னணியில் நிற்பவர்கள் றேமீங் கோ

ஹீரோ துவிச்சக்கர வண்டிகள்

ஹீரோ துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள்

நேரடியாக இறக்குமதி செய்பவர்கள்

நாம் இப்பொழுது கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும்
A9 வீதியூடாக லொறி போக்குவரத்து செய்கிறோம்.

நாம் யாழிலிருந்து கொழும்புக்கு

பயணிகள் பஸ்சேவை
ஆரம்பித்துள்ளோம்

# Eswarran
TRADERS

தொ.பே: 021 222 2813,
021 222 3590,
011 222 4317

௭, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் எல்லோரையும் கவர்பவன் நல்லூர் முருகன்
அவன் அழகும் அருளும் அல்லவா!



இதோ!
புதிய உதயம் ராஜன் பான்சி நன்மதிப்பு பெற்ற புதிய

# சிறி ராஜன் பன்சி ஹவுஸ்

ஆகா! என்ன அதிசயம் அழகுசாதன அன்பளிப்பு பொருட்கள் நிறைந்து இருப்பதோடு
மங்கையர் கூட்டமாக வந்து அழகுசாதனங்களை பெற்று குதூகலித்து
செல்வதை பார்க்கலாம். எல்லோரையும் கவர்ந்திழுக்கும் புதிய ஸ்தாபனம்

# "ஹரிஷ் அன்பளிப்பு அகம்"

**வாருங்கள் பாருங்கள்**

இல. 65, 66, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224327

இல. 18A, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776003205



நல்லைக் குமரா! நாம் நினைந்துருகி வேண்டுவதெல்லாம்
நம் நாட்டு தமிழினம் அமைதி பெற்ற வாழ்வதற்கன்றோ!

# அரவிந்

மங்கள நிகழ்வுகளை அதிநவீன DIGITAL VIDEO CAMERA வீடியோ அன் போட்டோ
மூலம் வீடியோ படம் பிடித்திடவும், அதிநவீன DIGITAL
புகைப்படக் கருவிகள் மூலம் படம் பிடித்திடவும் U.V Crystal, Matt
வகைகளில் சிறந்த முறையில் அல்பம் செய்து கொள்ளவும்

# Aravinth Digital's

இல.309, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2222190, 0777162339
*aravinthvideo@yahoo.com*

நல்லைக்குமரா உன் திருப்பாதம் நினைந்துருகி
துன்பமெலாம் அகன்றிட வரம் தாருமையா

உலகெங்குமிருந்தும் ஒரு சில நிமிடங்களில் பாதுகாப்பாக பணத்தைப்
பெற்றுக் கொள்ள இலகுவழி யாழ்ப்பாணத்தில் MMBL உபமுகவர்
கடந்த 3 தசாப்தங்களாக யாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற நம்பிக்கையான ஸ்தாபனம்

# ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

உலகெங்குமிருந்து உங்கள் உறவினர்கள் WESTERN UNION மூலம் பணம் அனுப்பி
பணப்பரிமாற்றம் இலக்கம் (MTCN 10 இலக்கங்கள்) கிடைத்து விட்டதா?
ஒரு சில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க

WESTERN UNION

உள்நாட்டு, வெளிநாட்டு கடிதங்கள், பார்சல்கள் உடனுக்குடன் அனுப்புவதற்கு
தொலைபேசி அட்டைகள் ஆடவர் நங்கையர்களுக்கேற்ற Silver Shield
காலுறைகள் (Socks) மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

# SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S.Road, Jaffna.

T.P: 0094-21-222 2670, 5392
Fax: 0094-21-2223214
e.mail: srimurugan@eureka.lk

Dialog
Sri Lanka Telecom



எமது துயரனைத்தும் முருகா தமிழினால் மனமுருகி வேண்டுகிறோம்
மனவேதனை வாழ்வை நீக்கி அமைதி தந்திடுவாய் முருகா!

# கோபிகா கௌரி ரெக்ஸ்ரைல்

நங்கையரே! நங்கையரே!
நீங்கள் விரும்புவது அழகான பலவர்ண
புதிய ஆடைகளல்லவா அலக்கழியத் தேவையில்லை கடைகளெல்லாம்
ஏறி இறங்கத் தேவையில்லை ஒரே இடத்தில் ஒரே பார்வையில் விரும்பிய
ஆடைகளைப் பெற்று மன நிறைவோடு திரும்பலாம் நேரே வாருங்கள்

# GOPIKA GOWRI TEXTILE

5/4 (3A), நவீன சந்தை (உட்பறம்)
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2377

நல்லூர் முருகா! உலகையே உன் பால் ஈர்த்த
பெருமை உன் அருட் காட்சியும் அருளுமன்றோ!



# Ranjanas Ceramic



யாழ் நகரில் அனைத்து விதமான
குளியலறை உபகரணங்கள்,
நில ஓடுகள், கிரனைட் வகைகள்
மற்றும் Adhesive வகைகள் ஆகிய
அனைத்தையும் வெளிநாடுகளில் இருந்து
நேரடியாகத் தருவிக்கும்.
எம்மிடம் உங்கள் இஷ்டம் போல்
தெரிவு செய்து பூரிப்படையுங்கள்.

**#212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044**

**#05, Stanly Road, Jaffna.**
**021 222 4777 / 021 222 4888**

**#05A, Kodikamam Road, Nelliyadi.**
**021 226 2000 / 021 226 3111**

JT

அலங்கார கந்தன் ஆறுமுகமாகி தங்கரதத்தில்
அருட் காட்சி தர வருகின்றார்



# JAFFNA TRADERS

## யாழ்ப்பாண வணிக நிலையம்

பலசரக்குப் பொருட்கள், அரிசி வகைகள், நைலோன் கயிறுகள், தும்புத் தயாரிப்பு,
பொதி செய்யப்பட்ட பொருட்கள் (Packed Items) பெற்றுக் கொள்ளலாம்

இல.336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2229453

## யாழ்ப்பாண் இரும்பகம் ஏசியன் பெயின்ற்ஸ்

32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 5589, 7028

யாழ்-கொழும்பு-யாழ் பாரஊர்தி சேவை போக்குவரத்து

## J.T. ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

135, ஆட்டுப்பட்டி வீதி, கொழும்பு-13
தொ.பே: 0114987935

190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 5672214

ஆவணி மாதமானால் அது நல்லூரானின் விழாக் கோலம்
உலக தமிழினத்தை தன்பால் ஈர்த்து அருட்காட்சி கொடுக்கும் முருகனல்லவோ!

**யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிகளின் சாம்ராஜ்யம்**

# சிவகணேசன்

## ரெக்ஸ்ரைஸ்



நவநாகரீக நங்கையர்களே!

வண்ணத் துணியகத்தும் வனமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்கஏற்றதோர் எழிற்கூடம்

**கண்ணைக் கவரும் சாறிகள், கண்கள் மிளிரும் சுடிதார் வகைகள், சிறியோர் பெரியோர்களுக்கேற்ற நாகரீக ஆடை அணிகள்**

# Sivakaneshan Textiles

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**வாருங்கள்! பாருங்கள்**

தொ.பே:-
021 222 2063

முருகா! துன்பம் நேர்கையில் வேல் எடுத்து
நீ இன்பம் தர வாராயோ!



**காப்புறுதி துறையில் முன்னோடியாக விளங்குவது**
**இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்**

ஒவ்வொருவரும் காப்புறுதி செய்து கொள்வது தனக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் பெரும் நன்மை அளிக்கும் புதிய புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சிறுவர் காப்புறுதி – வீட்டு காப்புறுதி, வர்த்தகர்களுக்கான காப்புறுதி, வாகன காப்புறுதி, வியாபார ஸ்தல காப்புறுதி, பென்சன் காப்புறுதி**

இலங்கைக் காப்புறுதி ஸ்தாபனமே ஆயுள் காப்புறுதியாளருக்கு அதிகூடிய போனஸ் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

# இலங்கை காப்புறுதி

*படித்த இளைஞர் மங்கையரே! வேலை இல்லை என்று கவலை வேண்டாம். எல்லையில்லா வருமானம் பெறலாம்.*
*ஏஜண்டாக சேர்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள்*

அமைப்பாளர்:- திரு.த.கனகசபை
*இல.7, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தொ.பே: 021 222 6369

முருகா உன் அழகு முகம் காண
பக்தர் கூட்டம் அலை மோதுதப்பா



*விதம் விதமான டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளைச்*
*செய்து கொள்ள வசதியாக நல்லூரான் முன்னாலேயே !!*

# பாலகிருஷ்ணா ஆபரண மாளிகை

ஆறுமுகப் பெருமான் ஒளி வீசும் தங்கம் நகைகள் அணிந்து தங்க ரதபவனி வருகின்றார்.
நவநாகரீக மங்கையரே நீங்களும் ஒளி வீசும் 22 கரட் தங்க நகைகளை அணிந்து
முருகனை தரிசிக்கக் கூடாதா! நாடுங்கள்

# Balakrishna
## Jewel House

இல.616, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.



நல்லைக்குமரன் வருடாந்த உற்சவம்
யாழ் நகர் விழாக் கோலம்



யாழ் நகரில் மூன்று சந்தியில் பிரகாசமாக அமைந்துள்ளது

# ஸ்ரீ முத்துமாரி அம்மன்
## பல்பொருள் வாணிபம்

**ஆஹா!**

என்ன கவர்ச்சி அற்புதமான பல்பொருள் காட்சி
உள்ளே சென்றால் **"சுப்பர் மார்கட்"** தான்

*ஒரே இடத்தில் வீட்டுக்கு தேவையான அத்தனை பொருட்களையும்*
*ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்*
*விஜயம் செய்யுங்கள்*

இல.342, 344, 346 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2228666

இன்புறு சோலைதனில் முருகனின் அருட்காட்சி
கண்டிட அடியவரின் அரோகரா ஆர்ப்பரிப்பு



# வேல் முருகன்
## வாணிப நிலையம்

யாழ் நகரில் புதிய வடிவில் அழகிய கட்டிடங்கள் கம்பீர எழுச்சியை காட்டுகின்றது.
அதற்கேற்ப வர்ண பெயின்ற் அடித்தால்
ஆஹா....
எல்லா வித வர்ண பெயின்ற் எம்மிடம் நிறைய உண்டு. விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யலாம்.
அத்துடன் வர்ண சுண்ணாம்பு கட்டிட பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம்.

# Vele Murugan Traders

௨௯௫, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

நல்லைக்குமரா உன் மணி ஓசை
ஞாலமெலாம் கேட்குதையா



கண் வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை சரிவர பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

# S.M. Fernando

அன்றும் இன்றும் என்றும் கண்ணாடிகளுக்கு
பெயர் பெற்ற இடம்

# எஸ்.எம்.பெர்னாண்டோ

இல.580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
இல.520, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 222 3254,
222 4367

துன்பந்தான் மனித குலத்திற்கு சொந்தமா முருகா!
உன் வீர வேல் ஏந்தி எமக்கு அமைதி தந்திடப்பா!



NSB

Pension+

எதிர்கால நல்வாழ்வுக்கு

சுறுசுறுப்பான இளமைப் பருவத்தினை எவ்வாறு கழித்தாலும் வாழ்வின் இறுதிக் காலம் எவ்வாறு இருக்கும் என்பது யாரால் கூற முடியும்? அதனால் தான் இளமைப் பருவத்திலேயே தமது ஓய்வுக் காலத்தை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். வாழ்வின் இறுதிப் பகுதியை நிம்மதியாகக் கழிக்க நீங்களும் இன்றே NSB **"பென்ஷன் ப்ளஸ்"** ஓய்வூதியத் திட்டத்தில் இணையுங்கள்.

- 100% அரச பாதுகாப்பு உத்தரவாதம்
- நாடளாவிய ரீதியில் அமைந்த கிளைகள் மற்றும் உலகளாவிய ரீதியிலமைந்த ATM வலையமைப்பு
  *(ATM வலையமைப்பினூடாக பணத்தை பெற்றுக் கொள்ளும் போது எவ்வித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது)*
- SMS மற்றும் இணையத்தள வங்கிச் சேவை வசதிகள்
- சேமிக்கும் பணத்துக்கு அதி உயர் வட்டி
- ரூபா ஒரு மில்லியன் வரையிலான சேமலாபக் கொடுப்பனவு
- வைப்பின் பேரில் கடனுதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள்
- வீடமைப்பு மற்றும் தனிநபர் கடன் வசதிகள்

NSB

தேசிய சேமிப்பு ங்கி
255, காலி வீதி, கொழும்பு 03.
தொ.2573008-15, வெப்: www.nsb.lk
அழைப்பு நிலையம்: 0112 379379



நல்லூரில் குடிகொண்டு பக்தர் நலம் காக்கும் முருகா
தேரேறி பக்தர் நலம் காக்க வீரவேலுடன் வா முருகா



Multilac

மிக உயர்ந்த தரம் ஆகக் குறைந்த விலை

# கந்தவேலன் றேடர்ஸ்

## MULTILAC COLOUR BANK

வர்ண உலகில் புரட்சி.

உயர் தரச் சான்றிதழ்களுக்கு இப்போது அதிகம் செலவு செய்யாதீர்கள்.

இல.110, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

T.P: 021 2222822

என்றும் முருகன் நினைவிருத்தி அவன் தாழ்
வணங்கி அவன் அருள் பெற்றிடுவோம்



# சீமாட்டி

தரமான சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
இனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரம்

*Wholesale & Retail*
*Dealersin Textiles*
*Specialist in Wedding Sarees*

**பெயருக்கேற்ற ஸ்தாபனம்!**
**யாழ்.நகரில் தேடித்தேடி**
**நாடுவது**

**மங்கையர் நாடி ஓடிவரும்**
**பெருமை மிக்க புடவை ஸ்தாபனம்**

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228564

நல்லைக்குமரனின் அருட்கடாட்சம்
உலகையே ஆட்கொள்ளட்டும்.



புதுமைப் பொலிவுடன் புதிய புடவையகம்,
அழகான காட்சியறை புதிய புதிய புடவை தினுசுகள்
நவ உலகத்திற்கேற்ப அழகிய ரெடிமேட் ஆடைகள்,
சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை நங்கையரும்
கூட விரும்பி தெரிவு செய்யக்கூடிய இடம்

# சீவம் ரெக்ஸ்ரைல்

மின்சார வீதியிலே அழகாக காட்சி தருகிறது சீவம் ரெக்ஸ்ரைல் அழகுடனும்
புது பொலிவுடனும் திகழும் புடவையகம் சிறுவர் தொடக்கம் பெரியவர்கள்
வரை ஏன்! நவ நாகரிக பெண்களும் விரும்பி தெரிவு செய்யக்கூடிய
இடம் விஜயம் செய்து பாருங்களேன்!

**14A, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**T.P:- 222 6749**

வருடா வருடம் வாடா மலராகிய 'நல்லைக்குமரன்'' மலர் வெளிவந்து முருகன்
அருள் பரப்ப நாமும் முருகனின் அருள் வேண்டி ஆறுதல் அடைய வேண்டும்



யாழ் நகரின் முதல் தர அரச அனுமதி பெற்ற
கனரக (AD) சாரதி பயிற்சி பாடசாலை





யாழ் நகரில்
முதல் முறையாக
"கிருபா லேணர்ஸ்"
வழங்கும் இரவு நேர சாரதி
பயிற்சி நெறி

# L கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)

- L குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- L பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்.
- L வான், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம் (டெக்டர்) அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள்
- L இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியும்.
- L தவணை முறைக் கட்டணம்
- L எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.
- L கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.


தலைமைக் காரியாலயம்
இல.226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224353, 021 4923200
0777225292

கிளைகள்

| | | |
|---|---|---|
| பருத்தித்துறை | சாவகச்சேரி | நெல்லியடி |
| தொ.பே: 021 4923201 | தொ.பே: 021 4923202 | தொ.பே: 021 3006550 |
| 0714546958 | 021 2270700 | 0714546957 |
| விசுவமடு | சுன்னாகம் | மன்னார் |
| தொ.பே: 021 3201515 | தொ.பே: 021 2242022 | தொ.பே: 0719887699 |
| 0714546955 | 0714546956 | |


Mangala
மங்களா காட்சியறை
வீடு, அலுவலக மரத்தளபாடங்கள், பிளாஸ்டிக், உருக்குத் தளபாடங்கள், மூங்கில் தளபாடங்கள், வெளிநாட்டுத் தளபாடங்கள், வீடு, அலுவலகங்களுக்குரிய கேட்டின் வகைகள் அனைத்தையும்
தரம்! மலிவு! அமோக தெரிவுக்கு! என்றும் மங்களா காட்சியறை.
EVERO
COMMERCIAL BANK
DAMRO
ARPICO
Nilkamal
Phoenix
The name for plastic
Piyestra
இல.536, கே.கே.எஸ்.வீதி, (மனோகரா சந்தி) யாழ்ப்பாணம். தொ.பே. 021-2228367, 0777286069


நல்லூர் முருகா உன் அழகு திருமுகம் கண்டேன்
நாளும் பொழுதும் உனை நினைந்திருகி நிற்கின்றேன்.
SIVA BROTHERS
சகல மங்களகரமான சுப வைபவங்களுக்கு
ஏற்ற பானம் "கொக்கோ கோலா"
பிரியமான பானம்
இன்றைய நாகரீக கட்டிட பிரியர்கள்
பெரிதும் விரும்புவது "றோபியலாக்"
எமல்சன் பெயின்ற் வகைகள்
Coca-Cola
Robbialac
BERGER
ROBBIALAC XTRA
இல.141, ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு - 13.
பக்ஸ்:- 112470038
இல.205, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 2225497


Dulux
let's colour
SIVAN MOTORS STORES
70/1, Manipay Road, Jaffna.
T.P: 021 222 2763
Fax: 021 222 8647
Dulux
Dulux 3in1
Supreme
Dulux
Weathershield
Branches
103, Kandy Road,
Chavakachcheri.
AkzoNobel
97, A9 Road
Karadippokku Junction,
Kilinochchi.
A BRAND FROM
AkzoNobel
Sivakumaran Enterprices
75, Stanly Road, Jaffna.



நல்லூர் முருகா! நாளும் பொழுதும் வேண்டி நயமுடன்
நன்றெலாம் செழித்திட உன் திருப்பாதம் இறைஞ்சுகிறோம்.
46 ஆண்டுகளாக உங்கள்
நன் மதிப்பைப் பெற்ற
காவடி
மார்க் கற்பூரம்
கற்பூரம் என்று கேட்காதீர்கள்
காவடி
என்று கேட்டு வாங்குங்கள்.
SINCE 1967
நின்று நிலைக்கும் ஜோதி மயம்
காவடி கற்பூரம் என்றும் தரும்
CAVADI
CAVADI
தயாரிப்பாளர்கள்
Ms Sons Group of Companies
672/3, Galle Road,
off Mayura Mw, Ratmalana.
Phone: 2636818, 2329426
e-mail: mcsons@hltnet.lk
ஏக விநியோகஸ்தர்கள்
பிரபா ரேடிங் கம்பனி
31, கயிஸர் லேன், கொழும்பு - 11
தொலைபேசி: 329426, 422750





**எதிர்காலத்தை பிரகாசமாக்க உங்களுக்கேற்ற ஸ்டைல்**

- சேமிப்புக்களை பெருக்க கவர்ச்சிகரமான வட்டி வீதம்
- ஸ்டைலுக்கேற்ற DotCom ATM காட்
- 18 வயதாகும் போது விசேட கடன் சலுகைகள்
- 18 வயதாகும் போது கடனட்டை அல்லது ஷொப்பிங் டெரிட் காட்

10-18 வயதிற்கு இடைப்பட்டவராக இருந்தால் ரூபா 1,000/- தை வைப்பிலிட்டு உங்களுக்கென DotCom கணக்கை இன்றே ஆரம்பியுங்கள்.

DotCom COMMERCIAL BANK


முருகா முருகா என கூவி உன் கோபுர வாசல் தன்னில் வந்து
கைகூப்பி தொழுவதெல்லாம் நாம் அச்சமின்றி வாழ்வதற்கன்றோ!
YALLARUVI
BOTTLED DRINKING WATER
இது வெறும் தண்ணீர் அல்ல
உங்கள் ஆரோக்கியமான வாழ்வு...
It's not Just Water
Taste & see the difference with our purified drinking water purification process with our latest reverse osmosis technology
Think again!!
Swissmineral
Call for Free Home & Office Delivery
Jaffna : 021 222 81 22 Vavuniya : 024 324 97 02


Save Money With LED
Light up
with Led!
Eco -Friendly as led does not contain mercury
Up to 80% saving in energy
Lasts 50 times longer than conventional Lights
No Replacement for up to 20years (based on usage of 6hr/day)
ECO LED ஐ
பொருத்துவதன் மூலம்
உங்களது எதிர்கால சேமிப்பை
அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.....
Distributors
Global Business Network
231, Temple Road, Nallur, Jaffna.
021 320 1771 , Colombo Contact : 077 778 3253

Our Best Compliments....

உங்கள் சிறார்களின்
உயர் படிப்புக்காக
இப்பொழுதே சேமியுங்கள்

ரண் கெகுளு



- கூடிய வட்டி
- ஆண்டு 5 புலமைப்பரீட்சை திறமைசாலிகளுக்கு பணப்பரிசு
- கணக்குடைய சிறார்களுக்கு வைத்திய மற்றும் அவசர சிகிச்சைக்கான காப்புறுதி
- வைப்பாளர்களுக்கு ஆயுட் காப்புறுதி

*நிபந்தனைக்குட்பட்டது

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


நல்லூர் கந்தா உன் அழகு திருமுகம்
தரிசித்து ஆனந்தம் அடைகிறோம்.
நவநாகரிக மங்கையர்க்கு கண்கவரும்
புடைவை ஸ்தாபனம் அது தான்
சரவணா
புடைவையகம்
புதியதோர் ஸ்தாபனம் புதுமையான புடைவை ரகங்கள்
பட்டு சாறிகள், பான்சி மற்றும் கொட்டன் சாறிகள்,
பஞ்சாபி, பஞ்சாபி துணிகள் மற்றும் ரெடிமேட்
ஆடைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
நங்கையர் ஒருமுறை விஜயம் செய்தால் மறுநாள்
நண்பிகளையும் கூட்டி வருவீர்கள் பலவர்ண கண்கவர்
மினுங்கும் சாறிகள் திருப்தியுடன்
சாறி தெரிவு செய்யலாம்.
SARAVANA TEX
வாருங்கள்! பாருங்கள்
நல்லூர்
தட்டாதெரு சந்தி,
கே.கே.எஸ் வீதி.
நெல்லியடி

அடியவர்கள் அமைதி பெற முருகன் ஆசி பெற்று
சந்தோஷமாக வாழ தேரில் காட்சி தருகின்றான்.



இதோ! இன்று பாதணிகளில் முன்னணி வகிப்பது
**DSI**
சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை விரும்பி அணிவதும்
வாங்குவதும் DSI பாடசாலை மாணவர்கள் விரும்பி வாங்குவதும் DSI
இதம் பொருந்தியது DSI

# சுப்ப சூஸ்
# Super Shoes

*No. 154, Navalar Road, Jaffna.*
*T.P: 021 2226809*

இல. 154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



நல்லைக்குமரன் அருள் வேண்டி
ஞாலமெல்லாம் பிரார்த்தனையாம்



# பூபாலசிங்கம்
## புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள். ஏற்றுமதி இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை
**340, 202, செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**தொ.பே: 2422321**

**கிளைகள்**

இல.309A, 2/3, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
தொலைபேசி: 4515775

இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2226693

இல.212, 1ம் குறுக்குத்தெரு,
வேம்படிச்சந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2221637

லண்டன் கிளை
இல.110, கொலண்ட் றோட், ஈஸ்ட் ஹம், லண்டன் Eb 2EP U.K
தொலைபேசி: 02084704416

"நல்லைக்குமரன்" மலர் வாடாது என்றும் முருகனின்
அருட்கடாட்சத்தை பிரவாகித்து கொண்டே இருக்கும்.



44வது வருட சேவையில் ....

# பரிமளா ஸ்ரோர்ஸ்

மகப்பேற்றுத் தாய்மாருக்கும், மழலைகளின் வளர்ச்சிக்கும், பூப்பெய்திய மங்கையருக்கும்
கட்டுடல் வேண்டி நிற்கும் காளையருக்கும், விளையாட்டில் வெற்றிபெற வீரர்களுக்கும்
வீராங்கனைகளுக்கும், குடும்பத்தில் அங்கத்தவர்கள் அனைவருக்கும் அருமருந்தாகத் திகழ்வது

**நல்லெண்ணை உலகில் முன்னணி வகிப்பது V.S.P.**

# V.S.P ஸ்பெஷல் லஞ் ஓயில்

கொழும்பு வாழ் மக்களின் நன்மை கருதி இவ் விலாசங்களில் V.S.P. நல்லெண்ணையை பெற்றுக் கொள்ளலாம்.

ஆச்சிபூத் சென்ரர்
இல.44, ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
தொ.பே: 2366484

எக விநியோகஸ்தர்
இல.26, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2222785

யாழ் ரேஸ்ரிபூட் புறோசல்
இல.30/9, ஹம்டன் லேன்,
கொழும்பு – 6
தொ.பே: 0773631613

ஞானிகள் முருகன் வீதிதனில் நடமாடி
அழகன் முருகன் அருட்கடாட்சம் பெற்றார்கள்.



மின்னுவதெல்லாம் பொன்னல்ல மின்னுவதோ மின்னுவதாகவே இருக்க வேண்டும்
அது தான் தங்க நகை மனம் கவரும் கண்கவர் டிசைன்களுடன்
அமைக்கப்பட்ட ஆபரணங்கள் வாங்குவதற்கு

**நங்கையர் நாடி வரும் இடம்:**

# நதியா நகைமாடம்

129, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கவுசன் நகைமாடம்

இல.149 -02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 – 3479

நித்தம் நித்தம் முருகா உன் அருட்
கடாட்சம் வேண்டி நிற்கின்றேன்



புதுப் பொலிவுடன் விசாலமான மாடிக் கட்டடத்தில் அமையப் பெற்ற

# பெசன் ஹவுஸ்

சகல விதமான அலுமினிய, வெண்கலப் பாத்திரங்கள் அன்பளிப்பு பொருட்கள்,
கோவிலுக்குரிய பொருட்கள், சிறுவர்களுக்கேற்ற விளையாட்டு பொருட்கள் அப்பப்பா உள்ளே
சென்று உங்கள் எண்ணப்படி விரும்பிய பொருட்களை தெரிவு செய்யலாம்

# FASHION HOUSE

**புதிய இடமல்லவா! உங்கள் விருப்பம் நிறைவேறும்**

இல.65, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2228713



தேரேறி வந்து ஆறுமுகா உன்
அருட்கடாட்சத்தை தந்திடுவாய்



புதியதோர் நகரமாக பரிணமிக்க வியாபார ஸ்தலங்கள் அலங்கரிக்க,
வங்கி கிளைகள் மேலோங்கி நிற்கும் திருநெல்வேலி சந்தியில்
பிரபலமான ஒரு ஸ்தாபனம்

# செல்வா எலக்ரிக்கல்ஸ்

மின்சார பொருட்கள் எஸ்லோன் பைப் வகைகள், மின்சார விசிறிகள், தண்ணீர் பம்பிகள்
இன்னும் எத்தனையோ! உங்கள் மின்சார தேவைகள் அத்தனையும்
ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய நாடுங்கள்

# Selva Electricals

21, பலாலி வீதி,
திருநெல்வேலி.

தொ.பே: 021 3218617,
021 4590524

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
முருகா உந்தன் அருளுக்கு போற்றி

# நியூ ராகம்ஸ்



ஆகா என்ன ராகம் காதுக்கு இனிமையாக இருக்குதே! இல்லை இல்லை
அது மனதுக்கு இனிமை தரும் ராகம்ஸ் பட்டுச்சோலை

**முகூர்த்தப் பட்டுப்புடவைகள், ரெடிமெட் ஆடைகள்**

**புதிய புதிய ரகம் நிறைந்த இடம்**

# NEW RAGAMS

## Padducholai

அங்கே தான் நாகரீக நங்கையர் விரும்பிய தெரிவுக்காக நாடிச் செல்கிறார்கள்.
ஒருமுறை மட்டும் விஜயம் செய்து பாருங்கள்

இல.24,7,8, நவீன சந்தை உட்பறம்,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 7179

நல்லூர் முருகா! கந்தா! கார்த்திகேயா என ஆர்ப்பரித்து ஆலயம் நோக்கி
அடியவர்கள் தங்க ரதமேறி காட்சி தந்து எமை காத்திடப்பா



ஆரம்ப வகுப்பு முதல் அனைத்து வகுப்புகளுக்குமுரிய பிரபல ஆசிரியர்களின் தமிழ் ஆங்கில மொழி மூலமான புத்தகங்கள், பயிற்சிகள் வினாப்பத்திரங்கள், மும்மொழி அகராதிகள், அலுவலக மற்றும் பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்

**இன்னும் பற்பல பாடசாலை மாணவர்களுக்கு தேவையான உபகரணங்கள்**

**அத்தனையும் ஒரே இடத்தில் பெற்று நன்மையடையலாம்.**

# லக்ஸ்மி காகிதாதிகள்


***மங்கள நிகழ்வுகளுக்குரிய அழைப்பிதழ்கள்,***

***றெஜிபோம் வர்ண எழுத்துக்கள்.***

அழகான காட்சி அறை மலிவான விற்பனை. ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

இல. 2, நவீன சந்தை கட்டிடம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212224375
0776913066




www.peoplesbank.lk

# நாட்டின் எதிர்கால தூண்களான உங்களுடன் என்றும் நாம் இருப்போம்

திடசங்கற்பத்தினாலும் திறமைகளினாலும் உந்தப்பட்டு பல்வேறு வித்தியாசமான துறைகளிலும் பிரகாசிக்கும் சிறுவர்களினால் நமது தேசம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கியினராகிய நாம் அவர்கள் ஒவ்வொருவரினதும் மறைந்திருக்கும் திறமைகளையும் சாதனை வல்லமைகளையும் ஊக்குவிப்பதில் எமது தேசத்தின் சிறுவர்களுக்கு பக்கபலமாக இருந்து வருகின்றோம். சாதனைப் பயணத்தில் எமது சிறுவர்களுக்கு உதவுவதற்கான அத்திவாரமாக விஷேடமாக வடிவமைக்கப்பட்டிருப்பதே "சிசு உதான" ஆகும்.

இளம் பருவம் முதலே பிள்ளைகளுக்கு சேமிப்பின் மகிமையை ஊக்குவிப்பதன் மூலம் பெரியவர்களான பின்பும் அவர்கள் சேமிப்புப் பழக்கத்தை மேற்கொள்வதை நிச்சயப்படுத்துங்கள். இன்றே மக்கள் வங்கியின் "சிசு உதான" சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து, உங்கள் பிள்ளையின் ஒளிமயமான எதிர்காலத்திற்கான பரிசொன்றை வழங்குங்கள்.

AA-Brand Finance Rating, AA+ Fitch Rating

*நிபந்தனைகளுக்குட்பட்டது

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

அருள் ஞானம் பரப்பும் நல்லூர் முருகா!
இன நலம் வேண்டி நிற்கும் பக்தர் கூட்டத்தை காத்திடப்பா!



- ❖ நியூஸ் பிறின்ட்
- ❖ பாங் பேப்பர்
- ❖ பரிசுப் பேப்பர்
- ❖ பொக்ஸ் போட்
- ❖ றோணியோ பேப்பர்
- ❖ போஸ்டர் பேப்பர்
- ❖ ரைப்பிங் சீற்
- ❖ பிறிஸ்டல் போட்

**ஆகிய சகல விதமான பேப்பர் வகைகளையும் அச்சகத்துக்குத் தேவையான மை வகைகளையும் வேண்டிய அளவிலும்**

நாங்கள்
**"மலிபன் பிஸ்கட்"** ஏஜன்டாக நியமிக்கப்பட்டுள்ளோம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.

இல.152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0215670922

ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கற், இனிப்பு, பீடா ஆகியவை
தயாரிப்பதற்கு வேண்டிய சகல மூலப் பொருட்களையும்

ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத் திரவியங்கள்,
ஆயுள்வேத மருத்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம்,
குங்குமப் பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு இரசாயனப்
பொருட்கள், பிஸ்கட் சொக்லேட், ரொபி வகைகளுக்கும்,
நாடவேண்டிய ஒரே இடம்

# பெற்றா

## எசன்ஸ் சப்ளையர்ஸ்

104, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0212222386

வள்ளி தெய்வானை சமேதராய் பச்சை மயில் மீதினில்
எமக்கு காட்சி தந்து எமது அமைதிக்கு வரமருள் முருகா!

உள்நாடு வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் உறவுகளுக்கு பொதிகளை , V.D.O கசட்டுக்கள்
ஆவணங்கள் எதுவானாலும் துரித கதியில் உரியவர் கைகளில் சென்றடையவும்,



உலகின் எந்தப்பாகத்தில் இருந்தும் பணத்தை

MMBL
MONEY
MASTER

DHL

மூலம் ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும்,

எமது சேவையை பெற்றவர்கள் மீண்டும் மீண்டும் தொடருகிறார்கள்.
புதியவர்கள் இடத்தைத் தேடுகிறார்கள். அவர்களுக்கு இதோ!

# திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

e-mail:-
thirumurugan@lycosmail.com

இல.117A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

நித்தம் நித்தம் முருகா! உன் அருளுடன் நான் செய் கருமமெல்லாம்
சிறப்படைய அருள் தாருமையா!

SUNDHARSON

*நலம் யாவும் நல்கும் நல்லை கந்தனின் புகழ் பாடும் பக்தர் கூட்டம்!*
*உன் காலடி பற்றித் தொழுதிட நல்லை நகர்ப்பதியில்*
*வானோங்கி நின்று அருள் பாலிக்கும்!*
*உம்மைத் தேடி அலையலையாக ஏகிநிற்கும் அடியார்*
*குறைதீர்த்து அருள்வாய் பழனி அப்பா! கஷ்டங்கள் யாவும் மீண்டும் எமை*
*நாடாது சாந்தி, சமாதானம் தொடர வேண்டுமென*
*நின் திருப்பாதம் பற்றி வணங்குவோம்!*



சகல விதமான மின்சார உபகரணங்கள், நீர் வழங்கு பொருட்களையும் ஒரே கூரையின்
கீழ் நியாயம், நிதானம், தரம், விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.

மானிப்பாய் நகரில் மின்சார உபகரணங்களில் கொடி கட்டிப் பறக்கும் புகழ் பெற்ற ஸ்தாபனம்

# சுந்தர்சன்

யாழ் வீதி, மானிப்பாய்.

தொ.பே: 021 2255136
பக்ஸ்: 021 2256036

நல்லூர் முருகா! உலகையே உன் பால் ஈர்த்த
பெருமை உன் அருட் காட்சியும் அருளுமன்றோ!



இதோ வாருங்கள்! பாருங்கள்!!

# அற்புதா
## ரேடிங் கொம்பனி

சகல விதமான ஆடம்பரப் பொருட்கள், துவிச்சக்கர வண்டிகள் அதன் உதிரிப்பாகங்கள்,
வீட்டுத்தளபாடங்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், பலவித பிளாஸ்ரிக் உபகரணங்கள்,

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

இல.198, ஆஸ்பத்திரி வீதி,
பஸ்நிலையம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2222057
021 2222505

வள்ளி தெய்வானை சமேதராய் பச்சை மயில் மீதினில்
எமக்கு காட்சி தந்து எமது அமைதிக்கு வரமருள் முருகா!



அதோ! என்ன சனக் கூட்டம்!

அட!! இங்கேதான் மக்கள் விரும்பும் சைவ சாப்பாடு

நல்லூர் விரதமிருப்பவர்களும் இங்கேதான் நாடி வருவார்கள்.

சுத்தம் சுகாதாரம் நாவுக்கினிய பாகத்துடன் சைவ சாப்பாடு அது மட்டுமா

பல வகை சிற்றுண்டி வகைகளுக்கும் தயார் நிலையில் என்நேரமும் கிடைக்கும்.

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

# சண்முகம்
## சைவ ஹொட்டல்

சிவன் கோவில் அருகில்
இல.10, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 222 8445

அருந்துங்கள்

# அண்ணா கோப்பி




அண்ணா கோப்பியை உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக் கொள்ள

**அண்ணா கோப்பிக் கடை**
**4, நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்**

**உள் நாடுகளில் சந்தைப்படுத்துவதுடன், வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடிய முறையில் ரின்களிலும், பக்கட்டுகளிலும் அடைக்கப்பட்டு விற்பனையாகின்றது. அத்துடன் ஒடியல்மா, புளுக்கொடியல்மா வகைகளை பக்கற்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**தலைமையகம்**
**அண்ணா தொழிலகம், இணுவில்**
**T.P: 021 7200800**

# கற்போம் - சேமிப்போம்



குழந்தைகளுக்கு நிறைவான கல்வியை ஊட்டி ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொடுப்பதுதான் ஒவ்வொரு தாயினதும் தந்தையினதும் எதிர்பார்ப்பாகும். சேமிப்பும் அதே போன்றதுதான். கல்வியைப் போன்று சேமிப்பும் குழந்தைகளின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக்கும் முக்கியமான ஒன்று.

உங்கள் குழந்தைக்காக HNB சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

புதிதாக பிறக்கும் உங்கள் பிள்ளைக்கு 12 வயதாகும் வரை HNB சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை ஆரம்பிக்கலாம்.

## குழந்தைக்கு கிடைக்கும் பயன் என்ன?

அதிக நன்மைகள் கிடைக்கும்

| கணக்கு மீதி | பரிசு |
|---|---|
| ரூபா 1,000/- | சிங்கிதி ஜம்போ உண்டியல் |
| ரூபா 5,000/- | தண்ணீர் போத்தல் |
| ரூபா 10,000/- | பாடசாலை புத்தகப்பை |
| ரூபா 25,000/- | கைக்கடிகாரம் |
| ரூபா 50,000/- | Mega LIFCO அகராதி |
| ரூபா 100,000/- | ரூ.3,000/- பெறுமதியுடைய பரிசு வவுச்சர் |

- கணனி வாங்குவதற்கான கடனுதவி
- பத்தும் விமன சீட்டிழுப்பில் நீங்களும் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.
- 5ஆம் வகுப்பு புலமைப்பரிசிலில் சித்தியடையும் உங்கள் குழந்தைக்கு ரூ. 7 மில்லியன் பெறுமதி வாய்ந்த புலமைப்பரிசில்களை வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு உண்டு.

ஆரம்ப வைப்பாகக் குறைந்தபட்சம் ரூ.500/- ஐ வைப்புச் செய்து HNB சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை இன்றே ஆரம்பியுங்கள். இக்கணக்கின் மிகுதியை அதிகரித்து, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னதாகக் குறைந்தபட்ச மீதியாக ரூ.10,000/- ஐப் பேணிவருவதன்மூலம், மேற்கூறிய புலமைப்பரிசில்களுக்குத் தகுதிபெறுங்கள்.

| பிரிவு | புலமைப்பரிசில்களின் பெறுமதி (ஒன்று) |
|---|---|
| மாவட்டத்தில் சிறந்த இருபது பேர் ஒவ்வொருவர் | ரூபா 20,000/- |
| நாடளாவிய ரீதியில் 1ஆம் இடம் வகிப்பவர் | ரூபா 300,000/- |
| நாடளாவிய ரீதியில் 2ஆம் இடம் வகிப்பவர் | ரூபா 200,000/- |
| நாடளாவிய ரீதியில் 3ஆம் இடம் வகிப்பவர் | ரூபா 100,000/- |

நிபந்தனைகளுக்குட்பட்டது

HNB சிங்கிதி சிறுவர்

கல்வியை தொடர்வதோடு - சேமிப்பையும் தொடர்வோம்

*இன்றே உங்கள் குழந்தைக்கு HNB சிங்கிதி சிறுவர் கணக்கை ஆரம்பியுங்கள்*

HNB சிங்கிதி சிறுவர்

*கல்வியை தொடர்வதோடு - சேமிப்பையும் தொடர்வோம்*

AA-(lka)

HNB தலைமை அலுவலகம், HNB டவர்ஸ், 479, டி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10
தொலைபேசி : 2661983 இணையத்தளம்: www.hnb.net

அலங்கார தேரேறி அடியார் புடைசூழ வெள்ளை மணல் வீதி
தனில் நமையாளும் திருமுருகன் பவனி வருகின்றான்

மின்னுவதெல்லாம் பொன்னல்ல பொன் பொன்னாக மதிக்கப்பட்டு 22 கரட்டில்
அழகான வர்ண ஆபரணங்கள் உற்பத்தி செய்து பெருமையுடன் மங்கையரை
கவரும் ஓர் அழகிய ஸ்தாபனம்



# நியூ நகுலா

## ஜுவல்லர்ஸ்

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
ஆபரண உற்பத்தி திறனும் கரட்டின் உண்மையும் விளங்கும்.

**வாருங்கள் பாருங்கள் சந்தோஷமடைவீர்கள்**

*இல.109, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தொ.பே: 021 2219119



வேல் உண்டு வினையில்லை
முருகன் அருள் உண்டு துன்பமில்லை



# எரிக்கணேஷ்

40 வயதை அடைந்தவர்கள் எழுத வாசிக்க கஷ்டப்பட்டால் இளைஞர், யுவதிகள்
தலைவலியால் கஷ்டப்பட்டால் நிச்சயம் கண்தான் குறைபாடு.
இலவச கண் பரிசோதனை முகப்பொலிவுக்கு, சங்குப்பல் கட்ட, மிதப்புபல் கட்ட,
பல்லுக்கு கிளிப் போட்டுக் கொள்ள நாடுங்கள்.

# ERIC GANESH

**இல.60, கே.கே.எஸ். வீதி,**
**சுன்னாகம்.**

**இல.546, 556, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே: 222 2456**

**இல.91, கே.கே.எஸ். வீதி,**
**கொக்குவில்.**




நல்லைக் குமரன் அருட் கடாட்சம் உலகெலாம் பரவ
"நல்லைக் குமரன்" மலர் பூக்கட்டும்

# சாருணி ஜுவல்லறி



- மிசின் கட்டிங்
- அனைத்து டை கட்டிங்
- தங்கப்பவுண் காசு அனைத்தும் சுவாமி பென்ரன்கள்
- தங்கம், வெள்ளி, செம்பு, சில்வர் ஆபரணங்கள் இயந்திரம் மூலம் முலாம் செய்யப்படும். (கோல்ட் கவரிங்)
- இயந்திரம் மூலம் பெயர் வெட்டிக் கொடுக்கப்படும். (உள்/வெளி)

# Sharuni Jewellery

இல.74, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 2229372
மொபைல்: 077 4002780,
075 7676760



வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
15 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை
11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் அதி விஷேட கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
மருந்து பொருட்கள், கடலுணவு , மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
உங்கள் வீடுகளிலிருந்தவாறே பொருட்களை அனுப்பிக்கொள்ளலாம், 3 - 5 நாட்களில் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
குறைந்த நிறையுடைய பொதிகளுக்கும் விஷேட கட்டணச்சலுகை.
மிகவிரைவாக பாதுகாப்பாக குறைந்த கட்டணத்தில்
மறைமுக கட்டணங்கள் எதுவுமின்றி குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
மிக குறைந்த கட்டணத்தில் அதி விரைவு சேவை எம்மிடம் மட்டுமே
சகல நாடுகளுக்குமான விமானப்பயணச்சீட்டுக்களையும், அதனோடு இணைந்தசேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி , யாழ்ப்பாணம்.
Tel : 021 222 6113, 021 222 3536
ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service




தமிழினம் மீட்சி பெற அடியார் கூட்டம் அரோகரா
என ஆர்ப்பரித்து இறைஞ்சுகின்றோம் முருகா!
சாரங்கா நகைமாடம்
பணம் பரிமாற்றும் தனியார் நிறுவனம்
தங்கம் என்றால் தங்கம் தான். தங்க ஆபரணங்களுக்கு என்றும் ஈடு இணையற்ற ஸ்தாபனம்
நம்பிக்கை நாணயத்துடன் நன் மங்கையர் நாடும் இடம் 22 கரட்டில் தங்க நகைகள்
புதிய புதிய டிசைன்களில் செய்யும் ஸ்தாபனம்
Sharangaa
Money Exchange (Pvt) Ltd
Nagai Madam
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2226972, 021 2222480
இல.109, புதிய கட்டிட தொகுதி, கஸ்தூரியார் வீதி.
இல.55, செட்டித்தெரு, கொழும்பு.
தொ.பே: 02434971 பக்ஸ்: 0112434071


நாளும் பொழுதும் முருகா உன் திருப்பாதம் நினைவிருத்தி வேண்டுவதெல்லாம்
தமிழினம் அமைதி பெற்று வாழ வேண்டுகின்றோம்!
இதோ! யாழ் நகரில் பாடசாலை மற்றும் காரியாலய உபகரணங்கள்,
அச்சுக்கூடங்களுக்குத் தேவையான பல வர்ண பற்பல காகிதாதிகள்,
மாணவ மாணவிகளுக்கு தேவையான புதிய டிசைன்களில் பைகள், கவர்ச்சி தரும்
அப்பியாசக் கொப்பிகள் அனைத்தும் நாட வேண்டிய இடம்
பேப்பர் ஹவுஸ்
கணனி உபகரணங்கள் மற்றும் பல பொலித்தீன் றோல் வகைகள்
'அற்லஸ்' டிஸ்றிபியுடர்ஸ் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
PAPER HOUSE
இல.300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 5343


நாளும் பொழுதும் உனை வேண்டி அழுதிட நான் செய் கருமமெலாம்
நன்றே நிறைவெய்திட அருள் பாலிப்பாய்!
செல்விகளே செல்விகளே என்ன தேடுகிறீர்கள்
"ஹம்சிகா" பான்சி ஹவுஸ்
அடடா! அதோ போங்கள் மலாயன் கபேக்கு நேர் தெற்கு பக்கமாய் இருக்கிறது
உங்கள் எண்ணம் போல் விரும்பியவாறு அழகுசாதனப் பொருட்கள் நிறைய உண்டு.
ஒரே இடத்தில் 'விரும்பியதை பெற்றுக் கொள்ளலாம். வாருங்கள் பெற்று மகிழ்ச்சியுடன் செல்லுங்கள்.
ஹம்சிகா
பான்சி ஹவுஸ்
இல.5, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2224347
இதோ! புதியதோர் கிளை நிறுவனம்
மது கிப்ற் அன்ட் செலக்ஷன்
இல.29, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.




உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு...


மதி கலர்ஸ்


திருமண அழைப்பிதழ் காட்சியறை

15/2, முருகேசர் லேன், முத்திரைச்சந்தி, நல்லூர்.

T.P: 021 2229285, 077 7222259 web : www.mathicolours.com


தமிழ் கூறும் நல்லுலகெலாம் அருள் பரப்பும் நல்லை குமரா!
உடைந்து போன நெஞ்சங்களின் வாழ்விற்கு ஒளி எற்றி வைத்திடுவாய்!
இதோ!
யாழ் நகரிலே புதியதோர் புடவை ஸ்தாபனம் கம்பீரமாக கொடி கட்டி பறக்கிறது. அதுதான்
கமலேஸ்வரி ரெக்ஸ்
கொழும்பிலும் புடவை விற்பனையில் முன்னணி வகிக்கிறது.
இங்கு சல்வார், நவீன சாறி வகைகள், ஆண்கள்,
குழந்தைகள் உடு புடவைகள் தாராளம்.
தெரிவு செய்வதற்கேற்ற இடம்
Kamaleswary Tex
இல. 214, பிரதான வீதி, கொழும்பு -11
தொ.பே: 2452878, 2433778
இல. பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2228419
Web: Kamaleswary Tex
email: into@kamaleswary.com


நல்லூர் முருகா! நாளும் பொழுதும் உனை
வேண்டி நயமுடன் நல்வாழ்வு தந்தாயப்பா
நங்கையரோ விரும்புவது நாகரீக மாற்றம்
அதற்கேற்றவாறு நடை உடைகளிலும் மாற்றம்
என்றும் இளமையை விரும்புவது நங்கையர்,
என்றும் அழகை விரும்புவது நங்கையர்
என்றும் இளவரசியாக இருக்க விரும்புவது நங்கையர்
அது தான் என்னவோ! நங்கையர் இளவரசி
சேலைச் சோலைக்கு படையெடுப்பது! எங்கே....
இளவரசி
வாருங்கள்! பாருங்கள்! தெரியுங்கள்!
நாடுங்கள் திருப்தியுடன் செல்வீர்
சேலைச் சோலை
இல. 57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2503



Our Best Compliments....
MANGOS
INDIAN VEG
Outdoor Catering orders undertaken for all occasions...
CREDIT DEBT
P
WiFi
RENTAL


நல்லூர் முருகனைள சுற்றி வந்தால் ஒரு பொல்லாப்பும்
இல்லை என்றார்கள் நல்லூரில் ஈடேறிய ஞானிகள்
ஆஹா! சைவப் பிரியர்களுக்கு புதிய சுத்த சைவ உணவகம் அதுதான்
விஷ்ணுபவன் சைவ உணவகம்
இந்திய மற்றும் யாழ் பாரம்பரிய சைவ உணவுகள்.
Breakfast & All time food
7 am to 10 pm
இட்லி, தோசை, பிட்டு, பரோட்டா
இடியப்பம், போளி, உழுந்து வடை
சுடலை வடை, றோல்ஸ்,
கிழங்கு றொட்டி, விசேட கறிகள்.
Lunch
11 am to 3 pm
Rice & Curry,
பிரியாணி,
யாழ் ஸ்பெஷல் லஞ்ச்,
வரகு அரிசி சோறு,
ஒடியற் கூழ்.
Evening Special
4 pm to 10 pm
சப்பாத்தி, பூரி, மசாலா தோசை,
நெய் தோசை, பேப்பர் தோசை
வெங்காய தோசை,
இடியப்ப பிரியாணி,
பிட்டு கொத்து, சில்லி பரோட்டா
கொத்து றொட்டி, ரவா உப்புமா.
Healthy Foods
Morning & Evening
ரவா உப்புமா, ஆட்டாமா தோசை,
குரக்கன்மா தோசை,
ஆட்டாமா றொட்டி,
குரக்கன்மா றொட்டி,
குரக்கன்மா இடியப்பம்.
Sweets
* இந்தியன் ஸ்வீட்ஸ் வகைகள்
* யாழ் பாரம்பரிய பலகாரங்கள் (மோதகம், பயற்றம் பணியாரம், சீனி அரியதரம்)
போன்ற பலகாரங்கள் விசேட வைபவங்களுக்கு செய்து தரப்படும்.
இல.350-354, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777404089,
0778662330
e-mail: hotelvishnubavan@gmail.com



RAJAH CREAM HOUSE
ARASWATHY HAL
திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கு
அனைத்து வசதிகளையும் கொண்ட மண்டபம்
மேலதிக விபரங்களுக்கு :
www.saraswathyhall.com
மண்டபத்தின் ஒரு பகுதி
மண்டபத்தின் மற்றய பகுதி
மண்டபத்துடன்
இணைந்த கிறீம் ஹவுஸ்
உணவு பரிமாறும் பகுதி
தொடர்புகளுக்கு :
சரஸ்வதி மண்டபம் (ராஜா கிறீம் ஹவுஸ்)
37,சேர்.பொன்இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
Call : 021 3207369, 0779234176

# நல்லைக்குமரன் மலர்
# 2013



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக்குழு